வெளியீடு—11—7—1972]
Issued—11—7—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1972 மார்ச் 13
**Monday 13th March 1972**

தொகுதி XVIII—எண் 1
**Volume XVIII—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

61553

# Tamil Nadu Legislative Assembly Debates

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13TH, 14TH, 15TH AND 17TH MARCH 1972.

VOLUME XVIII (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

*Monday, 13th March* 1972.


PAGES

Personnel of the Government of Tamil Nadu ... i–vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... ix–xvii

1. Questions and Answers ... ... ... 1–28

2. Adjournment Motion—
   Strike in Simpson Group Companies and consequent suffering of workers ... ... ... 29–33

3. Voting on Demands for Grants for the year 1972–73—*cont.*
   (a) Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ... ...
   (b) Demand No. 31—Famine Relief ... ...
   (c) Demand No. 32—Pensions ... ... ...
   (d) Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments ... ... ...

*Monday, 13th March 1972—cont.*


| | PAGES. |
|---|---|
| 3. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.* | |
| (*e*) Demand No. 37—Compensation to Zamindars | |
| (*f*) Demand No. 45—Commuted Value of Pensions | |
| (*g*) Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ... | |
| (*h*) Demand No. 1—Land Revenue Department | |
| (*i*) Demand No. 4—Stamps Administration ... | |
| (*j*) Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading ... ... ... | 33-113 |
| 4. Papers laid on the Table ... ... ... | 113-114 |


*Tuesday, 14th March 1972.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 195-225 |
| 2. Adjournment Motion— | |
| Hunger Strike by employees of the daily Swadesamitran for its re-opening ... ... ... | 225-232 |
| 3. Calling Attention— | |
| Construction of buildings by the Defence Department in the Island Grounds ... ... ... | 232-233 |
| 4. Government Motion— | |
| (*a*) Election to the Committee on Estimates ... | 233 |
| (*b*) Election to the Committee on Public Accounts | 233 |
| 5. Announcements— | |
| (*a*) Election to the Committee on Estimates ... | 233 |
| (*b*) Election to the Committee on Public Accounts | 234 |
| (*c*) The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... ... | 234 |
| 6. Government Bill— | |
| The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... | 235 |




*Tuesday, 14th March 1972—cont.*


| | PAGES |
|---|---|
| 7. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.* | |
| (*a*) Demand No. 20—Industries ... ... | |
| (*b*) Demand No. 40—Capital Outlay on Industrial Development ... ... ... ... ... | |
| (*c*) Demand No. 10—Administration of Justice | 235-315 |
| (*d*) Demand No. 11—Jails ... ... ... | 315-316 |
| 8. Papers laid on the Table ... ... ... | |


*Wednesday, 15th March 1972.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 495-539 |
| 2. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.* | |
| Demand No. 12—Police ... ... ... ... | 540-685 |
| 3 Papers laid on the Table ... ... ... | 686-687 |


*Friday, 17th March 1972.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 715-752 |
| 2. Announcement— | |
| The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... ... ... ... | 752 |
| 3. Government Bill— | |
| The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... ... ... | 752 |
| 4. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.* | |
| (*a*) Demand No. 14—Medical ... ... ... | 752-753 |
| (*b*) Demand No. 15—Public Health ... ... | 753-754 |
| (*c*) Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... ... ... | 754-848 |
| 5. Papers laid on the Table ... ... ... | 848-849 |

*Monday, 13th March 1972—cont.*

PAGES.

3. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*
   (e) Demand No. 37—Compensation to Zamindars
   (f) Demand No. 45—Commuted Value of Pensions
   (g) Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ...
   (h) Demand No. 1—Land Revenue Department
   (i) Demand No. 4—Stamps Administration ...
   (j) Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 33-113
4. Papers laid on the Table ... ... ... 113-114

*Tuesday, 14th March 1972.*

1. Questions and Answers ... ... ... ... 195-225
2. Adjournment Motion—
   Hunger Strike by employees of the daily Swadesamitran for its re-opening ... ... ... 225-232
3. Calling Attention—
   Construction of buildings by the Defence Department in the Island Grounds ... ... ... 232-233
4. Government Motion—
   (a) Election to the Committee on Estimates ... 233
   (b) Election to the Committee on Public Accounts 233
5. Announcements—
   (a) Election to the Committee on Estimates ... 233
   (b) Election to the Committee on Public Accounts 234
   (c) The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... ... 234
6. Government Bill—
   The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... 235



*Tuesday, 14th March 1972—cont.*

PAGES

7. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*
   (a) Demand No. 20—Industries ... ...
   (b) Demand No. 40—Capital Outlay on Industrial Development ... ... ... ... ...
   (c) Demand No. 10—Administration of Justice
   (d) Demand No. 11—Jails ... ... ... 235-315
8. Papers laid on the Table ... ... ... 315-316

*Wednesday, 15th March 1972.*

1. Questions and Answers ... ... ... ... 495-539
2. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*
   Demand No. 12—Police ... ... ... ... 540-685
3. Papers laid on the Table ... ... ... 686-687

*Friday, 17th March 1972.*

1. Questions and Answers ... ... ... 715-752
2. Announcement—
   The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... ... ... ... 752
3. Government Bill—
   The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... ... ... 752
4. Voting on Demands for Grants for the year 1972-73—*cont.*
   (a) Demand No. 14—Medical ... ... ... 752-753
   (b) Demand No. 15—Public Health ... ... 753-754
   (c) Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... ... ... 754-848
5. Papers laid on the Table ... ... ... 848-849

## உள்ளடக்கம்

பக்கங்கள்.

1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. 1–27

2 ஒத்திவைப்புத் தீர்மானம்—

சிம்ஸன் கூட்டு நிறுவனங்களில் தொடர்ந்து நடைபெறும் வேலை நிறுத்தமும் தொழிலாளர் பாதிப்பும் குறித்து .. .. .. .. .. 28–31

3 1972-73-ம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி— 32–100

(அ) நிதிக் கோரிக்கை எண். 9-மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் .. .. .. .. ..

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 31-பஞ்சத் தணிப்பு ..

(இ) நிதிக் கோரிக்கை எண். 32-ஓய்வூதியங்கள் ..

(ஈ) நிதிக் கோரிக்கை எண். 36-ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. .. ..

(உ) நிதிக் கோரிக்கை எண். 37-ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

(ஊ) நிதிக் கோரிக்கை எண். 45-ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல் .. ..

(எ) நிதிக் கோரிக்கை எண். 47-மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. ..

(ஏ) நிதிக் கோரிக்கை எண். 1-நிலவரித் துறை ..

(ஐ) நிதிக் கோரிக்கை எண். 4-முத்திரைத்தாள் நிர்வாகம் .. .. .. .. ..

(ஒ) நிதிக் கோரிக்கை எண். 46-அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. ..

4 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 110–111

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்
கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை,
நீதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர்
தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி
(ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள்,
காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம்,
திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக்
காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த
சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று
வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்
ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப்
பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி,
ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி,
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—
பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத்
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு
அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி
விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன
நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப்
பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீன
வளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப்
பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும்
இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு .வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான—கிராமதான இயக்கங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industriesı*)—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

### சட்டப் பேரவைச் செயலாளர் :

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள் :

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியபுரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | குன்னூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகுளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம் திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செப்பனூர்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சின்றமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ. வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | பொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஊரூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேர்ந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என் .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. சோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. இ. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோலையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், திரு. அ. பெ. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்றம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. எ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம் திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி எ. கோ. .. .. | மூகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 162 பரம்சிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு .. .. | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். .. .. | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். .. | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பெண்ணாகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேட்டுப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண் உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கனாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. .. | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. மனை ப. நாராயணசாமி .. .. .. .. .. | அமைச்சர். |
| 3 திரு. எஸ். கோவிந்தசாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப்பேரவை

*திங்கட்கிழமை, 1972 மார்ச் 13.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### செஞ்சியில் தீ அணைப்பு நிலையம்

* 376 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு தீ அணைக்கும் காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழுவதற்கு இடமில்லை.

### காவலர் படையில் பெண்கள்

* 377 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பெண்களையும் காவல் படையில் சேர்த்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பண்டையத் தமிழ்ப் பெண்டிர் சிறிவந்த புலிகளையெல்லாம் முறத்தினாலேயே அடித்துத் துரத்தியதாகக் கூறப்படுகிறது. அத்தகைய முறையில் வழிவழி வந்த நமது வீரத் தமிழ்ப் பெண்டிர்க்கு இனியேனும் காவல் துறையில் இடம் அளிக்க அரசு முற்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பழைய காலத்தில் புலிகள் சீறி வந்தன. இப்பொழுது அவை சீறி வருவதில்லை என்று கருதுகிறேன். ஆனால் இந்தக் காவல் படையில் பெண்களுக்காக ஒரு பிரிவு அமைக்கவேண்டும் என்ற செயற்குறிப்பை 1958 ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு ஏற்றுக்கொண்டு, சோதனை நடவடிக்கையாக எழும்பூர் சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஆறு மகளிர் காவலர்களும் ஒரு மகளிர் தலைமை காவலரும் ஓராண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், நண்பர் திரு. இட்டப்பா அவர்கள் சொன்னதைப் போல, சீறிவரும் புலியை முறத்தால் அடிக்கக்கூடிய வீர மங்கையர் யாரும் அதற்கு விண்ணப்பிக்கவில்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, காவல் துறையில் பணி ஆற்றுவதற்கு அவர்களால் சில சமயங்களில் முடியாமல் இருக்கலாம். காரணம், சில ரௌடிகள் முதலியவர்களோடு பெண் காவலர்கள் சமாளிப்பது கொஞ்சம் கடினமாக இருக்கக்கூடும். ஆனால், சி.ஐ.டி. பிரிவில் இப்படிப்பட்ட பெண்கள் நியமிக்கப்படுவது கள்ளக் கடத்தல் போன்ற பல செயல்களில் பெண்கள் ஈடுபடும்போது அவர்களைக் கண்டுபிடிக்கத் துணையாக இருக்கக்கூடுமாதலால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சி.ஐ.டி. பிரிவில் போடலாம். ஆனால், ரகசியத்தை எந்த அளவுக்குக் காப்பாற்றுவார்கள் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. எம். தேவராசன்:** இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது பெண்கள் காவல் படையில் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இருப்பதாகத் தெரியவில்லை. அது பற்றி விவரம் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, பெண்களை 'ட்ராபிக்' பிரிவிலாவது போடலாம். ஒழுங்காக ட்ராபிக் நடக்கும். பெண்களை சி.ஐ.டி. பிரிவில் போடுவது குறித்து கனம் முதலமைச்சரவர்களுக்குச் சந்தேகம் வேண்டாம். அவர்கள் எந்த அளவுக்கு ரகசியத்தைப் பாதுகாக்க வேண்டுமோ அந்த அளவுக்கு காத்துக் கொள்ளுவார்கள் என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்களுடைய யோசனையைப்பற்றி உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Chief Minister if ladies come forward to apply for police force, will this Government consider their cases sympathetically and appoint them as police officers?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் முதலிலேயே சொன்னேன். 1958ம் ஆண்டு மே மாதம் அப்படிப்பட்டவொரு செயற்குறிப்பினை அரசு ஏற்றுக் கொண்டு பெண்களுடைய விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அப்பொழுது யாரும் முன்வரவில்லை. மறுபடியும் அந்த முயற்சியை மேற்கொள்வதைப் பற்றிப் போலீஸ் அதிகாரிகளிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் யோசிக்கவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** காவல் துறைக்கு சமீபத்தில் தான் பெண்களை டில்லியில் சேர்த்திருப்பதாக நான் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். மேல் நாடுகளில் நீண்ட நெடுங்காலமாகவே பெண்கள் காவல் துறையில் இருக்கிறார்கள். ஆகவே, 1958 ஆம் ஆண்டில், ஆரம்பித்ததைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேல்நாடுகளிலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல் டில்லியிலும் இப்படிப்பட்ட முயற்சிகள் இருக்கலாம். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அதற்கு ஏற்றவகையில் சூழ்நிலைகளெல்லாம் அமைந்தாக வேண்டும். அதற்குப் பெண்கள் எந்த அளவுக்கு விரும்புகிறார்கள் என்று தெரிந்தாகவேண்டும். அவைகளையெல்லாம் ஆய்வு செய்தபிறகுதான் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இயலும்.

### அம்மாப்பேட்டை காவல் நிலையத்துக்குக் கட்டடம்

* 378 வினா—**திரு. ந. சோமசுந்தரம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டையில் காவல் நிலையமும், காவலர் இல்லமும் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இல்லை.

### குடும்பக்கட்டுப்பாடு பற்றிய திரைப்படம்

* 451 வினா—**திரு. என். இட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடுத் துறையினரால் திரைப்படம் ஏதேனும் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அடையாறு அரசு திரைப்பட நிலையத்தில் "நாம் இருவர்—நாம் பெறுவதும் இருவர்" என்ற செய்திப்படமும், "போதும் ஐயா" என்ற ஒரு சிறு வண்ணப்படமும் எடுத்து முடிக்கப்பட்டு

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, this suggestion has to be considered only when the country reaches the level where the economic take-off stage is arrived at.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, எவ்வளவுதான் பிரச்சாரம் செய்தாலும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தை 30 ரூபாயிலிருந்து குறைந்தபட்சம் 100 ரூபாய்க்காவது உயர்த்தினால்தான் நல்லமுறையில் நடை பெறும் என்பதை உணர்ந்து அப்படிச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகும். அதில் இந்திய அரசு நாடு முழுவதும் ஏற்படுத்தி யிருக்கும் ஒரு அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. அந்தந்த மாவட்டத்திலேயுள்ள வசதிகளுக்கேற்ப கிடைக்கின்ற நன்கொடைகளுக்கேற்ப சில வசதிகளை அதிகமாகச் செய்து வருகின்றது. இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தை வலியுறுத்த வலியுறுத்த, இது தேசியக் கடமை, குடும்பக் கடமை என்ற உணர்ச்சி மக்களை விட்டு விலகி இது ஏதோ ரூபாய்க்காகச் செய்து கொள்ளக்கூடிய காரியம், வரவுக்காகச் செய்கிற காரியம் என்ற தவறான எண்ணத்தை ஒருவேளை வளர்த்திவிடுமோ என்று ஐயுறுகிறேன். இதிலே கிடைக்கும் உதவித் தொகையைவிட இதனால் கிடைக்கும் நன்மைகள், குடும்பத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் மிகப் பெரியவை என்பதை மக்கள் உணர வேண்டுமென்று நான் விழைகின்றேன்.

*Tubectomy ward in Women and Children Hospital at Egmore.*

* 452 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a tubectomy ward has been opened at the Government Hospital for Women and Children, Egmore, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) போஸ்ட்-மார்ட்டம் திட்டத்தின் ஒரு பகுதியான 20 படுக்கைகள் கொண்ட ட்யூபக்டமி பிரிவு 17-11-1971 அன்று திறந்து வைக்கப்பட்டது.



திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, எழும்பூரிலுள்ள மகளிர்-சிறுவர் மருத்துவமனையில் மிக நெருக்கடியாக, அதாவது ஒரு நாளைக்குப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் செல்கின்றன. அவர்களை உடனடியாகக் கவனிப் பதற்கான வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அதை விரிவு படுத்த அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே மருத்துவமனைகள் என்றால் மக்கள் கூட்டம் அதிகமாகிறது. ஆகவேதான் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை வலியுறுத்தி இந்தக் குழந்தைகளினால் ஏற்படும் தொல்லை வீட்டுக்கும் வேண்டாம், நாட்டுக்கும் வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வெள்ளக்கோவிலிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்

* 453 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வெள்ளக்கோவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Government Hospital at Theni*

* 454 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the hospital at Theni has been opened and is functioning;

(b) if so, whether there is a proposal to increase the number of doctors; and

(c) the steps proposed for expansion of the Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம். இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

(உ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தேனியிலுள்ள மருத்துவ மனையானது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு சென்றிருந்தபொழுது அறிந்திருப்பார்கள். இப்பொழுது அங்கே ஒரு டாக்டர்தான் இருக்கிறார். அங்கு இன்னும் டாக்டரைப் போடுவதற்கும், அந்த மருத்துவமனையை விஸ்தாரப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே பொறுப்புள்ள தலைவர்கள் கேட்கின்றபொழுது, எல்லா மருத்துவ மனைகளும் விஸ்தாரப்படுத்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மருத்துவமனையைப் பற்றியும் கேட்கும்பொழுது நாட்டுமக்களுக்கே சந்தேகம் உண்டாகிவிடும், மருத்துவமனை இருக்கிறதா என்று. ஏனென்றால் 10 இலட்ச ரூபாயில் இப்பொழுதுதான் தேனியில் கட்டி முடிக்கப்பட்டு 3 தினங்களுக்குமுன் திறந்து வைக்கப்பட்டது. அங்கே ஒரு பெண் டாக்டர் தேவை என்பதை இந்தத் துறை ஏற்று, நிதி இலாக்காவிற்கு சம்மதம் கேட்டு எழுதியிருக்கிறது. நிதி இலாக்கா அதை ஒத்துக்கொண்டால், அங்கே ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள காசநோய்ப் பிரிவு

* 455 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் செயல்பட்டு வரும் மாவட்ட காச நோய் தடுப்பு நிலையத்தினை நாகையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 456 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள காச நோய் பகுதியில் இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 30 படுக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 457, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள்.



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரிசன நல அமைச்சர் அவர்கள் இப்பொழுது வரவில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, if this question has been included in the order paper, I would like to know whether the Hon. Minister has requested its postponement. If it is not so, it will be embarrassing to us. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக மாண்புமிகு அமைச்சர்கள் வினாக்கள் கூட ஆர்டர் பேப்பரிலே வழக்கமாக இருப்பது போல் தான் இருக்கும். ஆனால் அந்த மரபுகூட இப்பொழுது கொஞ்சம் மாறி வருகிறது. சில அமைச்சர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் தள்ளி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடலாம். அப்பொழுது அவைக்கும் கௌரவமாக இருக்கும். வினாக்கள் போய்ப்போய்த் திரும்பித் திரும்பி வருவதை மாண்புமிகு அமைச்சரவர்களும் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*Price of Sugar*

* 461 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that retail price of sugar in Madras City and districts has gone up since November 1971; and

(b) if so, the steps taken to bring down the price?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1971, டிசம்பர் திங்களில் இந்த அரசு, சர்க்கரை ஆலைகளுடன் பேச்சு வார்த்தை நடத்திற்று. அப்போது, கிலோகிராம் ஒன்று ரூ. 2 வீதம் சர்க்கரை பொதுமக்களுக்கு பங்கீடு செய்யப்படுவதற்காக, திங்கள் ஒன்றுக்கு தாம் வெளியனுப்பும் சர்க்கரை உற்பத்தியினால் 10% அளவை அரசுக்குத் தருவதாக அந்தச் சர்க்கரை ஆலைகள் ஒப்புக்கொண்டன. 1972 ஜனவரி முதற்கொண்டு, சர்க்கரை கிலோ ஒன்று ரூ. 2 என்ற வீதத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படுவதற்காக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 என்ற தொழிற்சாலை விலை வீதத்தில் சர்க்கரை ஆலைகள் தமக்கு வழங்குகிற 60 சதவீத சர்க்கரை அளவிலிருந்து இந்திய அரசு ஒதுக்கீடுகள் செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் அனுமதி பெற்ற கடைகள் மூலமாக பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைகள் காண்பிக்கப்படுவதன் மேல் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது விற்பது கிலோவிற்கு இரண்டு ரூபாய் என்று விற்கிறார்கள். அவர்களுக்கு மொத்தமாக உள்ள விலை, அமைச்சர் அவர்கள் சொன்னபடி பார்த்தால் ரூ. 1.50 தான் ஆகிறது. அப்படியானால் ரூ. 1.75-க்கு கூட்டுறவுத் துறை மூலமாகவோ அல்லது நியாய விலைக் கடைகள் மூலமாகவோ விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ரூ. 1.50 என்பது எக்சைஸ் ட்யூட்டி இல்லாமல். அந்த ரூ. 45-ஐயும் சேர்த்துக்கொண்டால் ரூ. 1.95 ஆகிறது. மேற்கொண்டு இன்சிடென்டல் சார்ஜையும் சேர்த்து ரூ. 2 என்று போட்டிருக்கிறோம்.

**திரு. என். மருதாசலம்:** கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி இந்த சர்க்கரை கொடுப்பதில் கார்டுக்கு ஒரு ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த ஒரு ரூபாய் என்பது எதற்காக வாங்கப்படுகிறது? அந்த ரூபாய் சர்க்காருக்கு வந்து சேருகிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சில மாவட்டங்களில் குடும்பக் கார்ட் வைத்த நேரத்தில் பாதுகாப்பு நிதிக்காக ஒரு ரூபாய் சிலர் வசூலித்திருக்கிறார்கள். அப்படி வசூலிக்கக்கூடாது என்று முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்ததன் பேரில் அது நிறுத்தப்பட்டுவிட்டிருக்கிறது. கொடுத்த பணம் பாதுகாப்பு நிதியில் பத்திரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை விலை உயர்வுக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள் அதற்கான நமது மாநில அரசின் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சர்க்கரை விலை உயர்விற்குக் காரணம் மத்திய அரசு மாதாமாதம் வெளியிடும் சர்க்கரை அளவைப் பொறுத்திருக்கிறது. 60% லெவி முறையில் விற்பதற்காக மாநில அரசுக்குத் தருகிறார்கள். 40% வெளிச் சந்தையில் விற்றுக்கொள்ளலாம் என்று உரிமம் வழங்கியிருக்கிறார்கள். அதைக் கூட இனிமேல் அரசுக்கே கொடுக்கவேண்டுமென்று பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக இன்றையதினம் டெல்லியில் ஒரு மாநாடு கூட்டியிருக்கிறார்கள். அதில் கலந்து கொள்வதற்கு தமிழ் நாட்டிலிருந்து சென்றிருக்கிற ஆலை முதலாளிகள் போவதற்கு முன்பு என்னைச் சந்தித்து விட்டுச் சென்றார்கள். உங்கள் கருத்து என்ன என்று கேட்டிருக்கிறோம். 40% வெளிச் சந்தையில் விற்பதற்கு ஒப்புக்கொள்ளப் போகிறீர்களா, டெல்லி சர்க்கார் என்ன சொல்கிறது என்பதைப் பற்றி அறிந்து தகவல் சொல்ல



வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டு தான் முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு சொல்வதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஜனவரி 1-ம் தேதி முதற்கொண்டு 60% சர்க்கரையை அரசாங்கம் மூலமாகவே விநியோகிப்பதாக அறிகிறோம். மாதம் ஒன்றுக்கு 10,000 டன் என்று அமைச்சர் அவர்களின் குறிப்பில் இருக்கிறது. அப்படியானால் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் இந்த மூன்று மாதங்களுக்கு 30,000 டன் சர்க்கரை அரசாங்கத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 30,000 டன்னில் ஏறக்குறைய 9,600, 9,700, 10,000 டன் என்று வந்திருக்கும். சிறிது கூடுதல், குறைவாக வந்திருக்கிறது அலாட்மென்ட். முழுவதையுமே குடும்பக் கார்ட் மூலம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். சில மாவட்டங்களில் கொடுக்கப்பட்ட சர்க்கரை சரியான முறையில் பொதுமக்களிடம் போய்ச் சேராமல் அப்படியே தேங்கி இருக்கிறது, எடுக்கவில்லை. சென்ற மாதம் 'காரி ஓவர்' செய்தது 5,000 டன் இருக்கிறது. இந்த மாதம் 10,000 டன் வந்திருக்கிறது. ஆக, 15,000 டன் சர்க்கரை சர்க்கார் கையிருப்பில் இருக்கிறது. அலாட்மென்ட் போட்டிருக்கிறோம். அவர்கள் அதை எடுத்து கிராம மக்களுக்கும், பொது மக்களுக்கும் விநியோகிப்பார்கள் என்று நம்புகிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அரசாங்கம் விநியோகிக்கிற 60% சர்க்கரை கூட்டுறவுத் துறை வாயிலாக விநியோகிக்கப்படுகிறதா? அல்லது தனியார் வாயிலாக விநியோகிக்கப்படுகிறதா? தனியார் மூலமாக விநியோகிக்கப்பட்டால் அப்படி யார், யார் வழியாக அது விநியோகிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே இந்த மன்றத்தில் நான் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். ஹோல்சேல் டீலர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள், கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களை நியமித்தோம். ரீட்டெய்ல் முறையில் கூட ஆங்காங்குள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள்மூலம் விநியோகிக்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்தோம்.

நான் வருத்தத்தோடு ஒன்று தெரிவித்துக்கொள்வேன். சென்னையில் இருக்கிற டி.யு.சி.எஸ். இடம் விற்கக் கொடுத்த சர்க்கரையை ஒழுங்காக அவர்கள் விநியோகிக்கவில்லை என்ற புகார் வந்து அங்குள்ள பல புத்தகங்களை எடுத்துப் பார்த்ததில் பொதுமக்களின் புகார் உண்மை என்று தெரிந்து அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இப்படித் தவறு செய்கிற கூட்டுறவு ஸ்தாபனங்களை ரத்து செய்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன். ரத்து செய்வதோடு அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கக் கூடும். அப்படிக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் எந்த இடத்திலாவது இல்லை என்றால் அப்படி இல்லை என்பதற்காக பொது மக்களுக்குச் சர்க்கரை விநியோகம் செய்வது என்பதை நிறுத்தி வைக்க முடியாது. அப்படியில்லாத இடங்களில் வேறு முறையில் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: சர்க்கரை விலை ஏறியிருந்த நேரத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் மற்ற சில சர்க்கரை ஆலைகளிலும் சர்க்கரை ஏராளமாகத் தேங்கியிருந்தது. அதை அப்போது விநியோகம் செய்திருந்தால் விலை ஏறாமல் குறைக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏராளமாக தேங்கியிருந்தது. அப்படித் தேங்கியிருந்ததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய அரசு எப்படி ஆணை பிறப்பிக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருந்தால் உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கமாட்டார்கள். கூட்டுறவுத் துறைக்கு அல்லது மற்றவர்களுக்கு ஆலைகள் சொந்தமாகயிருக்கலாம். ஆனால் சர்க்கரை எடுத்து விநியோகிப்பதற்கு ஆணை போடுகிற அதிகாரம் டெல்லி அரசுக்குத்தான் இருக்கிறது, தமிழக அரசிடம் இல்லை. ஒரு ஆலையில் தேங்கியிருந்தாலும் கூட எவ்வளவு எடுத்து விற்கலாம் என்ற உத்தரவு போடவேண்டியவர்கள் மத்திய அரசு. அவர்கள் போடும் உத்தரவிற்கேற்ப இங்குள்ள ஆலைகள் வழங்க முடியுமே தவிர, அவர்களிடம் கையிருப்பு அதிகமாக இருக்கிறது என்பதால் எந்த சர்க்கரை ஆலையும், கூட்டுறவு ஆலைகளும் தாங்களாகவே எடுத்து விநியோகித்து விடமுடியாது.

திரு. மு. சண்முகம்: இந்த 40% சர்க்கரையையும் அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்றிருக்குமானால்—கரும்பை விலைக்கு எடுக்கும்போது ஆலையாளர்கள் விலையைக் குறைத்து அதை உற்பத்தி செய்பவர்களுக்குப் பாதகம் ஏற்படத்தக்க முறையை உண்டு பண்ணுகிறார்கள், எனவே அதைக் கருத்தில் கொண்டு அந்நிலையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தக் காரணத்திற்காக நாம் அதை மறுத்துவிட முடியாது. 40% வெளிச் சந்தையில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஹோட்டல்ஸ், பேக்கரிகள் போன்றவைகளுக்கு வெளிச் சந்தையில் மொத்தமாக விற்கப்படுகிறது. பொதுமக்கள் சிலர் சர்க்கரை



கிடைக்காத நேரத்தில் வெளிச் சந்தையில் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது வாங்குகிறார்கள். முழுமையாக வெளியே போகாமல் எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்து முழுவிநியோகத்தையும் அரசே நடத்துவது என்பதில் கொஞ்சம் சிரமம் இருக்கும். இருந்தாலும் மத்திய அரசு என்ன யோசனை சொல்கிறார்கள் என்று பார்த்து அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த சதவிகிதம் போட்டு மத்திய சர்க்கார் கொடுப்பது தேவைக்கு ஏற்றபடி போடும் உத்தரவா அல்லது க்வாண்டிட்டிக்கு ஏற்ப உத்தரவு பிறப்பிக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய அரசு 60% விநியோகிக்கிறார்கள் என்றால், இந்திய முழுவதிலும் இருக்கிற சர்க்கரை ஆலைகளில் உள்ள கையிருப்பை கணக்கிலெடுத்து அதில் 60 சதவீதம் விநியோகிக்கிறார்கள். அதில் மாநிலத்திற்கு மாநிலம் இவ்வளவு இவ்வளவு என்று ஒதுக்குகிறார்கள், ஒதுக்குகிற அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது. எப்படி ஒதுக்குகிறார்கள் என்று நமக்குத் தெரியாது.

திரு. எம். சுரேந்திரன்: சர்க்கரை இனிப்பாக இருந்தாலும் அதன் விற்பனையும் விநியோகமும் கசப்பாகவே இருக்கிறது என்பது அனுபவத்தில் தெரிந்திருக்கிற உண்மை. ஆகவே இந்த சர்க்கரை விநியோகம் முழுவதையும் அரசாங்கமே எடுத்து நடத்துவது நல்லதா இல்லையா என்பதைப் பற்றி அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சர்க்கரை சுரேந்திரன் அவர்களுக்கு கசப்பாக இருப்பதற்காக வருந்துகிறேன். பட்டினத்தாருக்கு கரும்பு கசந்தது என்றால் உறுப்பினர் அவர்களுக்கு சர்க்கரை கசக்க ஆரம்பித்திருக்கிறது. முழு விநியோகத்தையும் அரசே ஏற்று நடத்துவது என்பது இப்போது டெல்லியில் நடைபெறுகிற ஆலோசனைக் குழுவின் முடிவைப் பொறுத்திருக்கிறது. அப்படி ஆலோசனை சொல்வார்களேயானால், அரசாங்கம் அதுபற்றி பரிசிலனை செய்து முடிவு எடுக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நம் மாநிலத்திற்கு எவ்வளவு சர்க்கரை தேவை? இப்போது எவ்வளவு ஒதுக்கப்படுகிறது? தேவையை விட குறைவாக இருக்கிறதா, என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நம் மாநிலத்தில் கண்ட்ரோல் இருந்த நேரத்தில் எவ்வளவு சர்க்கரைகொடுத்துக்கொண்டு வந்தார்களோ, அந்த அளவு இப்போதும் கொடுக்கிறார்கள். 40% வெளிச்சந்தையில் விற்கிறார்கள். ஆனால்

வெளிச் சந்தையில் சர்க்கரை ரூ. 3 என்று விற்கப்படுகிறது. நமக்கு 10,000 டன் கொடுக்கிறார்கள். சில இடங்களில் சில பேர்கள் தவறு செய்கிறார்கள். தவறு செய்பவர்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாகத் தண்டிக்கும். நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று ஏற்கனவே தெரிவித்தேன். சென்ற மாதம் கொடுத்த சர்க்கரையில் கூட 5,000 டன் பொது மக்களுக்கு விநியோகிக்க முடியவில்லை. வாங்குவோர் இல்லை என்ற தகவல் வந்திருக்கிறது. விநியோக முறையில் சில தவறுகள் எழுவது இந்த மாதத்தில் தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to introduce Bee to prepare sugar and bring down the rate of sugar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்தப் புதிய முயற்சி இந்தியாவிலேயே இப்போது தான் பரிட்சார்த்தமாக நடந்து கொண்டிருக்கிறது. வெற்றிகரமானதாகத் தெரியவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, தமிழகத்திற்குத் தேவையான சர்க்கரையை தமிழ்நாட்டிலுள்ள ஆலைகளிலிருந்து பெற வேண்டுமானாலும், மத்திய அரசாங்கத்தின் ஆணைவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரையை நாமே விநியோகிப்பதற்கு வேண்டிய அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு தமிழக அரசு முற்படுமா? அப்படியில்லையென்றால், இந்த சர்க்கரை ஆலைகளிலே அவர்கள் ஏதாவது மூலதனம் போட்டிருக்கிறார்களா, எந்த அடிப்படையில் அவர்கள் அந்தக் கட்டுப்பாட்டை செய்கிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சர்க்கரை கண்ட்ரோல் மத்திய அரசாங்கம் செய்கிறது. அவர்கள் தான் அதற்கு எக்ஸைஸ் வரி போடுகிறார்கள். அவர்கள் கொடுக்கிற சர்க்கரையை வைத்துத்தான் நாம் விநியோகிக்க முடியும். நாமாக நம் மாநிலத்தில் சர்க்கரை இருக்கிறது என்று எடுத்துக் கொண்டு விடமுடியாது. அந்த அதிகாரம் நமக்கில்லை. அந்த அதிகாரம் தேவை என்பதும் மாநில சுயாட்சியில் அடங்கியிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகிற போது அந்த சர்க்கரை விநியோகம் மத்திய அரசாங்கம் கொடுத்துத்தான் மாநில அரசாங்கம் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நம்முடைய தேவை மாதத்திற்கு எவ்வளவு? அந்தத் தேவையை நாம் கேட்கும்போது மத்திய அரசு கொஞ்சம் கூட குறைக்காமல் கொடுத்து வருகிறார்களா? அல்லது குறைத்து இருக்கிறார்களா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நமது தேவை எவ்வளவு என்று நாம் கேட்பதற்கு முன்பு அவர்கள் மாதத்திற்கு இவ்வளவு தான் சர்க்கரை என்று அலாட்மெண்ட் போட்டுக்கொடுத்து விடுகிறார்கள். நமக்குத் தேவை சுமாராக 15,000 டன் மாதத்திற்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, தமிழகத்திலே இப்போது 16 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. 6 ஆலைகள் கூட்டுறவுத் துறையில் இருக்கின்றன. அந்த ஆலைகளில் வருஷத்தில் எவ்வளவு சர்க்கரை உற்பத்தி செய்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் இப்போது சர்க்கரை விநியோகித்தும் கூட, அதைப் பொதுமக்கள் சரியாக வாங்குவதற்கு முடியவில்லை. போனமாதம் 5,000 டன், 10,000 டன் சர்க்கரை கையிருப்பு இருப்பதாகச் சொன்னார்கள். அதைக் கூட்டுறவுத்துறை விநியோகிப்பதால் தான் இந்த மந்தமான சூழ்நிலை இருக்கிறது. முன்பு டி.எல்.ஓ. அவர்கள் பிரிசிடெண்ட் அவர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டதன் மூலம் பொதுமக்களுக்கு சர்க்கரை சரியான முறையில் விநியோகிக்கப்பட்டது. அப்படிப்பட்ட முறை அனுசரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தின் தலைவர் மூலம் விநியோகிக்கப்பட்டது. அதில் பல தவறுகள் ஏற்பட்டன. பல ஊராட்சிகளிலிருந்து பணம் வந்து சேரவில்லை. அந்த முறையைக் கையாண்டால் அரசாங்கத்தின் பணம் தான் நஷ்டமாகும் என்று கருதுகிறேன். வேறு எந்த வகையில் செய்தால் அது பொதுமக்களுக்கு சரியாகப்போய்ச் சேரும் என்று அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மத்திய அரசின் உத்தரவின் பேரில் சர்க்கரை விநியோகிக்கப்படுகிறது. நமக்குத் தேவையான சர்க்கரை இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டாலும் அதை எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, மாகாண சுயாட்சி வந்தால் தான் சரியான முறையில் விநியோகிக்கப்படும் என்று சொன்னார்கள். இதே மாநில சுயாட்சியை இதர மாநிலங்களுக்கும் தான் கொடுக்கப்படும். ஆகையால், அங்கே உற்பத்தியாகும் இரும்பு, உரம் போன்றவைகளையும் அவர்களே எடுத்துக்கொண்டால் என்ன செய்வது?

[1972 மார்ச் 13

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் சொல்லியது, நமக்கு இருக்கும் சர்க்கரையை நாமே எடுத்துக்கொள்ளக்கூடாதா, அதற்குக்கூட மத்திய அரசாங்கத்தின் ஆணையை எதிர்பார்க்கவேண்டுமா - என்று திரு. வகாப் அவர்கள் கேட்டார்கள். இப்போது இருக்கும் ஆணைப்படி மத்திய அரசாங்கம் தான் சர்க்கரை கட்டுப்பாட்டை வைத்து இருக்கிறது. அவர்கள் ஒரு அடிப் படை வைத்து தருகிறார்கள். அவர்கள் கொடுக்கிற ஆணையைப் பொறுத்துத் தான் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தமிழகத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் நாமே எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் தேவை என்பதும் மாநில சுயாட்சியில் அடங்கியிருக்கிறது என்றுதான் தெரிவித்தேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, சர்க்கரையை விநியோகிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. அதற்கு விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் யாரிடத்தில் இருக்கிறது? அகில இந்திய விலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? காஷ்மீரத்திலே சர்க்கரை விலை குறைவு என்று சொல்லுகிறார்கள். ஒரே இந்தியா என்று பேசும் மத்திய அரசாங்கம் இதற்கு ஒரே மாதிரியான விலையை நிர்ணயிக்க வேண்டாமா? அதற்கு இந்த அரசாங்கம் வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** காஷ்மீரத்தைப் பற்றி எனக்குத் தகவல் இல்லை. ஆனால் இந்தியா முழுவதற்கும் ரூ. 3 என்ற விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று ஆணைபோடப்பட்டு, விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

### வால்பாறை துணைதாசில்தார் அலுவலகத்துக்குக் கட்டடம்

* 462 **வினா—திரு. இ. ராமசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வால்பாறை துணைத் தாசில்தார் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற் கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

### *A.U.M. Canal in Kanyakumari District.*

* 463 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total area of the A.U.M. Canal in Kanyakumari district fit for boat passage; and

(b) the steps taken to extend this boat passage up to Cape Comorin?



1972 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) உறுப்பினர் கேட்பது நீளத்தைப் பற்றியே அன்றி பரப்பைப் பற்றி அல்ல என்று எண்ணப் படுகிறது. படகுப் போக்குவரத்துக்குப் பயன்படும் கால்வாயின் நீளம் 8.9 கிலோ மீட்டர்களாகும்.

(இ) இலாபகரமாக இல்லாத காரணத்தால் படகுப் போக்குவரத்துக்குப் பயன்படுமாறு மேற்படிக் கால்வாயைக் குமரிமுனை வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### நீர் பங்கீடு முறை

* 464 **வினா—திரு. சி. இராமநாதன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள ஏரிகளில் நீர் பங்கீடு முறையை ஒழுங்குபடுத்த தனி அலுவலர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. சி. இராமநாதன்:** தலைவரவர்களே, மழை நீரை நம்பி விவசாயம் செய்யும் பகுதிகளில் நீர் பங்கிடும் முறை சரியாக இல்லாததால் தண்ணீர் வீணாக்கப்பட்டு, பஞ்சம் ஏற்படுகிறது. 400-500 ஆயக்கட்டு உள்ள பெரிய ஏரிகளில் இத்தகைய அலுவலர்களை நியமிக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் இருக்கும் ஏரிகளில் வினியோகம் பொதுப்பணித்துறை அலுவலர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பிட்ட குறைபாடு இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா:** இப்போது பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கும் ஏரிகளில் தண்ணீர் அளந்து விடாமல் அவரவர்கள் விருப்பப்படி எடுத்து விட்டுக்கொள்கிற அளவுக்கு மதகுகள் அமைந்திருக்கின்றன. அந்த முறையை மாற்றி அந்த மதகுகளுக்குப் பூட்டு போடும் நவீன முறையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பொதுவாக பொதுப்பணித் துறையின் மூலமாக நல்ல பங்கீடு இருப்பதாக சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் குறையில்லை. மதகுகளை அமைக்கும் பிரச்னை தனிப் பிரச்னை. குறிப்பிட்ட இடத்தில் மதகுகள் அமைக்கவேண்டுமென்று சொல்லப் படுமானால் செய்யப்படும்.

[1972 மார்ச் 13

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கும் ஏரிகளில் பழைய ஆயக்கட்டுத்தாரர்களுக்குத்தான் தண்ணீர் வழங்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே பல லட்சக்கணக்கான பட்டாக்கள் கொடுத்து இருக்கிறோம். அப்படி புதுப் பட்டா கொடுத்த நிலங்களில் உள்ளவர்களை புது ஆயக்கட்டுக்காரர்கள் என்று பிரித்து வைத்து இருப்பதால், தண்ணீர் வழங்குவதில் தகராறு வருகிறது. ஆகவே, இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு புதிய பட்டாக்களை யார் யாருக்கு கொடுத்து இருக்கிறார்களோ, அந்த இடங்களில் உள்ளவர்களையும் ஆயக்கட்டுக்காரர்களாக சேர்த்துக்கொண்டு, தண்ணீர் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு ஏரிக்கு இவ்வளவு தான் என்று குறிப்பிட்ட அளவு ரிஜிஸ்டர்ட் ஆயக்கட்டுதான் இருக்கும். அவர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் கொடுக்க முடியும். ரிஜிஸ்டர்ட் ஆயக் கட்டு இல்லாத ஆயக்கட்டுத்தாரர்களுக்கு தண்ணீர் கொடுப்பது சாத்தியமில்லை. கொடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால், அந்த இடங்களில் பரிசீலிக்கலாம்.

### பாலங்கள்

*465 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செஞ்சி வட்டம், திருவண்ணாமலை ரோடில் சத்தியமங்கலம் அருகில் வாரகநதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*466 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், மாகரம் கண்டிகை கிராமத்து மக்கள் தங்கள் வயலுக்கு செல்லும் வழியில் குறுக்கே போகும் பூண்டி உாவு கால் மீது சிறு பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.



1972 மார்ச் 13]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த இடத்தையும் அமைச்ச ரவர்கள் நேரிலே வந்து பார்த்து இருக்கிறார்கள். புழலேரிக்கு வரும் அந்தக் கால்வாய் ஒரு கிராமத்திலுள்ளவர்களை அவர்களுடைய வயலிலிருந்து பிரித்து, அவர்கள் மறுபடியும் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது அது அதிகாரி களின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஆண்டே கட்டுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

### சாலைகள்

*467 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரமடை-வெள்ளியங்காடு சாலை சீரமைப்புத் திட்டம் நிறைவேற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதைக்கு இச்சாலையை சீரமைப்பதற்கு திட்டம் ஒன்றுமில்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் இருக்கிற காரமடை—வெள்ளியங்காடு வரையில் இருக்கும் சாலை சீரமைப்பு வேலை நிதி வசதி போதாததால் தடைபடுகிறது. எனவே, அதற்குப் போதுமான நிதியை அரசு அளித்து வேலையைத் துரிதப்படுத்து வதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சாலையின் மொத்த நீளம் 10 மைல் 3 பர்லாங்கு. அதிலே 6 மைல் 7 பர்லாங்கு அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. பஸ்-ரோடு ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சீரமைப்பதற்கு ரூ. 30,000 செலவழிக்க இருக்கிறோம். அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் ரோடைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்க முடியும். மீதியுள்ள சாலையின் நீளத்திற்கு பஞ்சாயத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

*468 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1972 மார்ச் 18

கோவை நகருக்குச் செல்லும் திருச்சி பாதை, அவிநாசி பாதை இரண்டிலிருந்தும் பிரிந்து நகரைத் தொடாமலேயே நகர எல்லைக்கு வெளியே நெடுஞ்சாலைகளில் சேரும்படி பை-பாஸ் ரோடுகள் அமைத்திடும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம்.

**திரு. ஏ. எம். இராஜா:** அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? எப்போது முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவு rough estimate has been assessed at 157 லட்சம் ரூபாய். இந்தத் திட்டத்தைப் பொறுத்து லாண்ட் அக்விசிஷன் செய்ய 39.27 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற செயற்குறிப்புகள் இருக்கின்றன.

### அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள்

* 469 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்வதற்கு தனித் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அதன் தொழிலாளர்களுக்காக 116 குடியிருப்புகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் போக்குவரத்துத் துறையில் இருக்கும்போது 116 வீடுகள் கட்டுவது மட்டுமே இப்போது பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குஜராத் மாநிலத்தில் இவர்களுக்காக 'ஓன் யுவர் ஹவுஸ்' என்ற ஸ்கீம் இருப்பது போல், இப்போது வீட்டுவசதி வாரியம் பலதிட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது போக்குவரத்து துறையிலுள்ள பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு சில ஆண்டுகளில் வீடுகள் கிடைக்கின்ற வகையில் பெரிய திட்டத்தை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா?



1972 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அரசாங்கப் போக்குவரத்துத் துறை மூலமாக இந்தக் குடியிருப்புகள் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அண்மையில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதே கோரிக்கையை அரசுக்கு வைத்தார்கள். வீட்டுவசதி வாரியத் தலைவரோடு அரசு போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் கலந்து பேசி இப்போது வீட்டு வசதி வாரியமும், அதே போல் குடிசை மாற்று வாரியமும் கட்டுகின்ற குடியிருப்புகளில் அரசாங்கத் துறையில் இருக்கும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தனிச் சலுகைகளை அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் போக்குவரத்துத் துறைக்கு என்று நிலம் வாங்கி, அதிலே தனியாக வீடுகளைக் கட்டி போக்குவரத்துத் துறைக்குத் தரவும் வீட்டுவசதி வாரியம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் கிட்டத்தட்ட 950 மனுக்கள் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்டு, வீட்டுவசதி வாரியத் தலைவருக்கு இப்போது அனுப்பப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** கன்னியாகுமரி டிவிஷனில் எத்தனை வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன? அங்குள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்னவாயிற்று?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நாகர்கோயிலில் ரூ. 3,60,000 மதிப்பீட்டுத் தொகையில் 36 டெனமென்ட்ஸ் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது அரசாங்கப் போக்குவரத்து நான்கு ரீஜன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு ரீஜன்களிலுள்ள தலைமை அலுவலகங்களில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு வசதி செய்து தந்துவிட வேண்டுமென்ற அடிப்படையில் வீட்டுவசதி வாரியத் தலைவரையும், குடிசை மாற்று வாரியத் தலைவரையும் நானே நேரில் அழைத்து பேசி கூடிய சீக்கிரத்தில் ஒரு திட்டத்தை உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அரசுப் பேருந்துப் பணிகள்

* 470 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து திருச்சி, கோவை வழியாக கூடலூருக்கு பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

* 471 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து திருச்சி, மதுரை வழியாக திருநெல்வேலிக்கு பகலில் செல்லும் துரித வண்டி விட ஆவன செய்ய ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. எம். தேவராசன் : நீண்டதூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் புகார்ப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. புகார்கள் குறைந்திருக்கின்றனவா ? அதிகமாகி இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புகார்களைப் பொறுத்தவரை இப்போது குறைந்து வருகின்றன. ஏற்கனவே வாரத்திற்கு ஏழு, எட்டு என்று வந்தது இப்போது வாரத்திற்கு இரண்டு என்ற அளவிலேதான் வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : புகார்ப் புத்தகத்தில் எழுதுகின்றவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புகார்கள் புத்தகத்தில் எழுதப்படுவது குறைகிறது என்ற காரணத்தால் வண்டியில் இருக்கும் கோளாறுகள் குறைந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? சமீபத்தில் நான் நீண்ட தூர பஸ்ஸில் சேலத்திற்குச் சென்றபோது வழியில் திண்டிவனத்தில் அந்த பஸ் நின்று விட்டது. வெகு நேரம் கழித்து ஒரு ஓட்டை வண்டி வந்து எங்களை ஏற்றிச் சென்றது. அதிலே ஜன்னல் திரை கிடையாது, ஜில்லென்ற காற்று, தூசி இவற்றுடன் சேலம் போய்ச் சேர்ந்தோம். புகார்ப் புத்தகத்தில் எழுதுவதற்கு பொதுவாக தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, இந்தமாதிரிக் கோளாறுகளைப் போக்க அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அறிந்திருக்கிறேன். ஆனால் அவர்கள் தெரிவித்ததைப்போல் வண்டிகள் அடிக்கடி நின்று விடுகின்றன என்று சொல்லுவது முறையாகாது. கிட்டத்தட்ட 200 வண்டிகள் ஒரு நாளைக்கு ஓடுகின்றன. சாதாரணமாக ஒரு வாரத்திற்கு 12 பிரேக் டவுன் ஆகிறது. ஒரு நாளைக்கு அதிக பட்சம் 2 என்ற முறையில்தான் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார்ப் புத்தகத்தைப் பயன்படுத்தாமல் இன்றையதினம் நேரிலே புகாரைத் தெரிவித்ததற்காக நன்றி. அதைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகளை நல்ல





முறையில் செய்வதற்கான மேம்பாட்டுத் திட்டங்களை அரசு போக்குவரத்துத் துறை மேற்கொண்டு வருகிறது என்பதையும் அவர்கள் நன்றாக அறிவார்கள். இருந்தாலும் இப்போது புதிய வண்டிகளில் கூட ‘அன்போர்ஸீன் சர்கம்ஸ் டன்ஸஸ்’—என்று சொல்லக்கூடிய வகையில் எதிர்பாராமல் வண்டிகள் நின்று விடுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். புதிய கார்கள் கூட சமயத்தில் நின்று விடுகின்றன என்பது உறுப்பினர் அவர்கள் அறிந்த ஒன்றுதான்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது ரிடையர்டு டிரைவர்ஸ், கண்டக்டர்லை மறுபடியும் நியமிக்கப்படுகிறார்களா ? அப்படி என்றால் தகுதி பெற்ற இளைஞர்களும், கண்டக்டர்களும் இல்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக தகுதி பெற்ற டிரைவர்கள் இப்போது குறைவாகத்தான் இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை டிரைவர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு இல்லை. வெளி மாவட்டங்களில் டிரைவர்கள் கிடைக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் கிடைக்கவில்லை. ஆகையால் நல்ல சர்விஸ் ரெக்கார்டு உள்ள டிரைவர்கள் உடல் நலமுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்களை மேலும் வேலையில் வைக்க இந்த அரசு அதை ஒரு ஊக்கமாக, அந்த முறையைக் கையாள உத்தேசித்துள்ளது.

திரு. கே. எ. வகாப் : இப்போது தனியார் பஸ்களை அரசே ஏற்றுக் கொண்ட காரணத்தால் அதிலே வேலை செய்த டிரைவர்களும், கண்டக்டர்களும் வேலை வாய்ப்பு இழந்து போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி தனியார் துறையில் பணியாற்றியவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

திரு. எஸ். வடிவேல் : நம்முடைய அரசாங்க பஸ்கள் எங்கேயாவது பழுதடைந்து நின்று விட்டால் டிக்கட் ரிஃபண்ட் கொடுக்க சாத்தியக் கூறுகள் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பயணிகளுக்கு டிக்கட் ரிஃபண்ட் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஆலோசனை கூறியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : இப்போது எல்லாத் துறைகளிலும் நாம் வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறோம். ஆனால் எக்ஸ்பிரஸ் பஸ் வேகம் பழைய வேகத்திலேயே இருக்கிறது. எக்ஸ்பிரஸ் ரயில் வேகத்தை எல்லாம் அதிகமாக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி எக்ஸ்பிரஸ் பஸ்களின் வேகத்தையும் அதிகரிக்க செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பஸ்களின் வேகத்தை அதிகரிப்பது சாலைகளின் அமைப்பைப் பொறுத்திருக்கிறது. பொதுவாக, தேசிய நெடுஞ் சாலைகளில் செல்லுகின்ற பஸ்களின் வேகத்தை அதிகரித்திருக்கிறோம். எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறோம் என்றால் மின்னல் வேகத்தில் இங்கிருந்து நாகர்கோயிலுக்கு பஸ் விடுகிறோம். அந்த அளவுக்குப் பயணிகள் செல்லுகின்ற நேரம் குறைந்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குத்தான் ஓவர் டைம் கிடைப்பதில்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நீண்டதூரம் துரித பஸ்களில் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகள் சோர்வின்றி இருக்க, நல்ல இசைத் தட்டுகள் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இசைத் தட்டுகள் பிரயாணிகளின் சோர்வை நீக்கலாம். ஆனால் இந்த இசையிலே ' டிரைவர் கவனம் செலுத்தினால், இசைத் தட்டுகள் அந்த பிரயாணிகளின் உயிரையும் போக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நெடுந்தூரம் செல்கின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களில் உள்ள சீட்டுகள் நல்லமுறையில் இல்லை. இந்தக் குறை நீண்ட நாட்களாகச் சொல்லப்பட்டும் நிவர்த்திக்கப்படவில்லை. இதைப் பரிசீலிக்க அமைச்சரவர்கள் சென்னையிலிருந்து, நாகர்கோவில் வரையில் பிரயாணம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இருக்கைகள் நல்ல முறையில் இருப்பதற்கு போக்குவரத்துத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கான குஷன் நமக்கு கிடைக்கவில்லை. நாம் அதற்கான ஆர்டர் கொடுத்தும், சென்ற யுத்தத்தின் காரணமாக நமக்கு இன்னும் குஷன்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் குஷன்கள் பொருத்தப் பட்டு, நல்ல இருக்கைகள் அமைக்கப்படும். நான் பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் அமைச்சராவதற்கு முன்னாலேயே எல்லா பஸ்களிலேயும் சென்றிருக்கிறேன். ஆனால் ஒருநாள் கூட மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களைப் பார்த்ததில்லை.

### பெத்தசெட்டிபுரம் அரிசனங்களுக்கு நிலப்பட்டா

* 457 வினா—**திரு. க. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப் பட்டுள்ளதா ?



(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (ஆ) இல்லை.

**திரு. க. துரைசாமி :** தலைவரவர்களே, அந்த இடத்தில் 1968-க்கு முன் 40 பேர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது அரசாங்க புறம்போக்கு நிலம் என்றும், நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருந்தால், எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அதன் மதிப்பு என்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, கோவை மாவட்டம், திருப்பூர் நகரில் பெத்தசெட்டிபுரம் அரிசன மக்கள் வாழும் பகுதியில் 1967 அல்லது 1968-ல் பட்டா ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது. குறிப்பிட்ட இடத்தில் பட்டா எதுவும் கொடுக்கப்பட வில்லை. புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதற்கு தனியாகக் கேட்டால் விசாரித்து பதிலளிக்கப்படும்.

### அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 458 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் பூதூர், பெரிய சோழியம்பாக்கம், பாலவாக்கம், எளாவூர், பழைய கும்மிடிப்பூண்டி ஆகிய அரிசன காலனி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (1) பூதூர், பெரிய சோழியம் பாக்கத்தைப் பொறுத்தமட்டில், 4 (1) பிரிவின்கீழ் அறிவிப்புகள் ஏற்பளிக்கப் பட்டு தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. 5-ஏ விசாரணை நடைபெற வேண்டியுள்ளது.

2. பாலவாக்கம் கிராமத்தைப் பொறுத்த மட்டில், வரைவு அறிவிப்புச் செயற்குறிப்புகள் வருவாய்த்துறை (நிலவரி) வாரியத் துடன் முடிவுபெறாமல் உள்ளன.

3. எளாவூர் பொறுத்த மட்டில் பிரிவு 6-ன் கீழ் அறிவிப்புகள் கிடைக்கப் பெற்று அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. கும்மிடிப்பூண்டி கிராமத்தைப் பொறுத்தமட்டில், 4(1) பிரிவின்கீழ் அறிவிப்பு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இன்னும் முடிவு பெறாமல் உள்ளன.

**459 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

பொன்னேரிப்பேட்டைத் துணை வட்டத்தில், கன்னிகைப்பேர், பெரிய வண்ணான்குப்பம், செஞ்சியகரம் ஆகிய அரிசன காலனி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU : (1) With regard to Kannigaipair Village notification under section 4 (1) was approved and published in *Tamil Nadu Government Gazette*, Declaration under section 6 has been received from the Collector and it is under consideration of the Government.

(2) With regard to Vannancuppam Village the land has been taken possession of and the layout is pending approval with the Engineer, Periacuppam Panchayat Union.

(3) With regard to Senjiagaram declaration under section 6 has been approved and published in *Tamil Nadu Government Gazette.*

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் விபரமாகச் சொன்னார்கள். அதற்கு என்னுடைய நன்றி. ஆனால் அரசாங்கம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க வேகமாக நடவடிக்கை எடுத்து வந்தும், நில ஆர்ஜிதம் செய்து வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் பல்லாண்டு காலமாக வீட்டுமனைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அரிசன மக்கள் விரக்தியடைகிறார்கள். எனவே, காலதாமதத்தை தவிர்க்க, துரித நடவடிக்கை மேற்கொள்ள அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இது நீண்டகால பிரச்னையாக இருப்பதால், அந்த மக்களுக்கு எல்லாம் விரைவிலே நிலம் கொடுக்க, அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டும் வருகின்றன. அப்படிச் செய்கின்ற நேரத்தில் சிலசமயங்களில், நில ஆர்ஜிதம் செய்வதில் சில இடையூறுகள் இருப்பதால், சற்று காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. அந்த காலதாமதத்தையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.





**பர்மா அகதிகள் கடைகள் வைக்க கட்டட வசதிகள்**

**460 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, இன்றைக்கு சென்னையில் பாரி முனையிலிருந்து கடற்கரை ரயில்வே நிலையம் வரையில் அமைந்திருக்கின்ற பர்மா பஜாரினால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. எனவே, அந்த பர்மா பஜாரை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அங்கே இருந்து பர்மா பஜாரை மாற்றித்தர வேண்டுமென்று என்னிடத்திலே மனு கொடுக்கப்பட்டது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, பர்மா பஜார் அமைப்பதற்கான பல இடங்களை தேர்வு செய்தது. ஆனால் அந்த மக்கள் அந்த இடங்களை விரும்பவில்லை. அவர்களுக்கு தக்க இடத்தினை தேர்ந்தெடுப்பதில் அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.

**472 வினா—திரு. என் இட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக மதுரை வரை பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, என்னுடைய கேள்விகள் 470, 471, 472 ஆகிய எல்லாவற்றுக்கும் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்லிவிட்டார்கள். புதிய அரசு வந்த பிறகு மாயூரம் முதல்நிலை நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. மாயூரத்திலிருந்து மதுரை செல்லவேண்டுமானால் ரயில் மூலமாக செல்வதை விட, மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக பஸ் மூலம் சென்றால் ஏறக்குறைய 30 மைல்களுக்குமேல் குறைவாக

இருக்கிறது. பிரயாணிகளுக்கு நேரமும் மிச்சமாகும். அதை மனதிலே கொண்டாகிலும், மாயூரத்திலிருந்து, தஞ்சை, புதுக்கோட்டை வழியாக ஒரு பேருந்து விடுவதற்கு அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 470, 471, 472 ஆகிய மூன்று கேள்விகளுக்கும் இல்லை என்று பதில் சொன்னதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், மாயூரத்தில் இருந்து என்பதற்குப் பதிலாக நாகையிலிருந்து என்று கேட்டிருந்தால் 'உண்டு' என்று சொல்லியிருப்பேன். ஒவ்வொரு ஊரிலிருந்தும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விடுவது சாத்தியமல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். மாயூரம் தஞ்சையில்தான் இருக்கிறது. நாகையும் தஞ்சையில்தான் இருக்கிறது. எனவே, மாயூரத்திலிருந்து நாகைக்கு வந்துவிட்டால், அங்கிருந்து மற்ற இடங்களுக்குப் போவதற்கு வசதி இருக்கிறது. இருந்தாலும் மாயூரத்திற்கு வேண்டுமென்று கேட்ட காரணத்தினால், அங்கிருந்து திருச்சி, சிதம்பரத்திற்குச் செல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. மாயூரத்தின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததற்கு நன்றி.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இப்போது மாயூரத்திலிருந்து தஞ்சை வழியாக மதுரைக்கு நேரடியாக பஸ் விடக்கூடிய வாய்ப்பு இருப்பதினால் தான் அவ்வாறு சொன்னேன். எனவே, அரசாங்க பஸ் விடப்படாவிட்டாலும், இப்போது நிறுவப்பட்டுள்ள சோழன் போக்குவரத்து நிறுவனத்தார்—தற்போது மாயூரத்திலிருந்து சீர்காழிக்கு எல.ஆர்.வி.எஸ். பஸ் விட்டிருக்கின்றார்கள். அதைத் தஞ்சை, புதுக்கோட்டை வழியாக மதுரைக்கு நீட்டித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நெடுஞ்சாலை பேருந்துகளை போக்குவரத்துக் கழகத்தினிடம் விடுவதில்லை. அரசாங்கமே பஸ்களை விடும். இருந்தாலும் நேரடியாக மாயூரத்திலிருந்து மதுரைக்கு பஸ் விடுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரும்பத்திரும்ப சொல்வதால், அது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.**

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*



## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### சிம்சன் கூட்டு நிறுவனங்களில் தொடர்ந்து நடைபெறும் வேலைநிறுத்தமும் தொழிலாளர் பாதிப்பும் குறித்து

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Asesmbly Rules to move for adjoining the business of the House to discuss the following matter of urgent public importance viz.,

" the continued strike in Simpson group of companies affecting 15,000 workers and failure to resolve the dispute even after the State Government's discussion with the Union Labour Minister on 9th March 1972 and consequent suffering of the workers and their families ".

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, சிம்ப்சன் பிரச்சினை ஐந்து மாதகாலமாக பலமுறைகளில் எல்லாம் இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டு இருக்கின்றன. நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம் சமீப காலத்தில் இதை எப்படியாவது ஒழுங்கான முறையில் தீர்த்து வைப்பதற்கு மாநில அரசும், மத்திய அரசும் விரும்புகிறது, மத்திய அரசின் அமைச்சர் மாநில அமைச்சர்களோடு கலந்து பேசி சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கைகள் எவ்வளவு சீக்கிரத்தில் எடுக்கப்படும் என்பதை அறிய இந்த சபையில், சபைக்கு வெளியில் இருக்கிற மக்கள் பூராவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய தொழிற்சங்கங்களான ஏ.ஐ.டி.யு.ஸி., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ். ஆகியவை கலந்து பேசி சில ஆலோசனைகளை வைத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை அனைத்துப் பகுதியினர் பூராவும், தனியாக இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர் ஒவ்வொருவருக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதன் பிரதான நோக்கம் என்னவென்றால் இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னால் என்ன வேலையைச் செய்துகொண்டிருந்தார்களோ அந்த வேலையைச் செய்ய வைப்பதற்கும், அதேநேரத்தில் அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்—பாரபட்சமாக இருக்கிறது என்று சொல்லிறார்களே—அதை மாற்றக்கூடிய முறையில் அரசு மத்திய தொழிற்சங்க ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், அதற்கு அடிப்படையாக எல்லா சங்கங்களையும் சேர்த்து அங்கே சில அமைதிக்கும், ஒழுங்குக்கும் சில கோட்பாடுகளை நாம் அமைக்கவேண்டும் என்றும் இன்னும் சில ஆலோசனைகளையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆலோசனையைப் பார்த்து உடனடியாக மேலவையில் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி கருத்து என்னவென்று

யிருக்கிறார்கள். அதுவே முடிவான கருத்தாக இருக்கக்கூடாது என்றும் சீக்கிரத்தில் ஒரு நல்ல முடிவு ஏற்பட மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் என்ன, அதன் அடிப்படையில் அரசு எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களையும் கலந்து என்ன முடிவு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறோம். அரசு எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் எல்லாக் கட்சி தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் ஆதரவு கொடுக்கின்றோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிலையில் இன்று அந்தத் தொழில் நடக்க வேண்டும்.

அந்தத் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அமைதியான முறையில் தங்கள் வேலைகளைச் செய்ய உத்தரவாதம் வேண்டும். அந்த உத்தரவாதத்தை—அரசு தொழிற்சங்கங்களைக் கலந்துபேசி—பாரபட்சமற்ற முறையில் கொடுப்பதற்கு முன்வரவேண்டும். இந்தப் பிரச்சினை இனியும் காலதாமதமாகிக்கொண்டே போவது நலமல்ல. தொழிலாளர்கள் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

அறுவர் குழு அமைந்தது. நூறு ரூபாய் அட்வான்ஸ் கிடைத்தது. தொழிற்சங்களுக்கு 5 ரூபாய் சந்தா கூடக் கட்டினார்கள். இன்றைய தினம் அவர்கள் வாழ்க்கை நடத்த மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். எப்படியாவது நல்லமுறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்கிற எண்ணத்தில் தான் எல்லாத் தரப்பினர்களும் இருக்கிறார்களே தவிர வேறுவிதமாக ஒன்றும் இல்லை.

இந்தத் தொழில் நிறுவனம் இங்கே மூடப்பட்டு இருப்பதன் காரணமாக வெளி மாநிலங்களில் உள்ள பல தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் கூட பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு சீக்கிரத்தில் எல்லாச் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் பேசி, ஒரு கோட்பாட்டை உருவாக்கி, நல்ல முறையில் இந்தத் தொழில் நடைபெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்த இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இது அனுமதிக்கப்பட்டால் மேலும் பல தகவல்களை அளிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்கிற முறையில் இந்தத் தீர்மானத்திற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சிம்ப்சன் விவகாரத்தில் மத்திய அரசு இப்போது ஏதோ பல புதிய யோசனைகளை மாநில அரசுக்குச் சொல்லியிருப்பதாகவும், அதை மாநில அரசு உடனடியாகக் கவனிக்கவில்லை என்றும், இந்த நிலைமையில் அதன் அடிப்படையில் உடனடியாக





நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டு மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

நான் அன்றைக்குப் பேசும்போதே குறிப்பிட்டேன், மத்திய அரசினுடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சென்னைக்கு வந்தபோது எங்களை எல்லாம் சந்தித்து உரையாடிய நேரத்தில் திட்டவட்டமாக இதைச் செய்யுங்கள் என்று எதையும் குறிப்பிட்டு அவர்கள் சொல்லவும் இல்லை. அந்த அடிப்படையில் அந்த விவாதம் அவருக்கும் எங்களுக்குமிடையே நடைபெறவுமில்லை. சில யோசனைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. அதில் முக்கியமாக எல்லாக் கட்சி தொழிற்சங்கத் தலைவர்களையும் மாநில அரசு அழைத்துப் பேசுவதை முதல் கட்டமாகவும், அதில் நிலைமை சுமுகமாகத் தீர்வதற்கான வழிவகை ஏற்படாமல் போனால் மேலே நடைபெற வேண்டியதைப் பின்னால் செய்யலாம் என்றும் நான் சொன்னேன். அதை மத்திய அமைச்சரும் பத்திரிகை நிருபர்களிடத்தில் விளக்கியிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் கூட இதுபற்றிய ஒரு பிரச்சினை எழுந்தபோது திரு. கே. டி. கே. சொன்னார்கள். அதற்கும் நான் பதில் அளிக்கும்போது எல்லாக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும் கலந்து பேசுவதாக இருக்கிறேன் என்று சொன்னேன்.

ஆனால் அதற்கிடையில் ஏ.ஐ.டி.யு.ஸி., ஐ.என்.டி.யு.ஸி., எச்.எம்.என். ஸ்தாபன ங்கிரஸ்—இவைகளைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து பேசி அவர்களே ஒரு அறிக்கை விடுத்திருப்பதும், அதை மற்றொரு கட்சி தொழிற் சங்கத் தலைவருக்கும், வேறு ஒரு தொழிற்சங்கத் தலைவருக்கும்—அவர்கள் பெயர் குறிப்பிடவில்லை. நான் நினைக்கிறேன் அவர் குறிப்பிட்டது குசேலர் ஆகத்தான் இருக்கும்—அனுப்பியிருப்பதாக இங்கே எடுத்துக் கூறினார்கள். இதன்பிறகு மேலவையில் இந்த விவாதம் வந்தபோதுதான் நான் அங்கேயே குறிப்பிட்டேன். நான் எல்லாம் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து கலந்துபேச இருக்கிற நேரத்தில் குறிப்பாக சிம்ப்சன் தொழிலாளர் களிடத்தில் அதிக செல்வாக்குள்ள தி.மு.க. பேரவையைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்படாமல், திரு. குசேலரும் அழைக்கப்படாமல் இவர்களால் இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வுகாண இயலும்? அடிப்படையிலேயே இவர்களை விலக்கி, மற்றவர்கள் கூடிப் பேசி அறிக்கை விடுவித்திருப்பதானது மேலும் இந்தப் பிரச்சினையை சிக்கலாக்க வேண்டுமானால் பயன்படுமே தவிர நல்ல முறையில் ஒரு தீர்வைக் காண்பதற்குப் பயன்படாது என்பதாக மேலவையில் விவாதத்திற்குப் பதிலளிக்கிற நேரத்தில் குறிப்பிட்டேன்.

நாங்கள் கூட்டிய கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை, சில ஆலோசனைகளைத்தான் மற்றவர்களுக்கும் நாங்கள் கலந்து பேசி அனுப்பி வைத்திருக்கிறோம் என்று இப்போது அவர்கள் சொன்னாலும் கூட அது மற்றவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துவதாகத்தான் அமையும். ஒவ்வொரு அமைப்பினிடத்திலும் நம்பிக்கையும், பற்றும், பாசமும் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால்—நான் சொல்வதற்காக யாரும் வருத்தப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன்—இன்றைக்கு, சிம்ப்சன் நிறுவனத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத்தின் கீழும், குசேலருடைய தலைமையின் கீழும் இருக்கிற தொழிலாளர்கள் மற்ற மற்ற கட்சிகளின் தலைமை கீழ் அங்கே இல்லை என்று சொன்னால், அது தவறான வாதமாகாது. அப்படி இருக்க, அவர்கள் இருவரையும் விட்டு விட்டு இவர்கள் கூடித் தனியாக அறிக்கை விடுவது பிரச்சினையைச் சிக்கலாக்கத்தான் பயன்படும். திரு. குசேலர் அவர்கள் அங்கே விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்கிறார். இன்றைக்குக் கூட ஊர்வலமாக வந்து என்னிடம் சில மகஜர்களை அளிக்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். திரு. ஹாண்டே அவர்களும்கூட அங்கே தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று கருதுகிறார். இன்னும் கொஞ்சம் காலம் தாழ்த்தி நடத்துவதுதான் சிறந்தது என்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவேதான், இரு கருத்துள்ளவர்களிடத்திலும் கலந்துபேசி முடிவு எடுப்பதுதான் நல்லது. இவர்களே கூடி விவாதித்து அறிக்கை விடுத்திருப்பது நிலைமையை மோசம் ஆக்கிவிட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

ஆனால் இப்போதும் நான் எல்லாக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசத் தயாராய் இருக்கிறேன். இன்றைக்கு குசேலர் வர இருக்கிறார். அவர்களுடன் பேசுவதற்கும் எந்தவிதமான தடங்கலும் இல்லை. ஆயினும் அனைவரையும் சேர்த்துப் பேசவேண்டியது அவசியமாகிறது. இன்று நாளை வேலை அதிகம் இருக்கிறது. 15-ம் தேதி காவல்துறை மானியமும் வர இருக்கிறது. ஆகவே 16 அல்லது 17-ஆம் தேதி அவர்கள் எல்லோருக்கும் ஒத்து வருகின்ற நேரத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் நான் பேசுவதாக இருக்கின்றேன். இந்த நேரத்தில் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்வதால் பயன் எதுவும் இல்லை. இந்தப் பிரச்சினையில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்கு அவர் தந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் உதவுகிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, இதற்குமேல் விளக்கம் தேவையில்லை என்று கூறி, இதற்காக பேரவையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்மீது விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### (3) 1972-73-ம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

#### (அ) நிதிக் கோரிக்கை எண் 9. மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,81,49,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move the following cut motion—

"That the allotment of Rs. 12,81,800 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move the following cut motion—

"That the allotment of Rs. 12,81,49,800 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100".

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தில் அரசியல் தலைவர்களின் தலையீடு தவிர்க்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியாளர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாவது ஒரு மாவட்டத்தில் இருக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,81,49,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,14,59,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

MR. SPEAKER: Thirumathi T. N. Anandanayaki is not in her seat and hence, her cut motion is not moved.

THIRU S. VADIVEL: Sir, I move the following cut motion to discuss about the drought conditions in Ramanathapuram district and the failure of the Government in giving immediate relief to the ryots—

"That allotment of Rs. 1,14,59,300 under Demand No. 31—Famine Relief—be reduced by Rs. 100".

(இ) நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,44,58,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

MR. SPEAKER: Thirumathi T. N. Anandanayaki is not in her seat and hence, her cut motion is not moved.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 2—10—1970-க்கு முன் ஓய்வுபெற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்கு 50 சத பஞ்சப்படி இணைத்துச் சம்பள கமிஷன் சிபாரிசுபடி கொடுக்கப்படாமலிருப்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,44,58,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(ஈ) நிதிக் கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,98,70,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, கேளிக்கை வரியிலிருந்து அதிகப் பங்கு பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,98,70,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

MR. SPEAKER: Thirumathi T. N. Anandanayaki is not in her seat and hence, her cut motion is not moved.

(உ) நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 53,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 53,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss about the nature and the quantum of compensation to Zamindars—

"That the allotment of Rs. 53,74,000 under Demand No. 37—Compensation to Zamindars—be reduced by Rs. 100".

(ஊ) நிதிக் கோரிக்கை எண் 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, கொள்கையைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,02,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss about the need to increase the quantum of pension to be commucted by pensioners as it was fixed long time ago.

"That the allotment of Rs. 10,02,000 under Demand No. 45 —Commuted Value of Pensions be reduced by Rs. 100."

(எ) நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,45,47,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைப்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,45,17,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss about the non-avaliability of fertilisers, pesticides loans and seeds to agriculturists in time—

"That the allotment of Rs. 35,45,17,400 under Demand No. 47—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100."

(ஏ) நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,74,65,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 2,74,65,400 under Demand No. 1 —Land Revenue Department—be reduced by Rs. 100".

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இனும் ஒழிப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,74,65,400-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுப்பதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,74,65,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I move the following cut motion to discuss the indebtedness of the small cultivators and their inability to pay arrears of land revenue—

"That the allotment of Rs. 2,74,65,400 under Demand No. 1 —Land Revenue Department—be reduced by Rs. 100".

### (ஐ) நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,71,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 27,71,700 under Demand No. 4—Stamps Administration—be reduced by Rs. 100."

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்கள் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,71,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், தொழில் கோர்ட், சம்பள பட்டுவாடா கமிஷன் முதலியவரிடம் செய்யும் மனுக்களுக்கு ஸ்டாம்புகள் தேவையில்லையென்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 27,71,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஓ) நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் —. 31,59,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

MR. SPEAKER: Thiru R. Ponnappa Nadar is not in his seat and hence, his cut motion is not moved,



திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, நெல் குவிண்டாலுக்கு இப்போது உயர்த்தியதைவிட மொத்தம் 10 ரூபாய் உயர்த்தி, படி அரிசி ரூ. 1.40-க்கு மேல் போகாமல் விற்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,59,34,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கத்தின் கொள்கை விளக்கங்கள் அடங்கிய புத்தகங்கள் * மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தை மட்டும் கூறிவிட விரும்புகிறேன்.

Ryotwari settlement came into effect in the transferred territory from fasli 1374, i.e., from 1st July 1964. But, owing to administrative reasons, it has been implemented in Shencottah taluk of Tirunelveli District from fasli 1378, i.e., 1st July 1968 and in Kanyakumari district from the current fasli—1381, i.e., 1st July 1971.

On the instructions of the Honourable Chief Minister, I held a conference of non-officials including Honourable Members of this House and of the Legislative Council belonging to Kanyakumari district, at Nagercoil on the 25th of February to discuss about matters relating to the implementation of ryotwari settlement. It was then represented that it would be a serious hardship if the ryots in this area were asked to pay the arrears for the faslis from 1371 to the fasli of implementation of roytwari settlement.

Government have carefully considered this and have decided, as a measure of relief, to waive the collection of the difference between the assessment at the ryotwari settlement rates and the assessment obtaining earlier. In other words, for the seven years from 1st July 1964 to 1st July 1971 in respect of Kanyakumari district and for the four years from 1st July 1964 to 1st July 1968 in respect of Shencottah Taluk, the collection will be at the same rates as

* ம் பக்கங்களில் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இணைப்புக்களாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

applicable prior to the introduction of settlement, and the difference between these rates and the ryotwari settlement rates will be waived for these periods.

As a consequence to this, in the comparatively few cases, where the amounts collectable under the old rates are higher than under the new rates, the collections will be under the old rates only, for the above periods.

Since the amounts to be waived include not only land revenue but also local cess and local cess surcharge amendments to the Tamil Nadu Panchayats Act, 1958, will be necessary. This will be undertaken in the current session of the Legislature.

As a result of the above decisions of the Government, ryotwari assessment along with the local cess and local cess surcharge calculated on the basis of the ryotwari rates, will be collected in fully only from 1st July 1968 in Shencottah taluk and from 1st July 1971 in Kanyakumari district. Consequently, the orders issued by Government waiving the basic assessment on all dry lands will be given effect to in Shencottah taluk from 1st July 1968 and in Kanyakumari district from 1st July 1971, instead of from 1st July 1967 as in other areas of the State. As far as wet lands are concerned, in respect of Shencottah taluk and Kanyakumari district also, in respect of persons holding wet lands of five acres and less in extent, the land revenue component of the consolidated wet assessment will be waived from 1st July 1971 as in other areas of the State.

THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, I have a few observations to make to invite your attention and the attention of the House.

You will know perhaps that interest in farming and in land is not really one that is connected with the members of my community. But last year I thought I would go out to find out how our people really responded to the idea of farming and the growing of more food. I must confess that I had consultation first with the Hon. Minister for Food and Revenue so that I would know what I should present to the members of my community. When I went out to visit various localities where the members of my community are organised for the betterment of themselves and of the State, I had a very pleasant surprise. I found that they took to the idea willingly



and welcomed suggestions made to them. I also discovered that it was not a new idea to a few. In Jolarpet and in St. Thomas Mount, I discovered that there were people who would go in for the development of land and take to farming if there was more encouragement.

In this connection, I must say that they had not the land on which to start at that time. In Yercaud I discovered that farming was an established fact and they were quite happy to get on with the job themselves.

In Golden Rock I found that there was one person in particular who had held land for a considerable length of time—something like 20 years—and when the idea of co-operative farming was given to him, he thought it a good plan. I do not think I am wrong in stating that he has already gone ahead with the idea. Not finding other members of his community to join him, he has communicated the idea to the ryots living round about and they too wished to go in for co-operative farming. I mention this to show the new trend.

So often we get to habits of employment and we find when we are unemployed that it is because we stick to the same old jobs. But here is a new idea going down well. I hope that the assurances made to me will materialise this year. I would like these people who have shown this interest to get land or help—whatever it is—that they need to start with this new venture before they become frustrated. So, my plea this morning is that we should find out and get land for those who are willing to go in for the growing of more food which we so badly need in our State.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இன்று பல மானியங்கள் மீது கட்டாக விவாதம் நடந்தாலும்கூட அதிலே இரண்டு பிரதான அம்சங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறேன். அதுவும் மாவட்ட நிர்வாகத்தைப் பற்றியும் உணவு பற்றியும் பிரதானமாக வந்திருக்கிறது. உணவைப்பற்றி இருக்கக் கூடிய மானியத்தில் எங்களுடைய கட்சிக்காரர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் பேசுவார்கள். நான் அதிகமாக மாவட்ட நிர்வாகம்பற்றிய விஷயங்களைப் பற்றிச் சில கருத்துக்களை நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்துவதன் மூலம் பேசலாம் என்று நினைக்கிறேன்.

நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையில் 'மாவட்ட ஆட்சியாளர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாவது ஒரு மாவட்டத்தில் இருக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க' என்று குறிப்பிட்டிருக்கிறேன். மதுரை

மாவட்டத்திலே ஒரு மாவட்ட ஆட்சியாளர் பதவியேற்று ஒரு ஆண்டு காலம்கூட முடியவில்லை, தேர்தல் முடிந்து ஒரு வருஷம்கூட முடியவில்லை, அவர் மாற்றப்பட்டுவிட்டார். கோவைக்கு மாற்றப்பட்டுவிட்டார். அதற்குப் பிறகு வந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு ஆண்டு முடிவதற்குள்ளாகவே வேறு பதவிக்காக மாற்றப்பட்டிருக்கிறார். இம்மாதிரி மாற்றப்படுவதால் அந்தந்த மாவட்டங்களில் மிகப் பொறுப்பான பதவியிலே இருப்பவர்கள் மூன்று ஆண்டுக் காலம் தொடர்ந்து இருந்தால்தான் போட்டிருக்கிற திட்டங்களை அமல் நடத்த முடியும்—பல காரியங்கள் தடைபடுகின்றன. வேறு ஏதாவது அவசிய மான காரணம் இருந்தாலொழிய மாவட்ட ஆட்சித் தலைவரை குறைந்தது மூன்று ஆண்டுகளுக்குள்ளாக மாற்றுதபடி, மூன்று வருட காலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, ரெவின்யூ போர்டு சம்பந்தமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன், ஏற்கெனவே, We have already taken a firm decision about abolition of Revenue Board. என்று நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ரெவின்யூ போர்டு சம்பந்தமாகக் கொடுத்திருக்கும் குறிப்பிலே அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், நாம் அதை நடத்துவதா இல்லையா என்பதைப் பொறுத்து அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இது மேலும் காலதாமதம் ஏற்படுத்துவதற்கான நிலைதானே தவிர கண்டிப்பாக இந்த இலக்காவானது சீரும் சிறப்புமாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால் ரெவின்யூ போர்டிலே இருக்கும் 6, 7 சீனியர் செக்ரட்டரீஸ்லை பொறுத்தவரையில் அவர்களுக்குத் தனித்தனியாகப் பொறுப்புக்களைக் கொடுத்து, கமிஷன் என்ற முறையிலே என்று பொறுப்பு இல்லாமல் பொறுப்பைக் கொடுத்து இன்றைக்கு ரெவின்யூ போர்டின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், டெபுடி செக்ரட்டரீஸ் இவர்களுக்குத் தலைமையாக ரெவின்யூ செக்கரட்டரி என்ற மாதிரி ஏற்கனவே தமிழகத்தில் உள்ள அமைப்பிற்கு உள்ளமைப்பாக இருப்பதால் State within a State பல குழப்பங்கள், காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன் முன்னால்தான் போய் முற்றுப்பெற வேண்டுமென்ற கருத்து தவறானது என்ற கருத்தை மீண்டும் ஒருமுறை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

இன்னும் இந்த மாவட்டங்கள் சம்பந்தமாக வருகின்றபொழுது சென்ற தொடரிலேகூட தலைநகரம் சம்பந்தமாகப் பல சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. இங்குகூட வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தலைநகரம் என்பது இராமநாதபுரம் மாவட்டத்திற்





குள்ளேயே வர வேண்டுமென்று. இது சம்பந்தமாக, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைந்து எந்த நகரத்தை இராமநாதபுரம் மாவட்டத்தி லுள்ளவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ அதை ஏற்றுக்கொள்கிறோம் என்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் இம்மாதிரி சொல்லும் பொழுது பிரதான இடங்கள் எல்லாம் மதுரைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இராமநாதபுரத்தின் பெரிய கோர்ட் மதுரையில்தான் இருக்கிறது. இப்படித் தலைநகரம் இல்லாத காரணத்தினால் பல தலைமை ஆபீஸ்கள் பல யிடங்களிலும் பரவியிருப்பதால் அங்கு வளர்ச்சியடையாமல் இருக்கிறது. இதுவும் பல தடவைகள் இந்தச் சபையில் சொல்லப்பட்டிருந்தாலும் அதை வலியுறுத்தி இந்தக் கருத்தை மீண்டும் ஒருமுறை சொல்ல ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அடுத்து, 32-வது மானியமாக இருக்கும் பென்ஷன் சம்பந்தமாக விரிவாக நான் பல வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறேன். பென்ஷன் தாரர் களைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே ஒரு தடவை குறிப்பிட்ட ஞாபகம் இருக்கிறது. சாதாரணமாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் அவர்களுக்கு ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்த முடியும். ஆனால் ஓய்வு பெற்றவர்கள் அப்படி வற்புறுத்துவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே அவர்கள் விஷயத்தில் அரசே முன்கை எடுத்து ஓய்வு பெற்றவர் களுக்குச் சிரமம் ஏற்பட்டால் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சபையிலே பலமுறை நான் கேள்விகளாக எழுப்பியிருக்கிறேன். முனிசிபல் சிப்பந்திகளில் ஓய்வூத் தொகை உரிமை உள்ளவர்களுக்கு 1 வருஷத்திற்கு மேலாக ஓய்வுத்தொகை கொடுக்காமலிருந்து இப்பொழுதுதான் கொடுப்பதற்கு உத்தரவு போட்டுள்ளார்கள். 1970 ஜனவரி மாதத்திற்கு முன்பு ஓய்வு பெற்ற வர்களுக்குத் தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட் டிருக்கிறோம். அரசு அதைச் சீக்கிரத்திலே, 1 மாதம் 2 மாதங்களுக்குள்ளாக ஓய்வுத் தொகையைக் கொடுப்பதற்கு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் 2—10—1970-க்கு முன் ஓய்வு பெற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்கு 50 சத பஞ்சப்படி இணைத்துச் சம்பள கமிஷன் சிபாரிசுபடி கொடுக்கப் படாமலிருப்பதைப் பற்றி விவாதிக்க என்று கொடுத்திருக்கிறோம். இப்பொழுது கூட சாதாரணமாக 15 ரூபாய் பஞ்சப்படி என்றால் 7½ ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் கணக்குப் போட்டுப் பார்த்தால் 75 ரூபாய் தாசில்தாருக்குக் கிடைக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது, அதற்கு இன்னும் உத்தரவு போடா மல் இருக்கிறார்கள். இந்த ஓய்வு நிதி பெறுபவர்கள் சம்பந்தமாக, அதிலும்

சர்க்காரிலே பணியாற்றி ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு மேலே கொடுக்கும், சம்பளக் கமிஷன் ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தமாக எந்தெந்தப் பரிவுரைகளை வழங்கியிருக்கிறார்களோ அவைகளையெல்லாம் முறையாக அமல் படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஸ்டாம்புகள் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், இப்பொழுது தொழிலாளர்கள் தொழில் கோர்ட்டிலே தங்களுக்குச் சம்பளம் பாக்கியிருந்தது என்று Payment of Wages Act மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மனுக்களுக் கெல்லாம் ஸ்டாம்பு ஒட்டித்தான் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. ஒருகாலத்தில் அப்படி இல்லாமல் இருந்தது உண்டு. இப்பொழுது அது படிப்படியாக உயர்ந்து சாதாரணமாக மனு கொடுக்கும்பொழுது 3 ரூபாய் அளவிற்கு ஒட்ட வேண்டு மென்ற நிலை இருக்கிறது. ஆகவே, அம்மாதிரியாகத் தொழிலாளர்கள் செய்யும் மனுக்களுக் கெல்லாம் ஸ்டாம்புகள் இல்லாமல் இருக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பல கூட்டங்களுக் கெல்லாம் நாம் உத்தரவு வாங்க வேண்டு மென்றால் அதற்கு இப்பொழுது ஸ்டாம்ப் ஒட்ட வேண்டுமென்று இருக்கிறது. போலீசிலே உத்தரவு வாங்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, ஏனென்றால் இரண்டு மூன்று கூட்டங்கள் ஏற்பட்டால் ஒரு கூட்டத் திற்கும் இன்னொரு கூட்டத்திற்கும் முரண்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அந்தக் கூட்டங்களுக்கு ஸ்டாம்ப் ஒட்டித்தான் மனுச் செய்ய வேண்டுமென்பது கைவிடப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

இறுதியாக இந்த ரெவின்யூ சம்பந்தமாக பல விஷயங்கள் பின்னாலே வரும் என்றிருந்தாலும்கூட நான் ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்திக் கூற ஆசைப் படுகிறேன். இன்றைக்குக் காலையிலே அது சம்பந்தமாக விவாதித்து மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் பல விவரங்களைக் கொடுத்தார்கள். இருந்தாலும் சர்க்கரை சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட விஷயத்தை இங்கு சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து பார்த்தால் 10,000 டன் நமக்கு மாதத்திற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய தேவை என்பது 15,000 டன் என்று தெரிகிறது. இன்றைக்கு 60 சத விகிதம் என்பது 10,000 டன்கள் என்றால் பதினாயிரத்துச் சொச்சம் வரையில் நமக்கு





விநியோகிக்கப்படுகிறது. இந்த பதினாயிரத்துச் சொச்சம் டன்கள் விநியோக மானால் நமக்குத் தேவை 15,000 டன்களாக இருக்கும்பொழுது ஏன் இந்த விலைவாசி உயர்வு என்று கேட்கிறேன். இதற்குக் காரணம் ஏகனமிக் டைம்ஸ் சொல்கிறது.

The main reason behind the sharp rise in the price of sugar is the psychology of scarcity worked up by the Industry. The price is being rigged up by industry.

இதே கருத்தை நமது உணவு அமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

The worker has capacity to withhold the stock.

ஆகவே, இந்த புரொட்யூசர்கள் மீது அவர்கள் மூலமாகத் தனியார்களுக்கு விநியோகம் செய்யப்படும்பொழுது இந்த இடங்களிலே செக் கொஞ்சம் விரிவாக இருக்க வேண்டும். எனக்குச் சில விவரங்கள் தெரியும். மதுரை நகரத்திலே குறிப்பிட்ட விலாசம் இருக்கிறது, அமைச்சரவர்களிடத்தில் கூறக் கூடத் தயாராக இருக்கிறேன். பெயர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்றுவரை இரண்டு இலட்சம் மூட்டைகளுக்குமேல் வைத்திருக்கிறார்கள். இது 60 சத விகிதமும் அல்ல, சட்ட விரோதமானதாகவும் இல்லை. ஒரு மூட்டை 200 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்றால் 280 ரூபாய், 300 ரூபாய் என்று விற்கிறார்கள். ஆனால் 250 ரூபாய் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் 300 ரூபாய் வரைக்கும் சில்லரைக்கு 3 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கக் கூடிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சர்க்கரை சம்பந்தமாக இந்த மூன்று மாத காலத்தில் 30,000 டன்கள் மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறது என்றால் அதைச் சரியாக விநியோகித் திருக்கிறார்களா என்பதைப்பற்றி ஒரு சரியான செக்கப் செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய சபைக்குத் திருப்திகரமான பதில் இருக்க வேண்டும். ஏற்கனவே சாதாரணமாகச் சொல்லும் பதில்களெல்லாம் ஞாபகத்தில் இருக்கிறது.

நாடாளுமன்றத்திலே இப்பொழுது நமக்கு 40 லட்சம் டன் தேவை என்றும் நாடாளு மன்றத்தில் பதில் கொடுக்கப்பட்டது. 40 லட்சம் டன்னுக்குக் குறைவாகத்தான் இருக்கிறது என்றும் அதற்கு ஒரு உறுப்பினர், சென்ற வருஷத்தில் இருக்கும் பாக்கியே 8 லட்சத்து 42 ஆயிரம் டன் இருக்கிறதே, அப்படியானால் 48 லட்சத்து 42 ஆயிரம் டன் நம் கையில் இருக்கிறதே, ஆகவே பற்றாக்குறை பிரச்னையே இல்லையே என்பதாக எடுத்துக் காட்டினார்கள். அதேமாதிரி உணவு அமைச்சரவர்கள் இங்கே சொல்லும்பொழுது இங்கு மூன்று மாதத்திற்கு 30,000 டன்கள் என்றிருந்தாலும், ஏற்கனவே நம்முடைய

ஸ்டாக் 5,000 டன்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியிருக்கும் பொழுது கண்டிப்பாக இந்த விலை கூடுவதற்கு நியாயமே யில்லை. மத்திய சர்க்காரோடு அவர்கள் பேசும்பொழுது 100 சத விகிதம் அரசே விநியோகப் படுத்த வேண்டுமென்று சொல்ல வேண்டும். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு 1 ரூபாய் 50 பைசா என்ற அவர்களின் விலைகூட அதிகம். அதை இன்னும்கூடக் குறைத்து இந்த 45 ரூபாய் எக்சைஸ் போடுவதையும் சேர்த்துப் பார்த்தாலும் கூட 1½ ரூபாய் அல்லது ஒன்றே முக்கால் ரூபாய்க்கு ஒரு கிலோவை கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க முடியும் என்பதை மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்த வேண்டும். இரண்டு ரூபாய் என்பது அதிகம். காரணம் என்ன வென்றால் விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலையைப் பார்த்தால், அதைக் கணக்கிட்டுப் பார்த்தாலும், இதைப்பற்றி அகில இந்திய சம்மேளனம் விவரமாக அளித்திருக்கிறார்கள்.

அப்படி வருகின்றபோது 1½ ரூபாயிருந்து 1¾ ரூபாய் வரையிலே சிறைல் பிரைசுக்குக் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தைத் தவிர மற்ற இடங்களில் கரும்பு டன் ஒன்றுக்கு 100 ரூபாய், 115 ரூபாய் வரை கூட விற்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் விளையும் கரும்பு மற்ற மாநிலங்களில் விளைகின்ற கரும்பைவிட அவ்வளவு குறைவான ரெகவரி உடையது அல்ல. மகாராஷ்டிராவில் வேண்டுமென்றால் ரெகவரி கொஞ்சம் ஜாஸ்தியாக இருக்கலாம். உத்தரப் பிரதேசம், பீகாரில் இருக்கக்கூடிய ரெகவரி நம்முடைய தமிழகத்திலும் இருக்கிறது. நாம் இப்போது கரும்புக்கு டன் ஒன்றுக்கு 80 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறோம். மத்திய அரசு கூட ஒரு டன் 85 ரூபாய்க்குக் குறைந்து வாங்கக் கூடாது என்று கூறியிருக்கிறது. நம்முடைய விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி லாபத்தை அதிக மாக வைத்து சர்க்கரை ஆலை முதலாளிகள் சம்பாதிக்கிறார்கள். தேவையான அளவுக்குச் சர்க்கரை இருக்கக்கூடிய நேரத்தில் அதைக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். ஏற்கனவே எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டு இந்தச் சபையின் முன் வைக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** அவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் மீதான மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்த பணிகள் எல்லாம் ஏழை மக்களுக்காகச் செய்யப்பட்ட பணிகள் என்பதை உணரும் வகையில் இது அமைந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் கடந்த 20 ஆண்டுக்



காலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருக்கும்போது அவர்கள் 1.15 லட்சம் மக்கள் பயன் அடையும் விதத்தில் 2.88 லட்சம் ஏக்கர் விளைச்சல் நிலங்களை ஏழை களுக்கு ஒப்படை செய்தார்கள். ஆனால் 1967-ல் இருந்து 1972 வரை 2.47 லட்சம் மக்கள் பயனடையும் விதத்தில் 4.92 லட்சம் ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது அந்தக் காலத்தில் இருந்த அரசு ஏழைகளுக்கு நிலம் கொடுத்ததைக் காட்டிலும் நமது அரசு ஐந்து ஆண்டுகளில் பத்து மடங்கு அதிக அளவுக்கு ஏழைகளுக்கு நிலங்களை ஒப்படை செய்திருக்கிறது என்ற நிலையில் இதுதான் உண்மையான ஏழைகளுடைய அரசு என்பது தெளிவாக புலனாகிறது. அதற்காக ஏழை மக்கள் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

முன்பெல்லாம் மக்கள் நிர்வாகத்தை அணுகி தங்கள் குறையைச் சொல்ல அச்சப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நம்முடைய அரசு நிர்வாகத்தில் மனு நீதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டு சாதாரண ஏழை மக்கள் நேரடியாக உயர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறி களைந்து கொள்ள முடிகிறது. மனு நீதித் திட்டத்தின்படி குறைகளை எடுத்துக் கூறினால் குறிப்பிட்ட இலாகாவுக்குப் பரிசீலனைக்காக அந்த மனு அனுப்பப் பட்டுள்ளது என்று பதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுகிறது. அந்த பதிலோடு நின்றுவிடாமல் அந்தக் குறிப்பிட்ட துறை அதிகாரி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார், நடவடிக்கை என்னவாயிற்று என்ற முறையில் 'ஃபாலோ அப்' பண்ணி மேல் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

நிர்வாக சம்பந்தமாகப் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். தற்போ துள்ள நிர்வாகம் ஏழை ஜனங்களுக்குத் தேவையான அளவுக்கு நன்மை செய்ய முடியவில்லை. அதற்காக நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பது நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதனுடைய பரிந்துரைகள் வந்த பிறகு அமல்படுத்தப்படும் என்று கூறப்படு கிறது.

நிர்வாகத்தைச் சீர்திருத்துவது பற்றிக் கவனிக்கும்போது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆங்காங்கு அதிகமான ஆட்களை உபயோகித்து ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்ய முயல வேண்டும். இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் படித்தவர் களிடையேயும் ஏராளமாக இருக்கிறது, படிக்காதவர்களிடையேயும் ஏராளமாக இருக்கிறது. அவர்களைப் பற்றி அரசு கவனிக்க வேண்டும். குறைந்த அடிப்படைச் சம்பளத்தைக் கொடுத்தாவது வேலை செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணி

என்று ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க ஓரளவு வழி செய்திருக்கிறார்கள். அப்படி எல்லாத் துறையிலும் செய்ய வேண்டும். குறைந்த அளவு சம்பளமாக இருந்தாலும் அப்பரென்டிஸ் என்ற முறையில் முதலிலே ட்ரெயினிங் கொடுத்து பின்னால் ரெகுலர் ஸ்கேல் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்யலாம். அதற்கான வழி வகைகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் இல்லாதவர்களுக்கு 50,000 ஏக்கர் நிலம் தரிசுக் காட்டில் கொடுத்திருக்கிறார்கள். கொடைக்கானல் பகுதியில் 15,000 ஏக்கர் அளவுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். நெசவாளர்களாக இருக்கக்கூடிய ஏழை மக்கள் சத்தியமங்கலத்தில் இருக்கக்கூடிய 100 ஏக்கர் நிலத்தைத் தங்களுக்குத் தர வேண்டுமென்று மனுச் செய்து இரண்டு மூன்று வருஷங்கள் ஆகியும் அந்த மனுக்கள்மீது சரிவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நிலம் வேண்டுமென்று யார் மனுக் கொடுத்தாலும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டும். பிற்பாடு வந்த மனுக்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய தவறுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. நிலம் இல்லாதவர்கள் நிலம் வேண்டுமென்று மனுப் போட்டால் முதலிலே மனுச் செய்தவர்களுக்கு முதலிலே கொடுக்க வேண்டும். மதுரையிலுள்ள சத்தியமங்கலத்திலிருந்து ஏராளமான மனுக்கள் அனுப்பப்பட்டு அவை கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்ற குறைபாடு இருக்கிறது. அதை நீக்க வேண்டும்.

புறம்போக்கு நிலங்களில் சட்டபூர்வமாக அனுமதி இல்லாமல் குடியிருந்த ஏழை மக்கள் 3,24,000 பேர்கள். அவர்களுக்குச் சர்க்கார் தற்போது அனுமதி அளித்திருக்கிறது. அது ஒரு நல்ல காரியம். இன்னும் பல சட்ட திட்டங்களை எல்லாம்கூடக் கொண்டுவந்து செயல்படுத்தி இருக்கிறார்கள். சில சட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் உயர்நீதி மன்றம் தடை விதித்திருக்கிறது. நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் சிறப்புக் குத்தகை முறையை ஒழிக்கும் சட்டம் தற்போது உயர்நீதி மன்றத்தின் தலையீட்டினால் தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டம் 24, 25-வது திருத்தங்களின்படி சட்ட சபைக்குத்தான் முழு அதிகாரம், உயர்நீதி மன்றங்களைக் காட்டிலும் சட்டசபைதான் சட்டங்களை நிறைவேற்ற உரிமை பெற்றவர்கள் என்ற முறையில் இந்தச் சட்டங்களை ஹைகோர்ட்டில் தடை செய்யாது தடுக்க வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும்.

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் பஞ்சமாக இருந்தபோது [illegible] இலாகா நல்ல முறையில் செயல்பட்டு நான்கு கோடி ரூபாய் செலவு செய்[illegible]ராட்டத்தக்கது.



பொதுவாக நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கை வந்த பிறகு நல்ல
முறையில் நிர்வாகத்தை அமைத்து மக்கள் பிரதிநிதிகளோடு நல்ல முறையில்
தொடர்பு ஏற்படுத்தும் வகையில் கலெக்டர் அவர்கள் ஆங்காங்கு ஸ்தல ஸ்தாப
னத்தில் பங்கு பெற்றிருப்பவர்கள்; எம்.எல்.ஏ.-க்கள், ஹைவேஸ் அதிகாரிகள்,
மற்றத் துறை அதிகாரிகளை எல்லாம் மாதத்தில் ஒரு நாள் அழைத்து அந்தந்தப்
பகுதியில் செய்யப்படக்கூடிய வேலைகளைப் பற்றி எல்லாம் விவாதித்து குறை
களுக்கு நிவாரணம் காணவும், செய்யப்பட வேண்டிய பணிகளைச் செய்யவும்
வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. பி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
இந்தப் பேரவையில் சமர்பித்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கைகள்
மீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து
ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நிலமில்லாதோர் இல்லை என்ற நிலை ஏற்பட வேண்டும் என்று மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மேன்மைதங்கிய கவர்னர் அவர்களது
உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்
ளார்கள். நிலமில்லாதவர்களுக்கு ஐம்பது சென்ட் நிலமும், பதினைந்து குழி
இடமும் வழங்கப்படுவது என்பதுதான் இந்தச் சர்க்காரின் நோக்கம் என்று
குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கை வந்தபோது
மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் நிலத்திற்கும் மக்களுக்கும் உள்ள
விகிதாசாரம் குறைந்து வருவதால் நில ஒப்படை செய்வதில் ஐந்து ஏக்கர்
புன்செய் என்பதை 3 ஏக்கர் புன்செய் என்றும், 2½ ஏக்கர் நன்செய் என்பதை
1½ ஏக்கர் நன்செய் என்றும் இந்த அரசு மாற்றிக்கொள்ள இருக்கிறது என்று
சொன்னார்கள்.

இப்போது அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பார்க்கும்போது
நில ஒப்படை செய்யும்போதும், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும்போதும்
ஆட்சேபணைக்கு உட்படாத இடங்களை ஒதுக்குவதற்கு இந்த அரசு ஆவன
செய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்சேபணைக்குரிய இடங்கள்.
ஆட்சேபணைக்கு உட்படாத இடங்கள் என்று இரண்டு வகை உள்ளன. அதாவது
அப்ஜெக்ஷனபிள் லான்ட்ஸ் அன்ட் நான்-அப்ஜெக்ஷனபிள் லான்ட்ஸ் என்று.

எங்களது உத்தமபாளயம் தாலுகாவைப் பொறுத்த வரையில் ஆட்சேப
ணைக்கு உட்படாத இடங்கள் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. நிலமில்லாத
வர்கள் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும் என்று கூறியதன் காரணமாக எந்த
இடங்களை ஆக்கிரமிப்பு செய்தால் ஒப்படை கிடைக்கும் என்ற உறுதி இல்லாத

முறையில் பல மக்கள் பலயிடங்களை ஆக்கிரமிப்பு செய்து பின்னர் அங்கிருந்து வெளியேற்றப்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உத்தமபாளையம் தாலுகாவைப் பொறுத்த வரையில் ஆட்சேபணைக்கு உட்படாத இடங்கள் எதுவும் இல்லை. ஆகவே நிலங்களை ஆர்ஜிதம் செய்து அங்குள்ள ஏழை மக்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இந்தக் கொள்கையை விட்டுவிடவேண்டும். அடுத்தபடியாக, சேலம் மாவட்டத்தில் ஒதுக்கக் காடுகள் பகுதியில் மூவாயிரம் ஏக்கர்கள் ஒதுக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல் மதுரை மாவட்டத்திலும் ரிசர்வ் பாரஸ்ட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளை ஒதுக்கக் காடு பகுதியிலிருந்து நீக்குவதன் மூலம் அந் நிலத்தை நிலமற்றவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாவட்டம் ஆண்டிப் பட்டியில் உள்ள கண்டமநாயக்கனூர் பகுதியில் 18,000 ஏக்கர்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 19,000 ஏக்கர்களை ஆக்கிரமிப்பு செய்தவர்கள் 1967-க்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்து அந்த நிலத்தை அனுபவித்து வந்தவர்கள். அன்றிருந்த பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், வனத்துறை அதிகாரிகளும் அப்படி ஒப்படை செய்வதால் வன இலாகா நிலங்கள் பாதிக்கப்படும் என்றும், வைகை அணைக் கட்டுத் திட்டம் பாதிக்கப்படும் என்றும் கருதியதால் உடனே அந்நிலங்கள் ஒப்படை செய்யப்படவில்லை. 1967-க்கு முன்பே அதை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து அதன் பலன்களை அனுபவித்து வந்தார்கள். ஆண்டிப் பட்டித் தொகுதிக்கு உட்பட்ட கண்டமநாயக்கனூரில் சமீபத்தில் நடந்த தேர்தலில் ஸ்தாபன காங்கிரஸ் ஆதரவு பெற்ற சுதந்திராக் கட்சி வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 1967-க்கு முன்பு அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவர்கள் மீது அன்றிருந்த அரசாங்கம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மனுநீதித் திட்டம். இன்றையதினம் அரசாங்க அதிகாரிகளுக்கு வேலைப் பளு அதிகரித்துள்ளது. தேசியப் பாதுகாப்பு நிதி, சிறுசேமிப்பு, போன்ற நிதி வசூல்கள் கொடுப்பதன் காரணமாக அவர்களின் வேலைப் பளு அதிகரித்து வருகிறது. உத்தமபாளையம் தாலுகாவில் மனுநீதித் திட்டம் காரணமாக அங்குள்ள தாசில்தார், மற்ற அதிகாரிகள் வேலைப்பளு அதிகரித்துள்ளது. இரவு எட்டு ஒன்பது மணிக்குச் சென்றாலும் அவர்கள் அலுவலகத்தில் இருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகளின் வேலைப்பளு அதிகரித்திருப்பதால் இப்படி நிதி திரட்டும் பொறுப்பினை அந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கூடாது. அல்லது மனுநீதித் திட்டத்திற்காக அதிக அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் மற்றுமுள்ள அதிகாரிகளையும் அடிக்கடி மாற்றக் கூடாது. (மணி அடிக்கப்பட்டது). உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் உத்தமபாளையம் தாலுகாவிலும், பெரியகுளம் தாலுகாவிலும் அதிக அளவிற்கு அரிசி கடத்தப்படுவதை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டி பதினைந்து மைல் பெல்ட் ஏரியாவை ஐந்து மைல்களாக ஆக்கப்போவதாகக் கூறுவது குழந்தையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதுபோல்தான் இருக்கிறது. 1967-க்கு முன்பு உத்தமபாளையம் பகுதிக்கு வெளியிடங்களில் இருந்து அரிசி கொண்டுவரும் உரிமை யாருக்கும் வழங்கப்படவில்லை. ஓரளவிற்குத் தன்னிறைவு பெற்ற பகுதியாக அது இருந்து வந்தது. 1969-க்குப் பிறகு வெளி இடங்களிலிருந்து அங்கு அரிசி கொண்டு வருவதற்கு வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. விளைச்சல் மிகுதியாக இருக்கும் அந்தத் தாலுகாவிற்கு ஏன் அப்படி வெளியிடங்களிலிருந்து அரிசி கொண்டு வருவதற்கு உரிமை வழங்கப்பட்டது என்பதை தயவு செய்து பரிசீலிக்கவேண்டும்.

கேரளா மாநிலத்திற்கு பெருமளவிற்கு அரிசி கடத்தப்படுகிறது என்பதைப் பற்றி மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் உள்ள அதிகாரிகளுக்கு பல மனுக்கள் கொடுத்துள்ளேன். அதன் அடிப்படையில் மாவட்ட விநியோக அதிகாரி அவர்கள் ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி வெளியிடங்களில் இருந்து அங்கு கொண்டுவரப்படும் அரிசியை பொது இடங்களில், சாவடி அல்லது கிராமப் பஞ்சாயத்துக்களில் வைத்து ஊராட்சி அல்லது பேரூராட்சி மன்றத் தலைவர்களுடைய உத்தரவின்பேரில்தான் விநியோகிக்கப் பட வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை விட்டிருந்தார்கள். அப்படியிருந்தும் கூடலூரில் அந்த அறிக்கையை மீறி மீண்டும் பொது இடங்களில் வைக்காமல் அவை லாரிகளில் வந்தவுடனே பஞ்சாயத்துத் தலைவர் அனுமதி இல்லாமலேயே விநியோகம் செய்திருக்கிறார்கள். ஆகவே ஒன்று அங்குள்ள தாலுகா விநியோக அதிகாரி தவறு செய்திருக்க வேண்டும் அல்லது ஒருசில அரசியல் வாதிகளின் குறுக்கீடு இருக்கவேண்டும்.

சொர்ணம் நவதானியங்களை பொறுத்தவரையில் கேரள மாநிலத்திலுள்ள தேவிகுளம்பீர்மேடு பகுதிகளிலுள்ள தமிழ் தொழிலாளிகளுக்கு விநியோகிப்பதற்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட அளவிற்கு அரிசியையும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுமானால் அங்கு மேலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழி ஏற்படும் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. இராசகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின்கண் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன்வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் இந்த நாட்டில் அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடியது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் நாம் ஆட்சிபீடம் ஏறியவுடன் அப்பஞ்சம் நீங்கியது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உழுது பயிரிடும் உழவர்கள் கூட நாட்டுப் புறங்களில் அரிசிக்காக வரிசையில் நின்று கொண்டிருந்த நிலை மாறி தமிழ்நாடு இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

உழவர்களுக்கு நிலம் தேவை என்ற சோசலிச அடிப்படையில் இன்றைய தினம் இந்த ஆட்சி நிலமில்லாத ஏழைகளுக்கு புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்து வருகிறது. லட்சக்கணக்கான நிலங்களை இப்படி பட்டா செய்து கொடுத்து வருவதைக் கண்டு பெருமைப்படுகிறேன். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஆட்சிபீடம் ஏறிய பிறகு நல்ல முறையில் நிலச் சீர்திருத்த திட்டங்களை அமைத்து சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது. உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்த நிலைமையை மாற்றி இப்போது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் என்று இருந்ததை இப்போது 40 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சட்டம் கொண்டு வர இருக்கிறோம். இவைகளெல்லாம் சோசலிசப் பாதையை நோக்கி நாம் வெகு வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. இதனை ஏழை மக்கள் மிகவும் வரவேற்காமல் இருக்க முடியாது.

புஞ்சை நிலங்களுக்கு நிலவரியை நீக்கியிருக்கிறோம். ஐந்து ஏக்கர் வரை உள்ள நஞ்சை நிலங்களுக்கும் நிலவரியை நீக்கியிருக்கிறோம். இதைச் செய்ததற்காக இந்த நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த அரசு ஆட்சி பீடம் வருவதற்கு முன்பு அதிகாரிகளை பார்க்க மக்கள் சென்று கொண்டிருந்தார்கள். இப்போது மக்களை பார்க்க அதிகாரிகள் வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை, மனு நீதித் திட்டத்தை கொண்டு வந்து மக்களுடைய குறைகளை அதிகாரிகள் கேட்டறிந்து அவர்கள் குறைகளைத் தீர்த்து வரும் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.





என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். வந்தவாசி தாலுக்கா வடஆற்காடு மாவட்டத்திலுள்ள வறட்சியான பகுதியாகும். இவ்வாண்டு சரியான மழை பெய்யாத காரணத்தால் அங்கே விளைச்சல் சரியாக இல்லை. அந்தப் பகுதியில் கொடுக்கப்பட்ட கடன்களை வசூல் செய்வதை சிறிது காலம் தள்ளிப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கூட இது பற்றி ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். அந்த ஏரியாவை அனாவாரியாக டிக்ளேர் செய்து அந்தக் கடன்கள் வசூலிப்பதை தள்ளிப்போட வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அதற்குப் பதில் இல்லை. ஆகவே, அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்தி அந்த வட்டாரத்தில் கடன் வசூலிப்பதை சிறிது காலம் தள்ளிப்போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி கடத்தலைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். அரிசிக் கடத்தல் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சி பீடம் ஏறியதற்கு பிறகு தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம் அரிசிக்கடத்தல்தான். அரிசிக்கடத்தலை அடியோடு இந்த அரசு நிறுத்தி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்வேன். நமது உணவு வருவாய்த்துறை அமைச்சர் ஒரு சில சமயங்களில் 'சர்பிரைஸ் விசிட்' மாநில ஓரங்களில் செய்து பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்கள் வெகு சிறப்பாக அரிசி கடத்தலை தடுத்து நிறுத்தி வருகிறார் என்பதற்காக உணவு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். பாராட்டுவதோடு இங்கே இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் மானியத்தையும் ஆதரித்து என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தலைவரவர்களே, உணவு-வருவாய்த்துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்

இந்த வருவாய்த்துறையிலே நம்முடைய அரசாங்கம் மனு நீதித் திட்டத்தை கொண்டு வந்தது. இந்த மனு நீதித் திட்டத்தின் மூலம் சாதாரண மக்கள் அவர்களுடைய குறைகளை அதிகாரிகள் அவர்களை வந்து சந்திக்கிற நேரத்தில் எடுத்துக் கூறி, அவர்களெல்லாம் அதன் மூலம் நிவாரணம் பெறுவதற்கு நல்ல வழி ஏற்பட்டிருக்கிறது. அதன் மேல் நான் ஒரு கருத்தைக் கூறவிரும்புகிறேன். அதிகாரிகள் ஆங்காங்கு வந்து விண்ணப்பங்களை வாங்கிக்கொண்டு போகிறார்கள். அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஓரளவு காலம் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். அந்தக் காலத்தை வரையறுத்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டவட்டமாக ஒரு முடிவை தெரிவிப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த்துறை வாரியம் ஒழிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு எடுத்துள்ளது. அவ்வாறு வருவாய்த்துறை வாரியம் ஒழிக்கப்பட்டால், அதன் விளைவாக, அதனிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குச் செய்யப்பட வேண்டிய மாற்று ஏற்பாடுகள் பற்றி ஆய்வு செய்ய அரசு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவை கேட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இந்த வருவாய்த்துறை ஒழிப்பது பற்றியும், நல்ல முறையில் அவற்றை மாற்றம் செய்வதற்கான முறைகுறித்தும், நாட்டு மக்களுக்கு அதனால் நல்ல பலன் ஏற்படக்கூடிய முறையில் அந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிசீலிக்கும் என்று நான் நம்புகிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு அதிகமாக நிலம் ஒப்படை செய்யப்படுவது நமது ஆட்சி காலத்தில் தான். விடுதலை பெற்று 24-25 வருடங்கள் ஆகியும், கடந்த 20 ஆண்டுகளில் எவ்வளவு நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் 1.15 லட்சம் மக்களுக்கு சுமார் 2.88 லட்சம் ஏக்கர்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில், 1967-முதல் 1972-க்குள் இந்த 5 ஆண்டு காலத்தில் 2.47 லட்சம் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் 4.92 லட்சம் ஏக்கர்கள் நிலம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. இது இந்த அரசு நியமற்ற ஏழைகளின் பால் எத்தகைய அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது, நிலமற்ற மக்கள் வாழ்வு மலரச்செய்வதற்கு எத்தகைய முயற்சிகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அடுத்தபடியாக, தரிசுக் காட்டு நிலங்கள் 50,000 ஏக்கரை நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படை செய்வதற்காக அரசு முயற்சிகளை எடுத்து இருக்கிறது என்பதை அறிந்து உள்ளபடியே பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய வட்டத்தில் பர்கூர் மலைப்பகுதி இருக்கிறது, அதற்கருகில் மைசூர் மாநிலத்தின் எல்லையிருக்கிறது மைசூர் மாநில எல்லையையும், தமிழக எல்லையையும் பிரிக்கிற வகையில் ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடைக்கு அப்புறம் உள்ள மைசூர் பகுதியில் விவசாயம் செய்யப்படுகிறது. என்னுடைய பர்கூர் பகுதியில் 5,000 ஏக்கர் இருக்கிறது. காடி ஓட்டு என்று அந்தப் பகுதிக்குப் பெயர். ஒரு காலத்தில் அந்தப் பகுதி வருவாய்த்துறையிடத்திலே இருந்தது. அதற்குப்பின்னால் என்ன காரணத்தாலோ வனத்துறைக்கு மாற்றப்பட்டு இருக்கிறது. வனத்துறைக்கு மாற்றப்பட்ட பின்னால், வனத்துறை அதிகாரிகள் அதை வளர்ச்சி செய்ய ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டார்களா என்றால் இல்லை.

சந்தனமரம் வளர்ப்பதாகச் சொல்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகாலத்தில் எவ்வளவு சந்தன மரங்கள் விளைவித்து இருக்கிறார்கள்? வருவாய் எவ்வளவு வந்திருக்கிறது? வேறு மரங்களை வளர்ப்பதற்கு முடியாதா? இப்படி அங்கே



இருக்கிற அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் எதுவுமே பேசுவது இல்லை. மறைந்த நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்களை முன்பு அந்தப் பகுதிக்கு இட்டுச்சென்றேன். அப்படி இட்டுச்சென்ற நேரத்தில் அதிகாரிகள் அந்தப் பகுதிக்குப் போவதற்கு சரியான வழியில்லை என்று காரணங்களைக்கூறி நாங்கள் அந்தப்பகுதிக்கு செல்லாதவாறு தடுத்து நிறுத்தி அனுப்பிவிட்டார்கள். இருந்தாலும், மாண்புமிகு கோவிந்தசாமி அவர்கள் ஒரு உறுதி கொடுத்தார்கள். எப்படியும் அந்த 5,000 ஏக்கர் நிலங்களில் 2,000 ஏக்கர் நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் அந்த நிலங்கள் ஒப்படை செய்யப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உச்சவரம்புச்சட்டம். முதலிலே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னர் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்ததை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். அதன் மூலம் பல பெரும் நிலச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த உச்சவரம்புச் சட்டத்திலே முதலில் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில் சிலர் டிரஸ்டுகள், என்று ஏற்படுத்தி, அந்த டிரஸ்டின் பேரிலே 100 ஏக்கர்கள் எழுதி வைத்து விட்டு, அதன் மூலம் பல பெருநிலக்காரர்கள் தப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஒழிப்பதற்கு அந்த டிரஸ்ட்டுகள் எந்தெந்தக் காரணங்களுக்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்களுக்குத் தேவையான நிலம் போக, மீதியுள்ளதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நாட்டு மக்கள் வரவேற்று பாராட்டுகிறார்கள் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரிச் சட்டம் பயிரிடும் தன்மை, ஸ்டாண்டர்ட் ஏக்கர் ஆகியவற்றைப் பொறுத்து இது நிர்ணயம் செய்யப்படுகிறது. இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. பொதுவாக என்னென்ன பயிர்கள் ஒவ்வொரு விவசாயியும் பயிர் செய்கிறான் என்று கணக்குப்பிள்ளை அந்த பகுதியில் சென்று அடங்கலில் குறிப்பிடுகிறார். அந்தக் கணக்குப்பிள்ளைக்கு இருக்கிற ஏரியா மிகப் பரவலாக இருக்கிற காரணத்தால் அவர் ஒவ்வொரு விவசாயி இடத்திலும் நேராகச் சென்று கரும்பு எவ்வளவு வைத்திருக்கிறான், மஞ்சள் எவ்வளவு வைத்திருக்கிறான், மற்ற மற்ற பயிர்கள் எவ்வளவு வைத்திருக்கிறான் என்று கணக்கெடுத்துக் கொண்டு வர கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கணக்குப்பிள்ளைகளுக்கு இருக்கும் அந்தப் பரப்பளவை குறைக்க வேண்டும். கணக்குப்பிள்ளைகளை இன்னும் கொஞ்சம் நிறை

[திரு. ஏ. எம். இராஜா]

யப்போட வேண்டும். அப்படிப்போட்டால் தான் அவர்கள் நன்ருகப்பார்க்க முடியும். இல்லாவிட்டால் இப்போது இருக்கும் முறை நீடிக்க வேண்டுமானுல் கூட அந்தந்த நிலச்சொந்தக்காரர்கள் என்னென்ன பயிர் செய்கிருர்களோ அதைக் கணக்குப்பிள்ளை அடங்கலில் குறிப்பிடும்போது அந்த விவசாயிகளிடமிருந்து கையெழுத்து வாங்குகிற முறையைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது நான் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். வளர்ந்து வருகிற சோஷலிச சமுதாயத்தினை அமைக்கிற போக்கிற்கு ஏற்ப நம்முடைய அரசு நில உடைமைகளைக் குறைத்துக் கொண்டு வருகிறது என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிலங்கள் தனியார் யாருக்கும் சொந்தமாக இருக்கக்கூடாது. இந்த நாட்டில் இருக்கும் அனைத்து நிலமும் அரசாங்கத்தின் சொத்தாக ஆக்கப்பட வேண்டும். நாட்டு உடைமையாக்கப்பட வேண்டும். இப்படிச் சிறு சிறு நிலங்களாகச் சிதறிக் கிடக்கிற காரணத்தினுல் வேளாண்மை பாதிக்கப்படுகின்றது. விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. நாம் நினைக்கிற அந்த "மெகனைஸ்ட் பார்ம்" , பெரிய அளவிற்கு இயந்திரங்களைப் புகுத்தி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பல தடைகள் இருக்கின்றன. ஆங்காங்கு வரப்புகள் ஏற்படுத்தி, வேலிகளைப் போட்டு அதன் மூலம் சிறு சிறு நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் நாம் சமாளிக்க வேண்டுமென்ருல் இந்த நிலங்கள் தனியாருக்குச் சொந்தம் என்கிற நிலைமைகள் மாற்றப்பட்டு இந்த நாட்டில் இருக்கிற நிலங்கள் இந்த நாட்டிற்குச் சொந்தம், இந்த நாட்டினுடைய சொத்து என்ற நிலைமையை ஏற்படுத்தி, ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பண்ணைகளாக ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு நல்ல புரட்சியைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு இங்கே பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Deputy Speaker, Sir, I thank you very much for having given me this opportunity to say a few words on the two Demands, in Land Revenue and District Adiministration, about which I have given two cut motions and also moved them in the Assembly. At the very outset I wish to congratulate and also praise the Hon. Minister in-charge of Revenue and District Administration, for the two important and interesting sentences given in the brochure given to us:





"...with a view to enable the members of the public to have access to the appropriate officers with the minimum of expenditure and inconvenience on travel.................

"...and has also failed to give a significant measure of satisfaction to the public who have still to travel long distances at their inconvenience and expenditure and, in addition, find themselves often at a loss to know whom to approach for what."

Actually these are very interesting sentences and shows the realisation on the part of the Hon. Minister to do good to the people and see that the difficulties and inconveniences are removed; I think the people will be able to meet the Officers very quickly and thus many difficulties will be removed. Moreover the people will also take more and more interest with regard to Government activities and measures.

With regard to our taluks of Danganikota and Hosur, I wish to say that the prevailing language there is Telugu and so. I request the Hon. Minister for Revenue to post Officers who know the local language, i.e., Telugu, so that they will be able to understand and appreciate the people's difficulties and needs and also make people to understand. With regard to the *Manu needhi thittam* that has been in vogue, I think that is a good scheme and unless the Officers are able to meet people and understand their difficulties in their own language, there it will not be beneficial. Therefore, I request the Hon. Minister to give special consideration to this request.

Secondly, with regard to Dharmapuri District, the Government have been good enough to include it along with Ramanathapuram District in the Special Rural Works Programme. The programme is being implemented there. With regard to this I have got one doubt. Some time back, some Officer in the Collectorate at Dharmapuri, I was told, said that Special Rural Works Programme would include only minor irrigation works and other irrigation works and not road works, and they were not interested in road works now under this scheme and also they were not able to take many road works. But in Hosur and Danganikotta taluks roads are important. Some time back the previous Collector prepared a list of roads to be improved and also roads which required metalling and certain bridges to be constructed over the rivers there. But subsequently after that, I find that some of the

items have been omitted. As this is an important thing, I request the Hon. Minister to see that road works are also included in the Rural Works Programme in Hosur and Denganikotta Taluks.

Coming to my subject, i.e., poor cultivators, I wish to say that the cultivators who are having two or three acres or below five acres are really very poor. Therefore, indebtedness is increasing. They have to take all sorts of loans and they are not able to repay them. Moreover a number of collections are made even from these small cultivators, i.e., for Defence Fund, other funds, for dramas, etc. Therefore, these poor people are not able to repay even small debts. They are immersed in huge amount of debts. I think the Government will give special consideration to this aspect and give more time for small cultivators who have got 3 acres and 2 acres to repay. The Government are giving greater help to the labourers; they have stated in the brochure that the arrears of rent to be paid by these labourers to tenants will be abolished. While doing so my submission is that care also should be taken to see that the landowners do not suffer. We should not imagine that all landowners are rich. There are very poor landowners also who depend entirely upon their lands and rents. Suppose the arrears due to them are completely waived, then they would be put to lot of difficulties. Therefore, I request the Hon. Minister to make investigation into all these things and go slow in this matter.

Next, Sir as regards rains in Hosur and Denganikottah taluks this year I wish to say, rains failed there from May 3rd week to September 3rd week. There were no rains. The important financial crops there are gingelly and groundnut. Gingelly is grown in about 40,000 acres in these two taluks and fetch about Rs. 2 to 3 crores to ryots. Similarly cultivation of groundnut has also increased. That also fetches money to them. Moreover, especially these taluks and Dharmapuri district in general depend mainly on the south-west monsoon, but the rest of the State depends upon the north-east monsoon. Therefore, if we do not get rainfall in the beginning from the south-west monsoon, the crops cannot grow. Tanks will not get water and cultivation cannot be done there. Similarly, if south-west monsoon fails in the beginning of the year, i.e., from May to September many crops fail and even if we get north-east monsoon the crops cannot grow very well there. We find that in last year from May to September



the south-west monsoon failed. I sent a memorandum to the Collector of Dharmapuri and also to the Government. I do not know what steps have been taken. But I wish to say that the people sustained heavy loss, and they are not able to pay their debts, because financial crops have failed. Therefore, I would request the Hon. Minister to specially consider this matter and grant time to small cultivators to pay their debts by instalments so that they may pay the small debts easily.

Now the Government have been giving pattas. Really it is an appreciable thing. Many cultivators who did not get pattas since so many years and decades have been able to get pattas. For example, when the Hon. Chief Minister came to Hosur some time back, 1,025 pattas were granted. But the Hon. Chief Minister gave 25 pattas only. But the other pattas were asked to be given by the Revenue Officers, it took a lot of time to give them to ryots. My submission is that the Revenue Divisional Officer or the District Collector can go to firka headquarters or to Block headquarters, they can also invite the local M.L.As. and others and hold a small function and distribute the pattas very quickly and immediately, instead of taking a lot of time. I hear a number of complaints from small ryots about the delay. I request the Hon. Minister to look into it and do the needful.

Sir, the Government have abolished land revenue on dry lands and also on wet lands, but they are collecting water cess. They may try to abolish the water cess also at least in respect of cultivators who are having small extent of lands.

Another difficulty which the people are facing is with regard to the water cess. Two or three cultivators in Hosur taluk told me last month that they are taking water from the rivers in Hosur and Danganikota taluks and the Tahsildar asked them not to take water. The rivers are flowing there and there is plenty of water. The ryots are paying water cess. So, if they take water from rivers, there will be no loss to the Government. It seems the Tahsildar went there and asked them not to take water. I request the Government to issue instructions to the authorities concerned to allow ryots to take water for their cultivation purposes as long as they pay water cess correctly.

Then with regard to issue of land revenue and other receipts, the people are not able to know what they contain. At times there will be defects in the receipts given by the village officers. If the

receipts are issued in the local language i.e., in Telugu, the people will be able to understand what they pay and what they should pay. This will give a lot of convenience to them and I hope this aspect of the matter will be looked into.

With regard to jamabhandi, the Government have stated that they would abolish it. But afterwards they wanted to try the experiment in one or two areas to find out the result. My submission is that the jamabandhi is really a good thing and it gives an opportunity for all the district officials to meet the village officers and the people and discuss and know the difficulties of people. The people can meet the Collector or the Sub-Collector and explain their difficulties. In this connection, I would suggest that instead of having jamabandhi once a year they can have it twice a year in the firka headquarters and not in the taluk headquarters so that the people can easily explain their difficulties to the officials. I hope this will be looked into, and expenses saved to a large extent.

With regard to salaries of Village Officers, I think it should be considered with kindness and sympathy. They should be given more.

Another difficulty is that the treatment given to the Village Officers by the revenue officers is not satisfactory. The Collector and the Sub-Collector are so kind, but the officers below that rank are very harsh towards the village officers and this requires the attention of the Government, as they are also helping the Government, and form a part of the Revenue Department.

With regard to the extension and jurisdiction of two areas I wish to say that Hosur and Denkanikottah taluks, the extent of these two taluks is 1,200 sq. miles. They were divided into two taluks for the sake of convenience of administration but unfortunately while dividing them, to the Denkanikottah taluk they have added some more villages from the Hosur taluk with the result the Hosur taluk became a small taluk and the Denkanikottah taluk has become a too big taluk. Also some of the villages in the Denkanikottah taluk are now close to Hosur Town—4 or 5 miles from the Hosur Town. It is convenient for the people if these villages are included in the Hosur taluk. Otherwise the people will be put to a lot of difficulties and they have to cover a distance of 15 or 20 miles to reach Denkanikottah. Also there are no important



towns or cities on the other side of it except forest area. If it is Hosur, they can easily go to Bangalore and Krishnagiri and other places. So I request that these villages the people of which are asking, may be re-transferred to the Hosur taluk.

As regards administration, now there is one Sub-Collector or Revenue Divisional Officer for one division. I think the work has increased and there are a lot of complaints and petitions to be scrutinised by the Sub-Collector and now he is not able to scrutinise all of them. So I suggest that one Revenue Divisional Officer should be posted in each taluk so that he will be able to go to village and understand things and do better administration there.

Now I come to the District Development Council affairs which has come in the place of old District Boards. They used to have a non-official Chairman. Now we have got the official chairman. In the meetings of the Council, a number of Members of the Legislative Assembly wanted that it would be better if a non-official is the Chairman of the Council. Not that the Collector is not able to pay his full attention to this. He has got a lot of work to attend to and he has no time to give full attention to this work. Therefore he may be replaced by a non-official.

With regard to the collections to the National Defence Fund and other Funds, coercive measures are adopted by the officers and this may be looked into immediately.

(Mr. Deputy Speaker sounded the gong).

With these words, I conclude my speech.

* *திரு. எம். சுரேந்திரன்:* கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைமுன் வைத்திருக்கின்ற மானிய கோரிக்கை மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய இந்த மாமன்றமும், அண்டையில் இருக்கின்ற இதர மாமன்றங்களும், உயர்வாய் இருக்கின்ற பாராளுமன்றமும் சோஷலிசத்தை ஏற்படுத்துவது என்று உறுதி கொண்டிருக்கின்ற நேரத்திலே, மாவட்ட நிர்வாகத் துறையிலும், வருவாய்த் துறையிலும், மிகுந்த பொறுப்புடன் காரியங்களை செய்ய வேண்டிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை முதலிலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மாநிலத்திலும் சரி, நாட்டிலும் சரி, இருக்கின்றவர்களிலே பெரும்பாலோர் விவசாயிகள் என்பது புள்ளிவிபரங்கள் கூறுகின்ற உண்மையாகும். அப்படி விவசாயிகள் என்ற நிலையில் நல்ல சட்டை இல்லாமலும், நல்ல

[திரு. எம். சுரேந்திரன்] [1973 மார்ச் 18

வேட்டி இல்லாமலும், நாகரிகமாக நடந்து கொள்ளாமலும் இருந்து வருகின்றவர்களுடைய எண்ணிக்கை அதிகம் என்பது தான் அதன் மூலம் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்று. அப்படி உள்ளவர்களுக்குத்தான் சோஷலிசம் தேவைப்படுகின்றது. ஆகவே, இன்றைக்கு சோஷலிசம் வேண்டும் என்பதற்காக பல்வேறுவிதமான சட்டங்களை செய்து, அந்த சட்டங்கள் மூலம் நிதிகளை ஒதுக்கி இருப்பது, ஆங்காங்கே செலவிடுவதற்குப் போதுமானதாக இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

நம்முடைய அதிகாரிகளும், நம்முடைய சிப்பந்திகளும்-மாவட்டத்திலும் சரி, மாநிலத்திலும் சரி விவசாயிகளிடத்திலே, பாமர மக்களிடத்திலே ஒரு மாதிரியான உணர்வை வளர்த்துக்கொண்டார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, அம்மாதிரியான சாதாரண மனிதர்களுக்கு இப்போது ஒவ்வொரு காரியாலயத்திலும் அவர்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், அவர்களுடைய கோரிக்கைகளைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற வகையில், அவர்களிடையே அலுவலர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறையிலிருந்து நாம் சோஷலிசத்தை ஆரம்பிப்பதுதான் சரியானதாகும். அப்படி நடந்து கொள்கின்ற நிலை இப்போது எப்படி இருக்கிறதென்றால், நல்ல வெள்ளை வெளேரென்ற சட்டை, வேட்டி அணிந்து, காரியாலயங்களுக்குச் சென்றால், அவர்கள் யார் என்று தெரியாமலே கூட மரியாதை கிடைக்கிறது. ஆனால் அழுக்கான சட்டை, அழுக்கான வேட்டி அணிந்து செல்லக்கூடிய விவசாயிகள் சென்றால், அவர்கள் யார் என்று தெரிந்தாலும் அவர்களுக்கு மரியாதை கிடைக்காத நிலை இப்போது நடக்கக்கூடிய ஒன்றாகும்.

இம்மாதிரியான ஒரு மனப்பான்மையை முதலிலே மாற்றியாக வேண்டும். அந்தச் சாதாரண மக்களுக்கும் சம மரியாதை கிடைக்கின்ற வகையிலே நம்முடைய சட்டமும், செலவழிக்கின்ற பணமும், நடைமுறைகளும் சாய்வாக இருந்தால் தான் நாம் சோஷலிசப் பாதையிலே செல்கிறோம் என்று பொருள். இல்லையென்றால் நாம் சோஷலிச பாதையிலிருந்து தவறிவிட்டோம் என்று தான் கருதப்படும் என்பதை இந்த மன்றத்திலே நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய பழைய காலத்தில் இருந்த கலெக்டர்கள் எல்லாம் அதிகாரத்தை வைத்து, மக்கள் அணுகுவதற்கே வழி இல்லாது இடைவெளியை மிக அதிகமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாம் இன்றைக்கு ஜனநாயகம், சோஷலிசம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றபோது, அந்த இடைவெளிகள் அகற்றப்பட்டு, மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இருக்கக்கூடிய உறவானது பரஸ்பரம் ஒரு பாச உணர்வு ஏற்பட்டு, பரஸ்பரமானது அவர்களிடையே வலுவடைந்து, அந்த உணர்வு அவர்களுடைய உள்ளத்திலே.



1973 மார்ச் 18] [திரு. எம். சுரேந்திரன்]

நிலைபெறுமாறு அமைந்தால்தான், இந்தக் காரியத்தில் நாம் வெற்றிபெற்றவர்கள் ஆவோம். அந்த நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்த மாதிரியான ஏற்றத்தாழ்வினை வைத்துக் கொண்டு நாம் ஜனநாயகம், சோஷலிசம் என்று பேசுவதிலே பயனில்லை. எனவே, மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பரஸ்பரமான நிலையை, சம நிலையை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் என்ன என்பதை அரசாங்கம் தீவிரமாக சிந்திக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜனநாயக, சோஷலிச பண்பாடுகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டுமானால், முன்பு இருந்த முறைகளிலே பெரும் மாற்றங்களை நாம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த மன்றத்திலே ஜமாபந்தியை நீக்குவது பற்றியும், ஏற்கெனவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஜமாபந்தி முறையை நீக்க வேண்டுமென்றும் ரெவின்யூ போர்டை மாற்ற வேண்டுமென்றும் இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நீக்கவேண்டும் என்பதற்கான காரணம் என்ன என்பதை பார்க்கின்றபோது, ஜமாபந்தி என்ற முறை அதிகாரிகளை மக்கள் பார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு தர்பார் என்று தெரிகிறது. அந்தக் காலத்தில் கலெக்டர்களை யாரும் பார்க்கக் கூடாது. மக்களும், சாதாரண அதிகாரிகளும் கலெக்டரை பார்க்கமுடியாது. எனவே, அவரை வரவேற்பதற்காக அவரைப் பார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு ராஜ தர்பார்தான் இந்த ஜமாபந்தி முறை. இன்று இருக்கின்ற சூழ்நிலையில் அந்த முறை நீடிக்க வேண்டுமா என்பதை நாம் யோசிக்கவேண்டும். அது இன்றைக்கும் தேவைதானா? அதுபோன்ற தர்பார்களைப் பார்க்கிற போது மக்களிடத்தில் இந்த அரசு சோஷலிசப் பாதையில் செல்கிறது என்கிற உணர்வை நாம் எப்படி உண்டாக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதேபோல ரெவின்யூ போர்டு என்று சொல்கிறபோது முதிர்ந்த ஐ.ஸி.எஸ். அதிகாரிகளை அங்கே போட்டு வருகிற பிரச்சினைகளை எல்லாம் அலசிப் பார்த்து, ஆய்மைப்படுத்தி முடிவாக செய்ய வேண்டியவற்றை மட்டும் ஆங்கிலேயர்கள் காலத்தில் மேலே அனுப்பி வைப்பதற்கு அமைக்கப் பட்ட ஒரு நிர்வாகம் ஆகும். அது இந்தக் காலத்திற்கு ஒவ்வாத முறையில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். அது வேண்டாம் என்றால் அதனிடத்தில் நமக்கு வெறுப்பு என்ன? அதுவே மக்களுக்கு மிகவும் பயன்படுகிற நிலையில் மாற்றி அமைக்கப்படுமானால் நமக்கு எவ்விதச் சங்கடமும் இருக்க முடியாது. அரசாங்க சோஷலிச நிர்வாகம் மக்கள் திசையில் சாய்ந்திருக்கிறது என்கிற உணர்வையாவது முதற்படியாக ஏற்படுத்தியாக வேண்டும் என்கிற அடிப்படையில்தான் அந்த போர்டை எடுத்துவிட வேண்டும் என்று

கருதப்பட்டது. அரசாங்கமும் அதை எடுத்துவிடுவது என்று முடிவு செய்தால் அதற்கான மாற்று ஏற்பாடுகளையா கண்டுபிடிக்க முடியாது. அதை நீர்வாக சீர்திருத்தக் கமிஷன் ஆராய்ந்து பார்த்து முடிவை அறிவிக்கும் என்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு அந்தனை காலம் விரயம் செய்யப்பட வேண்டுமா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வரி வசூலிக்கிற விஷயத்தில் அரசு கண்காணிப்பாக, கவனமாக இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக பட்டா நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு முறை இருக்கிறது. நம் மாநிலத்தில் ஏராளமானபேர்கள் பலகாலமாக புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்து வருகிறார்கள். இப்போதுதான் சிறிது சிறிது பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. எல்லா புறம்போக்கு நிலங்களும் பட்டா செய்துகொடுக்க பிற்பாடு இந்தப் பிரச்னை இல்லாமல் போகலாம். ஆனால் எங்கள் பகுதியில் தற்போது புறம்போக்கு நிலங்களுக்கு வரி வாங்கப்படுவதில் அநேகவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக சமீபத்தில் ரெவின்யூ போர்டு மெம்பர் 28 ஆம் தேதி மேட்டூர் வந்திருந்தார். அவரிடம் பலபேர்கள் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் கிராம அதிகாரிகள் ரசீது கொடுக்காமல் பணம் வாங்கியிருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. அங்கேயுள்ள ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்களிடத்திலும் புகார்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் விசாரணை செய்வார்கள் என்று நம்புகிறேன். குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இருக்கக்கூடிய குறைகளை எல்லாம் நாம் களைந்தாக வேண்டும். மற்றொரு பக்கம் புறம்போக்கு நிலங்களை எல்லாம் சீக்கிரத்தில் பட்டா செய்து கொடுத்துவிடுவதற்கான ஏற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் மாநிலத்தில் பல இடங்களில் சட்டவிரோதமாகத் தண்ணீர் எடுக்கிறார்கள் என்கிற அடிப்படையில் தண்டத் தீர்வை போடுகிற பழக்கம் இருக்கிறது. அப்படித் திருட்டுத்தனமாகத் தண்ணீர் எடுப்பவர்களைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேசமயம் நீண்டகாலமாக அவர்கள் அப்படித் தண்ணீர் எடுத்துச் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் அதை எந்தவகையில் சீர்படுத்தலாம் என்று பார்க்கவேண்டுமே தவிர மேலும் மேலும் பல மடங்கு தண்டத் தீர்வை போடுவதில் பயன் இல்லை.

என்னுடைய தொகுதியில் மேட்டூர் பகுதியில் பல காலமாகத் தண்ணீர் தேக்கப் பகுதிகளில் சாகுபடி செய்துவருகிறார்கள். அணை வருவதற்கு முன்பே சாகுபடி செய்யப்பட்ட இடங்கள். அணை வந்தது. இப்போதும் தொடர்ந்து





சாகுபடி செய்கிறார்கள். ஆனால் இப்படி இவர்கள் சாகுபடி செய்வதன் மூலம் தண்ணீர் தேக்கப் பகுதி மேடிட்டுப் போகும், தண்ணீர் குறைந்துவிடும் என்கிறார்கள். அதற்காக ஓரங்களில் எல்லாம் மரங்கள் வைக்க வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு மரங்கள் நடப்பட்டுவிட்டன. உள்ளே விவசாயம் செய்கிறார்கள்—மண் வெட்டி சாகுபடி செய்வதனால் பள்ளமாகலாமே தவிர மேடிட்டுப் போக வழியில்லை. அவர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்று வதனால் நிலமில்லாத அவர்களுக்கு வேறு இடத்தில் நிலம் கொடுத்துவிட்டு வெளியேற்றுவதுதான் பொருத்தமாக, நியாயமாக இருக்கும். அதைவிடுத்து 1967-க்குப் பிறகு நாம் வந்த பிறகு தான் அவர்களுக்கு 20 மடங்கு தண்டத் தீர்வை போட ஆரம்பித்திருக்கிறோம். இது சரியல்ல. அதுவும் வருடாவருடம் சொல்லி நான்கு ஆண்டுகளாக அந்தத் தண்டத் தீர்வை ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாண்டு அந்த நான்கு வருஷ தண்டத் தீர்வையும் சேர்த்து வசூலிக்க முன் வந்திருக்கிறார்கள். இதன்பேரில் நான் அமைச்சரிடத்தில் சொன்னேன். அவர்களும் கனிவுடன் ரெவின்யூ போர்டு மெம்பரைப் போய் விசாரித்து வரச் சொன்னார். அவர் வந்தார். ஆயினும் இன்றுவரை எவ்வித உத்தரவும் போடப்படவில்லை. இதற்கிடையில் 'நீங்கள் வரியைக் கட்டாவிட்டால் உங்கள் தட்டுமுட்டு சாமான்கள், ஆடுமாடுகள் இவற்றைப் பிடித்துப் போய்விடுவோம்' என்று கிராம அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். அதுபற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் சென்று சொன்னேன். மேலே இருந்து எங்களுக்கு உத்தரவு வரவில்லையே என்கிறார். இதுபற்றி தகராறு எழுந்து ரெவின்யூ போர்டு மெம்பர் வந்து பார்த்துப் போயிருக்கிற நேரத்தில் அவர்களது உத்தரவு வரும் வரையிலாவது விட்டே கொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லையா? மேலே சொல்லி சீக்கிரம் உத்தரவு வரச் செய்யுங்கள் என்கிறார். இதுபற்றி அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலைப்பற்றி ஒரு வார்த்தை. அந்தக் கவுன்சில் ரிப்போர்ட் வருடா வருடம் சட்ட சபைக்கு வருகிறது. ஆனால் இங்கே உள்ளவர்கள் அதை விவாதிக்க சந்தர்ப்பமே இல்லை. ஜில்லா போர்டு கவுன்சில் தீர்மானம், அவற்றின் மீதான கருத்து இவை வருகிறதே தவிர அந்தத் தீர்மானங்களை செயல்படுத்த என்ன என்ன செய்யலாம் என்பதாக இந்தச் சபையில் விவாதிக்க வழியே இல்லை. அதுபோன்ற ஏற்பாட்டைச் செய்தால் உதவிகரமாக இருக்கும். இன்னும் உதவி சபாநாயகர் அவர்கள் அதிகநேரம் கொடுத்தால் முக்கியமான சிலபல விஷயங்களைச் சொல்லலாம். அவர் அதிக நேரம் கொடுக்க மறுப்பதால் இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பதினைந்து நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். மற்றும் பத்துப் பேர்கள் பேசவேண்டியதாக இருக்கிறது. அடுத்தவர்களுடைய உரிமை ஆரம்பிக்கிறபோது உங்களது உரிமை முடிந்துவிடுகிறது.

சட்டத்தை நாம் போட்டாலும்—நிலச் சீர்திருத்தச் சட்டமாக இருந்தாலும், குத்தகைதாரர்கள் சட்டமாக இருந்தாலும்—ஆதாரமான அத்தாட்சிகளைத் தருகின்ற பொறுப்பு கிராம அதிகாரிகளிடத்தில் இருக்கிறது. பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கிராம அதிகாரிகள் இந்த வேலையைச் செய்வதன் மூலம் ஏழைகளுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பணியாற்றுபவர்கள் அல்ல. பெரிய நிலச்சுவான்தார்கள் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அவர்களைக் கொண்டு நாம் நினைக்கின்ற சோஷலிச திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, கிராம உத்தியோகஸ்தர்களை முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் போடுகின்ற எந்தத் திட்டமும் கிராமத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களுக்கு நல்ல திட்டமாக சிறப்புற அமையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற இந்த அரசின் உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ரயத்துவாரி சட்டத்தை அமல் செய்யும்போது அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை மனத்திற்கொண்டு, நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். 7 ஆண்டுகளுக்குள்ள வரி பாக்கியை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். அந்த நல்ல செய்தியை கூறியதற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் ரயத்துவாரி முறை அமல்படுத்தும்போது பல்வேறு துன்பங்கள் ஏற்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரில் வந்திருந்து நிலைமையைக் கண்டறிந்து வந்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட இதை அமல் செய்யும் போது, நிலத்தின் தரத்தைப் பிரிக்கின்ற போது ஏற்படுகின்ற வகையில் சில இடையூறுகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தை மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க கூடாது என்று விவசாயிகள் எடுத்துக் கூறினார்கள். காரணங்களும் கூறியிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற சீதோஷ்ணம், நிலவளம் போன்ற காரணத்தால், முதல் தர நிலமாக இருப்பதை நெல்லை மாவட்டம் போன்ற மாவட்டங்களிலுள்ள இரண்டாம் தரம், மூன்றும் தரமாக உள்ள நிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் இப்போதும் வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, ரீ-சர்வே அண்டு செட்டில்மெண்டு. இதில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதில் இருக்கின்ற தவறுகள் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பட்டாவானது, இன்னொருவர் நிலத்திற்கு உரியதாக இருக்கிறது.





ஒவ்வொருவருடைய நிலத்தின் பவுண்டரி, ரீ-சர்வே நடத்தும்போதுகூட சர்வே செய்த அனுபவ பாத்தியதை இவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இதைத் தால் பல்வேறு தகராறுகள் இருக்கின்றன. உடனடியாக இந்த இலாகா சென்று தீர்த்து வைக்கவில்லை என்றால் ஏழை விவசாயிகள் கோர்ட்டுக்குச் இலாகாவே வாதாட வேண்டிய நிலை உருவாகும். இந்த நிலையை ஏற்படுத்தாமல் இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரெவின்யூ கிராமங்களின் எல்லையை மாற்றியமைக்க வேண்டிய திட்டம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. இப்போது இருக்கும் பெரிய கிராமங்களை சிறு சிறு கிராமங்களாக மாற்றி அமைக்க வேண்டும். கிராம அதிகாரிகள் விஷயத்தில் கன்னியாகுமரி ஜில்லாவில் இப்போது இருக்கும் முறை மாற்றப்படக்கூடாது. தேவையானால் இந்த முறையை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமே தவிர, மற்ற மாவட்டங்களில் இருக்கும் முறையை கன்னியாகுமரி ஜில்லாவில் புகுத்தக்கூடாது. வெளிமாவட்டங்களில் இருக்கும் முறையில் பல குறைபாடுகள் இருக்கின்றன.

அடுத்ததாக, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்தக் குறிப்பிலே பல லட்சம் ஏக்கர் நிலம் பல லட்ச ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு செண்ட் கூட நிலம் கொடுக்கவில்லை, காரணம் இன்னும் ரயத்துவாரி முறை அங்கு வரவில்லை, வந்தவுடன் கொடுக்கப் படும் என்று சொன்னார்கள். ரீ-சர்வே செய்தபோது ஏழைகளிடத்தில் ஒவ்வொருவரிடம் எவ்வளவு நிலம் கைவசம் இருக்கிறது என்று சர்வே செய்ய வில்லை. அவர்கள் குடியிருப்பதற்கு எவ்வளவு நிலம், விவசாயத்திற்கு எவ்வளவு நிலம் தேவைப்படுகிறதோ, அதோடு அவர்கள் கைவசம் இருக்கும் நிலம் இவற்றைப் பார்த்து, ரீ-சர்வே செய்து அவர்களுக்கு உடனடியாகப் பட்டாக்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அக்ரி கல்சரல் இன்கம்டாக்ஸ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் எக்ஸ்டெண்ட் செய்யப்போகிறோம் என்றும் இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்குச் சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்றும் குறிப்பிட்டார்கள். விவசாய வருமான வரிச் சட்டத்திலே பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன. அந்த நிலையிலே அப்படியே அந்தச் சட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விஸ்தரித்தால் அங்கே உள்ள ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே அந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்பாக ஏழைகள் பாதிக்கப்படாத முறையில் இருப்பதற்கு சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்ய வேண்டும்.

எங்களுடைய மாவட்டத்திலே கண்டுகிருஷி, பாட்டம் போன்ற சில பிரத்தியேகமான முறையிலுள்ள நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களானது திருவிதாங்கூர்-கொச்சி மகாராஜாவுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தன.

அந்த நிலங்கள் குறைந்த அளவுதான் நமது மாநிலத்திற்குச் சேர்ந்தது. ஆனல் அதிக அளவு அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் உட்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த அரசாங்கம் அதற்கான சட்டங்களைக் கொண்டுவந்து விவசாயிகளுக்குப் பட்டா செய்துகொடுத்துவிட்டார்கள்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு அதிகப் பளு ஏற்படாத முறையிலே பெயரளவுக்கு காம்பன்சேஷன் வாங்கி பட்டாசெய்து கொடுத்திருக்கிருர்கள். அந்த முறையைப் போலவே இங்கேயும் விவசாயிகளிடமிருந்து பெயரளவில் காம்பன்சேஷன் வாங்கிக்கொண்டு பட்டாசெய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக முத்திரைத்தாள் நிர்வாகத்தில் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பாகிஸ்தான் யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது 2½% முத்திரைத்தாள் மீது கூடுதலாக தீர்வை விதிக்கப்பட்டது. இப்பொழுது அந்த யுத்தமும் ஒழிந்தது. வெற்றியும் அடைந்துவிட்டோம். எனவே யுத்தத்திற்காகப் போடப்பட்ட அந்தத் தீர்வையை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசின் வாணிகத் துறையைப் பொறுத்த வரையிலே ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசு அரிசி, நெல் மட்டும்தான் கொள்முதல் செய்கிறது. இதனுல் ஓரளவுக்கு ஏழைகளுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய நிலைமை இருந்தாலும் பல அத்தியாவசியப் பண்டங்களை வாங்குவதற்கு ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். விலை விஷம் போல் ஏறிக்கொண்டு போகிற நிலையிலே அவர்கள் அத்தியாவசியப் பண்டங்கள் போன்றவற்றையும் அரசாங்கம் வாங்கி ஏழைகளுக்கு வினியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கம் விநியோகம் செய்யும் அரிசி படி ரூ. 2.20 ஆக இருக்கிறது. ஆனல் மற்ற இடங்களிலே கொஞ்சம் குறைவாக இருக்கிறது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஏழைகளுக்கு அரிசி ரூ. 1.50 அளவுக்குக் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தில் மனு நீதி முறை நடத்தப்படுகிறது. அதனுல் அந்த மக்களுக்கும் அந்த கலெக்டருக்கும் ஏமாற்றம்தான், கலெக்டரைக் கேட்டாலே சொல்வார்கள்.

To what extent it is a waste of time, is known. By this Scheme, Collector's time as well as the people's time is wasted and it does not serve any useful purpose.

மனு நீதி முறைப்படி எந்தவிதமான நன்மையையும் இந்த ஆட்சியினல்



செய்ய முடியவில்லை. மக்களுக்கு இன்றைக்கு வேலையில்லை. வாழ்க்கை வசதி இல்லை, இதுபோன்ற பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன, வாரத்தில் ஒரு நாள் என்று ஒதுக்கி அதன் காரணமாக கலெக்டரும் வேறு வேலை பார்க்க முடியாமல் காத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆயிரக்கணக்கில் மனுக்கள் வருகின்றன. அந்த மனுக்களின் மீது அரசாங்கத்தினுல் உடனடியாக தீர்ப்பு அளிக்கக்கூடிய முறையில் இல்லை, எனவே அந்த மாதிரி மக்களை ஏமாற்றக் கூடிய முறையிலே இருப்பதால் அந்த மனு நீதித் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷனைப் பொறுத்த வரையிலும் நமது அண்டை மாநிலமான கேரளத்திற்கு வருவாய் நம்மைவிட குறைந்த நிலைமையிலே இருந்தாலும் நமது அரசாங்கம் கொடுக்கிற அளவைவிட பென்ஷன் அதிகமாகக் கொடுக்கிறது. மத்திய அரசாங்கம் கூட நம்மைவிட அதிகமாகப் பென்ஷன் கொடுக்கிறது. இன்றைய தினம் விலைவாசி ஏறியிருக்கிற நிலைமையில், மற்றும் பல்வேறு காரியங்களும் இருக்கிற நிலைமையில் நாம் அளிக்கக்கூடிய பென்ஷனை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ரெவின்யூ போர்டுபற்றி ஒரு வார்த்தை. மறைந்த முதல்வர் அண்ணுதுரை அவர்கள் பல்வேறு தடவைகளில், ஆணித்தரமாக

> "The Revenue Board is a white elephant. It should be abolished. We have accepted the principle and decided to abolish it. We are going to abolish it."

என்று சொல்லியிருக்கிருர்கள். ரெவின்யூ அமைச்சராக அப்பொழுது இருந்த இன்றைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் கூட பல்வேறு தடவைகளில் கூறினுர்கள். ஆனல் இன்றைய நிலைமையில் அரசாங்கம் அதை கைவிட்டு விட்டார்களா, அல்லது கொள்கையளவிலாவது ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்பதை மக்கள் கவலையோடு பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். அந்தக் கொள்கையை அரசாங்கம் கைவிட இருப்பதாகத் தென்படுகிறது. அந்தக் கொள்கையை அமல் நடத்த முடியவில்லையென்ருல், மக்களுக்கு வாக்களித்து விட்டோம், முடியவில்லை என்று எப்படிச் சொல்வது என்ற தயக்கம் அரசாங்கத்திற்குத் தேவையில்லை. நடைமுறையில் வர இருக்கிறது அல்லது இல்லை என்று அறிவிக்கலாம். ரெவின்யூபோர்டு அபாலிஷ் செய்வது என்ற வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை என்று இந்தச் சட்ட மன்றத்திலே அறிவித்துவிட்டால் திருப்தி ஏற்படும். அல்லது அமல் செய்வோம் என்று நிச்சயமாகச் சொல்லவேண்டும். ஆகவே என் கட்சியின் சார்பாக கொடுக்கிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இவ்வளவு நேரம்

தாராளமாக சமயம் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRU B. VENKATASWAMY : I think the Hon. Deputy Speaker for having given me an opportunity to speak a few words in support of the cut motion moved on behalf of the Swatantra Party.

Regarding Pattas, no ryot is able to get loan since no separate pattas have been issued to the ryots in some areas, even though partition deeds and other documents have been registered in the office of Sub-Registrar. This must be taken note of and those who are having lands should be given their separate pattas.

The ryots are finding it difficult to get loans. There was a proposal before Government to give pass book to each farmer. I do not know what happened to that proposal. Each and every time the farmer has to go to revenue office hunting after papers.

Regarding vested panchayat porambokes some are cultivating in that land and the Government is Collecting penalties. But I do not know so far that any amount has been reimbursed to any panchayat in the State. Since the financial position of the panchayat is not very sound, I request that the amount collected by the Government may be reimbursed to the panchayat.

Regarding District Development Council, more powers should be given to it. I think the Reorganisation Committee is going into that question. Rs. 4 crores have been given as drought relief to Ramanathapuram and Dharmapuri due to drought relief.

Regarding Ramanathapuram and Dharmapuri districts, the Hon. Minister knows the districts very well. Four crores of rupees have been allotted for the two districts, at the rate of Rs. 2 crores for each district. It is not at all sufficient for a backward area and for a purely drought area. Every year it is affected by drought. So, I request the Hon. Minister to see that these areas are declared as permanently drought-affected areas and more things are introduced there. Some tanks and other things there should be improved. Since 4 or 5 years in this House we are stressing it. So, I request you to consider this aspect very sympathetically because it is a very backward area. There is no industry in that area.





Regarding pension, Sir, it is regrettable to note that no financial relief has been granted to pensioners in spite of assurances given on the floor of the House by the Chief Minister that relief will be granted when State finances improve. Now we have surplus budget and the case of pensioners deserves consideration. In Kerala the minimum pension of retired Government Officials has been raised to Rs. 50. Here in Tamil Nadu, it is Rs. 30. This should be raised to Rs. 50 as in Kerala in keeping with our professions of sympathy to the poor and weaker sections of society. *Ad hoc* increase of pension should be sanctioned to meet the rising cost of pricess. The Tamil Nadu Pay Commission has recommended grant of Dearness Allowance to existing pensioners at half the rates of Dearness Allowance granted to those in service. This has not been implemented. Considering the economic difficulties of pensioners, this proposal of the Tamil Nadu Pay Commission should be implemented without further delay.

(திரு. செ. கந்தப்பன் தலைமை.)

Regarding the stamp duty, Sir, which the Government have recently levied, it has been challenged in the Court of Law and a ruling has been given that it is an inequitous stamp duty. I do not want to discuss it because it is still in Court. I think it is pending in the Supreme Court. (A voice : Writ Appeal). So, I want to stress at this time that even justice demands that the State Government re-examine their stand on this and other such levies to reduce uncalled for burdens on the public.

> "The impost of a heavy stamp fee on loan bonds executed by policy-holders of the Life Insurance Corporation is another instance in point. The Court fees collected through sale of judicial stamps and related receipts (which is estimated at Rs. 2.67 crores for 1971-72) are also an item of a service charge converted into a source of revenue. In this case, the effect is to make recourse to courts unduly expensive, thereby denying justice particularly to the poorer sections of society who cannot afford that cost ".

The above is quoted from the Editorial of 'Hindu' dated 12th January 1972. 'The Hindu' is an important paper. I request the Government to re-examine this issue and see that the stamp duty is minimised.

[Thiru B. Venkataswamy] [1972 மார்ச் 18

Regarding recovery of loans, the recovery of loans in every district, I think, is very harsh. So many people in the Revenue Department are collecting the amounts. Those who are in a position to pay, let them pay, and we welcome it. But the revenue authorities are attaching the properties of poor people and they are also attaching their animals, bulls and other things. So, I request the Government to take a very lenient view in this matter. Recently I came from my area and the Revenue Divisional Officer has called for a meeting and fixed 15th as the last date for collection of loans. They want to collect the loans within 15th of this month. Hon. Minister knows the entire district. He must take a lenient view in the matter of collection of loans and the ryots may be allowed to repay in instalment basis. Such a harsh order will affect the economy of the ryots.

Regarding assignment of lands, some lands have been classified as well-wooded area, that is, Natrapalayam, Urigam and other areas of Denkanikota taluk. There some people have classified the lands as well-wooded forests. There is no wood at all there. Some Officers may go and inspect the place. Since 30 years people have encroached that area and are doing cultivation. But every year they will have to pay penalty. Therefore, I request the Government to take a more sympathetic view and assign these lands to the cultivators.

Regarding bifurcation of taluks, my friend Thiru Kothandaramiah has already mentioned about some villages. Some villages are very close to Hosur and they have to go only five miles. But if they have to go to Dankanikota, they have to go 20 miles to headquarters. The villages are Pedda Belagondapally, Mathagondapally, Kumaranapally, Kalukondapally which are situated at a distance of five miles to Hosur, but 20 miles to Danganikota. The Panchayats have also passed resolutions giving their willingness to join Hosur. I request the Hon. Minister to consider this case sympathetically and change these villages to Hosur Taluk With this I conclude my speech. Thank you, Sir.

* திரு. மூ. மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் கோரியுள்ள மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1972 மார்ச் 18] [திரு. மூ. மாரிமுத்து]

வருவாய்த் துறையில் இன்றைக்குப் பல திட்டங்களை வகுத்து அவையெல்லாம் எல்லோரும் பாராட்டுகின்ற அளவில் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மனு நீதி முறை, அரிசனங்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் வீட்டு மனை அடைமானம் செய்வது, அவர்கள் ஆக்கிரமித்துப் பயிர் செய்து கொண்டிருக்கும் நிலத்தை அடைமானம் செய்வது, வருவாய்த் துறை வாரியத்தை சீர்திருத்த நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது, பாசனத் திட்டங்களில் உள்ள தண்ணீர் வரியை மாற்றியமைப்பது போன்ற பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, பஞ்ச நிவாரணத் திட்டத்தின் கீழ் பல நல்ல வேலைகளையெல்லாம் வருவாய்த் துறை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக என்றுமே பஞ்சத்தால் பாதிக்கப்படும் இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டங்களுக்கு தனி சிறப்புத் திட்டம் அமைத்து 4 கோடி ரூபாய் அளவிலே செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலம் விவசாயத்திற்கு நல்லமுறையிலே ஏரி, குளங்களை வெட்டுவது மட்டுமல்லாமல் சாலைகள் போடுவது போன்ற திட்டங்களெல்லாம் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றன.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கடந்த 2 வருஷ காலமாக என் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு அங்கு குடிதண்ணீருக்குக்கூட மக்கள் அவஸ்தைப்பட்ட நேரத்தில் சுமார் 17½ இலட்சம் ரூபாய் அளவில் எங்கள் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கி கிணறுகளை ஆழப்படுத்தி, குடிநீர் வசதி செய்து கொடுத்திருப்பதற்கு என் தொகுதி மக்களின் சார்பாக சம்பந்தப்பட்ட துறையினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 17½ லட்சம் ரூபாயில் சுமார் 2½ லட்சம் ரூபாய் செலவிடப்படாமலிருக்கிறது. அந்த நிதியைக் கொண்டு, ஏழை அரிசன மக்கள் வாழும் பகுதிகளில் மேல்நிலைத் தொட்டிகள் இருக்கும் இடங்களில் பைப்புகள் வைக்கும் அந்தத் திட்டத்தை மேற்கொண்டால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வருவாய்த் துறையில், அதாவது என் பகுதியில் குறைந்தது நான்கைந்து ஆண்டுக் காலத்தில் ஆயிரத்திற்கும் மேலாக அரிசன மக்களுக்கு வீட்டு மனை நிலம் பட்டா செய்து கொடுத்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், ஏழை அரிசன மக்கள், பிற்பட்ட மக்கள், ஏழை விவசாயிகள் ஆக்கிரமித்துக்கொண்டிருந்த 10,000-க்கும் மேற்பட்ட நிலங்களை இன்றைக்கு நமது அரசாங்கம் அடைமானம் செய்து பட்டா கொடுத்து அவர்களுக்குக் கடன் போன்ற நல்ல நிலைமைகளுக்கெல்லாம் அனுமதி கொடுத்து செயல்பட்டு வருகிறது. அடைமானம் செய்வதற்கு 2 தாசில்தார்களை நியமித்து துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறது. குறைந்தது 3,000 ஏக்கர் நிலம் அங்கு தரிசு நிலமாக இருக்கிறது. அந்த நிலங்களை பட்டா செய்ய துரிதப்படுத்தப்பட

வேண்டும். அதிகாரிகளும், இது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் இன்னும் இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டிய நல்ல ஆக்கமும் ஊக்கமும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடைமானம் செய்யும்பொழுது, பட்டா செய்யும்பொழுது சில குறை பாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, 10 ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு 5 ஏக்கர் மட்டும் அரசாங்கம் பட்டா கொடுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது. மீதமுள்ள 5 ஏக்கரை அவரது மனைவிக்கோ அல்லது பிள்ளைக்கோ அடைமானம் செய்யும் நிலையை ஊரிலிருக்கும் கிராமக் கர்ணங்கள் உருவாக்குகிறார்கள். அந்த நிலையை மாற்றி நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய சுதந்திரக் கட்சி உறுப்பினர் அவர்கள் கூடச் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இந்தத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். தற்போது விவசாயிகள் விரைவில் கடன்பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஒரு விவசாயி கடன் பெற குறைந்தது இரண்டு, மூன்று மாத காலம் ஆகிறது. நிலவள வங்கி மூலமாகவோ, அரசாங்கத் துறை மூலமாகவோ அல்லது மற்ற வங்கிகள் மூலமாகவோ கடன் பெற வேண்டுமென்றால் உள்ளூர் கிராமக் கர்ணத் திடம் அத்தாட்சி பெறவேண்டும். அப்போதுதான் கடன் பெற முடியும். இதை விரைவில் பெற ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு கார்டு கொடுத்துவிட வேண்டும். அந்தக் கார்டில் அந்த விவசாயியினுடைய நிலத்தின் விஸ்தீரணம், அதன் மதிப்பு, ஏற்கனவே பெறப்பட்ட கடன் தொகை, எவ்வளவு தொகை மேலும் தரலாம் என்ற விவரங்களைக் குறிப்பிட வேண்டும். அப்படி ஒரு கார்டு இருந்தால் வருமான வரி கட்டக்கூடிய நிலையில் விவரங்களை அறிய அந்தக் கார்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கரும்பு பயிரிடுகிறார்களா, அல்லது வாழை பயிரிடுகிறார்களா அல்லது நெல் பயிரிட்டிருக்கிறார்களா என்ற விவரங்களையும் அந்தக் கார்டில் பதிந்து எந்த அளவுக்கு கரும்போ மற்ற விளை பொருள்களோ பயிரிடுகிறார்களோ அந்த அளவுக்கு வருமான வரியைக் கணக்குப் பார்க்கவும் உதவியாக இருக்கும். அந்தத் திட்டத்தை விரைவில் அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு அலுவலகமும் பரவலாக பல இடங்களில் அமைந்திருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் அருகிலேயே எல்லா அலுவலகங்களும் இருந்தால்தான் விவசாயிகளும், பொதுமக்களும் நல்ல முறையில் பயன் பெற ஏதுவாக இருக்கும். இன்று எல்லா மாவட்ட அலுவலகங்களும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சென்னையில்



வணிக வரி கட்டடத்தைத் திறந்து வைக்கும்போது சொன்னார்கள். இதுபோன்ற கட்டடங்கள் அதிகமாவதன் மூலந்தான் வாடகையாக அரசாங்கம் கொடுக்கக் கூடிய பணத்தை மிச்சப்படுத்த முடியும் என்று சொன்னார்கள். முதல்வர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் கூட அப்படிச் சொன் னார்கள். இதற்காக தனியாக ஒரு திட்டத்தை வகுத்து ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாவட்டத்தில் அலுவலகக் கட்டடங்களைக் கட்டும் திட்டத்தை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை பத்து, பதினைந்து ஆண்டுக் காலமாக தலைவாசலில் ஒரு பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமென்று கோரி வருகிறோம். இந்த நிதி ஆண்டிலே அதைத் திறப்பதற்கு வேண்டிய நிலையை உருவாக்கியதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அந்தத் தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக அரிசன மக்கள் நல்ல முறையில் வாழவும் அவர்களுடைய நிலத்திற்குப் பட்டா பெறவும் வழிவகுக்கக்கூடிய முறையில் இந்த மான்யக் கோரிக்கை அமைந்திருப் பதால் மீண்டும் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: உப தலைவர் அவர்களே, நான் வீட்டு வசதியைப் பற்றிக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

வீட்டு வசதி போர்டு ஏற்பட்ட பிறகு பல வீட்டு வசதித் திட்டங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். லாண்ட் அக்விசிஷன் ஃபார் ஹவுசிங் என்று கூறப்பட்டிருப்பதில் நிலங்களின் விலை ஏறுமல் தடுப்பதற்காக அது வழியாக இருக்கும் என்றுதான் செய்யப்படு கிறது. ஒன்பது, பத்து, பதினொரு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்ட மனைகள், கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் இன்னும் சொந்தக்காரர்களுக்கு ரிஜிஸ்டர் செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. Housing Board யாரிடத்தி லிருந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்தார்களோ அந்த நிலச் சொந்தக்காரர்கள் ஹையர் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டுக்குச் சென்ற தாகவும் இன்னும் தீர்ப்பு கொடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த நிலைமையைத் தீர்க்க இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ஆகும் என்று தெரியவில்லை. அரசு இதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்றும் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த வருமானம் பெறுபவர்கள், நடுத்தர வருமானம் பெறுபவர்கள் என்றெல்லாம் சிட்டி இம்ப்ருவ்மெண்ட் டிரஸ்ட் இருந்தபோதே பிரித்து ஆர்டர் ஆப் பிரிபான்ஸ், அக்கார்டிங் டு ப்ரிபான்ஸ்' என்ற முறையில் கொடுத்தார்கள்.

உள்ளபடியே வீடு இல்லாதவர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் லோ இன்கம், மிடில் இன்கம் என்று பிரையாரிடி கொடுத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டுத்தான் டாக்டர்ஸ், அட்வகேட்ஸ் ஆகியவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது ஒரு லாட்டரி முறையை வைத்ததன் காரணமாக ஏற்கனவே இரண்டு வீடு, மூன்று வீடு என்று வைத்திருக்கக்கூடியவர்களுக்கே ஹவுசிங் போர்டு மூலமாக வீடு கொடுக்கப்படுகிறது. முன்பு மிகக் குறைந்த வருமானமுடையவர்களுக்கு Last Grade Servants பியூன்கள், ஆர்டிசான் போன்றவர்களுக்கு வீடு கொடுப்பதற்கு ஒரு ஸ்கீம் இருந்தது. இப்போது என்னவாயிற்று அந்த ஸ்கீம் என்று தெரியவில்லை. அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எவ்வளவு பேர் இந்த அடிப்படையில் வருகிறார்கள் என்று ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்து அந்த அடிப்படையில் இதுவரை எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்னும் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இதிலே குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆர்டிசான் ஸ்கீமில் நிலம் கொடுத்து வீடு கட்டப் பண வசதி இல்லாத காரணத்தால் அதைத் திரும்ப எடுத்துக்கொள்ளப் போவதாக ஹவுசிங் போர்டிலிருந்து உத்தரவு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. நாமே நிலத்தைக் கொடுத்துவிட்டு அவர்களுடைய நிலைமையைத் தெரிந்து கொண்டு திரும்ப எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. அரசாங்க ஊழியர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுப்பது போன்ற அடிப்படையில் Artisan Scheme -ல் கொடுத்த நிலத்தில் இரண்டாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் வீடு கட்ட வேண்டும் என்று ஒரு முறையை ஏற்படுத்தி அந்தப் பணத்தை அவர்களுக்கு கடனாக கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

அடுத்து ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீமை எடுத்துக்கொண்டால் எப்படி நாம் சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீமை மற்ற பகுதிகளுக்கும் எக்ஸ்டெண்ட் செய்தோமோ அதே போன்று மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெனமெண்ட்ஸ் விட்டிருப்பதில் நிறையக் கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. டெனமெண்ட்ஸ் இருக்கக்கூடிய இடங்களில் பல சங்கங்கள் இருக்கின்றன. நான் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று சொல்லவில்லை. பொதுவாக, பல இடங்களில் பல கட்சிகளைச் சார்ந்த சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களுக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ரெகமெண்ட் செய்தால்தான் ஏழைகளுக்கு டெனமெண்ட்ஸ் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது.





திரு. இராம. அரங்கண்ணல் : சகோதரியாருடைய தவறான கருத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பில் இருக்கிறேன். எந்தச் சங்கமானாலும் அல்லது எந்த மன்றமானாலும் சரி, எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி, அதற்காகக் குடிசைமாற்று வாரியம் எந்தவிதமான சலுகைகளும் தருவதில்லை.

முன்பிருந்த குடியிருப்புகளில் ஏராளமானோர் தவறாக அங்கு கொண்டு போய் வைக்கப்பட்டார்கள். அந்த டெனமெண்ட்களை அவர்கள் ஏராளமான விலைக்கும் விற்றுக்கொண்டிருந்தார்கள். குடிசைமாற்று வாரியம் ஏற்பட்ட பிறகு ஒரு நாள் திடீரென்று யார் யார் இருக்கிறார்கள் என்றெல்லாம் பார்த்து புகைப்படம் எடுத்தோம். அப்படி எடுக்கப்பட்டு, யார் யார் எல்லாம் பணம் கொடுத்து ஏமாந்தார்களோ அவர்கள் ஒரு உரிய தொகையை அபராதமாகக் கட்டினால் கொடுக்கலாம் என்று அப்படிக் கொடுத்திருக்கிறோம். புதிய குடியிருப்புகள் புகைப்படம் எடுக்கப்பட்டபோது யார் யார் குடியிருந்தார்களோ அவர்களுக்கு மட்டும் ஒதுக்கப்படுகிறது என்பதை அவர்களுக்கு தகவலுக்காகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தவறான தகவலை நான் ஒருநாளும் தரமாட்டேன். எனக்கு இந்த ஹௌசிங் போர்ட் பற்றி நன்கு தெரியும். டெனமெண்ட்ஸ் பற்றியும் நன்கு தெரியும். சி.ஐ.டி. ஆரம்பித்த காலத்திலிருந்து அதில் எனக்கு ஒரு தொடர்பு இருந்திருக்கிறது. ஆகவே நான் தவறான தகவலைக் கொடுக்கமாட்டேன். எங்கள் ஆட்சிக் காலத்தில் படம் பிடிப்பதற்கு அந்த மக்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நாங்கள் என்ன கிரிமினல்களா? எங்களைப் படம் பிடிக்கவேண்டாமா என்று பெரிய ஆட்சேபனைகள் எல்லாம் ஏற்பட்டன. We wanted to rectify it and then regularise it. ஏற்கனவே tenements- இல் இருந்தவர்கள் சப்-டெனன்ட்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். வாடகை பாக்கியை ஏற்கனவே இருந்த டெனன்ட்ஸ் கொடுக்க வேண்டும். அது ரூ. 300, ரூ. 400 என்று இருக்கிறது Sub-tenants ஆக வந்தவர்களும் ஏழைகள், அவர்களுக்கும் சலுகை அளிக்க வேண்டும், அந்த வகையில்தான் குறைந்த வாடகை வாங்குகிறோம். ஆகவே இப்போது sub-tenants- களை மொத்தமாக ரூ. 300 அல்லது ரூ. 400 கட்ட வேண்டுமென்றால் அவர்களுக்கு பொறுப்பு இல்லாவிட்டாலும் அதைக் கொடுத்தால்தான் அங்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவு ஒன்று இருக்கிறது. அப்படி இருப்பது தவறு.

திரு. இராம. அரங்கண்ணல் : இப்படிப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அவைகளைத் தன்னுப்படி செய்வதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது. அந்தந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில்

தன்னுபடி செய்து கொடுக்கிறோம். சிலவற்றை குறைத்தும் கொடுக்கிறோம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முறையில் அவைகளைப் பார்த்துச் செய்யும் வகையில் தீர்க்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஒன்றிரண்டு தகாறாக இருந்தால் பரவா யில்லை. ரெகுலரைஸ் செய்கிற அளவிற்கு குறைந்தபட்சம் 75% பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது ஹௌசிங் போர்ட் அதிகாரிகளுக்கு தெரியும். இதற்கு முன்பு இருந்த வாடகைக்காரர்கள் வாடகை கொடுக்காத காரணத் தினால் இவர்களை வற்புறுத்தி வாங்குவது நல்லதல்ல, சரியுமல்ல. அவர்களால் அதைக் கொடுக்கவும் இயலாத நிலை இருக்கிறது. ஒரு ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுத்து, அவர்களுக்கு தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். ரெகுலரைஸ் செய்ய வேண்டும். பின்பு தொடர்ந்து அவர்கள் வாடகை செலுத்தவில்லை என்றால், நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால் அவர்களுக்கு பொறுப்பு இல்லாததைக் கொடுக்கச் சொல்வது சரியல்ல. அடுத்தபடியாக, தனியார் துறையில் கொடுக்கப் படுகின்ற சலுகையை 1969-70-ல் இந்தச் சலுகையை யாரும் பெறவில்லை. 1971-72-லும் தனியார் துறையில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் பணிக்குச் செய்யும் வசதியை யாரும் பெற வில்லை. காரணம் தெரியவில்லை. தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. ஆனால் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்காத ஒரு நிலை இருக்கிறது. ஏன் அவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று தெரியவில்லை. ஒருவேளை இந்தக் கடன் சதவிகிதம், உதவியின் சதவிகிதம்தான் காரணமா என்பதை அறிய விரும்பு கிறேன். 1972-73-க்கு டார்ஜெட் 310 வீடுகள் கட்டி முடிக்கப்படுமென்று எதிர்ப் பார்க்கப்படுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்றும் மற்றும் உள்ள திட்டங்களை எல்லாம் நல்லமுறையில் செய்து, நான் கூறியவற்றில் சற்று அதிகக் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. எ. வஹாப்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உணவு-வருவாய் மானியத்தை வரவேற்று பேசமுகத்தான் நான் என் உரையைத் துவக்குகின்றேன்.

குற்றம் செய்தவன் தன் மகனேயினும் கொல்லப்பட்டது கன்றேயாயினும் மற்றவர்கள் போற்ற மனு நீதி செய்த கொற்றவன் சோழன் கொடி வழி வந்த தமிழக அரசின் தனி நீதி மனு நீதி, வாழ்க! அதை நான் வரவேற்கிறேன்.



நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் இன்றைய தினம் கிராமப்புறங்களில் இருப்ப வர்கள் எல்லாம் இந்த மனு நீதித் திட்டத்தினால் நல்ல பலனை அடைந்து வருகிறார்கள் என்பதால் அதை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஜமாபந்திமுறை தொன்றுதொட்டு இந்த நாட்டில் நடத்தப் பட்டு வருகிறது. அதுவும் மனு நீதித் திட்டம் போன்றதுதான் என்றாலும் அம்முறையை ஒழிக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை அரசு முன்பு எல்லாம் ஆராய்ந்ததாக அறிகிறேன். அப்படியிருந்தால் அந்த ஜமாபந்தி முறையை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மனு நீதித் திட்டம் என்பது மாதமொரு முறை அதிகாரிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவரையும் சந்திக்கிற வாய்ப்பாகும். அதேபோன்று கிராம அதிகாரிகளும் மற்றவர்களும் ஆண்டுக்கு ஒருமுறை சந்திக்கும் நல்ல வாய்ப்பும், யோசனைகள் சொல்வதற்கு நல்லதொரு நேரமுமாகும் இந்த ஜமாபந்தி முறை.

நில ஒப்படை விஷயத்தில் தமிழக அரசு செய்வதைப் போற்றாத, வாழ்த்தாத ஏழை மக்கள் இருக்கமுடியாது. ஏறக்குறைய நாலரை லட்சம் ஏக்கர்களுக்கு அதிகமாக இன்றைய தினம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்களிலிருந்து காண்கிறோம். ஏழை மக்களுக்காக, சமுதாயத்தில் ஒதுக்கப் பட்டுக் கிடக்கிற மக்களுக்காக இந்த அரசு எடுத்துவருகிற முயற்சிகளைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழைகளுக்குக் கொடுக்கப்படுகிற பட்டாக்களை சில நேரங்களில் சில பணக்காரர்கள் வேறு போர்வை போர்த்தி மோசடி செய்து பெறுகிற தன்மை எல்லாம் இருக்கின்றன. அப்படிப்பட்ட தொரு சம்பவத்தை அமைச்சர் அவர்களிடம் சொன்னபோது அதைத் திரும்பப் பெறும் உரிமை அரசுக்கு இருக்கிறது, பெற்றுக்கொள்வோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிச் சிலர் பெற்றிருக்கிறார்கள், அவற்றைத் திரும்பப் பெற்று உண்மையில் யார் யார் ஏழைகள் என்று பார்த்து பட்டா வழங்கும் ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்னை. இராணிப்பேட்டை என் தொகுதி. அங்கு தௌலாக் என்று சொல்லப்படுகிற இடத்தில் ஏறத்தாழ ஒன்பது லட்சம் மாங்கன் கொண்ட பெரியதொரு தோட்டத்தை உற்பத்தி செய்து அதில் பலவகையான கனி வகைகளை உற்பத்தி செய்து தனது உல்லாசத்திற்காக அதைப் பயன் படுத்திக்கொண்டாலும் இப்போது அதை கோவிந்ததாஸ் என்பவர் ஏலத்திற்கு எடுத்திருக்கிறார்கள்.

இன்று பாலாற்றில் நீர் வராத காரணத்தினால் அந்த ஒன்பது லட்சம் மாங் கன்றுகளும் அழிந்து, பிறகு 1950-ல் ஏற்பட்ட வறட்சி காரணமாக அந்த மாங்கன் எல்லாம் விறகாக்கப்பட்டு அந்த இடம் இன்று விவசாய மக்கள் பயிரிட்டிருப்ப

நிலமாக சுமார் 1,500 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதற்கு முன்பு இயற்றப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அது வாராமல் தனிப்பட்ட ஒரு நபருக்கு சொந்தமாக இருக்கும் அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்துக்கொண்டு அவருக்கு கிஸ்தி கட்டிக்கொண்டு வருகிறார்கள். அந்த நிலங்களின் உரிமை அவற்றைப் பயிர் செய்து வருகிறவர்களுக்கு வேண்டுமென்று கேட்கப்படுகிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்க முடியாவிட்டாலும் கூட, ப்ரீ ஹோல்ட் லான்ட்ஸ் என்ற அடிப்படையில் இருக்கிறது. இதுபற்றி நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும், சட்ட அமைச்சர் அவர்களிடமும் நேரடியாகச் சொல்லி இருக்கிறேன். அவர்கள் ஆவன செய்து அவருக்கு நஷ்ட ஈடு கொடுத்து அல்லது உழவர்களிடம் நஷ்ட ஈடு பெற்று அதை அந்த முதலாளிக்குக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு அந்த நிலத்தை ஒப்படை செய்ய ஒரு சட்டம் இயற்றி அந்த மக்களுக்கு உதவுவதற்கு வழிவகை செய்து தர வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். விளைச்சல் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். காவிரித் தண்ணீரை காலால் மடை தள்ளிவிட்டு பயிர் செய்கிற தஞ்சை செய்கிற விளைச்சலுக்கு சமமாக, அதற்குக் குறையாத அளவுக்கு, வடாற்காடு மாவட்டத்தில் உற்பத்தியிருக்கிறது. அங்கே நாங்கள் மின்சாரப் பம்புகள் போட்டு, கிணற்றிலிருந்து நீரை இறைத்து, ஏரிகள் மூலமாக கிடைக்கிற நீரைக்கொண்டு விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம். அங்கே எந்த ஆறும் இல்லை. பாலாற்றில் தண்ணீர் இல்லாவிட்டாலும், ஆற்று ஓரம் ஊறும் ஊற்றால் அங்கே இருக்கும் நிலங்களில் எல்லாம் நல்லவிதமாக பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். இதனால் அந்தப்பகுதியில் பாலாறு பேசின் பாசனச் சட்டம் என்று ஒரு சட்டம் வைத்திருக்கிறார்கள். அந்தப்பாலாறு பேசின் சட்டத்தை எடுத்துவிட்டால் அந்தப் பகுதியில் தஞ்சையை விட அதிகமாக உணவு உற்பத்தி செய்து இந்த அரசாங்கத்திற்கு தர வடாற்காடு மாவட்ட மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 30 மைல் வரை இந்தப் பாலாறு பாசனச்சட்டம் வருகிறது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கூடச்சொன்னார்கள். ஐவ்வாது மலை வரை இந்த பாலாறு பேசின் பாசனச் சட்டம் வருகிறது என்று, அதை ஆராய்ந்து, அதை நல்லவகையில் மாற்றித் தந்தால், தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியில் தஞ்சையை மிஞ்சாவிட்டாலும், தஞ்சைக்கு சமமாக உற்பத்திசெய்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.





நில ஒப்படை விஷயத்தில் நான் ஒன்றைக்கூற விரும்புகிறேன். பொதுப் பணித்துறைக்குச் சம்பந்தப்பட்ட இடங்களில் ஏழைகள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறைக்கு தேவையில்லாத ரோடு புறம் போக்குகளில் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கும் ஏழைகளுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித்துறைக்கு தேவையிருந்தால் எடுத்துக்கொள்ளட்டும். இதை சம்பந்தப் பட்ட அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு, அந்த இடத்தில் உள்ள மக்களுக்கு நிலப்பட்டா செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குக் கூறவேண்டுமென்றால், வந்தவாசி பகுதியில் இப்படி ஒரு இடம் இருக்கிறது. அங்கே இருக்கிற மக்கள் மகஜர் கூட அனுப்பியிருக் கிறார்கள். வந்தவாசிக்கு அருகே பாதிரி கிராமத்தில் இருக்கிற களத்துப்புறம் போக்கு ஒரு ஏக்கர் இருக்கிறது. அந்த பகுதியில் நெசவாளர்கள் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை தங்களுக்கே ஒப்படை செய்து தரவேண்டுமென்று கேட்டார்கள். அரசு உத்தரவு போட்டது. அங்கே வந்து பார்த்த அதிகாரிகள் ஒரு முடிவைச் சொன்னார்கள். ஒரு பாதி இடத்தை ஏழைகளுக்கு ஒப்படை செய்து விட்டு, இன்னொரு பாதியை கோவிலுக்கு பட்டா செய்து விட்டார்கள். கோவிலுக்கு எப்படி சம்பந்தப்படுத்தினார்கள் என்றால், எங்கள் ஊரில் மயானக்கொள்ளை என்று நடத்துவார்கள். அவர்கள் அதை நடத்திவிட்டு, முடிவிலே அந்த இடத்திலே வந்து கூடுவார்கள். ஆகவே, கோவிலுக்கு தரவேண்டுமென்று சொன்னார்கள். அந்தப்பகுதியில் ஏழைகள் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை சந்திக்க இருக்கிறோம். மிகவும் கருணையோடு இந்தப் பிரச்னையைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பகுதியில் இருக்கும் மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் 55 சென்ட் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இங்கே வாழ்கிற மக்கள் ஏழை நெசவாளர்கள். புறம்போக்கில் முஸ்லீம்கள் வீடு கட்டியிருக் கிறார்கள். அதை கோவில் இடம் என்று அதிகாரிகள் மாற்றிவிட்டதால் பல்விதமாக சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். கோவில் நிலத்தை முஸ்லீம்கள் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டார்கள் என்று சொல்வதற்கு வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் புறம்போக்கில் கட்டிய இடத்தைத்தான் கோயில் புறம்போக்காக மாற்றி விட்டார்கள். அந்த நோக்கத்தில் இந்தப் பிரச்னையைப் பார்க்கவேண்டு மென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 13

குத்தகைக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க நிலச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறோம். இதனால் குத்தகைதாரர்கள் பயனடையக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால் சிறு விவசாயிகள், சிறு நிலம் வைத்திருப்பவர்கள் இதனால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படாத நிலையில் இதில் சில திருத்தங்கள் செய்யவேண்டும். குத்தகைதாரர்கள் அத்தனைபேரும் குத்தகை தரவேண்டாம் என்ற உணர்வுக்கு வந்துவிட்டால், எதிர் காலத்தில் அந்தக் குத்தகை இல்லாமல் போகும் நிலைமை யேற்பட்டுவிடும். அப்படிச் சிறு நிலங்கள் 4-5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் பம்பு செட்டு போட்டு, ஏரியல் ஸ்பிரே செய்து பயிரிடுகிற நேரத்தில், அவர்களுக்கு குத்தகை இல்லையென்றாகிவிட்டால் மிகவும் கஷ்டமாக இருக்கும். ஏனென்றால் பம்பு செட்டு போடவும், ஏரியல் ஸ்பிரேயினுக்கான செலவுக்கும் பட்டாதாரர்கள் தான் பணம் செலுத்தவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சிறு நில பட்டாதாரர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு அளித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் பகுதிகள் என்று கூறுகிற நேரத்தில் வடார்காடு மாவட்டம் அதையொட்டியிருக்கிறது. உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தைக் கருத்தில் கொண்டு, இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீடுகள் போன்றவைகளைத் தரவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப்பொறுத்தவரையில் கரும்பு மிகவும் முக்கியமான உற்பத்திப் பொருளாக இருக்கிறது. அதற்காக அளிக்கப்படுகின்ற அந்த விலையை அதிகரிக்கவேண்டுமென்று மத்திய அரசோடு இந்த அரசு போராடி வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் சர்க்கரை விலையைப் பற்றி சொல்லுகிற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக அதைப்பற்றிச்சொன்னார்கள். சர்க்கரை விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், வெளியே விற்கும் விலை அதிகமாக இருக்கிறது. சர்க்கரைக்கு கிராக்கி அதிகம் இருக்கிறது என்ற அடிப்படையில் வைத்து ரூ. 2 என்று இல்லாமல் இன்னும் கூடுதலாகக் கொடுக்கலாம். வேறு மாநிலத்தில் கரும்பு ஒரு டன் ரூ. 100 விலை கொடுக்கிறார்கள், வருகிற ரெக்கவரி குறைவாக இருந்தும் கூட இப்படிக் கொடுக்கிறார்கள். உத்திரபிரதேசத்தில் கொடுக்கிறார்கள். இதைப்பரிசீலனை செய்து, தமிழகத்தில் கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கும் லாபம் ஏற்படுகிற விதத்தில் அந்த விலையை உயர்த்தித் தரும்படியாக மத்திய அரசோடு போராடிக்கேட்டு வாங்கித்தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்



1972 மார்ச் 13]

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் அறிக்கை மீது என் கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நில வருவாய்த்துறை சம்பந்தமாகவும் உணவுத்துறை சம்பந்தமாகவும் தன்னுடைய அறிக்கையிலே விரிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் வருவாய்த்துறை என்று சொல்கிறபோது, திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்பிறகு, ரெவின்யூ போர்டை கலைத்து விடுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ரெவின்யூ போர்டு கலைக்கப்பட வேண்டுமென்று பல்லாண்டுகாலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவர் பாக்கி விடாமல் பேசி வந்திருக்கிறோம். இந்த ரெவின்யூ போர்டு இருப்பது நந்தி சாமி தரிசனம் செய்யப்போகிறவர்களுக்கு தடையாக இருப்பது போல் இருந்து கொண்டு வேகமாக வேலைகளை நடத்த முடியாமல் செய்து விடுகிறது. இதை ஆராய்ந்த பின்னர் தான், இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்கள் அதை ஒழிக்கவேண்டுமென்று சொன்னார்கள். இதை ஒழிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்தபிறகும், அதை பரிசீலிப்பதற்காக ஒரு குழுவிடம் இந்தப் பிரச்னையை விட்டு இருப்பது நாளுக்கு நாள் தள்ளிப் போட்டுக்கொண்டுபோவதற்கான ஒரு காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. உறுதிமொழிக்குழுவின் அறிக்கையிலே கூட இது சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. அப்படி அஷ்யூரன்ஸ் கமிட்டி சுட்டிக்காட்டியிருக்கிற நேரத்தில் உடனடியாக இந்த ரெவின்யூ போர்டை கலைப்பது தான் சரியானதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் சிபார்சு செய்து, இங்கே ரெவின்யூ போர்டில் முடிவு செய்தபிறகு தான் ஒரு காரியத்தைச் செய்ய முடிகிறது. இந்த மாதிரியான காலதாமதத்தை தவிர்க்கலாம். ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் தான் கலெக்டர்களாக வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு போதுமான அதிகாரங்கள் கொடுத்து, நல்ல விதத்தில் பணியாற்ற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில ஆர்ஜிதம் போன்ற வேலைகள் மிகவும் காலதாமதம் ஆவதற்குக் காரணம், பத்தாம்பசலித்தனமாக நாம் பிரிட்டிஷ் காலத்தில் ஏற்பட்ட விதிமுறைகளை பின்பற்றி வருவதால் தான். ஆகையால் தான் அந்த மாதிரியான நடவடிக்கைகள் துரிதமாக நடத்த முடியவில்லை. இன்றையதினம் இருக்கும் ஜனநாயக முறைக்கேற்றப்படி புதிய விதி முறைகள் ஏற்படுத்த

வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன். இம்மாதிரி அந்த விதிகளைமாற்றுவதன் மூலம் வேகமாக நில ஆர்ஜிதம் செய்து மக்களுக்குத் தேவையான காரியம் செய்யமுடியும். உதாரணமாக ஒரு கிராமத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு உதவியாக ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றால் நிலம் தேவைப்பட்டால் அந்த நிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்காக அதிகாரங்கள் அதிகாரிகளுக்கு இருந்து கொண்டிருக்கிறதா ? இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற விதிகள் இதற்குத் தடையாக இருந்து கொண்டு இருக்கின்றன. அந்தத் தடைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

நிலவரி ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 5 ஏக்கரா உள்ள நிலங்களுக்கு நிலவரி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மக்கள் இதை நம்பினாலும், 5 ஏக்காராவிற்கு நிலவரி ரத்து, புஞ்சை நிலமாக இருந்து நஞ்சை நிலமாக மாற்றியவர்களுக்கு இந்த வரி ரத்து இருக்கிறது. வியாக்கியானத்தைப் பார்க்கும்போது 5 ஏக்கரா நஞ்சை நிலமாக வைத்திருக்கக் கூடியவர்களுக்கு நிலவரி இருக்கிறது. தயவு செய்து நம்முடைய அரசாங்கம் 5 ஏக்கரா நஞ்சை நிலம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கும் நிலவரி ரத்து செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புஞ்சை நிலத்தை நஞ்சை நிலமாக ஆக்கியவர்களுக்கு அந்தச் சலுகை. அந்த அடிப்படையில் நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கு புஞ்சை அடிப்படையில் தீர்வை வசூலிக்கப்படுகிறது. நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கு அது ரத்துச் செய்யப்பட்டது உண்மை. புஞ்சையை நஞ்சையாக ஆக்கியவர்களுக்கு புஞ்சை அடிப்படையில் பேசிக் டாக்ஸ் போடப்பட்டு இருக்கிறது. 5 ஏக்காராவிற்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்த பேசிக் டாக்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : என்னுடைய வேண்டுகோள் நஞ்சை நிலத்திற்கு 5 ஏக்காராவிற்கு வரி ரத்துச் செய்யப்பட வேண்டும் என்பது தான். இதைத் தான் நாம் மக்களிடம் சொன்னோம். மக்கள் அதை நம்பினார்கள். ஆகவே புஞ்சை நிலத்திலிருந்து நஞ்சை நிலமாக மாற்றிய நிலங்களுக்கு உள்ள அடிப்படை வரியும், நஞ்சை நிலத்திற்கு உள்ள வரியும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நில வினியோகம் பற்றி பார்க்கும்போது நம்முடைய அரசு பொறுப்பு ஏற்ற பிறகு 4 லட்சத்து 6 ஆயிரம் ஏக்காராவை எடுத்து 2 லட்சத்து 2 ஆயிரம் பேர்களுக்கு வினியோகம் செய்திருப்பது மிக முன்னேற்றகரமான காரியமாகும். இருந்தாலும், இன்றைய தினம் நில வினியோகத்தில் தவறான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிலத்தைக் கொடுக்கும்போது நிலத்திற்குச் சம்பந்தமில்லாதவர்களுக்கு நிலம் அளிக்கப்படுகிறது. நிலமில்லாத ஏழைகள் என்ற அடிப்படையில் இன்றைய தினம் நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நிலம் யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நிலத்தில் உழுது பயிர் செய்யாதவர்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். அதன் காரணமாக கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய உழுகிறவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. நேரிடையாக நிலத்தில் இறங்கிப் பாடுபடாதவர்களுக்கு நிலம் கொடுக்கப்படுகிறது. இதனால் உழுகிறவர்களுக்கு நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதை எப்படி மாற்றுவது என்பதை அரசாங்கம் ஆலோசனை செய்து நேரிடையாக உழுது பயிர் செய்யக்கூடியவர்களுக்கு நிலம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சென்னையில் உள்ள ஒருவர் தனக்கு நிலம் இல்லை என்று சொல்லி தஞ்சையில் உள்ள நிலத்தைப் பெரிதும் முயற்சி செய்து பெற்று விடுகிறார். இம்மாதிரியாக நிறைய நிலங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. எனவே, கிராமத்தில் உள்ள நிலங்களை வினியோகிக்கும்போது கிராமத்தில் சர்வகட்சிக் கமிட்டி அல்லது சர்வ ஜன கமிட்டி அமைத்து இந்தக் கமிட்டியின் மூலம் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி நிலத்தை வினியோகம் செய்தால் உண்மையில் நல்ல பலன் கிடைக்கும். அப்போது தான் நேர்மையாகவும், நாணயமாகவும் நில வினியோகம் நடைபெற முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே யார் உழைக்கக் கூடியவர்கள், யாருக்குக் கொடுத்தால் அந்த நிலத்தை உரிய முறையில் பண்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்குவார்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்கு நில வினியோகம் செய்யப்படவேண்டும். இல்லை என்று சொன்னால் இந்த நிலங்களெல்லாம் நிலத்திற்குச் சம்பந்தமில்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அந்த நிலத்திற்குப் போகின்ற காலத்தில் வேறு ஒருவரிடம் நிலங்கள் இருக்கும். இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படும். இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் உண்மையிலேயே உழுகிறவர்கள் கையில் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தாலுக்காவில், தஞ்சை மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கரா நிலம் 15 ஆண்டு காலமாக மூன்று போகம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அந்த நிலங்கள் வெள்ளைக்காரன் காலத்தில் யாருக்கும் அடமானம்

அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கினாலும், பாங்கியிலிருந்து 4 சத விகிதம், 5 சத விகிதம் கடன் வாங்கினாலும், வட்டிக்காரனிடமிருந்து 9 சத விகிதம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இந்த வட்டியைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு 10, 20 ஆண்டு காலத்திற்குள் திருப்பித் தருகின்ற முறையில் கடன் கிடைப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக கிராம அதிகாரிகளைப் பற்றி ஆலோசனை கொடுக்கிற காலத்தில் தஞ்சாவூரிலே அத்தனை பேர்களும் ஏகோபித்து வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே சொன்னோம். இவர்களை இப்படியே விட்டுவைப்பது நல்லதல்ல. இதனால் பல வேலைகள் தடைபடுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். இதைப் பரிசீலனை செய்வதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்களையெல்லாம் முழு நேர ஊழியர்களாக, அரசாங்க ஊழியர்களாக ஆக்கி, அவர்கள் செய்கிற தவறுகளுக்காக தண்டிப்பதா அல்லது ஊரை விட்டு மாற்றுவதா, எப்படிச் செய்வது என்பதைப் பற்றியெல்லாம் யோசித்து நல்ல நடைமுறைகளை வகுத்தால் அதன் மூலம் இன்றைய தினம் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்குவதற்கு முடியும். இல்லையென்று சொன்னால் நமது சர்க்காருடைய தலைவிதியை ஒழுங்காக முடிக்கிற ஆற்றல் நம்முடைய கிராம அதிகாரிகளுக்கு இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு அதற்கு ஏற்ற முறையில் உத்திரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு ஏறக்குறைய 10 மானியங்களை ஒரே நாளில் திணித்து, ஏதோ பேசுகிறவர்கள் சுருக்கமாகப் பேசுவது, அதற்குப் பதில் சொல்வது என்ற முறையிலே ஒரு பெயர் செய்கிறோம். இந்த நிலைமையிலே என் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதை நான் திணித்ததாகச் சொல்கிறார்கள். இதை பிஸினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்தது. அவர், அவருடைய தலைவர்களிடத்திலே பேசி இருக்க வேண்டும். அவர்களைக் கேட்காமல் இங்கே வந்து கேட்கிறார்கள். ஏதோ குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே அவங்க என்ன செய்வாங்க. மார்ச் மாதத்திற்குள் முடிச்சாகணும். இல்லையென்றால் கில்லட்டின் செய்து விடுவீர்கள். அதை முன்னிட்டே இப்படிச் செய்யப்பட்டு

கிறது. வெறும் சம்பிரதாயத்திற்காக இப்படி அவசரம், அவசரமாக இந்த டிமாண்டுகளைப்பற்றி பேசுகிறோம். எங்களுடைய தலைவர்கள் மேல் பொறுப்பைப் போடுகிறார் அமைச்சர், உங்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காக எங்களுடைய தலைவர்கள் இதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இப்படி 10 டிமாண்டுகளையும் ஒரே நாளில் போட்டு விவாதித்தால், நாங்கள் பேச, நீங்கள் பதில் சொல்கிறீர்கள். இது உண்மையிலே நியாயமா என்பதை சட்டசபை மீண்டும் யோசித்துப் பார்க்க வேண்டும். எதற்காக மார்ச் இரண்டாவது வாரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்? பிப்ரவரி செகண்ட் வீக்கிலே வைத்துக்கொண்டால் என்ன? அல்லது மார்ச் முதல் வாரத்தில் வைத்துக் கொண்டிருக்கலாம்.

பிப்ரவரி மத்தியிலாவது சட்டசபையைக் கூட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் விரிவான யோசனைகளைக் கூற வாய்ப்பிருந்திருக்கும். இரண்டு மூன்று நாட்கள் இது பற்றி விவாதித்திருக்க முடியும். எப்படியும் அந்தனை டிமாண்டுகளையும் மார்ச்சு மாதத்திற்குள் நிறைவேற்றி ஆகவேண்டிய நெருக்கடியான நிலையை ஏற்படுத்துகிறீர்கள். பிப்ரவரி முதல் வாரத்திலோ அல்லது 2-வது வாரத்திலோ தொடங்கியிருந்தால் இந்த நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும்.

இன்றைக்கு முக்கியமான பிரச்னையாக இருப்பது உணவுப் பிரச்னை தான். முன்னைவிட உற்பத்தி பெருகி இருக்கிறது என்று கணக்கு காட்டுகிறீர்கள். ஆனால் உணவுப் பொருள்களின் விலை குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. எனவே, இதில் எங்கே குறை இருக்கிறது, எங்கே தவறு நடக்கிறது என்பதை கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம் என்று சொன்னால் போதாது. மக்களின் தேவைக்கேற்ற அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கின்றதா என்பதையும் பார்க்க வேண்டும். அதற்குப் பின்னால் உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ற வகையில் விலைவாசி குறைந்திருக்கிறதா என்று பார்த்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்திக்கு தக்கபடி விலைவாசி குறையவில்லை என்றால் உங்களை மக்கள் நம்பமாட்டார்கள்.

ஒரு சில இடங்களில் படியரிசித் திட்டம் என்று சொல்லி, அதைச் செயல்படுத்தி வந்தீர்கள். அதையும் செயல்படுத்த முடியாமல், கடைசியில் எப்படி கைவிடுவது என்று எண்ணிக் கொண்டிருந்தீர்கள். அதற்கு ஒரு சாக்காக யுத்தம் வந்தது. யுத்த நெருக்கடி இருப்பதால், அதிகம் செலவு செய்யக் கூடாது; பாதுகாப்புக்கு நிதி சேர்க்க வேண்டும்; படியரிசித் திட்டத்தை கைவிட்டால் 4 கோடி ரூபாய் மிச்சமாகும் என்று சொல்லி, படியரிசித்

திட்டத்தை கை விட்டு விட்டீர்கள். இப்பொழுது யுத்தம்தான் நின்று விட்டதே. ஏன் மீண்டும் படியரிசித் திட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது அரிசி விலை உயர்ந்து விட்டது. 2 ரூபாய், 3 ரூபாய், 5 ரூபாய் என்ற அளவுக்கு அரிசி விலை ஏறிவிட்டது. 1 ரூபாய் 85 பைசாவுக்கு நல்ல அரிசி கிடைப்பதாக ஒருவர் சொன்னார். 1 ரூபாய் 55 பைசாவுக்கு அரிசி கிடைக்கிறது என்று ஒருவர் சொன்னார். எப்போதோ கிடைத்திருக்கலாம். இப்போது கிடைப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் ஏழை எளிய மக்கள் அரிசி கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த ஏழை எளிய மக்களுக்காவது மீண்டும் படியரிசித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். படியரிசித் திட்டத்தை கொண்டு வரும்போது, சென்னை, கோவை மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதற்கும் அத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 397 கோடி ரூபாய் வருமானம் உள்ள ஒரு வரவு-செலவுத் திட்டத்தைக் காட்டிவிட்டு, படியரிசித் திட்டத்தை கைவிடுவது நியாயமில்லை; முறையும் ஆகாது. நேர்மையுமல்ல.

அடுத்தபடியாக, இப்போது சர்க்கரைக்கு அட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அட்டையைக் கொண்டு போய் சர்க்கரை வாங்கவேண்டுமானால் 30 நாளும் நடக்கவேண்டும். ஏனென்றால் சர்க்கரை எப்போது கிடைக்கும் என்று கடைக் காரர் சொல்லமாட்டார். நாம் போகக்கூடிய நாளில் என்றைக்கு இருக்கிறதோ அன்று பெற்றுக்கொள்ள வேண்டும். 300 ரூபாய்க்கு மேல் வருமானமுள்ளவர் களுக்கு 4 கிலோ என்றும், 300 ரூபாய்க்குக் குறைவான வருமானமுள்ளவர் களுக்கு 2 கிலோ என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 2 கிலோ சர்க்கரை யும் தினந்தோறும் நடந்தால்தான் கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது. 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் கிடைத்த பலன் கையிலே அட்டையைக் கொடுத்திருக்கிறார்கள் என்று தேர்தல் பிரச்சாரம் செய்தீர்கள். நாங்களாவது 20 ஆண்டு கழித்துக் கொடுத்தோம். நீங்கள் நான்கு ஆண்டுக்குள்ளாகவே அட்டைக் கொடுத்து விட்டீர்களே, அதற்காக நான் பாராட்டுகிறேன்.

எங்கள் ஆட்சியிலே ரேஷன் கடையில் ஒரு கிலோ சர்க்கரை ரூ. 1-20-க்கு, ரூ. 1-30-க்கு கிடைத்தது. ஆனால் உங்கள் ஆட்சியில் 2 ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டியிருக்கிறதே. வெளி மார்க்கெட்டில் வாங்கினால் ரூ. 2-80, ரூ 2-95, ரூ. 3 வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்கள் ஆட்சியில் ரூ. 1-30-க்கு மேல் போகவில்லையே. (சில உறுப்பினர்கள் 7 ரூபாய்க்கு விற்றது). நீங்கள் வேண்டுமென்றே அப்படிக் கூறுகிறீர்கள். எதையும் தாராள மாய் சொல்லக்கூடியவர்கள் இதையும் தாராளமாகச் சொல்கிறீர்களேத் தவிர,



வேறல்ல. எங்கள் ஆட்சியிலே கார்டுக்கு 13 கிலோ, 20 கிலோ கொடுக்கப் பட்டது. ஆனால் உங்கள் ஆட்சியில் கார்டுக்கு 2 கிலோ அல்லது 4 கிலோ தான் கொடுக்கப்படுகிறது.

இன்றைக்கு முன்னைவிட எத்தனையோ சர்க்கரை ஆலைகள் அதிகமாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு சர்க்கரையும் உற்பத்தியாகி இருக்க வேண்டும். ஆனால் விலை மட்டும் ஏறிக்கொண்டே இருக்கிறதே. அது ஏன் என்று யோசித்தீர்களா? மத்திய அரசாங்கத்திலே கரும்பின் விலை டன் னுக்கு 85 ரூபாயாக இருக்கிறது. இங்கே டன்னுக்கு 80 ரூபாய் என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசாங் கத்தை விட நாம் கரும்புக்குக் குறைந்த விலை கொடுப்பதாகச் சொன்னார்கள். அது தவறான தகவல். மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட அதிகமான விலை தமிழ்நாட்டிலே கொடுத்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தமிழ்நாட்டிலே அதிக விலை கொடுக்கப்பட்ட தாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையிலே என்ன நடந்தது என்று பார்த்தால் தெரியும். 90 ரூபாய், 100 ரூபாய் என்று விற்கப்பட்டபோது, சென்ற ஆண்டு கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு 63 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அதிலும் 10 ரூபாயை பிடித்துக்கொண்டுதான் கொடுத்தார்கள். இது என் சொந்த அனுபவம். எனக்குத் தெரிந்த உண்மை. சர்க்காருக்குத் தெரியுமோ தெரியாதோ, அது எனக்குத் தெரியாது. எவ்வளவுதான் சர்க்கரை உற்பத்தி அதிகரித்தாலும், அதன் விலை குறைக்கப்படவில்லை. எதெதற்கு எல்லாமோ போராட்டம் என்கிறீர்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகமான சர்க்கரை வேண்டுமென்று போராடியாவது பெற்றுக் கொடுக்கக்கூடாதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு சென்னையிலே எல்லாப் பொருள்களும் விலை யேறிவிட்டன. மிளகாய், தக்காளி, புளி, பருப்பு, எண்ணெய் எல்லாம் விலை ஏறிவிட்டது. கட்டை கூட விலையேறிவிட்டது. ஒரு குண்டு கட்டைக்கு 5 ரூபாய், 6 ரூபாய்க்குமேல் கொடுக்க வேண்டியிருக்கிறது. சாமானியர்கள், சாமானியர்களுக்காகவே ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்த சாமானியர்கள் வாங்கக்கூடிய சாமான்களுக்கு எல்லாம் இன்றைக்கு விலை ஏறிவிட்டதே. அதைக் குறைக்க ஏதாவது வழி செய்யக்கூடாதா, சாமானியர் களுக்கு நியாய விலையில் சோறு கூட கிடைக்கவில்லையே.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 13]

தயவு செய்து ஒவ்வொரு நடுத்தரக் குடும்பத்திற்கும் அதாவது மாதம் 500 ரூபாய், 600 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய—அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற பருப்பு, புளி, தக்காளி, எண்ணெய், மிளகாய், விறகு—பொருட்களை ஏதாவது ஒரு கூட்டுறவு சொசைட்டி மூலம் நியாயமான விலையில் வழங்கச் செய்து, அதற்கான பணத்தை அவர்கள் சம்பளத்திலிருந்து பிடித்து கொள்ளும் ஒரு ஏற்பாட்டைச் செய்து விடுங்கள். அப்படிச் செய்தால், அந்த மக்களின் துன்பத்தை ஓரளவாவது குறைத்தவர்கள் ஆவீர்கள். எல்லா மாவட்டங்களிலுமே கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கின்றன. எனவே, இந்த ஏற்பாட்டைச் செய்வது சுலபமாகக்கூட இருக்கும். அதைப் பற்றி யோசனை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட காரியங்கள்தான் உண்மையிலே நீங்கள் மக்களுக்குச் செய்யும் நன்மைகள், மற்றப்படி அணைகளைக் கட்டினோம், ரோடு போட்டோம், சாலைகள் அமைத்தோம், மின்சார உற்பத்தியைப் பெருக்கினோம் என்று சொல்வதெல்லாம், ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியிலேயே போடப்பட்ட திட்டங்கள். அவர்கள் தொடங்கி வைத்ததை நீங்கள் முடித்துக்கொண்டிருக்கின்றீர்கள். அவ்வளவுதான். அது கட்டி முடிக்கப்பட்ட வீட்டிற்கு அவ்வப்போது வெள்ளை அடிப்பதைப்போன்றதுதான். சாமானிய மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்கச் செய்வதுதான் நீங்கள் மக்களுக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி. அதைக்கூட செய்யவில்லை என்றால் உபரி பட்ஜெட் போட்டதிலே பெருமையும் இல்லை; மதிப்பும் கிடையாது.

அடுத்தபடியாக, நில சீர்திருத்தம். இது மிக முக்கியமான அம்சம். இந்த நில சீர்திருத்தத்திலே இன்னும் பல நல்ல திருத்தங்களைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லும் போது கிட்டத்தட்ட 13 ஐட்டங்களாக—கிளாஸ்களாகப் பிரித்திருக்கிறீர்கள். 12 ஏக்கர், 10 ஏக்கர், 8, 9, 7½, 8¼ இப்படி கிளாசிஃபிக்கேஷன் செய்திருக்கிறீர்கள். இது ஒரு பெரிய கன்ஃப்யூஷனாக இருக்கிறது. இதைக் கால்குலேட் பண்ணித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் 'மாதமெட்டிக்ஸில்' எம்.எஸ்.சி. தேர்ச்சிப் பெற்றவரால்தான் முடியும் போலிருக்கிறது. எனவே அந்த ஐட்டங்களைக் குறைத்து ஒரு 4 அல்லது 5 ஐட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில சீர்திருத்தத்தின் மூலம் இப்போது பல விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறீர்கள். இன்னும் பல விதிவிலக்குகளை ரத்து செய்யலாம். உதாரணமாக சவுக்கு மரங்களுக்கு இப்போது விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தேவையா என்பதை புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 13] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இன்றைக்கு கோவில் நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கை ரத்து செய்திருக்கிறீர்கள். காளியம்மன், மாரியம்மன் கோவில் நிலங்களையெல்லாம் விட்டேறு பார் என்று சொல்லக்கூடிய அளவிலே, அந்த நிலங்களை எல்லாம் எடுத்து ஏழை மக்களுக்குக் கொடுக்கப்போவதாக நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து கோவில் நிலங்களில் மட்டும் கை வைக்காதீர்கள். அதை எடுத்துதான் ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டு மென்ற கட்டாயம் இல்லை. அதனால் பக்தர்களின் எரிச்சலுக்குத்தான் ஆளாவீர்களே தவிர, உங்களுக்கு பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்ததால்தான், சிலர் அதிகமான நிலங்களை கோவிலுக்கு எழுதி வைத்திருக்கின்றார்கள். கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அதைக் கண்காணிக்க எச்.ஆர். அண்டு சி.இ.—அறக்கட்டளை இருக்கிறது. அதன் மூலம் சீர் செய்யலாம். அல்லது தனியாக டிரஸ்டிகளை நியமித்து, கண்காணிக்கச் செய்ய லாம். ஏதோ ஒரு நாள் பூஜை செய்துவிட்டு, 365 நாளும் கோவில் சொத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்; அதனால் எடுத்துவிடுகிறோம் என்று சொல்வது முறையல்ல. அதிலே வேண்டுமானால் சில விதிமுறைகளை வைத்துக் கொள்ளலாம். கோவிலை நம்பி இருக்கின்ற அந்த குடும்பத்தின் நலனையும் கருதி, அவர்களுக்கும் ஏதாவது செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. சுப்பையா அவர்கள் பேசும் போது கோயில், மடம் ஆகியவற்றின் நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று சொன்னார்கள். அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர் கம்யூனிஸ்டு. கடவுளைப் பற்றிக் கவலைப்படாதவர். நான் கட்டாயம் கடவுளை நம்புகிறேன். இதில் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்கிறேன். கோயில் நிலங்களை எடுத்து அடுத்தவருக்குக் கொடுத்துவிடுவது, வேண்டியவருக்குக் கொடுத்துவிடுவது, திரு. சுப்பையா விடமே கொடுத்துவிடுவது என்பதை நாங்கள் ஒருநாளும் ஒத்துக்கொள்ள மாட்டோம்.

இன்றையதினம் கோயில் நிலங்களை சாமியா உழுகிறார். யாரோ ஒருவர் கோயில் நிலங்களை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக்கொண்டிருந்தால் அவரிடம் இருந்து நிலங்களை எடுத்து நிலம் இல்லாத பல பேர்களிடம் சாகுபடிக்குக் கொடுத்து கோயில்களுக்குச் சேரவேண்டிய குத்தகை, வாரம் சரியான முறையில் வரும்படியாகச் செய்யுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கிற நிர்வாகத்தை செம்மைப் படுத்துவது, நிர்வாகத்தில் உள்ள ஊழல்களைக் களைவது வேண்டாம் என்று சொல்லவில்லை.

எனக்குத் தெரியும். ஸ்ரீரங்கம் கோயிலுக்கு எத்தனையோ நிலங்கள் இருக்கின்றன. அவற்றை யார் யாரோ கோயிலுக்குக் குத்தகை கொடுக்காமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் எடுக்கத்தான் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருமதி அம்மையார் அவர்களே இரண்டு கருத்துக்களையும் சொல்கிறார்கள். கோயில் நிலங்களையும், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் எடுத்துக்கொள்வதை அழுத்தந் திருத்தமாக மறுப்பதாகச் சொன்னார்கள். அடுத்து சாமி உழுகிறதா, சாப்பிடுகிறதா, யாரோ சிலர் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள், அவற்றை எடுக்க வேண்டும் என்கிறார்கள். எந்தக் கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்பதை விளக்கினால் நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்றைக்கு கோயில் நிலங்கள் சம்பந்தமாக இருக்கக்கூடிய குறைபாடுகளை அகற்றுங்கள் என்றுதான் சொல்கிறேன். அவற்றின் நிலங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்காகத்தான் அறநிலைய அமைச்சர் அவர்களிடம் கூட கோயில் நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன, இன்றைக்கு தனிப்பட்ட முறையில் கோயில்களுக்கு எதுவுமே தராது யார், யார்? சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கண்டுபிடியுங்கள் என்று கேட்கிறேன். கோயில் நிலங்களை தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாக எடுத்துக்கொடுத்து கோயிலை ஒன்றுமில்லாததாக ஆக்கிவிடக்கூடாது என்று சொல்கிறேனே தவிர நீங்களே கோயில் நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்து கோயில்களுக்கு குத்தகை ஒழுங்காக வந்து கொண்டிருக்கும்படி செய்யவேண்டும் என்பதுதான் என் கருத்து. முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, வீட்டிலுள்ள கிருஷ்ண விக்கிரகத்துக்கு பூஜைக்காக என டிரஸ்ட் வைத்திருந்தால் பூஜைக்கு அவ்வளவு வேண்டுமா? அவர் பேரில் வீட்டில் உள்ளவர்கள் சாப்பிடுகிறார்களா என்பதை கண்டுபிடித்து ரத்து செய்வதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் காளியம்மன், மாரியம்மன் கோயில்களுக்கு எல்லாம் இருக்கிற நிலத்தை எடுத்துக்கொண்டு விடக்கூடாது. சைட்ரியாடிக்காக இன்றைக்கு அவர்கள் வேலை செய்கிறார்கள். உங்களுக்குப் புரியாது.

திரு. ஆ. கு. சுப்பையா: நான் கம்யூனிஸ்டு. அவர்கள் காங்கிரஸ்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உண்மைதானே.

திரு. ஆ. கு. சுப்பையா: உண்மைதான். நாங்கள் கோயில் நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்கிறோமே தவிர கோயில்களில் பூஜை, வழிபாடு வேண்டாம் என்று சொல்லவில்லை.



6 காலத்திற்குப் பதிலாக 8 காலம் வேண்டுமானாலும் பூஜை நடக்கட்டும். அதற்காகும் செலவை அரசாங்கமே நேரிடையாக பணமாகக் கொடுக்கவேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அடுத்தபடியாக நில உச்சவரம்புச் சட்டம் என்பதாக 60 ஐ 30 ஆக்கி, 30 ஐ 15 ஆக்கி பிறகு 5 ஆக்கி சைபர் கூட ஆக்கிவிடலாம். ஆனால் இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை அதிக பட்ச வரம்பு மட்டுமல்ல—ஒரு விவசாயிக்கு குறைந்தபட்சம் அந்தத் தொழிலிலேயே மட்டும் இருந்து தன் குடும்பத்தை மற்றவர்களைப்போல நடத்திக் கொள்வதற்கு மினிமம் தேவையான அளவு நிலம் என்ன என்பதையும் கூட இந்த நிலச் சீர்திருத்தம் என்கிற அடிப்படையில் ஆராய்ந்து நிர்ணயித்தாக வேண்டும். அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கு அதிகமான பேர்களிடம் இருந்து நிலத்தை எடுக்கிறபோது இந்த மினிமம் அளவுக்காவது இவர்களிடம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு, நாம் கிராப் இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தியிருக்கிறோமா, காட்டல் இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தியிருக்கிறோமா? இவற்றை எல்லாம் கூட நிலச் சீர்திருத்தம் என்கிற அடிப்படையில் ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டுமே தவிர அதிக பட்ச வரம்பைக் குறைத்து விடுவதனால் மட்டும் நல்லதொரு நிலச் சீர்திருத்தத்தைச் செய்தவர்களாகமாட்டோம். புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதில் கூட முன்பு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள் பினாமி பட்டாக்கள் வழங்கப்படவில்லையா, எம்.எல்.ஏ.க்களுக்கு எல்லாம் வழங்கப்படவில்லையா என்று கேட்டார்கள். அப்படி வழங்கப்பட்டிருந்தால் அவை திருப்பிக் கொடுக்கச் சொல்லப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதுபோல திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் எவ்வளவு என்பன போன்ற விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகம் என்று வருகிறபோது மிகப் பெரிய மாவட்டங்களாக இருப்பதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். இராமநாதபுரம் பெரிய மாவட்டம். அது ஏற்கனவே பஞ்சப் பிரதேசம். அதுவும் அதனுடைய தலைநகர் மதுரையில் இருக்கிறது. அதை வேறு கிழக்கு, மேற்கு என்று பிரித்திருக்கிறோம். அது போல அன்றி நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறுவதற்கு சிறிய யூனிட்டாக மாவட்ட தலைநகர் அந்தப் பகுதியிலேயே அமைந்திருக்கும்படியாக இராமநாதபுரத்தை 2 ஆகப் பிரிக்கவேண்டும். அதுபோலவே கோயம்புத்தூர், நார்த் ஆர்காட் ஆகிய மாவட்டங்களையும் பிரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை அந்தப் பகுதியிலேயே வைக்க ஒரு நகரம் அதற்குள் கிடைக்கவில்லையா?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 13

அடுத்து, போர்டு ஆப் ரெவின்யூ அபாலிஷன்பற்றி வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. இன்றைக்கு மாவட்டத்தில் பலவிதமான அபிவிருத்தி வேலைகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது அதை எடுத்துவிடுவது நியாயம் தானா என்பதை யோசிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசியல் வாதிகளின் கையில் அகப்பட்டு இருக்கிறார். இங்கே அரசாங்கம் என்கிறபோது அரசியல்வாதிகளே இருக்கிறார்கள். இதன் இடையில் ரெவின்யூ போர்டு ஒன்று இருப்பதனால் சிலவைபற்றி செகண்டு தாட் என்பார்களே அதுபோல நியாய அநியாயத்தை எடுத்துப் பரிசீலிக்க ஒரு நல்ல வாய்ப்பாக இப்போது இருக்கிறது. அதை எடுத்துவிட்டாலும், அந்த இடத்தில் வேறு ஒரு நிர்வாகம் இருந்தேயாக வேண்டும். பெயர் மாறுபடலாம். வேறு ஒன்றுமே இல்லாதிருக்க முடியாது. ஆகவே ரெவின்யூ போர்டு அபாலிஷன் அன்றைக்குத் தேவை என்று கருதியிருக்கலாம். இன்றைக்கு அது தேவையற்றது—மீண்டும் அதை நன்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டாம்ப் சார்ஜை 2½% உயர்த்தினார்கள். அதை திரும்பப் பெற வேண்டும். டபிள்யூபி. 6320, 2653/70 வழக்கின் கீழ் மார்க்கெட் வால்யூ என்று போடுவது சரியல்ல என்று ஒரு வழக்கில் ஹைக்கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதுபோலவே பாம்பே ஹைகோர்டிலும் ஜட்ஜ்மெண்ட் வந்திருக்கிறது. ஆனாலும் அதை விடுவோமா என்பதாக ரிட் அப்பீல் போட்டிருக்கிறார்கள்.

அடுத்து, செல்லர்ஸ் அண்டு பர்சேசர்ஸ் கன்சிடரேஷன். இரண்டு பேரும் சேர்ந்து குறைந்த விலைக்குப் போட்டு பத்திரம் எழுதக்கூடாது. இப்படிச் செய்வதால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. மார்க்கெட் விலைக்கு ஸ்டாம்ப் ட்யூட்டி வாங்கி பதிவு செய்ய வேண்டும். இப்போது ஸ்டாம்ப் ட்யூட்டி மார்க்கெட் விலைக்கு வாங்கி ஒட்டினால் போதும் என்று நீதிபதிகள் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னால் போதும். அப்படிச் சொல்லிவிட்டால் நல்லதாக இருக்கும்.

அடுத்தது 'சிட்டி டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்'. எந்தெந்த முனிசி பாலிடிகள் தீர்மானம் நிறைவேற்றி, இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டு மென்று கேட்கிறார்களோ அங்கெல்லாம் இந்தச் சட்டத்தை 'எக்ஸ்டென்ட்' செய்கிறார்கள். முனிசிபாலிடிகளின் தீர்மானம் வந்த பிறகுதான் இப்படி 'எக்ஸ்டெண்டு' செய்கிறார்கள். அப்படிக்கில்லாமல், எல்லா முனிசிபாலிடி களிலும் 'சிட்டி டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்'டை நல்ல முறையில் அமல் படுத்த வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1972 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியங்களின்மீது, பல்வேறு கோரிக்கைகளின்மீது இன்றைய தினம் விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் கலந்துகொண்ட அத்தனை பேர்களும்—காலம் போதாத காரணத்தால், காலம் போதாத காரணத்தால், நேரம் போதாத காரணத்தால்—சீக்கிரமாகப் பேசி முடித்திருக்கிறார்கள். என்றாலும், முக்கியமான விஷயங்களில் தங்கள் கருத்துக்களை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிற எல்லாவற்றிற்கும் பதில் சொல்லாவிட்டாலும், சிலவற்றிற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர்களால் கூறப்பட்டவை அனைத்தும் அரசாங்கத்தின் பரிசீலனைக்குரியது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், 'மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு இடத்தில் மூன்று ஆண்டுகளாவது இருக்க வேண்டும். இடையிலே மாற்றக் கூடாது' என்று தெரிவித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களை அடிக்கடி மாற்ற வேண்டும் என்கிற நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லையென்றாலும், தவிர்க்க முடியாத காரணங்களால், மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சாதாரண நிர்வாக சம்பந்தப் பட்டது.

பொதுவாக அங்கத்தினர்கள் எடுத்துக்கொண்டு பேசியதெல்லாம் வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பதா, இல்லையா என்பது பற்றித்தான். கடைசியாகப் பேசிய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அவர்கள் 'கலைக்கக்கூடாது' என்று கருத்து தெரிவித்தார்கள். பொதுவாக எல்லா அங்கத்தினர்களும் இந்த வாரியத்தைக் கலைத்தே தீர வேண்டும், இந்த வாரியம் இருக்கக்கூடாது, இதில் ஏற்படுகின்ற நிர்வாகச் சிக்கல்களால் காலதாமதம் ஏற்படுகிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'கலைப்பது' என்கிற முடிவை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, மாற்று அமைப்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதை ஆராய்ந்தறிந்து அறிக்கை அளிக்கும்படி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை இந்த மாதக் கடைசியில் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது வந்தபிறகு வருவாய்த் துறை வாரியத்திற்குப் பதிலாக என்ன மாதிரி அமைப்பு இருக்க வேண்டும், 'ஸ்டாச்சுடரி பாடி' யாக இருக்க வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் முடிவு செய்ய வேண்டும். இதில் அவசரப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று அக்கறை எடுத்துக்கொண்டு திரு. தங்கமணி அவர்களும் (திரு. கே. டி. கே. தங்கமணி—குறுக்கிடு)—தலைநகரை மாற்ற வேண்டும் என்றும், திருமதி அனந்த நாயகி அவர்களும் வற்புறுத்திக் கூறினார்கள். இது நீண்ட நாட்களாக இருந்து வருகிற சர்ச்சையாகும். எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்படுகின்ற முடிவை ஒருமனதாக ஏற்றுக்கொள்வதில்லை. இதை எல்லா கட்சிகளும் சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்வதாக இருந்தால்—இராமநாதபுரத்தில் வைப்பதா, விருதுநகரில் வைப்பதா, அல்லது மதுரையிலேயே வைப்பதா என்பது குறித்து ஒருமுகமாக கருத்து தெரிவித்தால் இதுபற்றி தக்க முடிவு எடுக்கப்படும். இதை யாரும் அரசியலாக மாற்றக்கூடாது. அப்படியிருந்தால் இதில் அரசாங்கம் தலையிடத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பெரியதாக இருக்கின்ற மாவட்டங்களைப் பிரிக்கின்ற யோசனை நிச்சயமாக இப்போது இல்லை. ஒரு மாவட்டம் பெரியதாக இருக்கிறது, ஒரு மாவட்டம் சிறியதாக இருக்கிறது. பெரிய மாவட்டத்தைப் பிரித்து சிறிய மாவட்டத்தோடு சேர்த்து பெரியதாக ஆக்கலாமா என்பது குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் கேட்டிருக்கிறோம். அதனுடைய அறிக்கையை எதிர் பார்க்கிறோம். அதனுடைய அறிக்கை வந்ததும் பரிசீலித்து தக்க முடிவு எடுப்போம். அதிலும் தீவிரமாக யோசித்து முடிவு எடுப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவசரப்பட்டு எதையும் செய்யமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது, மதுரையில் ஒரு சர்க்கரை வியாபாரி 2 லட்சம் மூட்டை சர்க்கரை தேக்கி வைத்திருப்பதாகவும், அதிக விலைக்கு விற்பதாகவும் குறிப்பிட்டார். அந்த வியாபாரி யார் என்று சொன்னால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். மத்திய அரசாங்கத்தின் ஒரு உத்தரவு இவ்வளவு சர்க்கரை வைத்திருக்கலாம் என்று கூறுகிறது. அந்த உத்தரவுக்கு மேல் அவர் வைத்திருந்தால் அதை அவர்கள் அரசாங்க விலைக்கு விற்கலாம். அந்த உத்தரவுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கக்கூடிய அதிகாரம்கூட நமக்கு இல்லை. மத்திய அரசாங்கத்திடம் இருந்துதான் அந்த உத்தரவு வரவேண்டும்.

அடுத்தபடியாக, நில ஒப்படை பற்றிக் குறிப்பிட்டார்கள். நாம் ஏராளமான நிலங்களை ஒப்படை செய்து ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறோம். திரு. கோபால் அவர்கள் கண்டமநாயக்கனூரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். Abolition Act சட்டத்தின் கீழ் உழுதுகொண்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் கொடுப்பது என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. உழுதுகொண்டிருப்பவர்களை நிச்சயமாக வெளியேற்ற மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



D
V2.11, 31 N72
31 N72.1 ... 31



சென்னை நகரைப்பற்றிய ஒரு உண்மையை ஒத்துக்கொள்கிறேன். சர்க்கரை விநியோகத்தில் டி.யு.சி.எஸ். அரசோடு ஒத்துழைக்கவில்லை. ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கவேண்டும் என்று டிசம்பர் மாதம் சர்க்கரை கொடுத்தோம். ஆனால் அதை அவர்கள் 2 ரூபாய்க்கு விற்காமல் 2¾ ரூபாய்க்கு விற்று விட்டிருக்கிறார்கள். சர்க்கரையை விற்றுவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஸ்டாக் இல்லை என்று கேட்பவர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டு, அதிக விலைக்கு முறைதவறி விற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரே நாளில் பில்களையெல்லாம் போட்டு நியாய விலைக்கு விற்றமாதிரி செய்திருக்கிறார்கள். அந்தப் பில்களையெல்லாம் கைப்பற்றியிருக்கிறோம். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். போனமாதம் கொடுக்க வேண்டிய சர்க்கரை தேங்கி 5 ஆயிரம் டன் அதிகமாக இருக்கிறது. இப்பொழுது 300 ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு 2 கிலோ என்றும், 300 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு 4 கிலோ என்றும், 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு 6 கிலோ என்றும் சர்க்கரை கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கு இருக்கின்ற கிராமத்தின் தேவைக்கேற்ப சர்க்கரையைப் பிரித்து [illegible] எங்கெங்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் இப்பணியில் [illegible] கெல்லாம் அவற்றிற்கு கொடுக்கப்பட்டிருக்கின் [illegible] களை ரத்து செய்து, தனி யாருக்குக் கொடுக்க வேண்டிய முடி [illegible] ஏற்படுமே தவிர, [illegible] வேறு வழி இல்லை.

61553

அடுத்து, திரு. கோதண்டராமைய [illegible] அவர்கள் பேசும்போது, [illegible] தலுங்கு தெரிந்த அலுவலர்களை, உத்தியோகஸ் [illegible] நியமிக்க வேண்டுமென் [illegible] கேட்டுக் கொண்டார்கள். இதைப்பற்றி அ [illegible] பரிசீலிக்கு [illegible] என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, கர்ணம், கணக்கப்பிள்ளை இவர்களைப்பற்றிச் சொன்னார்கள். நிலம் வைத்திருப்பவர்களுக்கு அரசாங்கம் பாஸ் புத்தகம் ஒன்றைக் கொடுத்து, அதில் பட்டாதார்களுடைய விவரம், நிலத்தின் விவரம், வரி போன்றவற்றைக் குறித்துக் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு அதற்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பாஸ் புத்தகம் சீக்கிரத்தில் அச்சாகிவிடும். பாஸ் புத்தகம் அச்சாகி, கிடைக்கின்ற நேரத்தில் எல்லா பட்டாதாரர்களுக்கும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே முழு விவரங்களும் அடங்கியிருக்கும். எவ்வளவு நிலம் இருக்கிறது, வரி எவ்வளவு கட்ட வேண்டும், எந்த எந்த மாதம் கட்டவேண்டும் என்ற முழு விவரங்களும் அடங்கிய பாஸ் புக் ஆகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதிலேயே என்கம்பரன்ஸ் சர்டிபிகேட்டும் கொடுத்துவிட ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது சிரமமாக இருக்கும், பார்க்கச் சொல்லியிருக்கிறேன்.

ஜமாபந்தி முறையை ரத்துசெய்வதுபற்றிக் குறிப்பிட்டார்கள். நாம் பரீட்சார்த்தமாக சென்ற ஆண்டு ஒரு மாவட்டத்திலே ஒரு தாலூகாவிலே ஜமாபந்தி முறையை ரத்துசெய்வதற்கு ஏற்பாடு செய்து ஆடிட் முறையைக் கொண்டு வந்து செய்தோம். இந்த ஆண்டு தாலூகா என்று இல்லாமல் ரெவின்யூ டிவிஷனாக எடுத்துக்கொள்வது என்று பரீட்சார்த்தமாகச் செய்யப்போகிறோம். ஜமாபந்தி முறை தேவையில்லை என்று சிலரும், ஜமாபந்தி முறை தேவைதான் என்று சிலரும் தெரிவித்தார்கள். ஜமாபந்தி முறையிலுள்ள குறைகளை நாம் அறிவோம். அந்தக் குறைகளை ஒழிப்பதற்காகத்தான் நாம் ஜமாபந்தி முறையை ஒழிக்கவேண்டுமென்று ஒழிக்கிறோமேதவிர அதிலேயுள்ள நன்மைகளுக்காக அல்ல. ஆடிட் முறைமூலம் கணக்குகளைச் சரிபார்த்து ஒழுங்குபடுத்துகின்ற முறையிலே ரெவின்யூ டிவிஷன் ஆக எடுத்துக்கொள்வதின் மூலம் அந்த முறையை விரிவுபடுத்த ஆணை பிறப்பித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சுரேந்திரன் அவர்கள் பேசும்பொழுது மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதியிலே பயிர்செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மேட்டூரிலே அப்படி இருப்பது நாம் இதுவரையிலே கேள்விப்படாதது. ஏரி, குளம் இவற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலேதான் பயிர்செய்வார்கள். ஆனால் மேட்டூர் அணையின் கீழே உள்ள பகுதியிலே பயிர்செய்யத் தொடங்கி ஐந்தாறு ஆண்டுகளாகச் செய்து கொண்டு வருகிறார்கள். சுரேந்திரன் அவர்கள் 20, 30 ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள் என்று சொல்கிறார்கள் என்றுதான் அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகள் இல்லாமல் வேறு அப்பாலே அவர்கள் செய்தால்கூட நாம் அதைப்பற்றி ஒருவேளை யோசித்துப் பார்க்கலாம். ஆனால் நீர்ப்பிடிப்பு உள்ள பகுதியிலேயே அந்த அணையின் எல்லைக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிய விவரங்களை விசாரித்துத் தெரிந்துகொண்டேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள கலெக்டர் அவர்கள் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்குத் தண்டத்தீர்வை போட்டிருக்கிறார்கள். ஆனால் தர்மபுரி மாவட்டத்திலே சேர்ந்த அந்தப் பகுதிகளிலே தர்மபுரி மாவட்டத் தலைவர் தண்டத்தீர்வை போடவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களைப்பற்றி நான் தகவல் கேட்டிருக்கிறேன். அதைப்பற்றிய தகவல்கள் வந்தவுடன் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். ஆகவே,



நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். மேட்டூர் தண்ணீர் நிற்பதற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்த மேலேயுள்ள பகுதிகளிலே யார் பயிர்செய் தாலும் அவர்களை அப்புறப்படுத்துவார்கள். மேட்டூர்த் தண்ணீர் நிற்கக்கூடிய நிலையில் அந்த இடத்தில் பயிர்செய்வதனால் தண்ணீர் நிற்கக்கூட இடமில்லாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஒவ்வொருவரும் 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று வைத் துக் கொண்டிருக்கிறார்கள் அங்கே. ஆனால் அவர்கள் வேறு இடங்களிலும் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு இடங்களிலே நிலம் வைத்துக் கொண்டி ருக்கிறவர்களும் அங்கே நிலத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தர்க்கா சட்டப்படி புஞ்சை என்றால் 3 ஏக்காரவும், நஞ்சை என்றால் ஒன்றரை ஏக்கரா என்றும் கொடுக்கப்படும், மிச்சம் இருக்கிற நிலங்களை எடுத்து மேட்டூரில் பயிர்செய்கிற விவசாயிகளுக்கு முதல் சலுகை கொடுத்து அவர் களுக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் திரு. சுரேந்திரன் அவர்களைக் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் அவர்கள் ஆதரிக்கவேண்டாம். ஆதரிக்கிற நிலை வந்தால் நீர் நிற்கக்கூட இடம் இல்லாமல் போய்விடும்.

அடுத்ததாக, தண்டத் தீர்வைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற ஒவ்வொரு ஆற்றுக்கும் நிலைகளைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அதிகாரியை அனுப்பி எவ்வளவு தீர்வை விதிக்கவேண்டுமென்றும், எப்படி இதை ஒழுங்குபடுத்துவது என்றும் அறிக்கை தருமாறு கேட்டிருக்கிறோம். அறிக்கை வந்தவுடன் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்முறையாக திரு. ஜேம்ஸ் அவர்கள் அரசாங்கத்தைப் பாராட்டினார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஏழு ஆண்டுக்காலமாக வரவேண்டிய வரி பாக்கியை, ரயத்துவாரி ஆக்கியதன் மூலம் கட்டவேண்டிய வரியை அரசாங்கம் ரத்துசெய்திருக்கிறது. இந்த பசலி யிலிருந்து கட்டினால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். மண்ணினுடைய தரத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் கன்னியாகுமரிக்குச் சென்றிருந்த போது கூட அங்கே சொல்லப்பட்டது. செட்டில்மெண்டிற்குப் போகிற அதிகா ரிகள் அங்கேயுள்ள நீர்வளம், காற்றுவளம் எல்லா சுற்றுச் சார்பு வளத்தையும் பார்த்துத்தான் தரத்தை நிர்ணயிக்கிறார்கள், அதற்கான விதிமுறைகள் இருக் கின்றன, அதை வைத்துத்தான் நிர்மானிக்கிறார்கள். திருநெல்வேலி மாவட் டத்திலே இருக்கிற ஒரு மண்ணுக்கு என்ன தரம் நிர்ணயித்திருக்கிறார்களோ, அந்த மண்ணுக்குச் சமமாக இருக்கிற கன்னியாகுமரியில் இருக்கிற மண்ணுக்கு திருநெல்வேலி மண்ணுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தரத்தைவிட குறைவான தரம்தான் நிர்ணயித்திருக்கிறார்கள், அது போதாது இன்னும் குறைக்க வேண்டு

மென்று சொன்னார்கள், அப்படிச் செய்தால் இன்னொரு மாவட்டத்திலே இருக்கிறவர்கள் எங்களுக்கும் குறைக்கவேண்டுமென்று கேட்பார்கள். எனவே இப்பொழுது குறைப்பதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரியிலே இருக்கிற முறையினைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரவேண்டுமே தவிர தமிழ்நாட்டிலே இருக்கிற முறையைக் கன்னியாகுமரிக்குக் கொண்டுவரக் கூடாது என்று சொன்னார்கள். இதைப்பற்றி இந்த அறிக்கையிலே தாப்பட்டிருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில் வேலையிலிருந்து இவர்களை நீக்கமாட்டோம். ஆனால் எந்த வேலையாவது காலி இருக்குமானால் தமிழ்நாட்டிலே உள்ள முறையை அங்கே அமலாக்கப்போகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கணக்குகளை ஒழுங்குபடுத்த என்ன என்ன செய்யலாம் என்று நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சியின் காரணமாக தமிழ்நாட்டிலே எந்த முறை வருகிறதோ அதேமுறைதான் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் மனுநீதித் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, அதிலே ஒன்றும் இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதகம்தான் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அதற்கு திரு. வகாப் அவர்கள் அதிலே இருக்கிற தன்மைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அது சிறப்பான ஒரு திட்டம், அரசாங்கம் அதைத் தீவிரமாக்க கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லாக் பற்றிச் சொன்னார்கள். 9 லட்சம் மரங்கள் இருந்த காட்டுப்பகுதி அழிந்துபோய் இன்றைக்கு உழுதுகொண்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது அல்ல. அதற்காகத் தனியாகச் சட்டம் அரசாங்கம் கொண்டுவந்து சொந்தமாக எடுத்துக்கொள்ளும், எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில ஆர்ஜிதம் சரியாக நடைபெறவில்லை, காலதாமதம் காட்டுவதாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். இதிலே தாமதம் காட்டப்படவில்லை, யாருக்கும் சலுகை காட்டவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. எவ்வளவு விரைவிலே கைப்பற்றவேண்டுமோ அவ்வளவு விரைவாகக் கைப்பற்றி அரசாங்கம் அதிலே தீவிரமாக ஈடுபடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியிலே 5 ஆயிரம் ஏக்கரில் பயிர்செய்வதற்குப் பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டார்கள். முழு விவரமும் என்னிடத்திலே இப்பொழுது இல்லை. அதைப் பரிசீலித்துப்பார்த்து அரசாங்கம்



முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றும் அப்படி கொடுத்தால் அரிசி கிலோ ரூ. 1.40-க்கு மேல் போகாது என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மை நிலைமை அதுவல்ல. அவர்கள் எண்ணுவதுபோல் பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்தால், இன்னொரு ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் இப்பொழுது அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலைப்படி ஒரு கிலோ ரூ. 1.2 பைசாவாகிறது. அவர்கள் சொல்வதுபோல் செய்தால் கிலோ 1.18 ஆகிறது. எனவே 1.40-க்குள் அடங்காது. மறுபடியும் அரசாங்கம் சப்சிடி கொடுத்துச் செய்வதன் மூலம் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதுவும் சாத்தியமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும் பொழுது, கண்டுக்ருஷி பாட்டம் பற்றிக்கூறி பட்டா கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே உத்தரவு போட்டிருக்கிறார்கள். உத்தரவிலே சொல்லியிருப்பது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று. அதற்கு மனுச் செய்தால் தவணைகளிலே கொடுக்கலாம் அல்லது மொத்தமாகப் பணத்தைக் கொடுத்தால் பட்டா கொடுக்கப்படும் என்று போட்டோம். ஆனால் இதுவரையில் மனுச்செய்யவில்லை. இதுவரை செய்யாவிட்டாலும், மனுச் செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அதிகாரிகளே சென்று, நிலத்திற்குண்டான பணத்தைக் கொடுத்தால் எழுதிக்கொடுத்து விடுங்கள் என்று சொல்லி, பட்டா கொடுக்கும் படி சொல்லியிருக்கிறோம்.

பொதுவாக எல்லா மானியங்களின்மீது பேசியவர்கள் அதிகமாகக் காரசாரமில்லாமல் இவ்வளவு மானியங்களையும் ஆதரிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அம்மையார் மட்டும்தான் விலைவாசி ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

DR. H. V. HANDE : Very valid point, very important point.

DR. H. V. HANDE : Very valid point, very important point.

THE HON THIRU P. U. SHANMUGAM : That is what I say.

THE HON THIRU P. U. SHANMUGAM : அமைச்சரவர்கள் கூறும்பொழுது தண்டத் தீர்

* திரு. எம். சுரேந்திரன் : அமைச்சரவர்கள் கூறும்பொழுது தண்டத் தீர்வையைப்பற்றிப் பரிசீலித்து முடிவு சொல்வதாகக் கூறினார்கள். இப்பொழுது முடிவெடுக்கும்வரையில் அதை வசூலிப்பதை நிறுத்தி வைக்க வேண்டும். இன்னொன்று, தண்டத் தீர்வை வசூலிக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிருக்கிறது. தண்ணீர்த் தேக்கப் பகுதியில் 1967-லேஇருந்து தண்டத் தீர்வை போட்டிருப்பதாக உங்களுக்கு அதிகாரிகள் தகவல் தந்திருக்கலாம். ஆனால் அங்கேயுள்ளவர்களை விசாரித்தால் 30 வருஷங்களாக இருப்பது தெரியும். அப்படி அந்த விவசாயிகளை வெளியேற்றுவது என்று அரசாங்கம் கருதினால் நிலமில்லாதவர்களுக்கு வேறு நிலம் அளித்ததற்குப் பிறகுதான் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கே பயிர் செய்பவர்களுக்கு உள்ளேயே வேறு இடத்திலே கிடைக்கிறதா இல்லையா என்பது இரண்டாவது பிரச்சினை. தர்மபுரி மாவட்டத்தில் நிலமிருக்கிறது, அங்கே கொடுத்தால் போக மாட்டேன் என்று சொல்கிறார்கள். அங்கேயேதான் பயிர் செய்வேன் என்று சொல்கிறார்கள். உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், இவ்வளவு பெரிய மேட்டூர் அணையைக் கட்டிவிட்டு நீர் ஒதுக்கு என்ற இடத்தில், மேட்டூர் உபரம் குறையும் இடத்தில் தண்ணீர் வரும்பொழுது அந்த இடத்தில் நாங்கள் 30 ஆண்டுகளாகப் பயிர் செய்கிறோம் என்று சொல்வதுதான் நியாயமா? அதை ஒத்துக் கொள்ள முடியாது. மாற்று இடம் கொடுக்கிறோம், ஆனால் போக மறுக்கிறார்கள். அப்படி மறுக்கக்கூடாது. போகக்கூடாது என்று சுரேந்திரன் அவர்கள் தடுக்கக்கூடாது. இடம் கொடுத்தால் போங்கள் என்று சொல்ல வேண்டும். தண்ணீருக்கு மேலேயிருக்கும் புறம்போக்கு பூமியில் ஐயாயிரத்து சொச்சம் அளவில் பயிர் செய்கிறார்கள். அப்படிச் செய்பவர்களுக்குத் தர்க்கா சட்டப்படி பட்டா கொடுக்கவில்லை. அளவைக் குறைப்போம். அந்த நேரத்தில் இவர்களுக்கு அந்த இடத்தில் கொடுப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது தண்டத்தீர்வை வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். அதிகாரிகளிடம் சொல்லப்பட்டிருக்கிறது, அரசாங்கம் மறு ஆணை பிறப்பிக்கும் வரையில் அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நிறுத்திவைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி ஏற்றம் பற்றிப் பேசப்பட்டது. மிக முக்கியமான பாயின்ட் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். நாட்டிலே விலைகள் கொஞ்சம் கூடியிருக்கிறது. உணவுப்பொருள்கள் மட்டும் அல்ல, எல்லாப் பொருள்களும் விலை கூடியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நாட்டிலே அரிசி விலை ஏன் ஏறுகிறது, ஏன் கூடுகிறது, உற்பத்தி அதிகமாக இருக்கும்பொழுது கூடுவானேன் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லும் நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், கள்ளக்கடத்தல் காரணமாக விலை ஏறியிருக்குமோ என்று யாருக்கும் சந்தேகம் வேண்டாம். அப்படிக் கள்ளக்கடத்தல் என்று எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் லட்சக்கணக்கான டன்கள் போய்விட்டது என்று யாரும் கருத முடியாது. கள்ளக்கடத்தல் மூலம் போவதை அரசாங்கம் எவ்வளவு தீவிரமாகக் கண்டுபிடிக்க முடியுமோ அவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுக்கின்ற முறையில் எல்லையோரப் பகுதிகளில் உள்ள சாவடிகளில் போலீசாரை இரவெல்லாம் காவலுக்கு வைத்துப் பிடிக்கச் செய்கிறோம். ஆனால் சிலர், அதிகாரிகளிலேகூட சிலர் புல்லுருவிகளாக மாறி தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு கள்ளக்கடத்தல் மூலம் கொண்டு செல்வதற்குத் துணையாகயிருந்துவிட்டிருக்கிறார்கள், இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நான் பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதெல்





லாம், எல்லையோரக் கிராமங்களில் பொதுமக்கள் குழு ஒன்று அமைக்கின்ற நிலை உருவாகியிருக்கிறது; அந்தக் குழுவிலுள்ள அங்கத்தினர்கள் கள்ளக் கடத்தல் நடத்த ஒட்டாமல் பார்த்துக்கொள்ள அரசாங்கத்திற்குத் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னிடத்தில் விலைவாசிப்பட்டியல் தரப்பட்டிருக்கிறது, இன்றைக்கு என்ன விலை என்று தந்திருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் அரிசி விலை கொஞ்சம் கூடித்தான் இருக்கிறது. அரிசி விலை கூடுதலாக இருக்கிறது, இல்லை என்று சொல்லமாட்டேன். ஆனால் ஒன்றை மறந்துவிட வேண்டாம். ஆந்திராவில் நாடப்பள்ளிக்கூடம் என்ற இடத்தில் என்ன விலை என்று பார்க்க வேண்டும். நெற்களஞ்சியம் என்ற அந்த ஊரிலிருந்து தமிழ்நாட்டிற்குக்கூட அரிசி வந்துகொண்டிருந்தது. அங்கே, பத்து நாட்களுக்கு முன்பு—பத்திரிகை படித்திருந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும்—ஓட்டுக்கேட்கச் சென்ற ஒருவரை விவசாயிகள் மடக்கிக்கொண்டு ஏன் இங்கே 1 ரூபாய் 40 காசுக்கு அரிசி விற்கிறது என்று கேட்டிருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அப்படிச் சொல்லி, ஓட்டைப் போட்டு விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஓட்டு யாருக்குப் போட்டார்கள் என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. அப்படிக் கேட்டார்கள். அப்படி நாடப்பள்ளிக்கூடத்திலேயே 1 ரூபாய் 40 காசுக்கு விற்கும்பொழுது தமிழ் நாட்டில் 1 ரூபாய் 2 காசு, 1 ரூபாய் 18 காசு என்று கொடுக்கிறோம் என்று சொன்னால் அதைப் பாராட்ட வேண்டும். ஒருவேளை இப்பொழுது ஏறியிருக்கிறது என்று சொன்னால் சிதோஷ்ண நிலையின் காரணமாக, மழை அதிகமாகப் பெய்து வெள்ளத்தினால் பாதித்த காரணம் என்று சொல்லக்கூடும். தமிழ் நாட்டில் அப்படி இல்லை என்று சொல்வார்கள். 3 ரூபாய்க்கு படி அரிசி விற்கிறது என்று சொன்னால் 5 ரூபாய்க்குக்கூட சில அரிசி விற்கிறது. ஆனால் 5 ரூபாய்க்குப் படி அரிசி விற்கிறது என்று சொல்லிவிடக்கூடாது. அது உயர்ந்த ரக அரிசியாக இருக்கலாம், 3 ரூபாய்க்கு நெல்லூர் அரிசி வாங்கலாம், நெல்லூர் அரிசிதான் எல்லோரும் வாங்கிச் சாப்பிட வேண்டுமென்று இல்லாமல், நடுத்தர மக்கள் சாப்பிடும் அரிசியைக் கணக்கில் கொண்டு யோசிக்கவேண்டும். முதல் தரம், இரண்டாம் தரம் என்று பிரிக்கக்கூடாது, எல்லாம் ஒரே தரமாக இருக்க வேண்டுமென்று சுப்பையா அவர்கள் சொன்னார்கள். அது இயலாது. பிரித்து வைத்துக்கொள்வதைக்கூட, நெல்லை எந்தத் தரத்தில் வைக்க வேண்டுமென்று நாங்கள் மத்திய அரசுக்கு எழுதி மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்ட பிறகுதான் தரம் பிரிக்க வேண்டியிருக்கிறது. அதற்குக்கூட எங்களிடத்தில்

அதிகாரம் இல்லை. மத்திய சர்க்காருக்கு எழுதித்தான் செய்ய வேண்டும். எனவே, நாம் பிரித்துத்தான் தரவேண்டும். பிரிக்காமல் நெல்லை வாங்க முடியாது. அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களுக்கெல்லாம் மதிப்பளித்து நிச்சயமாக இலாக்கா பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொண்டு மானியக் கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Today we have several Demands and some of the Demands also belong to the Hon. Chief Minister. But the Hon. Chief Minister has not replied to the Demands. Our Hon. Food Minister has practically utilised all the time in replying to the points raised in respect of Demands relating to his subjects. Therefore, I want to know whether it is possible for the Hon. Chief Minister to reply to certain problems raised during the discussion. For instance, Thiru B. Venkataswamy has raised the point about pensioners and the Hon. Chief Minister has assured this House that relief will be granted when State finances improve. He said that he would concede the request of the pensioners when the financial situation of the Government improved. Now the financial position has improved according to the Chief Minister. Hence, will it be possible for the Hon. Chief Minister to grant some increase, whether it will be possible to raise the minimum pension to Rs. 50 as in Kerala or something like that?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பதில் அளிக்காவிட்டாலும் சொல்லப் பட்ட கருத்துக்களையெல்லாம் மனத்தில் பதியவைத்துக் கொண்டிருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பதிய வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. அதன் பலனை எல்லோரும் அனுபவிக்கின்ற முறையில் சீக்கிரம் தர முடியும் என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கதாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கோதையாறு கால்வாய்ப் பிரதேசத்தில் கொஞ்சம் வேஸ்ட் நிலம் இருக்கிறது. ஏறத்தாழ 1000 நிலமற்ற ஏழைகள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள், பேசக்கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: குடிசைகள் வைத்துப் பல ஆண்டுக்காலமாகத் தங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒழிக்க வேண்டுமென்று இலாக்காவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களை அப்புறப்படுத்த எடுக்கப்



பட்டிருக்கும் நடவடிக்கைகளைச் சற்று நிறுத்த வேண்டும். அல்லது வேறு மாற்று இடம் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றிருந்தபொழுது இதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கேயே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் தெரிவித்து விட்டு வந்திருக்கிறேன். அது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். அவசரப்பட்டு குடிசைகள் அப்புறப்படுத்தப்படமாட்டா.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இராணிப்பேட்டை தொகுதி நல்லாக்கிற்கு வேண்டிய சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னதற்காக பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் சார்பில் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனியாகப் பார்த்துச் சொல்லலாமே.

இப்பொழுது மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் முடிவுற்றது.

வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 9-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எஸ். கோதண்டராமய்யா, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,81,49,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 31-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த திரு. வடிவேல் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாமையால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,14,59,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை என் 32-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,44,58,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை என் 36-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,98,70,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை என் 37-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 37—ஜமீந்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 83,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."





நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை என் 45-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோரிக்கை என் 47-க்கு நான் முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

திரு. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஜேம்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை என் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,45,47,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை என் 1-க்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. என். மருதாசலம் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ்: என்னுடைய வெட்டுத் தீர்மானம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுப்பதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க என்பதாகும். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. பதில் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரயத்துவாரி செட்டில்மென்ட் இங்கு அமலாக்கப்பட்ட பிறகு அதேபோன்று அங்கு இருப்பவர்களுக்கும் நிலம் ஒப்படை செய்ய வழி செய்யப்படும்.

திரு. ஜேம்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. கே. எஸ். கோதண்டராமய்யா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,74,65,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 4-க்கு டாக்டர் ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

திரு. என். மருதாசலம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,71,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 46-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,59,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 4. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

59. Notification issued with G.O. Rt. No. 2137, Revenue, dated the 27th November 1971 in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the General Secretary, Valluvar Kalai Manram on 28th November 1971 at Children's Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

60. Notification issued with G.O. Ms. No. 586, Co-operation, date the 31st December 1971, in regard to an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

61. Notification issued with G.O. Ms. No. 1336, Agriculture, dated the 26th April 1971, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

## B. Reports, Notifications and Other Papers.

@ 63. Welfare Programmes for Women and Children, included in Demand No. 23—1972-73 (English and Tamil).





## இணைப்பு I

### நிலவரி மானியக் கோரிக்கை.

இக் குறிப்பில், முக்கியமாக, மானியக் கோரிக்கை எண்கள் 1. "நிலவரி", 9. "மாவட்ட நிர்வாகமும் பல் வகையும்" ஆகியவை விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மற்றவை, கோரிக்கை எண்கள் 31. "பஞ்சத் துயர் தணிப்பு", 36. "ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒப்படைகளும்", எண். 37. "ஜமீன்தார்களுக்கு இழப்பீடு", 47. "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்", 4. "முத்திரைத் தாள் நிர்வாகம்" முதலியன தொடர்புள்ள பிற மானியக் கோரிக்கைகளாகும்.

2. நாடு விடுதலை பெறும் முன்னர் நாட்டை ஆண்ட அந்நிய அரசு சட்டம், ஒழுங்கு பேணும் பொறுப்பினை உடைய அரசாக மட்டுமே செயல் பட்டது. விடுதலைக்குப் பின்னர் பொறுப்பேற்ற குடியரசு, மக்கள் நலம் பேணும் வளங்கெழு அரசாக அமைந்தது. இந்த மாற்றத்தால், கடந்த இருபத்தைந்தாண்டுகளில் பொதுமக்களுக்கும், அரசு நிர்வாகத்துக்கும் இடையிலான தொடர்பு நிலைகள் பல்கிப் பெருகியுள்ளன. இதன் விளைவாக பல்வேறு மட்டங்களில் பணிச் சுமை பன்மடங்கு பல்கியுள்ளது. மேற்சொன்ன மாற்றத்தால் தோன்றிய தேவைகளையொட்டி, அரசுத் துறைகள் பல, தமது அமைப்பைத் திருத்தியமைத்துள்ளன. துறை களின் அமைப்பு திருத்தியமைக்கப்பட்டதன் மூலம் பல்வேறு அதிகாரி களின் அதிகாரத்தில் கீழுள்ள அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளின் அளவும் குறைக்கப்பட்டது. தனிப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரது பணிச் சுமையும் அவர்கள் சமாளித்து நிர்வகிக்கக்கூடிய அளவில் இருக்க வேண்டும் எனவும், பொதுமக்கள் தாங்கள் காண விரும்புகிற அதிகாரி களைக் குறைந்த தொலைவுக்குப் பயணம் செய்து, குறைந்த செலவில் கண்டு வருதல் இயல வேண்டும் எனவும் கருதியே மேற்சொன்னவாறு அதிகாரிகளின் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளில் அளவு குறைக்கப் பட்டது. இருப்பினும், வருவாய்த் துறை, இராம அதிகாரி நிலையிலிருந்து துறையின் உயர்மட்டம் வரை, அந்தந்த அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளை, ஏறக்குறைய முன்னர் இருந்தவாறே உள்ளது. ஆயினும். பல்வேறு அதிகாரிகளின் மட்டங்களில், அவ்வப்பணிகளுக்கான அடிப் படையில், சிறப்புப் பணியாளர்களுக்கு ஒப்படைப்பு வழங்கப்பட்டதன் மூலம், பணிச் சுமை பகிர்ந்தளிக்கப்பட்டு, அதன் மூலம், பணிச் சுமையைக்

குறைப்பதற்குரிய வழிகளைக் காண முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறு அவ்வப்பணிகளுக்கான சிறப்புப் பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது முதலியவற்றால், துறையில், மேற்பார்வை செய்தல், கட்டுப்பாட்டு அதிகாரம் வகித்தல், ஒருங்கிணைத்தல் முதலியவை சார்ந்த பணிகள் அதிகரித்துள்ளன. மேலும், துறையின் இந்த வளர்ச்சி, பொதுமக்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் மனநிறைவளிக்கவும் தவறிவிட்டது. பொதுமக்கள், தாங்கள் விரும்பும் அலுவலர்களைக் காண, இன்னும், பெரும் செலவு செய்தும் இடர்ப்பட்டும் நெடுந்தொலைவு பயணம் செய்யவேண்டியுள்ளது. பெரும்பாலோர் இன்ன காரியத்திற்கு இன்ன அலுவலரை அணுக வேண்டும் என்பதையும் அறிய முடியாமல் உள்ளனர். பொதுமக்களுடைய இவ்வகைக் குறையைத் தீர்த்து, அவர்களுக்குப் பெரும் மன நிறைவையளிக்கும் பொருட்டு, இவ்வரசு மனுநீதித் திட்டத்தை உருவாக்கியது. ஆக்கம் தரும் வழியில் அணுகுதல் மூலம், பொது மக்களின் குறைகளை, அரசு எந்த அளவிற்குத் தீர்க்க முடியும் என்பதை இத் திட்டம் தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால், மக்களுடன் அரசு நெருங்கிப் பிணைக்கும் வகையில் மக்களை நாடி அரசு சென்றிடும் அவசியத்தை பொறுமையுணர்வுடன் உணர்ந்திட வேண்டிய காலம் அணித்து வந்துள்ளது. எனவே, வருவாய்த் துறையில் பல்வேறு அலுவலர்களுடைய அதிகார வரம்புப் பகுதிகளைத் திருத்தியமைப்பதற்காக அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வந்துள்ள பல்வேறு செயற் குறிப்புகளையும் ஆய்ந்து காணுமாறு, அரசு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு, அவற்றை அனுப்பியுள்ளது. இவ்விஷயத்தில், நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிவுரைகள் கிடைத்ததும், இது குறித்து விரைவில், அரசு பொருத்தமான முடிவுகளை எடுக்கும்.

3. தற்போதைய அமைப்பின்படி, வருவாய்த் துறை வாரியம் ஒழிக்கப்படவேண்டும் என அரசு முடிவு எடுத்துள்ளது. அவ்வாறு வருவாய்த் துறை வாரியம் ஒழிக்கப்பட்டால், அதன் விளைவாக, அதனிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் செய்யப்படவேண்டிய மாற்று ஏற்பாடுகள் பற்றி ஆய்வு செய்யுமாறு அரசு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவைக் கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய, நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிவுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



4. கடந்த ஆண்டு நிலவரி மானியக் கோரிக்கை, விளக்கக் குறிப்பில், ஜமாபந்தி முறையைப் படிப்படியாக எடுத்துவிடுவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறை ஒழிக்கப்பட்டது எனவும், கிராம, வட்டக் கணக்குகளைத் தணிக்கை ஆய்வு செய்வதற்கான மாற்றுத் திட்டம் செயல்படும் முறைபற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது எனவும் அப்போது குறிப்பிடப்பட்டது. இந்த ஆய்வினின்றும் எழுந்த முடிவையொட்டி, இந்த மாற்றுத் திட்டத்தை, ஒரே சமயத்தில் வருவாய்க் கோட்டம் ஒன்றின் அனைத்து வட்டங்களிலும் செயற்படுத்திச் சோதனை செய்வது விரும்பத்தக்கது என்று அரசு அறிந்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு வருவாய்க் கோட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும், ஜமாபந்தி முறையை ரத்து செய்து விடக் கருதப்பட்டுள்ளது.

5. நிலவரி முறை, உழவர்களின் பெரும்பாலோர்க்குப் புரியும் வண்ணம் இருக்குமாறு அதனை அமைத்து, உழவர்கள் தத்தம் உரிமைகளையும், பொறுப்புகளையும் நன்கு உணரச் செய்யும் பொருட்டு, நிலவரி அமைப்பில் சில அடிப்படை மாற்றத்தைச் செய்யும் அவசியத்தை அரசு அறிகிறது. அத்தகைய மாற்றம் கிராம, வட்ட கணக்குகள் எளிய முறையில் அமைந்திருக்கச் செய்ய உதவும். இது பற்றி அரசு கவனித்து வருகிறது.

6. இம் மாநிலத்திலுள்ள பல்வேறு பாசனத் திட்டங்களின்கீழ் விதிக்கப்படும் சாதாரண தண்ணீர் வரி வீதங்கள், தண்ணீர் தண்டத் தீர்வை வீதங்கள் ஆகியவற்றின் அமைப்பு குறித்து வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்களே தீவிரமாக ஆய்வு செய்து, வரி வீதங்களை சீராகத் திருத்தியமைப்பதற்குப் பொருத்தமான பரிவுரைகளை அரசுக்குச் செய்யுமாறு வருவாய்த்துறை வாரியத்தின் உறுப்பினர்களை அரசு கேட்டுள்ளது. இந்த ஆய்வு, சிறப்பாக, முறையற்ற பாசனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசுக்கு உதவும்.

7. அண்மை ஆண்டுகளில், உழவுத் தொழிலுக்காக நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் ஒப்படை செய்வதில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்து, இத்துறையில் எய்திய மகத்தான வெற்றியைக் கீழே உள்ள புள்ளிவிவரங்கள் தெற்றென விளக்கும்:—

1947 முதல் 1967 வரையுள்ள 20 ஆண்டு கால அளவில் 1·15 லட்சம் மக்கள் பயனடையும் விதத்தில் 2·88 லட்சம் ஏக்கர் விளைச்சல் நிலங்கள் மட்டுமே ஒப்படை செய்யப்பட்டன. ஆனால் 1967 முதல் 1972 வரை

உள்ள 5 ஆண்டுக் கால அளவுக்குள் 2·47 லட்சம் நபர்கள் பயனடையும் வகையில் 4·92 லட்சம் ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. 1967-க்குப் பின்னர் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களின் விவரங்கள் ஆண்டுவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| கால அளவு. | பரப்பளவு (ஏக்கரில்). | பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1967–68 .. .. .. | 22,849 | 7,019 |
| 1968–69 .. .. .. | 51,852 | 24,604 |
| 1969–70 .. .. .. | 1,55,813 | 71,738 |
| 1970–71 .. .. .. | 1,73,558 | 99,138 |
| | 4,04,072 | 2,02,499 |

1971–72ஆம் ஆண்டில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 1·15 லட்சம் விளைச்சல் நிலங்கள் ஒப்படை செய்யப்பட வேண்டுமென்ற இலக்கை அரசு வகுத்துள்ளது. 1972, ஜனவரி இறுதி வரையில் ஒப்படை செய்யப் பட்ட நிலங்கள் 0·88 லட்சம் ஏக்கர் ஆகும்.

8. தரிசுக் காட்டு நிலங்கள் 50,000 ஏக்கரை நிலமற்ற ஏழை மக்களுக்கு ஒப்படை செய்வதற்காக 1971, டிசம்பர் திங்களில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. இதில், மதுரை மாவட்டத்திலுள்ள கண்டமநாய்க்கனூர் பகுதியில் உள்ள 18,000 ஏக்கர் பரப்பு நிலமும் அடங்கும். எஞ்சியுள்ள 32,000 ஏக்கர் நிலப்பரப்பு 11 மாவட்டங்களில் பரவியுள்ளது.

9. நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்வதற்காக, சேலம் மாவட்டம், வாசுவாசி-பக்கநாடு பகுதியிலுள்ள 3,000 ஏக்கர் காட்டு நிலங்கள் ஒதுக்கக் காட்டுப் பகுதியினின்று நீக்கப்பட்டுள்ளன.

10. மதுரை மாவட்டம், கோடைக்கானல் வட்டத்திலுள்ள சுமார் 20,000 ஏககர் நிலத்தை ஒப்படை செய்வதற்குப் பொருந்தும் வகையில் 1971, அக்டோபரில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

11. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் அரசு நிலங்களைப் பெரு மளவுக்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களின் இடர்ப்பாட்டைக் குறைக்கும் நோக்கத்துடன், மிகுந்த தாராள நோக்குடன் அரசு ஒரு முடிவு எடுத்தது. அதாவது, 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளுக்கு முன்பு இருந்த



எல்லா ஆக்கிரமிப்புகளும் முறைப்படுத்தப்படவேண்டும். தேயிலைத் தோட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு களும், சமுதாயப் புறம்போக்கு நிலங்களில் செய்யப்பட்ட ஆட்சேபனைக் குரிய ஆக்கிரமிப்புகளும் நீங்கலாக ஏனைய ஆக்கிரமிப்புகள் யாவும் சாதாரண ஒப்படை விதிகளுக்குட்பட்டு முறைப்படுத்தப்படவேண்டும். தேயிலைத் தோட்டங்களுக்காகவும், சமுதாய புறம்போக்குகளுக்காகவும், ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆக்கிரமிப்பாளர் களுக்கு இயன்ற அளவுக்கு மாற்று நிலங்கள் வழங்கப்பட வேண்டு மென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

12. வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யவும், ஆட்சேபனைக்குட்படாத ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தவும் சிறப்பு முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முறைப்படுத்தப்பட வேண்டிய ஆட்சேப னைக்குட்படாத ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை 3·24 லட்சம் ஆகும். அவற்றில் 1971, டிசம்பர் இறுதி வரை வீட்டு மனை பட்டாக்கள் வழங்கு வதன் மூலம் 2·86 லட்சம் ஆக்கிரமிப்புகள் முறைப்படுத்தப்பட்டன. 1971-72-ல் மட்டும் 79,586 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

13. 1964 ஆம் ஆண்டுத் தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு சட்டத்தின்கீழ், மாற்றப்பட்ட பகுதியில், அதாவது, கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும், நிலவரி ஏற்பாடு செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இப் பகுதிகளில், நிலவரி ஏற்பாட்டை செயல்படுத்துவதற்கான அலுவலக நடைமுறைகள் 1971இல் முடிந்தன.

14. 1955 ஆம் ஆண்டுத் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம், அதனுடைய அமைப்பு தக்கவாறு மாற்றப்படவும், "ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்பதன் பொருள் விளக்கம் பயிரின் தன்மை, அப்பயிரினின்று கிடைக்கும் வருவாய் ஆகியவற்றை விளக்குமாறு அமையவும், 1971ஆம் ஆண்டு 26-வது சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது.

1955ஆம் ஆண்டுத் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி சட்டத்தை மாற்றப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தவும், அதனால், தற்போது அமுலில் உள்ள 1955ஆம் ஆண்டுத் திருவாங்கூர்-கொச்சி வேளாண்மை வருமான வரி சட்டத்தை ரத்து செய்யவும் நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டமியற்ற உத்தேசித்துள்ளது.

15. ஒரு மனைக்கு மேற்படாத நிலவுடைமைகளுக்கு, நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்களிக்கவும், இந்த அளவிற்கு மேலான நிலவுடைமைகளுக்குப் படிப்படியாக உயரும் வரி விதிக்கவும், 1966-ஆம் ஆண்டுத் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1971-ஆம் ஆண்டு 30-வது சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட விதித்துறைகள், சென்னைமா நகரில், 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து அமுலுக்கு வந்தன. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாளிலிருந்து திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் நகரங்களிலும், 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ஆம் நாளிலிருந்து மதுரை மாநகரிலும் செயற்படுத்தப்பட்டது.

16. 1970இல் வடகிழக்குப் பருவமழை தவறியதின் விளைவாக, இம் மாநிலத்தில் சில பகுதிகளில் வறட்சி நிலை தொடர்ந்து நிலவியது. பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதிகள் செய்து தருவது போன்ற வறட்சி நிவாரணப் பணிகளுக்காகும் செலவைச் சரிக்கட்டுவதற்காக, அரசு, 1971இல் ரூ. 107-25 லட்சத்திற்கு ஒப்பளித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

| மாவட்டம். | நிதி ஒதுக்கீடு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திருநெல்வேலி .. .. | 13·08 |
| இராமநாதபுரம் .. .. | 13·00 |
| கோயம்புத்தூர் .. .. | 15·00 |
| சேலம் .. .. .. | 17·21 |
| மதுரை .. .. .. | 16·76 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 11·70 |
| தஞ்சாவூர் .. .. .. | 5·00 |
| வட ஆர்க்காடு .. .. | 5·00 |
| தருமபுரி .. .. .. | 5·50 |
| தென் ஆர்க்காடு .. .. | 5·00 |
| மொத்தம் .. | 1,07·25 |

17. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களுக்காக, "வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் திட்டம்" என்று தற்போது அமைக்கப்பெறும் இராமப் பணிகள் சிறப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் ரூ. 4 கோடி செலவில் 1970-71இல் தொடங்கி

1973-74 வரையில் உள்ள நான்காண்டுக் கால அளவில் நிறைவேற்றப்படவிருக்கும் இத் திட்டம் திட்டப் பணியல்லாத மத்திய அரசுப் பணியாக இவ்வரசினால் மேற்கொள்ளப்பட்டு இதற்கான செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கும். இத் திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள மும்முரத் திட்டங்கள் பின்வருமாறு :—

(i) சீரான சாலைகளை அமைத்தலும் சீர்கேடுற்றுள்ள சாலைகளை சீரான சாலைகளாக மாற்றுதலும்.

(ii) நீர் வழங்கு கால்வாய்களில் தூரெடுத்தல், ஏரிகளைப் புதுப்பித்தல் உட்பட பெரும் பாசனப் பணிகளும், சிறு பாசனப் பணிகளும்.

(iii) நீர்க்கசிவுக் குட்டைகள், தடுப்பு அறைகள், நில வளைவுக்கு ஏற்ப கரை கட்டுகள் போன்ற பணிகள் உட்பட மண் வளப் பாதுகாப்பு வேலைகள்.

(iv) காடுகள் வளர்த்தல்.

18. இடைத்தரகர்களை ஒழிக்கும் பணியைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு :—

(அ) தமிழ் நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

4,987 ஜமீன்கள், இனாம், கீழ்க் குத்தகை எஸ்டேட்டுகள் ஆகியவை அறிவிக்கப்பட்டு இச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்.) |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 4,987 | 11,378·45 |
| 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை நில வரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 4,985 | 11,377·18 |
| எஞ்சியவை .. .. .. .. | 2 | 1·27 |

(இ) தமிழ் நாடு 1965ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

இரு வாரங்களும் பகுதிக் கிராம இனாம் எஸ்டேட்டுகளும் இச் சட்டத்தின் கீழ் ஒழிக்கப்பட்டுள்ளன :—

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு (சதுர மைல்கள்.) |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை | 2,117 | 1,[illegible]·42 |
| 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்வரை நில வரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 1,929 | 1,163·[illegible] |
| எஞ்சியவை .. .. .. | 188 | 434·5[illegible] |

இன்னும் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத 188 நேர்வுகளில், 79 நேர்வுகள் தடை ஆணைகளின்கீழும் ஏனைய சட்ட நடவடிக்கைகளின் கீழும் உள்ளன. எஞ்சிய 109 நேர்வுகளில் (134·61 சதுர மைல்) 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்படும்

(உ) தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு. (சதுர மைல்களில்.) |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகுதி. | 13 | 32·11 |
| 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 12 | 31·43 |
| எஞ்சியவை .. .. .. .. | 1 | 0·68 |

எஞ்சியிருக்கும் ஒரே கிராமத்தில் (செங்கற்பட்டு மாவட்டத்தில் "கிராண்ட் லியோன்") 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்படும்.

(எ) தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு. (சதுர மைலில்.) |
|---|---|---|
| நிலவரி ஏற்பாட்டுக்கான மொத்தப் பகுதி | 13,563 | 1,546·11 |
| 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி. | 13,512 | 1,523·53 |
| எஞ்சியவை .. .. .. .. | 51 | 22·58 |

எஞ்சிய 51 கிராமங்களில், ஐந்து கிராமங்கள் (2·77 சதுர மைல்) தடை ஆணைகளின்கீழ் உள்ளன. எஞ்சிய 46 கிராமங்களில் (புதுக் கோட்டை இணைக்கப்பட்ட பகுதியில் 44 கிராமங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இரு கிராமங்களும்) 1972ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் நிலவரி ஏற்பாடு கொண்டுவரப்படும்.



(ஐ) 1969ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் உள்ள சிறப்புக் குத் தகை (80,087 ஏக்கர்) முறையை ஒழிப்பதற்கு வகை செய்யும் இச்சட்டம், தலைமை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தடை ஆணையின் விளைவாக, செயல்படுவதனின்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

19. குத்தகைக்கு எடுத்துள்ள நிலங்களின்மீது கட்டிடம் கட்டுவதில் பெருமளவு தொகையினை முதலீடு செய்திருக்கும் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பளிக்க 1922-ஆம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைமை உயர்நீதி மன்றம் அண்மையில் அளித்த சில தீர்ப்புகளின் விளைவாக, குத்தகை ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் கட்டிடங்களையும் நிலங்களையும் ஒப்படைத்துவிடுவதாக நிலக்கிழார்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள குத்தகைதாரர்களுக்கு இச்சட்டத்தின் பயன் கிட்டுவதை இச்சட்டத்தில் கண்டுள்ள சில விதித்துறைகள் மறுப்பதாக உள்ளன என்று அரசுக்கு முறையிடப்பட்டது. இம்முறையீட்டினைக் கவனமாகப் பரிசீலித்த பிறகு ஓர் ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனை எதும், இச்சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை எடுத்துவிடுமாயின் அல்லது வரை யறுக்குமாயின் அது செல்திறனற்றதாகும் என்னும் வகையில் விதித் துறைகள் அடங்கியுள்ளதும் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளதுமான குத்தகைச் சட்டங்களைக் கருத்திற்கொண்டும் 1922ஆம் ஆண்டு சென்னை மாநகர குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதன்மூலம் மேலே குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த குத்தகைதாரர்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் குறைக்க அரசு முடிவு செய்தது. இதன்படி மேற்படி சட்டம் 1972-ஆம் ஆண்டு 4-வது சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது.

20. 1969-ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவேடுகள்) சட்டம் குத்தகை உரிமம் குறித்த முழுமையான நம்பகமான பதிவேட்டைத் தயாரித்துப் பேணிவர வகை செய்கிறது. இந்தப் பதிவு முறை, குத்தகை உரிமை குறித்த எழுத்து மூலமான ஆவணமாகும். வாய்மொழி வடிவில் உள்ள குத்தகை ஒப்பந்தங்களால் ஏற்படும் பல தீங்குகளை இதன்மூலம் தவிர்க்கலாம். தஞ்சாவூர், திருச்சி ராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இச்சட்டம், 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் முதற் கொண்டு எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் செயலாக்கப்பட்டது.

1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் நாள் வரையில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் தயாரிக்கப்பட்ட குத்தகை உரிமைப் பதிவேடுகள் தயாரிப்பில் கண்டுள்ள முன்னேற்றம் வருமாறு :—

| | தஞ்சாவூர். | திருச்சிராப்பள்ளி. | மதுரை. |
|---|---|---|---|
| (i) கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 2,582 | 1,408 | 1,102 |
| (ii) இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 2,515 | 1,326 | 1,102 |
| (iii) வரைவு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 2,515 | 1,326 | 1,102 |
| (iv) மாவட்ட அரசிதழ்களில் வெளியிடப்பட்ட வரைவு ஆவணங்களின் எண்ணிக்கை. | 2,301 | 1,326 | 1,102 |
| (v) முடிவான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடுவதற்காக அனுப்பப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 1,692 | 250 | 285 |
| (vi) பதிவு செய்துள்ள குத்தகைதாரர்களின் மொத்த எண்ணிக்கை. | 1,24,984 | 56,950 | 30,306 |

21. 1961-ஆம் ஆண்டு தமிழ் நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் மூலம் 1959-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் அன்று குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்திருக்கும் நபர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

1971-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் (சட்ட எண். 20/1971), குடியிருப்பு அனுபோகதாரர் அனைவருக்கும், அவர்கள் எந்தத் தேதியிலிருந்து அனுபவித்து வந்தாலும் அவர்கள் வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாப்பு அளிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

22. வேளாண்மைத் தொழிலாளர்களுக்குப் பயனளிப்பதற்காக 1971-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட, பெரும் மாறுதல்களை ஏற்படுத்தும் முக்கிய நடவடிக்கையானது, தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) சட்டமேயாகும். இச் சட்டம், பயிரிடுபவர்களாக அல்லது உரிமம் பெற்றவர்களாக 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாளிலுள்ளவாறு, குடியிருப்பு அனுபோகத்தைக் கொண்டுள்ள



உழவர்கள் அல்லது வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு உடைமை உரிமை வழங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைத் தொடக்கமாகக் கொண்டு, 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து, இச் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும் பயனடைவர்.

23. தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு சட்டம்) சட்டத்தின்கீழ், 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் நாள் வரை, உபரி நிலங்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு, உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பு முதலியவற்றை கீழ்க் காணும் விவர அறிக்கை காட்டுகிறது :—

| | |
|---|---|
| (i) உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு. | 28,839 ஏக்கர். |
| (ii) இனம் (i)-லிருந்து உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு. | 23,181 ஏக்கர். |
| (iii) இனம் (ii)-லிருந்து ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு. | 19,718 ஏக்கர். |
| (iv) ஒதுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை. .. .. | 10,694 பேர். |
| (v) இனம் (ii)-லிருந்து உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தில் தடை ஆணைமூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு. | 2,006 ஏக்கர். |
| (vi) இனம் (ii)-லிருந்து உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்திலிருந்து ஏனைய நடவடிக்கைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு. | 1,457 ஏக்கர். |

தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| (i) சரிபார்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நேர்வுகளின் மொத்த எண்ணிக்கை. | 75,001 |
| (ii) (i) இனத்திலிருந்து இதுவரை சரிபார்க்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | 33,672 |
| (iii) (ii) இனத்திலிருந்து நில உச்ச வரம்பு மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | 1,567 |

(iv) (iii) இனத்திலிருந்து, உபரி நிலத்தைக் காட்டும் வரைவு விவர அறிக்கை தயாரிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. — 108

(v) மேலே குறிப்பிடப்பட்ட (iv) இனத்தின் கீழ் எடுக்கப் பட்ட உபரி நிலத்தின் பரப்பளவு. — 1,885 ஏக்கர்.

24. தமிழ் நாடு 1961ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ், பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப் பட்டுள்ள விலக்குகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தாது ஏமாற்றி வரும் பெரு நிலக் கிழார்களைப் பொறுத்த மட்டில் உள்ள பிரச்சினைகளைச் சமாளிக்க, நடவடிக்கைகள் எடுக்க, அரசு ஆலோசித்து வருகிறது. இந் நிலையைப் புரட்சிகரமாக மாற்றும் நோக்கத்துடன், அறிவிப்பு ஏதும் செய்யாமல், 30 ஸ்டாண்டர்டு ஏக்கரைப் 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைப்பதற்குத் தேவையான சட்டத்தை இந்த அரசு கொண்டு வந் துள்ளது.

தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தத் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டத்தின்கீழ், கரும்பு பயிராகும் நிலங்களுக்கும், மேய்ச்சல் நிலங்களுக்கும் அளிக்கப்பட்ட விலக்குகளை அரசு ரத்து செய்து விட்டது. 1972ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15ஆம் நாள் முதல் இது செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் செயல்படத் தொடங்கிய நாளுக்குப் பிறகு, அதாவது 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாளுக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக் கழகங்களுக்கு வழங்கப் பட்ட எல்லா விலக்களிப்புகளையும் கல்வி நோக்கங்களுக்காகவும் மருத்துவ வசதிகளுக்காகவும், பொறுப்புக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அளவு நிலத்தைத்தவிர வேறு நிலங்களுக்கான விலக்கைத் திரும்பப் பெறுவது என அரசு தீர்மானித்துள்ளது. மேலும் ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கப்பட்ட 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நில உச்ச வரம்பை 40 ஸ்டாண்டர்ட்டு ஏக்கர் நிலமாக குறைக்க அரசு தீர்மானித் துள்ளது. மேலும், தமிழ் நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் 73 (5) பிரிவின் கீழ் " மலைப் பகுதிகள் " குறித்து வழங்கப்பட்ட விலக்குகளை தமிழ் நாடு அரசின் சட்டமன்ற இரு அவைகளின் கூட்டுக் குழுவின் பரிவுரைகளுக்கு இணங்க திரும்பப் பெறுவது என்று அரசு தீர்மானித்துள்ளது. இதற்குத் தேவையான சட்டம், சட்டமன்றத்தின் நடப்புக் கூட்டத்தில் கொண்டுவரப்படும்.



25. திரு ஆரூரான் சர்க்கரை ஆலையிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட விருக்கிற கரும்பு சாகுபடியாகும் நிலங்களை நிர்வகிப்பதற்காக கழகம் ஒன்றை அமைக்க அரசு கருதியுள்ளது.

26. 1963-ஆம் ஆண்டில் நிலவிய கொடிய வறட்சியின் காரணமாக, குத்தகைக் கிராமங்களின் குத்தகைத்தாரர்கள் நிலுவையாக உள்ள குத்தகையைச் செலுத்தவில்லை என்ற காரணத்தால் அவர்கள் வெளி யேற்றப்படுவதினின்றும் தடுப்பதற்கு அரசு சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இத்தடை 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ஆம் நாளில் நீக்கப்பட்ட போது, தமிழ் நாடு 1968-ம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (சிறப்பு விதித்துறைகள்) அவசரச் சட்டத்தை (இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக பின்னர் இயற்றப்பட்ட வேறு ஒரு சட்டம்) அரசு வெளியிட்டது. இச்சட்டத்தின்படி 1948-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாளில் உள்ள நிலுவைகள் தற்போதுள்ள நிலுவையோடு வட்டி ஏதுமின்றி 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள், 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ம் நாள், 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் ஆகிய நாட்களில் அல்லது அதற்கு முன்னர், நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தப்படத்தக்கதாகும். இந்த நிலுவை களைச் செலுத்த இயலாமல் பல குத்தகைதாரர்கள் இன்னலுறுகின்றனர். இந்த குத்தகைதாரர்களின் துயரைக்களையும் பொருட்டு, நடப்புப் பசலிக்கான அதாவது 1381-வது விளைச்சல் ஆண்டின் நிலுவைகளை செலுத்திவிட்ட குத்தகைதாரர்களுக்கு 1380-வது விளைச்சல் ஆண்டு இறுதி வரையிலுள்ள பழைய குத்தகை நிலுவைகளை ரத்துச் செய்வதென்று அரசு தீர்மானித் துள்ளது. இதற்குத் தேவையான சட்டம் சட்ட மன்றத்தின் நடப்புக் கூட்டத்தில் கொண்டுவரப்படும்.

## இணைப்பு 2

[ -ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### உணவு மானியக் கோரிக்கை.

நெல், அரிசி வணிகம் குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டு மென்ற கொள்கை 1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் செயல் படுத்தப்பட்டது. இக்கொள்கை 1971 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் பட்டு வந்தது. எந்த நோக்கங்களை எய்த வேண்டுமென்று எதிர்பார்த்து இக்கொள்கை செயல்படுத்தப்பட்டதோ அவை பெரும்பாலும் நிறைவு பெற்று விட்டதே கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதற்குக் காரணமாகும்

முந்திய ஆண்டைக்காட்டிலும் இவ்வாண்டில் பெருமளவு உற்பத்தி இருக்குமென்று வேளாண்மைத் துறை எதிர்பார்த்தது. நெல், அரிசி இவற்றின் விலை, கிடைக்கும் அளவு ஆகியவற்றின் நிலைமை தொடர்ந்து 1971 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே மன நிறைவு அளிக்கத்தக்கதாய் இருந்து வந்திருக்கிறது, ஆனால் 1971 மே-ஜூன் மாதங்களுக்குப் பின்னர் நெல், அரிசி விலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏறுமுகமாயிருந்தன. அறுவடைக்குப் பின்னர் விலை இறங்குவதும் அதனை அடுத்து ஜூலை, செப்டம்பர் திங்களுக்கிடையே தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பயிர் அறுவடை வரையும் பிற மாவட்டங்களில் முதற்போகம் அறுவடை வரையிலும் விலை ஏறுவதும் ஆண்டு தோறும் நடப்பதொன்றாகும். ஆனால் 1971 ஆம் ஆண்டில் விளைச்சல் இல்லாத காலத்தில் இருந்த விலை ஏற்றம் 1970 ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாகும். இதனால், அரசு நிர்ணயித்திருக்கும் ஆதரவு விலையில் அது தங்களிடம் உள்ள நெல்லை வாங்கிக் கொள்ளும் என்பதால் எச்சமயத்திலும் அவர்களுக்குக் குறைந்த அளவு விலை கிடைக்கும் என்ற நம்பிக்கை, நெல் உற்பத்தியாளர்களின் மனதில் உருவாகியதன் காரணமாகவே இந்த விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கலாம். எனவே, நல்ல விலை கிடைக்கும் வரை தங்களது இருப்புகளை நிறுத்தி வைக்க அவர்கள் தயாராக இருந்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பயிருக்கு மிகவும் சாதகமான நிலைமை இருந்தது. குறுவைப் பயிர் அறுவடையின் போது குறைந்த அளவு மழையே பெய்ததும் சாதகமாகவே அமைந்தது. அதிக மழை பெய்திருந்தால் ஈரமான நெல்லை சேமித்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டு அதன் காரணமாக அதனைக் குறைந்த விலைக்கே விற்க வேண்டியிருந்திருக்கும். குறைந்த அளவு மழையே பெய்ததால் அவ்வாறு ஈர நெல்லை குறைந்த விலையில் விற்பனை செய்வது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டது. உண்மையில், விலை ஆதரவு நடவடிக்கை 1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது போல் 1971 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் நெல் ஏதும் கொள்முதல் செய்யப்படவில்லை. கட்டாயமாக நெல்லை விற்கவேண்டிய நிலை உருவாகியிருந்தால், அது நெல்லின் விலையைப் பாதித்திருக்கும். ஆனால், அத்தகைய நிலை இல்லாததன் காரணமாக, விலை பாதிக்கப்படவில்லை. ஆயினும் 1972 ஜனவரி மாதத்தில் தொடங்கிய முதல் அறுவடைக்குப் பின்னர் விலைகள் குறைந்துள்ளன. கடந்த ஆண்டில் இதே கால அளவில் நிலவி வந்த விலைகளிலேயே தற்போதும் நெல் விலைகள் உள்ளன. ஆற்காடு கிச்சடி போன்ற சிறந்த வகை நெல்லின்

மக்கள் மிகவும் விரும்பி வாங்குவதால் அவற்றின் விலை உயர்ந்துள்ளது.
வட ஆற்காடு மாவட்டத்தில் பாதகமான பருவ நிலைமை காரணமாக
இது போன்ற உயர்ந்த ரக வகை நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதே
இதற்குக் காரணமாகும்.

நெல் கொள்முதல் செய்யப்பட்டு தஞ்சாவூர், தென் ஆற்காடு, வட
ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு உபரி மாவட்டங்களிலிருந்து
கொண்டு வரப்பட்ட நெல், அரிசி அளவுகளில் 15 சத வீதம் விதிப்புக்
கொள்முதல் என்ற அடிப்படையில் தொடக்கத்தில் 1971 ஆம் ஆண்டில்
நெல் கொள்முதல் செய்யப்பட்டது. பின்னர், 1971 ஏப்ரல் மாதத்தில்
இந்த நான்கு மாவட்டங்களில் வாங்கப்பட்ட நெல் அனைத்திற்கும் இந்த
விதிப்புக் கொள்முதல் நீட்டிக்கப்பட்டது. உள்ளூரில் பயன்படுத்தப்படு
வதற்காக வாங்கப்படும் நெல்லுக்கு விதிப்புக் கொள்முதலிலிருந்து விலக்
களிக்கப்பட்டிருப்பதனால் விதிப்புக் கொள்முதல் ஏய்ப்பு இருக்கும் என்று
கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும்
1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முதல் இந்த விதிப்புக்
கொள்முதல் அளவு 25 சத வீதமாக உயர்த்தப்பட்டது. அந்த மாவட்டத்
திலிருந்து பெருமளவு அரிசி வெளியே போவதைக் குறைத்து, அதன்
மூலம் அந்த மாவட்டத்திற்குள் நெல் விலைவாசியைக் குறைப்பதே
இதன் நோக்கமாகும். முந்திய ஆண்டில் 50 சத வீதம் விதிமுறைக்
கொள்முதல் விதிக்கப்பட்டிருக்க, இந்த ஆண்டில் அது 15 சத வீதமாகக்
குறைக்கப்பட்டது ; இதன் விளைவாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளூர்
மக்கள் பார்த்திராத அளவுக்கு அரிசி விலை உயர்ந்தது. குறுவைப் பயிர்
விற்பனைக்கு வசதி செய்ய வேண்டி விதிப்புக் கொள்முதல் விதிப்பது
1971ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ஆம் தேதி முதல் நிறுத்தப்
பட்டது. ஆனால், முன்னர் கூறியது போல் அவ்வாறு விற்பனைக்கு வசதி
யளிப்பது உண்மையில் அவசியமில்லாதிருந்ததால், விதிப்புக் கொள்முதல்
1971ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி முதல் மீண்டும்
விதிக்கப்பட்டது.

1971ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ஆம் தேதி வரை விதிப்புக்
கொள்முதலாக 84,215 டன் அரிசி சேகரிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்
தில் 1971ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் தேதி முதல் 1971ஆம்
ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை விதிப்புக் கொள்முதல்
மூலம் 13,000 டன் அரிசி கிடைத்துள்ளது. வாங்கப்படும் நெல், அரிசி
அனைத்தின் மீதும் 25 சதவீதம் விதிப்புக் கொள்முதல் விதிப்பது

1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி முதல் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் விதிப்புக் கொள்முதல் மூலம் 1,10,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடையில்லாத காலங்களில் விலைகள் ஏறுமலிருக்க அரசிடம் பெருமளவுக்கு நெல், அரிசி இருப்பு வைத்திருக்க வேண்டுமென்ற நோக்குடன் வெளி அங்காடியில் கூடுதலாக நெல் வாங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. மேலும் அறுவடைக் காலத்தில் விலைகள் குறைவாக இருக்கும். குறிப்பிட்ட சத வீதம் விதிப்புக் கொள்முதல் விதிப்பதை விட இம்முறை சிறந்தது எனக் கருதப்படுகின்றது. ஏனெனில் விதிப்புக் கொள்முதல் அளவைக் கொடுத்த பின்னர் வணிகர்களிடம் உள்ள நெல், அரிசியின் விலை வெளி அங்காடியில் ஏறலாம். அரசின் சார்பாக இத்தகைய வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த வணிக நடவடிக்கைகளில் நெல், அரிசி மட்டும் அடங்காது. அவசியமேற்படின் பிற உணவுப் பொருள்களும் அடங்கும்.

சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர், சிங்கநல்லூர் நகராட்சிகளிலும், பேரூர் ஊராட்சியிலும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 300-க்கு மேற்படாத வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு ஈடு செய் விலையில் அரிசி வழங்குவது 1971-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் கைவிடப்பட்டுள்ளது., வெளி அங்காடியில் கிடைக்கும் அரிசியின் அளவைக் கருத்திற்கொண்டும், பாகிஸ்தான் நாட்டுடன் போர் மூண்டதன் காரணமாக ஏற்பட்ட அவசர நிலைமையின்போது உற்பத்தி வாயில்களைப் பராமரித்து அவற்றைப் பெருக்கவேண்டுமென்ற அவசியத்தை முன்னிட்டும் இவ்வாறு ஈடு செய் விலையில் அரிசி வழங்குவது கைவிடப்பட்டுள்ளது. ஈடு செய் விலைத் திட்டத்தின்கீழ் 1971-ஆம் ஆண்டில் 1·08 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கொடுக்கப்பட்ட மொத்த உதவித் தொகை ரூ 371 இலட்சமாகும். இதைத் தவிர, 1971-ஆம் ஆண்டில் அறுவடை இல்லாத காலத்தில் வெளி அங்காடியில் விலைகள் ஏறியிருந்ததன் விளைவாக, அரசிடமுள்ள இருப்புகளிலிருந்தும் இந்திய உணவுக் கழகத்திடமிருந்த இருப்புகளிலிருந்தும் ஏறத்தாழ 17,000 டன் அரிசி எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்பட்டது.



மக்கள் தொகை மிகுதியாக உள்ள சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் குறைந்த வருமானமுடைய தொகுதியினருக்குச் சிக்கன விலையில் அரிசி வழங்கும் திட்டம் ஒன்று 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. நபர் ஒன்றுக்கு பதினைந்து நாட்களுக்கு 1,500 கிராம் அரிசி என்ற தற்போதைய வீதத்தில் இத் திட்டத்தின்கீழ் வழங்கத் தேவைப்படும் அரிசி சுமார் 90,000 டன்களாகும். கொள்முதல் செய்ததில் எஞ்சியிருப்பவையும், வெளி அங்காடியில் வாங்கியவையும், அறுவடை இல்லாத காலத்தில் அரிசி விலைகளை ஏறவிடாமல் கட்டுப்படுத்தும் பொருட்டு நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்க அவசியமான அளவுக்குப் பயன்படுத்தப்படும். கூடுதலாக நெல் கொள்முதல் செய்வதன் காரணமாக பொதுவாக விலை வீதங்கள் பாதிக்கக் கூடாமலும், அரசு இருப்புகளிலிருந்து சகாய விலையில் வழங்கப்படும் அரிசியினைப் பெறும் ஏழை மக்களின் தேவையும், பொது மக்களின் தேவையும் நெல் உற்பத்தியாளர்களின் தேவையும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தற்போது அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. 1971-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரிசி விலைகள் ஓரளவுக்கு ஏறியிருந்தாலும்கூட அரிசிப் பற்றுக்குறை ஏதும் இல்லை. எனவே, ஏழை மக்களுக்கு அரசு இருப்பிலிருந்து குறிப்பிட்ட அளவு அரிசி வழங்குவதனால் ஏனைய பிரிவினருக்கு அதிக இடர்ப்பாடின்றி ஏழை மக்களுடைய துயரைப் போக்க இது தேவையான பரிகாரமளிக்கும்.

இவ்வாண்டில் கொள்முதல் விலை தரமான, நடுத்தர வகை நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்ந்தது. மிகு பயன் தரும் வகைகளுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1 ஊக்கத் தொகையாகக் கொடுப்பது தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. கொள்முதல் விலை உயர்ந்ததன் விளைவாக விற்பனை விலையும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நடப்பிலுள்ள சில்லறை விற்பனை விலைகள் பின்வருமாறு :—

| | ரூ. |
|---|---|
| புழுங்கலரிசி—முதல் தரம் .. .. .. .. | 1·08 |
| புழுங்கலரிசி—இரண்டாம் தரம் .. .. .. | 1·02 |
| பச்சரிசி—முதல் தரம் .. .. .. .. .. | 1·14 |
| பச்சரிசி—இரண்டாம் தரம். .. .. .. .. | 1·08 |

இம் மாநிலம் தொடர்ந்து தனியானதொரு மண்டலமாகவே இருந்து வருகிறது. மாநிலத்திற்கு வெளியே நெல், அரிசி ஆகியவற்றைக் கொண்டு செல்ல அனுமதிச் சீட்டுகள் தேவை. நமது மாநிலத்தின் எல்லை

யிலிருந்து கேரள மாநிலத்திற்கு அனுமதியின்றி நெல், அரிசி கொண்டு போகப்படுவதாகத் தொடர்ந்து புகார்கள் வந்துள்ளன. எல்லையிலிருந்து இவ்வாறு கொண்டு செல்வதைத் தடுக்க எல்லையில் சோதனைச் சாவடிகள் அமைப்பதன் மூலம் இயல் ஊர்திப் பிரிவுகள் மூலமும் காவல் வலுப் படுத்தப்பட்டுள்ளது. அறுவடை இல்லாத காலத்தில், உபரி மாவட்டங் களில் விதிப்புக் கொள்முதல் செயல்படுத்தப்படாதபோது, எல்லையில் காவலை வலுப்படுத்தும் பொருட்டு மாநில எல்லைகளுக்குப் பணியாளர்கள் அனுப்பப்பட்டனர். எல்லைகளில் காவலை வலுப்படுத்தும் நோக்கத்துடன், உள்ளூரில் கிடைக்கும் நெல், அரிசி அளவினைக் கருத்திற்கொண்டு, எல்லைப்புறப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படும் நெல், அரிசி அளவுகளை நிர்ணயிக்குமாறும் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்களிடமுள்ள இருப்புகளை உன்னிப்பாகக் கவனித்து வருமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. எல்லைப்புறப் பகுதிகளுக்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கப் படும் அரிசி அப்பகுதியில் உண்மையிலேயே பொது மக்களுக்கே விற்கப் படுகின்றதா என்று பார்த்துக் கொள்ளும் பொருட்டும் நாணயமற்ற வணிகர்கள் எல்லையைக் கடந்து அரிசியைக் கடத்தாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டும் எல்லைப்புறப் பகுதிகளில் அட்டைகள் மூலம் முறை யாக அரிசி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வரவும் அரசு கருதியுள்ளது.

மாநில எல்லையோரப் பகுதிகளில் நெல், அரிசி எடுத்துச் செல்லுதல் மீதான கட்டுப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன், அத் தகைய பகுதிகள் தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு நெல், அரிசி (போக்கு- வரத்துக் கட்டுப்பாட்டு) ஆணையின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் நெல், அரிசி கொண்டு செல்வதை உன்னிப்பாகக் கவனிக்கவும், மாநிலங்களுக்கிடையேயான நடமாட்டம் என்ற போர்வையில் மாநிலத்திற்கு வெளியே கள்ளத்தனமாக நெல், அரிசி கடத்திச் செல்வதைத் தடை செய்ய வசதியளிக்கவும் இது வழி கோலும். எல்லைப்புறத்தில் நெல் உபரியாக உள்ள பகுதிகளாகிய கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், செங்கோட்டை, தென்காசி வட்டங்கள், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளை யம், பெரியகுளம் வட்டங்கள் முதலிய பகுதிகளில் வாங்கப்படும் நெல் அளவில் 15 சத வீத விதிமுறைக் கொள்முதல் விதிக்கும்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கும் கொள்முதல், இப்பகுதிகளில் அனு மதிக்கப்பட்ட மொத்த விற்பனை வணிகர்கள் நெல்லை நேரடியாக வாங்கு வதற்கு உதவி புரியும் வகையில், பயிர் செய்யாக் காலத்தில் நகர



பயன்படுத்தப்படும் மாநில எல்லையோரப் பகுதிகளில் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மாநில எல்லைப்புறப் பகுதிகளில் சோதனையைத் தீவிரமாக்கியதன் விளைவாகப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள வசதிக்குறைவினைக் குறைக்கும் பொருட்டு, மாநில எல்லைகளில் தற்போது 15 மைல் அகலமுடைய எல்லையோரப் பகுதி ஐந்து மைல் அகலம் உடைய பகுதியாகக் குறைக்கப்படும். இரு முறை சோதனையிடுவதற்கு வசதியளிக்கும் வகையில் மாநில எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளைத் தவிர இத்தகைய எல்லையோரப் பகுதி களுக்குள் நெல், அரிசி கொண்டு செல்வதை முறைப்படுத்த இவ் விடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும்.

மாநிலத்திற்குள், விதிப்புக் கொள்முதல் மூலம் நெல் கொள்முதல் செய்யும் பொருட்டு நெல், அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் தஞ்சாவூர், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு உபரி மாவட்டங்கள் வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களுக்கு வெளியே அரிசி, நெல் கொண்டு செல்ல அனுமதி தேவை. விதிப்புக் கொள்முதல் நெல்லைக் கொடுப்பதன் மேல் இந்த அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 1971-ல் இம் மாநிலத்திற்கு 3·96 லட்சம் டன் கோதுமை ஒதுக்கப்பட்டது. இதில் 3·83 லட்சம் டன் கோதுமை, கோதுமைப் பொருள்கள் தயாரிப்பதற்காக உருளை மாவு ஆலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. 10,000 டன் கோதுமை, கோதுமை பயன்படுத்துவோர்க்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

இம் மாநிலத்தில் சோளம் உற்பத்தி உபரியாக இருப்பதனாலும், இது இங்கு ஓரளவுக்கு பயன்படுத்துவதனாலும், சோளம் விற்பனை யாகாததன் காரணமாக குறைந்த விலையில் விற்று உற்பத்தியாளர்கள் அவதியுறாமல் இருக்கும் வகையில் சோளம் ஏற்றுமதி செய்ய அனுமதிகள் வழங்கப்பட்டன. இந்திய உணவுக்கழகமும் சோளத்திற்குப் போதிய விலை கொடுத்து வாங்கி ஆதரவு அளித்தது. மேலும், அவ்வாறு வாங்கிய சோளத்தை மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யவும் மேற்படிக் கழகம் அனுமதிக்கப்பட்டது. ஏனைய கருந்தானியங்கள் அல்லது சோளம் வணிகம் எதையும் இவ்வரசு மேற்கொள்ளவில்லை.

சர்க்கரை தொடர்ந்து எளிதாகக் கிடைப்பதன் காரணமாக, சர்க்கரை மீதான கட்டுப்பாடு 1971ஆம் ஆண்டு மே திங்கள் 25-ம் நாள் முதல் நீக்கப்பட்டுவிட்டது. எனினும், சர்க்கரை விலை 1971 நவம்பர் மாதத்தில் உயரத் தொடங்கியது. வெளியிடப்படும் சர்க்கரையில் 50 சத வீதத்தை கிலோ ஒன்றுக்கு ரூ 2-க்கு மேற்படாமல் முறைப் சில்லறை விற்பனை முனையில்

படுத்தப்பட்ட கடைகள் மூலமாக விற்பனை செய்ய மாநில அரசுக்கு இயலும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று இந்திய அரசுக்குக் கருத்துத் தெரிவிப்பது அவசியமென இவ்வரசு உணர்ந்தது. இது குறித்து இந்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் வரை, இவ்வரசு இம் மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளுடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தம் மூலம், டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட சர்க்கரையில் 10 சத வீதத்தை எடுத்துக் கொண்டு முறைப்படுத்தப்பட்ட கடைகள் மூலம் சில்லறை விற்பனையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் சர்க்கரை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. இது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டது. 1972 ஜனவரி மாதம் முதல், இந்திய அரசு சர்க்கரை ஆலைகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம், வெளியிடப்படும் சர்க்கரையில் 60 சதவீதத்தை முறைப்படுத்தப்பட்ட முகவர் நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்ய எடுத்துக் கொண்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் மாநில அரசுக்கு திங்கள் ஒன்றுக்கு 10,000 டன் சர்க்கரை ஒதுக்கப் பட்டுள்ளது. சர்க்கரை வழங்குவதற்காக குடும்பங்கள் அனைத்திற்கும் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவசியமாயின் ஏனைய இன்றி யமையாப் பொருள்கள் வாங்கவும் இந்த அட்டைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சர்க்கரை கிடைக்கும் அளவு, எடுத்துச் செல்லும் அளவைப் பொறுத்தும், எல்லாப் பகுதிகளிலும் ஒரு கிலோ கிராம் என்ற குறைந்த அளவுக்குட்பட்டும் பங்கீட்டு அளவினை முடிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் நடுத்தர வகுப்பின் அடித்தட்டில் இருப்பவர்கள் சர்க்கரையைப் பயன் படுத்தவில்லை. இது அதிக வருமானம் உடையோர்க்கு அதிக அளவு பங்கீட்டினை அனுமதிக்க ஏதுவாயுள்ளது.

1971ஆம் ஆண்டு பிற்பகுதியில் விலைவாசி உயர்ந்தபோதிலும் (உற்பத்தியாளர் தமது இருப்புகளை வைத்திருக்க திறனும் உறுதியும் கொண்டுள்ளார் என்ற காரணத்தினால் விலைகள் ஏறியிருந்தன என்று முன்னரே குறிப்பிடப்பட்டது) வரும் ஆண்டில் விலை நிலவரம் தொடர்ந்து கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வரும் என்று அரசு எதிர்பார்க்கிறது. விலைகள் உயர்ந்தால், குறைந்த வருமானம் உடையோர்க்கு ஏற்படும் தொல்லையைக் குறைக்கப் பெருமளவு மூலயிருப்பு வைத்துக் கொள்வதன் மூலம் போதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது பயிர் செய்யாத காலத்தில் பெருமளவு கோதுமையும் உதவியாக இருக்கும். உற்பத்தியாளர்களுக்கு வெளி அங்காடியில் அதிக விலையைக் கொடுப்ப தன் மூலம் அவர்களுக்கு ஊக்கமளிப்பதனால் தொடர்ந்து உற்பத்தி



பெருகும். அதன் பலனாக கடந்த இரண்டாண்டு காலங்களில் உள்ளது போலவே போதிய அளவு உணவுப்பொருள் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

உணவுப்பொருள்கள் போக்குவரத்து மீதான கட்டுப்பாடுகள் தவிர, மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருள்களின் விலை நாடு முழு வதிலுமான உற்பத்தி, பயன்துய்க்கும் அளவைப் பொறுத்தே அமைந்துள்ளன. எண்ணெய், கடலை ஆகியவற்றின் விலை இறங்கு முகமாக உள்ளது. ஆனால் பருப்பு வகைகளில் விலை உயர்ந்துள்ளது. 1971 டிசம்பர் திங்களில் போர் நடந்தபோது ஒரு சிறிது காலத்திற்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடாக இருந்ததே தவிர, மற்றப்படி மண்ணெண் ணெய் தொடர்ந்து போதிய அளவுக்குக் கிடைத்து வருகிறது. பன்னெடுங்காலமாக வீட்டு எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் விறகு, நிலக்கரி ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் மண்ணெண்ணெய், பெட்ரோலிய திரவ வாயு, ஸீக்கோ போன்றவை தேவையான அளவுக்குக் கிடைப்பதால் மக்களுக்கு அதிக அளவுக்கு இடர் ஏற்படுவதற்கில்லை.

குறிப்பிட்ட ஒரு பொருளை மக்கள் விரும்பிப் பயன்படுத்தும்போது அப்பொருளைப் போதிய அளவுக்குக் கிடைக்கச் செய்தால்தான், அப் பொருளின் விலையை நியாயமான வீதத்திற்குக் கொண்டு வர இயலும். கிடைக்கக்கூடிய பொருள்களைப் பங்கீடும் செய்யும் முறையில் பல குறைகள் உள்ளன. இந்த நிலை, குறிப்பாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் காணப்படுகிறது. சில வகை தயாரிப்புப் பொருள்களை பயன்துய்ப்போர் காலங்காலமாக விரும்பி வாங்குகின்றனர். அப்போது பெருகி வரும் தேவைக்கேற்ப அத்தகைய பொருட்களை வழங்க முடியவில்லை. உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அவை உற்பத்தி செய்யும் பொருட்களின் மீது கட்டுப்பாட்டினை விதித்திருந்த போதிலும், கிடைக்கக்கூடிய பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இருப்பினும், குடும்பத் திற்குத் தேவையான உணவு தானியங்கள், உணவு எண்ணெய்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் விலை, அவற்றின் உற்பத்தியாளருடைய நியாயமான விலைக்கு முரண்படாமலும் குறைந்த வருமானம் உடையோர் வாங்கக் கட்டுபடியாகக் கூடிய விதத்திலும் நியாயமான அளவுக்குக் கொண்டுவரப்படலாம். எனவே, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், உணவு தானியங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதே இந்த அரசின் முழு முயற்சி யாக உள்ளது.

## இணைப்பு 3.

[..........-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ் நாட்டில் வீட்டுவசதி—1971-72

### முன்னுரை.

வளர்ச்சி குன்றிய எந்த நாடும் உணவு, உடை, உறையுள் பற்றிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பது இயற்கையே. நமது நாட்டில் வீட்டு வசதிப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதை வலியுறுத்த வேண்டிய தேவையில்லை. 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி அந்த ஆண்டில் 60 லட்சம் வீடுகள் பற்றாக்குறையாக இருந்தன. ஐந்தாவது திட்ட இறுதிக்குள், இந்தப் பற்றாக்குறை 90 லட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கிராம வீட்டு வசதித் திட்டங்களை விழிப்புடன் நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், அத்துறையில்தான் தேவைகளுக்கும் உண்மை நிலைக்கும் இடைவெளி மிகுந்து காணப்படுகிறது. நகர்புற பகுதிகளில் இப்போது தொழில்கள் வளர்ந்து வருவதால் நாட்டுப்புறங்களிலிருந்து பெரும்பாலான மக்கள் நகரங்களுக்கு வந்து குடியேறுகின்றனர். அதனால் நகர்புறப் பகுதிகளில் வீடுகள் பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது.

2. விடுதலை அடைந்த பிறகு, இந்திய அரசுமேற்கண்ட நிலைமையை ஆய்ந்தறிந்து, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதிகளை அளிக்க இணைவான முயற்சிகளை மும்முரமாக மேற்கொண்டது. வளங்கொழு அரசு, நிலைத்த குடியாட்சி இவற்றைத் தோற்றுவிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட நமது அரசு, பாமர மக்களுக்கு, பெரும்பாலும் குடிசைப்பகுதியில் வாழ்வோருக்கும், தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் நல்ல சுற்றுப்புறச் சூழல்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி எண்ணத் தொடங்கியது. முக்கியமாக, கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வீடுகள் கட்டுவதற்கு தமிழ் நாடு அரசு முதற்கண் நிதி வழங்கத் தொடங்கியது. 1945-ம் ஆண்டில் மாநகர வளர்ச்சிப் பொறுப்புக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தக் கழகம் அரசு தந்த நிதி உதவியுடன் வீட்டுத் தேவையைப் பெருமளவில் நிறைவு செய்ய முடிந்தது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் போன்ற ஓரிரண்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும்கூட, இப்பணித் திட்டங்கள் இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களிலேதான், முனைப்



பாக மேற்கொள்ளப்பட்டன. இக்கால அளவுகளில் குடிசைப் பகுதி வளர்ச்சி—குடிசைப் பகுதி ஒழிப்புத் திட்டம், மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், கிராம வீட்டு வசதித் திட்டம் போன்ற பல வீட்டு வசதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வீட்டு வசதித் திட்டம் சென்னை மாநகரில் மட்டுமன்றி மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதப்பட்டதால், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப் பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961 ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு உடையதாகும். பல துறைகளின் உறுப்பினர்கள் அடங்கிய இந்த வாரியம் சட்டப்படி அமைந்ததாகும். எனவே, இந்த வாரியம், இம்மாநிலத்தின் வீட்டு வசதித் திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து வேலைத் திட்டங்களை விரைவாகவும், பயனுள்ள வகையிலும் நிறைவேற்ற முடிகிறது. முன்பு கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்த கூட்டுறவு வீட்டு வசதிப் பிரிவு இப்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களைத் தவிர நடுத்தர வருமானம் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருவாய் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், நிலத்தைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம் போன்ற பல திட்டங்கள், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, மேற்கொள்ளப்பட்டன.

3. சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகளை எந்த வகையில் சிறப்பாகவும் விரைவாகவும் மாற்றியமைக்கலாம் என்பது குறித்துக் கடந்த சில காலமாக அரசு பரிசீலனை செய்து வந்தது. சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளைப் படிப்படியானதொரு திட்டத்தின்கீழ் ஏழாண்டுகால அளவிற்குள் அறவே மாற்றியமைப்பதென அரசு இறுதியாக முடிவு செய்தது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்திற்கு ஒரு புது வடிவம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இத்தீர்மானத்திற்கேற்ப, அரசுச் சார்புள்ளவர்கள், அரசு சாராதவர்கள் ஆகியோரைக் கொண்ட குடிசை மாற்று வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை கவனித்து வந்த குடிசை மாற்றும் பணி, பணியாளர்கள் இருப்புகள், பொறுப்புகளுடன் குடிசை மாற்றும் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிசை

மாற்றும் வாரியம் சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகளை மாற்றியமைக்கும் பணியை தற்சமயத்திற்குக் கவனிக்கும். இப்பணியை செயல்படுத்த தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தையும் அரசு இயற்றியுள்ளது. வெளியூர்களில் குடிசைப்பகுதிகளை மாற்றியமைக்கும் பணி தொடர்ந்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கவனிக்கப்பட்டு வரும்.

4. ஒவ்வொரு வீட்டு வசதித் திட்டம் குறித்தும் சுருக்கமான அறிக்கை அடுத்துவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர்களுக்கு மனிவு வீட்டு வசதித் திட்டம்.

5·1. ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்ட பிறகு தனியார்த் துறையிலும், பொதுத் துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களின் பெரும்பாலோருக்கு வீடு கட்டிக் கொள்ள இயலாது அல்லது வேலை செய்யும் இடத்திற்கு அப்பால் மிகத் தொலைவிலுள்ள இடங்களில் வசிக்க இயலாது. சில தொழிற்சாலை நிர்வாகத்தினர் தங்களது தொழிலாளர்கட்கும் பணியாளர்கட்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்றனர். ஆனால், இதனாலேயே சிக்கல் தீர்ந்துவிடாது. எனவே வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே நல்ல சூழலில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கு இயலும் பொருட்டு இந்திய அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

5·2. இத்திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை, ஆகிய மூன்றுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. மாநிலத் திட்டங்கள் அனைத்துக்குமாகச் சேர்த்து இந்திய அரசு வழங்கும் மொத்தக் கடன்கள், மானியங்களில், இம்மூன்று துறைகளுக்கென்று மாநில அரசுகட்கு இந்திய அரசு வழங்கும் நிதியுதவி அடங்கியுள்ளது.

5·3. இந்திய அரசு நிதி உதவியளிக்கும் காரியத்துக்காக, ஒற்றை மாடிக் கட்டிடங்களில், இரண்டு அறைகள் கொண்ட சிறிய குடியிருப்புகளுக்கு, ரூ. 4,850 விலையையும், இரண்டு அறைகள் கொண்ட முறையான குடியிருப்புகளுக்கு ரூ. 5,600 விலையையும் உச்சவரம்பாக வரையறுத்துள்ளது. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள



இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 1,100 கூடுதல் விலை அனு
மதிக்கப்படுகிறது. ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கள்
தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 450 கூடுதல்
விலை அனுமதிக்கப்படுகிறது.

5·4. பொதுத் துறை.—தனியார் தொழிற்சாலை நிறுவனங்களின் பணி
யாளர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்வதற்காக, அரசு
இத்திட்டத்தின் கீழ்க் குடியிருப்புகளைக் கட்டுகிறது. அரசுச் சார்பில் குடி
யிருப்புகளைக் கட்டும் பணி வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்
பட்டுள்ளது. இவ்வாறாக, கட்டப்பட்ட வீடுகளின் உரிமை அரசிடம்
நிலை பெறுகிறது. தொழிற் பேட்டைகளில், தனியார் நிறுவனங்களின் பணி
யாளர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக குடியிருப்புகளை இத்திட்டத்தின் கீழ்
தொழில்-வாணிகத் துறை இயக்குநர் கட்டி வருகிறார். இந்த வீடுகளின்
உரிமையும் அரசிடம் நிலை பெறுகிறது. 1972–73-ல் 246 வீடுகள் கட்டத்
திட்டமிடப்பட்டுள்ளது.

5·5. கூட்டுறவுத் துறை.—தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டு வசதி
சங்கங்களுக்குக் கடனுதவி மட்டுமே நிதியுதவி அளிக்கப்படுகிறது. நிலம்,
கட்டிடம் ஆகியவற்றின் மதிப்பீட்டுச் செலவில் 80 சதவீதம் கடனாக
வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை உறுப்பினர்களால் பங்கு மூலதனமாக
ஏற்கப்படும். 1972–73-ல் 90 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 5·00 லட்சம்
தொகையைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

5·6. தனியார் துறை.—தொழிற்சாலை பணியாளர்களுக்கான குடியிருப்
புகளைக் கட்டும் பணியை மேற்கொண்டுள்ள தனியார் நிறுவனங்களின்
நிர்வாகிகளுக்கு உச்சவரம்புச் செலவுக்குட்பட்டு, 50 சதவீதம் கடனாக
வும் 25 சதவீதம் உதவித் தொகையாகவும் பெற உரிமையுள்ளவர்
களாவர். எஞ்சிய செலவை நிறுவனங்களின் நிர்வாகமே ஏற்க வேண்டும்.
இந்த வீடுகள் குறைந்த வாடகையில் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும்
தனியார் துறைத் தொழிலதிபர்களுக்கு நிதியுதவி அளிப்ப
தற்காக, 1972–73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூ. 2·97 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 310 வீடுகள் கட்டி முடிக்கப்படு
மென்று எதிர்பார்க்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 4 சத
வீதத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருமாறு தொழிலதிபர்

களுக்குச் சிறப்பு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோளின்படி இத்திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள பல நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

5·7 திட்டச் சாதனைகள்.

| (1) | பொதுத் துறை. (2) | கூட்டுறவுத் துறை. (3) | தனியார் துறை. (4) |
|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டு திட்டம் வரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 3,998 | 2,055 | 278 |
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டுத்திட்டம் வரையில் பயன்படுத்தப்பட்ட தொகை. (ரூ. லட்சத்தில்). | 182·43 | 94·37 | 7·34 |
| 1966–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டுத் திட்டங்களின்போது கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 337 | 561 | .. |
| 1966–67 முதல் 1968–69 வரையில் செய்த செலவுத் தொகை (ரூ. லட்சத்தில்). | 28 62 | 35·46 | .. |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு. (ரூ. லட்சத்தில்). | 1,50·00 (மூன்று துறைகளுக்கும்). | | |
| 4-ம் ஐந்தாண்டுத்திட்ட இலக்கு (குடியிருப்புகள்). | 2,075 (மூன்று துறைகளுக்கும்). | .. | .. |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | .. | 308 | .. |
| 1969–70-ல் செய்த செலவு (ரூ. லட்சத்தில்). | 3·22 | 5·57 | .. |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 12 | 55 | 8 |
| 1970–71-ல் செய்த செலவு (ரூ. லட்சத்தில்). | 0·27 | 3·73 | 0·24 |





6·7 திட்டச் சாதனைகள்.

| (1) | பொதுத் துறை. (2) | கூட்டுறவுத் துறை. (3) | தனியாா துறை. (4) |
|---|---|---|---|
| 1971–72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 9·00 | 3·73 | 2·00 |
| 1971-72-ம் ஆண்டிற்கான திட்ட இலக்கு (வீடுகள்). | 112 | 65 | 45 |
| 1971–72-ல் செய்த செலவு (1971 டிசம்பர் வரை). (ரூ. லட்சத்தில்) | .. | 3·73 | .. |
| 1971–72-ல் கட்டிய வீடுகள் (1971 டிசம்பர் வரை). | .. | 72 70 வீடுகள் கட்டப்படுகின்றன. | .. |
| 1972–73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (ரூ. லட்சத்தில்) | T | 5·00 | 2·97 |
| 1972–73-ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு. (வீடுகள்) | 246 | 96 | 310 |

**6.1. குறைந்த வருமானத் தொகுதியினர்க்கான வீட்டுவசதித் திட்டம்.**—இத்திட்டம் 1955–56-ல் வகுக்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும், அதன் கூட்டுறவுப் பிரிவின் மூலமாகவும் மாநில அரசு தற்போது இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7,200-க்கு மேற்படாத வருவாய் உள்ளவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர் என்று கருதப்படுகிறது. வீடு ஒன்றுக்கு அதன் கட்டுமானப்பணிக்காகும் செலவில் (நிலம் வாங்குவதற்காகும் செலவு உட்பட) 80 சதவீதத்திற்கு மேற்படாமல், ஆனால், ரூ. 12,500 என்ற பேரளவுக்குட்பட்டு கடன் வழங்கப்படுகிறது.

**6·2 கூட்டுறவு சங்கங்கள்.**—4-ம் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 220 லட்சத்திற்குக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73-ல் 350 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 30 லட்சத்தைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**6·3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.**—4-ம் ஐந்தாண்டு திட்டத்தின் நிதி ஒதுக்கம் ரூ. *300 லட்சமாகும். 1972-73-ல் 150 வீடுகள் கட்டப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வரவு செலவு திட்டத்தில் ரூ. 30 லட்சம் நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

* அடையாள நிதி ஒதுக்கம்.

## 6. 4. திட்டச் சாதனைகள்.

| (1) | கூட்டுறவுச் சங்கங்கள். (2) | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம். (3) |
|---|---|---|
| முதல் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து மூன்று வது ஐந்தாண்டு திட்டக் காலம் வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை .. | 3,223 | 2,142 |
| முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து 3-வது ஐந்தாண்டு திட்டக்காலம் வரை பயன் படுத்தப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 215·10 | 169·67 |
| 1966–67 முதல் 1968–69 வரை உள்ள ஆண்டு திட்டக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 737 | 1,126 |
| 1966–67 முதல் 1968–69 வரையில் செய்த செலவுத் தொகை (ரூ. லட்சத்தில்). | 60·50 | 76·19 |
| 4-ம ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கம் (ரூ. லட்சத்தில்). | 2,20 | 3,00 |
| 4-ம் ஐந்தாண்டுத் திட்ட இலக்கு (வீடுகள்). | 6,300 (—) | இரண்டு திட்டங்களுக்கும். |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 150 | 600 |
| 1969–70-ல் செய்த செலவு (ரூ. லட்சத்தில்) .. | 22·79 | 52·69 |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 386 | 500 |
| 1970–71-ல் செய்த செலவு (ரூ. லட்சத்தில்) .. | 33·99 | 22.60 |
| 1971–72-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 30 | 30 |
| 1971–72-ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு (வீடுகள்). | 350 | 150 |
| 1971–72-ல் செய்த செலவு (1971 டிசம்பர் வரை). | 8·37 | 24·64 |
| 1971–72-ல் கட்டப்பட்ட வீடுகள் (1971 டிசம்பர் வரை). | 265 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 340 வீடுகள் கட்டப்படுகின்றன. | 162 அடுக்கங்கள் கட்டப்பட்டுள்ளன. 320 அடுக்கங்கள் கட்டப்படுகின்றன. |



| | கூட்டுறவுச் சங்கங்கள். (1) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். (2) |
|---|---|---|
| 1972–73-ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடு. | 30·00 | 30·00 |
| 1972–73-க்கான திட்ட இலக்கு (வீடுகள்) .. | 350 | 150 |

**7.1. நடுத்தர வருமான தொகுதியினர்கான வீட்டு வசதித் திட்டம்.**—இத்திட்டம் 1959-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வகுக்கப்பட்டது. வீடுகள் கட்டுவதற்காக ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கு மேற்பட்டு ரூ. 18,000-க்கு மேற்படாமல் வருமானமுடையோருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும், இத்திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கூட்டுறவுப் பிரிவு ஆகியவற்றால் நிறைவேற்றப்படுகிறது.

7.2. நிலம் உட்பட கட்டுமானச் செலவு 80 சதவீதத்திற்கு மேற்படாமல், வீடு ஒன்றுக்கு ரூ. 25,000 என்ற உயரளவு வரையறைக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. நிலத்தின் விலை நீங்கலாக, கட்டுமானச் செலவு ரூ. 35,000-க்கு மேற்படக்கூடாது. தகுதியான நபர்களுக்கு விற்பனை செய்வதற்காக அல்லது தகுதியானவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக வீடுகள் கட்ட இந்தக் கடன்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுவதற்காக தனி நபர்களுக்குக் கூட்டுறவுப் பிரிவுகள் கடன்கள் கொடுக்கின்றன.

## 7·3. திட்டச் சாதனைகள்.

| (1) | கூட்டுறவுச் சங்கங்கள். (2) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். (3) |
|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 838 | 776 |
| இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பயன்படுத்திய தொகை (ரூ. லட்சத்தில்). | 139·50 | 2,09·15 |
| 1968–67 முதல் 1968–69 வரையிலான ஆண்டு திட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 146 | 489 |

| | கூட்டுறவு சங்கங்கள். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1966–67 முதல் 1968–69 முடிய செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 37·50 | 83·01 |
| நான்காவது திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் (ரூ. லட்சத்தில்). | 500 இரு | துறைகளுக்கும். |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 50 | 450 |
| 1969–70-ல் செலவிட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 10·00 | 64·48 |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 100 | 550 |
| 1970–71-ல் செலவிட்ட தொகை(ரூ. லட்சத்தில்). | 20·01 | 89·57 |
| 1971–72 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 10·00 | 55 |
| 1971–72 திட்டக் குறிக்கோள் அளவு (வீடுகள்). | 50 | 700 |
| 1971–72-ல் செலவிட்ட தொகை (1971 டிசம்பர் வரை) (ரூ. லட்சத்தில்). | 12·00 | 85·51 |
| 1971–72-ல் கட்டப்பட்ட வீடுகள் (1971 டிசம்பர் வரை). | 116 வீடுகள் கட்டப்பட்டன 140 வீடுகள் கட்டப்படுகின்றன. | 288 அங்கணங்கள் கட்டப்பட்டன. 733 அங்கணங்கள் கட்டப்படுகின்றன. |
| 1972–73-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 25·00 | |
| 1972–73-க்கான திட்டக் குறிக்கோள் அளவு (வீடுகள்). | 100 | 180 |

8·1. **நிலம் கையகப்படுத்தல்—மேம்படுத்துதல் திட்டம்** —நிலத்தின் விலை ஏறுவதைத் தடுப்பதற்காக முன்னதாக நிலத்தைக் கையகப்படுத்துவதும், வீடு கட்டும் காரியங்களுக்கு நியாய விலையில் நிலம் கிடைக்கச் செய்வதும், வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் இட நெருக்கடியைக் குறைப்பதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

8·2. இத் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஆதாய—விரயமற்ற அடிப்படையில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகரிலும், நகரைச் சுற்றிலும், பெரிய நிலப் பகுதிகளைக் கையகப்படுத்தி, அவற்றை எல்லா வசதிகளும் நிரம்பிய சிறு சிறு நகர்களாக உருவாக்கு





கின்றது. பொது வசதிகளாகிய பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள், முதலியவற்றுடன் சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீரகற்று வசதி, விளையாட்டுத் திடல், பூங்கா ஆகிய வசதிகள் இந்த நகர்களிலே ஏற்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பொதுமக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு வீடுகள் கட்டும் மனைகள் ஒதுக்கப்படுகின்றன. வீடுகளும் குடியிருப்புகளும், அங்கணங்களும் முழு உரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவர்கள் மூலதன முதலீட்டை 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துகின்றனர். ஒதுக்கப்பட்ட அல்லது பொது ஏலத்தில் விற்கப்பட்ட மனைகளை ஐந்து ஆண்டுக்காலத்திற்குள் வேறு எவரிடமும் திரும்ப விற்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவை கொடுக்கப்படுகின்றன. அதாவது அக்கால அளவிற்குள் அவர்கள் அங்கு வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்களுக்கு உரிமை ஏற்படுவதனால் நிலத்தையோ, வீட்டையோ அவர்கள் விற்க விரும்பமாட்டார்கள். இதனால் நிலங்களின் விலை அதிகரிப்பது தடுக்கப்படுகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மேம்பாடு செய்யப்பட்ட மனைகளை மனை ஒன்றுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 8,000 வரை விற்கின்றது. இத்துடன் கூட மூலை மனைகள் பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்தும் விற்பனைத் தொகையை மீண்டும் பயன்படுத்துவதன் மூலமும் பெறப்படுகிறது.

8·3 திட்டச் சாதனைகள் :—

| | | |
|---|---|---|
| II, III-வது திட்டக் காலத்தின் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்). | | 2,759·54 |
| II, III-வது திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | | 383·23 |
| 1966–67 முதல் 1968–69 முடிய ஆண்டுத் திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்). | | 796·15 |
| 1966–67 முதல் 1968–69 வரையிலான காலத்தில் செலவிடப்பட்டது (ரூ. லட்சத்தில்). | | 419·14 |
| நான்காவது திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) | .. | 500 |
| 1969–70-இல் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) | .. | 251·90 |
| 1969–70-இல் செலவிடப்பட்டது (ரூ. லட்சத்தில்) | .. .. | 187·42 |
| 1970–71-இல் மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்) | .. | 161·86 |
| 1970–71-இல் செலவிடப்பட்டது (ரூ. லட்சத்தில்) | .. .. | 284·50 |

| | |
|---|---|
| 1971–72-க்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 35 |
| 1971–72-க்கான திட்ட இலக்கு (ஏக்கரில்) .. .. .. | 500 |
| 1971–72-இல் செலவிடப்பட்ட தொகை (1971 டிசம்பர் முடிய) (ரூ. லட்சத்தில்). | 167·80 |
| 1971–72-இல் கையகப்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (1971 டிசம்பர் முடிய) (ஏக்கரில்). | 12·78 |
| 1972–73-க்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). | 25·00 |
| 1972–73-க்கான திட்ட இலக்கு (ஏக்கரில்) .. .. .. | 87 |

9·1. **தமிழ்நாடு அரசு பணியாளர்க்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்:—** இத் திட்டம், குறைந்த வருமானமுள்ள மாநில அரசு பணியாளர்களுக்கு முற்றிலும் வாடகை அடிப்படையிலே வீட்டு வசதி அளிப்பதை முதன்மையாகக் கருதி வகுக்கப்பட்டது. வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து, ஈடு செய்வாடகையாக, சம்பளத்தில் 10 சதவீதத்தை, மாநில அரசு பணியாளர் ஊதியத்திலிருந்து பிடித்துக்கொள்கின்றது. அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படுவதில்லை. இந்த அடிப்படையில் பிடிக்கப்படுகின்ற வாடகை கட்டுபடியாகும் வாடகையை விடக் குறைவு. தொகை வேறுபாடு, மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசு ஊழியர்கள் அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின்றனர்.

9·2. திட்டத்தைச் செயல்படுத்தும் முகவர் அமைப்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உள்ளது. அதுவே, செயல்படுத்தப்பட்டபின், சொத்தினைப் பேணுகிறது. கட்டிடங்களின் சொத்துரிமை மாநில அரசினிடம் நிலைபெறுகிறது. பொதுவாக, இத்திட்டத்தின் கீழ் வீடுகள், அரசாங்க நிலங்களில் கட்டப்படுகின்றன.

9·3. திட்டச் சாதனை :—

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்ட காலங்களில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,228 |
| இரண்டாவது மூன்றாவது திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 187·15 |
| 1966–67 முதல் 1968–69 வரையில் ஆண்டுத் திட்டக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,560 |
| 1966–67 முதல் 1968–69 முடிய செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 130·82 |
| நான்காவது திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) .. | 500 |
| நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) .. .. .. .. | 5,000 |
| 1969–70-இல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை .. .. | 508 |





| | |
|---|---|
| 1969–70-இல் செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) .. | 53·10 |
| 1970–71-இல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை .. .. | 500 |
| 1970–71-இல் செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) .. | 75·78 |
| 1971–72-க்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | 100 |
| 1971–72-க்கான திட்ட இலக்கு (அங்கணங்கள்) .. .. | 1,806 |
| 1971–72-இல் செலவிடப்பட்ட தொகை (1971 டிசம்பர் முடிய) (ரூ. லட்சத்தில்). | 82·46 |
| 1971–72-இல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1971 டிசம்பர் முடிய). | 420 அங்கணங்கள் கட்டப்பட்டன. 1,256 அங்கணங்கள் கட்டப்படுகின்றன. |
| 1972–73-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | 100 |
| 1972–73-க்கான திட்ட இலக்கு .. .. .. .. | 500 வீடுகள். |

10·1. **இராம வீட்டு வசதித் திட்டம்.**—தமிழ் நாட்டில் சமுதாய வளர்ச்சிப் பகுதியிலும், தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதியிலும் உள்ள தெரிந்தெடுத்த கிராமங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம் மாநில அரசின் வேலைத் திட்டமாகும். "தன்னுதவி" அடிப்படையில், தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள கிராமவாசிகளை ஊக்குவிப்பதற்கு ரூ. 3,000-க்கு மிகாமல் மூன்று தவணைகளில் கடன் வழங்கப்படுகிறது. அவ்வாறு கடன் வழங்கப்படும் நபர்கள் சொந்த நிலம் வைத்திருப்பதோடு, கடன் தொகையை வட்டியுடன் இருபது சம ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கு ரூ. 3,000 கடன் தொகையானது, கட்டடத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில், 80 சதவீதமாகும். எஞ்சிய 20 சதவீதம் பயன் துய்ப்பவர்களால் உழைப்பு, உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள், பணியின் போது ஏற்படும் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கொடுக்கப்பட வேண்டும். "தன்னுதவி" அடிப்படையில் உதவிபெற்று கட்டப்பட்ட வீடு இருபது ஆண்டுகளில் அவருக்குத் தங்குமிடமாகவும், சொத்தாகவும் ஆகின்றது.

10·2. தமிழ்நாட்டில் 15,000 கிராமங்களுக்கு மேல் உள்ளன. 210 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1,515 கிராமங்களுக்குத் தனிச்சிறப்பு வரை படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம்

மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தை மேலும் பல கிராமங்களில் நிறைவேற்ற வேண்டும் என கிராம மக்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

10·3. வீடு கட்டப்படும் கிராமங்களில் கிராமவாசிகளுக்குத் தெருக்கள், சாக்கடை முதலிய வசதிகளுக்கும் இத்திட்டம் வகை செய்கின்றது. இதற்காக கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000-க்கு மிகாமல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தெருக்கள், சாக்கடைகள் இவற்றையமைக்க ஒவ்வோராண்டும் ரூ. 50,000 ஒதுக்கப்படுகிறது.

10·4 திட்டச் சாதனைகள்—

| | |
|---|---|
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 3,053 |
| இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 54·91 |
| 1966–67-லிருந்து 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 472 |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). | 29·73 |
| நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் (ரூ. லட்சத்தில்) .. | 50 |
| நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) .. .. .. | 1,500 |
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. .. .. | 218 |
| 1 70-ல் செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) .. | 7·75 |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. .. .. | 240 |
| 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). .. | 10·93 |
| 1971–72-ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). .. | 10·52 |
| 1971–72-ம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (வீடுகள்) .. | 240 |
| 1971–72-ல் (1971 டிசம்பர் வரை) செலவிடப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்). .. | 8·37 |
| 1971–72-ல் (1971 டிசம்பர் வரை) கட்டப்பட்ட வீடுகள் .. | 216 |
| 1972–73 வரவு-செலவு திட்ட மதிப்பீடு (ரூ. லட்சத்தில்). .. | 16·50 |
| 1972–73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (வீடுகள்) .. | 350 |

11·1. மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு உதவிபெறும் வீட்டு வசதித் திட்டம்.—மலைத்தோட்ட அதிபர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக அவர்களுக்குக் கடன் உதவி அளிப்பதற்கென இத்திட்டம் இந்திய அரசால் வகுக்கப்பட்டது. 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் நாள் முதற்கொண்டு உதவிபெறும் வீட்டு வசதித் திட்டத்தின் அடிப்படையில் இத்திட்டம் தொழிலாளர்களுக்கான உதவி பெறும் வசதித் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1970–71 முதற்கொண்டு மத்திய அரசத் திட்டமாகக் கருதுவதென இந்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது.



11·2 இத்திட்டத்தின் கீழ் சிறிய இரு அறைகளைக் கொண்ட ஒரு வீட்டைக் கட்டுவதற்கான உச்ச வரம்பு செலவு ரூ. 3,200 ஆகும். மாற்றியமைக்கப்பட்ட மத்திய அரசத் திட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலதிபர்கள் உச்ச வரம்புச் செலவில் 50 சதவீதம் கடனாகவும் 37½ சதவீதம் உதவித் தொகையாகவும் பெற உரிமையுள்ளவர்களாவர்.

11·3 திட்டச் சாதனை :—

இரண்டாவது, மூன்றாவது திட்டக் கால அளவுகளில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை—195.

இரண்டாவது, மூன்றாவது திட்டக் கால அளவுகளில் பயன்படுத்தப்பட்ட தொகை—ரூ. 3·72 லட்சம்.

நான்காம் திட்ட நிதி ஒதுக்கீடு.—ரூ. 10 லட்சம்.

நான்காம் திட்டக் குறிக்கோள் அளவு.—440 வீடுகள்.

1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 2 லட்சம்.

1971–72 திட்டக் குறிக்கோள் அளவு—60 வீடுகள்.

1971–72-ல் (1971 டிசம்பர் வரை) செலவிடப்பட்ட தொகை—இல்லை.

1971–72 (1971 டிசம்பர் வரை) கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள்—இல்லை.

1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 2 லட்சம்.

1972–73 திட்டக் குறிக்கோள் அளவு—60 வீடுகள்.

12. புழைக்கற்கலவைத் தொழிற்சாலை (Cellular Concrete Plant)—இந்திய அரசுக்கும் போலந்து குடியரசுக்கும் இடையில் ஏற்பட்ட பொருளாதார ஒத்துழைப்பிற்கிணங்க, சென்னைக்கு அருகில் எண்ணூரில் புழைக்கற்கலவைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக 23—9—1966-ஆம் நாளன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்கும் போலந்து நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் செகாப் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று கையொப்பமாகியது. இது காரணமாக, போலந்து வங்கிக்கு, இந்திய அரசு நிதி அமைச்சரகத்தினரால் ரூ. 1·04 கோடிக்கு அதிகாரக் கடிதம் (Letter of authority) வழங்கப்பட்டது. ரூ. 230 லட்சம் என்ற மூல மதிப்பீட்டின் அடிப்படையில், மாநிலத் திட்ட வரம்பிற்குப் புறம்பாக, இத்தொழிற்சாலைக்குத் தேவையான கடனுதவி அளிப்பதற்கு இந்திய

அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கான திருத்த மதிப்பீடு ரூ. 365 லட்சமென்று மதிப்பிடப்படுகிறது. இதற்கு இசைவு அளிக்குமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. இதற்கான அந்நிய செலாவணி ரூ. 115 லட்சமாகும். இயந்திரங்களுக்காக போலந்தின் கடனையும் சேர்த்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் இதுவரை ரூ. 296 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கு, இந்திய அரசிடமிருந்து இது வரை ரூ. 245 லட்சம் கடனுகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொழிற் சாலை தொடங்கப்பட்டு முதற்கற்கலவை 6—2—1972-ம் நாள் அச்சில் வார்க்கப்பட்டு சுட்ட வார்ப்பு 7—2—1972-ஆம் நாள் நன்னிரவில் அதி லிருந்து எடுக்கப்பட்டது. சோதனை அடிப்படையில் இரண்டாவது கட்ட உற்பத்தி தொடங்கப்பட்டு வருகிறது. இது விரைவில் மேற்கொள்ளப்படும்.

13. இராமப்புற வீட்டு வசதித் திட்டம்.—இத் திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்படுகிறது. இராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின்மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. திட்டத்தின் கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி வழங்கப் படும். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவீதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப்போல நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக்கூடாது); ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. வீட்டிற்கான செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக்கூடாது. ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு கடனைப் போல இருமடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் உறுப்பினர்கள் அதை இணைப்பிணையமாகக் கொடுக்கும் நேர்வுகளில், பங்கு மூலதனத்தைப் போல் ஏழு மடங்குத் தொகை கடனுதவியாக அளிக்கப்படும். 1972–73-ல் 120 வீடுகள் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது. அதற்காக, திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

13.2. திட்டச் சாதனைகள்.

| | |
|---|---|
| முதல் மூன்று திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள். | 906. |
| முதல் மூன்று திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 56·87 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை கட்டப்பட்ட வீடுகள். | 324. |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செலவிடப்பட்ட தொகை. | ரூ. 26·16 லட்சம். |



| | |
|---|---|
| 1969–70-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. .. | 153. |
| 1969–70-ல் செலவிடப்பட்ட தொகை .. .. | ரூ. 10·41 லட்சம். |
| 1970–71-ல் கட்டப்பட்ட வீடுகள் .. .. .. | 140. |
| 1970–71-ல் செலவிடப்பட்ட தொகை .. .. | ரூ.10· 27 லட்சம். |
| 1971–72 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு .. .. | ரூ. 10 லட்சம். |
| 1971–72-ல் செலவிடப்பட்ட தொகை (1971 டிசம்பர் முடிய). | ரூ. 4 லட்சம். |
| 1971–72 ஆண்டுக்கான குறிக்கோள் அளவு .. | 120 வீடுகள். |
| 1971–72-ல் கட்டப்பட்ட வீடுகள் (1971 டிசம்பர் வரை). | 216. |
| 1972–73-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | ரூ. 10 லட்சம் |
| 1972–73-க்கான குறிக்கோள் அளவு .. .. .. | 120 வீடுகள். |

14. நகர வீட்டு வசதி திட்டம்.—இத் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இதற்கென திட்ட ஒதுக்கீட்டிற்குப் புறம்பான நிதி ஒதுக்கத்திலிருந்து இது நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம், 1968–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் கைவிடப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், ஒவ்வொருவருக்கும் கொடுக் கப்படுகிற பேரளவுக் கடன் ரூ. 12,000 என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வருமான வரம்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை. 7,473 வீடுகள் கட்டு வதற்காக ரூ. 483·73 லட்சம் தொகை பயன்படுத்தப்பட்டது.

15. செங்கல் சூளை.—தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், செங்கல் இயந்திரச் சூளை ஒன்றை செக்கோஸ்லோவோகிய நாட்டு உடனுழைப்புடன் தொடங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. இயந்திரங் களுக்கான விலை குறித்து இயந்திரம் வழங்கும் நிறுவனத்திற்கு ரூ. 18·00 லட்சம் தொகைக்கு உத்தரவாதமும் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத் திற்கான முதலீட்டுச் செலவு சுமார் ரூ. 98·30 லட்சமாகும். அதற்கான அந்நிய செலாவணி ரூ. 21·09 லட்சமாகும். எனினும் இத் தொழிற் சாலையைத் தொழில் துறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இயந்திரங்களை மாநில வீட்டு வசதி வாரியம் இறக்குமதி செய்து அத் துறைக்கு அனுப்பும்.

16. பொதுக்கடன்.—பங்குச் சான்றிதழ்களும், புரோநோட்டுகளும் வழங்கி, பொதுமக்களிடமிருந்து 1968–69-ல் ரூ. 100 லட்சம் வரையிலும்; 1969–70-ல் ரூ. 200 லட்சம் வரையிலும்; 1970–71-ல் ரூ. 100 லட்சம் வரையிலும் பொதுக்கடன் திரட்ட, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு தமிழ்நாடு அரசு அதிகாரமளித்தது. அவை யாவும் முழுவதும் செலுத்

தப்பட்டன. 1971-72-ல் கூட ரூ. 100 லட்சம் கடன் திரட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. இக்கடன் 1972 மார்ச்சில் திரட்டப்படும். பங்குச் சான்றிதழ்கள், புரோநோட்டுகளின் மீது வட்டி, அசல் தொகை குறித்து மாநில அரசு உத்திரவாதமளிக்கும்.

17. **மலைப் பகுதிகளில் சிறு குடிசைகள்.**—உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஜவ்வாது மலைகள் ஆகிய இடங்களில் உள்ள மலைப்பகுதிகளில் சிறு குடிசைகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை வீட்டு வசதி வாரியம் தீட்டியுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற நன்கொடைகளிலிருந்து இந்த சிறு குடிசைகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடிசைகளின் அடிப் பரப்பளவு 700 ச. அடி ஆகவும், 400 ச. அடியாகவும் இருக்கும். இதற்கு முறையே ரூ. 20,000-ம் 13,000-ம் செலவாகும். இத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஏற்கெனவே 25 பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளார்கள்.

18. **இராமப் பகுதிகளில் மருத்துவர்களுக்கு வீடுகள்-மருந்தகங்கள் கட்டிக் கொடுத்தல்.**—ஆயுள் ஈட்டுறுதிக் கழகத் தலைவரின் ஆலோசனையின்பேரில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இராமப்புறங்களில் மருத்துவர்களுக்கு வீடுகள்-மருந்தகங்கள் சிலவற்றைக் கட்டித் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை செலவாகும். தொடக்கத்தில் 20 சதவீதத் தொகை செலுத்த வேண்டும். எஞ்சிய தொகை மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும். இத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

19. **அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு வீடுகள்.**—ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பணி ஓய்வு பெறவிருக்கும் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், பணியாளர்கள் தங்கள் பெயரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பதிவு செய்து கொண்டு, அவர்கள் பணி ஓய்வு பெறவேண்டிய நாள்வரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரையில் ஒரு தொகை கட்டிவருமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன், தமிழ்நாட்டில் ஏதாவது ஓர் இடத்தில் வீடு அல்லது மனை அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்று அவர்கள் உறுதியாகக் கொள்ளலாம். ஐந்து ஆண்டுகளில் அவர்கள் செலுத்தும் தொகையை கையடைத் தொகையில் ¼ பாகமாகக் எடுத்துக்கொண்டு பாக்கித் தொகை அவர்களது ஓய்வுக் காலத் தொகையிலிருந்து வசூலிக்கப்படும்.



20. **அரசிதழ் பதிவு பெறு அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள்.**—திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 500 வரை ஊதியம் பெறுகின்ற அரசிதழ் பதிவுபெறு அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான மற்றொரு திட்டமும் உள்ளது. அவர்கள் தங்களது பெயர்களை வீட்டு வசதி வாரியத்தில் பதிவு செய்து கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 முதல் ரூ. 50 வரை செலுத்திவருமாறு கேட்டுக் கொள்ளப்படுவர். ஐந்தாவது ஆண்டின் முடிவில் அவர்களுக்கு ஒரு மனை ஒதுக்கிக் கொடுக்கப்படும்.

21. **"சொந்த வீடு கட்டிக்கொள்" திட்டம்.**—இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் "சொந்த வீடு கட்டிக் கொள் திட்டத்தை", தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வீட்டு வசதி வாரியமும் கருதியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஆயுள் ஈட்டுறுதி செய்து கொண்டவர், இத்திட்டத்தில் சேரும்போது இவ் வீட்டில் குடி புகுவதற்கு முன், அவ் வீட்டின் விலை மதிப்பில் ¼ பாகத்தைச் செலுத்த வேண்டும், எஞ்சியுள்ள தொகையை, இத் திட்டத்தின்கீழ் ஆயுள் ஈட்டுறுதி ஒன்றைச் செய்துகொள்வதன் மூலம், 20 ஆண்டுக் காலத்தில், செலுத்த வேண்டும். ஆயுள் ஈட்டுறுதி எடுப்பதன் நன்மை என்னவெனில், உரிய காலத்திற்கு முன் ஒருவர் இறந்துவிட்டால், அவருக்கு அந்த வீடு சொந்தமாகி விடுகிறது.

22. **நாளொன்றுக்கு ரூபாய் ஒன்று சேமிக்கும் திட்டம்.**—இப் புதிய திட்டம் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. அத் திட்டத்தின்மூலம், ஒவ்வொருவரும், தனது வீட்டில், வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படும் சிறப்பு உண்டியல் பெட்டியில், நாளொன்றுக்கு, ஒரு ரூபாய் வீதம் சேமித்து வரவேண்டும். ஒவ்வொரு திங்கள் இறுதியிலும், இந்த உண்டியலில் சேமிக்கப்பட்ட தொகையானது, வீட்டு வசதி வாரியத்திடமுள்ள, அந்த நபரின் கணக்கில், உரிய முறையில் வரவு வைக்கப்படும். அவ்வாறு சேமிக்கப்படும் தொகையானது, 5 ஆண்டுக் காலத்திற்குப்பிறகு, வீட்டு மனை வாங்கி, அதில் வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். இத் திட்டம், பொங்கல் நாளன்று கொண்டுவரப்பட்டது.

23. **பர்மா அகதிகளுக்கான வீடுகள்.**—ரூ. 16.28 லட்சம் செலவில், மதுரை, மதுரை தென் வட்டம், தனக்கன்குளம் கிராமத்தில், 407 இரட்டை வீடுகளைக் ( ) கட்டும் பணி, அரசின் வருவாய்த் துறை

Catenary type twin houses

[1972 மார்ச் 18

யால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணி நடைபெற்று வருகிறது. இதே போன்று, வியாசர்பாடி ஏரிக்கரையில், ரூ. 1.1316 கோடி செலவில், பர்மா அகதிகளுக்காக 3,760 வீடுகள் கட்டும் பணி குறித்த வேறு ஒரு திட்டத்திற்கு, அரசு ஒப்புதலிப்பு வழங்கியுள்ளது. இப் பணி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பணியானது, புது வாழ்வுத் துறை இயக்குநரைக் கலந்தாலோசித்து, பல்வேறு நிலைகளில் எடுத்துக் கொள்ளப்படும்.

24. அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன் பணம் வழங்கல்.—அரசுப் பணியாளர்களுக்கு புதிதாக வீடு கட்டுவதற்காகவும், புது மனையை விலைக்கு வாங்குவதற்காகவும், கட்டப்பட்டுள்ள வீட்டை விலைக்கு வாங்குவதற்காகவும், முன்னரே அவர்களுக்குச் சொந்தமாகவுள்ள வீட்டு இட வசதியை அதிகப்படுத்துவதற்காகவும் முன்பணம் வழங்கப்படுகிறது. அரசின் நிலையான பணியாளர்களும், அல்லது ஐந்தாண்டு தொடர்ந்து அரசின்கீழ் பணிபுரிபவர்களும், இந்த மாநிலத்தில் பணிபுரிகிற அனைத்திந்தியப் பணி அதிகாரிகளும், இக்கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 55,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை, முன்பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை, பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துவதற்குள்ள திறனின் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது. இது விகிதபொட்டுக் கணக்கிடப்படுகிறது. தாங்கள் சொந்த வீடுகள் கட்டிக் கொள்ள தாராளமாக நிதி வசதி அளிக்க இத் திட்டம் வகை செய்வதால், இதனை, அரசு ஊழியர் அனைவரும் பெருமளவில் வரவேற்கின்றனர். இத் திட்டத்திற்காக 1972-73-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

25.1. முடிவுரை.—இம் மாபெரும் திட்டத்தை, பல்வேறு பணிகளின் மூலம் நிறைவேற்ற இயலாமைக்கு, போதிய நிதி வசதி இல்லாததே, முக்கியத் தடையாக உள்ளது. இத் திட்டத்திற்கான தேவைகளையும், அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவு எனத் தெரியவரும். பல்வேறு திட்டங்களின் அவசியத்தைக்

1972 மார்ச் 18]

கருதிப்பார்க்கையில், இன்னும் 10 ஆண்டுகளுக்கு, ஒவ்வோர் ஆண்டுக்கும், குறைந்தது ரூ. 10 கோடி தேவைப்படுகிறது. வீடுகளின் தேவைகளைக் கணிசமான அளவு நிறைவு செய்ய, இத் தொகை உதவும். கொரட்டூர் புறநகர் வீட்டு வசதித் திட்டத்தை (முதல் நிலை) நிறைவேற்ற, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு, சுழல் நிதியிலிருந்து ரூ. 2.38 கோடிக்கு, புதுடில்லி, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒப்பளிப்புச் செய்துள்ளது. முதல் தவணைத் தொகையான ரூ. 92 லட்சம் பெறப்பட்டுள்ளது.

25.2. வீட்டு வசதி வாரியம்; ரூ. 1,520.63 லட்சம் செலவிலான மேலும் 6 திட்டங்களை, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டத்தின் பெயர். (1) | கடன் தொகை. (ரூபாய் லட்சத்தில்). (2) |
|---|---|
| 1 கலைஞர் கருணாநிதி நகர் .. .. .. | 162·02 |
| 2 அறிஞர் அண்ணா நகர் .. .. .. | 270·40 |
| 3 திருவான்மியூர் புறநகர் திட்டம் .. .. | 310·63 |
| 4 வட சென்னை வீட்டு வசதித் திட்டம் .. .. | 533·81 |
| 5 கோட்டூர்புரம் .. .. .. .. | 195·13 |
| 6 சேணியம்மன் கோயில் திட்டம் .. .. | 48·64 |
| மொத்தம் .. | 1,520·63 |

25.3. மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும், சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்படவிருக்கின்றன. இத் திட்டங்களைச் செயல்படுத்துவது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தேவையான நிலம், வீட்டு வசதி வாரியத் திட்டம் ஏற்கனவே உள்ளது என்பதும், நிதிகளின் பெரும் பகுதி, சமுதாயத்தில் பொருளாதார நிலையில் நலிவுற்றிருப்போருக்காக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும்—போன்ற இவைகளே, இத் திட்டங்கள் அனைத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

25.4. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்ட கடனுக்கு 6.75 சதவீத வட்டியுண்டு. இக்கடன், கடன் தொகையில் 5.25 சதவீதத்திலான பணிக் கட்டணத்தோடு, அரையாண்டிற்கொரு முறை திருப்பிச் செலுத்தத் தக்கதாகும். இக்கடனை, 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவேண்டும். பெறப்பட்ட கடன் தொகைக்காக, சொத்துகளை அடமானம் வைக்குமாறு, வீட்டு வசதி வாரியத்தை, வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

25.5. ரூபாய் 100 லட்சம் கடன் வழங்குவதற்கு, சிண்டிகேட் வங்கி, ஒப்புதல் வழங்கியுள்ளது. மிகக் குறைந்த வருமானமுடையோர்—குறைந்த வருமானத் தொகுதியினர் ஆகியோருக்கு, வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான பல திட்டங்களுக்கு நிதி உதவியளிக்க, ரூ. 1 கோடி விரைவுத் திட்டக் கடன் வழங்க, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இக்கடன் தொகைகள், 1971-72 ஆம் நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பெறப்படும்.



பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகள்/தனிக் குடியிருப்புகள்/அங்கணங்கள் பற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | முதலாவது, இரண்டாவது, மூன்றாவது திட்டங்கள். | ஆண்டுத் திட்டம். 1966-67. | 1967-68. | 1968-69. | நான்காவது திட்டம். 1969-70. | 1970-71 | 1971-72, (1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (உதவித் தொகை பெறுவது)— | | | | | | | | |
| (அ) பொதுத்துறை | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர். | 2,996 | 159 | .. | 168 | .. | 12 | .... |
| (ஆ) கூட்டுறவுத்துறை | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 2,055 | 238 | 219 | 104 | 308 | 55 | 72 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. |
| (இ) தனியார் துறை | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் | 276 | .. | .. | .. | .. | 8 | 70 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |
| 2. குறைந்த வருமானம் பெறுவோர்களுக்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2,142 | 274 | 415 | 437 | 600 | 500 | 162 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 320 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |
| | (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 3,223 | 256 | 232 | 209 | 150 | 386 | 265 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 340 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. நடுத்தர வருமானம் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 776 | 96 | 168 | 225 | 450 | 550 | 288 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 730 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |
| | (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 838 | 60 | 59 | 27 | 50 | 100 | 116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 140 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |
| 4. நிலம் கையகப்படுத்துதல்-மேம்பாட்டுத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2,759·54† | 399·89† | 249·90† | 146·36† | 251·90† | 161·86† | 12·78† |
| 5. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2,228 | 42 | 1,716 | 802 | 502 | 500 | 420 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1,256 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |
| 6. கிராம வீட்டு வசதித் திட்டம் | கோட்டப் பொறியாளர் (கிராம வீட்டு வசதிப் பிரிவு) | 2,053 | 58 | 214 | 200 | 218 | 240 | 216 |
| 7. தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் (உதவித் தொகை பெறுவது). | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் | 195 | .. | .. | .. | .. | .. | .. |
| 8. சேரிப்புற வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 906 | 75 | 85 | 164 | 153 | 140 | 120 |
| 9. நல வீட்டு வசதித் திட்டம் | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 7,473 | தொடக்கத்திலிருந்து 1968-ம் ஆண்டு ஏப்ரல் வரை செயல்படுத்தப்பட்டு பின்னர் இத்திட்டம் விட்டுவிடப்பட்டது. | | | | | |

† லட்சம்.



## பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் சாதனைகளைக் காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் லட்சத்தில்.)

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | முதலாவது இரண்டாவது மூன்றாவது திட்டங்கள். | ஆண்டுத் திட்டம். 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டம் 1969–70. | 1970–71. | 1971–72 1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (உதவித் தொகை பெறுவது)— | | | | | | | | |
| (அ) பொதுத்துறை .. .. | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர். | 182·43 | 10·30 | 7·59 | 10 73 | 3 22 | 0·27 | .. |
| (இ) கூட்டுறவுத் துறை .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) .. .. | 94·27 | 11·57 | 5·09 | 8·80 | 5·57 | 3·73 | 3·73 |
| (உ) தனியார் துறை .. .. | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் .. .. .. | 7·34 | .. | .. | .. | .. | 0·24 | .. |
| 2. குறைந்த வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. .. .. | 169·67 | 34·38 | 25·85 | 15·96 | 52·69 | 22·60 | 23 64 |
| | (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 215·10 | 20·99 | 17·20 | 22·31 | 22·79 | 33·99 | 8·37 |
| 3. நடுத்தர வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம். | (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. .. | 209·15 | 36·39 | 27·30 | 19·32 | 64·48 | 89·57 | 35·51 |
| | (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) | 139·50 | 15·00 | 10·00 | 12·50 | 10·00 | 20·01 | 12·00 |
| 4. நிலம் கையகப்படுத்துதல், மேம்பாட்டுத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. | 383·23 | 145·97 | 127·12 | 146·05 | 187·42 | 284·50 | 167·80 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். . | 187·15 | 57·70 | 37·26 | 35·86 | 53·10 | 75·78 | 82·46 |
| 6. கிராம வீட்டு வசதித் திட்டம் .. | கோட்டப் பொறியாளர் (கிராமப் புற வீட்டு வசதிப் பிரிவு) .. | 54·91 | 7·11 | 7·76 | 14·86 | 7·75 | 10·93 | 8·37 |
| 7. தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் (உதவித் தொகை பெறுவது). | தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் .. .. .. | 3·72 | .. | .. | .. | .. | .. | .. |
| 8. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) .. .. | 56·87 | 10·00 | 6·03 | 10·13 | 10·41 | 10·27 | 4·00 |
| 9. நகர வீட்டு வசதித் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) .. .. | 483·73 | தொடக்கம் முதல் 1968-ம் ஆண்டு ஏப்ரல் வரையில் செயல்படுத்தப்பட்ட பின்னர் இத்திட்டம் விட்டுவிடப்பட்டது. | | | | | |



## 1972-73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வீட்டு வசதிக்கான நான்காவது திட்ட நிதி ஒதுக்கம்.

(ரூபாய் லட்சத்தில்)

| திட்டத்தின் பெயர். (1) | நான்காவது திட்டச் செலவு. (2) | 1972-73-ம் ஆண்டுக்கான திட்டச் செலவு. (3) | 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| மத்திய உதவி பெற்றது— | | | |
| 1. தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (உதவித்தொகை பெறுவது)— | | | அடையாள நிதி ஒதுக்கம். |
| (அ) அரசுத் திட்டம் .. .. .. .. .. .. | 1,50·00 | 30·00 | 5·00 |
| (இ) கூட்டுறவுத் திட்டம் .. .. .. .. .. .. | | | 2·97 |
| (உ) தனியார் தொழில் திட்டம் .. .. .. .. .. .. | | | |
| 2. குறைந்த வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம்— | | | |
| (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. .. .. .. | 3,00·00 | 50·00 | 30·00 |
| (இ) கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. .. | 2,20·00 | 55·00 | 30·00 |
| 3. நடுத்தர வருவாய் பெறுவோர்க்கான வீட்டு வசதித் திட்டம்— | | | |
| (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. .. .. .. | 15,00·00 | 3,00·00 | 25·00 |
| (இ) கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. .. | | | 25·00 |
| 4. நிலம் கையகப்படுத்துதல், மேம்பாட்டுத் திட்டம் .. .. | | | 1,00·00 |
| 5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் வீட்டு வாடகைத் திட்டம் | | | 16·50* |
| 6. கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. .. .. .. | 50·00 | 10·00 | |
| | 22,30·00 | 4,45·00 | 2,34·47** |

| | | | |
|---|---|---|---|
| **II.** மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்கள்— | | | |
| 7. தமிழ்நாடு மலைத்தோட்ட தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் (உதவித் தொகை பெறுவது) .. .. | 10·00 | 2·00 | 2·00 |
| 8. புழைக் கற்கலவைத் தொழிற்சாலை .. .. .. .. | .. | .. | 50·00 |
| **III.** திட்டத்தில் சேராப் பணிகள்— | | | |
| 9. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் .. .. .. .. | .. | .. | 10·00 |
| 10. அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கொடுக்கப்படும் முன்பணம்— | | | |
| (அ) அகில இந்தியப் பணி அதிகாரிகள் .. .. .. .. | .. | .. | 5·00 |
| (இ) ஏனையோர் .. .. .. .. .. .. .. | .. | .. | 60·00 |
| | .. | .. | 3,61·47** |

* தெருக்களுக்காகவும் சாக்கடைகளுக்காகவும் திட்டத்தின்கீழ் வராது ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 0·50 லட்சமும் இதில் சேர்ந்துள்ளது.

** குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 400 லட்சம் இதில் அடங்கா.



## இணைப்பு 4

[ -ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

# 1971-72ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் குடிசைப் பகுதி மாற்றும்பணி.

## சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்றும்பணி.

### முகவுரை.

நாகரீகமான எந்தச் சமுதாயத்திலும் குடிசைப் பகுதிகள் இருப்பது களங்கம் ஆகும் என்று அரசியல் மூதறிஞர் ஒருவர் வருணித்துள்ளார். குடிசைகள் பல்கிப் பெருகுவதை ஏன் அனுமதிக்க வேண்டும் என்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று அவர் கூறியுள்ளார். மக்கள் இத்தகைய குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற அவல நிலைகளால் ஏற்படுகின்ற விளைவுகளை நினைத்துப் பார்ப்பதற்கே முடியவில்லை. மழைக் காலத்தில் குடிசைப் பகுதி முற்றிலும் வெள்ளம் நிறைந்து விடும். நடைபாதைகள் சகதியாகி வழுக்குப் பாதைகள் ஆகிவிடும். குடிசைப் பகுதி முழுவதுமே கொசு உற்பத்திக்கு ஏற்ற இடங்களாகிவிடும். இதனால் அப்பகுதியில் வாழ்வோர் பல நோய்களுக்கு ஆட்பட நேரிடுகிறது. மழைக் காலத்தில் அவர்களுடைய கூரைக் குடிசைகள் மோசமாகப் பாதிக்கப்படும். சில சமயம் அவை வெள்ளத்தில் அமிழவும் செய்யும். கோடை காலத்தில் இக்குடிசைகள் தீப்பிடித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கின்றன. ஏற்பட்ட தீ விபத்தில் குடிசைகள் எரிந்து சாம்பலாகும். குடிசை வாழ் மக்கள் வைத்திருக்கிற ஒருசில உடைமைகளும் தீக்கிரையாகும். குடிசை வாசிகள் தீப்புண் அடைவர். அவர்களுடைய குடிசைகளுக்குப் போவதற்கான சரியான பாதை இருக்காது; அவர்களுடைய குடிசை வாயில்கள் வரை வண்டிகள் செல்ல முடியாது. ஏற்றதான குடி நீர் வசதியும் இருக்காது. தகுந்த துப்புரவு ஏற்பாடு இருக்காது என்பது துயரத்தைத் தருகிறது. இத்தகைய குடிசைப் பகுதிகள் உடல் நலத்திற்கு ஒவ்வாத சூழ் நிலைகளில் இருந்து வருகின்றன.

### குடிசைகள் வளர்ந்த வரலாறு.

உலகெங்கிலும் பெரிய நகரங்களில் குடிசைகள் இருப்பது பொதுவான அம்சமாக இருக்கிறது. இருக்கின்ற வேறுபாடு எல்லாம் அந்த குடிசைப் பகுதிகள் எந்த அளவுக்கு இருக்கின்றன, அவற்றின் தன்மையாது

என்பதுதான். பட்டி தொட்டிகளில் உள்ள பாமர மக்கள் வேலை நாடி நகரங்களுக்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். நாட்டுப்புறத்தில் வறட்சியும் பஞ்ச நிலையும் இருக்கும்போது வாழ்க்கை நடத்த வழி தேடி நகரங்களிலாவது வேலை கிடைக்காதா என்ற நம்பிக்கையில் கிராம மக்கள் நகரங்களை நாடி ஓடி வருகின்றனர். மேலும், தாங்கள் மோசமான வாழ்க்கை நடத்தினாலும் தங்கள் பிள்ளைகளாவது கல்வி கற்று நல்ல வேலை பெற்று வசதியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கிராம மக்களிடம் இருக்கிறது. நகரங்களில்தான் கல்வி வசதி நல்ல முறையில் கிடைப்பதால் அவர்கள் நகரங்களை நாடி ஓடி வந்து மெய் வருந்தா வேலைகளில் அமர்கின்றனர்.

முதன்முதலில் சென்னை மாநகரிலே மீனவர்கள் குடிசை போடத் தொடங்கினர். மீனவர்கள் வாழ்க்கைக்குக் கடலே உயிர்நாடி. எனவே, தங்கள் தொழிலுக்கு வசதியாக கடலோரத்தில் மீனவர்கள் குடிசை அமைத்துக்கொள்ளத் தொடங்கினர். பகல் முழுவதிலும், இரவு நேரத்தின் பெரும் பகுதியிலும், இவர்கள் கடலிலேயே இருக்க வேண்டிய காரணத்தால் தங்கள் குடிசைகளைக் கடலோரத்தில் அமைத்துக்கொள்ள விழைந்தனர். மயிலாப்பூரிலும் இராயபுரத்திலும் உள்ள மீனவர் குப்பங்கள் இவ்வாறுதான் தோன்றின.

பண்டை நாட்களில் சென்னை மாநகரத்தின் வெளிப்பகுதியிலிருந்து உட்பகுதிக்கு விறகு எடுத்துச் செல்வதற்கு ஏற்ற போக்குவரத்து வாயிலாக பக்கிங்ஹாம் கால்வாய் விளங்கி வந்தது. இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கால்வாய் கரை நெடுகத் தங்கள் குடிசைகளை அமைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

பாதாள சாக்கடைத் திட்டமும், நீரடிக் கழிப்பிடமும் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், சென்னை மாநகரில் துப்புரவுப் பணியில் சென்னை மாநகராட்சி துப்புரவாளர்களை அமர்த்தி வந்தது. இவர்களுக்குக் கிடைக்கும் கூலியோ மிகக் குறைவு; வீடுகளில் குடியிருப்பதற்கு வேண்டிய வாடகையை இவர்களால் கொடுக்க இயலாது. எனவே இவர்கள் வேலை செய்கிற பகுதிகளுக்கு அண்மையிலேயே ஓலைக் குடிசைகள் அமைத்துக் கொண்டு குடிசைகளில் வாழ்ந்து வரத் தொடங்கினர்.

சென்னை மாநகரம் பழைய துறைமுகம் ஆகும். வேலை இல்லாது வந்து சேருகின்ற பலருக்கும் புகலளிக்கும் இடமாக இத்துறைமுகம் விளங்கி வருகிறது. சென்னை நகருக்கும் சென்னை நகரிலிருந்தும் சரக்குகளை ஏற்றி இறக்கும் துறைமுகப் பணியில் பலரும் ஈடுபட்டு



வந்தனர். இவர்கள் கொடுக்கக்கூடிய வாடகைக்கு இவர்களுக்கு வீடுகள் கிடைப்பதாய் இல்லை. துறைமுகத் தொழிலாளர்கள் துறைமுகத்துக்கு அண்மையிலேயே இருந்தால், உடனடியாக வேலை பார்க்க முடியும்; ஆகையால் அவர்கள் அதற்கு அருகிலேயே குடிசை போட்டு வாழத் தொடங்கினர்.

இவ்வாறு ரிக்ஷாக்காரர்களும் தங்கள் வசதிக்குள் வீடு தேட முடியாத காரணத்தால் தாங்களே குடிசைகளை அமைத்துக் கொண்டனர் அல்லது நடை பாதை வாசிகளாக மாறினர்.

தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பெட்டிக் கடைக்காரர்களும், தேனீர் கடைக்காரர்களும், வெற்றிலைப்பாக்கு கடைக்காரர்களும் தொழிலாளிகளின் குடிசைப் பகுதிகளுக்கு அருகில் கடை போடத் தொடங்கினர். இந்தப் பெட்டிக் கடைக் காரர்களும் குடிசைவாழ் மக்களின் எண்ணிக்கையை உயர்த்தினர்.

## சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகள்.

நகரங்களில் வீட்டு வசதி குறைவாய் இருப்பது பற்றிய புள்ளி விவரத்துக்குக் குறைவு எதுவும் இல்லை. 1961 மக்கள் தொகை கணக்கின்படி, சென்னை மாநகரில் மொத்தம் 17·29 லட்சம் மக்கள் இருக்க, இவர்களில் 4·2 லட்சம் பேர் வாழ்கிற 548 குடிசைப் பகுதி இருப்பதாகக் கணக்கு உள்ளது. ஆண்டுகள் செல்லச் செல்ல குடிசை வாழ் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. இப்போது ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1971 மக்கள் தொகைக் கணக்கின்படி சென்னை மாநகரில் 25 லட்சம் பேர் குடியிருக்கும்போது, அதில் கிட்டத்தட்ட 7 லட்சம் பேர் குடிசைவாழ் மக்களாக இருக்கின்றனர். குடிசைவாழ் மக்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுப்பதாயின், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் குடியிருப்புகளைக் கட்ட வேண்டி இருக்கும்.

## குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குடிசைப் பகுதி மாற்றும்பணி.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியமும் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியமும் அமைப்பதற்கு முன்னர், குடிசை அகற்றுப் பணியினை சென்னை மாநகராட்சியும் சென்னை நகர மேம்பாட்டுக் கழகமும் கவனித்து வந்தன. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டவுடன் குடிசைப் பகுதி

மாற்றும் பணியினை அந்த வாரியம் மேற்கொண்டது. இந்த வாரியம் புறநகர்
பகுதிகளை அமைத்து வருவதுடன் குறைந்த வருமானத் தொகுதியினருக்
கும், நடுத்தர வருமானத் தொகுதியினருக்கும் அங்கணங்களைக் கட்டி
வருகிறது. குடிசை வாழ் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் முதற்கண்
22' × 40' அளவுள்ள சீர் செய்யப்பட்ட மனைகள் வழங்கப்பட்டன.
தங்களுக்கு வேண்டிய குடிசைகள் அமைத்துக் கொள்வதற்கும் பின்
புறத்தில் குளியல் அறை, கழிப்பிட அறை அமைத்துக்கொள்வதற்கும்
இம்மனைகள் வழங்கப்பட்டன. 1970 செப்டம்பருக்குப் முன்னர்
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் 8,000 செப்பனிட்ட காலி
மனைகளை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. இந்த அளவுக்கு திடல்கள் சென்னை
மாநகரில் அதிகம் இருக்காது என்பதால் இவ்வாறு மனை ஒதுக்கிக்கொடுக்கும்
பழக்கம் கைவிடப்பட்டது.

முந்தைய பக்கங்களில் குறிப்பிட்டுள்ளவாறு குடிசைப் பகுதிகளில் உள்ள
கூரைக் குடிசைகள் கோடை காலத்தில் தீப்பற்றிக் கொள்வதற்கு உட்பட்
டவையாய் உள்ளன. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் தொடர்ந்து
செலவு ஏற்படுவதோடு குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களும் இன்னலுக்கு
ஆட்படுகின்றனர். அப்போது முதலமைச்சராய் இருந்த டாக்டர் அறிஞர்
அண்ணா அவர்கள் 1968ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் பல குடிசைப்
பகுதிகள் தீக்கிரையானதைக் கண்ட பிறகே, இவ்வாறு குடிசைப் பகுதிகள்
தீப்பிடித்துக்கொள்வதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று உறுதி
பூண்டார். தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்கள் தாற்காலிக
மாக மாநகராட்சிப் பள்ளிகளிலும் பிறபொதுக் கட்டடங்களிலும் அடைக்
கலம் அளிக்கப்பட்டு இருந்தனர். இவர்களுக்கு வேறு வீடுகள் அமைத்
துக் கொடுப்பதற்காக கல்நார் கூரையுடன் தீப்பிடிக்காத குடியிருப்புகளைக்
கட்டிக் கொடுக்கும் பணி பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்
வொரு குடியிருப்பும் 112 சதுர அடி பரப்புள்ளதாகும். (14' × 8').
வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்,
மாநகராட்சி ஆகியவற்றின் பணிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டு சென்னை
மாநகரின் பல பகுதிகளிலும் தீப்பிடிக்காத 4,999 குடியிருப்புகள் கட்டப்
பட்டன. இந்த இடங்களில் எல்லாம் அடிப்படை வசதிகள் செய்து
கொடுக்கவேண்டியிருந்தது. இது தவிர வீட்டு வசதி வாரியமும்
2,500 குடியிருப்புகளைக் கட்டி முடித்தது. இவற்றில் சில வீடுகள்
முதல் மாடி உள்ளவை. வேறு சில வீடுகள் இரண்டு மாடி உள்ளவை.
இந்தப் பகுதிகளில் மாநகராட்சிக் குடிநீர் வழங்குவதற்காக தெரு
குழாய்கள் அமைக்கப்பட்டன.





## குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்தல்.

சென்னை மாநகரின் சில பகுதிகளில் குடிசைகள் தீப்பிடித்துக்கொள்
வதை தாற்காலிகமாகத் தீர்த்து வைத்த போதிலும், குடிசை வாழ்பவர்
களின் இடர்பாடுகளைத் தீப்பிடிக்காத குடியிருப்புகள் நிலையாகத் தீர்த்துவிட
வில்லை. தாழ்ந்த பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆண்டுதோறும்
வெள்ளத்தால் பாதிக்கப்படுவதால் அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தின
ருக்கு ரூ. 25-ம் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 40-ம் மாநகராட்
சியும், மாநில அரசும் கொடுக்க வேண்டி வந்தது. இடர்ப்பாடு பெரிதும்
நீங்கிவிடாத போதிலும், தொடர்ந்து செலவு ஏற்பட்டு வருகிறது. இதுவரை
மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் இப்பிரச்சினையின் விளிம்பைத்தான்
தொட்டுள்ளன எனலாம். இவ்வாறு எல்லாம் ஏற்பட்டுள்ளதை எண்ணிப்
பார்த்தும் அரசுக்குத் தொடர்ந்துசெலவு ஏற்படுவதைக் கருதியும், தமிழ்
நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதியின் கீழ்
அமைந்துள்ள தமிழ் நாடு அரசு இப்பிரச்சினையை பெரியஅளவில் தீர்த்து
வைப்பதென 1970 செப்டம்பரில் முடிவு செய்தது. என்னென்ன
கால அளவுக்குள் எத்தனை குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்க
வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டு வாரியம் பணியாற்றி
வருகிறது. குடிசை மேம்பாடு செய்வதை விட குடிசையை மாற்றி
கல் கட்டிடம் கட்டுவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. சென்னை
மாநகரில் குடிசை மாற்று வேலைத் திட்டத்தை மும்முரப்படுத்துவது
அரசின் உத்தேசம் ஆகும். 7 ஆண்டு கால அளவுக்குள் சென்னை
மாநகரில் குடிசைப் பகுதி முழுவதையும் மாற்றி அமைப்பது என அரசு
குறிக்கோள் நிச்சயித்துள்ளது. இத்தகைய பெரிய பிரச்சினையைச் சமா
ளிப்பதற்கு தனிப்பட்ட வாரியம் ஒன்று 1970 செப்டம்பரில் ஏற்படுத்தப்
பட்டுள்ளது. இருக்கின்ற குடிசைப்பகுதிகளை மாற்றுவதற்கும், புதிய குடி
சைப்பகுதிகள் தோன்றாவண்ணம் தடுப்பதற்கும் தமிழ் நாடு குடிசைப்
பகுதி மாற்று வாரியத்திற்கு அவசியமான அதிகாரங்கள் அளிக்கும் வகை
யில் 1971ஆம் ஆண்டில் தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—நீக்க)
சட்டம் இயற்றப்பட்டது. கடந்த காலத்தில் குடிசையில் வாழ்பவர்களுக்கு
வேறிடம் கொடுக்காமலேயே வலுக்கட்டாயமாக அவர்கள் வெளியேற்றப்பட்ட
னர். இவ்வாறு செய்வது சட்டத்தில் தடுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி போன்ற
உள்ளாட்சி மன்றங்களோ சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரோ, காவலர்
களோ குடிசையில் வாழ்பவர்களை அகற்ற விரும்பினால், அவர்களை அகற்
றுவதற்கும் அவர்களுக்கு வேறு இடவசதி அளிப்பதற்கும் குடிசைப் பகுதி
மாற்று வாரியத்தை அணுகலாம். வேறிடம் எதுவும் கொடுக்கப்படாமல்

தங்கள் குடிசையிலிருந்து தாங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் படுவோமோ என்ற அச்சம் இப்போது குடிசைவாழ் மக்களுக்கு இல்லை. குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தங்களுடைய நலனைக் கட்டிக் காப்பதற்காகவே இந்த வாரியம் அமைக்கப்பட்டுள்ளதென அவர்கள் கருதுகின்றனர்.

<u>வாரியத்தின் அமைப்பு.</u>

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் முதன்முதலாக குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் தலைவர் அரசு அதிகாரி அல்லாத ஒருவர் ஆவர். இவர் சட்டப் பேரவை உறுப்பினராகவும் இருக்கிறார். குடிசை வாழ்வோர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் தலைவராய் இருந்தவர் என்ற முறையில் இவருக்கு இருக்கும் பரந்த அனுபவம் காரணமாகவே இவ்வாரியத்திற்கு இவர் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த 15 ஆண்டுக் காலமாக, குடிசைவாழ் மக்களுடன் இவர் நெருங்கிப்பழகி வருகிறார். அவர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் இவருக்கு நன்கு தெரியும். எந்த வகையில் அணுகினால் வாரியத்தின் நோக்கம் ஈடேறும் என்பதை இவர் நன்கு அறிந்துள்ளார். அரசின் மூத்த செயலாளர்கள் பலர் இந்த வாரியத்தில் உறுப்பினராய் இருக்கின்றனர். தொழிலாளர் துறை, கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை, வருவாய்த்துறை, சமூகநலத்துறை, சுகாதாரம் குடும்ப நலத்துறை ஆகியவற்றின் செயலாளர்கள் இதன் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். சென்னை மாநகராட்சிப் பொறுப்பு அதிகாரியும், நகர அமைப்பு இயக்கு நரும், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவரும் இதன் உறுப் பினராய் உள்ளனர். மேலும், தலை சிறந்த கட்டடக்கலை நிபுணர் ஒருவரும் வாரியத்தில் இடம் பெற்றுள்ளார். திட்டங்களை நிறைவேற்றுவதில் தமது அரிய ஆலோசனைகளை இவர் நல்குவார். தென் சென்னை, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கியமான உள்ளூர் தலைவர்களும் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது நேரடி மேற்பார்வையில் வைத்துள்ளார் என்பதிலிருந்து குடிசைப் பகுதி மாற்றுப் பணிக்கு இந்த அரசு எந்த அளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை உணரலாம்.

<u>வாரியத்தின் நோக்கங்கள்.</u>

வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன—

(1) குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்படும்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் இந்த வாரியத்தின் வேலையாகும். அரசின்





எந்தத்துறையேனும் உள்ளாட்சி மன்றமேனும் குடிசைப் பகுதியில் உள்ளவர்களை வெளியேற்றுவதானால், அவை அது குறித்து தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு வெளியேற்றப்படுபவர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படுகிற வரையில் தாற்காலிக இடவசதி அளிக்கும் பொறுப்பினைத் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொள்கிறது.

(2) புதிய குடிசைப் பகுதிகள் தோன்றா வண்ணம் பாதுகாப்பாக இருக்க முயலுகிறது.

(3) நடைபாதை வாசிகளும், உரிமையின்றிக் கூடாரம் அமைத் துள்ளவர்களும் தங்களுக்கு வசதிக் குறைவையும் இடர்ப்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்வது மட்டுமின்றி, நடைபாதைகளில் விபத்து ஏற்படு வதற்கும் காரணமாகின்றனர். இவர்களுக்கு ரூ. 50 கொடுத்து சென்னை மாநகரில் வேறு பகுதிகளில் அல்லது நகரின் எல்லையோரங்களில் கூடாரம் அமைத்துக்கொள்ள வசதி அளிக்கப்படுகிறது.

(4) குடிசைப் பகுதி எதிலாவது தீப்பிடித்துக் கொண்டால், தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்களுக்கு உதவியளித்து அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு எல்லா உதவியும் செய்துதருகிறது. இவ்வாறு உதவி செய்யும் நிகழ்ச்சிகள் பல அண்மைக் காலத்தில் நிகழ்ந்துள்ளன.

(5) பல்வேறு பகுதிகளில் நிலையான குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதுடன், குடிசைப்பகுதி மாற்று வாரியம், குடிநீர் வழங்கல், கொல்லைப்புரம், மின் விளக்குகள், தெரு விளக்குகள் முதலிய வற்றைக் குடிசைப் பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுக்கும் பணியையும் மேற்கொள்கிறது. குடிசைத் தொகுதிகளின் பின்புரத்தில் அவசிய மான இடங்களில் நடைபாதைகளும் போடப்பட்டுள்ளன. அந்தப் பகுதியைத் துப்புரவாகவும் தூய்மையாகவும் வைத்து வருவதற்கு வெள்ள நீர் வடிகால்கள் கட்டப்படுகின்றன.

<u>திட்டமிடுதல், ஆய்வு நிலஅளவை.</u>

வாரியத்திற்குத் திட்டமிடும்–ஆய்வு செய்யும் பிரிவு ஒன்றுள்ளது. இந்தப் பிரிவில் நில அளவைத் துறையிலிருந்தும், நகரமைப்புத் துறையிலிருந்தும் தருவிக்கப்பட்ட பணியாளர்களும், புகைப்படக்காரர் களும் புள்ளி விவரத்துறை உதவி இயக்குநர் ஒருவரின்கீழ் உள்ளனர். போதிய முன்னீட்டாய்வு, திட்டமிடுதல், பகுப்பாய்வு,

விவாதங்களுக்குப் பின்னர், குடிசைப் பகுதிகளைக் கணக்கிட்டு அவற்றை மாற்றியமைப்பதற்கு கீழ்க்காணும் நடைமுறை வகுக்கப் பட்டுள்ளது :—

ஒருபகுதி குடிசைப்பகுதியென அறிவிக்கப்படும் முன்னர், அந்தப் பகுதியின் சமூக, பொருளாதார ஆய்வு மேற்கொள்வது முதல் நடவடிக்கையாகும். இதற்காக, கணக்கிடுபவர்களையும், புகைப்படக் காரர்களையும் கொண்ட நில அளவைக் குழு, குடிசை வாழ்வோருக்கு முன் அறிவிப்பு கொடுத்த பிறகு குறிப்பிட்ட குடிசைப் பகுதிக்குச் செல்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்களது தொழில், வருமானம் முதலிய விரிவான புள்ளிவிவரம் உட்பட ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் புள்ளி விபரத் தகவல் திரட்டப்படுகிறது. ஒவ்வொரு குடிசைக்கும் குறிப்பிட்ட இலக்கம் கொடுத்த பிறகு குடும்பம் முழுவதும் புகைப்படம் எடுக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் விலாங்களைத் திரட்டுகை யில், குறிப்பாக அவர்களது முன்வரலாறு அதாவது அவர்கள் எங்கிருந்து வந்தனர், அவர்கள் தொழில், அவர்களுக்கு ஆடு மாடுகள் உள்ளனவா என்பன போன்ற விவரங்கள் திரட்டப்படு கின்றன. அந்தப் பகுதியில் தனிச்சிறப்புத் தேவைகளுக்கு வகை செய்து திட்ட அமைப்புகளை வகுத்து குடியிருப்புகளைக் கட்டுவதற்கு இந்தப் புள்ளி விவரம் பெரிதும் உதவும். புதிய குடிசைகள் முளைப்பதையும் பொய்த் தகவல் கொடுத்து குடியிருப்புகளுக்கு உரிமை கோரிவரும் புதியவர்களையும் தடுப்பதற்கு இவ்வாறு செய்யப் படும் முழு ஆய்வு பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

## புகைப்படம் எடுப்பதன் நோக்கம்.

குடிசை வாழ்வோர் இப்போது வசித்து வரும் பகுதிகளிலேயே குடியிருப்புகள் கட்டுவதுதான் அரசுக் கொள்கையாக இருக்கிறது. இந்நோக்கத்தை எய்துவதற்காக, குழந்தைகள் உட்பட குடும்பம் முழுதும் புகைப்படம் எடுக்கப்படுகிறது. அந்தப் புகைப்படம் விவரப் பதிவேடு (Pass Book) ஒன்றில் ஒட்டப்பெற்று அதற்கு ஓர் எண்ணிடப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்கப்படுகிறது. புகைப்படம் எடுக்கப்படுவதன் கருத்து, அந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பத்தினரின் எண்ணிக்கை பற்றி முழுத் தகவல் பெறுவதற்குத் தான். மேலும் இது, குடிசைகள் குடிபுகுவதற்குத் தயாரானதும் அவற்றை ஒதுக்கித் தருவதற்கு உதவியாக இருக்கும். உரிமை





இல்லாதவர்கள் குடியிருப்புகளுக்கு உரிமை கோரி ஆள் மாறாட்டம் செய்வதையும் இது தடுக்கும். குடியிருப்பு ஒதுக்கப்படுபவருடைய விவரப்பதிவேட்டில் அவரது புகைப்படம் ஒட்டி வைக்கப்படும். குடி யிருப்பு உடைமையாளருக்கு இந்த விவரப் பதிவேடுதான் உரிய உரிமைப் பத்திரமாகும்.

## குடிசைப் பகுதிகளைப் பார்வையிடல்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவரும், அதிகாரிகளும் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குடிசைப் பகுதியினரைச் சந்தித்து அவர் களுடன் அமர்ந்து அந்தப் பகுதிகளில் குடிசைகளை அகற்றுவது பற்றிய பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கின்றனர். இவ்வாறு குடிசை மாற்றுத் திட்டம் தயாரிப்பவர்கள் அந்தப் பகுதியைப்பற்றி நன்கு தெரிந்து கொள்வதால் பின்னர் உள்ளூர்ப்பகுதி மக்கள் முறையீட்டைத் தவிர்க்கவும் இது பெரிதும் உதவும்.

## பரிசீலனைக் குழு.

குடியிருப்பு ஒதுக்கப்பட்டதைப் பெற்றுக்கொண்ட பின்னர் குடிசை வாழ்வோர், குடியிருப்பை விற்பனை செய்வதன் மூலமாகவோ அல்லது உயர்ந்த வாடகைக்கு விடுவதன் மூலமாகவோ அதை வைத்துப் பிழைப்பு நடத்த முற்படுகின்றனர் என்பதே கடந்த கால அனுபவமாகும். இவ்வாறு செய்கையில் இவர்களே அருகாமையில் ஓரிடத்திற்குச் சென்று அங்கு புதிய குடிசைப் பகுதியை உருவாக்கு கின்றனர். இத்தகைய தவறான செயல்களைக் கண்டுபிடிப்பதற்காகவே குடியிருப்பு ஒதுக்கப்படுகிற குடும்பத்தின் புகைப்படம் உரியவாறு ஒட்டப்பெற்றுள்ள விவரப்பதிவேடுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வகுத்துள்ள நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. சமூகப் பொருளாதார ஆய்வில் பெறப்பட்ட தகவல், வாக்காளர் பட்டியில், சென்னை மாநகரில் உணவுப் பங்கீட்டு அட்டை போன்ற அரசுப் பதிவேடுகள் ஆகியவற்றையொட்டி சரிபார்க்கப் படுகிறது. இவ்வாறு செய்வதன் மூலம், உரிமை இல்லாதவர்களும், குறிப்பிட்ட பகுதியில் உண்மையில் வசிக்காதவர்களும் ஆனால் ஏமாற்றிப் புகைப்படம் எடுத்துக்கொண்டவர்களும் எளிதில் அகற்றப் படுவர்.

2. ஒரு பகுதியில் உண்மையில் வசிப்பவர்களும் பெயர் நீக்கப் படவேண்டுமெனக் கருதுபவர்களுமான குடும்பங்களின் பெயர்களைக் காட்டும் தற்காலிகப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட கால அளவுக்குள் அதற்கான முறையீடுகளை அல்லது மறுப்புரை களைக் கோரி, அந்தப் பகுதியில் காட்டி வைக்கப்படுகிறது. இத் தகைய பட்டியல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், அந் தந்தப் பகுதி நகராட்சி உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படு கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் மறுப்புரைகள் அல்லது முறை யீடுகள் வரப்பெற்றிருப்பின் அவை தகுதி அடிப்படையில் பரிசீலிக் கப்படுகின்றன.

## கண்காணிப்புக் குழு.

• பரிசீலனைக் குழு இவ்வாறு பரிசீலனை செய்தபோதிலும், சில அனுபோகதார்கள் அந்தப் பகுதியில் தொடக்கத்திலிருந்தே வசித்து வருபவர்கள் அல்லர் என்பதாகக் குடிசை வாழ்வோர் சிலரிடமிருந்தே புகார்கள் கிடைத்துள்ளன. இத்தகைய புகார்களும் ஏனைய இரகசிய விசாரணைகளும் கண்காணிப்புக் குழுவினரால் கவனிக்கப்படுகின்றன. பொய்யான கோரிக்கைகளைக் கண்டுபிடித்து இரண்டாவது முறையில் அவற்றை நீக்கிவிடுவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காணிப்புக் குழு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவரின் நேரடிப் பொறுப்பின்கீழ் செயல்படுகிறது. இவ்வாறு நீக்கல் முறை யாவற்றையும் பின்பற்றிய பிறகு, அந்தப் பகுதியில் உண்மையில் வசிக்கும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையும், அவர்களது தொழில், வருமானம் முதலிய தேவையான விவரங் களும் பற்றிய முழுத்தகவல் வாரியத்திற்குக் கிடைத்துவிடும். இது முடிவாகத் தயாரிக்கப்பட்டதும், குடும்பப் புகைப்படத்துடனும், குடும்பத் திலுள்ளவர்களின் பெயர்கள் பற்றிய விவரங்களுடனும் அந்தப் பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அட்டைப் புத்த கங்கள் வழங்கப்படுகின்றன.

## மாற்று இடவசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, குடிசைவாழ் மக்களில் பலர் இதுவரையில் அவர்கள் வசித்து வருகிற அதே பகுதியில் வசிக்கவே விரும்புகின்றனர். ஆகவே, இத்தகைய குடிசைவாழ் மக்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் தற்காலிகமாக இடமளித்து அதே பகுதியில் இவ்வாரியம் குடியிருப்புகளைக் கட்டவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளா





கிறது. இத்தகைய தற்காலிக இடைத்தங்கள் முகாம்கள் முதலில் அமைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு பகுதியில் குடும்பங்களுக்கு விவரப் பதிவேடுகள் கொடுக்கப்படும்போது, குடியிருப்புகள் கட்டு வதற்கு இடம் கிடைக்கும் வகையில் தங்கள் குடிசைகளைப் புதிய இடத்தில் போட்டுக்கொள்வதற்காக கருணை அடிப்படையில் ரூ. 50 ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வசிக்க வேண்டிய புதிய இடத்தில், சம்பந்தப்பட்ட பொறியியல் கோட்ட மேற்பார்வையாளர் ஒருவர் ஒவ்வொரு குடிசைக்குமுரிய இடத்தை வரையறுத்து, அவ்வாறு வரையறுத்த மனையில் தற்காலிகமாகத் தனது குடிசையை அமைத்துக்கொள்ள பாஸ் புத்தக விவரப் பதி வேடு வைத்திருப்பவருக்கு மனையை ஒதுக்கித் தருகிறார்.

## குடியிருப்புகளை ஒதுக்குதல்.

குடிசைவாழ் மக்களுக்கு வேறு இடத்தில் தற்காலிகமாக இட மளித்து குடிசைகள் அகற்றப்பட்டதும், குடியிருப்புகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளுடனும் பல மாடிகள் கொண்ட குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்குகிறது. கட்டுமானத்தின்போது அமைப்பு வரை படத்தில் இத்தகைய குடியிருப்புகளுக்குத் தொடர்ச்சியாக இலக்கமிடப்படுகிறது. குடியிருப்புகள் கட்டி முடிப்பதற்கு முன்ன மேயே, இவை தற்காலிகமாக இடமளிக்கப்பட்டுள்ள குடிசைவாழ் மக்களுக்குச் சீட்டுக் குலுக்கு மூலம் ஒதுக்கப்படுகின்றன. குடி யிருப்பு கட்டி முடிக்கப்பட்டதும், இதன் மூலமாக இந்தப் பகுதியில் ஒவ்வொருவருக்கும் ஒரு குடியிருப்பு கிடைக்கும்.

## தவணைக் கொள்முதல்.

மாம்பலம் ...ரிக்கரைப் பகுதியில் கட்டப்படும் 520 குடியிருப்புகளில், 128 குடியிருப்புகள், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குடிசைவாழ் மக்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் அளிக்க ஒதுக்கி வைக்கப்படலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

(i) தவணைக் கொள்முதல் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட குடி யிருப்புகள் அடுத்து விலைக்கு வாங்க வருபவர் எவருக்கும் மீண்டும் விற்பனை செய்யப்படக்கூடாது ; ஆனால் அதைத் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கே விற்கப்படவேண்டும்.

(ii) தவணைக் கொள்முதல் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளில் சீரமைப்புப் பணிகள் அல்லது மாற்றங்கள் எதுவும், தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் இசைவு பெற்றே செய்யப்பட வேண்டும்.

(iii) தவணைக் கொள்முதல் குடியிருப்புகளை ஒதுக்குவதில், குறைந்த சம்பளம் பெறும் அரசுப் பணியாளர் அரசு அமைப்புப் போன்ற பிற நிறுவனப் பணியாளர் ஆகியவர்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(iv) இத்தகைய குடியிருப்புகளைப் பேணிவருதல், குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டவர்களது பொறுப்பாகும்.

(v) கொள்முதல் தவணைத் தொகைகள் முதல் 5 ஆண்டுகளுக்கு குடியிருப்பு ஒன்றுக்கு திங்களுக்கு ரூ. 40, எஞ்சிய 20 ஆண்டுகளுக்கு குடியிருப்பு ஒன்றுக்கு திங்களுக்கு ரூ. 45 என்றும் முடிவு செய்யப்படவேண்டும்.

## குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்கள்.

அரசு நிலங்களில் குடிசைகளுள்ள இடங்களிலெல்லாம் அத்தகைய நிலங்கள் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு உரிமை மாற்றி எழுதப்படுகின்றன. இது தவிர, அருகிலுள்ள அரசு வெற்றிடங்கள் யாவும் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொத்துரிமை மாற்றி எழுதப்படுகின்றன. வாரியம் வாங்கக்கூடுமானால், கோயில் நிலங்களும் வாரியத்திற்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதைப் போலவே, தனியார் நிலங்களும் வாங்கப்படுகின்றன. இதற்கென பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாரியம் மேற்கொண்டுள்ள உயர் பணிகளுக்காக தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நன்கொடையாக நிலமளிக்கும் தாராள சிந்தைபடைத்த புரவலர்களும் உள்ளனர். இச் சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும். குடிசைவாழ் மக்கள் சிற்று வேய்ந்த கொட்டகைகளைப் பாட்டுக்கொண்டுள்ள தனியார் நிலச் சொந்தக்காரர்கள் பலர், தங்கள் நிலங்களைத் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிலையான குடியிருப்பு கட்டிக்கொள்வதற்கு விற்றுவிட முன்வருகின்றனர். அவ்வாறு செய்யாவிடின் அவர்களுக்கு அதிலிருந்து ஆதாயம் எதுவும் கிடைக்காது



## இட்டமிடுதல்.

சமூகப் பொருளாதார அறிக்கையிலிருந்து திரட்டிய புள்ளி விவரத்தையொட்டி, தலைமைப் பொறியாளரும் ஏனைய அதிகாரிகளும் அந்தப் பகுதி பற்றி விவாதித்து அங்கு கட்டப்பட வேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கையைப் பற்றி முடிவு எடுக்கின்றனர். அந்தப் பகுதியின் சிறப்புத் தேவைகளை அதாவது நெசவாளர்கள், மீனவர், பால் விற்பனையாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் போல் அந்தப் பகுதியில் எவ்வகையான மக்கள் வசிக்கின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு கட்டிட அமைப்பு வரைபடங்கள் தயாரிப்பதற்கு உடனடியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## அமைப்புப் படம் தயாரித்தலும் குடியிருப்புகளின் வடிவமைப்பும்.

ஆரோக்கியமான சூழ்நிலைகளில் வசதியாக வாழ்வதற்குத் தேவையான வசதிகள் பெற்ற புதுமையான கட்டிட அமைப்புகளைத் தயாரிப்பதற்கு நிர்வாகப் பொறியாளர் தலைமையில் தனிப்பட்ட திட்டக் கோட்டமும் பொறியாளர்கள், கட்டிடக் கலை வல்லுநர்கள் கொண்ட குழுவும் உள்ளது. வாரியத் திட்டங்கள் யாவும், திட்ட நிர்வாகப் பொறியாளர் தலைமையில் உள்ள இந்தக் கோட்டத்தால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு செய்முறைப் படுத்தப்படுகின்றன. இம் மாநகரில் நிலம் கிடைப்பது மிகவும் அரிதாகையால் நிலத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்டு, குடியிருப்புகள் பல மாடிக் கட்டிடங்களாகவே கட்டப்படுகின்றன. இந்திய அரசு ஏற்பளித்தபடி குடிசைவாழ் மக்களுக்கான குடியிருப்புக்குக் குறிப்பிட்டுள்ள உட்புறப் பரப்பு 232 சதுர அடியாகும். குடும்பங்கள் வசதியாக வாழ்வதற்குத் தேவையான வசதிகளைக் கருத்தில் கொள்வதுடன் நிதி இடர்பாட்டையும் ஒரே பகுதியில் பல குடும்பங்களுக்கு இட வசதியளிக்க வேண்டியிருப்பதையும் கருதி, பல்வேறு கட்டிட வடிவமைப்புகளை வாரியம் தயாரித்துள்ளது. இத்தகைய வடிவமைப்புகள் உட்புறப் பரப்பளவில் 197 சதுர அடி முதல் 315 சதுர அடி வரை உள்ளன. பொதுவாக புழங்கும் அறை—படுக்கை அறை ஒன்று, முகப்புக் கூடத்துடன் கூடிய சமையலறை—இந்த அறையை உணவு உட்கொள்ளவும் தூங்கவும் பயன்படுத்தலாம்—குளியலறை, கொல்லைப்புரம், ஆகியவை குடியிருப்பில் இணைந்ததாகும். இந்தக் குடியிருப்புப் பகுதியில் மேல் நிலைத் தொட்டி ஒன்றும் இருக்கும். தொட்டியிலிருந்து எடுத்துக்கொள்ளும் வகையில் மாநகராட்சி குடிநீர் இல்லாத போது, அந்தப் பகுதியில் கிணற்றிலிருந்து தண்ணீர் பெறப்படுகிறது.

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு குழாய் உண்டு. இத்தகைகுடியிருப்பு களுக்கு மின் வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது. இந்தக் குடியிருப்புப் பகுதியில் சாக்கடை ஏற்பாடு மாநகராட்சியின் சாக்கடைக் காலுடன் இணைக்கப்படும். கட்டிட அமைப்புப் படத்தைத் தயாரிக்கையில், பள்ளிக் கூடம், விளையாட்டுத் திடல், சமுதாயக் கூடம், பால்வாடி, சிறு மருத்துவ மனை, அங்காடி போன்றவற்றிற்கு ஒவ்வொரு பகுதியிலும் இடமளிப் பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. குடிசைப் பகுதிகள் பலவற்றில் குடிசைவாழ் மக்கள் ஆடு மாடுகளை வைத்துக்கொண்டு இடத்தை ஆரோக்கியமில்லாத துப்புரவற்ற நிலையில் வைத்துக்கொள்கின்றனர் எனத் தெரிகிறது. மாநகர்ப் பகுதியிலிருந்து கால்நடைகளை மாநகரின் எல்லைக்கு அப்புறப்படுத்துவதற்கானத் திட்டமிருக்கிறதென்றாலும், அத்தகைய திட்டம் செயலுக்கு வரும் வரையில் ஒவ்வொரு குடியிருப்புத் தொகுதிக்கும் தனியே கால்நடைத் தொழுவமும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். குடியிருப்பின் ஒரு கோடியில் எல்லா நவீன வசதிகளுடனும் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கால்நடைச் சொந்தக்காரரிட மிருந்து குறைந்த வாடகை வசூலிக்கப்படும். இதைப் போலவே, நெசவாளர், சலவைத் தொழிலாளர் இருக்குமிடங்களிலெல்லாம் அவர் களுக்கு முறையே நெசவாளர் கொட்டகை, சலவைச்சாலை போன்ற வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இம் மாநகரில் குடிசைப் பகுதிகள் பல முக்கியமான இடங்களிலும் முக்கியமான சாலைகளுக்கு அருகிலும் அமைந்துள்ளன. இத்தகைய நேர்வுகளில், கட்டிட அமைப்புகள் தயாரிக்கப்படுகையில், சாலைகளை நோக்கி யுள்ள முக்கியமான இடங்கள் வாணிபக் காரியங்களுக்கு ஒதுக்கப்படு கின்றன. குறைந்த வருமானத் தொகுதியினருக்கும், நடுத்தர வருமானத் தொகுதியினருக்கும் அங்கணங்களும் குடிசைவாழ் மக்களது குடியிருப்புகளும் பின்புறத்தில் கட்டப்படுகின்றன.

## <u>நிதி வாயில்.</u>

பாதி மானியமாகவும், 30 ஆண்டுகளில் சமத் தவணைகளில் வட்டி யுடன் திருப்பிச் செலுத்தும் பாதி கடனாகவும் மாநில அரசு நிதி வழங்குகிறது.

## <u>திட்டச் சாதனை.</u>

வீடுகளின் எண்ணிக்கை இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலத்தில் கட்டியவை—3,849, குடியிருப்புகள்—7,332 செப்பனிட்ட காலி மனைகள்.



இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை—ரூபாய் 380·16 இலட்சம்.

1966–67 முதல் 1968–69 வரை ஆண்டுத் திட்டக் காலத்தில் கட்டியவை—5,938 செப்பனிடப்பட்ட காலி மனைகள்.

வீடுகளின் எண்ணிக்கை—4,746 குடியிருப்புகள்.

1966–67 முதல் 1968–69 வரை செலவிட்ட தொகை—ரூபாய் 2,95·64 இலட்சம்.

## <u>நான்காவது திட்டம்.</u>

நான்காவது திட்ட நிதி ஒதுக்கீடு—ரூ. 8,00·00 இலட்சம்.

நான்காவது திட்ட இலக்கு—15,000 குடியிருப்புகள்.

1969–70-ல் கட்டிய வீடுகளின் எண்ணிக்கை—1,800 குடியிருப்புகள்.

1969–70-ல் செலவிட்ட தொகை—ரூ. 83·29 இலட்சம்.

1970–71-ல் கட்டிய வீடுகளின் எண்ணிக்கை—1,400 குடியிருப்புகள்.

1970–71-ல் செலவிட்ட தொகை—ரூ. 99·67 இலட்சம்.

1971–72-ல் கட்டக் கருதியுள்ள வீடுகளின் எண்ணிக்கை—6,837 குடி யிருப்புகள்.

இதுவரை கட்டியுள்ள வீடுகளின் எண்ணிக்கை—1,981 குடியிருப்புகள்.

1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 3,65·00 இலட்சம்.

1971–72-ல் செலவிட்ட தொகை—ரூ. 3,99·46 இலட்சம்.

1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 3,65 இலட்சம்.

1972–73 ஆண்டு திட்ட இலக்கு—6,000 குடியிருப்புகள்.

## <u>குடியிருப்புகளைப் பராமரித்தல்.</u>

குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பொறியியல் பணியாளர்கள் தவிர, மேற்கண்டவற்றைக் கவனிப்பதற்கென பணியாளர் தொகுதி தனிப்பட உள்ளது—(1) வாடகையை உரிய காலத்தில் வசூலித்தல், (2) அனுமதி யின்றிக் குடியேறியவர்களை வெளியேற்றுதல், அவ்வாறு கட்டிய குடிசை களை அப்புறப்படுத்தல், நடைபாதைகளில் குடியேறியவர்களை வெளி யேற்றுதல், (3) குடியிருப்புகளின் பராமரிப்பு சரியான வகையில் பாரமரித்து வருவதற்காக, ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் எஸ்டேட் மேலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர் பராமரிப்புக்கு பொறுப்பேற்கையில், வாடகை வசூலிப்பவர்கள் வாடகை வசூலிக்கும் பொறுப்புடையவராவர். மேற்

கூறிய பணியாளர்கள். எஸ்டேட் அதிகாரியின் நேரடிப் பொறுப்பின்கீழ் பணியாற்றுவர். நிர்வாகம் செவ்விய முறையில் நடைபெறுவதற்காக சென்னை மாநகரம் 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது ; ஒவ்வொரு மண்டலமும். எஸ்டேட் அதிகாரி ஒருவரின் பொறுப்பில் இருக்கிறது.

குடிசை வாழ்வோருக்கு அறிவூட்டுதல்.

குடிசைவாழ் மக்கள் சுகாதாரமற்ற, துப்புரவற்ற சூழ்நிலைகளில், தற்போது வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்காகப் பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. எல்லாவிதமான வசதிகளுடன்கூடிய அத்தகைய புதியக் கட்டிடங்களில் அவர்களைக் குடியேறச் செய்யும் பொழுது, சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருப்பதுடன், நல்ல சமூகப் பழக்கங்களைக் கற்றுக்கொள்ள இயலும் வகையில் அத்தகைய புதிய குடியிருப்புகளில் வாழ அவர்கள் தக்கபடி அறிவூட்டப்பட வேண்டும். குடிசைவாழ் மக்களுக்கு நல்வாழ்வு வாழும் வகையினை அறிவுறுத்தும் பொருட்டு தமிழ் நாடு அரசு தகவல்-விளம்பரத் துறையின் உதவியுடன் மும்முர பிரசாரத்தைத் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செய்து வருகிறது. அறிவூட்டத்தக்க படங்கள் ஒவ்வொரு நாளும் குடிசைப் பகுதியில் காட்டப்பட்டு வருகின்றன ; குடிசைவாழ் மக்கள் தூய ஆரோக்கிய மான வாழ்வை நடத்தவேண்டியதை இப்படங்கள் பெரிதும் வலியுறுத்து கின்றன. குடும்ப நலமும் இத் திட்டத்தின்கீழ் அடங்கும். ஒவ்வொரு குடியிருப்புத் தொகுதியின் எஸ்டேட் மேலாளர் சில உதவியாளர்களைப் பெற்றிருப்பார். குடியிருப்புத் தொகுதியிலும் அருகில் உள்ள பகுதி களிலும் பராமரிப்பு வேலையில் கவனம் செலுத்தவும், அங்குள்ள மக்கள் அந்த இடத்தைச் சுத்தமாகவும், ஆக்கிரமிப்பு எதுவும் இல்லாமல் பாது காக்கவும், அத் தொகுதியில் தூய சமூக வாழ்க்கையை நடத்த மக்களை ஊக்குவிக்கவும் எஸ்டேட் மேலாளருக்கு அப் பகுதியில் வாழும் பெரு மக்களைக் கொண்ட குழு ஒன்று உதவி செய்யும்.

சமூகப் பணி நிறுவனங்கள்.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்ட பின்னர், குடிசைப் பகுதிகளில் சமூகப் பணியாற்ற பல சமூகத் தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

(i) சுகாதாரத் தொண்டர் அணி.

குடிசைவாழ் மக்களுக்கு அன்றாடச் சிகிச்சை அளிக்கவும், நோய்த் தடுப்புச் சிகிச்சை அளிக்கவும் குடிசைப் பகுதிகளின் பல இடங்களில் தனி மருத்துவமனைகளை அமைக்க சுகாதாரத் தொண்டர் அணி போன்ற



நிறுவனங்கள் முன்வந்துள்ளன. உள்ளூர் குடிசைவாழ் மக்கள் குறைந்த சந்தாத் தொகை செலுத்துவதன்மூலம் இந்த நிறுவனத்தின் உறுப்பினர் களாக சேர்வார்களேயானால், உறுப்பினர்கள் அனைவரின் நலனை யும் அந்த நிறுவனத்தினர் பார்த்துக்கொள்வர். உறுப்பினர்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவச் சிகிச்சை முடிந்தால் அறுவைச் சிகிச்சை உதவியும் அளிக்கப்படுகிறது. (சைதாப் பேட்டைத் தொகுதியில்) கோட்டூர்புரத்தில் இதுபோல் அமைக்கப்பட்ட தனி மருந்தகம் சிறந்த பணியாற்றி வருகிறது. அவர்கள் அளித்து வரும் உதவி பலராலும் பாராட்டப்படுகிறது. அது போன்ற தனி மருந் தகங்களை பிற பகுதிகளிலும் அமைக்க அவர்கள் முன் வந்துள்ளனர்.

(ii) தாட்டிகொண்டா—ராஜமன்னார் அறக் கழகம், சேத்துப்பட்டு.

ஏழைகளின் நலனில் இந்தப் பொறுப்புக் கழகம் குறிப்பிட்ட அக்கறை கொண்டுள்ளது. குடிசை மாற்றுப் பணிக்காக வாரியம் ஏற்ற முறையில் பயன்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ரூ. 12,000 நன்கொடை யாக அளிக்க இந்தப் பொறுப்புக் கழகம் முன்வந்துள்ளது.

(iii) சேவாசங்கம். (கில்ட் ஆப் சர்விஸ்).

இந்த சேவா சங்கமும் குடிசைவாழ் மக்களுக்குத் தேவை அறிந்து சிறந்த பணியாற்றி வருகிறது. மகளிர் பணிக்குச் செல்கையில் அவர் களுடைய குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டி இச்சங்கம் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தியுள்ளது. குடிசைவாழ் மகளிர் தங்கள் ஓய்வு நேரங்களில் வேலை செய்து வருவாயினைப் பெருக்க உதவவும், கைவினைப் பணிகளை இந்தச் சங்கம் சில குடிசைப் பகுதிகளில் கற்பிக்கிறது. சேவா சங்கம் இந்த ஏற்பாடுகளைப் பல இடங்களுக்கும் நீட்டித்துள்ளது. சேவா சங்கம் குடிசைவாழ் மக்களுக்கு எங்கெல்லாம் தன் பணியினை அளித்துள்ளதோ அங்கெல்லாம் எல்லா வகையான வசதிகளும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(iv) கிருஸ்துவ இளைஞர் சங்கம்.

சில குடிசைப்பகுதிகளில் உள்ள பள்ளிச் சிறுர்களுக்கு ரொட்டியும் பாலும் வழங்க இச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. குடிசைகளில் சமுதாய கூடங்களையும் சங்கம் நடத்துகிறது. வ. உ. சி. நகரில் சமுதாயக் கூடம் ஒன்றை நடத்துவதற்கான திட்டம் ஒன்று தற்போது வகுக்கப்பட்டுள்ளது.

### (v) சீரணிப் படை.

தமிழ் நாடு அரசினால் சீரணிப் படையும் குடிசைப் பகுதிகளில் ஆக்கப் பணி செய்து வருகிறது. சாலைகள் போடுதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், கிணறுகள் தோண்டுதல், வெள்ள நீர் வடிகால்கள் கட்டுதல் போன்ற நல்ல திட்டப் பணிகளை அவர்கள் மேற்கொள்கின்றனர். இந்தச் சீரணிப் படையை குடிசை மாற்றுப் பணியில் கணிசமான அளவுக்குப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது. குடிசைப் பகுதியில் உள்ள பள்ளிச் சிறார்களுக்கு இப் படையின் மூலம் ரொட்டி வழங்கப்பட்டு வருகிறது.

### (vi) "ஸ்வாலோஸ் இந்தியா லிமிடெட்".

இந்நிறுவனம் ஸ்வீடன் நாட்டு சமூகப் பணி நிறுவனமாகும். இது வட சென்னையில் சமூகப் பணி செய்துவருகிறது. அவர்கள் முதியோர் பள்ளிகளை நடத்துகிறார்கள்; குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்; மகளிர்க்குக் கைவினைப் பயிற்சி அளிக்கின்றனர்.

### (vii) மகளிர் நலத் துறை.

குடிசை வாழ் மகளிருக்கு நல்ல பழக்கங்கள், குடும்ப நலம் ஆகியவற்றில் போதிய அறிவுரை அளித்தல், அறிவு புகட்டும் படக் காட்சிகளையும், நாடகங்களையும் காட்ட ஏற்பாடு செய்தல் ஆகியவைமூலம் மகளிர் நலத்துறை மகளிர்க்கு சமூகப் பணியாற்றி வருகிறது.

### (viii) சென்னை சமூகசேவை கிறித்துவ மன்றம், குடிசைத் துப்புரவுத் திட்டம், சென்னை-6.

பொதுக் கழிப்பிட வசதி மிகவும் அரிதாயுள்ள இடங்களில் அத்தகைய வசதியினை அளிக்க இந்த நிறுவனம் முன் வந்துள்ளது. முன்னுரிமை அடிப்படையில், குடிசை மாற்றுத் திட்டத்தின்படி சில பகுதிகளில் 3 முதல் 5 ஆண்டுகள் வரையிலும் குடியிருப்புகள் கட்ட இயலாது. எல்லா வசதிகளுடன் புதிய குடியிருப்புகள் கட்டப்படும் வரையில், சுகாதார நிலைமைகளை மேம்படுத்த அத்தகைய குடிசைப் பகுதிகளில் பொதுக் கழிப்பிடங்களை அமைக்குமாறு இந்த நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை இந்த நிறுவனம் சுமார் 8 திட்டங்களை மேற்கொண்டுள்ளது.





### (ix) புதிய குடியிருப்பாளர் நலப் பொறுப்புக் கழகம்.

திரு. இராம அரங்கண்ணல், எம்.எல்.ஏ. (தலைவர், தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்) சங் L. நியூபிகின், பிஷப், சென்னை, (சென்னை சமூகப் பணி கிறித்துவ) மன்றம் 77, சங்கம் ஆகியோரின் முயற்சியினால் அமைக்கப்பட்ட புதிய குடியிருப்பாளர் நலப் பொறுப்புக் கழகம், தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், வீட்டுவசதி எஸ்டேட்டுகளில் புதியதாகக் குடியேறியவர்களுக்குத் திறமையான சமூகப்பணி அளித்து வருகிறது.

நிர்வாக அதிகாரி ஒருவருடனும், சமூக ஊழியர்களுடனும் புதிய முன்னோடித் திட்டங்களில் இந்தப் பொறுப்புக் கழகம் தன்னுடைய பணியினை முதலில் தொடங்கியது. பொது நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் புல்வகைக் கூட்டு முயற்சிகளில் புதிய குடியிருப்பாளர்களை ஈடுபடச் செய்து குடிசை மாற்றுத் திட்ட வீட்டுவசதி எஸ்டேட்டுகளின் பராமரிப்பில் பங்கு கொள்ளும் சமூக உணர்வை ஏற்படுத்தவும் உதவுகின்ற முறைகளில் வகை செய்யப்படுகிறது.

தற்போது சென்னை மாநகரில் நொச்சி நகர், விசாலாட்சித் தோட்டம், பிருந்தாவனம் ஆகிய இடங்களில் 3 முன்னோடித் திட்டங்களை இக்கழகம் தொடங்கி உள்ளது.

தற்போதைய பணிகளைப் பயன்படுத்தல், வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் நோக்கத்தைக் கொண்ட தொழில்வழி காட்டுதல், குழந்தைகளுக்கும், முதியோர்களுக்குமான பொழுதுபோக்கு மனமகிழ் வசதிகள், பகுதி பராமரிப்புக்கு குடியிருப்பாளர் சங்கம், சுகாதாரக் கல்விக்கான மகளிர் சங்கம், கைவினைப் பயிற்சி, பொதுச் சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றில் இக் கழகம் ஈடுபடும்.

### (x) போலிகன்ஸ் (Polygans).

குடிசைப் பகுதிகளில் சமூகப் பணியாற்ற இந்த நிறுவனமும் முன் வந்துள்ளது. தனது நடவடிக்கையினைச் செயல்படுத்த ஆண்டிமான்யம் பகுதியை இது தெரிந்தெடுத்துள்ளது.

#### வெளியூர்களில் குடிசை மாற்றும் பணி.

வெளியூர்களில் குடிசை மாற்றும் பணி தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் பிரிவுகளால் கவனிக்கப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர், திருச்சி, மதுரை வீட்டு வசதிப் பிரிவுகள் மூலமாக 500 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. 1971-72 நடப்பாண்டில் இதற்காக ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1972 மார்ச் 13

1971 டிசம்பர் நிலவரப்படி கோயம்புத்தூர், மதுரை, திருச்சி வீட்டு வசதிப் பிரிவுகளினால் கட்டி முடிக்கப்பட்ட கட்டப்பட்டு வருகிற குடிசைத் திட்டங்களின் பட்டியல். IX-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### பார்வையாளர் தெரிவித்த கருத்துக்கள்.

இந்நாட்டில் முதல்முதலாக குடிசைப்பகுதி மாற்று திட்டங்கள் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய செய்தி நாட்டின் பிற மாநிலங்களுக்கும், உலகின் மற்ற பகுதிகளுக்கும் எட்டிய போது, நல்லெண்ணம் கொண்ட பார்வையாளர்கள் இம் மாநிலத்திற்கு வந்து இங்கு மேற்கொள்ளும் கட்டிடப் பணிகளைப் பார்வையிட்டு, எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்கின்றனர். எங்களுடைய வாரியத்தினையும், எங்கள் திட்டப் பணிகளையும் பார்வையிடும் வாய்ப்பு பெற்ற பார்வையாளர்களின் கருத்துக்களை கீழே தருவது பயனுள்ளதாயிருக்கும் எனக் கருதுகிறோம். பார்வையாளர்களில் ஒருவராகிய உலக வங்கித் துணை இயக்குநர் திரு. கிரிசொரி வோட்டால் ( Gergony volanry ) சென்னை மாநகரில் உள்ள குடிசை மாற்றுத் திட்டப்பகுதிகளைப் பார்வையிட்டு பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார்.

"சென்னை மாநகரில் குடிசை மாற்றுத் திட்டத்தின் புது முயற்சியினைக் காண்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். உலகின் மற்ற பகுதியில் வசிக்கும் நாம் இப்பணி குறித்து கேள்விப்பட்டு வருகிறேன். இதை நேரில் கண்கூடாக காணும் பேறு பெற்றமைக்கு மகிழ்கிறேன் .இரண்டாவது பத்தாண்டு வளர்ச்சிக் காலத்தில் சமூக நீதிக்குப் புதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதிலும், மாநகரங்களின் தேவைகள் பற்றியும் உலக வங்கியிலிருக்கும் எங்களது எண்ணத்துக்கு ஊக்கம் தருவதாய் இது அமைந்துள்ளது. தென் ஆசிய நாடுகளில் ஆற்ற வேண்டிய பணிக்குச் சென்னை மாநகரம் இங்கு ஆற்றியுள்ள பணி உறு துணையாகும் என்பதை அங்கு எடுத்துக் கூறுவேன். உங்கள் பணி தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற என் நல் வாழ்த்துக்கள்."

குடிசை மாற்றுப் பகுதிகளைப் பார்வையிட்ட ஜெர்மனி நாட்டுக் கட்டிடக் கலை வல்லுநர் திரு. கெர் ஹார்டு மே கோர்னர் Ms. Gergary Meigharner வாரியம் நிறைவேற்றிவரும் பணிகள் உள்ளக்கிளர்ச்சி கொள்ளும் வகையில் இருப்பதாகக் கூறினர்.



1972 மார்ச் 13]

துருக்கி நாட்டில் புகழ் மிக்க வெளியீட்டாளர் திரு. இஸ்மாயில், இப் பணி துணிவானதாகவும், வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்குப் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது என்றார்.

### முடிவுரை.

சமூகத் தொண்டு உணர்விலும் குடும்பத்துக்கு ஒரு வீடு எனும் குறிக்கோளுடன் சமுதாயத்தில் ஏழையரை மேல் நிலைக்கு கொண்டுவரும் முயற்சியிலும், தமிழ் நாடு அரசு குடிசைகளை மாற்றிகுடியிருப்புகள் அமைக்கும் மகத்தான பணியினை மேற்கொண்டுள்ளது. இத்தகு பெரு முயற்சியில் இந் நாட்டில் மட்டும் அன்றி அயல் நாடுகளில் உள்ள எல்லா சமூகப் பணி நிறுவனங்களும் நல்லெண்ணம் கொண்டவர்களும் இதில் பங்கு கொண்டு உதவி செய்ய முன்வருமாறு இவ்வரசு அழைப்பு விடுக்கிறது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்".

## இணைப்பு I.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட இப்பிடிக்காத வீடுகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 வியாசர்பாடி .. .. .. .. | 566 |
| 2 சிவ சண்முகபுரம் (வடக்கு கிரியப்பா சாலை) | 551 |
| 3 வல்லீஸ்வரன் தோட்டம் .. .. .. | 350 |
| 4 ஆண்டி மானியம் தோட்டம் .. .. | 185 |
| 5 கோ. புதூர் பகுதி I .. .. .. | 108 |
| 6 வெங்கிடாபுரம் .. .. .. | 60 |
| மொத்தம் .. | 1,820 |

## இணைப்பு II.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட தாற்காலிகக் கொட்டகை வீடுகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 மாம்பலம் ஏரிக்கரை .. .. .. | 478 |
| 2 அப்பாவு நகர் .. .. .. | 55 |
| 3 விசாலாட்சி தோட்டம் .. .. .. | 54 |
| 4 வெங்கடாபுரம் .. .. .. | 24 |
| 5 ராமகாமத்புரம் .. .. .. | 19 |
| மொத்தம் .. | 630 |



## இணைப்பு III.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மேல் செப்பனிட்ட காலி மனைகள் பற்றிய விவரங்கள்—

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | செப்பனிட்ட காலி மனைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 கோ. புதூர் .. .. .. .. | 2,378 |
| 2 வியாசர்பாடி .. .. .. .. | 1,084 |
| 3 சி.ஐ.டி. நகர் .. .. .. .. | 486 |
| 4 ட்ரஸ்டுபுரம் .. .. .. .. | 480 |
| 5 புலியூர்புரம் .. .. .. .. | 400 |
| 6 நமசிவாயபுரம் .. .. .. .. | 363 |
| 7 கோயம்பேடு .. .. .. .. | 359 |
| 8 மந்தவெளிப்பாக்கம் .. .. .. | 287 |
| 9 அங்காடிப் பண்ணை .. .. .. | 282 |
| 10 அப்பாவு நகர் .. .. .. .. | 231 |
| 11 ராமகாமத்புரம் .. .. .. | 217 |
| 12 சாஸ்திரி நகர் I, II ஆம் நிலை வேலை .. | 213 |
| 13 வாழைப்பூச்சேரி .. .. .. | 166 |
| 14 கல்யாணபுரம் .. .. .. .. | 142 |
| 15 வெங்கடேசபுரம் .. .. .. .. | 191 |
| 16 கொருக்குப்பேட்டை .. .. .. | 101 |
| 17 தண்டையார்பேட்டை .. .. .. | 112 |
| 18 மல்லிகைபூச்சேரி .. .. .. | 127 |
| 19 காமராஜ்புரம் .. .. .. .. | 161 |
| 20 மீனும்பாள் சிவராஜ் நகர் .. .. .. | 104 |
| 21 ஜி. சி. எல்.எச். திட்டம் .. .. .. | 104 |
| 22 ராஜுபிள்ளை தோட்டம் .. .. .. | 120 |
| 23 வாழைமாநகர் .. .. .. .. | 100 |
| 24 பெரிய கூடல் இராமம் .. .. .. | 73 |
| 25 வடக்கு சைதாப்பேட்டை .. .. .. | 67 |
| 26 புஷ்பா நகர் .. .. .. .. | 54 |
| 27 சி.ஐ.டி. குடியிருப்பு .. .. | 22 |
| 28 மல்லிகைப்பூ குடியிருப்பு | 22 |
| மொத்தம் .. | 8,446 |

# இணைப்பு VI.

## 1971-72-ல் நடைபெற்றுவரும் பணிகள்.

| தொடர் எண். | மாநகராட்சி டிவிஷன் எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்.) | குடியிருப்புகள் கட்டுவதற்கான இலக்கு. | கட்டி முடிக்கப் படுமென எதிர்பார்க்கப் படும் குடியிருப்புகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1 | காசிமேடு குப்பம் .. .. .. .. | 32·00 | 424 | 198 |
| 2 | 10 | கல்லறைச்சாலை (மேற்கு) .. .. .. | 52·25 | 672 | 186 |
| 3 | 28 | பேசின்பிரிட்ஜ் பேருந்து நிலையம் .. .. | 16·00 | 192 | 92 |
| 4 | 42 | வியாசர்பாடி (இரண்டாம் நிலை) .. .. | 38·20 | 510 | 510 |
| 5 | 42 | வியாசர்பாடி (இடைத்தங்கல் குடியிருப்புகள்) | 33·00 | 510 | 510 |
| 6 | 47 | பீரேநகர் பள்ளம் .. .. .. | 42·30 | 448 | 448 |
| 7 | 48 | பார்வதி கக்கன் குடியிருப்பு (புளியந்தோப்பு) | 13·70 | 312 | 144 |
| 8 | 60 | சாலேமா நகர் .. .. .. .. | 25·25 | 296 | 120 |
| 9 | 60 | ராதாகிருஷ்ணபுரம் .. .. .. | 13·60 | 176. | 120 |
| 10 | 61 | திருமங்கலம் அடுக்கல் திட்டம் .. .. | 64·00 | 870 | 416 |
| 11 | 64 | தாண்டவராய சத்திரம் .. .. .. | 17·80 | 222 | 222 |
| 12 | 65 | மீனம்பாள் சிவராஜ் நகர் I, II-வது நிலை | 18·00 | 224 | 168 |
| 13 | 84 | லாக் நகர் .. .. .. .. .. | 24·00 | 312 | 120 |
| 14 | 87 | சீனிவாசபுரம் .. .. .. .. | 76·90 | 976 | 760 |
| 15 | 90 | அயோத்தியாகுப்பம் .. .. .. .. .. | 59·43 | 678 | 144 |
| 16 | 93 | நொச்சிக்குப்பம்—நொச்சி நகர் .. .. .. | 70·00 | 984 | 804 |
| 17 | 94 | டொம்மிக்குப்பம் .. .. .. .. .. .. | 16·00 | 344 | 128 |
| 18 | 97 | விசாலாட்சியம்மாள் எஸ்டேட், I-வது, II-வது நிலை | 48·00 | 768 | 290 |
| 19 | 98 | பல்லக்கு மானியம்—கபாலித் தோட்டம் .. .. | 93·30 | 1,176 | 800 |
| 20 | 98 | கபாலீஸ்வரர் கோயில் நிலம் .. .. .. .. | 10·63 | 162 | 84 |
| 21 | 101 | மேயர் சம்பந்தம் நகர் .. .. .. .. .. | 66·00 | 864 | 336 |
| 22 | 102 | வடக்கு உஸ்மான் சாலை—குடிசைப் பகுதி .. .. | 18·00 | 208 | 36 |
| 23 | 107 | அப்பாவு நகர் .. .. .. .. .. .. | 18·50 | 168 | 36 |
| 24 | 109 | மாம்பலம் ஏரிக்கரை இடைத்தங்கல் குடியிருப்புகள் | 33·00 | 520 | 520 |
| 25 | 113 | சுபேதார் தோட்டம் .. .. .. .. .. .. | 21·85 | 330 | 126 |
| 26 | 114 | பூபதி நகர் .. .. .. .. .. .. | 9·20 | 112 | 964 |
| 27 | 115 | கலைஞர் கருணாநிதி நகர் .. .. .. .. | 39·40 | 488 | 344 |
| 28 | 116 | பிருந்தாவன் திட்டம் .. .. .. .. | 17·90 | 584 | 1,860 |
| 29 | 118 | ஜாபர்கான்பேட்டை நிலை—I .. .. .. | 15·96 | 192 | 96 |
| 30 | 118 | ஜாபர்கான்பேட்டை நிலை—III .. .. .. | 5·80 | 56 | 56 |
| 31 | 119 | வெங்கடாபுரம் .. .. .. .. .. | 30·00 | 728 | 300 |
| 32 | 119 | கோட்டூர்புரம் .. .. .. .. .. | 130·00 | 1,848 | 1,152 |
| | | மொத்தம் .. | 1,169·97 | 16,354 | 9,392 |

# இணைப்பு VII.

குடிசை மாற்று வாரியத்தால் அரசின் ஏனைய துறைகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட தீப்பிடிக்காத கொட்டகை வீடுகளைப்பற்றிய விவரங்கள்

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | எந்தத் துறையிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது. | தீப்பிடிக்காத கொட்டகை வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | புளியந்தோப்பு .. .. .. .. | பொதுப்பணித் துறை .. .. .. | 1,630 |
| 2 | வடக்கு திட்டம் .. .. .. .. | சென்னை மாநகராட்சி .. .. | 478 |
| 3 | கிண்டி பொறியியல் கல்லூரியின் பின்புறம். கோட்டூர். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. | 669 |
| 4 | சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்குஎதிரில். | சென்னை மாநகராட்சி .. .. | 242 |
| 5 | வண்ணாந்துறை (அடையாறு) .. .. | ஷை .. .. .. .. | 160 |
| | | மொத்தம் .. | 3,179 |



# இணைப்பு VIII.

சென்னை மாநகரிலுள்ள குடிசைப் பகுதிகள் குறித்த கணக்கெடுப்பு.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டபொழுது சென்னை மாநகரிலுள்ள குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கை 602 என மதிப்பிடப்பட்டது. ஆனால் குடிசை மாற்று வாரியம் அண்மையில் நடத்திய புள்ளிவிவர ஆய்வின் மூலம் சென்னை மாநகரில் 1,041 குடிசைப் பகுதிகள் கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றில், 820 குடிசைப் பகுதிகளில் சமூக பொருளாதார ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு குடும்ப எண்ணிக்கையுடைய குடிசைப் பகுதிகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 25 குடும்பங்களும் அதற்குக் குறைவாகவும் உள்ள குடிசைப் பகுதிகள். | 120 |
| 26 லிருந்து 50 குடும்பங்களைக் கொண்டுள்ள குடிசைப் பகுதிகள். | 147 |
| 51 லிருந்து 100 குடும்பங்களைக் கொண்டுள்ள குடிசைப் பகுதிகள். | 197 |
| 101 லிருந்து 200 குடும்பங்களைக் கொண்டுள்ள குடிசைப் பகுதிகள். | 167 |
| 201 லிருந்து 500 குடும்பங்களைக் கொண்டுள்ள குடிசைப் பகுதிகள். | 157 |
| 501 லிருந்து 1,000 குடும்பங்களைக் கொண்டுள்ள குடிசைப் பகுதிகள். | 29 |
| 1,000 குடும்பங்களுக்கு மேல் உள்ள குடிசைப் பகுதிகள். | 3 |
| மொத்தம் .. | 820 |

## இணைப்பு IX.

(1-12-1971 நிலவரப்படி) வெளியூர்களில் குடிசை மாற்றுத் திட்டம்.

| திட்டத்தின் பெயர். | | கட்டி முடிக்கப் பட்ட வீடு களின் எண் ணிக்கை. | கட்டப் பட்டு வரும் வீடு களின் எண் ணிக்கை. | மதிப்பீடு (ரூபாய் லட்சத் தில்). |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1. கோயம்புத்தூர் நகர்— | | | | |
| (a) ஆடு, மாடு வெட்டும் பகுதி | .. | 246 | 77 | 26·85 |
| (b) பேரூர் சாலைக்குத் தெற்கு I, II-வது நிலைகள். | | 677 | 179 | 40·48 |
| (c) பேரூர் சாலைக்கு வடக்கு I, III-வது நிலைகள். | | 710 | 228 | 56·70 |
| (d) லிங்காய கவுடர் தோட்டம் | .. | 217 | 77 | 19·02 |
| (e) பாலையன் தோட்டம் | .. .. | 243 | 49 | 14·36 |
| (f) சித்த புதூர் பகுதி | .. .. | .. | 216 | 14·15 |
| (g) வின்செண்ட் சாலைப் பகுதி | .. | .. | 306 | 15·76 |
| (h) அருந்ததியர் குடியிருப்பு | .. | .. | 138 | 8·48 |
| மொத்தம் | .. .. | 2,093 | 1,270 | 1,95·80 |
| 2. மதுரை நகர்— | | | | |
| இதுவரை குடிசைப்பகுதி மாற்று திட்டம் எதும் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படவில்லை. அடுத்த நிதி யாண்டில் மதுரை நகரில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களை மேற் கொள் ளும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. | | .. | .. | .. |





## இணைப்பு IX—தொடர்ச்சி.

| திட்டத்தின் பெயர். | | | | கட்டி முடிக்கப் பட்ட வீடு களின் எண் ணிக்கை. | கட்டப் பட்டு வரும் வீடு களின் எண் ணிக்கை. | மதிப்பீடு (ரூ. இலட்சத் தில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | | | | (2) | (3) | (4) |
| 3. திருச்சி நகர்— | | | | 64 | .. | 6·10 |
| (a) கல் மந்தை | .. | .. | .. | 391 | .. | 23·25 |
| (b) பீச்சான்குளம் | .. | .. | | | | |
| மொத்தம் | | | .. | 455 | .. | 29·35 |
| 4. சேலம் நகர்— | | | | 82 | .. | 5·40 |
| (c) நாராயணசாமிபுரம் | .. | .. | | 66 | .. | 4·38 |
| (d) நாலுகால் மண்டபம் | .. | .. | | 68 | .. | 4·45 |
| (e) அன்னதானப்பட்டி | .. | .. | | 282 | .. | 9·05 |
| (f) எருமைபாளையம் | .. | .. | | 162 | .. | 5·91 |
| (g) நீதிமன்றச் சாலைப் பகுதி | .. | .. | | 89 | .. | 3·02 |
| (h) பொன்னம்மாள்பேட்டை | | .. | | | | |
| மொத்தம் | | | .. | 749 | .. | 32·21 |
| 5. குன்னூர்— விண்ணூர்ப்பேட்டை குடிசைப் பகுதி | | | .. | .. | .. | 4·99 |
| 6. தஞ்சாவூர்— வடக்கு ரோஹணி | .. | .. | .. | 199 | .. | 6·12 |
| 7. கடலூர்— குண்டு சாலை | .. | .. | .. | 177 | .. | 4·74 |
| 8. திருநெல்வேலி— | .. | .. | .. | 64 | .. | 3·83 |
| சி[illegible]. கிராமம் | .. | .. | .. | | 16 | — |
| [illegible] மலைச்சாலை | .. | .. | — | .. | | |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### புதன்கிழமை, 1972 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம்

* 2. குறுகிய கால வினா—திரு. ஆர். பொன்னப்ப நாடார் :<br>திரு. கா. மு. கதிரவன் : } மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னர் மானியம் சலுகைகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அது செயல்படுத்தப்பட்ட பின்னரும் கூட திருவாங்கூர் மகாராஜாவினால் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் இன்னும் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருகிறாரா?

(இ) இது குறித்து அரசு பரிசீலித்துள்ளதா?

(உ) ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) முதல் (எ) வரை : இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் ;** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான தேவஸ்வம் போர்டாக இருக்கிற காரணத்தினால் விரைவிலே பரிசீலனை செய்து அதற்கு ஒரு முடிவு சீக்கிரம் ஏற்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்த மாதம் 2-3-72 அன்று இது பற்றி அதிகாரிகளையெல்லாம் அழைத்து வைத்து பேசப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே திருவாங்கூர் மகாராஜாவுக்கு இருக்கிற உரிமைகளை வைத்துத்தான் அவர் நியமிக்கிற ஒரு நபரையும் சேர்த்து, தமிழ்

நாடு அரசாங்கம் நியமிக்கின்ற இரண்டு பேர்களையும் சேர்த்து தேவஸ்வம் போர்டு ஏற்படுத்தப்படுகிறது. மகாராஜாக்களுக்குள்ள உரிமைகளை அவர்கள் இழந்துவிட்ட காரணத்தினால், இப்படிப்பட்ட உரிமைகளும் இழக்கப்படுமா என்பதைப்பற்றி சட்டத்துறையினர் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். வெகு விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்திற்கு வந்த பிறகும் கூட இன்னும் தேவஸ்வம் போர்டுக்கு அந்த அரசினுடைய பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டியது அவசியம் தானா, அதற்கு நாம் ஒரு முடிவு எடுத்து, அதை கேரள அரசுக்கு அனுப்ப முடியாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, அது கேரளாவிலிருந்து தமிழ்நாடு பிரியும்பொழுது சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதனால் தான் திருவாங்கூர் மகாராஜாவுக்கு இருக்கிற உரிமைகளின் காரணமாக நாம் ஒரு மெம்பரை நியமித்துக்கொண்டிருக்கிறோம். அப்படி நியமிக்காமல் தமிழ்நாடு அரசு நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இப்பொழுது நாம் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எப்பொழுதுமே இப்படி நியமனம் செய்யப்படுகிற உறுப்பினர் ஜாதி இந்துக்களாக இருக்கிறார்கள். ஆதலால், இனியாவது பிற்பட்ட வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் இதிலே இடம் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, இந்துக்களை யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்ற கொள்கையை கடைப்பிடித்துக் கொண்டு வருகிறோம். மற்ற ஆலய அறங்காவலரை நியமித்துக் கொண்டிருக்கிறோமே, அதைப் போலவே தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, வருகிற மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் இப்பொழுதே செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே, இன்னும் இதனைக் காலம் கடத்தினால் மகாராஜா தேவஸ்வம் போர்டுக்கு நியமித்தாலும், இந்த அரசு நியமித்தாலும், கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே, உடனடியாக சீக்கிரம் இதுபற்றி முடிவு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மார்ச் மாதம் முடிவடைய இருக்கிறது. அடுத்த பதவி காலத்திற்கு உறுப்பினர்கள் இதிலே அங்கம் வகிப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, விரைவிலே இதுபற்றி அரசாங்கம் முடிவு எடுக்கும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மகாராஜாவினால் நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர் தொடர்ந்து எத்தனை ஆண்டுகளாக இருந்து வருகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இந்த மூன்று ஆண்டு காலமாக தொடர்ந்து இருந்து வருகிறார்.

**திரு. நா. வீராசாமி:** மன்னர் மானிய ஒழிப்பு சட்டப்படி மகாராஜக்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது மகாராஜா நியமிக்கின்றார்களா, அல்லது இந்த அரசாங்கம் நியமித்துக் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மகாராஜா சிபாரிசு செய்கின்ற உறுப்பினரைத்தான் நியமித்துக்கொண்டிருக்கிறோம். மன்னர்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டு விட்ட காரணத்தினால், இதுவும் ஒழிக்கப்படவேண்டும் என்றுதான் சட்டப்படி ஒழிக்கப்படுவதற்கு நடைமுறையில் இடம் இருக்கிறதா, விதிமுறையில் இடம் இருக்கிறதா என்பதை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

## *Board of Education*

* 496 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the executive board of the Tamil Nadu Asiriar Sangam requested the Government on 9th May 1971 to constitute an antonomus Board of Education with representatives of teachers Association and to formulate and maintain standard curriculum and supervise the working of schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மே 9-ம் தேதியன்று தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கம் கேட்டுக்கொண்டார்களே, ஒரு அடானமஸ் போர்டு அமைக்கவேண்டுமென்று, அதற்கு அரசாங்கத்தினுடைய பதில் என்ன, அரசு என்ன முடிவு செய்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1971-ம் ஆண்டு மே 9-ம் நாளன்று நடந்த கூட்டத்தில் ஆசிரியர் கழகக் குழுவினர் இப்படிப்பட்ட ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். மாநிலப் பள்ளி கல்வி வாரியம் அமைத்தால் சரியாக இருக்குமா என்று பல வகைகளில் பரிசீலனை செய்து பார்த்ததில் அரசாங்கத் துறையில் இருப்பதுபோல் அத்தகைய நன்மைகள் ஏற்படாது என்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற முறையே பொருத்தமானது என்று அரசு கருதுகிறது. காரணம், சாதாரணமாக இப்படிப்பட்ட வாரியங்கள் வாணிப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன. டிரான்ஸ்போர்ட் வாரியம், மின்சார வாரியம் போன்றவைகளை வாரியமாக அமைத்து, அதற்கென்று ஒரு தனிக் குழு அமைத்து நடத்துவது நல்லது. கல்வி போன்ற துறையில் அதற்கென்று ஒரு வாரியம் அமைத்தால், இந்த அரசு என்ன செய்யவேண்டியிருக்குமென்றால், மானியத் தொகையை வாரியத்திடம் கொடுத்து விட்டு, அந்த வாரியம் கல்விக்கான பொறுப்புக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டியிருக்கும். அரசுக்கு அதில் அதிகமான தொடர்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். கல்வி வளர்ச்சித் துறையாக இருக்கிற காரணத்தினால் பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அரசுத் துறையினாலேயே இயக்கப்பட வேண்டுமென்பதுதான் கருத்து. வேறு எல்லா மாநிலங்களிலும் அரசுத் துறைதான் கல்வித் துறையை இயக்கி வருகிற காரணத்தினாலும், இதற்காக ஒரு வாரியம் அமைப்பது அவ்வளவு பயன்படாது என்ற கருத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : தற்பொழுது முறைப்படி இந்தக் குழுவில் ஆசிரியர்கள் இடம் பெறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அரசாங்கத்தினிடம்தான் இந்தத் துறை இருப்பதால் ஆசிரியர்கள் இடம் பெற இடமில்லை.

### ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் விநியோகம்

* 437 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை மாணவர்கட்கு இலவசமாக புத்தகங்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ் நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புவரை படித்து மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறும் ஏழை மாணவ மாணவிகளுக்குப்



புத்தகங்களும், முதல் வகுப்பில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கரும் பலகையும் இலவசமாக வழங்கும் திட்டம் சென்ற சில ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகிறது. இத்திட்டம் 1970-71-ம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சித் துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 3 வரையான வகுப்புகளில் படித்து மாநகராட்சி மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு பெற்று வரும் மாணவ மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இலவசமாக புத்தகம் வழங்கும் திட்டம் 1972-73-ம் ஆண்டு முதல் மாநில அரிசன நலப்பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இவை தவிர, மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள அல்லது ஷெட்யூல்டு வகுப்பு அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த 26,928 மாணவிகளுக்கு 1971-72-ம் ஆண்டில் மாணவியொருத்திக்கு ரூ. 3 வீதமும், 1972-73, 1973-74-ம் ஆண்டு ரூ. 5 வீதமும் இலவசப் புத்தகங்களும் எழுது பொருள்களும் கொடுக்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரிசன நலத்துறை, அத்துறையின் கீழுள்ள பள்ளிகளில் படிக்கும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் கரும்பலகையும் கொடுத்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, துவக்க பள்ளி உள்ள ஏழை மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்களை வழங்க அரசு ஆலோசிக்க முன் வருமா? அந்த அளவில் நிதி பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால், அது தவிர்க்கப்பட வாய்ப்பு இயலாததினால், அந்த நிதி வட்டாரத்திலுள்ள கோவில்களில் உள்ள உபரி நிதியை அரசு பயன்படுத்த ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது. இலவச மதிய உணவு பெறுகிற மாணவர்களில் ஒன்றிலிருந்து மூன்றாவது வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு இப்பொழுது இலவசமாக புத்தகங்களும், மற்றவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசனநலப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு இலவசமாக புத்தகங்களும், மற்றவைகளும் வழங்கப்படுகின்றன. அரிசன நலத்துறை 833 பள்ளிகளை நடத்துகின்றது.

72 பள்ளிகள் பழங்குடியினத்தவர்களுக்காக நடத்தப்படுகிறது. எனவே, முடிந்தவரை இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இருப்பவர்களுக்கு அத்தகைய வசதிகளைச் செய்து [illegible] குழுவினர் முன்வருவார்களேயானால் அது வரவேற்கப்படும். [illegible] அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு நிதிநிலை வசதியை பெற்றிருக்கின்றனவா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று.

அரசு வெளியிடும் பாடப்புத்தகங்கள்

*494 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு வெளியிடும் பாடப்புத்தகங்களை ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்வதற்குப் பதிலாக பள்ளிகளுக்கே நேரிடையாக விற்பனை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1972-73-ம் ஆண்டில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மேற் கொள்ளவிருக்கும் விற்பனை முறையின் கீழ் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மட்டும் அரசுப்பாட நூல்களை நிறுவனமே சில்லறை விற்பனையாளர்களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் நேரடியாக விற்பனை செய்யும். அவர்களுக்கு நிறுவனம் 5 விழுக்காடு கழிவு தரும். பிற மாவட்டங்களில் ஒரு தாலுகாவுக்கு ஒரு மொத்த விற்பனையாளரையும், ஒவ்வொரு தாலுகாவுக்கும் சில சில்லறை விற்பனையாளர்களையும் நிறுவனமே நேரடியாக நியமிக்கும். தாலுகா விற்பனையாளர்களுக்கு நிறுவனம் 10 விழுக்காடு கழிவு தரவேண்டும். அன்னார் தங்களுக்குக் கீழுள்ள சில்லறை விற்பனையாளருக்கு 5 விழுக்காடு கழிவு தரவேண்டும். தங்கள் தாலுகாவிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கும் 5 விழுக்காடு கழிவுடன் விற்பனை செய்ய வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தனிப்பட்ட வியாபாரிகள் அரசாங்கத்திடமிருந்து வாங்கக்கூடிய புத்தகங்கள் எல்லாம் விற்பனையாகுமோ, ஆகாதோ என்ற ஐயப்பாட்டினால், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்கின்றார்கள். அதனால் முதலில் செல்லும் மாணவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கிறது. பின்னால் செல்லக்கூடியவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்தந்தப் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களை அந்தந்தப் பள்ளிகளுக்கே நேரடியாக விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கனவே எல்லா மாவட்டங்களிலும் ஒரு விற்பனையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை, செங்கற்பட்டை பொறுத்த வரையில் அரசு நிர்வாகமே நேரடியாக விநியோகம் செய்கிறது. அதை சில்லறை வியாபாரிகள் பெற்று, விற்பனை



செய்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலும் இப்போது தாலுகா அளவில் சில்லரை வியாபாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் மொத்த வியாபாரிகளைத்தான் நியமிக்கிறது. சில்லரை [illegible] மொத்த வியாபாரிகள் அமர்த்திக்கொள்கிறார்கள். [illegible] வியாபாரிகளுக்கு [illegible] விற்பனையில் 10 விழுக்காடு கொடுக்கப்படுகிறது. [illegible] சில்லரை வியாபாரி[illegible]க்கு 5 விழுக்காடு கொடுக்க வேண்டும்.

ஆனால், சில இடங்களில் அந்த 5 வி[illegible] கொடுக்காமல், ஏமாற்[illegible] டிருக்கிறார்கள். அதை அவர்கள் கேட்[illegible] பெற்றுக் கொள்ளலாம். [illegible] ஆண்டுகளுக்கு முன்னால் புத்தகங்களை வெ[illegible]தில் சிறிது காலதாமதப்[illegible] பட்டிருந்ததால், புத்தகங்கள் கிடைப்பதில் [illegible] சிரமம் இருந்த[illegible] ஆனால் இப்பொழுது மே மாதத்திற்குள் புத்தகங்கள் [illegible] கையில் அச்சிட்டு, தயாராக வைக்கப்பட்டுள்ளன. எனவே, [illegible] விநியோகத்தில் இந்த ஆண்டு முதல் சிறந்த பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, தமிழ்நாட்டு ஆசிரியர்கள் சங்கம் 6-3-72 அன்று ஒரு மனு அனுப்பி இருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, மதுரையில் ஒரே ஒரு புத்தக வியாபாரிக்குத்தான் விற்பனை உரிமைக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் ஏற்கனவே தமிழ்நாடு பூராவும் 600 வியாபாரிகள் இருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கும் விற்பனை உரிமை வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சங்கம் வேண்டியுள்ள இந்த உதவியை செய்வதன் மூலம் எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் உரிய காலத்தில் புத்தகங்கள் கிடைக்க வகை ஏற்படும். ஆகவே, அரசாங்கம் அதற்கு ஏற்றபடி உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட வியாபாரியிடத்தில் பொறுப்பை ஒப்படைத்தால்தான் ஏதாவது தவறுகள் நடந்தாலும், அவரைக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கும். மொத்த வியாபாரி சில்லரை வியாபாரிகளை வைத்து, புத்தகங்களை விநியோகம் செய்வதற்கு 5 விழுக்காடு கொடுக்க வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், மொத்த வியாபாரிகள் வைப்புத் தொகை கட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது தவறு செய்தால், வைப்புத் தொகையை நிறுத்திக்கொள்வதற்கு ஒப்பந்தத்தில் விதி இருக்கிறது. ஆகவே, இதில் எந்தவித தவறும் ஏற்பட வழி இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தப் புத்தக விற்பனையை மாணவர் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்தால், எல்லா மாணவர்களுக்கும் சிரமம் இல்லாமல் ஜூன் மாதத்திற்குள் புத்தகங்கள் கிடைத்துவிடும். தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் விற்பனை செய்வதால் அவர்கள் பல கஷ்டங்கள் கொடுக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த விற்பனை உரிமையை கூட்டுறவு அங்காடிகள் கேட்பதாக இருந்தால், அவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படும். பள்ளிக்கூட கூட்டுறவு அங்காடிகள் முன்வந்தாலும் அவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படலாம். ஆனால் அந்த மாவட்டத்தில் கொண்டு சேர்க்கும் முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். இப்போதும் அப்படித்தான் செய்கிறது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, தாலுகா அளவிலும், வட்ட அளவிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் விற்பனைச் செய்வதற்கு அனுமதிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பிர்க்கா அளவிலுள்ள சிறிய சிறிய வியாபாரிகள் முன்வந்தாலும், அவர்களுக்கும் விற்பனை உரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக்கூட நூல்களை விற்பனை செய்வதற்கு என்று பதிவு செய்யப்பட்டவர்கள் மூலமாக புத்தகங்கள் விநியோகிக்கப்படும். மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை உரிமை கோரினால், அவைகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படும். பதிவு செய்யப்பட்ட வியாபாரிகள் இடத்தில், சில்லரை வியாபாரிகள் உரிமை பெற்றுக்கொள்ளலாம்.

### ஆரம்பப் பள்ளிகள்

* 499. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பப் பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலைகள் உடன் ஏற்படுத்த திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) முந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்கள் அனைவற்றிலும் தொடக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் பாடசாலைகள் திறக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதிக மக்கள் தொகை இருந்தாலும் ஒரு மைல் தூரத்தில்தான் மற்றொரு பள்ளி திறக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஒரு பர்லாங் தூரத்திலேயே இரண்டு பள்ளிகள் திறப்பதற்கு வசதி இருந்தாலும் அனுமதி கொடுக்கப்படுவதில்லை. எனவே, தூரத்தைப் பார்க்காமல், போதுமான அளவு மாணவர்கள் இருந்தால், ஒரு பள்ளியின் பக்கத்திலேயே, அதாவது ஒரு மைலுக்கு உள்ளேயே இன்னொரு பள்ளியும் திறக்கப்படக்கூடிய அளவில் விதிமுறைகளை அரசு தளர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது ஒரு வட்டாரத்தில் 300-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக இருந்தால் பள்ளி திறக்கப்படுகிறது. அதிக மக்கள் தொகை இருந்தாலும் இரண்டு பள்ளிகள் திறக்கப்படுவதற்கு, இயற்கைத் தடைகளோ அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களோ இருந்தாலன்றி, அனுமதி அளிப்பதில்லை. ஏனென்றால், அதனால் போட்டா போட்டிகள் ஏற்பட்டு, சில மாச்சரியங்கள் ஏற்பட்டு, இரண்டு பள்ளிகளும் சரிவர நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டு, அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு விடுவர். ஏதாவது தனிப்பட்டக் காரணங்கள் இருந்தால், பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியோடு இரண்டாவது பள்ளி திறப்பதற்கு வகை செய்யலாம்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களில் காலனிகளில் துவக்கப்பள்ளிகள் நடைபெறுகின்றன. அங்கே ஏறக்குறைய 100 அல்லது 180 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதனால் அங்கு ஒரு ஆசிரியர் தான் வேலை பார்க்கிறார். அதை இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களாக மாற்றுவதற்கு சட்டச் சிக்கல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையை நீக்க ரூல்ஸை கொஞ்சம் ரிலாக்ஸ் செய்தாவது, அதிகமான ஆசிரியர்களைப் போட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவ்வளவு மாணவர்களுக்கு இவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று இருக்கிறது. இவை தவிர, காலனிகளில் 80 அல்லது 90 மாணவர்கள் படித்தாலும், தனிப்பட்ட காரணங்கள் ஏதாவது இருந்தால், விதியை தளர்த்தி, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அனுமதி வழங்குவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைக் கல்வி மானியக் கோரிக்கை மீது வைத்துக்கொள்ளலாம். இவை கொள்கைப் பிரச்சனைகள். கேள்வி நேரத்தின்போது இம்மாதிரி பிரச்சினைகளை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் .ள்ளிக் கூடங்களுக்குப் பக்கத்தில் அரசாங்கப் பள்ளிகள் திறக்கப்படும்போது, அந்த தனியார் பள்ளி களில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து, அதனால் ஆசிரியர்களை குறைக்கும் நிலை ஏற்படுகிறது. அதனால் வேலை நீக்கம் பெருகின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்க பள்ளிகளில் வேலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி வேலை நீக்கம் பெறும் ஆசிரியர்களை விட்டுவிட முடியாது. அவர்களுடைய தகுதி, திறமை, பணியாற்றிய காலம் இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, புதிதாக ஆரம்பிக்கப்படும் அரசாங்க பள்ளிகளில் அவர்களை நியமனம் செய்ய விண்ணப்பிப்பார்களானால், பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து அதற்கு அனுமதி அளிப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : கிராமங்களில் ஆரம்பப்பள்ளி துவக்குவது என்றால் ஒரு மைலுக்குள் இருக்கக்கூடாது என்று . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அமைச்சர் சொன்னதை நீங்கள் திருப்பிச் சொல்ல வேண்டாம். உங்கள் கேள்வியைப் போடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பஞ்சாயத்து யூனியன்களில் குழந்தைகள் ஒரு மைல் நடந்துபோவது என்பது சிரமாக இருப்பதால், ஒரு மைலுக் குள் இன்னொரு பள்ளி ஏற்படுத்துவதற்கு மாணவர்கள் இருந்தால்—ஒரு ஆசிரியருக்குத் தேவையான மாணவர்கள் இருந்தால் அதைத் திறப்பதற்கு அனுமதிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கூடுமான வரையில் ஒரு மைல் என்கிறபோது பள்ளி சென்டர் என்றால் அதிலிருந்து அரை மைல் ரேடியஸ்தான் வரும். ஒரு பள்ளிக்கூடம் இருந்து அங்கே 100 பிள்ளைகள்





படிக்கிறார்கள் என்றால் இன்னொரு பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்த இங்கிருந்து 50 மாணவர்கள் பிரிந்துபோய், இங்கே 50, அங்கே 50 என்கிற போது இங்கே முன்பு இருந்த ஆசிரியர் பாதிக்கப்படுவதும் ஏற்படுகிறது. ஆகவே தான் எல்லா வசதிகளையும் உத்தேசித்து ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்து ஒரு மைல் தூரத்திற்குள்ளாக இன்னொரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த அனுமதி அளிப்ப தில்லை.

* 500. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதியதாக ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு ஆரம்பக் கல்வி இயக்கு நர் அனுமதி பெற வேண்டும் என்று கூறப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், இம் முறை எப்பொழுதிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1964-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : பல கிராமங்களில் புதிய பள்ளிக்கூடங்களுக்கு நாம் அனுமதி கொடுத்துக்கொண்டே போகிறோம். பழைய பள்ளிக்கூடங்களை மராமத்து செய்வதில்லை. ஆகவே பழைய பள்ளிக்கூடங்களை முறையாக மாராமத்து செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான நிதி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய 14 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்கள் நல்ல கட்டிடங்களில்தான் இருக்கின்றன. 7 ஆயிரத்துச் சில்லரை பள்ளிக்கூடங்களுக்குத்தான் கட்டிடம் இல்லை. அவை எல்லாவற்றுக்கும் கட்டிடம் அமைத்துக் கொடுக்க 8 கோடி ரூபாய் தேவைப் படுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடத்தில் அதைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முன்பு ஒரு துவக்கப்பள்ளிக்கு 4 ஆயிரம் ரூபாய் அரசு மானியமும், ஊராட்சி ஒன்றியங்கள் 8 ஆயிரம் ரூபாய் ஈட்டுத் தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதை மாற்றி 8 ஆயிரம் ரூபாயை அரசு மானிய

மாகக் கொடுப்பது என்றும், ஊராட்சி ஒன்றியம் 4 ஆயிரம் ஈட்டுத் தொகை கொடுப்பது என்று ஏற்படுத்தியிருக்கிறோம். பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களின் நிதியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பல நர்சரி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றில் படிக்கும் மாணவர்களை மேலே சேர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத்தைப் பொறுத்த வரை துவக்கப்பள்ளிகளைத்தான் ஏற்படுத்துகின்றன. நர்சரிகள் தனியார்களிடம் விடப்படுகின்றன. அங்கே படிக்கின்ற மாணவர்களை மேலே சேர்ப்பதில் சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### மிட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

* 501 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடித் தொகுதி மிட்டூரில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து அப்பள்ளி கட்டடக் குழுவினரால் 1971 ஜூலை திங்களில் வசூல் செய்யப்பட்ட பணம் தொடர்பாக புகார் முறையீடொன்று அமைச்சரிடம் கொடுக்கப்பட்டதா ?

(இ) இது தொடர்பாக அரசு விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கின்றதா ?

(உ) ஆமெனில், அவைகளின் விபரங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பள்ளி கல்வி இயக்குநரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### தொல்பொருள் ஆய்வுத்துறை

* 502 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பழங்கால வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் புதை பொருட்கள், ஆகியவற்றினைக் கண்டறிய தொல்பொருள் ஆய்வுப் பிரிவில் சிறப்புப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 503 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இதுவரை கண்டறிந்துள்ள சான்றுகளையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1969-ம் ஆண்டு முடிய செய்த பணிகளைத் தொகுத்து அதன் ஆண்டு மலராக 'தமிழகம்' என்ற பெயரில் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. 1970-ம் ஆண்டு மலர் விரைவில் வெளிவரும். ஒவ்வொரு ஆண்டின் பணியும் ஆண்டு மலர்களாக வெளியிடப்படும்.

தவிர சென்னை நகரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் படியெடுத்த 800 கல்வெட்டுகள் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. அச்சாகும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தவிர தமிழ் நாட்டு வரலாற்றுச் சின்னங்களை பற்றிய வரலாற்று நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில், எந்தெந்த வகையில் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வெட்டு ஆராய்ச்சி பிரிவு, அகழ் ஆய்வுப் பிரிவு பாதுகாப்புப் பிரிவு என்கிற மூன்றுவகையில் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவினர் செயல்படுகின்றனர். சென்னை பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சி மாணவர்கள் சிலயிடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். எந்த எந்த இடங்களில் அகழ் ஆய்வு நடைபெறுகிறது என்கிற குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் விவரம் சேகரித்துத் தரப்படலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, when officers of the Archaeological Department go to rural areas to decipher inscriptions, they are not given vehicles and other facilities to do their work properly. So they are not able to do any work and go away. Therefore, may I request the Hon. Minister to kindly consider the provision of vehicular and other facilities to them?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அப்படிப் போகின்ற பணியாளர்கள், அலுவலர்கள், மற்றவர்களுக்கு தொல்லைகள் இருக்குமானால் அவற்றைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

*திரு. வை. பாலசுந்தரம்:* பூம்புகார் நகரத்தில் பண்டை நாகரிகத்தை விளக்கக்கூடிய வகையில் ஒரு நிரந்தர பொருட்காட்சி வைப்பதற்கான அறிகுறி அரசாங்கத்தினிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன அங்கே வைக்க இருக்கிற கண்காட்சிக்கான சிலைகளை மகாபலிபுரத்தில் உள்ள சிற்பப் பள்ளியில் வடித்து வருகிறார்கள். கூடிய விரைவில் பூம்புகாரில் அந்தக் காட்சி முழுத்தோற்றத்தை ஏற்படுத்த முடியும்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்:* அமைச்சர் அவர்கள் 'தமிழகம்' என்ற பெயரில் மலர் வெளியிடுவதாகச் சொன்னார்கள் அது லெஜிஸ்லேச்சர் லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிறதா? கனம் அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அது சட்டமன்ற நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் விரும்பிக் கேட்பார்களானால் அவர்களுக்கும் தரப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

*திரு. நா. வீராசாமி:* தொல்பொருள் ஆய்வுத்துறையினர் பல கல்வெட்டுகளை ஆராய்ந்து வருகின்றனர் என்றும், சில கல்வெட்டுகள் தேவ பாஷையில் எழுதப்பட்டிருப்பதாகவும், அந்த பாஷை புரியவில்லை என்பது உண்மையா? அந்த பாஷைக் கல்வெட்டில் எங்கெங்கே புதையல்கள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்கிறார்களே, அது உண்மையா?

*மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்:* தமிழகத்தைப் பொறுத்தவரை 80 ஆயிரம் கல்வெட்டுகள் இருக்கின்றன. 45 ஆயிரம் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுவிட்டன. 5 ஆயிரம் கல்வெட்டுகள் புத்தகமாகவே வந்துவிட்டன. பாஷையைப் பொறுத்தவரை—தேவ பாஷை என்றால் தேவ பாஷைதான்—மக்கள் பாஷை என்றால் மக்கள் பாஷை தான். ஒன்று உயர்ந்தது ஒன்று தாழ்ந்தது என்று இல்லை. கல்வெட்டில் உள்ள எல்லா எழுத்துக்களையும் படிப்பதற்கு இப்போது நல்ல தேர்ச்சி பெற்று வருகிறார்கள். கோடை காலத்தில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அண்மையில் இந்த மாணவர்கள் செஞ்சியில், 50, 60 கல்வெட்டுகளை ஆராய்ந்து வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் தேடித் தந்திருக்கிறார்கள்.



*திரு. பெ. சௌந்தர பாண்டியன்:* கல்வெட்டுகளில் ஆராயப்பட்டவைகள் புத்தகமாகப் போடப் பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார். அந்தப் புத்தகங்கள் மாவட்ட வட்ட அளவில் உள்ள நூலகங்களில் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் உடனடியாக அங்கெல்லாம் அந்தப் புத்தகத்தை வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* அந்த நூல் நிலையங்கள் எல்லாம் இவற்றைப் பெற்றிருக்கின்றன என்று கருதுகிறேன். பெறாவிட்டால் பெறுவதற்கு வழிவகை செய்யலாம்.

*திரு. சி. வி. எம். அண்ணாமலை:* தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் பல்லவர் மேடு என்ற இடம் இருக்கிறது. தொல்பொருள் ஆய்வு செய்யப்படுவதற்காக அதை அப்படியே பாதுகாத்து வருகிறார்கள். ஆனால் அது பற்றி சிறிய விளக்கங்கள் கூட வாராமல் இருக்கின்றனவே அங்கே என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டது என்பதைப்பற்றி நல்ல விளக்கம் தர முயற்சி எடுக்கப்படுமா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, காஞ்சியிலுள்ள பல்லவமேடு என்ற இடத்திலுள்ள பழைய சின்னங்களைப்பற்றி சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆராய்ச்சி மாணவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். பக்கத்தில் கட்டப்பட்டிருக்கிற இரு கோயில்களும் மிகப் பழமையானவை என்றும், அவை பராந்தக சோழனால் கட்டப்பட்டவையாக இருக்கலாம் என்றும் அறியப்படுகிறது. இப்போதைக்கு அக்கோயில்கள் கலனாக இருப்பதால், அவற்றைச் செப்பனிடும்போது, பழைய சின்னங்களின் உருவம் கெடாத அளவுக்குச் செப்பனிடத் தக்க முயற்சிகள் செய்து வருகிறார்கள். அவற்றைப்பற்றி ஆராய்ச்சிகளின் முடிவுகள் எதுவும் இன்னும் வரவில்லை. ஆராய்ச்சிகளின் முடிவு வந்ததும், அது அனைவருக்கும் தெரியப்படுத்தப்படும்.

*திரு. என். இராஜாங்கம்:* தலைவர் அவர்களே, இதுவரைக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்து, வரலாற்றுக் குறிப்புக்களை எடுத்ததாகச் சொன்னார்கள். எந்தெந்த மொழிகளில் அந்தக் குறிப்புக்கள் இருக்கின்றன, எந்த மொழியில் அதிகமான அளவிற்கு இருக்கின்றன என்ற தகவல் ஏதேனும் கிடைத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பல்வேறு மொழிகளில் அப்படிப்பட்ட குறிப்புகள் இருக்கின்றன. பெரும்பாலும் தமிழ் இருக்கின்றன, சில கிரந்தத்தில் இருக்கின்றன, சில கல்வெட்டுக்களில் சமஸ்கிருத மொழியில் இருக்கின்றன, சில தெலுங்கில் இருக்கின்றன, சில குறிப்புக்கள் உருது மொழியில்கூட இருக்கின்றன. இப்படியாக பல்வேறு மொழிகளில் குறிப்புகள் இருக்கின்றன. பெரும்பாலானவை தமிழில் இருக்கின்றன. அடுத்த படியாக கிரந்த மொழியில் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Copies of Ephigraphica Indica and annual reports of the Archaelogical Department are not being supplied to our Legislature Library. May I request the Hon. Minister to kindly see that such copies are supplied to our library?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று, அத்தகைய நூல்கள் வைக்கப் படாதிருந்தால், வைப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், கூடலூருக்கு அருகில் குமளிமலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய கண்ணகி கோயில் பற்றி விவரக் குறிப்பு ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாக கேள்வி கேட்டால், அதுபற்றிய விவரக்குறிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவை சேகரித்துத் தரப்படும்.

## இந்தி ஆசிரியர்கள்

* 504 வினா.—**திரு. சி. மணலி கந்தசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் இந்தி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களில் எத்தனை பேர் இன்னும் வேலையின்றி இருக்கின்றார்கள் ?

(இ) அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இந்தி ஆசிரியர்களுக் குரிய தகுதிகளைப் பெற்றிருந்து, வேலையிழந்த முன்னாள் இந்தி ஆசிரியர்கள் எல்லோருக்கும் மாற்று வேலை தரப்பட்டுள்ளது. ஆனால் இந்தி ஆசிரியர்களுக் குரிய தகுதிகளைப் பெற்றிராதவர்களும் பகுதி நேர இந்தி ஆசிரியர்களுமான 631 பேருக்கு மாற்று வேலை தரப்படவில்லை.

(இ) அவர்களுக்கும் மாற்று வேலை அளிப்பது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, 600-க்கும் அதிகமான இந்தி ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கல்வி அதி காரிகளுக்குப் பிறப்பிக்க முடியுமா ? அவர்களுக்கு மனு அனுப்பினால் அது மேலே இங்கே அனுப்பப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, சீஃப் எஜுகேஷனல் ஆபீசருக்கு முழு அதிகாரம் கொடுக்கக்கூடிய ஒரு சுற்றறிக்கை அனுப்பப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களும், பகுதிநேர ஆசிரியர்களுமாகச் சேர்ந்து மொத்தம் 2,631 பேர் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் இந்திமொழி ஆசிரியர்களுக்கான தகுதியைப் பெறாதவர்கள் 631 பேரும், பகுதிநேர ஆசிரியர் கள் 12 பேரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த 643 பேரும் பகுதிநேர ஊழியர்களாக சிலர் இருப்பதாலும், இந்தி மொழி ஆசிரியர் களுக்குரிய தகுதி பெறாதவர்களுமாக இருப்பதுதான். அவர்கள் தற்காலிக மாக அமர்த்தப்பட்டதால் மேற்படி சட்டத்தின் அடிப்படையில் ஆசிரியர் பதவி பெறுவதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் இத்தகையோருக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வும், வேலைவாய்ப்புப் பெற்றுத் தரவும் முதல் சலுகை அளிக்கலாம் என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவருடைய பரிந்துரையின்மேல் அரசு விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்கள் புதிதாக அமர்த்தப்படும்போது அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்காமல், அதிக ஊதியம் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் எவ்வளவு ? அந்த நஷ்டத்தை மத்திய அரசு கொடுக்க முன்வருமா ? நமது தமிழக அரசு அதை மத்திய அரசிடமிருந்து கேட்டுப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தி
மொழி ஆசிரியர்களுக்கு, அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுகிறதே
தவிர, அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக தகவல் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் 643 பேர் அப்போது 'அண்டர் எக்விப்டு' ஆக இருந்தார்கள் என்று
கூறினார்கள். அவர்கள் இப்போது—'எக்விப்டு' ஆக—தகுதிக்குரியவர்களாக
ஆகி வந்திருந்தால் அவர்களுக்கு இலாகா மூலமாக வேலை கொடுக்க தக்க ஆணை
பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது
643 பேர் இந்தி ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் இப்போது தகுதி
யுடையவர்களாக ஆகியிருந்தால், அந்தப் பதவிக்கு வேலை இல்லை. ஏற்கெனவே
இந்தமொழி ஆசிரியர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப வேலை
தரலாம் என்று கருதப்பட்டது. அப்போது தகுதிபெறாத இந்தி ஆசிரியர்கள்
இப்பொழுது தகுதியுடையவர்களாக தங்களை ஆக்கிக் கொண்டிருந்தாலும்
இப்போது அவர்களை வைத்துக்கொள்ள முடியாது. வேறு வகையில் அவர்
களுக்கு வேலைவாய்ப்புத் தரலாம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்கள் பதிவு செய்துகொள்வதன்மூலம்;
அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர்
அவர்கள் ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில்
தக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி அரசு முடிவு செய்ய
வேண்டியிருக்கிறது.

### கோவை தலைமையிட மருத்துவ மனை

* 505 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை
அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப்
பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கோவையிலே மருத்துவமனை
யும் இருக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவமனையில் நிறைய குழந்தைகள்
படுக்கைகள் தேவைப்படுகின்றன. அதை முன்னிட்டு ஒரு புதிய குழந்தை
மருத்துவமனையை ஏற்படுத்தித்தர இனியாவது அரசு முயற்சி செய்யுமா ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோவை மருத்துவமனையில் இப்
பொழுதே 90 குழந்தைகளுக்கான படுக்கைகள் இருக்கின்றன. ஒரு புதிய
பெரிய மருத்துவமனையைக் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்
கூறுகிறார்கள். கோவை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற அங்கத்தினர்கள் 10
லட்சம் ரூபாய் நிதி திரட்டித் தந்தால் விரைவில் மருத்துவ மனை கட்டிக்
கொடுக்கமுடியும்.

திரு. ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனை
யில் வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கான நவீன கருவிகள் இல்லை என்கிற
நிலைமை இருக்கிறது. மாவட்ட தலைமையிட மருத்துவ மனைக்குக் கிடைக்க
வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அரசு உடனடியாகச் செய்து கொடுக்க
முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோவையிலே இருக்கின்ற மருத்துவ
மனைக்கு, பிற இடங்களில் உள்ள மருத்துவக்கல்வித்துறை மருத்துவ மனை
களுக்கு அளிக்கப்படுவதைப்போன்ற அளவில் சிறப்புப் பகுதிகளை அமைத்து
தர ஆண்டுதோறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஈரோட்டிலும் மாவட்ட மருத்துவ மனைக்குரிய சிறப்புடையதாக்க ஏற்பாடுகள்
செய்யப்பட்டிருக்கின்றன. கோவையிலும் ஈரோட்டிலும் இத்தகைய வளர்ச்சித்
திட்டங்கள் படிப்படியாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவர் அவர்களே, மருத்துவமனையை விஸ்தரிப்
பது சம்பந்தமாக ஒவ்வொரு இடத்திலும் செல்வாக்குள்ளவர்கள் அமைச்சரை
நேரடியாகச் சந்தித்து. விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள்.
அதைத் தவிர்த்து, தமிழ்நாடு பூராவும் ஜனத்தொகையின் அடிப்படையில்,
ஆங்காங்குள்ள மருத்துவமனைகளில் படுக்கைகளையும், மற்ற வசதிகளையும் விரிவு
படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாவட்டத்
தலைமையிட மருத்துவமனைகளில் பல்வேறு பகுதிகளுக்குத் தேவையான வசதி
களை இருக்கக்கூடிய நிதிவசதிகளைக் கொண்டு ஏற்படுத்தித் தருகிறது அரசு:
எந்தெந்த பகுதிகளில்—ஸ்பெஷாலிட்டில்—சிறப்பு பிரிவு அமைய வேண்டுமோ
அவற்றைச் செய்துதரவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தனியார்
கட்டித் தருகிற மருத்துவ மனைகளை ஏற்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

## Tirumangalam Headquarters Hospital

* 506 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is a proposal to expand the Headquarters Hospital at Tirumanagalam in Madurai district;

(b) whether representations were made to the Government by the Tirumangalam Panchayat in this regard; and

(c) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) தற்போது ஒன்றுமில்லை.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே தங்கமணி:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் தாலுக்கா சென்டர் மட்டுமல்ல, நகரசபையாக ஆக்க வேண்டுமென்று இப்போது தீர்மானம் நிறைவேற்றி அரசின் பரிசிலனைக்காக அனுப்பியிருப்பதாக அறிகிறேன். இந்த மருத்துவமனைக்கு அதிகமான அளவில் மக்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு இதை மறு பரிசிலனை செய்து, மற்ற இடங்களில் எப்படி விஸ்தரிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறார்களோ, அப்படிச் செய்ய அரசு முன் வருமா? பக்கத்திலே முன்சிப் கோர்ட் அமைக்கப் போகிறார்கள். ஆகவே, இது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவ மனையில் திருமங்கலத்தில் 78 படுக்கைகள் இருக்கின்றன. அதிகமான வார்டுகள் அமைக்க வழி செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இறந்துபோனவர்களின் உடலைப் பாதுகாப்பதற்கும், மார்சுவரி வேன் வாங்குவதற்கும் 12 ஆயிரம் ரூபாய் செலவிட வழி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் எக்ஸ்-ரே பிரிவு அமைப்பதற்கு 37 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிட வேலை நடைபெற்றிருக் கிறது. பொதுவாக இந்தப் படுக்கைகளை மட்டும் அதிகப்படுத்துவதால் பயனில்லை. சிகிச்சை வசதிகளைப் பெருக்கிவிடவேண்டும். மருத்துவ மனைகளில் இருக்கக்கூடிய படுக்கைகள் அளவிற்கே வேறு பல வசதியை செய்து தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



## மாயூரம் அரசு மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

* 507 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப் பாட்டைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாக இந்த அரசு மருத்துவமனைக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, பொதுவாக, மருந்தகங்கள், மருத்துவமனைகளில் தண்ணீரும் மின்சாரமும் மிக அவசியமானதாக இருக் கின்றன. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் இந்த வசதி இல்லாத இடங்களில் ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அரசு இத்தகைய திட்டத்தை தயாரித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மருத்துவமனைக்கு நிச்சயமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்தான் மிக அவசியமாகும். ஒரு நகரத் திற்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறபோது அந்த நகரத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கிற மருத்துவ மனைக்கு அந்த நகரத்திற்குக் கிடைக்கிற பாதுகாக்கப்பட்ட தண்ணீரிலிருந்து கிளைக்குழாய்கள் மூலமாக தண்ணீர் கிடைத்தாகவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மாயூரத்தைப் பொறுத்தவரையில் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக என்று தனியாகத் திட்டம் செய்வதாக இருந்தால் மிகப் பெரிய செலவும் ஆகும், அது ஏற்புடைய தும் அல்ல.

## மணல்மேட்டிலுள்ள அரசு மருந்தகம்

* 508 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டில் உள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின் சார வசதி செய்யப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேட்டிலுள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின்சார வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே கோரிக்கைகள் விடுத்தும் நிறைவேற்றப்படாத நிலைமை இருக்கிறது. குறைந்த அளவுக்குத் தான் 400 ரூபாய் 500 ரூபாய் அளவிலேதான் செலவாகின்ற நிலை இருப்பதால் இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வதற்கு அரசு ஆணை யிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மின்சார வசதி அங்கே வழங்கப்பட வேண்டுமென்று சுகாதார இலாகா இயக்குநர் பொறியியல் துறை இயக்குநருக்கு தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். இந்த வேலை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறியப்படுகிறது.

## பிச்சைக்காரர் விடுதிகள்

* 509 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது பிச்சைக்காரர் விடுதிகள் எங்கெங்கு அமைக்கப் பட்டுள்ளன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தமிழகத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பிச்சைக்காரர் விடுதிகள் இயங்கி வருகின்றன:

(1) அரசுக்காப்பு முகாம்; மேலப்பாக்கம் (சென்னை அருகில்).

(2) அரசுக்காப்பு முகாம், காஞ்சிபுரம்.

(3) பிச்சைக்காரர் விடுதி, கிருஷ்ணாம்பேட்டை (மாநகராட்சியால் பேணப்பட்டு வருகிறது).

(4) பிச்சைக்காரர் விடுதி, செங்கல்பட்டு.

(5) பிச்சைக்காரர் விடுதி, விருதுநகர்.

(6) பிச்சைக்காரர் விடுதி, திருச்சிராப்பள்ளி.

(7) பிச்சைக்காரர் விடுதி, கோயம்புத்தூர்.

(8) பிச்சைக்காரர் விடுதி, மதுரை.

(9) பிச்சைக்காரர் விடுதி, நாகர்கோவில்,

(10) பிச்சைக்காரர் விடுதி, சீர்காழி.

(11) காப்பு முகாம், சிதம்பரம்.

(12) தயாசதன், ஓட்டேரி (தனியார் நிறுவனம்).



திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி திரட்டப்பட்டதே அதிலே எவ்வளவு தொகை வசூலாகியிருக்கிறது? எந்த அளவுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது? மீதத் தொகை செலவழிக்கப்படுவதற்குப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளதா? அப்படியானால் என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுவரையிலும் வசூலான தொகை கிட்டதட்ட 1 கோடியே 3 லட்சத்து 72 ஆயிரத்து 129 ரூபாய் 58 காசுகள், இதிலே செலவான தொகைபற்றிக் தனிக்குறிப்பு எதுவும் இல்லை. தனிக்கேள்விபோட்டால் எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

திரு. ஆர் பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் ஒரு பிச்சைக்காரர் விடுதி முனிசிபாலிட்டியால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது நாகர்கோவில் நகரத்திலே பிச்சைக்காரர் தொல்லை அதிகமாக இருக்கிறது. அவர்களையெல்லாம் அந்த விடுதியிலே இருக்கச்செய்து உணவு அல்லது வேலை கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முதலிலே தொழுநோய் பிடித்துள்ளவர்களைத்தான் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு விடுதிகளைக் கட்டி அங்கே உதவி செய்யப்பட்டு வருகிறது. மற்ற பிச்சைக்காரர்கள் பற்றி பிறகுதான் கவனிக்கவேண்டும். மேலும் பிச்சைகாரர்கள் விடுதிகளைக் கட்டி அவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய பணியை சில மாநகராட்சிகளும், நகராட்சிகளும் செய்துவருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பிச்சைக்காரர் விடுதி என்று குறிப்பிடுவதற்கே கஷ்டமாக இருக்கிறது, எனவே, வேறு ஏதாவது பெயர் வைத்து அழைக்க அரசாங்கம் முடிவுசெய்யுமா? ஆறாயிரம் தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களிலே எத்தனைபேர்களுக்கு இந்த விடுதிகள் மூலம் உதவி செய்யப்பட்டுவருகிறது, மீதம் உள்ளவர்களுக்கு என்ன ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிச்சைக்காரர் பிரச்னையென்பது ஏதோ இன்றைக்கு ஆரம்பித்து நாளைக்கே முடித்துவிடவேண்டுமென்ற ஆளுரையோடு முடித்துவிடக்கூடியதல்ல. நான்காண்டுக் காலம் ஐந்தாண்டுக் காலம் என்று காலக் கெடு வைத்து அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஏற்கனவே மூன்று இடங்களிலே விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் பல விடுதிகள் கட்டப்பட இருக்கின்றன.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு, திருச்சியினுடைய ஒரு பகுதி, தஞ்சையில் ஒரு பகுதி, சேலத்தில் ஒரு பகுதி ஆகிய இடங்களில் எல்லாம் தொழுநோய் பிடித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்தத் தொழுநோய்க்கு ஆளான காரணத்தினாலே சிலர் பிச்சைக்காரர்களாகவும் மாறுகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to open Beggar Homes in every district of the State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்பொழுது பர்கூரிலே துவக்க இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துவக்குவதாக யோசனை இல்லை. எங்கே அவர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே சுகாதார வசதியுள்ள இடமாக, திறந்தவெளி அதிகமாக உள்ள இடமாக இருக்கிறதோ ஆயிரம் பேர்களுக்கு வசதி செய்யக்கூடிய நிலைமை எங்கே இருக்கிறதோ அந்த இடத்தைத் தேர்ந்து எடுக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்காக சோஷியல் வெல்பேர் போர்டிலிருந்து கொடுக்கப்பட்ட கிராண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் எந்த விதத்தில் விடுதிக்கு வந்துசேருகிறார்கள். காவல்துறைமூலமாக அந்த வசதிகளைச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவாவர்களே, அரசாங்கம் கொடுத்துள்ள கிராண்ட் இப்பொழுது எதுவும் நிறுத்தப்படவில்லை. தொழுநோய் பிடித்த பிச்சைக்காரர்களுக்கு இந்த இல்லத்தைக்கட்டி அவர்களின் மறுவாழ்வுக்காக நடவடிக்கை எடுத்த பிறகு சிலர் குடும்பம் குடும்பங்களாக அவர்களாகவே வருகிறார்கள். ஆனால் முறைப்படி தொழுநோய் பிச்சைக்காரர்களை போலீசார் சட்டப்படி கைது செய்து வழக்கு மன்றத்தில், பிச்சை எடுத்தார்கள் என்று போலீசார் மூலம் நிறுத்தப்பட்டு, சேர்க்கப்படுகிறார்கள். நாம் செய்யும் உதவிகளை அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, வருபவர்களும் தங்கி விடுகிறார்கள், சிலர் தாமாகவே வந்து சேர்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது பிச்சைக்காரர்கள் திடீரென்று தோன்றவில்லை என்று கூறினார்கள். சமுதாயத்திலே உள்ள பொருளாதாரச் சீர்கேடுகளின் காரணமாகவே பிச்சைக்காரர்கள் தோன்றுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.





பொருளாதார சீர்கேடுகளில் மாற்றம் வரும்வரையில் பிச்சைக்காரர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே இந்தப் பிச்சைக்காரர்கள் பாதுகாக்கப்படும் அதேநேரத்திலே பிச்சைக்காரர்களாக ஆகப் போகின்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க இந்த நிதியிலிருந்து ஏதேனும் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவாவர்களே, பொருளாதாரச் சீர்கேட்டைச் சீரமைப்பது என்பது ஒன்று. பொருளாதாரச் சீர்கேட்டினால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைச் சமாளிப்பது என்பது ஒன்று. வயிற்றுவலி ஏற்பட்ட காரணத்தினால் தலைவலி ஏற்படுகிறது. வயிற்றுக்கோளாறைத் தனியே தீர்க்க வேண்டுமென்று கருதி தலைவலிக்கு மருந்து தடவிக் கொள்கிறோம். அதற்காக வயிற்றுவலியை மறக்கவில்லை, சிகிச்சை அளிக்கிறோம். அதேபோல் பொருளாதாரப் பிரச்னைகளைச் சந்தித்துச் சமாளிக்க வேண்டும். மேலும் அந்தப் பொருளாதாரச் சீர்கேடுகளினால் ஏற்பட்ட விளைவுகளையும் சமாளிக்க வேண்டும். இப்பொழுது விளைவுகளைச் சமாளிக்கும் கட்டத்தில்தான் பிச்சைக்காரர்களின் மறுவாழ்விற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

* 511. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியில் இருந்து அனாதைப் பள்ளிகளுக்கு நிதி உதவும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப்பட்ட அனாதை விடுதிகளிலிருந்து, அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்று மனுக்கள் ஏதேனும் வந்திருக்கிறதா? இனிமேலாவது அதிக உதவி செய்யத் திட்டமிடுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட மனு எதும் இது வரையில் வரவில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவாவர்களே, தமிழக அரசு இப்பொழுது 3 பிச்சைக்காரர்கள் விடுதிகளைக் கட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே எத்தனை விடுதிகள் கட்டப்பட்டன என்பதற்குத் தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்பொழுதிருந்த மாநகராட்சியும் நகராட்சியின்மூலம் அவர்கள் சில விடுதிகள் பிச்சைக்காரர்களுக்கு நடத்திக் கொண்டு வந்தார்கள்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, புனிதமான இந்த பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்திற்கு மத்திய சர்க்காரானது மானியம் தருவதற்கு உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுவரையில் கொடுக்கவில்லை. ஆனால் கேட்பதாக இருக்கிறோம், கொடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த ஆட்சியில்தான் அதிகமான பிச்சைக்காரர்கள் தோன்றியிருக்கிறார்கள், ஆகவேதான் இப்படிப்பட்ட பிச்சைக்காரர் விடுதிகள் அமைக்க தேவை ஏற்பட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பழைய பிச்சைக்காரர்கள் நீடிக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, எல்லாம் ஆண்டவன் படைப்பு என்று நம்பும் இந்தச் சமுதாயத்தில், இந்தப் பிச்சைக்காரர்களையும் உருவாக்கிய ஆண்டவனின் நிதியிலிருந்து, ரிலிஜியஸ் எண்டோமெண்ட் நிதியிலிருந்து அரசாங்கம் உதவி பெற முயற்சித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆண்டவரிலேயே பிச்சாண்டவரும் இருக்கிறார்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த அனாதை விடுதிகளுக்கு உதவி தரப்படுமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. பிச்சைக்காரர்கள் என்றால் அனாதைகளும் பிச்சைக்காரர்கள்தானே, அவர்களுக்கும் ஏன் உதவி அளிக்கக் கூடாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பிச்சைக்காரர்கள் வேறு, அனாதைகள் வேறு. பிச்சைக்காரர்கள் என்றால் பிச்சை எடுத்து வருபவர்கள். அனாதைகள் என்றால் காப்பாற்ற யாருமற்ற, தாய் தந்தை இல்லாத பிள்ளைகள், கணவனாலும் மற்றவர்களாலும் கைவிடப்பட்ட பெண்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் அனாதைகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பிச்சை எடுப்பவர்கள் அல்ல. பிச்சை எடுப்பவர் வேறு சிலர். இவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்.



திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தப் பிச்சைக்காரர் விடுதிகளில் சேர்க்கப்படும் பிச்சைக்காரர்கள் எந்த அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள், பிச்சை எடுப்பது ஒன்றைக்கொண்டுதானா? ஏனென்றால் பிச்சைக்காரர்களில் சிலர் பணம் சேர்த்து வைத்துக் கொண்டு ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கமெல்லாம் வேண்டாம், கேள்வியாகக் கேளுங்கள். நேரமாகிறது.

திரு. கே. எ. வகாப்: அப்படி இருக்கிறார்கள். ஆகவே அதில் உண்மையான பிச்சைக்காரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, பிச்சைக்காரர்கள் எங்கெங்கு பிச்சை எடுக்கிறார்களோ, பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன், கோயில், இன்னும் பல வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள்—அவர்களைப் போலீசார் நேரடியாகக் கைது செய்து வழக்கு மன்றத்தில் நிறுத்தி, அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், அவர்களுக்கு யாரும் இல்லை என்ற வகையில் கொண்டு வருகிறார்கள். முதலிலே நாம் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு முதலிடம் தந்து அவர்களின் மறுவாழ்வுக்காக ஒரு நல்ல ஏற்பாட்டை இப்பொழுது நடத்திக்கொண்டு வருகிறோம். பிறகு ஏனைய பிச்சைக்காரர்களின் நிலைமைகளை இந்த அரசாங்கம் கவனிக்கலாம்.

### கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குத்தகைப் பாட்டம் நிலங்கள்

* 512. வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த அரசால் குத்தகைப் பாட்டம் என்ற முறையிலே கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உதயகிரி கோட்டை என்ற பகுதியில் சுமார் 140 ஏக்கர்கள் அளவிற்கு தனியார் கையில் இருக்கிறது. இதை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதேமாதிரி எஸ்டேட் உடைமையாளர்கள் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அதையும் திரும்பப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் பொழுது குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்திற்கு பட்டா வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்பொழுது குத்தகைக்காரர்களாக இருக்கும் அவர்களுக்கே கொடுக்கப்படுமா அல்லது அந்த நிலம் ஏழைகளுக்கு விநியோகிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1950 திருவிதாங்கூர்-கொச்சின் சட்டப்படி இப்பொழுது அவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்று தர்க்கா சட்டம் அமல் படுத்தப்படும் நேரத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது யார் நிலத்தை உழுகிறார்களோ அப்படி உழுகின்றவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் யோசிக்கும்.

ஜவ்வாது மலைப்பகுதியில் அணுவளக் கனிப்பொருள்கள்

* 513. வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இந்திய அணுமின் ஆய்வுத்துறை வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையைச் சுற்றியுள்ள ஆண்டியப்பனூர் பகுதியில் அணுவளக் கனிப்பொருட்களை கண்டறிய நில ஆய்வு செய்தது. ஆனால் மேற்கண்ட இடங்களில் குறிப்பிடத்தக்க யுரேனியம் அடங்கிய கனிப்பொருட்கள் ஒன்றும் கண்டு பிடிக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, யுரேனியம் கண்டு பிடிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். வேறு சில கனிப்பொருள்களை அங்கே கண்டறிந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிக் கண்டறிந்த பொருள்கள் என்ன, அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது திட்டம் அளித்திருக்கிறார்களா, தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவி செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தப் பகுதியிலே "ரேடியோ ஆக்டிவ் வெரைடீஸ்" பரிசீலிக்கப்பட்டு தோரியம் ஓரளவு இருப்பதாகவும், இந்த யுரேனியம் சிறுசிறு பகுதி இருக்கின்ற பொருள்கள் காணப்படுவதாகவும், அதே சமயத்தில் "கமர்ஷியல் சோர்ஸஸ் ஆப் யுரேனியம்" அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சைக்கிள் தொழிற்சாலை

*514. வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் சைக்கிள் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே சைக்கிள்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கு நல்ல கிராக்கி இருப்பதால் அப்படி ஒரு சைக்கிள் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்க அரசு இனிமேலாவது திட்டங்களைத் தயாரிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது அதுபற்றிப் பரிசீலனையில் இல்லை.

அண்ணா சமாதியை மேம்படுத்தல்

* 515 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரறிஞர் அண்ணா அடக்கம் செய்யப்பட்ட இடத்தினை மேலும் மைசூர் பிருந்தாவனம் போல அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அறிஞர் அண்ணா அவர்களின் சமாதியின் அருகில் குழந்தைகள் பூங்கா என்றை சுமார் 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அதைப் போலவே வெளிநாடுகளிலிருந்தும் வரக் கூடியவர்கள் அண்ணா சமாதியைப் பார்க்காமல் செல்வதில்லை. தினந்தோறும்

புண்ணியசேக்களக்காளவர்கள் கூடி வருகின்ற அந்த இடத்தைக் கொஞ்சம் செலவாவதைப் பொருட்படுத்தாமல் மேலும் நல்லமுறையில், மிகச்சிறந்த முறையில் அழகுப்படுத்த அரசு வகுத்திருக்கும் திட்டத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் பரிசீலிக்கப்படுகிறது. அந்தத் திட்டம் "Provides for turfing, gardening, construction of boating and swimming pools for children, fountains, acquarium, stadium, library, covered sitouts, statues, glass house, clock tower, pegolas, pony tracks and certain play-items like Toy rail for children." இது போன்ற திட்டத்தை இப்பொழுது சமூக நல இலாக்கா சிபார்சு செய்திருக்கிறது. நிதி இலாக்கா பரிசீலித்து வருகிறது.

திரு. த. சோலையா: அண்ணா சமாதியைச் சுற்றி ஒரு புத்தகத்தை விரித்து வைத்திருப்பது போல் இருக்கும் இடத்தில் அண்ணாவினுடைய அருமையான பொன்மொழிகள் எழுதி வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டத்தில் அதுவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அண்ணாவின் பொன்மொழிகளை எழுதி வைக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதுவரை அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்ட தொகை என்ன? அது மாத்திரமல்லாது சமாதிக்குப் பக்கத்தில் குழந்தைகள் பூங்காவை அமைப்பது மனோ தத்துவப்படி உகந்ததாக இருக்காது என்ற காரணத்தால் அதை வேறு இடத்தில் வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அண்ணா சமாதிக்கு இது வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 4,85,000. சமாதிக்குப் பக்கத்திலே குழந்தைகள் பூங்காவை அமைக்கப் போவதில்லை; கொஞ்சம் தூரத்தில்தான் அமைக்கப் போகிறோம். அது எந்த இடம் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு குழந்தைகள் பூங்கா அமைக்கப்படும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: அண்ணா சமாதியிலே காந்தி நினைவு மண்டபத்தைப் போல் கட்டப்பட்டு அண்ணா எழுதிய நூல்கள், புகைப் படங்கள் போன்றவற்றை அங்கு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்ட திட்டத்தில் இதெல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.





திரு. வை. பாலசுந்தரம்: மேனாட்டில் இருந்து மாநகராட்சிக்கு ஒரு 'ஃபவுண்டன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 'பவுண்டனை' அண்ணா சமாதி அருகில் வைக்கலாம் என்று மாநகராட்சி கேட்டுக் கொண்டிருக்கிறதா? அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாநகராட்சியின் மூலமாகக் கொடுக்கப்பட்ட ஃபவுண்டனை வைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. அதை அண்ணா சமாதிக்கு அருகில் வைக்கப் போவதில்லை. அதை ஐலண்டு கிரவுண்டுக்குப் பக்கத்தில் கூவம் ஆற்றங்கரையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: அண்ணா அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் எல்லாம் இப்போது சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: அண்ணா அவர்களுடைய சமாதியை தமிழ் சமுதாயத்திற்குப் புனிதமான இடமாக மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. அந்த இடத்தைச் சிலர் சேதப்படுத்தியதாகச் சொல்லப்படுவது உண்மையா? சேதப்படுத்தியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அண்ணா அவர்கள் சமாதியிலே சேதப்படுத்தியது வருந்துதற்குரியது என்று ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உலகத்திலேயே சென்னைக் கடற்கரை இரண்டாவது அழகான கடற்கரை என்ற பெயர் பெற்றது. ஆகவே, கடற்கரையில் பூங்காக்கள் போன்றவற்றை அமைக்காமல் வேறு இடத்தில் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடற்கரையின் அழகைக் குறைப்பதற்குப் பூங்காக்கள் அமைப்பது இல்லை. கடற்கரையின் அழகை அதிகப்படுத்துவதற்குத்தான் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன்: அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்ட பணம் கூவம் திட்டத்தில் இருந்து எடுத்துச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி ஆடிட் அப்ஜக்ஷன் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் இருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஆதாரமற்ற செய்தி. ஆடிட் அப்ஜக்ஷன் வர இடம் இல்லை. வேலை முடிந்த பிறகுதான் ஆடிட் செய்யப்படும். தவறான நோக்கத்தை ஏற்படுத்த வேண்டாம்.

### அனுப்பர்பாளையம்-சாமுண்டிபுரம் சாலை.

* 516. வினா—திரு. க. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் 11—8—1971-ம் தேதி அனுப்பர்பாளையம்-சாமுண்டிபுரம் செல்லும் பாதை மற்றும் மூன்று பாதைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டு பொதுப்பணித் துறை அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம்.

(இ) அவருடைய கோரிக்கைகள் அரசினால் ஆய்வு செய்யப்பட்டு அவருக்குப் பதில் அனுப்பப்பட்டது.

### *Contracts given by Highways Department*

* 517 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the total number of contracts given by the Highways Department during 1970–71 involving more than one lakh of rupees?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: 151.

திரு. என். டென்னிஸ்: அதிலே ஏதாவது ஒப்பந்தம் ரத்து செய்யப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேள்வி the total number of contracts given by the Highways department . . . . . . என்பதைப் பற்றியது. மூலக் கேள்வி எத்தனை வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்ற விவரத்தைப் பற்றிக் கேட்கப்பட்டிருந்தால் அந்த எண்ணிக்கையைச் சொன்னேன். ரத்து செய்யப்பட்டது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

DR. H. V. HANDE: Is it not a fact that the system or method of giving contracts in the Highways Department has changed recently, viz., those over Rs. 5 lakhs are nowadays being



directly sent to the Minister. Previously only if it was more than Rs. 20 lakhs it used to go to the Minister. I want to know whether there has been any change in the method of giving contracts, whether any change has been fixed by the Minister? If it is so, may I know the reasons for the change? If there is no change, what is the exact position now?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் வருகின்ற டெண்டர்களுக்கு சீஃப் எஞ்சினியர் ரெகமன்டேஷனோடு அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டு மென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. (to have effective control over the department) அது போன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹைவேசில் ஒரு லட்சத்திற்கு அதிமான காண்டிராக்டுகள் 151 பேர் என்று சொன்னார்கள். இப்போது டிபார்ட்மெண்ட் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில், அது முறையாக நடக்கிறதா என்று பார்ப்பதற்குத் தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நல்ல முறையில் நடப்பதற்கான வாய்ப்பு இருக்கும்போது அரசாங்கத்தில் இருக்கக்கூடிய சில சிப்பந்திகள் தடை சொல்லுகிறார்கள் என்ற காரணத்தால் காண்டிராக்ட் முறையைத் தொடர வேண்டுமா? ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கக்கூடிய எந்தப் பணியாக இருந்தாலும் டிபார்ட் மென்ட் நேரடியாக எடுத்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது கொள்கை அடிப்படையிலான கேள்வி. என்றால் இப்போது பதில் சொல்ல இயலாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில் ஐந்து லட்சத்திற்கு மேல் இருந்தால் அரசாங்கத்தின் மேற்பார் வைக்கு வர வேண்டும் என்று 'இரண்டு வருஷத்திற்கு முன்னால் மாற்றப் பட்டது என்று சொன்னார்கள். எதற்காக இது மாற்றப்பட்டது? முன்பு இருந்த முறையில் கோளாறுகள் ஏற்பட்டனவா? ஊழல்கள் ஏற்பட்டனவா? தவறுகள் ஏற்பட்டனவா? எந்தக் காரணத்தின் அடிப்படையில் இவ்வாறு மாற்றப்பட்டது? பொதுவாக 'டு ஹாவ் கிரேட்டர் கன்ட்ரோல்' என்றார்கள். what exactly prompted them to change the system? அந்த விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 20 லட்சத்தை 5 லட்சம் என்று குறைத்தாலேயே ஏதோ ஊழல் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுவது சரியல்ல. ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளைப் பொறுத்து அரசாங்கம்

குறிப்பிட்ட முறையில் மேற்பார்வையிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறதே தவிர எந்த விதமான குறைபாடும் இல்லை. ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளைப் பற்றி அரசாங்கம் நேரடியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் அந்த முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது விஜிலன்ஸ் இலாக்கா கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கண்காணிப்பதன் மூலமாக அதிகாரிகளின்பேரில் ரெஸ்பான்சிபிலிடி ஃபிக்ஸ் செய்யப்படுகிறது என்ற காரணத்தால் அதிகாரிகள் நேரடியாகக் காண்டிராக்டுக்கு விட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை வலியுறுத்துகிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே சொல்லியது போல் காண்டிராக்டுக்குக் கொடுக்காமல் அரசாங்கமே நேரடியாகச் செய்வது என்பது கொள்கை பற்றிய கேள்வி. அதற்கு இப்போது பதில் சொல்ல முடியாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: விஜிலன்ஸ் துறையினர் இதிலே கோளாறு இருக்கிறது என்று ஏதாவது கேஸ் பதிவு செய்திருக்கிறார்களா? அப்படிப் பதிவு செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைத் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விஜிலென்ஸ் ஏதாவது கேஸ் பதிவு செய்திருக்கிறதா என்ற பொதுவான கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது.

THIRU K. T. K. THANGAMANI: My question has not been answered clearly. My question was whether representation had been made by the officers, by the engineers, that because of the vigilance and fixation of responsibility on the officers, too much of this departmentalisation should not be there?

MR. DEPUTY SPEAKER: If it is a question of vigilance, how can you expect the Hon. Minister to answer?

THIRU K. T. K. THANGAMANI: I wanted to know whether representation had been received by Government from officers protesting against this departmentalisation in view of the fact that vigilance is very active and they are in a position to fix responsibility? It was a straight question, not involving any policy.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனியார்களுக்குக் காண்டிராக்ட் கொடுக்கும்போது ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளைப் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது உள்ள பி.டபிள்யு.டி. கோட், ஹைவேஸ் கோட் ஆகியவற்றின் விதி முறைகளின்படி தான் வேலைகள் நடைபெறுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லாமே காண்டிராக்டர்களுக்குக் கொடுத்து விடுவது என்றால் பி.டபிள்யு.டி.-ல் இருக்கும் எஞ்சினியர்கள் என்ன வேலையைச் செய்கிறார்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அவர்கள் செய்கிற வேலையை எப்போதும் செய்து கொண்டு வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எந்த அளவுக்கு மேல் இவர்கள் வேலை செய்கிறார்கள்? . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைச் சரியாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எல்லா வேலைகளும் பி.டபிள்யு.டி. ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டால் செய்யப்பட்டு வருகிறது. வேலைகள் டெண்டருக்கு விடப்படுகின்றன. மேற்பார்வை செய்வதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி கோட், ஹைவேஸ் கோட் விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். நல்லசாமி: காண்டிராக்ட் முறை திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் வந்ததா அல்லது இதற்கு முன்னால் இருந்த அரசு இருக்கும்போதே இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எப்போதும் போல்தான் இப்போதும் நடைபெற்று வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: எல்லாக் காண்ட்ராக்ட்டுக்கும் டெண்டர்ஸ் விடப்படுகிறது என்பது உண்மை. ஆனால் டெண்டர்களில் குறைந்த டெண்டர்களை உதாசீனம் செய்து மேலே சென்று வேறு ஆட்களுக்குக் கொடுக்கிற காரியங்கள் நடந்திருக்கின்றனவா? அப்படி நடந்திருந்தால் எவ்வளவு காரியங்கள் அம்மாதிரி நடந்திருக்கின்றன?

[1972 மார்ச் 15

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுவான குற்றச்சாட்டு எப்படி வேண்டுமானாலும் சுமத்தலாம். அதற்கு எப்படிப் பதில் சொல்வது? குறிப்பாக ஏதாவது தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் பதில் சொல்லலாம்.

## தமிழ் நாட்டில் உள்ள நீரூற்றுகள்

* 518. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள நீர் ஊற்றுகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்படுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இத்தகைய நீரூற்றுகள் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக கீழ்த் தஞ்சையில் இதற்கு முன்னால் சிலயிடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த பலன்களை அளித்து வருகிறது. அந்த நீரூற்றுகள் மூலம் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைத்து பாசன வசதிக்கு மிகவும் உபயோகமாக அமைத்து வருகிறது. அத்தகைய நீரூற்றுகளை மேலும் அதிகமாகக் கண்டுபிடித்து பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு மேலும் முயற்சிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாசன வசதிக்கான நீரூற்றுகள் விவசாய இலாக்கா மூலம் செய்யப்படுகிறது. ஏற்கெனவே விவசாய இலாக்கா இதுபோன்ற நீரூற்றுகளைக் கண்டுபிடித்து இன்னும் அதிகமாகச் செய்ய ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: நீரூற்றுகளைக் கண்டுபிடிப்பதில், நெல்லை மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில், கோவில்பட்டி, தாலுகாக்களில் எங்கெங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? அப்படி இல்லை என்றால் இனிமேலாவது அந்த மாதிரி ஒரு ஏற்பாட்டை அந்தப் பகுதியில் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு முழுவதும் நீர் ஆராய்ச்சிகள் நடத்துவதற்காகத்தான் 'டைரக்டர் ஆப் கிரவுண்ட் வாட்டர்' நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த டைரக்டர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.



1972 மார்ச் 15]

திரு. கா. வேழவேந்தன்: இந்த நீரூற்றுகளைக் கண்டுபிடிக்க டைரக்டர் ஆப் கிரவுண்ட் வாட்டர் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னீர்கள். அந்த வேலை எல்லா மாவட்டங்களிலும் முடிந்து விட்டதா? அப்படி முடிந்திருக்குமானால் எங்கெங்கு நீரூற்றுகள் மூலம் தண்ணீர் கிடைக்கிறது என்ற செய்தியை வரைப் படங்களாக எழுதி அப்படிப்பட்ட வரைப் படங்களை எல்லா பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகங்களிலும் வைத்து விவசாயிகளுக்குத் தெரிவிக்கும் வகையில் வெளியிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு முழுவதிலும் இன்னும் முடியவில்லை. முடிந்த பிறகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

## Tube well organisation

* 519 Q.—Thiru A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any tube well organisation is functioning in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) குழாய்க் கிணறு அமைப்பு நிறுவனம் என்று தனியாக ஏதுமில்லை. ஆனால், கீழ்க்கண்ட நிறுவனங்கள் இம் மாநிலத்தில் நிலநீர் ஆய்வில் ஈடுபட்டுள்ளன—

1. தமிழ்நாடு அரசுத் துறைகள்:

(அ) நிலநீர் இயக்குத்துறை;

(ஆ) வேளாண்மைத்துறை;

(இ) பொதுநலப் பொறியியல்துறை; மற்றும்

(ஈ) நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை.

2. இந்திய அரசு: மத்திய நிலநீர் வாரியம்.

3. உலக நாடுகள் நிறுவனம்: ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிலநீர் திட்டம்:

இது தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: யுனிசெப் நிறுவனத்தின் மூலம் எவ்வளவு உதவி பெறுகிறது? மத்திய அரசிலிருந்து எவ்வளவு உதவி பெறுகிறது? இது [illegible] இதுவரையில் எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. யூ. எஸ். மூலம் பெருமளவு உதவி கிடைத்தது. யுனிசெப் எய்டில் ஆரம்பிக்கப்பட்ட நில நீர் ஆராய்ச்சி இந்த மாத இறுதியில் முடிவுபெறும்.

திரு. துரை கோவிந்தராசன் : குழாய்க் கிணறுகள் அமைக்க நிலவள வங்கிகள் மூலம் நிறுவப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நிலவள வங்கிகள் இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு தடையாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிலநீர் ஆராய்ச்சிதான் இந்த இலாகாவைச் சேர்ந்தது. ஆராய்ச்சி செய்யப்பட்டு அதற்கான முடிவுகளைத் தான் இந்த இலாகா தெரிவிக்கிறது.

திரு. செ. சதாசிவம் : யுனிசெப் உதவியோடு குடி நீருக்காகத் திருச்சி மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அநேக கிராமங்களில் போடுவதற்கான திட்டம் இருந்ததே, அந்த வேலைகள் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது குடிநீர் இலாகாவைக் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. கே. கந்தசாமி : இந்த நிலநீர் ஆராய்ச்சியாளர்கள் பழைய கிணறுகளை வெட்டுவதற்குப் பணம் கேட்கும்போது பழைய கிணறுகளில் தண்ணீர் இல்லை, ஆழப்படுத்த பணம் தரமாட்டோம், புதிய கிணறுகளுக்குத்தான் தருவோம் என்று கூட்டுறவுத் துறையினர் கூறுகிறார்கள். ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி பழைய கிணறுகளை ஆழமாகத் தோண்டினாலும் தண்ணீர் இல்லை, புதிய கிணறுகளைத், தோண்டினால்தான் தண்ணீர் உண்டு என்று கூறப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நிலநீர் ஆராய்ச்சி இலாகாவைப் பொறுத்த வரையில் எங்கெங்கு எவ்வளவு நீர் இருக்கிறது என்ற விவரம் தெரிவிப்பது மட்டுந்தான். மற்றவை கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தது.

திரு. சோ. அழகர்சாமி : கண்மாய்கள், குளங்கள் இவை அமைப்பதில், வசதியில்லாத இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைப்பதன் மூலம், இருபது, முப்பது ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தலாம்.



எனவே, ஆற்றுப்படுகைகளில், ஓடைப் பகுதிகளில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குத் தனியாக இதற்கென்று ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே அதுபோன்ற ஒரு அமைப்பு இருந்து வருகிறது. விவசாய இலாகாவிலிருந்து அது போன்ற கிணறுகளை அமைக்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : குழாய்க் கிணறுகள் எங்கெங்கு தோண்டப்பட்டன ? அவற்றில் எவ்வளவு பயன்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether any mechanical equipment has been found out to investigate ground-water?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் தெரிந்து கொண்ட வரையில் ஏரியல் சர்வே செய்து மாப் செய்கிறார்கள். அதற்கான கருவிகள் இருக்கின்றன. விஞ்ஞான முறைப்படி நிலநீர் ஆய்வுதான் நடைபெற்று வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : யூனிசெஃப் ஆராய்ச்சி நடத்தினார்கள் என்று சொன்னார்கள். நடத்திய ஆராய்ச்சியின் ரிப்போர்ட் ஏதாவது உண்டா ? அப்படியானால் அந்த ரிப்போர்ட் சபை முன்னால் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த ரிப்போர்ட்டை அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். அது யூ. என். ஓ.-க்குப் போன பிறகுதான் இங்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

தபால் மூலம் விபூதி பிரசாதம்

* 520 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி, திருச்செந்தூர், சிதம்பரம் ஆகிய கோவில்களில் அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் தபாலில் அனுப்பும் முறை அமுலில் இருந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, பழனி, திருச்செந்தூர், திருப்பரங் கோவில்களில் அர்ச்சனை செய்யப்பட்ட விபூதிப் பொட்டலங்களுக்கு ஆண்டுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு அத்தகைய ஆண்டுக் கட்டணம் செலுத்துபவர்களுக்கு மட்டும்தான் அப்படி அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. வியாபார முறையில் நடக்கும் இந்த விபூதி வியாபாரத்திற்கு விற்பனை வரி விதிக்க அரசு ஆலோசனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி விற்பனை வரி விதிப்பது சம்பந்தமாக அந்தத் துறை அமைச்சர் அவர்களைத்தான் கேட்க வேண்டும். ஆனால் கோவில்களிலிருந்து அனுப்பப்படும் விபூதிக்கு முன் பணம் கட்டுவது மட்டுமல்ல, தபால் செலவும் அனுப்பப்பட்டால்தான் கோவிலிலிருந்து அனுப்புகிறார்கள். விற்பனை வரி பற்றிய தகவல் எனக்குத் தெரியாது.

திரு. நா. வீராசாமி : சென்னை நகரிலே சில சாமியார்கள், பன்றிமலை சாமியார் போன்ற சாமியார்கள் எதுவும் இல்லாமல் கையை நீட்டி நீட்டி விபூதி கொடுக்கிறார்கள், குங்குமம் கொடுக்கிறார்கள், சந்தனம் கொடுக்கிறார்கள், எதை வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தச் சாமியார்களை எல்லாம் அரசாங்கம் சந்தித்து மக்கள் குறைகளைப் போக்குவதற்கான திட்டங்களை அல்லது ஏதாவது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிச் சாமியார்களை அரசாங்கம் சந்திப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் தபால் மூலம் முன்பணம் கொடுத்தால் விபூதி போன்ற பிரசாதங்களை சில கோவில்களிலிருந்து அனுப்புகிறார்கள். சில பேர்கள் அதற்குக் கூடச் சங்கடப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த சாமியார்களின் விலாசத்தைக் கொடுத்தால் விபூதி பெற சௌகரியமாக இருக்கும்.

திரு. எம். தேவராசன் : இப்படி தபால் மூலம் விபூதிப் பிரசாதம் அனுப்புவதினால் அதன் புனிதத் தன்மை கெட்டுவிடாதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கெடாது என்ற நம்பிக்கை இருப்பதால்தான் தபால் மூலம் வரவழைக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : தபாலில் விபூதி போன்ற பிரசாதங்களை அனுப்புவதுமாதிரி போக முடியாதவர்கள், வசதியில்லாதவர்கள், இவர்கள் உள்ளூரிலே மொட்டை அடித்துக் கொண்டு முடியை பார்சலில் அனுப்பினால் அதைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

(விடை இல்லை.)



THIRU K. M. SUBRAMANIAM : Sir, even in the newspapers there are advertisements about evangelical curers and other curers who cure diseases without any medicine. Have this Government taken steps to verify whether that is a fact?

(விடை இல்லை.)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, கோவை செழியன் சொன்னது ரொம்ப நல்ல யோசனை. இப்போது முடிக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. அதற்காக அவர்களையே தனியாக அமைச்சராகப் போட்டு, அதை அவர் நல்ல முறையில் செய்வதற்கு, முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

(விடை இல்லை.)

திரு. கோவை செழியன் : அப்படி அமைச்சர் நியமிக்கப்பட்டால், அவரை எப்படி என்ன அமைச்சர் என்று அழைப்பது?

(விடை இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த யோசனை மாண்புமிகு அம்மையார் அவர்களுக்கு, அவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோதே வந்திருக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இப்போது கோவிலிலுள்ள விபூதி பிரசாதங்களை தபால் மூலம் அனுப்பப்படுவதால், கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது. கோவிலுக்கு அதிகமான பக்தர்கள் வந்தால்தான், பக்தி பெருகும். ஆகவே, இம் மாதிரியான தபால் மூலம் பிரசாதம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, பக்தர்கள் எல்லோரையுமே கோவிலுக்கு வரும்படி அழைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பக்தர்கள் கோவிலுக்கு வந்தால் என்ன வருமானம் வருமோ, என்ன கட்டணம் செலுத்துவார்களோ, அதை அவர்கள் இப்போது செலுத்திய பிறகு தான், அந்த பிரசாதங்களை அனுப்புகிறோம். அதிகமான பக்தர்கள் கோவிலுக்கு வந்தால் நெருக்கடி ஏற்படுகிறது. இப்படி அனுப்பினால் நமக்குத் தேவையான கட்டணம் வருவதால் சௌகர்யமாக இருக்கிறது.

புலவர் சி. பழநிசாமி : தலைவரவர்களே, பழநி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்களை அங்கே உள்ள வழிகாட்டிகள் என்று சொல்கிறவர்கள் ஏமாற்றி ஏராளமாகப் பணம் பறிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அதை நீக்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படி வழி காட்டிகள் ஏமாற்றுவதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், உறுப்பினர் தனியாக எழுதியனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : கோவிலுக்கு வருகிறவர்கள் மட்டுமல்ல. ஆபிசுக்கு வருகிறவர்கள், செக்ரிடேரியட்டுக்கு வருகிறார்கள், ஏதாவது வேலை கேட்டு வரக்கூடியவர்கள் ஆகியோரிடமிருந்தும் பணம் பறிக்கும் புரோக்கர்கள் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 5 ஆண்டுகளுக்கு முன்னால் அப்படி இருந்ததாகக் கேள்வி.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது அது அதிகமாகி இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்ததைவிட பல மடங்கு அதிகரித்து இருக்கிறது. க்ஷேத்திரங்களுக்கு வரும் பக்தர்களுக்கு அந்த க்ஷேத்திர வரலாறுகளை நல்ல முறையில் விளக்குவதற்காக வழிகாட்டிகளை நியமிக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கோவில்களைப் பற்றிய வரலாறுகளை அந்தக் கோவிலின் நிர்வாகிகளே, அறங்காவலர்களே புத்தகங்களாக வெளியிடுகிறார்கள். அங்கே பணியாற்றும் அர்ச்சகர்களும், அங்கேயிருக்கும் வழிகாட்டிகளும், அதை நல்ல முறையில் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறுகிறார்கள். துண்டுப் பிரசுரங்கள் மூலமும் வரலாற்றுச் சிறப்புகள் வெளியிடப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புகள் குறித்து புத்தகங்களும் தெய்வீகப் பேரவையின் சார்பில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பக்தர்கள் முடி கொடுப்பதன் காரணமாக வருமானம் என்ன வருகிறது என்பதையறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பல கோவில்களில் அதிகமான பக்தர்கள் வருகிற நேரத்தில் அதிகமான வருமானம் கிடைக்கிறது. குறிப்பாக, பழநி கோவிலில் ஆண்டுதோறும் சுமார் ரூ. 3 லட்சம் முடி மூலம், வருமானம் வருகிறது. இன்னும் பல ஆலயங்களில் அதற்குக் குறைவாக வருமானம் வந்து கொண்டு இருக்கிறது.





திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படி சிவன் கோவில் பிரசாதங்கள் விபூதி, குங்குமம் போன்றவைகள் தபால் மூலம் அனுப்புவது போல், வைணவர்கள் கோவிலில் உள்ள பிரசாதங்கள் துளசி போன்ற வேறு ஏதாவது பிரசாதங்களை அனுப்ப அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாமமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் நாமத்தை விரும்பினால் அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறோம். (சிரிப்பு.)

THIRU K. M. SUBRAMANIAM : Sir, will this Government consider the question of licensing official guides as in temples the unofficial guides are misleading the worshippers. Now there are too many unofficial guides working in various temples. So, will this Government consider the issue of licence or evolve some method by which the official guides would explain to the worshippers the correct position?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோவில் வழி காட்டிகள் அப்படிப்பட்ட தவறுகள் செய்ததாகப் புகார் வரவில்லை. அப்படி ஏதாவது கோவிலில் உள்ள வழிகாட்டிகள் தவறு செய்திருந்தால் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, a number of foreigners are visiting our temples and other pilgrim centres and we should have authorised guides to explain to them. Otherwise the unauthorised guides would tell them all sorts of false stories about them. So, will the Government consider the appointment of authorised guides to help the foreign visitors who visit the temples?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுற்றுலாத் துறையின் மூலம் தற்போது அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதி கோரிக்கை எண். 12—காவல் துறை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக்கோரிக்கை எண் 12—காவல் துறை* என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,07,33,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

Dr. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy:—

'That the allotment of Rs. 20,07,33,500 under Demand No. 12—Police be reduced by Rs. 100.'

Thiru J. JAMES: Sir, I move the following cut motion "காவல் துறை சுதந்திரமாக செயல்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க"

'That the allotment of Rs. 20,07,33,500 under Demand No. 12—Police be reduced by Rs. 100.'

Thiru K. T. K. THANGAMANI: Sir, I move the following cut motion—

"பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி பெற ரூபாய் மூன்று கட்டுவதை நிறுத்தவும், சாதாரணமாக கூட்டம் இரவு 11 மணி வரை நடத்தவும் அனுமதிக்க வேண்டுமென்று விவாதிக்க"

'That the allotment of Rs. 20,07,33,500 under Demand No. 12—Police be reduced by Rs. 100.'

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது நான் சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வந்துள்ளேன்.

பொதுவாக போலீஸ் இலாகாவைப் பற்றி பேசுகிற நேரத்தில் எப்பொழுதுமே என்னுடைய கருத்து எல்லாம் போலீஸ் இலாகா செய்யக்கூடிய பல்வேறு காரியங்கள், அதை நிர்வகிக்கக்கூடிய சர்க்காருடைய ஒரு தகவலின் பேரில், அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில் செய்யப்படுகிறதே தவிர, எதாவது தப்பித் தவறி சில இடங்களில் அதிகப் படியான நடவடிக்கைகளை நடந்திருந்தாலும், மொத்தத்தில் போலீஸ் இலாகாவின் நடவடிக்கைகள் பெரும்பாலும் சர்க்காருடைய வழிகாட்டுதல்கீழ் நடத்தப்படுகிறது என்ற கருத்தில் நான் போலீஸ் இலாகாவை பார்க்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்றைய தினம் இந்த அறிக்கையைப் பார்க்கிற

* 688-714-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சிடப்பட்டுள்ளது,



நேரத்தில் சென்று போன நடைமுறையைப் பார்க்கிற நேரத்தில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய சில விவரங்களைப் பற்றி சபையில் எடுத்துக்கூற விரும்புகிறேன். பொதுவாக குற்றங்கள் அதிகரிக்கவில்லை என்று தெரிகிறது. ஆனால், வளர்ந்து வரும் சமுதாயம், ஜனநாயகத்தைச் சுட்டிக்காட்டக்கூடிய பணி, சோசலிச நடவடிக்கைகளை மேலும் மேலும் எடுத்துக்கொண்டு, சீரும் சிறப்புமாக அமைதியான முறையில் செல்லக்கூடிய நேரத்தில், குற்றங்கள் குறையவேண்டும். ஆனால் குற்றங்கள் அப்படியே இருக்கின்றன என்பதைப் பார்க்கிறபோது ஓரளவுக்கு நாம் அதைப் பற்றி சிந்திக்கவேண்டியதொரு விஷயம் என்று கூறிக்கொள்கிறேன். நாம் செய்யும் பொது மாற்றங்கள், ஜனநாயக மாற்றங்கள், சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாம் இன்னும் சமுதாயத்தில் குற்றம் செய்யக்கூடியவர்களின் மனோபாவத்தை பெரிய அளவுக்கு மாற்றக் கூடிய அளவிற்கு இல்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதைச் சொல்கிற நேரத்தில், அதிலே ஒரு குறிப்பு இருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளில், முன்னேறிய நாடுகளிலும் கூட இத்தகைய போக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் அந்தக் குற்றங்கள் குறையாமல் இருப்பதற்குக் காரணம் காட்டுவது சரியல்ல. வளர்ந்து வரும் நாடுகளில் என்று சொல்கிற நேரத்தில், குறிப்பாக எடுத்துக் கொண்டால் அமெரிக்கா போன்ற நல்ல செல்வச் செழிப்பு சிறகடித்து கிடக்கும் நாடுகளில்கூட, மிகக் கணிசமான அளவுக்கு குற்றங்கள் வளர்ந்து இருக்கின்றன. சாதாரணமாகப் பார்த்தால், சொத்துரிமை வைத்துக் கொண்டிருக்கிற நாடுகளில் எல்லாம் சமுதாய ஒழுக்கம் கெட்டு, குற்றங்கள் மலிந்து வருகின்றன என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். முதலாளித்துவ அடிப்படையாகக்கொண்டிருக்கிற நாடுகளில் குற்றங்கள் பெருகித்தான் வருகின்றன. மனிதத்தன்மை, ஒழுக்கம் என்பது அந்த நாடுகளில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை தெள்ளத்தெளிவாகக் கூற முடியும். ஆகவேதான் ஜனநாயகப் பாதையில் போகும் நாடுகளில், தேசிய ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக இருக்கக் கூடிய நாடுகளில், குற்றங்கள் குறைய வேண்டிய நிலையில் இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் நம் நாட்டில் கிரைம்ஸ் குறைய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். சமீப காலங்களிலே போலீஸ் லாக்கப்புகளில் சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு வைத்திருக்கக்கூடியவர்களில் சிலர், லாக்கப்பில் வைத்திருக்கக்கூடிய காலத்தில் அவர்கள் அடிக்கடி செத்துப்போவதைப் பார்க்கிறோம். தற்கொலை செய்துகொண்டுவிட்டார்கள், பாலிடால் குடித்து

விட்டார்கள் என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. சமீபத்தில் பண்க்கார தம்பதிகளைக் கொன்றுவிட்டு நாகர்கோவிலில் ஒருவர் பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிட்டதாகக் கூட பத்திரிக்கையில் செய்திவந்ததைப் பார்த்தோம்.

ஒரு கைதி போலீஸ் ஸ்டேஷனில் மரணம் அடைந்தான் என்றால், ஜனங்கள் என்ன கருதுகிறார்கள்? நாம் ஆயிரம்தான் சொன்னாலும், டாக்டர் பரிசோதனை நடத்தினாலும், மத்தியஸ்தர் தீர்ப்பு கூறினாலும், அடித்துக் கொன்று விட்டார்கள் என்ற மனோபாவம்தான் நாட்டு மக்களிடையே நிலவிவருகிறது. அம்மாதிரி ஒரு எண்ணம்தான் மக்களிடையே ஏற்பட்டுவிடுகிறது. அது மிகவும் வருந்ததக்கது. உலகத்தில் எதையும் நாம் உற்பத்தி செய்துவிடலாம், இழந்த எதையும் நாம் மீட்டுவிடலாம். ஆனால் போன மனித உயிரை மீட்க முடியாது. லாக்கப்புகளில் இப்படி கைதிகள் மரணம் அடைவதை கூடியவரையில் தவிர்க்கவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சந்தேகாஸ்பதத்திற்கு இடம் இருத்தலாகாது.

போலீஸ் துப்பறியும் நாய்களை குற்றவாளியை கண்டுபிடிப்பதில் துப்பு துவக்குவதற்குப் பயன்படுத்துவதுபோல், போலீஸ் ஸ்டேஷன்களில் சந்தேகப்படக்கூடிய சூழ்நிலையில் கைதிகள் மரணமடைய நேரிட்டால், துப்புத் துலக்குவதற்கு போலீஸ் துப்பறியும் நாய்களை ஏன் பயன்படுத்தக்கூடாது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மனித உயிர் அனாவசியமாகப் பறிக்கப்பட்டுவிடக்கூடாது. குற்றவாளிகள் திருத்தப்படவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் மீண்டும் நல்ல முறையில் திருந்த, சமுதாயத்தில் நல்ல மனிதராக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

லாக்கப்பில் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கக்கூடிய காலத்தில் போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமையை ஆற்றி, அப்படிப்பட்ட கைதிகளை சாவதற்கு அனுமதிப்பதில்லை என்று சொல்லக்கூடிய விதத்தில், லாக்கப்பில் நடக்கக்கூடிய மரணத்தைப்பற்றிக் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஜனங்கள் மத்தியிலே ஒரு புதிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இதை வெறும் சட்ட அமைதிப் பிரச்னையாக மட்டும் வைத்துப் பார்க்கக்கூடாது. எங்கு பார்த்தாலும் பாட்டாளி மக்கள், படிக்காதவர்கள், பாமரர்கள், தொழிலாளிகள், விவசாயிகள், ஒய்ட்-காலர்டு சிப்பந்திகள், மற்றும் பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் ஆகியோர்கள் மத்தியில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.



ஜனநாயக முறை வளர்ச்சி அடையவேண்டும், சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படவேண்டும், நீதி நியாயம் கிடைக்கவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிற மக்கள் அலை அலையாகத் திரண்டு வருகிறார்கள்.

நேற்று மாலை கூட நான் அகௌண்டென்டென்ட் ஜெனரல் ஆபீஸில் ஒரு பெரிய கூட்டத்தில் பேசிவிட்டு வந்திருக்கிறேன். கம்ப்யூட்டர்கள் வரக்கூடாது என்று பி.ஏ., எம்.ஏ. படித்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அழுத்தமான அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஜனநாயக சகாப்தத்தில் மக்கள் அலையலையாக வந்து போராட்டங்களை நடத்தத்தான் செய்கிறார்கள். சட்டம் அமைதி பிரச்னையாக மட்டும் அதைக் கருதி விடக்கூடாது. அதே சமயத்தில் அவர்கள் கட்டுமீறிப் போகவேண்டும், அத்து மீறி போகவேண்டும் என்றும் நான் சொல்லவரவில்லை.

ஆனால், இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்பதை போலீஸ்காரர்கள் ஆராயவேண்டும். குறிப்பாக மேல்தட்டில் உள்ள அதிகாரிகள் முன்கூட்டியே மிகுந்த ஆலோசனை செய்து இதையெல்லாம் சுமுகமாக சமாளிக்கக் கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இந்த முறையில் போலீசாரை திருப்பி விட்டால், பல தொந்தரவுகள் குறையும், பல மாச்சரியங்கள் குறையும், வளர்ந்து வரக்கூடிய பல்வேறு காழ்ப்பு உணர்ச்சிகள் மட்டுப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்று மாதகாலமாக சிம்ப்ஸன் தொழிலாளர்கள் தகராறு நடக்கிறது, ஆவடி மத்திய தொழிற்சாலை தொழிலாளர்கள் மேலும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், விவசாயிகள் இப்படி பல்வேறு துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் சில வருந்தத்தக்க சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம்.

மண்டபத்தில் பெரிய பட்டணத்தில் முஸ்லிம் குடும்பத்தில் போலீஸ்காரர்கள் சோதனையிடுவதாகச் சொல்லி துன்புறுத்தியிருக்கிறார்கள். மங்களசாமியைத் தூக்கிக்கொண்டு போய் உங்களுடைய கட்சி மேடையிலேயே வைத்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள். இந்த சம்பவங்களெல்லாம் நாட்டிற்குக் கட்டாயம் அனுகூலமாக அமையாது, பிரதிகூலமாகத்தான் அமையும், இப்படிப்பட்ட சம்பவங்களை போலீஸ்காரர்கள் கைகட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை போலீஸ் துறையில் இருக்குமானால், அது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

விட்டார்கள் என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. சமீபத்தில் பணக்கார தம்பதிகளைக் கொன்றுவிட்டு நாகர்கோவிலில் ஒருவர் பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிட்டதாகக் கூட பத்திரிக்கையில் செய்திவந்ததைப் பார்த்தோம்.

ஒரு கைதி போலீஸ் ஸ்டேஷனில் மரணம் அடைந்தான் என்றால், ஜனங்கள் என்ன கருதுகிறார்கள்? நாம் ஆயிரம்தான் சொன்னாலும், டாக்டர் பரிசோதனை நடத்தினாலும், மத்தியஸ்தர் தீர்ப்பு கூறினாலும், அடித்துக் கொன்று விட்டார்கள் என்ற மனோபாவம்தான் நாட்டு மக்களிடையே நிலவிவருகிறது. அம்மாதிரி ஒரு எண்ணம்தான் மக்களிடையே ஏற்பட்டுவிடுகிறது. அது மிகவும் வருந்ததக்கது. உலகத்தில் எதையும் நாம் உற்பத்தி செய்துவிடலாம், இழந்த எதையும் நாம் மீட்டுவிடலாம். ஆனால் போன மனித உயிரை மீட்க முடியாது. லாக்கப்புகளில் இப்படி கைதிகள் மரணம் அடைவதை கூடியவரையில் தவிர்க்கவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சந்தேகாஸ்பதத்திற்கு இடம் இருத்தலாகாது.

போலீஸ் துப்பறியும் நாய்களை குற்றவாளியை கண்டுபிடிப்பதில் துப்பு துலக்குவதற்குப் பயன்படுத்துவதுபோல், போலீஸ் ஸ்டேஷன்களில் சந்தேகப் படக்கூடிய சூழ்நிலையில் கைதிகள் மரணமடைய நேரிட்டால், துப்புத் துலக்குவதற்கு போலீஸ் துப்பறியும் நாய்களை ஏன் பயன்படுத்தக்கூடாது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மனித உயிர் அனாவசியமாகப் பறிக்கப்பட்டுவிடக்கூடாது. குற்றவாளிகள் திருத்தப்படவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் மீண்டும் நல்ல முறையில் திருந்த, சமுதாயத்தில் நல்ல மனிதராக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

லாக்கப்பில் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கக்கூடிய காலத்தில் போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமையை ஆற்றி, அப்படிப்பட்ட கைதிகளை சாவதற்கு அனுமதிப்பதில்லை என்று சொல்லக்கூடிய விதத்தில், லாக்கப்பில் நடக்கக்கூடிய மரணத்தைப்பற்றிக் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஜனங்கள் மத்தியிலே ஒரு புதிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இதை வெறும் சட்ட அமைதிப் பிரச்னையாக மட்டும் வைத்துப் பார்க்கக்கூடாது. எங்கு பார்த்தாலும் பாட்டாளி மக்கள், படிக்காதவர்கள், பாமரர்கள், தொழிலாளிகள், விவசாயிகள், ஒய்ட்-காலர்டு சிப்பந்திகள், மற்றும் பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் ஆகியோர்கள் மத்தியில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.



ஜனநாயக முறை வளர்ச்சி அடையவேண்டும், சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படவேண்டும், நீதி நியாயம் கிடைக்கவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிற மக்கள் அலை அலையாகத் திரண்டு வருகிறார்கள்.

நேற்று மாலை கூட நான் அகௌண்டென்டென்ட் ஜெனரல் ஆபீஸில் ஒரு பெரிய கூட்டத்தில் பேசிவிட்டு வந்திருக்கிறேன். கம்ப்யூடர்கள் வரக்கூடாது என்று பி.ஏ., எம்.ஏ. படித்த ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அழுத்தமான அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஜனநாயக சகாப்தத்தில் மக்கள் அலையலையாக வந்து போராட்டங்களை நடத்தத்தான் செய்கிறார்கள். சட்டம் அமைதி பிரச்னையாக மட்டும் அதைக் கருதிவிடக்கூடாது. அதே சமயத்தில் அவர்கள் கட்டுமீறிப் போகவேண்டும், அத்து மீறி போகவேண்டும் என்றும் நான் சொல்லவரவில்லை.

ஆனால், இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்பதை போலீஸ்காரர்கள் ஆராயவேண்டும். குறிப்பாக மேல்தட்டில் உள்ள அதிகாரிகள் முன்கூட்டியே மிகுந்த ஆலோசனை செய்து இதையெல்லாம் சுமுகமாக சமாளிக்கக் கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இந்த முறையில் போலீசாரை திருப்பி விட்டால், பல தொந்தரவுகள் குறையும், பல மாச்சரியங்கள் குறையும், வளர்ந்து வரக்கூடிய பல்வேறு காழ்ப்பு உணர்ச்சிகள் மட்டுப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்று மாதகாலமாக சிம்ப்ஸன் தொழிலாளர்கள் தகராறு நடக்கிறது, ஆவடி மத்திய தொழிற்சாலை தொழிலாளர்கள் மேலும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், விவசாயிகள் இப்படி பல்வேறு துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் சில வருந்தத்தக்க சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம்.

மண்டபத்தில் பெரிய பட்டணத்தில் முஸ்லிம் குடும்பத்தில் போலீஸ்காரர்கள் சோதனையிடுவதாகச் சொல்லி துன்புறுத்தியிருக்கிறார்கள். மங்களசாமியைத் தூக்கிக்கொண்டு போய் உங்களுடைய கட்சி மேடையிலேயே வைத்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள். இந்த சம்பவங்களெல்லாம் நாட்டிற்குக் கட்டாயம் அனுகூலமாக அமையாது, பிரதிகூலமாகத்தான் அமையும். இப்படிப்பட்ட சம்பவங்களை போலீஸ்காரர்கள் கைக்கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை போலீஸ் துறையில் இருக்குமானால், அது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்த தேசக் கட்சியாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சிகளாக இருந்தாலும் சரி, நியாயம் எங்கே தரப்படவேண்டுமோ, நீதி எங்கே தரப்படவேண்டுமோ அங்கே நீதியும், நியாயமும் வழங்கப்படவேண்டும். போலீஸ்காரர்கள் நிர்தாட்சண்யமாக நடந்து கொள்ளவேண்டும். எந்த இடத்தில் யார் சட்டத்தை மீறினாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் போலீஸார் இயங்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதுதான் நாட்டிற்கு நல்லது. இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை இல்லை சில இடங்களில். சில இடங்களில் தவறுகிறது. அது உங்கள் ஆட்சிக்கு நல்லது அல்ல, உங்கள் ஆட்சிக்கு களங்கம் கற்பிக்கும் விதத்தில் சம்பவங்கள் கொண்டுபோய் விடுகின்றன என்பதைத்தான் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாதிரி நிலைமை மாறவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்குப் பல நவீன முறைகள் கையாளப்படுவது பற்றி நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். கைரேகைத் தடங்கள், பொருள்களின் மீதுள்ள அடையாளங்கள், பாரென்சிக் லாபரடெரியில் ரசாயனப் பரிசோதனை முறைகள் இவைகளெல்லாம் வைத்துக்கொண்டு நவீன முறைகளைக் கையாண்டு துப்புகள் துலக்கி குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன என்றாலும், இன்னும் சந்தேகப்பட்டு நபர்களைக் கொண்டு போய் வைத்து, மிருகத்தனமாக அடித்து, அவர்களிடமிருந்து உண்மையை வரவழைக்கக்கூடிய போக்கு அறவே போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. அத்தகைய முறைகளைக் கையாள்வது நாட்டிற்கும் நல்லதல்ல. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும், அவமதிக்கப்படக்கூடாது. மனிதனின் மனோபாவத்தைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். மனிதன் திருந்துவதற்கு மனிதன் என்று சொல்லக்கூடிய மதிப்பு கொடுத்து, அவனைத் திருந்த வைக்கவேண்டும். பலாத்கார ரீதியில் மனிதனை திருத்திவிடக்கூடும் என்று நினைப்பது சரியல்ல. பலாத்காரத்தினால் அவன் மேலும் கடினமுள்ள கிரிமினலாக ஆவான், திருந்தமாட்டான், மேலும் சமுதாயத்திற்கு ஆபத்து விளைவிப்பவனாக ஆவான் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

ஆகவே, இன்றைக்குப் போலீஸ் துறையில் மனோதத்துவம் நன்றாகப் பயின்ற உத்தியோகஸ்தர்களைக் கொண்ட ஒரு பகுதி கூட இருப்பது நல்லது. குறிப்பாக, மேல் நாட்டில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு, எல்லா கட்டங்களிலும் எஸ்.ஐ. போன்றவர்கள் விசாரணை செய்யும்பொழுது அவர்களுக்கு மனோதத்துவத்தைப் பற்றி பாடங்கள் போதிக்கப்படவேண்டும். ஒரு குற்றவாளியைக் கண்டவுடனேயே, அவன் பார்வை, அவன் பேச்சு, அவன் முகபாவம் இப்படி



பல்வேறு நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு மனோதத்துவ ரீதியில் நோக்கினால், நிச்சயம் அவன் குற்றவாளியா, இல்லையா என்று ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட விதத்தில் சைகாலஜி பற்றிய பாடங்கள் போலீஸ் பள்ளிகள், கல்லூரிகளில் போதிக்கப்படவேண்டும். ஆகவே, நவீன முறையில் மனோதத்துவ பாடங்களை போதிக்க முற்படவேண்டும் அப்படிப்பட்ட முறையில் புலனாய்வுத்துறையில் பெரும் அளவுக்கு மாற்றங்கள் வரவேண்டும் என்று நான் கருதுகிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, வெகுஜனப் போராட்டங்கள், கிளர்ச்சிகள் நடக்கும் பொழுது, தேவையான அளவுக்குத்தான் பலாத்காரத்தை உபயோகப்படுத்த வேண்டும். எந்த அளவுக்கு அதைக் கட்டு மீறிப் போகாமல் செய்வதற்கு எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்குத்தான் பலாத்காரத்தைப் பயன்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட முறையைக் கையாளாமல் தடியடிப்பிரயோகம் செய்வது என்றால், முதல் நாள் தடியடிபிரயோகம் செய்தால், 100 பேர்களாக வந்தவர்கள் மறுநாள் 1,000 பேர்களாக வந்து போராட்டத்தைத் தொடரத்தான் செய்வார்கள். அம்மாதிரி கோபத்தை உண்டுபண்ணக்கூடாது. ஆவேசத்தை உண்டுபண்ணக்கூடாது. வெகுஜன- கிளர்ச்சிகள் நடக்கும்பொழுது அதைக்கூடியவரையில் சுமுகமாக பலாத்காரமில்லாமல் சமாளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, பல சட்டங்கள் வருகின்றன. மனைக்கட்டுகளைக் காலி செய்யக்கூடாது என்று சட்டம் வருகிறது. தொழிலாளர்கள் நல சட்டம் வருகிறது, நிலச்சீர்திருத்தச் சட்டம் வருகிறது. இப்படிப்பட்ட சட்டங்கள் வரும்பொழுது இந்த இலாக்காவுக்கு அதன் விளைவுகளைப் பற்றி, அதனால் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றி போதனைகள் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிப்பட்ட சட்டங்கள் வருவதற்குக் காரணம் என்ன என்பதை போலீஸ் இலாகா புரிந்துகொள்ளவேண்டும்.

சட்டத்திலுள்ள உரிமைகள் என்ன, சட்டப்படி என்ன மாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன, எந்த அளவிற்குச் சட்டத்தை அமல்படுத்துவதில் போலீஸார் தங்கள் கடமையை ஆற்றவேண்டும், என்பதையெல்லாம் பற்றி ஒரு சட்டம் வந்தவுடனேயே மேலதிகாரிகள் ஒன்று கூடி, சட்டத்தை பராமரிக்கக்கூடிய முறையில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்து, போலீஸ்காரர்களுக்கு அதைப்பற்றி பாடங்களை போதிக்கவேண்டும். அப்படி மாற்றங்களுக்கு ஏற்ற முடிவுகளை எடுத்து

அதைப்பற்றி எல்லோருக்கும் சர்குலர் அனுப்பவேண்டும். பழைய நடைமுறைகளையே வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. சட்டத்திற்கேற்ற மாற்றங்கள் வரவேண்டும். அப்படிப்பட்ட மாறுதல்கள் ஏற்படுத்துவதில் இப்பொழுது சரியான கவனம் செலுத்துகிறார்களா என்றால், எனக்கு சந்தேகம்தான்.

ஆகவே, மாறுதல்களைப்பற்றிய பாடபோதனைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்தற்குச் சொல்லப்போனால் மனைக்கட்டுகளை விட்டு விவசாயிகளை வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருப்பதாக போலீசுக்கு எல்லோருக்கும் தெரிந்ததாகத் தெரியவில்லை. அதன் காரணமாக, சப் இன்ஸ்பெக்டர், அல்லது சப் இன்ஸ்பெக்டருக்குக் கீழே இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் திடீரென்று குடிசைகளைப் பிரித்துவிடுகிறார்கள், சுவர்களை இடித்துவிடுகிறார்கள், சாமான்களை அப்புறப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, புதியதாக ஒரு சட்டம் வந்தால், அந்தச் சட்டத்தைப்பற்றிய போதனைகள் இந்த இலாகாவிலே மேலிருந்து கீழ்மட்டம்வரை உள்ள எல்லாப் பிரிவினருக்கும் போதிக்கப்படவேண்டும். வேலை முறையில் எப்படிப் பட்ட மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பது பற்றி சிந்திக்கவேண்டும், அப்படி சிந்திப்பதன் மூலம் வேலையில் செயல்படுவதற்கு ஊக்கம் காட்டப்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றம் என்று சொல்கிற காலத்தில் சாதாரண குடிமகன், வறுமையிலே வாடிக்கிடக்கின்ற காரணத்தினால் குற்றம் புரிகிறான். குற்றபரம்பரையைச் சேர்ந்தவன் குற்றம் செய்தாலும் பளிச்சென்று தெரிந்துவிடுகிறது. ஆனால், ஆண்மனைகளிலும், மாளிகைகளிலும் குற்றங்கள் நடைபெறுகின்றன. பெரிய குடும்பத்தினர்கள், பெரிய மனிதர்கள் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். அம்மாதிரி நிலைமை இப்போழுது நாட்டிலே உருவாகிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றங்கள் சமீபகாலமாக அதிகப்படியாக வளர்ந்துகொண்டிருக்கின்றன.

கள்ளநோட் அடிப்பது, விக்ரகங்கள் திருடி விற்று லாபம் சம்பாதிப்பது, பொய்க் கணக்கு காட்டுவது, கலப்படம் செய்வது இம்மாதிரி குற்றங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. சாதாரணமாக நாணயமாக நடக்கக் கூடியவர்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள்கூட இம்மாதிரி குற்றங்கள் புரிவதைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய போலீஸார் பரம்பரையாகவே பல சாதனைகளைப் புரிந்து வந்திருக்கிறார்கள்.



புழகத்தில் கள்ள நோட்டுகள் அதிகமாக இருக்கின்றன. கள்ள நோட்டுகள் அடிப்பது ஒன்று, அவைகளைப் புழக்கத்தில் விடுவது இரண்டு. ஆகிய இரண்டு விதமாக முறைகள் இருக்கின்றன. திடீரென்று பலபேர்கள் பணக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது. நான்கு வருஷங்களுக்கு முன்னால் ஒன்றுமே இல்லாமலே இருந்தவர்கள் திடீரென்று பணக்காரர்களாகி, சொத்துக்கள் வாங்கி, மனைவி, மக்களுக்கு ஆபரணங்கள் வாங்குகிறார்கள், ரூ. 10,000, 15,000 அவர்கள் கையில் பணம் புழங்குகிறது. இவர்களையெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். கள்ளநோட்டு அடிக்கிறவர்கள் சாதாரணக்குற்றம் செய்பவர்களைவிட மோசமான குற்றவாளிகள். இந்தச் சமுதாயத்திலே உள்ள மற்ற குற்றவாளிகளை விடக் கேவலமானவர்கள். எனவே இவர்களைக் கண்காணிப்பதற்கு இந்தத் துறை மிகவும் விஷேச கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாமியைப் பற்றிப் பேசுகிறார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள்கூட பக்திப் பரவசத்தோடு சாமியைப் பற்றிப் பேசுகிறார்கள். உள்ளபடியே சாமியை முறித்து, கையைக் காலை ஒடித்துச் சாக்கடையிலே போடுகிற காரியம் இன்றைக்கு நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விக்கிரங்களை வெளி நாடுகளுக்கு விற்றுத் தாங்கள் லாபம் அடையவேண்டுமென்ற எண்ணத்தில், சுய லாபத்தைக் கருதி, இந்த விக்கிரங்களின் கலை அம்சத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு விலைபெற்று தாங்கள் மகிழ வேண்டும் என்பதற்காக கடவுளை அலட்சியப் படுத்தக் கூடிய போக்கு வளர்ந்து கொண்டு வருகிறது.

இந்த நிலைமையிலே இந்தக் கடவுள் சிலைகள், விக்கிரகங்கள் திருட்டுப் போகாமல் தடுப்பதற்கு இவைகளைப் போட்டோ எடுக்கிறார்கள். அதற்கு பதிலாக நல்ல ஆசாரிகளைக்கொண்டு அதேபோல வேறு உலோகத்திலே, செம்பிலே, மற்ற உலோகங்களிலே செய்து வைத்து விட்டு இந்த விக்கிரங்களை வெளிநாடுகளுக்குக் கடத்திக்கொண்டு போய்விடுகிறார்கள் என்கிறார்கள். இப்படி வெளி நாடுகளுக்கு, அமெரிக்காவிற்குக் கொண்டு போய் விற்கப்படுவது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. சென்னையிலே திருடப்பட்டு, இங்கேயிருந்து இரகசியமாகக் கப்பலில் ஏற்றி அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே விற்கிற அளவிற்கு இங்கே புலனாய்வு பலஹீனமாக இருக்கிறது. இதைக் கண்டுபிடிக்கக் கூடிய இந்தத் துறை இன்னும் வேகமாக, கவனத்தோடு இருந்தால் இதைத் தடுக்க முடியும்.

பல்லாயிரக்கணக்கான ரூபாய்க்கு இந்த விக்கிரங்கள் அங்கே விற்கப்படுகின்றன. தங்கள் வாழ்வில் மலர்ச்சி வேண்டுமென்பதற்காக இப்படிக் கலை அம்சம் நிறைந்த இந்தச் சிலைகளை வெளி நாடுகளுக்குக் கடத்திக் கொண்டு

சென்று விற்று விடுகிறார்கள். இவற்றை அவைகளுடைய கலை அழகிற்காக லட்சக்கணக்கான டாலர்கள் கொடுத்து வாங்கப்படுவதால், அவற்றை அங்கே கொண்டு சென்று விற்பதற்காக, இந்தத் திருடர்கள் புலனாய்வுத் துறையை ஏமாற்றுவதற்கு நல்ல தேர்ச்சி பெற்று இந்தத் திருட்டை நடத்தி வருகிறார்கள். புலனாய்வுத்துறையினர் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு விஞ்ஞான ரீதியாக படிக்க ஆரம்பிக்கிறார்கள். அதற்காகத் துப்பறியும் நாவல்கள், வேறு வகையான பல்வேறு புத்தகங்களைப் படிக்கிறார்கள். எனவே இந்த முறையில் திருடக்கூடிய திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு விஞ்ஞான ரீதியாக முயற்சிக்க வேண்டும்.

இதுவரையிலே பல விக்கிரங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. அதற்காக இந்தத் துறையில் பாராட்டினாலும் கூட இன்றும் நிரந்தரமாக இப்படி விக்கிரங்களை விற்று லாபம் சம்பதிக்க வேண்டுமென்கிற ஆசை உள்ள இந்தத் திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு இந்தத் துறை அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இப்படி இந்த விக்கிரகங்கள் கப்பல் ஏறி வெளியே போகாமல் மத்திய சர்க்கார் உதவியோடு இவைகளைத் தடுத்து நிறுத்துகிற அளவிற்கு இந்தத் துறை செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தேசத் துரோக குற்றங்கள் அடிப்படையில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், பிரிவினை பற்றி பூச்சாண்டி காட்டிக் கொண்டு ஒரு சிலர் பேசி வருகிறார்கள். பிரிவினையை விரும்புகிறவர்கள் யாரும் இல்லை. இதில் நம்பிக்கை இல்லை என்று முதலமைச்சரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். பிரிவினை சுவரொட்டிகள் தஞ்சையிலே ஒட்டப்பட்டிருந்தாலும், அவை உடனே கிழித்து எறியப்பட்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிரிவினைக் குற்றங்களைத் தண்டிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சர்க்காரைப் பொறுத்த மட்டில் பிரிவினையை விட்டு விட்டார்கள். அது ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முன்னேற்றகரமான ஏற்பாடுகளை வரவேற்று டி.எஸ்.பி. என்று சொல்லக்கூடியவர்கள் வருஷத்தில் பல நாட்கள் வெளியே இருக்கிறார்கள் 10 மாதங்கள் பெண்டாட்டி பிள்ளையை விட்டு வெளியே இருக்கிறார்கள். அவர்களின் தினப்படி 75 காசு. மிகவும் வருந்தத்தக்கது. அது மட்டுமல்ல அமைதியான முறையிலே இயங்கக் கூடிய துறை அல்ல. மிகத் துரிதமாக செயல்பட வேண்டியவர்கள். மிகச் சிரமமான சூழ்நிலையிலே பணிபுரிகிறார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் கூடியிருக்கும் இடத்தில், மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்கள் மத்தியில், ஆத்திரத்தில் கல் எறியக்கூடியவர்கள் மத்தியில் வேலை செ





கின்றார்கள். இந்த நிலைமையிலே இவர்களுக்கு 75 பைசா தினப்படி கொடுக்கப்படுகிறது. இந்தக் கால கட்டத்திலே இது ஒத்துக் கொள்ளப்படக் கூடியதல்ல. இவர்கள் பல மாதங்கள் வீட்டை விட்டு வெளியே இருக்கும் நிலைமையை மாற்றி ஒரு மாதம் வெளியே இருக்கும் நிலைமையை மாற்றி ஒரு மாதம் வெளியே இருந்து விட்டு வந்தால் ஒரு பத்து நாளைக்காவது குழந்தை குட்டிகளோடு இருக்கக் கூடிய நிலை இருக்கவேண்டும். குடும்பத்தோடு, குழந்தை குட்டிகளோடு ஒருவன் இருந்தால்தான் அந்தக் கருத்துக்கள்தான் ஒருவனை மனிதனாக ஆக்குகின்றன என்பதை நாம் பூரணமாக ஏற்றுக்கொண்டோமானால் போலீஸ்காரர்கள் தங்கள் குடும்பத்தோடு, குழந்தை குட்டிகளோடு இருக்கும் ஒரு சூழ்நிலையை, முயற்சிகளை உருவாக்கித் தரவேண்டும்.

வெளியிலிருந்து சென்னைக்கு வருகிற காவலர்களுக்கு தினப்படி 1.25 கொடுக்கப்படுகிறது. ஒரு கைதியைப் பிடித்துக் கொண்டு வருகிற போலீஸ் காரர்களுக்குக் கொடுக்கப்படுகிற இந்தப் படியை வைத்துக் கொண்டு அவர்கள் சாப்பிட முடியாது. நான் ஒரு காலத்திலே கைது செய்யப்பட்டுக் கொண்டு போகக் கூடிய காலத்திலே நான் சாப்பிடப்போகிற நேரத்திலே அவர்கள் சாப்பிடப் போக முடியாத நிலை இருந்ததைப் பார்த்து விட்டு என்னுடைய கட்சிக்காரர்களைக் கொண்டு அவர்களுக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுக்கச் செய்தேன். இந்த முறையிலே அவர்களை வைத்து இருப்பது நல்லதல்ல. அந்தப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அவர்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்து, ஆண்டு தோறும் வெள்ளையடித்து, அவற்றை நல்ல முறையிலே பராமரித்து வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அவர்கள் இருக்கும் வீடுகள் மிகவும் சிறியவைகளாக இருக்கின்றன. மிகவும் வசதிக்குறைவாக இருக்கின்றன. சுகாதாரக் குறைவாக இருக்கின்றன. இவைகளை நல்ல முறையிலே பராமரித்து வசதிகளை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

பொதுவாகச் சொல்வது போலீஸ் இலாகாவை எடுத்துக் கொண்டால், அமெரிக்க போன்ற நாடுகளை எடுத்துக் கொள்வோம், சோஷலிச நாடுகளை எடுத்துக்கொள்ள வேண்டாம், அங்கே ஒரு குழந்தைகூட போலீஸ்காரரின் கையைப் பிடித்துக் கொண்டு போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு அங்கே உறவை வளர்த்திருக்கிறார்கள். நமது நாட்டிலும் அத்தகைய உறவு வர வேண்டுமென்றால் நடைமுறைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். இப்படிப்பட்ட மாற்றங்கள் வர வேண்டுமென்றால், வரப்போகிற காலத்தில் படித்தவர்களைப் படிப்படியாகக் கொண்டு வருவதற்கு, அவர்களுக்குத் தக்க பயிற்சி கொடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறிக்

கொள்கிறேன். ஏகாதிபத்யக் காலத்திலிருந்த அதிகாரிகள் சிலர் இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் இத்தகைய பயிற்சி அளிக்கப்பட வேண்டும். புதிய சூழ் நிலைக்கு, ஜனநாயகச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடந்துகொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஜனநாயகத்தில் மக்களுக்கு இந்தத் துறையும், அரசாங்கமும் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கடைசியாக, நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இதைக் காழ்ப்பு உணர்ச்சியால் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த இலாகாவில் தலையீடு இல்லாமல் நிச்சயமாக நல்ல முறையிலே செயல்பட வேண்டும். போலீஸ் இலாகாவில் தலையீடு இருப்பதால் அவர்களுக்கு மிகவும் தர்ம சங்கடமாக இருக்கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது மற்றவர்கள் எந்த விதத்திலும் தலையிடக்கூடாது. இந்த நிலைமைகளைத் தவிர்க்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் நல்ல அரசியல் சூழ் நிலைகள் உருவாகும், இந்த இலாகா நல்ல முறையிலே செயல்பட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோவை செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972-73-ல் ஆண்டு காவல்துறை மானியத்தின் கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் மணலி அவர்கள் நம்முடைய காவல் துறையை வெகுவாகப் புகழ்ந்து இருக்கிறார்கள். அந்தப் புகழ்ச்சி உண்மையிலேயே மிகைப்படுத்திச் சொல்லக் கூடிய ஒன்றல்ல. தமிழகத்தில் இருக்கக் கூடிய காவல்துறையினரின் பணியை எந்த அளவிற்குப் பாராட்டினாலும், அந்த அளவிற்கு அது தகுதி பெற்ற ஒன்றாகும். அகில இந்தியாவிலேயே காவல் துறையைப் பொறுத்த மட்டிலும் தமிழகத்தில் இருக்கிற காவல்துறைதான் அது அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி, தலை சிறந்து விளங்கக் கூடிய ஒரு துறையாக இருந்து வருகிறது. மற்ற பகுதிகளிலே காவல்துறை என்று சொன்னால், ஏதோ பேருக்கு இருக்கிறார்களே தவிர அவர்கள் சரியாகக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில்லை. அல்லது அவர்களுடைய பணிகளிலும் மற்றவைகளிலும் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று பாவலாகச் சொல்வது உண்மையாகும். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் அவர்கள் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஸ்காட்லண்டியார்ட் போலீசைப் போல, பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டது போல, தமிழகக் காவல் துறையினர் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.



வேறு மாநிலங்களில் இல்லாத அளவிற்கு அதிகமான அளவிற்கு குற்றங்களைக் கண்டு பிடிப்பதும், குற்றங்கள் வருகிற நேரத்தில், அதை முன்னாலேயே தடுக்கிற திறமையும் தமிழ் நாட்டுக் காவல்துறையினருக்கு இருந்து வருகின்றது.

அடுத்து, இன்றைக்கு அரசியல்வாதிகள் எல்லாம் காவல்துறையினர் மீது பல குறைபாடுகளைச் சொல்கிறார்கள். யார் ஆட்சிக்கு வந்தாலும் முதலிலே தாக்கப்படுகின்றவர்கள் காவல்துறையினர் தான். அந்த அளவுக்கு காவல் துறையினரை ஒரு இக்கட்டான நிலைக்குக் நாம் கொண்டுவரக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் அமைதி இன்மை ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

பொதுவாக, தொழிலாளர்கள், முதலாளிகளை எதிர்த்து போராட்டம் நடத்துவார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுகிறார்கள். அதேபோல் மாணவர்களும் இன்றைக்குக் காரணம் இல்லாமல் பல இடங்களில் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தக்கூடிய நிர்ப்பந்தத்திற்கு அரசியல் வாதிகளால் ஆளாகி இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசியல் பின்னணிகளில் நிலைமை உருவாவதால்தான் போலீசாரும் தலையிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அப்படி இருந்தும் கூட, இந்த ஆட்சி வந்த பின்னால் துப்பாக்கிப் பிரயோகமோ அல்லது கண்ணீர்ப் புகை பிரயோகமோ முன்பு இருந்த அளவை விட மிகக் குறைந்திருக்கிறது. இந்த ஆண்டு மூன்று முறைதான் கண்ணீர்ப் புகை பிரயோகம் நடந்திருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கின்றார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்குக் காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகள் எல்லாம்—முன்பு இருந்த குறைகளையெல்லாம் நீக்கி வந்தாலும்—நம்முடைய ஆட்சியிலே அவைகளை எல்லாம் எவ்வளவோ மாற்றத்திற்குக் கொண்டுவந்தாலும் கூட இன்னும் சில குறைகள் அவர்களுக்கு இருக்கதான் செய்கின்றது. குறிப்பாக போலீசார் அலுவல் காரணமாக வெளி இடங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பயணப்படி—டி.ஏ.—குறைவாக இருக்கிறது. அவைகளை நிச்சயமாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு எப்போதும் தாராளமாக சலுகைகள் அளிக்கக்கூடியவர்கள். எனவே, இக்குறையை நிச்சயமாக கவனத்தில் கொண்டு, தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல் போலீசார் வீடுகளைப் பற்றிச் சொன்னார்கள். முன்பு போலீசார் வீடுகளைப் பார்த்தால் புறாக்கூடு மாதிரி இருக்கும். ஒரே ஒரு அறைதான் இருக்கும். அதிலே சமையல் நடத்திக்கொள்ளவேண்டும், குழந்தைகள், தாயார், தகப்பனார் எல்லோரும் அதில்தான் இருக்கவேண்டும். அதனால்தான் அவர்களுக்குக் குடும்பக்கட்டுப்பாடு இல்லாமலேயே குழந்தை விருத்தி இல்லாமல் கூட இருந்தது. ஆனால் இன்றைக்கு நம்முடைய ஆட்சி வந்தபிறகு புதிய வீடுகள் ஏறக்குறைய 5,602 காவலர்களுக்குக் கட்டித் தந்திருக்கிறார்கள். அவர்கள் குறைகளைப் போக்குகின்ற வகையில் புதிய வீடுகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள்.

அடுத்து, காவல் துறையில் பணியாற்றும் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மாற்றம் செய்கின்றபோது கூடியவரையில் வருடக் கடைசியிலே மாற்றம் செய்தால், அவர்களின் குழந்தைகள் படிப்பு கெடாமல், நல்லமுறையில் அமையும். கணவனும், மனைவியும் பணியாற்றக்கூடியவர்கள் என்றால், அந்த இருவரில் ஒருவரைப் பிரித்து வைக்காமல் பிரிவு துன்பத்தை ஏற்படுத்தாமல் ஒரே இடத்தில் இருக்க வகை செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல காவல் நிலையங்களில் போதுமான அளவுக்குப் போலீசார் இல்லை. அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். பொதுவாக ஸ்டிரைக் என்றாலோ அல்லது திருவிழா என்றாலோ போலீசார் அங்கு போய் விடுகிறார்கள். அந்த நேரத்தில் ஏதாவது கலவரங்கள் அல்லது வேறு விசேஷம் என்றால் அங்கே தேவைப்படுகின்ற போலீசாரின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. எனவே, காவல் நிலையங்களில் போலீசாரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒவ்வொரு போலீஸ் நிலையத்திற்கும், நான் சென்ற போலீஸ் மானியத்தின்போது குறிப்பிட்டுச் சொன்னதுபோல, ஒரு ஜீப், இரண்டு மோட்டார் பைக்கும் தேவை. அந்த காலத்திலே பஞ்சாயத்து யூனியன்களுக்கும் தேவை இல்லாத இலாக்காக்களுக்கும் ஜீப்புகள் கொடுத்திருந்தார்கள். அவைகள் எல்லாம் இன்றைக்கு திரும்பப் பெறப்பட்டு, சிக்கனப் படுத்தியிருக்கிறோம். ஆனால் போலீஸ் துறைக்கு ஜீப் அவசியமாகத் தேவைப் படுகிறது. இல்லையென்றால், எங்காவது சிறு கிராமங்களில் கலவரங்கள் ஏற்பட்டு, உடனடியாக அங்கு போக வேண்டுமென்றால்; பாரிடத்திலாவது ஜீப் கார் வாங்கிக்கொண்டு போகக் கூடிய நிலைமை ஏற்படும். அப்படி ஜீப் கார் கொடுப்பவர் அடுத்த நாளே ஏதாவது தவறு செய்துவிட்டு, போலீசாரின்





தயவைநாடி நிற்பார். எனவே, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப், இரண்டு மோட்டார் பைக்குகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நியமிக்கப்பட்டுள்ள ஐ.பி.எஸ். அதிகாரிகள் பலருக்குத் தமிழ் தெரிவதில்லை. அதை மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, தமிழகத்திலே அதிகமான ஐ.பி.எஸ். அதிகாரிகளை தேர்ந்தெடுக்க வழி செய்ய வேண்டும். மேலும் டிப்பார்ட்மென்டில் பணியாற்றி வருகின்றவர்களுக்கு ஐ.பி.எஸ். கன்ஃபார்ம் செய்யவேண்டும். மத்திய அரசாங்கம் நேரடியாக நியமிக்கும் ஐ.பி.எஸ். அதிகாரிகளை விட அவர்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. எனவே, சர்வீஸில் இருக்கின்ற தகுதி பெற்ற அதிகாரிகளுக்கு ஐ.பி.எஸ். கன்ஃபார்ம் செய்து, அவர்கள் பதவியை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகவே, கலவரங்கள் நடைபெறுகின்றபோது அதிகமாக தாக்கப் படுகின்றவர்கள் போலீஸ்காரர்கள்தான். மற்றவர்களை விட, எந்த ஒரு சின்ன பிரச்னையாக இருந்தாலும் போலீசார்தான் தாக்கப்படுகின்றார்கள். அது ஸ்டிரைக் ஆகட்டும், அல்லது கதவடைப்பு ஆகட்டும் அல்லது வேறு எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் போலீசார்தான் தாக்கப்படுகிறார்கள். அப்படிப் பட்ட அவர்களுக்குப் பாதுகாப்பான முறையில் இன்றைக்கு ஒரு இன்ஷூரன்ஸ் முறையை ஏற்படுத்தி, பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு ஒரு நல்ல காம்பன்சேஷன் தொகை கிடைக்கச் செய்வதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும்.

இப்போதே காவல்துறையினர் துணைவியார்கள் தொழில் நடத்துவதற்காக அரசு ஏறக்குறைய 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகையை இன்னும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற எல்லாத் துறையினரும் சங்கம் அமைத்து, தங்கள் கோரிக்கைகளை அரசுக்குத் தெரிவிக்கின்றார்கள். ஆனால் காவல்துறையினருக்கு என்று ஒரு சங்கம் இல்லை. அவர்கள் குறைகளை அரசாங்கம் நேரடியாகவே கவனித்து வருகிறது. கடந்த 20 ஆண்டு காலத்தில் செய்ததைவிட இந்த 5 ஆண்டு காலத்தில் போலீஸ்காரர்களுக்கு அதிகமான சலுகைகளை அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

கள்ள நோட்டு அச்சடித்தல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்ற கொடியச் செயல்களைச் செய்துவிட்டு, தப்பி ஓடிவரும் அண்டை மாநிலத்தவர்களைக் கூட நம்முடைய காவல்துறையினர் சாமர்த்தியமாக பிடித்துவிடுகின்றனர். நம்முடைய மாநிலத்திலுள்ள பெரிய பெரிய குற்றவாளிகளை

யெல்லாம்கூட விரைவிலே பிடித்துவிடுகின்றார்கள். இன்றைக்குச் சில ஹோட்டல்களிலும் நடைபெறும் நிர்வாண டான்ஸ்—அம்மண ஆட்டங்களை எல்லாம் கண்டு பிடித்து, நல்லமுறையில் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதேபோன்று அங்கங்கே ரிக்கார்டு டான்ஸ் என்று நடத்துகிறார்கள். ரிக்கார்டு டான்ஸ் எங்கே நடத்தப்பட்டாலும், யார் நடத்தினாலும் அதைக் கண்டுபிடித்து, சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு சில சாமியார்கள் ஊரை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய பணத்தையெல்லாம் ஏமாற்றிப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் காட்டினால் விபூதி வரும், இப்படி காட்டினால் வேறு ஏதோ வரும் என்று சொல்லி, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாமியார்களையெல்லாம் கைது செய்து, நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனால், இந்துக்கள் மனமோ, பக்தர்கள் மனமோ புண்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் சைக்கிளில் டபிள்ஸ் சென்றால் பிடித்து விடுகிறார்கள். ஆனால், டெல்லியிலும், மற்ற மாநிலங்களிலும் மூன்று பேர் நான்கு பேர் குடும்பத்தோடு சென்றாலும் பிடிப்பதில்லை. சைக்கிள் ஏழையின் வாகனம். அதிலே இரண்டு பேர் போவதினால் கெடுதல் இல்லை. எனவே, தமிழ் நாட்டிலும் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கவேண்டும்.

அடுத்து, எனது தொகுதியைச் சேர்ந்த ஊதியூரில் இருக்கின்ற காவல் நிலையத்திற்கு சொந்த கட்டடம் கிடையாது. ஒரு சிறிய வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அங்கு பணியாற்றுகின்ற காவல் துறையினருக்குக் குடியிருக்க குவார்ட்டர்ஸ் கிடையாது. அவர்களுக்கு ஒருவிதமான வசதியும் இல்லாததால் அங்கு யாராவது ஒரு எஸ்.ஐ. வந்தால், மூன்று மாதங்களுக்குள் வேறு எங்காவது மாற்றம் வாங்கி விட்டு போய்விடுவார். எனவே, அங்குள்ள போலீஸ் நிலையத்திற்கு ஒரு நல்ல கட்டடம் கட்டிக்கொடுக்கவும், காவல்துறையினருக்குக் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் டெலிபோன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



இது முக்கியமான துறை. இது எவ்வளவுக்கெவ்வளவு திறமையாக தன் வேலைகளைச் செய்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நாட்டுக்கு நல்லது. நம்முடைய மாநில போலீஸ் துறையில் இருக்கக்கூடியவர்கள் மிகவும் திறமைசாலிகள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே தங்கள் திறமையினால் நல்ல புகழைத் தேடிக் கொண்டு தங்களுக்கு என்று ஒரு பெருமையைத் தேடிக்கொண்டிருப்பவர்கள். மற்ற மாநிலத்தவர்கள் யாருக்கும் பின் தங்கியவர்கள் அல்ல என்பதைப் பல காரியங்களின்மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு நம் மாநிலத்தில் உள்ள மக்களது உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டியவர்கள் துரதிருஷ்டவசமாக ஆளும் கட்சிக்கும் ஆட்சிக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியவர்களாக மாறிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டுதான் நாங்கள் பயப்படுகிறோம். எனக்கு முன்னாலே பேசிய திரு. மணலி அவர்கள் சொன்ன மாதிரி தலையீடு அதிகமாக இருப்பதனால் அவர்களால் தங்கள் கடமையை ஒழுங்காக, நேர்மையாகச் செய்ய முடியாமல் போகிறது. அதை வலியுறுத்த வேண்டியது எங்கள் கடமையாகும்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்து முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். மற்ற மற்ற இடங்களில் 46 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருப்பதைக் குறிப்பிட்டார்கள். அது போலத்தான் இந்த மாநிலத்திலும் துப்பாக்கிச் சூடுகள் நடக்கும் என்று சொல்கிற மாதிரி இருந்தது அந்த தொனி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் நான் பேசியதைத் திரித்துச் சொல்வது நல்லது அல்ல. இங்கேயும் நடக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. இங்கே நடப்பதுகூட இன்னும் குறையவேண்டும் என்று பேசினேனேதவிர இப்படித்தான் இங்கேயும் நடக்கும் என்று சொல்லவில்லை. நான் பேசியதை வேறு மாதிரியாகத் திரித்துப் பேசுவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வெளி மாநிலங்களில் நடந்ததை எல்லாம் தொகுத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கே நடந்தது குறைவுதான் என்கிறபோது ஓஹோ, இங்கேயும் நடக்க வேண்டும் போலிருக்கிறது என்றே தான் மற்றவர்களுக்குத் தோன்றச் செய்யும். அப்படி ஒன்றும் இங்கே துப்பாக்கிச் சூடே நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது. 70-இல் மட்டும் ஒன்பது முறைகள் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இடங்கள், தேதிகளை எல்லாம் தொகுத்து எடுத்து வைத்திருக்கிறேன்.

அங்கங்கே வன்முறைகள் அதிகமாகத் தூண்டப்படுகின்ற நிலைதான் மாணவர்களிடையே, தொழிலாளர்களிடையே இன்றைய தினம் இருந்து வருகிறது. தலையீடு மட்டும் இல்லாமல் இருந்தால் காவல் துறையினர் இவற்றுக்கு இடமே கொடுக்காது தடுத்து விடுவார்கள். அப்படி இல்லாத காரணத்தினால்தான்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 15

இன்றைய தினம் அமைதி குலைந்து வருகிறது. மாணவர்கள் மத்தியில், தொழிலாளர்கள் மத்தியில் இன்றைய தினம் தகராறுகள் ஏற்படுத்தப்படுவதும், போலீசார்கள் தலையிடாதிருப்பதையும் , பார்த்தால் மிக பயங்கரமாக இருக்கிறது. அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களோ, சேராதவர்களோ இன்றைய தினம் வேண்டுமென்றே தொழிலாளர்கள் மத்தியில், மாணவர்கள் மத்தியில் தகராறுகளைக் கிளப்பிவிடுகிறார்கள்.

சட்டக் கல்லூரியில் ஏற்பட்ட மாணவர்கள தகராறு என்ன? அங்கே தேர்தல் நடந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற கவுன்சில் ஆண்டு விழாவை நடத்த முன்வந்தால் சிலர் வேண்டுமென்றே ஆண்டு விழாவை அந்தக் கவுன்சில் நடத்தக்கூடாது, அதற்கென்று தனிக் கவுன்சில் அமைக்க வேண்டும் என்கிறார்கள். வெற்றி பெற்ற கவுன்சில் ஆண்டு விழாவை நடத்தாது வேறு எது நடத்துவது? இதில் நியாயம் என்ன? நியாயத்தைப்பற்றிக் கவலையில்லை. தகராறு எழுந்து மாணவர்களிடையே அடிதடி—இன்றைய தினம் அங்கே போலீஸ் காவல் இருக்க வேண்டிய அவல நிலை இருக்கிறது. இப்படித் தொழிலாளர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் வேண்டுமென்றே யார் தகராறுகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். அன்றைக்கு அம்மையார் அவர்கள் பேசும்போது முதல் அமைச்சர் தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு என்றார்கள். இன்றைக்கு மாணவர் கவுன்சில் ஆண்டு விழா நடத்துவதுபற்றி என்கிறார்களே, இதில் எது சரி? இந்த முரண்பாடு ஏன்?

திருமதி த. ந. அனந்தநாயகி: அங்கத்தினர்தான் குழப்பத்தில் பேசுகிறார். அன்றைக்கு நான் சொன்னது பிரசிடென்சி காலேஜ் தகராறு பற்றியது. தேர்தல் வழக்கு சம்பந்தமாக அன்றைய தினம் குடந்தை ராமலிங்கம் தாக்கப்பட்டார். வழக்கும் நடந்து கொண்டிருக்கிறது. குட்டி குரைத்து நாயின் தலையில் வைப்பது போல இன்றைய தினம் அது . . . .

திரு. துரை முருகன்: அம்மையார் அவர்கள் வழக்கு நடந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதே சமயம் குட்டி குரைத்து நாயின் தலையில் வைத்தது போல என்கிறார்கள். நான் அன்றைக்கே சொன்னேன். பிரசிடென்சி கல்லூரியில் நடக்கிற விஷயத்திற்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்? இவர் ஏன் அங்கே போனார்? அங்கே ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக அவர் தாக்கப்பட்டாரே தவிர அவர் தாக்கப்பட்டதற்கும் கழகத்திற்கும் எவ்விதச்



1972 மார்ச் 15]

சம்பந்தமும் இல்லை. கல்லூரித் தேர்தல் சம்பந்தமான தகராறேதவிர முதல்வர் தேர்தல் சம்பந்தமான தகராறும் இல்லை. இதை நான் இன்றைக்கும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். திருப்பித் திருப்பிச் சொல்கிறார்களே, அம்மையார் தயாரா?

திருமதி த. ந. அனந்தநாயகி: வழக்கு கோர்ட் வரையிலும் வந்திருக்கிறது. கோர்ட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எது எதற்கு சம்பந்தம், யார் தவறு என்பது நன்கு தெரியும். குடந்தை ராமலிங்கம் என்னிடமே சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீதிமன்றம் வரை போனதாகச் சொன்னார்கள். ராமலிங்கம் என்ன சொன்னார், அதற்குப் பதில் என்ன சொல்லப்பட்டது என்கிற விவரங்களையும் தெரியாமல் பேசுவது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்றைக்குத்தான் வழக்கு நடக்க இருக்கிறது. இன்னும் பல தகவல்களும் வரும். அது எல்லாம் முடிந்த பிறகு உங்களுக்குச் சொல்கிறேன்.

அடுத்து, லாக்கப்பில் டெத்—ஜமீலா இறந்தாள், மஞ்சுளா இறந்தாள் என்பதை எல்லாம் பார்க்கிறபோது லாக்கப்பில் எப்படிச் சாவு ஏற்படுகிறது? இன்றைக்குக்கூட தென்னாற்காட்டில் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை முதல் அமைச்சர் அவர்களிடம் காட்ட இருக்கிறேன். ஒரு பெண் மிக வருத்தத்துடன் எழுதியிருக்கிறாள் "என் கணவனை ஒரு திருட்டுக் குற்றத்திற்காக இரவு பிடித்துச் சென்றார்கள். காலையில் பிணமாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள்" என்று எழுதியிருக்கிறாள். கொலைக் குற்றம் செய்தவனைக்கூட நாம் கொன்றுவிட முடியாது. நீதி மன்றத்தில் வழக்கு நடத்தி, நீதிபதி விசாரணை செய்து தண்டனை அளிக்க வேண்டும். ஆனால் திருட்டுக் குற்றத்திற்காகப் பிடித்துப்போய் லாக்கப்பில் வைப்பதும், அங்கேயே அவனை சித்திரவதை செய்வது கொன்றுவிடுவதும் இந்த இலாக்காவுக்கு மிகமிகப் பெரிய களங்கத்தை உண்டாக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவதில் அமைதி காணாமல் இதுபோல லாக்கப்பில் ஏன் சாவு ஏற்படுகிறது என்பதை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேண்டுமென்றே எதிர்க்கட்சிக்காரர்களை இம்சிக்க, பயமுறுத்த பல வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. திருப்பத்தூரில் அரசாங்கம் வழக்குத் தொடுத்தார்கள், அதை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள் என்றால் இவ்வளவு பலவீனமான வழக்கை ஏன் தொடர வேண்டும்? இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்களை பயமுறுத்தத்தான் போலீஸ் இலாக்காவினர் பயன்படுத்தப்படுகிறார்கள். 1967 ஆகஸ்டு 1-ம் தேதி ஊர்வலம் சென்றதற்காக வழக்கு. 71

ஆகியும் இன்னும் முடியவில்லை. இது எதைக் காட்டுகிறது? வழக்கு என்று போடு, எத்தனை பேர்களைச் சேர்க்க முடியுமோ அத்தனை பேர்களையும் சேருங்கள். வழக்கை சீக்கிரத்தில் முடிக்காது இழுத்து அடியுங்கள்—வீட்டுக்கும் கோர்ட்டுக்கும் நடந்து நடந்தே அவர்கள் மனம் சலிக்கட்டும்—என்று எதிர்க் கட்சிக்காரர்களை இம்சிக்கவேதான் இப்படி நடக்கிறார்களேதவிர நேர்மையாக ஒழுங்காக, நீதியாக, திறமையாக இந்த இலாக்கா செயல்பட அனுமதிக்கப் படவில்லை என்றே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சட்ட அமைச்சர் திரு. மாதவன் தொகுதியில் பட்டப் பகலில் சிலர் கும்பலாக ஒரு வீட்டுக்குள் புகுந்து கொள்ளை அடித்திருக்கிறார்கள். கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீடு தாக்கப்பட்டிருக்கிறது. அவரே பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். எத்தனை மாதங்கள் ஆயிற்று? பட்டப் பகலிலே இதைச் செய்திருக்கிறார்கள்? சாதாரணமாக பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட்டிலே, இன்னின்னார் வந்தார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னின்ன ஆட்கள் என்று பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னின்னார் வந்து வீட்டைத் தாக்கினார்கள் என்று சொல்லியும்கூட உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அவருடைய மகளின் கையை மருமகனின் முன்னால் முறித்து அந்தப் பெண்ணை அவமானப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் இன்னின்னார் இதைச் செய்தார்கள் என்று புகார் கொடுத்தும் உடனே நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், இதைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள்? இதற்கு ஏன் போலீஸ்? இதற்கு ஏன் துப்பறியும் நாய்கள்? அவர்களை ஏன் போலீஸ் பிடிக்கவில்லை? சில சமயங்களில் அப்படிப் பிடித்தாலும் உடனே பெயிலில் விட்டுவிடுகிறார்கள். பிடிபட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தவுடன், யார் புகார் கொடுத்தார்களோ, அவர்களுடைய வீட்டின் முன்னால் வந்து அவர்களை மிரட்டுவது என்றால் அதற்கு என்ன பொருள்?

அடுத்து, வாலாஜாபாத்திலே ஒரு பெண் நகரசபை உறுப்பினர். அவருக்கு என்ன நேர்ந்தது? அவரைக் கடத்திக்கொண்டு போய், ஒரு வாரத்திற்குப் பின் தான் வீட்டில் கொண்டுவந்துவிட முடிந்தது. கடத்திக்கொண்டு போனவர்கள் அந்தப் பெண்ணின் வீட்டின் முன்னே போய் 'வெட்டுகிறேன், குத்துகிறேன்' என்று மிரட்டுகிறார்கள். அப்படி மிரட்டுகிறவர்கள்மீது போலீஸ் தக்க நடவடிக்கை எடுத்ததா?

திரு. க. மு. இராசகோபால்: தலைவர் அவர்களே, வாலாஜாபாத் என்னுடைய தொகுதி. அம்மையார் அவர்கள் வாலாஜாபாத் என்று சொல்கிறார். அது வாலாஜாபாத்தில் நடக்கவில்லை, வாலாஜாபேட்டையில் நடந்தது (சிரிப்பு).



திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, வாலாஜாபேட்டை என்று திருத்தியதற்கு ரொம்ப நன்றி. (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு). அடுத்து 1972-ல் கர்லேகி என்ற அம்மையார் அவமானப்படுத்தப்பட்டாள் என்ற வழக்கு வந்தது. உண்மையில் வழக்குகளில் குற்றவாளிகளை உடனடியாகப் பிடிக்கக்கூடிய காவல் துறையில் சிலர் தலையிட்டதன் காரணமாகத்தான் உண்மைக் குற்றவாளிகள் தப்பிவிட வழி ஏற்படுகிறது. அப்படிச் செய்வது அரசாங்கத்திற்குத்தான் கெட்ட பெயரை உண்டாக்கும்.

இன்றைய தினம் புகார் கொடுப்பதற்கே மக்கள் பயப்படுகிறார்கள். அப்படிப் போனால் நம்மைப் பிடித்து மிரட்டுவார்களே என்று பயப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இரண்டு முக்கியமான வழக்குகளைச் சொல்லிவிட்டு, சிலர் தலையீட்டின் பேரில்தான் காலதாமதம் ஆகிறது என்றார்கள். திரு. சிவலிங்கம் செட்டியார் வழக்கு, வாலாஜாபேட்டையில் ஒரு பெண்ணைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். என்ன தலையீடு? யார் தலையிட்டார்கள்? தலையீடு எப்படி நடைபெற்றது என்கிற விவரங்களைச் சொல்ல முடியுமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, தலையீடு என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். என்னைக் காட்டிலும் அரசாங்கத்திற்குத்தான் அது பற்றி நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கூட தெரியாமல் இருக்கலாம். அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தக்கூடிய அளவிற்கு இன்னின்னார் தலையிட்டார்கள் என்று விவரம் தெரிவித்தால் அரசாங்கம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக, உதவியாக இருக்கும். அப்படித் தக்க ஆதாரங்கள்கூட இல்லாமல் புகார்கள் சொல்வது எதிர்க்கட்சிக்கு நல்லதல்ல. அது நாட்டிற்கும் நல்லதல்ல. திரு. சிவலிங்கம் செட்டியார் வழக்கில் கையாடல் செய்யப்பட்ட பல பொருள்கள் இன்று மீட்கப்பட்டு உரியவரிடம் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாலாஜாபேட்டையில் அந்த உறுப்பினர் ஒரு வார காலத்திற்குள்ளாக மீட்கப்பட்டு அவருடைய வீட்டில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டார். அந்த உறுப்பினரை இழுத்துச் சென்றவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போலீசார் வெறுமனே கையைக் கட்டிக்கொண்டு இருக்கவில்லை. அப்படி எங்கேயாவது தலையீடு இருந்தால், இன்னின்னார் இந்த வழக்கில் தலையிட்டார்கள் என்று சொன்னால், அதுபற்றி விசாரிக்க ஏதுவாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலையீடு இல்லாமல் இருந்தால் ஏன் இவ்வளவு காலதாமதம்—மூன்று மாதம் ஆகிறது? நவம்பர் மாதம் 25-ம் தேதி

கொடுத்த வழக்கில் டிசம்பர் மாதத்தில்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று செய்தித்தாள்களில் செய்தி வந்திருக்கிறது. பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிபோர்ட்டில் கொடுக்கப்பட்டவர்களை இப்போதுதான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது. மூன்று மாதம் நடவடிக்கை எடுக்கவில்லையென்பதைக் குறித்து நீங்கள் ஒரு என்கொயரி கமிஷனையாவது வையுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெரிய கொள்ளை வழக்கில் திடீரென்று போலீசார் அவசரப்பட்டு, ஈடுபடுகின்ற காரணத்தால் சில சமயங்களில் அந்த வழக்கேகூட முடிவில் தோல்வியடையக் கூடியதாக அமைந்துவிடுகிறது. இன்வெஸ்டிகேஷன் என்கிற புலன் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது. 'அவர்கள் தலையிட்டார்கள், இவர்கள் தலையிட்டார்கள்' என்று சொல்வது சரியாகப் பொருந்தாது. யார் யார் தலையிட்டார்கள் என்று சொன்னால், அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்து விசாரிப்பதற்கு உதவியாக, ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அந்த ஊருக்குப் போனார்கள் என்று சொன்னார்கள். அது என்னுடைய தொகுதி. என்னுடைய தொகுதியில் போலீசார் ஓரேயடியாக இப்படி நடந்து கொண்டார்களே என்று கவலைப்படுவது நல்லது அல்ல. நம்முடைய லோகல் போலீசாரைப் போட்டால் ஏதாவது குற்றம் சொல்வார்கள் என்று கருதி, இதற்கென்று தனியாக சி.ஐ.டி. பிரிவிலிருந்து டி.எஸ்.பி. ஒருவரால் விசாரிக்கப்படுகிறது. வழக்காவது பதிவு செய்யப்பட்டதா, இல்லையா என்பதுபற்றி அவருடைய கட்சிக்காரர் ஒருவர் வெளியே பேசினார்களாம். அது குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், வழக்குப் பதிவு செய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால தாமதம் என்று சொன்னார்கள். அங்கத்தினர்கள் போன்றவர்கள் இதில் ஏதாவது செய்யலாம் என்று கருதிக் கொண்டிருந்தால் அது முடியாது. சம்பந்தப்பட்டவர் "போலீசார் இதுவரை உண்மையாக அரும்பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் நன்கு உணருகிறேன்" என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர் சுதந்திரா கட்சி, அவர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர், காங்கிரஸ் கட்சி தியாகி என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அவர் சுதந்திரா கட்சி. போலீசார் நடவடிக்கை எடுத்ததைப் பற்றியும் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். "பொருள்களில் பெரும்பகுதியை போலீசார் கைப்பற்றியிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுவிட்டு, சட்ட அமைச்சர் அவர்களுக்கு—தங்களுக்கு—நன்றியுடையவனாக இருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இது குடும்பத் தகராறு இரண்டு குடும்பங்களுக்





கிடையே ஏற்பட்ட தகராறு. ஒருவருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை நீதிமன்றத்தால் தரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இதிலே பெரும்பகுதியான பொருள்களைப் போலீசார் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்த வழக்கில் போலீசாரைப் பாராட்டுவதற்குப் பதிலாக அம்மையார் அவர்கள்—சட்ட அமைச்சர்—போலீஸ் (சிரிப்பு) என்றெல்லாம் பேசுவது நல்லதல்ல. இதற்கும் கட்சிக்கும் ஒற்றுமைப்படுத்துவது நல்லது அல்ல. அப்படி மாசுபடுத்துவது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: திரு. கருமுத்து சிவலிங்க செட்டியார் 1962-லே சுதந்திரா கட்சியோடு உங்களுக்குக் கூட்டு இருந்தபோது சட்ட அமைச்சர் அவர்கள் தேர்தலுக்குப் பாடுபட்டவர். 1967-லே சுதந்திரா கட்சி . . . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1967-லே சுதந்திரா கட்சி எங்களோடு இருந்தது. அப்பொழுது அவர் எங்களுக்காகப் பாடுபட்டார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1971-லே உங்களை விட்டுப் பிரிந்து போனார் என்று . . . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நீங்கள் இப்படியெல்லாம் கேட்பீர்கள் என்பதற்காகத்தான் நான் அவருடைய கடிதத்தை வைத்திருக்கிறேன். குடும்ப விரோதத்தை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். கையாடல் செய்யப்பட்ட பொருள்கள் பெரும்பகுதி கிடைத்ததற்காக எங்கள் அரசைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்டது அவர் சொந்த மகன். சில விஷயங்களையும், தேர்தல் போன்றவற்றையும் அவர் சொல்லாமல் இருக்கும்போது நீங்கள் சொல்லி, எதையாவது, எப்படியாவது, மாற்றலாமா என்று கருதிக்கொண்டிருக்கிறீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: என்னிடத்தில் அவர் நேரில் சொன்னதைச் சொல்கிறேன். ஒருவேளை நீங்கள் அப்படி எழுதி வாங்கியிருக்கலாம். சைகான் வழக்கிலே. . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி நீங்கள் ஒரு வாதம் எழுப்புவீர்கள் என்பதால் சொல்கிறேன். அவரிடம் எழுதி வாங்கவில்லை. அவரே போஸ்டில் அனுப்பியிருக்கிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 'அப்படி எழுதி அனுப்புங்கள்' என்று சொல்லியாவது இருக்கலாம்.

அடுத்து, வாலாஜாபேட்டையில் அந்தப் பெண் உறுப்பினர் . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சிவலிங்கம் செட்டியார் வழக்கை விட்டுவிட்டு, வாலாஜாபேட்டைக்கு ஏன் போகிறார்கள்? இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா, இல்லையா?

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃபர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட்டில் கொடுத்த ஆளைப் பிடித்து வைக்காமல் டிலே பண்ணுவதால். . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஃபர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட் கொடுத்த எத்தனை நாட்களுக்குப் பின்னால் அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது?

திருமதி த. ந. அனந்தநாயகி: பல மாதங்களுக்குப் பின்..

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளேயே, மகள், அதுவும் சொந்த மகள், 'லோ-கால்டு' மருமகன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃபர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிபோர்ட்டில் 16 பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 14 பேர்களை ஏன் விட்டுவிட்டீர்கள்? அடிப்பவர்கள் இவர்கள் என்று சொன்னால் உடனே பிடிக்க வேண்டியது தான் போலீஸ் இலாகாவின் வேலை. ஒருவேளை சட்ட அமைச்சர் சொந்தக்காரர்களா சைகான் சம்பந்தப்பட்டவர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்படிப்பட்ட அவதூறைச் சொல்வது அம்மையார் அவர்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது. எனக்குச் சொந்தக்காரர் சைகானில் இல்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி: இப்பொழுது இருக்கிற ராமச்சந்திரன் அவர்கள். . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ராமச்சந்திரன் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள், மிக்க நன்றி. ஆனால் அவர் நீங்கள் சொன்னதற்குப் பின்னாலே தான் சொந்தக்காரர் ஆகிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடாது. என்னிடம் சிவலிங்கம் அவர்களே நேரிலேயே சொல்லியிருக்கிறார்கள் . . .



திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொந்த உறவை உண்டாக்குகிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படி உறவு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மரபுதான் இருக்கிறது, எனவே அம்மையார் அவர்கள் வேண்டுமென்றே கற்பித்துச் சொல்வது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்கள் எந்தத் தீர்ப்பு அளித்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இதுவரையிலும் சொந்தம் இல்லை. அம்மையார் அவர்கள் மூலமாகச் சொந்தக்காரர் ஆகிவிட்டால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பயப்படவில்லை, எல்லா விதமான ஆதாரங்களும் இருக்கின்றன. கருமுத்து அவர்கள் இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், காவல் துறை இருக்கிறது, எவ்வளவு கோடி ரூபாய்கள் ஒதுக்கித் தருகிறோம், எனவே இதை விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கிடாசலம்: தலைவர் அவர்களே, இந்த விவாதம் போகிற போக்கைப் பார்த்தால் அந்தச் செட்டியார் பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறவர்போல் தெரிகிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது உண்மையல்ல. செட்டியார் அவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார், அம்மையார் அவர்கள் சொல்லியும் அதற்கும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எதற்கும் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொன்னவர் ஏன் எங்களை வாருங்கள் என்று சொல்லவேண்டும், அங்கே போனது, இங்கே போனது என்று காட்டுகிறார்? கொடுமுடி பஞ்சாயத்து யூனியன் தலைவர் மணிராஜ் என்பவர் கையிலே விலங்கு போட்டு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்ற செய்தியைப் பார்க்கிறோம். குற்றம் நிரூபிக்கப் பட்டிருந்தாலும் பரவாயில்லை, சந்தேகத்தின் பேரிலே கைதுசெய்துவிட்டு இப்படிப்பட்டவர்களை அவமானப்படுத்துவதற்குக் காவல் துறையைப் பயன் படுத்திக்கொண்டால் அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, மயிலாப்பூரிலே, சாந்தோம் பகுதியில் இரண்டு மணிநேரம் சோடா பாட்டில், கல் அத்தனையும் பறந்தன. கல்பனா வீட்டுமேலே எவ்வளவோ கற்கள் எறியப்பட்டன, சோடாபாட்டில்கள் வீசப்பட்டன, அவ்

வளவும் செய்தார்கள், இன் தி ஹார்ட் ஆப் தி சிடி, நகரத்திலே 6, 7 மணி வரையிலே இப்படி நடந்திருப்பது வருந்தத்தக்கது, எனவே என்ன நடந்தது என்பதை விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெண்ட் கன்ட்ரோல் ஆக்டின்கீழ் கேஸ் போடுகிறார்கள் வீட்டுக்காரர்கள். வழக்குப் போடுவதற்குத் தனியாகக் கோர்ட்டுகள் இருக்கின்றன, அப்படி போடாமல் போலீசுக்குச் சொல்லி குடியிருப்பவர்களைப் பயமுறுத்தி வருகிறார்கள். சாதாரணமாக போலீஸ் தலையீடு இருக்கக்கூடாது, சிவில் அடிப்படையிலே தீர்ப்பதற்கு வழியில்லாமல் இருந்தால் பார்க்கலாம். ஆனால் வீட்டுச் சொந்தக்காரர் பணக்காரராக இருந்தால் போலீசுக்குப் பணத்தைக் கொடுத்து கேஸ் போடச் சொல்வது என்றால் அது சரியாகாது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

ஆபீஸர்களை மாற்றுங்கள் என்று சொன்னார்கள். மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேலே போலீஸ் அதிகாரிகளை அங்கே வைக்கக்கூடாது .அப்படி வைத்தால் அங்குள்ளவர்களுக்கு நண்பராகிவிடுவார். ஸ்ரீவைகுண்டத்திலே டி. எஸ். பாண்டியன் என்ற அதிகாரி பதினைந்து ஆண்டுக்காலமாக இருக்கிறார். அவர் மேல் விஜிலன்ஸ் சம்பந்தமாக புகார் பெண்டிங் ஆகக் கூட இருக்கிறதாம், விஜிலன்ஸ் ரிப்போர்ட் கூட அதனால் அனுப்பமுடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஸ்ரீவைகுண்டத்திலே இருப்பதாகச் சொல்கிறார்கள், போலீஸ் அதிகாரியா ? வேறு அதிகாரியா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : போலீஸ் அதிகாரி. . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அப்படியொரு போலீஸ் அதிகாரி இல்லையே.

திருமதி த. ந. அனந்தநாயகி : போலீஸ் அதிகாரிதான், நிறையத் தகவல்கள் இருக்கின்றன, வேண்டுமானால் விசாரித்துப் பாருங்கள்.

திரு. நா. வீராசாமி : பதினைந்து ஆண்டுக்காலம் ஒரே இடத்தில் இருந்ததாகச் சொல்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தே ஐந்து ஆண்டுக் காலம் தானே ஆகிறது (சிரிப்பு) அப்படியானால். . .

திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்கள் இருந்தபோதும் அங்கே இருந்திருக்கிறார், நீங்கள் இருக்கிறபோதும் அங்கே தொடர்ந்து இருக்கிறார். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவரைப் பார்த்து 'பலே பாண்டியா' என்று சொல்லலாம் (சிரிப்பு).





திருமதி த. ந. அனந்தநாயகி : நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு சினிமா ஆவல் அதிகம், பலே பாண்டியா, சவாலுக்கு சவால் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் தடுப்பதற்கு குறைகளைக் களைவதற்காக நல்ல எண்ணத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் என்று எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சின்னசாமி : கொடுமுடி பஞ்சாயத்து யூனியன்பற்றிச் சொன்னார்கள், என்ன விவரம் என்று சொல்லமுடியுமா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : 21 ஆம் தேதி ஆகஸ்டு காலை 10 மணிக்கு கொடுமுடியில் உள்ள துணைத்தலைவர் போலீசாரால் கைவிலங்கு மாட்டி அழைத்துச் செல்லப்பட்டார். இது செய்தி. 25—8—1971.

திரு. மு. சின்னசாமி : கொடுமுடியில் தலைவராக இருப்பவர் சொந்தப்பன் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். ஏன் இப்படித் தவறான செய்தியைக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை

* திரு. தோப்பூர் திருவேங்கடம் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறை அகில இந்தியாவிலும் சிறந்த முறையிலே பணியாற்றுகிறது என்பதை அனைவரும் பாராட்டிப் பேசினார்கள். இந்த காவல் துறை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இலாகாவோடு சேர்ந்து நல்ல முறையிலே செயல்பட்டு வருவதை எங்களைப் போன்றவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ்நாட்டிலே உள்ள காவல் துறை இந்தியாவிலேயே பல வேறு இடங்களிலே பல்வேறு குற்றங்களைச் செய்தவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிற நிலைமையில் தமிழ் நாட்டில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் புலனாகும். தமிழ்நாட்டுக் காவல் படை சாதித்திருக்கிற சாதனைகளையெல்லாம் அறிக்கையிலே நாம் பார்க்கமுடிகிறது.

கடந்த ஆண்டிலே நடந்த குற்றங்களைக் குறைப்பதற்காக காவல்துறை மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகளைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். தமிழ்நாட்டிலே 1970 ஆம் ஆண்டிலே துப்பாக்கிச் சூடுகள் அதிகமாக இருந்தாலும், 1971 ஆம் ஆண்டிலே மூன்று நேரங்களிலேதான் துப்பாக்கிச் சூடுகள் பயன்படுத்தப்படவேண்டிய சூழ்நிலை வந்தது, எனவே குறைந்திருப்பதை நாம் பாராட்டவேண்டும். கண்ணீர்ப் புகை சென்ற ஆண்டு ஐந்து முறைகள் பிர

யோஜிக்கப்பட்டாலும் இந்த ஆண்டிலே மூன்று முறைகள்தான் பயன்படவேண்டிய நிலை வந்தது என்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

பல்வேறு துறைகளிலேயும் குற்றங்களைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்க புலனாய்வு செய்வதற்காக ஒரு துறை நிறுவி, எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்று நல்ல முறையிலே முயற்சிசெய்வதற்கும் குற்றங்கள் என்ன காரணங்களுக்காகச் செய்கிறார்கள், எந்த அடிப்படையிலே குற்றங்களைச் செய்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிவதற்காக ஒரு இலாகாவை நிறுவவேண்டுமென்று தமிழக அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குற்றங்கள் செய்வதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்து விடுகின்றன. குற்றம் செய்தவர்கள்மீது கடுமையாகத் தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் வெளியே வந்த பின்னாலேயும் குற்றங்களை மீண்டும் செய்ய முற்படுகிறார்கள். இப்படித் தொடர்ந்து குற்றங்களைச் செய்வதற்குக் காரணங்கள் என்ன என்று கண்டுபிடித்து அவற்றைக் குறைப்பதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். ‘நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வானின்றி அமையாது ஒழுக்கு’ என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். உலகத்திலே தண்ணீர் இல்லை என்றால் எதுவுமே நடக்காது, அதைப்போலவே மனித வாழ்க்கையிலே தண்ணீர் இல்லை என்றால் ஒழுக்கம் குன்றுகிறது என்று சொன்னார்கள். காரணம் என்னவென்றால் தண்ணீர் இல்லை என்றால் விவசாய விளைபொருள்கள் விளையாது, அதனால் நாட்டிலே வறுமை ஏற்படும், அதனால் ஒழுக்கம் குறையும், ஒழுக்கம் குறைந்தால் கொலை, கொள்ளை, களவு போன்ற குற்றங்கள் செய்யத் தூண்டும் என்று வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே இப்படிப் பட்டகுற்றங்களைச் செய்பவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்பதை நாம் நிச்சயமாகக் கண்டறிந்து, வருகின்ற ஆண்டுகளிலே மேலும் குற்றங்கள் செய்பவர்களைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, பீகார், ஒரிஸ்ஸா, கேரளா, உத்திரபிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலே 1,000 பேருக்கு ஒரு போலீஸ் வீதம் நியமித்திருக்கிறார்கள். ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களிலே 138-இலிருந்து 600 பேருக்கு ஒரு போலீஸ் வீதம் நியமிக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நம்முடைய மாநிலத்திலேயும் குறைந்தது 500 பேருக்கு ஒரு போலீஸ் வீதமாவது நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



இங்கே எனக்கு முன் பேசிய மாண்புமிகு அம்மையார் அவர்கள் நம்முடைய போலீஸ் இலாக்கா தவறாகச் சிலர்மீது வழக்குத் தொடர்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது கடந்த காங்கிரஸ் காலத்திலே இப்படித் தவறாக வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய மறைந்த மாவீரர், வேளாண்மைத் துறை அமைச்சராகயிருந்த ஏ. கோவிந்தசாமி அவர்கள்மீது கடலூரில் சாதாரண பொய் வழக்கை, கடையிலே புகுந்து கொள்ளை அடித்தார் என்று கடந்த காலத்தில் காங்கிரஸ் காலத்தில் வழக்கு போடப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட பொய் வழக்குகளை நம்முடைய அரசு நிச்சயமாகப் போடவில்லை என்பதை இந்த நேரத்தில் மிகத் துணிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஆப்காரி சட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றியிருப்பதாகக் கூறப் பட்டிருப்பதை வரவேற்கிறேன். மேலும் கள்ளத்தனமாக மது, சாராயம் காய்ச்சுபவர்களுக்குக் கடுமையாகத் தண்டனை விதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் தொலைபேசிமூலம் தொடர்பு ஏற்படுவதற்கு வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். காவல் நிலையங்களில், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பலநேரங்களிலே போலீஸ்காரர்கள் போதிய அளவு இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அதிகப் போலீஸ்காரர்களை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் நியமிக்க ஆவன செய்ய வேண்டும்.

காவல் நிலையங்களில் வசதிக்காக ஜீப் ஒன்று இருக்க வேண்டுமென்ற யோசனையை நான் வரவேற்கிறேன்.

இராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப்போலவே போலீசாரின் குடும்பங்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிகப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ இலாக்காவை மேலும் விரிவுபடுத்த வேண்டும். எல்லாக் கிராமங்களிலேயும் உள்ள கிராம மக்களுக்கெல்லாம் உடனடியாகப் போலீஸ் இலாக்கா பணியாற்றும் விதத்திலே அந்த இலாக்காவை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அவுட் போஸ்ட் என்ற புறக் காவல் நிலையங்களை மேலும் பல கிராமங்களில் கேட்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஊராட்சி ஒன்றிய மன்றம் இருக்கின்ற அணைக்கட்டு என்ற ஊரில் புறக்காவல் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அதையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவலர் நல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அப்படி ஏற்படுத்தியிருக்கின்ற காவலர் நல நிதியை மேலும் பெருக்க வேண்டும். மேலும் அதன்மூலம் காவலர்களுக்கு நல்ல பல நிலைமைகளை உருவாக்க அந்த நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே காவலர்கள் சிறுவர் மன்றங்களை நடத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு பணிகளை ஆற்றிவரும் காவலர்களை ஊக்குவிக்கும் விதத்தில் நல்ல பல திட்டங்களை அரசு உருவாக்கித்தரவேண்டும்.

இளங்குற்றவாளிகளின் நிலைமைகள் எப்படியிருக்கிறது என்றால் மகாராஷ்டிரத்திலே 4,900 பேர்களும், மத்திய பிரதேசத்தில் 3,289 பேர்களும், தமிழ்நாட்டில் 2,477 பேர்களும் ஆகக் கடந்த ஆண்டிலே இருந்ததாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. அந்த அளவிற்கு நம் தமிழ்நாட்டில் இளங்குற்றவாளிகள் குறைந்திருக்கிறார்கள். அதை மேலும் குறைப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்க வேண்டும். இளங்குற்றவாளிகளுக்காக நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகள் நல்ல முறையிலே நடத்தப்படுகின்றன.

முன்பு, அமைச்சராக இருந்த நம்முடைய திரு. கே. வி. சுப்பையா அவர்கள் எங்கள் மாவட்டத்தில் நடத்தும் இளம் குற்றவாளிகளுக்கான பள்ளியைப் பார்வையிட்டார்கள். அந்த நேரத்தில் நல்லமுறையில் அந்த மாணவர்கள் பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாகவும், ஒழுக்க மேம்பாடுகளைக் கொண்டவர்களாகவும் இருக்கக் கண்டோம். அந்த விதத்திலே இளங்குற்றவாளிகளாக இருப்பவர்கள் வருங்காலத்தில் சமுதாயத்தில் நல்ல முறையிலே பணியாற்றுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

காவல் துறையினர் மேலும் நல்ல முறையிலே பணியாற்ற அவர்களோடு பொதுமக்களும் தொடர்புகொண்டு அவர்களுக்கு ஒத்துழைப்பதன்மூலம் காவலர்கள் மேலும் சிறந்த முறையிலேயும் பணியாற்ற, குறிப்பாக இந்தியாவிலேயே சிறந்த முறையிலே பணியாற்ற மேலும் உற்சாகத்தை அளித்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், தவறுகள் செய்பவர்களை உடனடியாகக் கண்டுபிடிக்கவும்





காவல்துறை அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாமும் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறி நான் இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

* திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அவைமுன் உள்ள போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாலரைக் கோடி தமிழ்ப்பெருங்குடி மக்களின் தனிக்காவலாக இருக்கும் டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்களே இந்தக் காவல்துறைக்கும் பொறுப்பேற்று இந்தக் காவல்துறைக்கு ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தியிருப்பதைக் காவல் துறையினர் பெருமையாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. தமிழகத்தில் நலம் காப்பவராகவும், தமிழினத்தின் நலன் காப்பவராகவும், அரசியல் அறம் காப்பவராகவும் விளங்குகின்ற கலைஞர் அவர்கள் காவல துறையின்மூலம் தமிழகத்தில் அமைதியையும், சட்டத்தையும் நிலைநாட்டி, இந்தியத் துணைக்கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குச் சிறப்பான தன்மையில் இங்கே நிலைநாட்டி வருவதை நாம் ஒவ்வொருவரும் பெருமையாகச் சொல்லிக்கொள்ள முடியும். மாற்றுக் கட்சிக்காரர்கள் யாரேனும் இதை மறுப்பார்களேயானால் அவர்கள் தங்களுடைய நெஞ்சாற, மனமாரச் சொல்கிறார்கள் என்றோ, மனச்சான்றுக்கு உட்பட்டுச் சொல்கிறார்கள் என்றோ உண்மையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

நமது ஆட்சியில் சிலபல நேரங்களில் தவிர்க்க இயலாத சூழ்நிலையில் சிலபல நிகழ்ச்சிகள் நடந்திருந்தால் அவைகளையும் நமது வள்ளுவப் பெருந்தகையார் எடுத்துக் கூறியதைப்போல் 'கடிதோச்சி மெல்ல எறிதல்' என்ற அந்த வகையில் கலைஞர் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள் என்பதைக் காவல் துறையைப் பொறுத்தவரையில் மிக நன்றாக நாட்டு மக்கள் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

காவல் துறையினர் நிலைமைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்யத் தனி ஆணைக்குழு ஏற்பட்டது கலைஞர் ஆட்சியில்தான் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள முடியும். இந்த ஆணைக்குழு செய்த 133 பரிவுரைகளில் இதுவரையில் 23 பரிவுரைகளை அரசு செயல்படுத்தியுள்ளது. ஏனைய பரிவுரைகள்மீது விரைவான முடிவுக்கு வருவதற்கு ஏதுவாக ஓர் உயர் அதிகாரக் குழு அமைக்கப்பட்டிருப்பது காவல் துறையினருக்கு நமது ஆட்சியில் ஏற்பட்ட நன்மையாகும்.

[திரு. என். இட்டப்பா] [1972 மார்ச் 15

டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபொழுது ஒரு நாடகத்தை, 'உதய சூரியன்' என்ற பெயரிலே எழுதி நாட்டு மக்கள் மத்தியிலே நல்லதொரு பிரச்சார நாடகமாக நடத்தினார்கள், தானே அதிலே பங்கேற்று நடித்தும் காட்டினார்கள். அதிலே ஒரு காட்சியில் அந்தக் காலத்திய ஆட்சியில் போலீஸ் துறையினருக்கு ஏற்படுத்தியிருந்த அந்தக் கொடுமைகளை, அவர்கள் அனுபவித்த கொடுமையான துன்பங்களை சுட்டிக்காட்டியிருந்தார்கள். அப்படிப்பட்ட கொடுமைகளைச் சுட்டிக்காட்டிய ஒரே காரணத்தால் அந்த உதய சூரியன் நாடகத்தை அன்றைய காங்கிரஸ் ஆட்சியில் தடை செய்தார்கள். காவல் துறையினரின் கஷ்ட நஷ்டங்களை நேரடியாக அறிந்திருப்பதால்தான் நமது கலைஞர் அவர்கள் அவர்களின் குறைகளைப் போக்குவதற்கு படிப்படியாக, ஒவ்வொன்றாக நல்ல காரியங்களைச் செய்து வருவதை இன்றைக்கு நாம் காண்கிறோம்.

இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைக்கேற்ப காவல் துறை அலுவலங்களில் பணிபுரியும் கணக்காயர், மேலாளர் ஆகியோருக்கு ஒரே சம்பள விகிதம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு காவல்துறையில் பதிவு பெறாத பணியாளர்கள் நிலை மேம்பட காவல் நிதி உருவாக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினருக்கு இதுவரை 60 சதவிகிதம் வீடுகள், குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன என்றும் அது 80 சதவிகிதம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட இருக்கிறது என்ற நிலையைக் காண்கிறபோது காவல்துறை மீது நமது அரசு எந்த அளவுக்கு நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

ஆயுதம் தாங்கிய ஸ்பெஷல் போலீஸ் என்றும், மலபார் ஸ்பெஷல் போலீஸ் என்றும் வழங்கி வந்த பெயர்களை மாற்றி தமிழ்நாடு சிறப்புக் காவல் படை என்று பெயரிட்டதைத் தமிழ் நெஞ்சங்கள் நிச்சயமாகப் பாராட்டுகின்றன. நம்முடைய காவல்படை தமிழகத்தில் மட்டுமல்லாது நேபா போன்ற எல்லைப்புறப் பகுதிகளிலும் காவல் பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருப்பது காவல் துறையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. தமிழகப் போலீசார் துப்புத் துலக்குவதில் இந்தியாவிலேயே சிறந்தவர்கள் எனப் பெயர் பெற்றவர்கள்; உலகப் புகழ் பெற்ற ஸ்காட்லண்டு யார்டு போலீசாருக்கு இணையான புகழைப் பெற்றவர்கள். இவர்கள் சிக்கலான பணிகளில் துப்புத் துலக்கி வருவதை நடைமுறையில் காண்கிறோம். கள்ள நோட்டுக்களைக் கண்டுபிடித்தல், சாமி சிலைகளைத் திருடுபவர்களைச் சிக்க வைத்தல், வட நாட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர் தமிழகத்தில் நுழைந்தபோது அவர்களுடைய முகமூடியைக் கிழித்து அவர்களைக் கண்டுபிடிக்கிற துணிவும் திறமையும் பெற்றிருப்பதைப் பாராட்டுகிறேன். குறிப்பாக, சாமி சிலைகளைத் திருடுகின்றவர்களைக்



1972 மார்ச் 15] [திரு. என். இட்டப்பா]

கண்டு பிடிப்பதற்குத் தனியாக ஒரு துறையே ஏற்படுத்தி அந்தத் துறை மிகச் சிறப்பாகத் தன்னுடைய காரியங்களை ஆற்றி வருவதை திராவிட முன்னேற்றக் கழக அரசு நாத்திக அரசு என்று கூறி வருகின்ற ஆத்திக சிரோன்மணிகளும் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

இந்த நேரத்தில் மிக முக்கியமான ஒன்றைப் பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, முதல்வர் அவர்களுக்கு பணிவன்பான வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டில் இந்தத் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் எதிர்க் கட்சிகளின் கூட்டங்களுக்குப் போலீஸ் துறையின் மூலம் அனுப்பப்படுகின்ற சுருக்கெழுத்தாளர்களைத் திரும்பப் பெறவேண்டுமென்ற முறையில் மாற்றியமைத்தார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அத்தகைய முறை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் சுருக்கெழுத்தாளர்கள் போலீஸ் துறையின் மூலம் அனுப்பப்பட்டு வந்தார்கள். அண்ணா அவர்கள் ஜனநாயகத் தன்மையை மதித்து அந்தப் பண்பை வளர்க்கும் அடிப்படையில் அந்தத் துறையை அதனுடைய பணியிலிருந்து விலக்கி வைத்தார்கள். இன்றையதினம் தமிழக மேடைகளில் நாம் பார்க்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைப் பற்றி மட்டுமல்ல, தொண்டர்களைப் பற்றி மட்டுமல்ல; பொதுவாகவே பொதுவாழ்வில் ஈடுபடக்கூடிய அத்தனைப் பேரைப் பற்றியும் தனிப்பட்ட முறையிலும், தரங்கெட்ட வகையிலும் தமிழகத்தில் மேடைகளை இழிவாக்கும் வகையில் பேசுகின்ற நிலை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்வது—மாற்றுக் கட்சியினருக்கு மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் பேசக்கூடிய பேச்சுக்களுக்கும் சேர்த்து அத்தகைய முறையை, பேரறிஞர் அண்ணா அவர்கள் விலக்கி வைத்த முறையை, சுருக்கெழுத்தாளர்களை அனுப்பும் முறையைக்கொண்டு வர வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்குச் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்கு அனுப்பாமல் இருக்கலாம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்புகிறார்கள். நாங்கள் பேசுகின்ற கூட்டங்களுக்கெல்லாம் சுருக்கெழுத்தாளர்கள் வருகிறார்கள். குறிப்புகளை முதலமைச்சருக்கு அனுப்புகிறார்கள். அது உங்கள் கட்சிக்கு இல்லையென்று நினைக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொல்லுவது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக நான் மாயூரத்தில் இருந்து வந்து கொண்டிருந்த போது காங்கிரஸ் கூட்டத்தில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார் ஓர் ஊரில். அந்தக் கூட்டத்தில் பேசக் கூடியவர் குறிப்பாக என்னைப் பற்றிச் சொல்லுகிறார். கடந்த மாதம் 25-ம் தேதியன்று காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் மாயூரம் வந்ததையொட்டிக் கட்டப்பட்டிருந்த காங்கிரஸ் கொடிகளைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய நான் பிடுங்கிக் கொண்டு போய்விட்டதாக மேடையில் பேசிக் கொண்டிருந்ததை என்னுடைய காதால் கேட்டேன்.

இத்தகைய பேச்சுக்கள் மட்டுமல்ல; அண்மையில் நான் உடல்நலக் குறைவு காரணமாக சென்னை மத்திய மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றேன். இன்னும் உடல்நலக் குறைவுதான். அப்போது அதிகமாக இருந்தது. நான் உடல்நலக் குறைவுடன் மருத்துவ மனையில் தங்கியிருந்ததைப் பற்றிய ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு, அந்தக் கட்சிப் பத்திரிகையின் செய்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு மேடையிலே பேசினார்களாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் மாண்புமிகு சவுந்தரபாண்டியன் அவர்கள் அந்த மேடையிலே என்னைப் பற்றி பேசியவர்கள் என்ன பேசினார்கள் என்று என்னிடம் சொன்னார்கள் 'ஆஸ்பத்திரியை ஒரு லாட்ஜாக வைத்துக்கொண்டு பத்து மணிக்கு வெளியே போய்விட்டு திரும்பி, மறுபடியும் மாலை நான்கு மணிக்கு தினம் வெளியே சென்று திரும்பி வருவதாக காங்கிரஸ் கட்சி மேடையில் பேசியதாகச் சொன்னார்கள்'.

என்னைப்பற்றி மட்டுமல்ல; மிகப் பெரியவர்களைப் பற்றி எல்லாம், உயர்ந்தவர்களைப் பற்றியெல்லாம் தமிழக மேடையில் மிகத் தரக் குறைவாகப் பேசி வருவதைக் காண்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல் கண்காணிக்கிற நிலை இருந்தால் எதிர்க்கட்சியின் கூட்டங்களுக்கு மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பினால் திராவிட முன்னேற்றக் கழக மேடையில் எந்த அளவுக்குப் புனிதமான தன்மையில் பேச்சுக்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மவுண்ட் ரோடுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் 'அண்ணா சாலை' என்று பெயர் மாற்றப்பட்டு ஓராண்டுக்கு மேலாகிறது. அப்படி மாற்றப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் கூட இன்றையதினம் வரையில் —கவனக் குறைவாலோ என்னவோ தெரியவில்லை— 'மவுண்ட் ரோடு போலீஸ்





ஸ்டேஷன்' என்ற போர்டுதான் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதை மாற்றி 'அண்ணா சாலை காவல் நிலையம்' என்று ஆக்கித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரம் தொகுதியைப் பொறுத்தவரை மணல்மேடு என்ற ஊரிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் இப்போது இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டவில்லை; அந்தப் பகுதி காடாம்பப் பகுதியாக இருப்பதால், கொள்ளிடக் கரை ஓரத்தில் அமைந்திருப்பதால் இன்னும் திறமை வாய்ந்த சப்-இன்ஸ்பெக்டரை அங்கு நியமிக்க வேண்டுமென்று தாழ்மையான வேண்டுகோளாக விடுத்து இந்த மானியக் கோரிக்கையை மனதார வரவேற்று உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon'ble Speaker, Sir, in support of the cut motion moved on behalf of my Party, I wish to say something.

At the very outset, I would like to impress upon hon. Members belonging to all parties including our Party Members that so far as the Police Demand is concerned, it is very, very important that we do not convert the whole thing into a political issue. The most important point is that for whatever mistakes that are committed by the Police personnel including a Sub-Inspector in a police station—the entire responsibility for that must go to the Ministry. There is no use in our trying to criticise policemen and the primary responsibility must be borne by the Government which decides policies and which gives instructions to the Police to do this thing or that thing.

In my opinion, this issue has agitated the public for the past two or three months or even six months. For instance, take the Simpson dispute. We have mentioned it several times in this House about it and the labour unrest and the problems which snow-balled into the present situation. In this connection, I would once again impress upon the Hon. Chief Minister that one of the main reasons for this particular pathetic situation created due to labour unrest in the Simpson Group of Companies was the failure of law and order in the earlier stages. We were unable to control the bad elements in the earlier stages. That is my main charge

[Dr. H. V. Hande] 

against the Government. At that time certain persons were openly indulging in violence. Also, when Thiru Gurumurthy was the President of the Simpson Workers' Union, it might have been possible for the Government to control the whole thing.

Why was it not done at that stage? Probably the ruling party did not want that person to come out again; perhaps they wanted to egg him out of trade union activities. I would request the Hon. Chief Minister to answer that point during his reply.

Another thing I want to mention. We have mentioned it several times here. During the war period, we resolved by something akin to a resolution, that the workers should go to work and trade union leaders and some of us, including the Minister of Labour appealed to the workers and the workers were convinced that they should go to work. But what exactly happened on 16th December. That is most important. At that time also the police took a partisan attitude. Those who were going to work inside were completely searched. But a group of persons, standing right in front of the gate, holding soda bottles, etc. They were not touched at all. Why did the police not take an impartial attitude? That is the important point. That is the second thing, I want to ask.

Another point is there. When the trade union leaders were discussing with the Commissioner of Police, about the law and order situation, right in front of the Commissioner, the same group about 400 to 500 strong marched in procession. How was it allowed opposite to the Commissioner's office? Why did not the Commissioner take action immediately? That is the third question I want to ask. I am driving home the point that the police have taken a partisan attitude. It is upto Government to show clearly they have not taken any partisan attitude.

We have been witnessing a peculiar phenomenon during the last six months in this State. I mean the question of cycle chains, which is being very freely used, something as a cover. I have told this to Mr. Khadilkar also. I have received information that it is being used in Coimbatore also. I am not saying this to score a debating point or two. I am primarily interested in proper maintenance of law and order in the State.



 [Dr. H. V. Hande]

If one or two small incidents like this were to happen, it will create an impression that law and order situation is worsening in the State. If such an incident were allowed to happen by the police, they are doing disservice to the country and to Government. The eye of the whole country is on this State and if this unnecessary propaganda of law and order situation worsening in the State were to gain ground, it will have serious repercussions and that will be taken as an excuse for interference.

That is why I say with that broad objective and purpose, to the Chief Minister, with all emphasis at my command, that there should not be such political exploitation. If a small breakdown of law and order in the labour front is allowed to happen, it will give rise to a chain reaction and then there will be retaliation by other labourers and the whole labour field will be disturbed and then there will be only discontent in the State and the entire police force will not be able to control the law and order situation. Such a situation should not be allowed to improve.

Because of lack of time I am not able to explain the whole thing fully. I request the Hon. Chief Minister to give full consideration to what we, members, say. Of course the Hon. Chief Minister is fed with information by the Police Department. He can put any question to Home Secretary or I.G. of Police and they in turn refer it to their subordinates and ultimately what the Sub-Inspector writes in the Police Station reaches the Hon. Chief Minister, after passing the hands of the superiors. That is the channel of communication for the Hon. Chief Minister. But our channel of communication is different. We say what we hear from public. So let the Hon. Chief Minister consider our point of view also, so that he may weigh both points of view and come to just conclusion.

Let me say one thing about Simpson and Company. The workers went on a hunger-strike. Of course, I did not approve of hunger-strike at Mount Road and I supported that which happened before my party-office, since I thought that hunger-strike at Mount Road, would create a law and order problem. But what I want to say to the Chief Minister is why should the situation be allowed to develop in such a tense manner. The police unleashed a spate of violence. The lathi-charge was excessive. Some persons

about 20 persons were chased as far as Ellis Road. Whoever was the officer in charge of this, I would like the Chief Minister to enquire whether such violence was necessary. That was the talk of the whole city for one week, the violence of the police. I hope and trust that such things will not be repeated.

Of course, the Hon. Chief Minister will say whether such things did not happen in 1956 in Ramnad. Let us for argument's sake agree that certain police excesses took place in Ramanathapuram at that time when Mr. Muthuramalinga Thevar was there. What was the result? Five persons were brutally shot. What was the reaction? What effect it had on Mr. Kamaraj? He lost one or two districts. So what I want to say to the Hon. Chief Minister is these things will cost him 'political seats'. That is very important. One small incident allowed by Police will have chain reaction and have political consequences later. So, the Hon. Chief Minister should verify whether the information fed to him by the Police Department is sound or not. Let him also consider what we say.

I want to mention one aspect of Mr. Kulandai Ramalingam's affair. Now there is a case and the matter is sub-judice. But when Justice Ramaprasada Rao was enquiring the matter in the court, the witnesses on Ramalingam's side and even his lawyer wanted protection, since they were intimidated. They complained to the judge. Even the lawyer wanted protection. It is all there on paper. Judge Ramaprasada Rao gave order to the police to give protection. What I want to point out to the Chief Minister is this. Persons who want to come as witnesses against the Chief Minister in cases are being intimidated. The lawyer is being intimidated. This practice is not good for the Government. I want the Hon. Chief Minister to consider this aspect.

I want to say something about fire-arms and their use. Whenever there is a crisis, fire-arms have to be used according to the exigencies of the situation. Whoever is Chief Minister, whatever Government is there, no one could say that he would not use fire-arms at all. It will be impossible. What is important is, political





capital should not be made. Even when the DMK was in opposition, posters were there saying.

"அத்தான் ஊதிய உயர்வு கேட்டான், குண்டடிபட்டுச் செத்தான்"

That was the practice then. Even in my constituency, during the recent elections, the posters appeared. Of course I did not have any connection at all. I have seen this Government for four or five years and I wondered why these posters were there in my constituency. What I say is, let all the high leaders meet together and arrive at some sort of truce and have a moratorium on these issues. Otherwise it will give rise to a major political crisis. I am talking in a very objective manner so that persons may not exploit the situation.

Then, with regard to another aspect of the matter I want a clarification from the Hon. Chief Minister. There was an explosive under a bridge in Tiruchirappalli-Madurai road and then head-lines came in Ruling Party papers, 8-column news, saying that Chief Minister's life was in danger. The Chief Minister himself made a heroic statement that whatever happend, he would himself look after it. That has come in the official organ of the Government, and it is supposed to be the Party's paper. Then we were told that a Committee was appointed to find out what exactly was it and then I was also told an expert from the Army came to examine it. What happened afterwards, we do not know.

I would very much like the Hon. Chief Minister to lay on the table of the House a copy of the report of the Expert from Military. Let the same official party papers publish a 8-column news that the explosive was such and such so that the people outside might have confidence. Because, such things will again boomerang on the Government and it is not good. I therefore want the Chief Minister to lay a copy of the report about this explosive, on the table of the House. (Interruption) It was in Tiruchirappalli-Madurai road, under a bridge. It did not explode. But the matter was given much publicity in 'Murasoli', with banner headlines, saying 'Somebody tried to take away the life of the Chief Minister'. We all support any action taken against such things and such things should not be made political capital. I would like to know what is the report about the explosive, so that we may all know about it and the House may be taken into confidence.

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 15

Then, Sir, another important point I would like to say is with regard to the manner in which Police Stations look after prisoners and how police officers treat persons going to Police Stations. We have been hearing of such things for the last several years. It was there during the Congress regime and it is there now in the D.M.K. regime.

But death in police custody is a constant complaint we have been making. I have raised this matter a number of times. Death in police custody cannot be tolerated by anybody. I can give many instances.

In my own constituency, in Elephant Gate a case took place some years ago. Six months ago when I had been to Tirunelveli, in Sankarankoil, there was a death in police custody. A Harijan died and a huge crowd collected before the police station to register their protest, but when the crowd came and it became uncontrollable, police resorted to tear gas, lathi charge and opening of fire, I do not know exactly, I do not remember now. Whatever it is, the result was that one or two persons were seriously injured.

My question is why should such deaths in police custody take place? We know of the usual police methods. They get a medical certificate to say that death was due to natural causes. I have got many instances where people beat prisoners in police stations. I have got a photograph here of a person. I have made open written complaints to the Police, but nothing happened. No action seems to have been taken.

Here is an incident. It happened on 5th September, at 5-30, in Vyasarpadi P-3 Police Station. One S. Victor was the affected person. And then his brother went there to enquire and he was beaten and asked why he came there and what business he had there. The Chief Minister who had been in the opposition knows and every one knows about these things. I do not say this is something new and it has come about just now. It is a long legacy. But I would be much grateful to the Chief Minister if he does something about it. Because, it brings discredit to the Government unnecessarily.



1972 மார்ச் 15] [Dr. H. V. Hande]

We all know the methods of Policemen. In fact my father was a Police Doctor and actually I was born in a Police Hospital. Police people will never tolerate anybody talking to them on equal terms; they would expect anybody going to them to bow down their heads and all sorts of such things. Therefore, when a brother of the affected person goes and enquires, the Police Officer asks, "Why do you come here? What business have you' and all sort of things. This might have been all right 20, 30 years ago when the Britishers were ruling. But now we have a People's Government and every man has his Fundamental Rights.

Beating in police lock-up should be put an end to and I would very much like the Chief Minister to do something about it. When the person concerned in the lock-up is a defiant person, there is too much of beating and naturally that leads to difficult situations. In my own constituency, one Francis, a Member of the Congress who was running the Kamaraj Thesiya Sangam was beaten up and there was a fracture also. I got all the particulars and complained to the police department. But nothing happened.

Now prohibition has been removed. But then illicit liquor is still distilled. I will give one instance. In spite of lifting of prohibition, in premises 146 and 147, De Mellos Road, Madras-12, there is illicit liquor distillation going on. It is the constituency of the Harijan Welfare Minister in Perambur. They are even afraid of giving their names while giving information. I got extracts from their statements and confidentially sent them to the Deputy Commissioner, Law and Order. Afterwards, I do not know what happened. We get no replies. We do not get replies and that is our fate. There are many bad things about the drink evil and I do not want to go into them now. But the one good thing out of lifting prohibition which our Chief Minister promised then was that he would wipe out distillation of illicit liquor. But it is still going on and I want the Chief Minister to give it his immediate consideration.

The most neglected section of the police department is the traffic police. In all our discussions, we completely forget them. There was a proposal to appoint an expert committee to go into the details of traffic. I am told that by 1980, it will be impossible for the traffic police to manage our City. What are we going to do? This

[Dr. H. V. Hande] 

is a policy matter, of course. The question I want the Hon. Chief Minister to reply to in his reply is this. What programme he has to see that something is done to solve the traffic problem. Of course, there is the satellite city and all that. In that respect my constituency is the worst hit, Sowcarpet. One-third of my constituency is in that area.

Madras City has to be considered separately and stream-lined and given a moden outlook, like Bombay and other Cities. Bombay is much better, I was there recently and it is much better in spite of much heavier traffic. Traffic problem should be taken up immediately. I will in this connection refer to an interesting incident that took place when our Chief Minister was the Public Works Minister. He was to give a lecture on 'Traffic Problems'. But on his way he met with an accident. We were talking about the irony of it for, on the day he was to give a lecture on 'Traffic Problems' he met with a road accident. Traffic accidents are a major issue and I would like the Government to give it proper thought and do something about it.

Then there are the stray cattle that have to be controlled. In Bombay I saw stray cattle being taken away.

Even after the Second Pay Commission, irrespective of seniority, same increments should have been given. But the Constables getting basic pay of Rs. 95 and Head Constables getting Rs. 110 increments range from 20 to 75 and some get only Rs. 7. This is a great anamoly. I request the Government to rectify the defects. There should be bonus for good service. Provident Fund Account is not maintained properly and they are not able to draw monies for urgent need. I would request the Government to examine these things. Something should be done to improve service conditions.

Also, anomalies arising out of the recommendations of the Second Pay Commission should be rectified.

Finally, I would request the Hon. Chief Minister not to consider my speech with political motive. He should see that something is done especially with regard to law and order. If we lose control over the law and order situation and allow the whole thing to be done by the Police Department, what would happen? The events which occurred in the Tank Factory at Avadi would happen. There



 [Dr. H. V. Hande]

one or two Trade Union leaders were beaten mercilessly and it had been stated that the Hon. Chief Minister had instructed the police to do that. I am quite sure that it is falsehood. I am not saying it. It was alleged that one police officer had stated it and he might have uttered falsehood. Such kind of allegation is made against the police personnel. Such a thing should be avoided. Otherwise, these things will recoil and boomerang on the Government. Such things will do disservice not only to the Police Department but also to the Government, and that aspect of the matter also must be gone into.

* THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Speaker, Sir, I would like to say a few words of appreciation about our police force. When we hear criticisms about them, one wonders what we ourselves would do if we were placed there to quell unruly mobs. We do not expect them to be angels with wings. They are ordinary people with khaki clothes and yet we expect a different code of behaviour from this force. It is a most difficult job to do. I feel that they have done the job really and truly well. Fortunately for me I do not have to go into the front-line or the firing line. My opinion, I would say, would be somewhat different from those already made. I feel that they have performed their duties really well under the most difficult circumstances. We realise that theirs is the most difficult job in the whole of the State.

Also they have arduous duties, untimely hours and so many discomforts to face but we expect them to face them without any complaint. When criticisms abound, we are ready to throw brickbats at them but they do not get any word of thanks or any bouquets. That is why I like to place on record our appreciation to the police force and state that they are doing difficult job to the best of their ability.

Then I may add one more word. In our State we do not have a police force for women. In our country and in our State we hold women in high esteem and they do not like to be manhandled by policemen. Then the only alternative is that we should have a women's police force. I would suggest strongly that we begin to organise the women's police force. In this connection, I would also suggest that when we recruit women, we should give due consideration to intelligence and integrity.

Thank you, Sir.

[1972 மார்ச் 15

* திரு. ஜி. ராஜாராம்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே இடம் பெறுவதற்கு முன்னாலே நாடுபோற்றுகின்ற நல் இதயம் படைத்தவர், வாழ்த்துகின்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்கள் நல்வாழ்வினை கருத்திலே கொண்டு, சிறப்பான வகையிலே ஒரு நிதிநிலை அறிக்கையினை நமக்குப் பெற்று அளித்திருக்கின்ற நம்முடைய மாநில முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு பெருமை மிகுந்த வரலாற்றைப் பெற்றிருக்கிற நம்முடைய காவல்துறை அந்தப் பெருமைக்கு மேலும் பொலிவு உள்ளதாக ஏற்படுத்திக்கொள்கிற வகையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலே இன்றையதினம் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது. காவல்துறை பல இடர்ப்பாடுகள் மிகுந்த சூழ்நிலைகளுக்கு இடையே சிறப்பான போற்றத் தக்கப் பணியினை ஆற்றி வருகின்றது என்பதையெல்லாம் இங்கே நமக்கு அளித்துள்ள அறிக்கையிலே தெளிவாக நம்முடைய முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தொல்லை தருகின்ற சூழ்நிலைகளில், பல்வேறு கிளர்ச்சிகளும், போராட்டங்களும் ஏற்பட்ட நேரத்தில் எல்லாம் கூட அவர்கள் தங்களுடைய பணிகளை மிகுந்த திறமையோடும், பொறுமையோடும், கடமை புணர்ந்து செம்மையாகச் செய்திருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய ஒன்றாகும். குற்றங்களை ஆய்வதிலும் தப்பு தவக்குவதிலும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் ஆப்காரி சட்டத்தை செயல்படுத்துவதிலும், சமூக விரோதச் சக்திகளைச் சட்டத்தின்முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதிலும் அவர்கள் தங்களுடைய பொறுப்புணர்ந்து செயலாற்றி இருப்பதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தங்களுடைய பணியினை அவர்கள் இத்தனை திறனுடன் செய்து இருந்தாலும் கூட இன்றையதினம் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் அவர்களைக் குறை கூறுவதில் தங்களுடைய நோத்தை விளக்கிய வேதனையை பார்க்க முடிந்தது. அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், இன்றையதினம் மாநில முதலமைச்சராகவும் இருக்கும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் இத்துறை இருப்பதால் அவர்கள்மீது இருக்கிற மனமாச்சரியத்தின் காரணமாக, காழ்ப்புணர்ச்சி காரணமாக, அரசியல் பகையுணர்வு காரணமாக, இந்தத் துறை மீதே அவர்கள் பாய்ந்தார்கள். காவல் துறையின் மீது தவறான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தார்கள். அரசியல் உணர்வின் காரணமாக இந்த மானியக் கோரிக்கையில் சில வெட்டுப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே திருமதி அனந்தநாயகி போன்றவர்கள், ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே அரசியல் வாதிகளின் தலையீடு இருக்கக்கூடாது என்று அவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள்.



1972 மார்ச் 15] [திரு. ஜி. ராஜாராம்]

அதை நான் வரவேற்கிறேன். அரசியல் வாதிகளுடைய தலையீடு போலீஸ் நிர்வாகத்தில் இருக்கக் கூடாது என்று சொல்லி அந்த அளவிலே பொதுவாக விவாதத்தை நடத்திக் கொண்டு போயிருப்பார்களானால் நான் பாராட்டியிருப்பேன். அதற்கு மாறாக அரசியல் வாதிகளின் தலையீடு, குறுக்கீடு கூடாது என்று சொல்லி விட்டு போலீஸ் நிர்வாகத்தில் ஆளுங்கட்சியைச் சேந்தவர்கள் மட்டும் குறுக்கிடுகிறார்கள் என்று, ஏதோ, இந்த ஆட்சியில் அந்த நிலை தோன்றி இருப்பது போல ஒரு நேர்மையற்ற விவாதத்தை நடத்திக் கொண்டு போனதைப் பார்க்க முடிந்தது. நான் கூறுவேன் எதிர்க்கட்சிக் காரர்களின் குற்றச்சாட்டுகளின் காரணமாகத் தான் இன்றையதினம் திறமையாகச் செயல்பட்டுக் கொண்டு வந்த காவல்துறையினர் கொஞ்சம் முடங்கிப் போயிருக்கிறார்கள். உண்மையிலே சோர்வு அடைந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் எதிர்க்கட்சிக் காரர்களின் அவசரமான குற்றச்சாட்டுக்கள் தான். அப்பட்டமான கற்பனை விமர்சனங்கள்தான். இன்றுகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் சிவலிங்கம் செட்டியார் அவர்களுடைய வழக்கைப்பற்றிச் சொன்னபோது கூட அமைச்சரவர்கள் ஆதார பூர்வமாக கடிதத்தைக் காட்டி அவருடைய குற்றச்சாட்டை மறுத்த போதிலும் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, அப்படிக் கடிதத்தை வரும்படி ஏற்பாடு செய்திருக்கலாம் என்றும் வேறு முறையில் நடந்திருக்கும் என்று பொறுப்பு அற்ற முறையிலே குற்றம் சாட்டினார்கள். சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தாலும் அரசியல் வர்ணம் கொடுக்கிறார்கள். ஆளுங்கட்சியின் மீது பொய்யான குற்றங்களைச் சுமத்துகிறார்கள். போலீஸ் ஆளுங் கட்சியின் கைப்பாவையாகிவிட்டது என்கிறார்கள். இப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிற காரணத்தினாலே தான் அந்த அச்சத்தினாலே தான் காவல்துறையினர் சட்டரீதியாகச் செயல்பட வேண்டிய நேரத்திலேயும் கூட சிலநேரங்களில் தலையிடுவதில்லை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் எல்லாக் கூட்டங்களுக்கும் அனுப்பப்படுவதாகக் குற்றம் சாட்டினார்கள். எங்கள் ஊரிலே ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே பேசிய நகர காங்கிரஸ் தலைவர், படித்தவர், பட்டம்பெற்றவர், சட்டத்துறையிலேயும் பட்டம் பெற்றவர், என்ன பேசினார் என்றால், சாதாரண ஆளை அடித்தாலும் 25 ரூபாய் அபராதம் போலீஸ்காரரை அடித்தாலும் 25 ரூபாய் அபராதம் சப்-இன்ஸ்பெக்டரை அடித்தாலும் 25 ரூபாய் தான், டி.எஸ.பி.-யையும் அடித்தாலும் அபராதம் 25 ரூபாய்தான். இன்னும் பெரிய அதிகாரியைக் குறிப்பிட்டும் இப்படித் தான் பேசினார், நான் நேருக்குநேர் இதை சட்ட மன்றத்திலே சொல்ல விரும்பவில்லை.. இவ்வளவையும் சொல்லி விட்டுச் சொன்னார், அவர்களை தைரியமாக அடித்து விட்டு வாருங்கள் பயப்படவேண்டாம் என்று சொன்னார்.

அதுமட்டுமல்ல. நம்முடைய முதலமைச்சரை ஏக வசனத்தில் விளித்து "உன்னைக் கொல்ல சதி நடப்பதாகக் கூறுகிறாயே, உன்னைக் கொல்ல 40 பேர் வேண்டுமா? நான் ஒருவன் போதும்—ஆஷ் துரையைக் கொன்ற வாஞ்சிநாதனைப் போல நான் கொன்றுவிட்டு ஜெயிலுக்குப் போகத் தயார்" என்று பேசினார். ஆம் முதலமைச்சரைப்பற்றி இவ்வளவு தரக்குறைவாகப் பேசினார்கள். இந்தப் பேச்சு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா என்று கேட்டேன், வரவில்லை. இந்தக் கூட்டத்திற்குச் சுருக்கெழுத்தாளர் போகவில்லை என்று சொன்னார்கள். அப்படியிருக்கும்போது எல்லாக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர் போவதாகச் சொல்கிறார்கள். காவல் துறையினருக்குக் கூட இந்தச் செய்தி வரவில்லை. ஏன் என்று கேட்டபோது அந்தக் கூட்டத்திற்கு சுருக்கெழுத்தாளர் போகவில்லை என்று டி.எஸ்.பி. சொன்னார். ஆனால் இங்கே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எல்லாக் கூட்டங்களுக்கும் போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் போகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியெல்லாம் மேடைகளிலே சித்தாமாகக் கூறப்பட்ட போதிலும் நாங்கள் ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்திருக்கிறோம். இதிலே நாங்கள் தலையிட்டிருந்தால் அரசியல் குறுக்கீடு இருந்திருந்தால் அங்கே என்ன நடந்திருக்கும்? சிந்திக்கவேண்டும்.

சமீபத்தில் கூட திண்டிவனம் நகர காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்—அவருடைய பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை, அவருடைய வீட்டில் சாராயம் கைப்பற்றப்பட்டது. நாங்கள் நினைத்திருந்தால்—அரசியல் தலையீடு இருந்தால்—உடனே போலீசுக்குச் சொல்லி, அவரை தெருவிலே இழுத்துவரச் செய்து, போலீஸ் ஸ்டேஷனிலே நாங்கள் உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்திருப்போம். ஆனால் அதையும் நாங்கள் பெருந்தன்மையோடு விட்டுவிட்டோம்.

இன்றைக்குச் சட்டம் கெட்டுவிட்டது; அமைதி கெட்டு விட்டது என்ற பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கிறார்கள். அது 1967-லிருந்தே பாடப்பட்ட பல்லவி. நானும் இந்தக் கோஷத்தை எழுப்பியதுண்டு. நன்றாகத் தெரியும். திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் தெரியும். 1967-க்குப் பின்னால் இருந்தே அந்த பல்லவியைத் திரும்ப திரும்ப பாடிவந்த பிறகும் 138 உறுப்பினர்களாக இருந்த தி. மு. க. இப்போது 184 உறுப்பினர்களை பெற்றிருக்கிறது என்றால் என்ன பொருள்? மக்கள் அந்தக் குற்றச்சாட்டை ஏற்கவில்லை.

சட்டம் கெட்டிருக்கிறது, அமைதி கெட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு சமூக விரோதிகளே காரணம். மாணவர்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் இந்த சமூக விரோதிகள். கல்லூரி விடுதிகளில் மாணவர்கள் கலவரம், தொழிலாளர்கள் மத்தியில் கலவரம். இது திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற சதியே தவிர வேறொன்றுமல்ல. கடைசியில் எல்லாவற்றையும்



ஆளும் கட்சியினரே செய்து விடுகிறார்கள் என்றும் பெயர் சூட்டிவிடுகிறார்கள். நான் சென்ற ஓராண்டு காலமாக பேசாமல் இருந்துவிட்டு இப்போதுதான் பேசுகிறேன் என்றாலும் இந்த மன்றத்தின் பெருமைக்கு ஏற்றதாக அமையாத சில விவகாரங்களை இங்கே எடுத்துச் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக வருந்துகிறேன்.

இன்றைக்கு ஒரு அழகான பெண் நிறைய தங்க நகைகளை அணிந்துகொண்டு தனியே சென்றாலும் கூட பத்திரமாகத் திரும்பி வரக்கூடிய அளவுக்கு பாதுகாப்பு இருக்கிறது. அந்த அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது, நிர்வாகச் சிறப்பாலே. ஆனால் ஒருசாராருக்கு மட்டும் பாதுகாப்பு இல்லை. அதைப் பார்க்கும்போது எங்களுக்கெல்லாம் சற்று மனவேதனையாகக்கூட இருக்கிறது. அப்படி பாதுகாப்பு அளிக்கப்படாதவர்கள் யார் என்றால் அவர்கள் தான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்களுக்கு பாதுகாப்பு இல்லாததால், மாற்றுக்கட்சிக்காரர்கள், அரசியல் விரோதம் காரணமாக எங்களைப்பற்றி எது வேண்டுமானாலும் பேசலாம்; எதை வேண்டுமானாலும் பத்திரிகைகளிலே எழுதலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்களைப்பற்றி பேசுவதையும் எழுதுவதையும் பற்றி இங்கே சொன்னால், அது இந்த மன்றத்திற்கே இழுக்காக இருக்கும்; மன்றத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் என்று நான் கருதுவதால் இங்கே அவைகளைப்பற்றி விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. என்றாலும் ஒரு பத்திரிகையிலே வெளி வந்த ஓரிரு செய்திகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அந்த பத்திரிகையின் பெயரை இங்கே குறிப்பிடுவது கூட இந்த மன்றத்திற்கு பெருமையாக இருக்காது என்பதால் அதன் பெயரைச் சொல்லவில்லை. அது ஒரு மஞ்சள் பத்திரிகை. காமராஜரின் போணியின் போர்வாள் என்ற பட்டயத்தோடு உலாவிவரும் பத்திரிகை. அந்த பத்திரிகையிலே என்னைப்பற்றி எடுத்துரைக்க இயலாத வார்த்தைகளையெல்லாம் சேர்த்து கற்பனை செய்தியினை எழுதியிருக்கிறார்கள். அதிலே சில மதிக்கத்தக்க பெரியவர்களைப் பற்றி எழுதி வருகிறார்கள். குறிப்பாக அமைச்சர்களைப் பற்றி மிகக் கேவலமாக எழுதி வருகிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பற்றி எழுதுகிறார்கள். என்னைப்போன்ற அப்பாவி சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு, அதற்கு பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், நிலைமை என்ன ஆகும் என்பதை ஒருகணம் எண்ணிப்பார்க்கும்படி மாற்றுக்கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எதற்கெடுத்தாலும் அரசியல் குறுக்கீடு, அரசியல் குறுக்கீடு என்று கூறுகிறீர்களே, அரசியல் குறுக்கீடு இருந்தால் இந்தப் பத்திரிகை ஒழுங்காக வெளிவருமா என்றும் கேட்க ஆசைப்படுகிறேன்.

சமீபத்தில் என்னைப்பற்றிய ஒரு கீழ்த்தரமான செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அந்தச் செய்தியில் நான் ஒரு எம்.எல்.ஏ., என் சகோதரர் ஒருவர் போலீஸ் துறையில் இருக்கிறார் என்பதைத் தவிர வேறு எதுவும் உண்மையல்ல. அதனை அப்படியே நோட்டீஸ் ஆக அச்சடித்து அச்சகப் பெயரைக் கூட குறிப்பிடாமல் எனது ஊரில் 5,000 பிரதிகள் வெளியிட்டிருக்கிறார்கள், அரசியல் பகைவர்கள், இது நான்காக்லிஸபிள் அபென்ஸ் என்பது எனக்குத் தெரியும். மான நஷ்ட ஈடு கேஸ் 500 ஐ.பி.சி. யில் போடுவது தான் வழியா? இப்படி வேண்டுமென்றே எங்களைப் போன்றவர்கள் மீது அவதூறான செய்திகளை வெளியிடுவதால், அது மக்கள் மத்தியிலே எங்கள்மீது ஒரு தப்பான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அப்படி ஏற்படக்கூடிய களங்கத்தைப் போக்குவது அவ்வளவு சுலபமானதல்ல. புராண கால கதையில் இராமாயணத்தில் சீதையைப்பற்றி சலவைத் தொழிலாளர்கள் தவறாக பேசுகிறார்கள். அதை அறிந்த சீதை, தீக் குளித்து தன் கற்பினை மெய்பித்துக்காட்டுகிறாள். ஆனால் நாங்கள் தீக் குளித்து எங்கள் களங்கத்தைப் போக்கிக்கொள்ளலாம் என்றாலும், தீக்குளிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் காலத்தில் தீக்குளித்தாலும் திரும்பி வரப்போவதில்லை.

**திரு. ஜி. ராஜாராம்:** பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது போல் தீக்குளித்தாலும் திரும்பி வரமுடியாது. இருந்தாலும் மாற்றுக் கட்சியினர் கூறுகின்ற மாசினைப் போக்க அதைக் கூட செய்யலாம் போலிருக்கிறது. நான் குறிப்பிடுகின்ற பத்திரிகையிலே, 'காமராஜர் எங்களுக்கு துணையாக இருக்கிறார், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் எங்கள் பக்கம் இருக்கிறார், இரண்டு மத்திய அமைச்சர்கள் இருக்கிறார்கள் அதனால் எங்களை ஒன்றும் செய்ய முடியாது' என்றுகூட எழுதுகிறார்கள். இதைப் பார்க்கும்போது இந்தத் தலைவர்களுக்கும் அந்தப் பத்ரிக்கைக்கும் தொடர்பு இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதனாலேதான் இங்கே பேசவும் வேண்டியிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் பத்திரிகை தர்மம் என்று ஒன்று உண்டல்லவா? தர்மத்தைப் பற்றிப் பேசுவதெங்கே—காட்டுமிராண்டித்தனமாகிய பிறகு? பத்திரிக்கை உலகை கேவலப்படுத்தும் முறை. இத்தகைய பத்திரிக்கைமீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று பத்திரிகை கவுன்சிலை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நெறியான இங்குள்ள எதிர்க்கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். மனிதப்பண்புகளை இழந்து நாகரீகமற்ற இப்படிப்பட்ட அரசியல் தேவைதானா? நான் பிறந்து வளர்ந்த கழகத்தை விட்டு துர்ப்பாக்கியமாக எதிர்முகாமில் இருந்தபோதும் இத்தகைய இழிவான பிரச்சார முறையை நான் ஏற்றுக் கொண்டது கிடையாது.



நான் கூட ஒரு பத்திரிகை நடத்த நேரிட்டது. அப்போது நான் காங்கிரசில் இருந்தேன். அந்தப் பத்திரிகையில் தி. மு. க. வில் உள்ள தனி நபர்களைப் பற்றி எழுதப்பட்டது. உடனே நான் அந்த ஆசிரியரைக் கூப்பிட்டு, எந்த தனி நபரையும் குறிப்பிட்டு எழுதக்கூடாது என்று சொன்னேன். என்னுடைய அந்தப் பண்புக்குக் காரணம் நான் பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டவன் என்பதுதான். தனிப்பட்ட ஒருவரைப் பற்றி உண்மையான குற்றச்சாட்டுகளைக் கூறினால் பரவாயில்லை. ஆனால் ஒரு நபரைக் குறிப்பிட்டு, உண்மையில்லாத அவதூறான செய்திகளை வெளியிடுவது பத்திரிகை தர்மம் ஆகாது, காட்டுமிராண்டித்தனமாகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நான் ஒரு கேள்வி போட அனுமதி வேண்டுகிறேன். இந்த தர்மம் ஆளும் கட்சிக்கு மட்டுமா, எதிர் கட்சிக்கு மட்டுமா அல்லது இரண்டு பேருக்கும் பொருந்துமா என்பதை நீங்கள் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லோருக்கும் பொருந்தும். ஆனால் உங்கள் பத்திரிகையில் வருகின்ற அவ்வளவு தரக்குறைவான வார்த்தைகள் எங்கள் பத்திரிகையில் வருவதில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அதுபற்றி பொதுமக்களுக்குத் தெரியும். இந்த மன்றத்திற்கும் தெரியும்.

**திரு. ஜி. ராஜாராம்:** காங்கிரஸ் கட்சியினர் பத்திரிகைகளில்தான் தனி நபரைக் குறிப்பிட்டு எழுதுகிறார்கள். ஆனால் எந்த தி. மு. க. ஏட்டிலும் தனி நபரைப்பற்றி அவதூறாகக் குறிப்பிடுவது கிடையாது. மாற்றாரை மதிக்கும் மனவளம் குறுகியதால் தான் காங்கிரசின் பலமும் குறுகிப்போனது. இன்று அந்த மனவளமே இல்லாமல் போனது எதிர்காலத்தில் இந்தக் கட்சியே இல்லாமல் போவதற்கு அறிகுறியோ என அஞ்சுகிறேன்.

DR. H. V. HANDE: I agree that it should be on both sides. If it is going to be a truce on both sides, I fully agree. I have quoted several things said about me by D.M.K. men and Hon. Chief Minister had asked me to go to Court, if I wanted. So let us not give the impression that it is only on one side.

**திரு. ஜி. ராஜாராம்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகச் சாமர்த்தியமாகப் பதில் சொல்கிறார்கள். அவருடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தி. மு. க. ஏட்டில் யாரையாவது குறிப்பிட்டு நான் சொல்வதைப்போல எழுதியிருந்தால், அதை இந்த மன்றத்தில் கொண்டுவந்து காட்ட முடியுமா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அதைப்பற்றி இந்த மன்றத்திலே சொல்லி யிருக்கிறேன். அதற்கெல்லாம் இங்கே ஆதாரம் காட்ட வேண்டுமென்பது முடி யாத காரியம். அப்படி உண்டா இல்லையா என்பதை பத்திரிகையை பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

I have mentioned it to Chief Minister. Thiru R. Ponnappa Nadar has mentioned it, I mentioned about how Mr. Kumaramangalam was attacked in the paper by D.M.K. men. Let us not bother about these things now. Let there be a truce on both sides.

திரு. ஜி. ராஜாராம்: உண்மையாகவே தவறுகள் நடந்திருந்தால் அதைச் சுட்டிக்காட்டலாம். பொய்யான செய்திகளை அரசியல் பகையால் இழிவான முறையில் வெளியிடக்கூடாது. வீண் புரளியைக் கிளப்பி விடக்கூடாது என் பதுதான் என்னுடைய கருத்து. அதையெல்லாம் சொல்லும்போது ஏதோ நாங்கள் எல்லாம் கற்புக்கரசர்களாக இருக்கிறோம் என்று காட்டிக் கொள்வதற் காகச் சொல்லவில்லை. தவறு செய்யும்போது ஆதாரத்தோடு சுட்டிக் காட்டலாம். ஆனால் அணு அளவும் ஆதாரமே இல்லாமல் இழிவான செய்தியினை என்மீது புனைந்திருப்பது எனக்கு மான நஷ்டத்தை உண்டாக்க மட்டுமல்ல அதனுடைய பின்னணியில் ஏதோ ஒரு சதித் திட்டம் புதைந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன். போலீஸ் அதிகாரிகள் அதனைக் கண்காணிக்க வேண்டும். எல்லாக் கட்சிகளும் அரசியல் பண்பாடு, நாகரிகத்தோடு நடந்துகொள்ள வேண்டும். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் போலீசார், சட்டவிரோதமானச் செயல்கள் எங்கு நடந்தாலும் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு இம்மாதிரியான நேரங்களில் எங்கள் மானம் மரியாதையை சட்ட ரீதியாகப் பாதுகாத்துக்கொள்ள தக்க வழிமுறையை எங்களுக்குத் தேடித் தரவேண்டும். போலீஸார் மக்களோடு நெருங்கிய உறவினை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அப்போதுதான் மக்களும் போலீஸா ரோடு ஒத்துழைப்பார்கள். அம்மாதிரியான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, குற்றங்களைக் கண்டுபிடித்து, துரித நடவடிக்கை எடுத்து, மேலும் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு எனக்கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் தொடர்பான விவாதத்தில் நானும் கலந்துகொண்டு ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றி முதற்கண் உரித் தாகட்டும்.



பொதுவாக இன்றையதினம் எதிர்க்கட்சிகளுக்கு அதுவும் எதிர்த்தே தீர வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு முதலாவதாக எடுத்த எடுப்பில் கிடைப்பது காவல் துறைதான. அரசாங்கத்தைக் குறை கூறவேண்டும், அமைச்சர்களின் தரத்தைக் குறைக்க வேண்டும் என்கிறபோது எடுத்த எடுப்பில் வெகு சுலப மாக காவல்துறையைத் தாக்கிவிடுவது, அவதூறுகளைச் சொல்வது இமாஜி னேடிவ் என்பார்களே அதுபோல கற்பனையாகவாவது சொல்லிவிடுவது மிக எளிதாக இருக்கிறது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவிலாண்டி என்று சொல்வார்களே—அப்படி இருப்பது இன்றைக்கு போலீஸ் துறைதான்.

பொதுவாக, என்னைப்பொறுத்தவரையில் சொல்லிக்கொள்வேன், போலீஸ் துறை நாட்டுக்கு இன்றியமையாத துறை. அந்தத் துறைதான் நாட்டில் ஒழுங்கும், அமைதியும் ஏற்படுவதற்கு உதவியாக இருக்கிறது. அது இன்றைய தினம் ஒரு கட்சியைச் சார்ந்தோ, ஒரு இனத்தைச் சார்ந்தோ, ஒரு கொள்கை உடையவர்களைச் சார்ந்தோ நடப்பது போன்ற எண்ணத்தை நாம் எவ்வள வுக்கெவ்வளவு உண்டாக்காமல் இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டுக்கும் நல்லது நமக்கும் நல்லது.

சாதாரணமாக மழை பெய்கிறது. மழை பெய்தால் எல்லா இடங்களும் தான் நன்மை அடைகின்றன. அப்படி மழைபோல எல்லோருக்கும் பொது வாக நலம் செய்கிற துறை காவல்துறை. நாட்டில் எல்லோரும் அமைதியாக, கவலையற்று வாழ்வதற்கு, பொதுவாக எல்லோருக்கும் உதவுகின்றவர்கள் அவர் கள் என்கிற எண்ணத்தை நாம் சமுதாயத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஐயங்கள் எழுந்துகொண்டே சென்றுல்—காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ் காரர்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டார்கள், இப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்குச் சாதமாக எதிர்க்கட்சிகளை ஒடுக்குகிறார்கள் என்கிற தவறான எண்ணங்களை உண்டாக்குவது நமக்கே வெட்கமானது. மனிதத் தன்மையில் உயர்ந்து சமுதாயம் உயர்ந்துவிட்டு இருக்கிறதே, நாகரீகம் வளர்ந்துவிட்டு இருக்கிறதே, அரசியல் விழிப்புணர்ச்சி வளர்ந்துவிட்டு இருக்கிறதே, கல்வி வளர்ந்துவிட்டு இருக்கிறதே, நிர்வாகம் வளர்ந்துவிட்டு இருக்கிறதே என்றெல் லாம் பாராட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில் இது கேலிக்கூத்தாக ஆகும். என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய அம்மையார் (திருமதி ஆல்டா பவுலர்) அவர்கள் அழகாகச் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் தேவலோகத்தில் சஞ்சரிக்கவில்லை. தேவர் களைப் போல் வானில் உலாவுகிறவர்கள் இல்லை. நம்மைப்போலவே இங்கேதான் வாழ்கிறார்கள். மனித ஆசைகளுக்குட்பட்டவர்களாக, ஆசாபாசங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே தெரிந்தோ தெரியாமலோ அவர் களும் சில குற்றங்களைச் செய்ய முடியும். ஆகவே போலீஸ் துறையினர் பரி

பூரணமாக, பரிசுத்தமாக இயங்குகிறார்கள் என்று சொல்வதற்கு நான் தயாராய் இல்லை. அதே நேரத்தில் போலீஸ் துறையில் முழுக்க முழுக்க குற்றங்களே இருப்பதாகச் சொல்வதும் நாட்டுக்கு நல்லது அல்ல.

இரண்டு பேர்கள் சண்டையிடுகிறார்கள் என்றால் அது அவர்களோடு நின்று விட்டால் பரவாயில்லை. சாதாரண நிகழ்ச்சி—இரண்டுபேர் சண்டையிட ஆரம்பித்தால் பின்னால் வருகிற கார் நின்றுவிடுகிறது. அதைத் தொடர்ந்து இரண்டு பக்கங்களிலும் ஒரு மைல் நீளத்திற்குக் கார்கள் நின்றுபோய் போக்குவரத்து தடைபடுகிறது. இரண்டுபேர், இரண்டு சாரார்களிடையே ஏற்படுகிற மோதல் இதுபோல எப்படி சமுதாயத்திலே சில விளைவுகளையும் உண்டாக்கிவிடுகிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அமைதியைக் காக்க போலீசார் சில நடவடிக்கைகளை எடுக்கத்தான் வேண்டியிருக்கிறது.

அப்படிச் சல முன்னேற்பாடான நடவடிக்கைகளை எடுத்துவிட்டாலோ இப்படி எடுத்தார்களே என்று குறைசொல்வது—எடுக்காமல் இருந்தாலோ போலீசார் இருந்தார்களே, தூங்கினார்களா என்று கேட்பது—இப்படி முன்னே சென்றால் கடி, பின்னே சென்றால் உதை என்பதாக குற்றங்கள் காண்பது அவர்களுடைய பணியை செவ்வையாக அவர்கள் ஆற்றுவதற்கு ஊக்கம் அளிப்பதாக ஆகாது.

நான் உண்மையாக—உணர்ந்து அனுபவபூர்வமாகச் சொல்கிறேன். தமிழகத்து போலீஸ் துறையைப்போல சிறப்பாக, நேர்மையாக, வேறு எந்த மாநிலத்திலும் போலீஸ்துறை இயங்கிவருவதாகச் சொல்ல முடியாது. தமிழகத்து போலீசார்களை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு வேண்டுமானால் தெரியாது. வேறு மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய தலைவர்கள் வெளியில் இருக்கிறார்கள். இந்த அவையிலும் பலர் இருக்கிறார்கள். நான் தேர்தல் சம்பந்தமாக சமீபத்தில் மேற்கு வங்கம், பீகார் போன்ற மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றேன். 25 மைல், 30 மைலுக்கு அங்கே போலீசார்களையே பார்க்கவில்லை. அப்படியே போலீசார்கள் இருந்தாலும் தகராறு என்றால் அந்த இடத்தில் இருந்து முதலாவதாக ஓடி ஒளிந்து கொள்ளக்கூடியவர்கள் அங்கேயுள்ள போலீசார்கள்தான். ஆனால் தமிழ்நாட்டிலே போலீஸ் துறையினர் மிக தைரியமாக, சிறப்பான முறையில் மிகுந்த ஆற்றலோடு பணியாற்றுகிறார்கள்.

மாநிலம் முழுவதற்குமான ஒரு பெரிய துறை. சென்னையில் ஒரு அதிகாரி இருந்து நிர்வகிக்கிறார். அவருக்குக் கீழே பல அதிகாரிகள் இருக்கிறார்கள் அங்கங்கே ஒன்றிரண்டு குறைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை எடுத்துச் சொல்வதன் மூலம் அவற்றையும் களைவதற்கு நாம் உதவி செய்தாகவேண்டும்



குறிப்பாக இந்த நேரத்தில் இந்த அவைக்கு புலனாய்வு என்று ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு விஷயம். என் தொகுதியைப் பற்றிய ஒரு குறிப்பு. வாணியம்பாடியில் சென்ற சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட கலவரத்தைப்பற்றிய குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விரிவானது அல்ல. கொடுக்க வேண்டிய குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் அங்கே ஏற்பட்ட கலவரத்திற்குக் காரணம் அங்குள்ள இந்து முஸ்லிம்களிடையே உள்ள கசப்பு உணர்ச்சி என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த அவையின் வாயிலாக அதை முழுமனத்துடன் நான் மறுத்துச் சொல்கிறேன். அங்கே நடந்தது வகுப்புக் கலவரம் அல்ல. தமிழ்நாட்டில் இந்து முஸ்லிம்கள், மற்ற மற்றப் பகுதிகளில் எப்படி ஒற்றுமையாக வாழ்கிறார்களோ அதைவிட இன்னும் அதிக அளவில் வாணியம்பாடியிலும் இந்த இரண்டு சமூகத்தினர்களும் ஒற்றுமையாகத்தான் வாழ்கிறார்கள். சகோதர உணர்ச்சியோடு, பாச பந்தங்களோடு, நேச உணர்வோடு ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொண்டு வகுப்பு உணர்ச்சி இன்றித்தான் வாழ்ந்து வருகிறார்கள்.

அங்கே நடந்தது என்ன? இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையேயுள்ள கசப்புணர்ச்சியினால் அது நடந்தது என்று அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகள் தவறான தகவல் கொடுத்திருந்தால், இந்தப் பேரவையின் வாயிலாக—இதுவரை நான் பொறுத்துக்கொண்டிருந்தேன்—அங்கே இருந்த போலீசார்களின் முறைகேடுகளைக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே நடந்தது வகுப்புக் கலவரம் அல்ல. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில்தான் அது நடந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதை தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் இந்துக்களுக்கு முஸ்லீம்களுக்கும் வாணியம்பாடியில் கலவரம் என்று நினைத்துவிடக் கூடாது என்கிற அடிப்படையில்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன். வாணியம்பாடி தொகுதியில் முஸ்லீம் லீகைச் சேர்ந்த நான் 9 ஆயிரம் வித்தியாச வாக்குகளில் வெற்றி பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டவன். "லத்தீப் என்பவர் என்னுடன் போட்டியிடுகிறார். அவர் தோல்வி உறுதிப்பட்டுவிட்டது, வாணியம்பாடி தொகுதியில் ஒரு துலுக்கனுக்கா உங்கள் ஓட்டு, உங்கள் ஓட்டு துலுக்கனுக்கா, தமிழனுக்கா" என்று சிண்டிகேட் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பேசி என்னை எதிர்த்தார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், நான் தமிழன் இல்லையா? நான் தமிழ் நாட்டில் பிறந்து வளரவில்லையா? தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமாக, அரசியல் லாபத்தைப் பெறுவதற்காக இந்தச் சமுதாயத்திலே உள்ள ஒரு சிலர், ஒரு சமுதாயத்திலே பிறந்துவிட்ட ஒருவனை, தமிழனை, ஒரு துலுக்கன் என்று நாகரிகத்திற்குப் புறம்பாகச் சொல்லி, அவன் விரட்டப்படுவான், தோற்கடிக்கப்படுவான் என்று சொல்லியும்கூட 9 ஆயிரம் வாக்குகள் வித்தி

பாசத்தில் வெற்றி பெற்று வந்துவிட்டாரே என்கிற அரசியல் காழ்ப்புணர்ச்சிதான் இந்தச் சம்பவத்திற்குக் காரணம். 'இதற்கு என்ன வழி? இதற்கு மேலும் இவனை விட்டுவைக்க வேண்டுமா' என்ற நிலையில் திட்டமிட்டுச் செய்துவிட்ட சதி இது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு—ஒரு முஸ்லீம் என்ற அடிப்படையில் அல்ல, ஒரு மனிதன் என்ற அளவில் என் உள்ளத்தில் இருக்கும் சக்திகள் அனைத்தையும் தேக்கி, அந்தத் தொகுதியில் பிறந்தவன், அந்தத் தொகுதியிலே வளர்ந்தவன், அங்கே வாழ்கிறவன் என்ற காரணத்தால், 'இந்தச் சம்பவம் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் ஏற்பட்ட சதி' என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த நாட்டில் ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், சமுதாயத்தின் பெயரால் ஓட்டு கேட்டால் அவர்களையெல்லாம் சமுதாயம் தூக்கியெறிவதற்கான திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மதம் மாச்சரியத்தைக் கற்பிக்கிறது என்றால், ஒரு மதம் தவறுகளை வளர்க்கிறது என்றால், அப்படிப்பட்ட மதம் நமக்குத் தேவையில்லை. இந்து மதத்தின் அடிப்படை 'அன்பே சிவம்' என்று சொன்னார்கள். அது எங்கே போனது? அந்த அன்பு எங்கே போனது?

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, மத அடிப்படையிலே வித்தியாசங்களை சிண்டிகேட் காங்கிரசார் செய்து வருகிறார்கள் என்ற அடிப்படையில் உறுப்பினர் பேசிவருகிறார்கள். முஸ்லீம் மதத்தை அடிப்படையாக வைத்துத்தான் முஸ்லீம் லீகை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம்களைத் தாக்கி உணர்ச்சியோடு பேசி வருவது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: என் அருமைச் சகோதரி அவர்கள் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். எங்களை நீங்கள் திசை திருப்ப முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முஸ்லீம் லீக் தோன்றியதற்கு காங்கிரசின் வகுப்புவாதம்தான் காரணம். உங்களிடத்தில் இருக்கின்ற வேற்றுமை உணர்ச்சியின் விளைவுதான் முஸ்லீம் லீக் தோன்றியதற்குக் காரணம். இல்லையென்றால், முஸ்லீம் லீக் தோன்றியிருப்பதற்கு வழியே இல்லை.

நான் சொல்ல வந்தது என்னவென்றால், இந்த நாட்டில், தமிழ்நாட்டில் மதம் மாறிவிட்டால் அவனுடைய ரத்தம் மாறிவிடுகிறதா? அவனுடைய பாச பந்தம் மாறிவிடுமா? இந்த நாட்டுக் குடிமகன் என்ற உணர்ச்சி மாறிவிடுமா? ஆகவே, அருமைச் சகோதரி அவர்கள் என்னுடைய பேச்சிலே குறுக்கிட்டு, திசை திருப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.



நாம் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாம் தமிழ்நாட்டு மக்கள், பாரத நாட்டு மக்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்து மதத்தின் மீதும் எனக்கு மதிப்பு உண்டு. அதைப்பற்றிய பெருமை உண்டு. நான் இந்துமதத்தை முறையாகப் படித்திருக்கிறேன். "அன்பே சிவம்", "அன்பே அருள் வழி" என்று கூறியிருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே அடிப்படையில் வள்ளுவரும் கூறியிருக்கிறார். அதையேதான் குரான், பைபிள் போன்ற மத நூல்கள் விவரிக்கின்றன. எல்லா மதங்களும் அன்பைப் போதிக்கின்றன. எநத ஒரு மதம் சமுதாயத்தில் மாச்சர்யத்தை ஏற்படுத்துகிறதோ, அந்த மதம் சமுதாயத்திலிருந்து அழிக்கப்படவேண்டும். அது இந்து மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்துவ மதம்—எந்த மதமாக இருந்தாலும் சமுதாயத்திலிருந்து அழிக்கப்பட வேண்டும். அதேபோல எந்தக் கடவுள் மனிதனிடத்தில் வேற்றுமையை உண்டாக்கி, பிளவை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறதோ அந்தக் கடவுளும் அழிக்கப்பட வேண்டும். ஆனால் எந்த மதமும் அப்படிச் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது போலீஸ் விவாதம். அதைப் பற்றிப் பேசாமல் வேறு விவாதம் எழுப்புகிறீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் கூற வந்தது . .

MR. DEPUTY SPEAKER: What is the point?

THIRU K. M. SUBRAMANIAM: I am conring to the point. This a secular Assembly Hall and we are in a secular State. This is not a hall for religious lecture by the hon. Member. He says he knows Hindu religion. Then he should know that Kuchelar and Krishna were in the same school, Kuchelar the Brahmin and Krishna the Yadava, Kuchelar the poor and Krishna the rich. There was no caste system barrier at all in the olden days. Since he is having protection of the Assembly, the hon. Member is going on talking about religion. This is not a hall for religious lecture.

MR. DEPUTY SPEAKER: I am afraid this is a Police Demand.

THIRU M. A. LATHEEF: With all due respect for my learned friend, I would say that I am not criticising or showing disrespect to any religion. He has not properly understood me.

THIRU K. M. SUBRAMANIAM: His anger was so much that I could not understand him.

THIRU M. A. LATHEEF: I would submit to the hon. Member to understand me properly and create a proper atmosphere.

நண்பர் அவர்கள் கிருஷ்ணனைப்பற்றியும், குசேலனைப்பற்றியும் சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிறது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, எனக்குக் கோபம் வந்த காரணம் என்னவென்றால், சாதாரண விஷயத்தைக்கூட இப்படி மதப் பிரச்சினையாக மாற்றி, அங்கே இருந்தவர்கள் இங்கே ஒரு ரிபோர்ட் கொடுக்கிறார்கள்.

வாணியம்பாடி தொகுதியில் ஒரு முஸ்லீம் எம்.எல்.ஏ. ஆக வந்துவிட்டான் என்பதற்காக வகுப்பு துவேஷத்தைக் கிளப்புவதா? இனி வருங்காலத்தில் இப்படி வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். சரியோ, தவறோ இருவரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். அங்கே இருப்பவர்கள் எல்லோரும் என் தொகுதி மக்கள்தான். நான் எல்லோருக்கும் பொதுவானவன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எனக்கு ஓட்டு போட்டிருந்தாலும், போடாதிருந்தாலும் அவர்கள் எல்லோரும் என் தொகுதி மக்கள்தான். அங்கே நடந்தது அரசியல் காரணங்களுக்காக ஏற்பட்டதே தவிர, மத அடிப்படையில் நடந்தது என்று கற்பனையை உருவாக்கித் தருவது நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த மதச் சம்பவங்கள் நடந்தாலும் போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் மிகப் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். கடவுள் எப்படி தன்னை வணங்குபவர்களுக்கும், தன்னை வணங்காதவர்களுக்கும் அருள்பாலிக்கிறாரோ அதேபோல போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டி, கருணை பாராட்டி நடந்துகொள்ள வேண்டும். அங்கே நடந்த நிகழ்ச்சியை இங்கே தருவதால் நான் நினைக்கின்ற பலன் ஏற்படாது; கசப்புதான் ஏற்படும்.

நான் அந்தத் தொகுதியின் பிரதிநிதி. நான் நம்புகின்ற கடவுளை மையமாக வைத்துச் சொல்கிறேன், அங்கே நடந்தது வகுப்புக் கலவரம் அல்ல. ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாணியம்பாடியில் எத்தனையோ பஸ்கள் ஓடுகின்றன. என் மாமனாருக்குச் சொந்தமான பஸ்கள் தான் எரிக்கப்பட்டன. "இதுதான் எம்.எல்.ஏ. மாமனார் பஸ்" என்று சொல்லி



எரித்தனர். "இவருக்குப் பெண் கொடுத்த பாவம் நம் பஸ்கள் எல்லாம் எரிந்து போய்விட்டன" என்று அவர்கள் வேறு சொல்கிறார்கள். இது அரசியல் அல்லவா?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், உங்களுக்கு வருகின்ற குறிப்புக்கள், தீர்மானங்கள், அறிக்கை இவற்றைக் கொண்டு உடனடியாக முடிவு எடுத்துவிடுவது நல்லதல்ல. இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் தோன்றாவண்ணம், நல்ல நிலைமையை உருவாக்க வழிவகை செய்ய வேண்டும்.

அங்கே துப்பாக்கிச் சூடு நடந்தது. உடனே சட்டவனுக்கு பரிசு கொடுக்கப்பட்டது. தவறான தகவல்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் நீங்கள் தவறான முடிவுக்கு வரும்படிச் செய்ய குறிப்பிட்ட சிலர் முயற்சிக்கிறார்கள். உடனடியாக போலீஸ் உயர்தர அதிகாரிகள் குறிப்பாக இதைக் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள், இன்னும் பேசுவதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்னும் இரண்டு விநாடியிலே முடித்து விடுகிறேன். நான் பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் பேசுகிறேன். என் அருமைத் தலைவர் அவர்களே (சிரிப்பு), இந்த விஷயத்திலே நான் எல்லாவற்றையும்பற்றிச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறைகள் இருக்கத்தான் செய்கின்றன, ஒரு குறையை நான் முதலமைச்சர் அவர்களுக்கு அன்போடு சொல்கிறேன். சிலர் இன்றும்கூட—அருமைச் சகோதரர் ராஜாராம் கூறியதுமாதிரி—இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரவேண்டுமென்பதற்காக இந்த அரசாங்கத்தை மக்கள் தூற்ற வேண்டுமென்பதற்காக ஒரு சிலர் போலீஸ் துறையிலே இருந்துகொண்டு நடத்திவருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்றாம்பள்ளி, மதிப்பிற்குரிய திம்மராயக் கவுண்டர் அவர்களுடைய தொகுதிக்கு சென்ற மாதம் 6-ஆம் தேதி அல்லது 8-ஆம் தேதி என்று கருதுகிறேன், நான், கலெக்டர், திம்மராயக் கவுண்டர், பாராளுமன்ற உறுப்பினர் சின்னராஜி கவுண்டர் மற்றவர்களும் புல்லூர் அணை கட்டுவதற்காக ஒரு இடத்தைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்த நேரத்திலே ஒரு அம்மையார் அவர்கள் விரைவாக வந்து கலெக்டர் காலிலே விழுந்தார்கள், என்னம்மா விஷயம் என்று கேட்டால், எங்கள் மருமகன்களைக் கட்டி வைத்து இருக்

கிறார்கள், கரும்புப் பயிரை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த இடத்திலே நான்கு போலீஸ்காரர்களும் ஒரு போலீஸ் அதிகாரியும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

கலெக்டர் அவர்கள் உடனே அந்தப் பகுதிக்கு—முக்கால் மைல் அல்லது ஒரு மைல் இருக்கும், வாகனங்கள் செல்ல முடியாது, நடுவிலே ஆறுகள் இருந்தும் அந்தப் பகுதிக்குப் போகவேண்டுமென்பதற்காக கலெக்டர் அவர்கள் தண்ணீர் இடுப்பு அளவுக்கு இருந்தும், கடந்துவந்து ஒரு மைல் தூரமும் காலால் நடந்து சென்று அக்கிரமம் நடக்கிறது என்று சொல்கிறார்களே, ஒரு மைல் தூரம் நடந்தாலும் பரவாயில்லை என்று வந்தார்கள். அங்கே சென்று பார்த்தால் இருநூறு ஆட்களை வைத்துக்கொண்டு ஒரு பெரிய மனிதர் கரும்புத் தோட்டத்தை அழித்துவிட்டார். அந்த வீட்டு மருமகள்கள், இளம் பெண்கள், கட்டிவைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு போலீசார் துப்பாக்கியை ஏந்தி நின்றுகொண்டிருக்கிறார். கலெக்டர் அவர்கள் என்ன விஷயம் என்று கேட்டார்கள். இவர்களைத் தடுக்கவா, ஒரு பெண்ணைத் தடுக்கவா துப்பாக்கி ஏந்தி ஜவான் போல நிற்கிறாய் என்று வேகமாகக் கேட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், கோர்ட்டிலே இருந்து ஆர்டர் வந்தது என்று.
கோர்ட்டு ஆர்டரை வாங்கிப் பார்த்தால் ஹைகோர்ட்டிலே ஜட்ஜ்மெண்டிலே தீர்ப்பாகியிருக்கிறது. 93 சென்ட் பற்றி கோர்ட்டு சொன்னது நிலத்தை கொடுத்துவிட வேண்டும் என்பதல்ல, அவர்கள் விரும்பினால் பெற்றுக்கொண்டிருந்திருக்கலாம் என்பதுதான். But he has not claimed the same and therefore they should be estopped என்று சொல்லியிருக்கிறார்கள். The principle of estoppal has been applied there என்றுதான் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் இரண்டு ஏக்கர் 93 சென்ட் நிலத்தை கரும்புத் தோட்டத்தை அழித்துவிட்டார்கள். கலெக்டர் அவர்கள் வேகமாகக் கேட்டார்கள். யார் சொன்னார்கள் என்று கேட்டால் மேலதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்லப்பட்டது.

நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளுக்குள்ளே இருக்கிற கிராமங்களிலே சில போலீசார்கள் காக்கியுடை அணிந்துகொண்டாலே தான்தான் ராஜா என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். கலெக்டர் அங்குள்ளவர்களிடத்திலேயெல்லாம் வாக்குமூலம் வாங்கினார்கள். எங்களிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அந்த டாக்குமெண்ட்கள் எல்லாம் கலெக்டர் அவர்களிடத்திலே இருக்கின்றன. உடனே விசாரிக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு மைல் தூரம் நடந்து வந்து அவர்கள் காட்டிய ஆர்வத்தையும், நீதி செய்யவேண்டுமென்ற நீதியுணர்ச்சியையும்,



கடமையுணர்ச்சியையும் இந்த அவையின் வாயிலாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆகவே இந்த (மணியடிக்கப்பட்டது) மானியத்தை ஆதரித்து நான் முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான போலீஸ் மானியக் கோரிக்கையை நான் வரவேற்றுப் பேசுகின்ற நேரத்திலே சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் பாராட்டியதைப்போல் இந்தியாவிலேயுள்ள எல்லா மாநிலங்களையும்விட நமது சென்னை மாநிலத்தைச் சேர்ந்த போலீஸ துறையினர் மிகச் சிறந்த வீரர்களாக, தேசபக்தர்களாக, புலனாய்வுத் துறையிலே திறனுள்ளவர்களாக இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே கலைஞர் அவர்கள் தேசப்பாதுகாப்பு மிக அவசியமாக இருக்கிற நேரத்திலே கூர்க்கப்படை, சீக்கியப் படை இருப்பதுபோல் தமிழர் படை என்ற முறையிலே தனியாக ஒற்றர்கள் இலாகாவிலே பணியாற்ற சிறந்த வீரர்களை, திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து எல்லைப்புறத்திற்கு அனுப்பினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இரண்டு நன்மைகள் இருக்கின்றன. இதனாலே நம் மாநிலத்தவர்களுடைய தியாகத்தன்மையும், பெருமையும் தெரியும், மற்றொன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கும் இது பயன்படும்.

கடந்த ஆண்டிலே இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது சமுதாயத்தில் மக்களுக்கு மக்களுடைய நன்மைக்காக அரசினுடைய தலையாய கடமைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறபொழுது குற்றங்கள் குறையவேண்டும், மக்கள் நல்லவர்களாகத் திருந்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் அதை வரவேற்கின்றேன். அதை நிரூபித்தும் காட்டியிருக்கிறார்கள்.

மர்டர் ஃபார் கெயின்ஸ் என்ற முறையிலே லாபத்திற்காகக் கொலைக் குற்றம் செய்தவர்கள் 1970-ம் ஆண்டிலே 23 என்றால் 1971-ம் ஆண்டிலே 15 கொலைகள் தான் அந்த வகையிலே நடந்திருக்கிறது. ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு குறைந்திருக்கிறது.

அதேபோன்று டெக்காய்டி என்ற வகையிலே 17 ஆக இருந்தது சென்ற ஆண்டிலே, இந்த ஆண்டு 12 ஆகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. மூன்றிலே ஒரு பங்கு குறைந்து இருப்பதைப் பாராட்டுகிறேன்.

இவைகள் சமுதாயத்தில் உயிர் உடைமைக்கு எதிராக நடக்கக்கூடிய மிகப் பெரிய குற்றங்களாக இருந்தும் அவை குறைக்கப்பட்டும், பெட்டி தெப்ட், மற்ற தெப்ட்கள் பெருகியிருப்பதையும் பார்க்கிறோம்.

குறிப்பாக ஜடல் தெப்ட், சிலை திருடும் வழக்கம் இருக்கிறது, ஐம்பொன் போன்ற பஞ்ச உலோகங்களைப் பயன்படுத்தி நம்முடைய முன்னோர்கள் தெய்வ பக்தியால் செய்து, அவர்களுடைய திறமையின் மூலமாகச் செய்து, தங்களுடைய உயிரைவிடமேலாக இன்றைக்கு பெரும்பகுதி மக்கள் வணங்குகிற சிலைகளைத் திருடுகிற வழக்கம் இருந்து வருகிறது. சிலைகளைத் திருடுவது மிகப் பெரிய குற்றம் என்று கருதுகிறேன். சாதாரணமாக திருட்டுக் குற்றங்களுக்கு இருக்கக் கூடிய செக்‌ஷனை மாற்றி இதற்கு கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய அளவிலே செக்‌ஷனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ; இதைக் கண்டுபிடிப்பதற்காக ஸ்பெஷல் ஸ்டாப் அப்பாயின்ட் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இரண்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 ஹெட் கான்ஸ்டபிள்கள் விசேஷ இலாகாவில் இருப்பதாகக் காண்கிறேன். அது போதாது. இதற்கு என ஒரு ஜில்லா சூப்பரின்டென்டென்ட் அந்தஸ்துள்ள ஒருவரைப் போட்டு மாநில அளவிலே உதவிக்காக உதவி சூப்பரின்டெண்ட்கள் நான்கு நான்கு ஐந்து பேர்களைப் போட்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களையும் சப்-இன்ஸ்பெக்டர்களையும் போட்டு திறமையுள்ள அதிகாரிகளைப் போட்டு சிலை திருடுவதை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய போலீஸாரைப் பொறுத்தவரையில் நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே கேஸ்களை நடத்துகிற வழக்கறிஞர் என்ற அளவுக்குச் சொல்கிறேன். ஸ்ரீபால் என்பவர் உட்கார்ந்துகொண்டே பல இடங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கக்கூடிய அளவுக்கு இருப்பதைப் போன்று மிகப் பெரிய பயங்கரமான கேங் கேஸ்களைக் கண்டுபிடிக்கக்கூடிய திறமையுள்ளவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை, அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய, அவர்களுடைய திறமை பிரதிபலிக்கக்கூடிய வகையிலே நாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய தக்க துறையில் அவர்களைப் போட்டால் அதிகப் பயன் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மிகவும் பாராட்டுதற்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஷூட்டிங் அதிகமாக நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். சென்ற ஆண்டில் ஒன்பது தடவையும், 1971-லே மூன்று தடவையும் சுட்டதாக போலீஸ் குறிப்பிலே. அறிக்கையிலே காண்கிறேன். இதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

இன்னும் போலீசாரைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அதிகப்படியான நன்மைகளைச் செய்ய வேண்டும். சில வீடுகளில் விளக்குகள் இல்லை. அப்படி இருந்தாலும் வெள்ளை அடிப்பதற்குக்கூட போலீசாருக்கு அதிகச் சலுகைகள்



இல்லை என்று போலீஸ்காரர்கள் கூறுவதாக நான் அறிகிறேன். ஒவ்வொரு வீட்டிற்கும் மின் விளக்குகள் இருக்கவேண்டும். அப்படி விளக்குகளைப் போட்டு ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு மீட்டரை வைத்துவிட்டால் நல்லது என்று கருதுகிறார்கள். அப்படி ஒவ்வொரு வீட்டிற்கும் மீட்டர் வாங்க வேண்டுமென்றால் அதிகப் பணம் ஆகுமே, நிதி நிலை காணாதே என்று நான் அவர்களிடம் கேட்ட பொழுது அவர்கள் சொன்னார்கள், தங்களுடைய பிராவிடன்ட் பண்ட் சேர்க்கையிலேயிருந்து மீட்டர் வாங்குவதற்கான நிதியை எடுத்துக்கொண்டு எங்களிடத்திலேயிருந்து வரவு வைத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனையையும் போலீசார் கூறினார்கள். ஆகவே ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு மீட்டர் வைத்துவிட்டால் அவரவர்களுக்கு வேண்டிய அளவில் பயன்படுத்தவும், மின்சாரக் கட்டணம் செலுத்தவும் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் போலீசார் ஆய்வினை விரைவாக நடத்தவும், குற்றம் நடக்கும் இடங்களுக்கு விரைவில் செல்லவும் டெலிபோன் வசதி இருக்கவேண்டுமென்று உறுப்பினர்கள் சிலர் கூறினார்கள். அப்படி டெலிபோன் வசதி இருந்தால் காலதாமதம் ஆகாமல் காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே கலைஞர் அவர்கள் போலீஸ் நிலையங்களில் டெலிபோன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அதிகாரிகளுக்கும் உதவிகரமாகவும், பொதுமக்களுக்கும் உதவிகரமாகவும் இருக்கும் என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் ஓரிரு ஆலோசனைகளை நான் கூறுவதற்கு விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் நமது அமைச்சரவை 54-வது செக்‌ஷன் கீழ் அரெஸ்ட், சந்தேகக் கைது செய்வதற்கு இருந்த முறையைக் கொஞ்ச நாட்கள் நிறுத்தி வைத்தால் நல்லது என்று பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தார்கள். ஆனால் அதனால் உண்மையான குற்றவாளிகளைக்கூட கைது செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்து அதை மறுபடியும் அமலில் நடத்தி வருகிறார்கள்.

அந்த செக்‌ஷன் இருக்க வேண்டுமென்பதை நான் உணர்ந்தாலும், இன்றைக்கு நம்மிடத்திலேயிருக்கும் போலீஸ் அதிகாரிகள் பெரும்பான்மையானவர்கள் நல்லவர்களாகயிருந்தாலும் அதிலே ஒருசிலர் "ஃபார் ஸ்டேட்டிஸ்டிகல் பர்ப்பஸ்" என்ற முறையில் புள்ளிவிவரங்களுக்காக, இந்த மாதத்திலே 109 சி.ஆர்.பி.சி. கேஸ்கள் எத்தனை போடப்பட்டிருக்கிறது, 54 வது செக்‌ஷன் கீழ் அரஸ்ட் எத்தனை, கிளாஸ் 64 (2)-ன் கீழ் எத்தனை போடப்பட்டிருக்கிறது என்று ஐ.ஜி. போன்ற மேலதிகாரிகள் கீழே இருப்பவர்களிடத்தில் கேட்கிற காரணத்தால் அவர்கள் நிர்ப்பந்தமாக பல கேஸ்களைப் போட வேண்டி

இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, புள்ளி விவரங்களுக்காக கேஸ்கள் போடுவதை நறுத்தி உண்மையான குற்றம் செய்பவர்களை அந்தக் கேஸ்களிலே போட்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதம் என்று நினைக்கிறேன், ஒருவருக்கு பரோல் கேட்டபொழுது—அவர் 'பி' கிளாஸ் பிரிசனராக இருந்தவர்—20 நாள் லீவில் வந்தபொழுது நான்கு வண்டிகளில் வெல்லத்தை ஏற்றிக்கொண்டு வந்தபொழுது பி-6 போலீஸார் தவறாக அரெஸ்ட் செய்து சிறைச்சாலைக்கு அப்படியே கொண்டுபோய், அங்கிருந்து கோர்ட்டிற்குக் கொண்டுபோய் ஒருவார தண்டனை கொடுக்கப் பட்டது. குற்றவாளியாக அவரே ஒத்துக்கொண்டு ஒருவார தண்டனை அளிக்கப் பட்டது. அதன் விளைவாக 2, 3 வருஷம் ரெமிஷன் கிடைக்க வேண்டியதும் போய், பரோலும் கானி செய்யப்பட்டு, உள்ளே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்லக் காரணம், இப்படிப்பட்ட சில தவறுகள், 'இன்டிஸ்கிரிமினேட்' முறையில், விவரம் இல்லாமல், வேறுபாடில்லாமல், சில அதிகாரிகளால் செய்யப்படுகிறது என்ற விவரத்திற்காகத்தான் கூறுகிறேன். ஆகவே, அந்த நிலையை நல்லமுறையிலே பரிசீலித்து எந்த அளவில் இந்த செக்ஷனை உபயோகிக் கலாம் அல்லது உபயோகப்படுத்தாமல் விடலாம் என்பதை அறிய நிபுணத்துவம் பெற்ற ஒரு நீதிபதி போன்றவர்களை நியமித்து அதை அறிந்தால் நல்லதாக இருக்கும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது அரெஸ்ட் பற்றி இன்வெஸ்டிகேஷன் ரொம்ப டிலே ஆகிறது என்று சொன்னார்கள். 1965-லே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபொழுது கடலூர் ராஜாங்கம் மேலவை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜாங்கம், மாணவர்களைச் சுடுவதைத் தவிர்த்து சமாதானப்படுத்திய காரணத்தால் ஒன்றாவது எதிரியாகப் போட்டார்கள் என்பதை நான் அறிவேன். இன்றைக்குப் பாதுகாப்பு இல்லை, போலீசார் பாதுகாப்புக் கொடுக்க மறுக்கிறார்கள் என்ற பெருந்த குற்றச் சாட்டாகச் சாட்டுகிறார்கள். ஆனால் நான் கூறுகிறேன், ராஜாங்கம் அவர்கள் கைது செய்யப்பட்ட அன்றே உத்தமபாளையம் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு நான், தர்மராஜ் சந்தோஷம் அவர்களால் அனுப்பப்பட்டு வக்காலத்து மெமோ ஃபைல் செய்து, ராஜாங்கம் அவர்களை பெயிலில் விட வேண்டுமென்று சுப்பிரமணியம் என்ற அட்வகேட், கோ-அட்வகேட்டாக வக்காலத்து மெமோ ஃபைல் செய்தோம். மறுநாளே டி.எஸ்.பி., ஜில்லா சூப்பிரன்டென்டென்ட் போன்றவர்கள் கோவிலாபுரத்திற்கு அவரது மாமனார் வீட்டிற்கு போலீஸ் லாரியோடு சென்று மருமகன் வேலை பார்க்க வேண்டுமென்றால் இந்த வக்காலத்து மெமோவை வாபஸ் பெற வேண்டும் என்று பயமுறுத்தி, வாபஸ் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி



யெல்லாம் பயமுறுத்தியவர்கள் போலீசார் ஏகமாகத் தலையிடுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பிடுவது உண்மைக்கு நியாயத்திற்குப் புறம்பானது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

காவல் துறையினர் மிகச் சிறப்பாகத் தமிழகத்திலே பணியாற்றிவருவதும், தொடர்ந்து அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பதும் நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும். வழக்குகளை ஆய்வு செய்யும் முறையில் அறிவியல் துறை பயன்படுத்தப்பட வேண்டும், அறிவியல் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற முறையில் அறிவியல் ஆய்வகம் சொல்லப்பட்டு வருகிறது. இந்தக் காலத்தில் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதாவது சென்னையிலே இருக்கின்ற மத்திய நிலையத்திலே மட்டும் அல்லாமல் மாவட்டங்களில் இருக்கின்ற நிலையங்களிலும் அந்தக் கருவிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றப்படி இந்தத் துப்பறியும் நாய்களையும், கை ரேகை ஆராய்ச்சி நிலையங்களையும் ஆங்காங்கே அதிகம் அமைக்க வேண்டும். இப்பொழுது துப்பறியும் நாய்கள் மாவட்ட அளவில் சில மாவட்டங்களில்தான் இருக்கின்றன. அதை டெபுடி எஸ்.பி. நிலையில் அவர்கள் பராமரிக்கின்ற நிலையிலே வைத்திருந்தால் வழக்குகளில் தாமதமின்றி சிறப்பாகத் துப்புதுலக்க வழிவகைகள் இருக்கும் என்றும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னும் கிராமப் பகுதிகளிலே சில இடங்களில் அரிசன மக்கள் பலவிடங்களிலும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள். அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இந்தக் காவல் துறையினர் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். சில மாவட்டங்களில் அதற்காக தனி போலீஸ் பிரிவு இயங்கினாலும் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் அதை அதிகப்படுத்தி அரிசனங்களைத் துன்புறுத்துவது இனிமேல் நிகழாமல் இருக்கும்படி காவல் துறையினர் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல்துறையினருக்குப் பல சிறப்பான நன்மைகளைச் செய்ய இந்த அரசு விழைந்திருக்கிறது. அதன் அடிப்படையில் காவல்துறையினருக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றத் துறைகளிலே நிதித்துறை, ரெவின்யூ துறைகளிலேயெல்லாம் ஆங்காங்கே வீட்டு வசதியை வேகமாக ஏற்படுத்திக் கொடுக்கின்ற இந்த நேரத்தில் காவல்

இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, புள்ளி விவரங்களுக்காக கேஸ்கள் போடுவதை நிறுத்தி உண்மையான குற்றம் செய்பவர்களை அந்தக் கேஸ்களிலே போட்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதம் என்று நினைக்கிறேன், ஒருவருக்கு பரோல் கேட்டபொழுது—அவர் 'பி' கிளாஸ் பிரிசனராக இருந்தவர்—20 நாள் லீவில் வந்தபொழுது நான்கு வண்டிகளில் வெல்லத்தை ஏற்றிக்கொண்டு வந்தபொழுது பி-6 போலீஸார் தவறாக அரெஸ்ட் செய்து சிறைச்சாலைக்கு அப்படியே கொண்டுபோய், அங்கிருந்து கோர்ட்டிற்குக் கொண்டுபோய் ஒருவார தண்டனை கொடுக்கப் பட்டது. குற்றவாளியாக அவரே ஒத்துக்கொண்டு ஒருவார தண்டனை அளிக்கப் பட்டது. அதன் விளைவாக 2, 3 வருஷம் ரெமிஷன் கிடைக்க வேண்டியதும் போய், பரோலும் கானி செய்யப்பட்டு, உள்ளே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்லக் காரணம், இப்படிப்பட்ட சில தவறுகள், 'இன்டிஸ்கிரிமினேட்' முறையில், விவரம் இல்லாமல், வேறுபாடில்லாமல், சில அதிகாரிகளால் செய்யப்படுகிறது என்ற விவரத்திற்காகத்தான் கூறுகிறேன். ஆகவே, அந்த நிலையை நல்லமுறையிலே பரிசீலித்து எந்த அளவில் இந்த செக்ஷனை உபயோகிக்கலாம் அல்லது உபயோகப்படுத்தாமல் விடலாம் என்பதை அறிய நிபுணத்துவம் பெற்ற ஒரு நீதிபதி போன்றவர்களை நியமித்து அதை அறிந்தால் நல்லதாக இருக்கும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது அரெஸ்ட் பற்றி இன்வெஸ்டிகேஷன் ரொம்ப டிலே ஆகிறது என்று சொன்னார்கள். 1965-லே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபொழுது கூடலூர் ராஜாங்கம் மேலவை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜாங்கம், மாணவர்களைச் சுடுவதைத் தவிர்த்து சமாதானப்படுத்திய காரணத்தால் ஒன்றுவது எதிரியாகப் போட்டார்கள் என்பதை நான் அறிவேன். இன்றைக்குப் பாதுகாப்பு இல்லை, போலீசார் பாதுகாப்புக் கொடுக்க மறுக்கிறார்கள் என்ற பெருத்த குற்றச் சாட்டாகச் சாட்டுகிறார்கள். ஆனால் நான் கூறுகிறேன், ராஜாங்கம் அவர்கள் கைது செய்யப்பட்ட அன்றே உத்தமபாளையம் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கு நான், தர்மராஜ் சந்தோஷம் அவர்களால் அனுப்பப்பட்டு வக்காலத்து மெமோ ஃபைல் செய்து, ராஜாங்கம் அவர்களை பெயிலில் விட வேண்டுமென்று சுப்பிரமணியம் என்ற அட்வகேட், கோ-அட்வகேட்டாக வக்காலத்து மெமோ ஃபைல் செய்தோம். மறுநாளே டி.எஸ்.பி., ஜில்லா சூப்பிரன்டென்டெண்ட் போன்றவர்கள் கோகிலாபுரத்திற்கு அவரது மாமனார் வீட்டிற்கு போலீஸ் லாரியோடு சென்று மருமகன் வேலை பார்க்க வேண்டுமென்றால் இந்த வக்காலத்து மெமோவை வாபஸ் பெற வேண்டும் என்று பயமுறுத்தி, வாபஸ் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி





யெல்லாம் பயமுறுத்தியவர்கள் போலீசார் ஏகமாகத் தலையிடுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பிடுவது உண்மைக்கு நியாயத்திற்குப் புறம்பானது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

காவல் துறையினர் மிகச் சிறப்பாகத் தமிழகத்திலே பணியாற்றிவருவதும், தொடர்ந்து அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பதும் நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும். வழக்குகளை ஆய்வு செய்யும் முறையில் அறிவியல் துறை பயன்படுத்தப்பட வேண்டும், அறிவியல் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற முறையில் அறிவியல் ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இந்தக் காலத்தில் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதாவது சென்னையிலே இருக்கின்ற மத்திய நிலையத்திலே மட்டும் அல்லாமல் மாவட்டங்களில் இருக்கின்ற நிலையங்களிலும் அந்தக் கருவிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றப்படி இந்தத் துப்பறியும் நாய்களையும், கை ரேகை ஆராய்ச்சி நிலையங்களையும் ஆங்காங்கே அதிகம் அமைக்க வேண்டும். இப்பொழுது துப்பறியும் நாய்கள் மாவட்ட அளவில் சில மாவட்டங்களில்தான் இருக்கின்றன. அதை டெபுடி எஸ்.பி. நிலையில் அவர்கள் பராமரிக்கின்ற நிலையிலே வைத்திருந்தால் வழக்குகளில் தாமதமின்றி சிறப்பாகத் துப்புதுலக்க வழிவகைகள் இருக்கும் என்றும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னும் கிராமப் பகுதிகளிலே சில இடங்களில் அரிசன மக்கள் பலவிடங்களிலும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள். அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இந்தக் காவல் துறையினர் அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இந்தக் காவல் துறையினர்

விசேஷ கவனம் செலுத்த வேண்டும். சில மாவட்டங்களில் அதற்காக தனி போலீஸ் பிரிவு இயங்கினாலும் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் அதை அதிகப்படுத்தி அரிசனங்களைத் துன்புறுத்துவது இனிமேல் நிகழாமல் இருக்கும்படி காவல் துறையினர் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல்துறையினருக்குப் பல சிறப்பான நன்மைகளைச் செய்ய இந்த அரசு விழைந்திருக்கிறது. அதன் அடிப்படையில் காவல்துறையினருக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றத் துறைகளிலே நிதித்துறை, ரெவின்யூ துறைகளிலேயெல்லாம் ஆங்காங்கே வீட்டு வசதிகளை வேகமாக ஏற்படுத்திக் கொடுக்கின்ற இந்த நேரத்தில் காவல்

துறையில் இருப்பவர்களுக்கு மட்டும் பலவிடங்களில் சொந்த வீடில்லை. போலீஸ் லயன்களில் இருக்கும் வீடுகள் போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் அவ்வளவு போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும் போதியதாக இல்லை. பல போலீஸ்காரர்கள் வெளியிலே தங்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இருக்கின்ற போலீஸ் வீடுகளெல்லாம்கூட பழுதடைந்து சீர்படுத்தப்படாமல் மிகவும் மோசமாக இருப்பதைக் காண்கின்றோம். என்னுடைய கோபிசெட்டிபாளையம் தொகுதியில் இருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்குச் சொந்த வீடு இல்லாததால் அவர் மிகவும் சிரமப்பட வேண்டிய நிலை இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் ரெவின்யூ அதிகாரிகள் மற்றும் நீதித் துறையிலே இருப்பவர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டிக் கொடுத்திருப்பதைப்போல் இந்தத் துறையிலே இருப்பவர்களுக்கு வீடு இல்லாத காரணத்தால் பல இடர்ப்பாடுகளுக்கு உள்பட வேண்டியிருக்கிறது. அந்தக் குறையை நிவர்த்தி செய்து அங்கிருக்கின்ற இன்ஸ்பெக்டர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோபிசெட்டிபாளையத்தில் இருக்கும் காவல் நிலையம் நகரப் புறத்தில் இருந்து வருகின்ற வழக்குகளைக் கவனிப்பதோடுகூட, கிராமப் புறங்களிலிருந்து வரும் ஏராளமான வழக்குகளைக் கவனிக்க வேண்டியிருக்கிற காரணத்தால் ஒர்க் லோடு அதிகமாக இருந்து, ஹெவி ஸ்டேஷன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருப்பதால் நகரப் புற போலீஸ் ஸ்டேஷன், கிராமப்புற—ரூரல் போலீஸ் ஸ்டேஷன் என்று இரு பிரிவாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு காவல் துறையின் சிறப்பான பணியைப் பற்றிப் பாராட்டி வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர், அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற போலீஸ் மானியம் சம்பந்தமாக இரண்டொரு கருத்துக்களை மட்டும் கூறவிரும்புகிறேன்.

இன்றைக்குப் போலீஸ் துறையானது மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற காவல் துறை சிறந்ததாக இருக்கிறது என்று நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். இருந்தாலும் நம்முடைய திறமையை இன்னும் அதிகமாக வளர்க்க வேண்டும். இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்பது தேவையான ஒன்றாக எனக்குத் தோன்றுகிறது. காரணம், சமுதாயத்திலே, கல்வி, விஞ்ஞானம், பொருளாதார மேம்பாடு இவைகள் வளருகின்றபோது குற்றங்கள் நியாயமாகக் குறைய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் இங்கு குற்றங்கள் கூடியிருக்கின்றன என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. கன்னக்களவு 6,556-ல் இருந்து 6,863 ஆக உயர்ந்திருக்கிறது.





அதே போல் பெரிய திருட்டுக்கள், கால்நடைத் திருட்டுக்கள் போன்றவை எல்லாம் அதிகப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இன்னும் கூட இந்தக் குற்றங்கள் அதிகப்படக்கூடும். ஏனென்றால், இந்த அறிக்கையிலே போலீஸ் ஸ்டேஷன்களை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. அதோடு போலீஸ் துறையில் இருக்கக்கூடியவர்களுக்கு சைக்கிள்கள், ஜீப்புகள் மற்றப் போக்குவரத்துச் சாதனங்களை அதிகப்படுத்துவதற்கான குறிப்புகளும் இருக்கின்றன. இந்தக் குறிப்புகளை வைத்துப் பார்க்கும்போது போலீஸ் துறையை விரிவுபடுத்தும் நிலையில் இன்னும் அதிகமான குற்றங்கள் கண்டு பிடிக்கப்படலாம் என்றுதான் தோன்றுகிறது.

போலீசாருடைய பொறுப்பு சமுதாயத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு அனுசரணையாக பொறுப்புகளும், வேலைகளும் மாறுகின்றன என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு எல்லா இடங்களிலும் குற்றங்களும், கிளர்ச்சிகளும் அதிகப்பட்டு வருகின்ற காலகட்டமாக இருக்கிறது என்று தோன்றுகிறது. பருவ காலங்களில் ஏற்படுகின்ற மாற்றம் விளைச்சலையும், நோய் நொடிகளையும், மற்ற அம்சங்களையும் வெளிப்படுத்துவது போல் அரசியல் பருவ கால மாற்றம் காரணமாகப் பல்வேறு விதமான குற்றங்கள் உருவாகக் கூடும்.

அரசியல் பருவகால மாற்றம் என்று சொல்லுவது 1967-ல் இருந்து துவங்கி இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்ற கால கட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். சமுதாயத்தில் இருக்கின்ற இந்த அமைப்பை இன்றைக்கு இருக்கின்ற இந்த அமைப்பை மாற்றி புதிய அமைப்பை உண்டாக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகின்றபோது அந்த அமைப்பினுடைய முழுப் பலனும் உழைப்பாளர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகள் போன்றவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற உணர்வு காரணமாக ஆங்காங்கு கிளர்ச்சிகள் வலுப் பெறுவது சாதாரணமாக நடக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

அந்தக் கிளர்ச்சிகளைப் பார்த்து காவல்துறையினர் மிரண்டுவிடக்கூடாது. அந்தக் கிளர்ச்சிகளைப் பார்த்து ஆத்திரம் கொண்டுவிடக் கூடாது. அந்தக் கிளர்ச்சிகள் காலகட்டத்தின் மாற்றம் காரணமாக தோன்றுவதே தவிர, யாரோ உண்டாக்கக்கூடியது என்று கருதி அதற்குப் பரிகாரம் காணக்கூடிய அளவில் பழைய காலத்தில் பரிகாரம் கண்டதைப் போல் இன்றைக்கும் காண ஆரம்பித்தால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலை உண்டாகிவிடும்.

அதே போன்று குற்றங்களைக் கண்டுபிடிப்பது, தண்டிப்பது, தடுப்பது போன்ற காரியங்களில் பழைய முறைகளையே நாம் இன்னும் கையாண்டு வருகிறோம் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

இப்போது கூட ஒருவரைக் குற்றவாளி என்று சந்தேகப்பட்டு காவலில் கொண்டு போய் வைத்து குற்றம் செய்திருக்கிறாரா, இல்லையா என்பதை விசாரணை செய்வது பழைய அநாகரிகமான முறையிலேயே, அடித்து, துன்புறுத்தி பயமுறுத்தப்படுகின்ற நிலைதான் இருக்கிறதே தவிர, அறிவு வளர்ந்திருக்கும் நிலையில், விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் நிலையில், கல்வி வளர்ந்திருக்கும் நிலையில் காவல் துறையானது குற்றங்களைக் கண்டுபிடிக்க, தண்டிக்க, தடுக்க கையாளும் முறையில் மாற்றம் ஏற்படாமல் இருப்பது உள்ளபடியே ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்களுக்கு ஒவ்வ காவல்துறை செயல்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இன்னும் அடிப்பது கூடப் போகவில்லை என்ற உண்மையை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் இயக்கம் ஆரம்பிக்கின்றபோது அந்த இயக்கங்களைக் காணுகின்ற பார்வை இருக்கின்றதே அந்தப் பார்வையில் இன்றைக்கு மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். பழைய காலத்தில் வேலை நிறுத்தம் என்று சொன்னால் வேலை நிறுத்தம் நடந்த உடனே முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க காவல் துறையைப் பயன்படுத்தி வந்தார்கள். முதலாளிகளுக்குப் பாதுகாப்பு ஏன்? இயந்திரங்கள் இருக்கின்றன, கட்டடங்கள் இருக்கின்றன, மூலதனம் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு காவல்துறைக்கு உண்டு என்று அப்போது கருதப்பட்டு வந்தது.

இன்று ஜனநாயகம் வந்த பிறகு, சோஷலிசம் வேண்டுமென்று கூறியதற்குப் பின்னால் யாருடைய பாதுகாப்புக்காகக் காவல்துறை இருக்க வேண்டுமென்பது தான் இப்போது கேட்கப்படுகின்ற கேள்வியாகும். மூலதனம் போட்டிருக்கின்றவர்களைப் பாதுகாக்க வேண்டியதுதான்; இயந்திரங்களைப் பாதுகாக்க வேண்டியதுதான்; அதற்காக தொழிலாளர்களுக்கு எதிராக அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நிலை இருக்கக்கூடாது. ஏதாவது சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் அதைத் தடுத்து பாதுகாக்க வேண்டியதுதான். சண்டை சச்சரவுகள் ஏற்படாதவாறு முன்னதாகவே ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏதாவது சச்சரவுகள் ஏற்பட்டால் உண்மையான குற்றவாளிகள் யார் என்று பார்த்துத் தண்டிக்க வேண்டுமே தவிர, ஆதிக்கக்காரர்களுக்கு சலுகை அளிக்கக் கூடிய முறையில் தொழிலாளர்களைத் தண்டிக்கின்ற நிலை இருக்கக்கூடாது. ஆனால் இன்றும் அந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





சமீபத்தில் ஆவடி டாங்கித் தொழிற்சாலையில் ஏற்பட்ட சம்பவத்தை எடுத்துக்கொண்டால் தொழிலாளர் தலைவர்கள் போலீசாரால் கேவலமாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லக் கூடிய அவல நிலை உண்டாக்கப் பட்டிருக்கிறது. சிம்சன் தொழிற்சாலை வேலை நிறுத்தமும் அதையே எடுத்துக் காட்டும் வகையில்தான் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

சமீபத்தில் என்னுடைய அனுபவத்தில் நடந்த சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாலைகளில் நடந்த வேலை நிறுத்தமானது 14 அம்சக் கோரிக்கைகளுக்காக நடந்தது. மேட்டூரிலும் வேலை நிறுத்தம் 3-ம் தேதி தொடங்கியது. வேலை நிறுத்தம் நடக்கின்ற தொழிற்சாலை முன்னால் ஷிப்ட் இல்லாத தொழிலாளர்கள் வெளியிலே நின்று கொண்டிருந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து தொழிலாளர்கள் திரும்பிப் போகவேண்டுமென்று விரட்டினார்கள். அவரிடத்தில் நான் கூறினேன் 'இங்கு எவ்விதமான குழப்பமும் இல்லை; தடை உத்தரவு ஒன்றும் கிடையாது; தொழிலாளர்கள் இங்கே நிற்பதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது? குழப்பம் வந்தால் கூட நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னேன். அவர் 'இந்த விஷயத்தில் என்னிடத்தில் தலையிடாதீர்கள்; என்னுடைய வேலையில் குறுக்கிடாதீர்கள்'' என்று சொன்னார். சட்ட விரோதமாக நீங்கள் செய்யும் காரியத்தில் எப்படித் தலையிடாமல் இருக்க முடியும் என்று நான் கேட்டேன். சட்ட விரோதமாக எந்தக் காரியமும் இங்கு நடைபெறவில்லை. அதற்குப் பின்னால் அங்கிருந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அடித்து விரட்டினார்கள் என்பது உண்மை; அது என்னுடைய அனுபவம்; நேரடியாக அனுபவித்தேன். போலீஸ் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்று நேரில் அனுபவித்த உண்மை.

மேட்டூரில் சேலம் கேம்பு போலீஸ் ஸ்டேஷனில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். அங்கு தேங்கல்வாரை என்ற பகுதியில் ஓர் சிறு சண்டை ஏற்பட்டது. அதிலே சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற முறையில் வேறு ஸ்டேஷனிலே வேலையில் இருந்த ஒரு பிரிவின் உறவினர் ஒருவரைத் தந்தி கொடுத்து வரவழைத்து அவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களின் எதிரிகள் சப்-இன்ஸ்பெக்டர் அவரை அடித்துத் துன்புறுத்தினர்.

அதுபற்றி என்னிடம் சொன்னபோது டெப்டி சூப்பிரின்டென்டென்ட்க்கு புகார் எழுதி அனுப்பினேன். ஆனால் அதுபற்றி விசாரித்ததாகத் தகவல் இல்லை.

அதேபோல் மேட்டூர் மில்லில் ஒரு லே ஆப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போது கான்டீனில் எல்லோரும் வேலை இல்லாமல் இருந்தார்கள். அதில் சில பேர் சீட்டாடிக்கொண்டிருந்தார்கள். அங்கு சென்று, ஒரு சப்-இன்ஸ்

பெக்டரும் ஒரு சில கான்ஸ்டபிளும் சேட்டாடிக்கொண்டிருந்தவர்களை பகிரங்கமாக அடித்து கேவலமாகப் பேசி வழக்கு தொடர்ந்தார்கள். அது பற்றியும் டெப்டி சூப்பரின்டென்டென்ட்டிடம் புகார் கொடுத்துள்ளேன். இப்படி போலீஸ் நடவடிக்கைகள் பழைய காலத்தில் இருந்ததைப்போல் இருக்கிறதே தவிர இன்னும் மாறவில்லை.

இன்னொரு விஷயம். குடியாத்தத்தில் நடந்த வேலை நிறுத்தத்தின்போது அங்கு பிரதான தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் அடிக்கப்பட்டார்கள் என்றும் அங்குள்ள நகரசபை அது சம்பந்தமாகத் தீர்மானம் போட்டு எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை நான் முதல் அமைச்சர் அவர்களிடம் தருவதாக இருக்கிறேன் என்றும் இந்த இடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, கூட்டங்கள் நடத்துவதுபற்றி, ஜனநாயகம் வளர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் பயமுறுத்தி, ஒருவரையொருவர் கேவலமாகப் பேசி . . .

திரு. தோப்பூர் திருவேங்கடம்: குடியாத்தத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய குடியாத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. க. துரைசாமி அவர்கள் குடியாத்தம் சம்பவம்பற்றி சம்பந்தப்பட்ட டாக்டர் அவர்களின் துணைவியாரோடு பேசியிருக்கிறார்கள் தொலைபேசி மூலம். அப்படி எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை, சோடா பாட்டில் ஏதோ வெடித்து அவர்மீது விழுந்ததாகச் சொன்னார்களே தவிர வேறு எந்தவிதமான தகவலையும் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: எனக்கு வந்த செய்திகளைச் சொன்னேன். நகரசபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அதன் நகல் எனக்கு வந்திருக்கிறது. அதை நான் முதல் அமைச்சர் அவர்களிடம் தரப்போகிறேன்.

லாத்தி சார்ஜ் என்பது பழைய காலத்தில் இடுப்புக்குக் கீழே அடிப்பது என்ற வழக்கம் இருந்தது. இப்போது மண்டையில் அடிக்கிறார்கள். அப்படி போலீசார் அடித்து எவ்வளவோ பேர்களுக்கு மண்டை உடைந்திருக்கிறது என்று புகார்கள் வந்திருக்கின்றன. புகார் சொல்வதற்காகச் சொல்கிறேன் என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

அடுத்து, பொதுக் கூட்டங்கள் பற்றி ஒரு வார்த்தை. பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு போலீஸிடம் அனுமதி பெறவேண்டும் என்று இருக்கிறது. இது கூட தேர்தல் காலங்களில் ஆங்காங்கே பல பேர்கள் ஒரே இடத்தில் கூட்டங்கள் போடவேண்டிய நிலைமை ஏற்படும், அதனால் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் முன்னதாகவே அறிவித்துவிட்டு, கட்டணம் கட்டிவிட்டு லைசென்ஸ் பெறவேண்டும் என்று வந்தது. அது இப்போது அப்படியே நின்றுவிட்டது.



அதோடு இந்த ஒலிபெருக்கி வைத்திருப்பவர்கள், மின்சார வொயர்மென் லைசென்ஸ் பெற்றவர்கள்தான் ஒலிபெருக்கி வைத்துக்கொள்ளலாம் என்று புதிதாக ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அதன் காரணமாக, ஒவ்வொரு இடத்திலும் அப்படி லைசென்ஸ் பெற்றவர்கள் ஓரிருவர்தான் இருக்க முடியும். ஆகவே அவர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஒலிப்பெருக்கி வசதிகளை பயன்படுத்த முடியாது. அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒலிபெருக்கிகளை அரசியல் கட்சிகளுக்காக உபயோகப்படுத்துவது இல்லை என்று ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள்.

ஜனநாயகத்தில் கூட்டங்கள் போடுவதற்கான தடைகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கவேண்டியது அவசியம். ஆகவே புதுப்புதுத் தடைகளைக் கொண்டுவந்து இம்மாதிரியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது சரியானதல்ல. ஒலிப்பெருக்கி சம்பந்தமான நோட்டீஸையும், குடியாத்தத்தில் இருந்து வந்திருக்கிற அந்தத் தீர்மானத்தையும் சபாநாயகர் அவர்களின் அனுமதியின் பேரில் நான் முதல் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்து அமர்கிறேன்.

திரு. ஏ. பாலையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிற போலீஸ் மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய போலீஸ் இலாகா அதனுடைய செம்மையான சிறப்பான பணிகளால் ஏனைய மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டும் வகையில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு இலாகா சமீப காலத்தில் சட்டம், ஒழுங்கு இவை பாதுகாக்கப்படாத காரணத்தினால் போலீஸ் இலாகாவில் பணியாற்றுகிற அதிகாரிகள் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படாமல், நீதி நேர்மைக்குக் கட்டுப்படாமல் நடத்துகொண்டிருக்கிற நிகழ்ச்சிகளை இன்றைய தினம் நாட்டிலே பரவலாகக் காண்கிறோம்.

குறிப்பாக, பல நிகழ்ச்சிகளை இந்த மாமன்றத்திலே நான் கூற முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருங்கோடு கிராமத்தில் கழிந்த பெப்ரவரி திங்கள் 13-ம் நாள் அன்று இரட்டைக் கொலை ஒன்று நடந்தது. கணவன் மனைவி இருவரும் நள்ளிரவில் மிகக் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கொலையைப் பற்றி விசாரிக்கிற நேரத்தில் அந்த ஊரைச் சேர்ந்த மக்களையெல்லாம் ஆண் பெண் இருபாலாரையும் ஒருவித வித்தியாசமுமின்றி, இருபாலாரையும் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள வராந்தாவில் மூன்று நாட்கள், நான்கு நாட்கள் என்று காவலில் வைத்து விசாரணை நடத்தியிருக்கிறார்கள்.

அதேபோல்தான் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த வேலப்பன் என்பவரை போலீஸார் பெப்ரவரி 17-ம் தேதி மாலையில் திங்கள்கிழமைச் சந்தையில் பஸ் நிலையத்தில் வைத்துப் பிடித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அப்படி அழைத்துச் செல்லப்பட்ட வேலப்பன் 17-ம் தேதி முதல் 25-ம் தேதி வரையில் போலீஸ் லாக்கப்பிற்குள் அடைத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறார். அப்படி விசாரிக்கப்பட்ட வேலப்பன் 25-ம் தேதி நள்ளிரவில் போலீஸாருடைய அட்டூழியத்தாலும் அவர்களுடைய தகாத நடத்தை காரணத்தினாலும் போலீஸ் லாக்கப்பிற்குள்ளேயே மரணம் அடைந்திருக்கிற ஒரு நிகழ்ச்சி இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை 1—3—72-ம் தேதியில் தினத்தந்தி நாளிதழ் வேலப்பன் என்பவர் ஆரல்வாய் மொழியில் தூக்கிட்டுக்கொண்டு இறந்ததாக அவருடைய படத்தையும் அந்தப் பத்திரிகையில் வெளியிட்டு உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டிருக்கிற ஒரு நிகழ்ச்சியையும் நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

25-ம் தேதி வரை காவலில் வைக்கப்பட்டிருந்த வேலப்பன் அந்த லாக்கப்பிலிருந்து எப்படித் தப்பி ஆரல்வாய்மொழிக்குச் சென்றான் என்பது புரியாத மர்மமாகவே இருந்து கொண்டிருக்கிறது. மேலும் நம்பிக்கைக்குத் தகுந்த செய்தி மூலம் எனக்குக் கிடைத்த தகவல் 25-ம் தேதி அவரது பிணத்தை சமீபத்தில் உள்ள குளச்சல் மருத்துவ மனைக்கு இரவோடு இரவாகப் போலீஸ் வானில் எடுத்துச் சென்று அங்கிருந்த டாக்டரிடம் இவர் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார் என்று சர்டிபிகேட் கேட்டிருக்கிறார்கள். மனிதாபிமானம் படைத்த அந்த டாக்டர் கள்ளத்தனமாக என்னால் சான்றிதழ் வழங்க முடியாது, ஆகவே பிணத்தை எடுத்துச் சென்று விடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு அந்தப் பிணத்தைப் போலீஸ் அதிகாரிகள் எங்கே கொண்டு சென்றார்கள் என்பதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. அந்தப் பிணம் எங்குகொண்டு செல்லப்பட்டது என்ற விவரம் யாருக்கும் தெரியாத ஒரு சூழ்நிலை அங்கு ஏற்பட்டது. ஆகவே இந்த மரணத்தில் மிக மர்மமான நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸார் இன்றைய தினம் எந்த வழக்கானாலும் மக்களை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தொந்தரவு தருவது என்பது மட்டுமல்லாமல் காவல் நிலையத்திலேயே அடித்துக் கொலை செய்கிற வகையிலும் இன்றையதினம் ஈடுபட்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்களே நீதிபதிகளாகிவிட்டால் நீதி மன்றங்கள் இந்த நாட்டில் எதற்காக இருக்கின்றன என்ற கேள்வி எழுகிறது.



இன்றைய தினம் அந்த நிகழ்ச்சிகள் காரணமாக அந்தக் கிராம மக்கள் எல்லோரும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்களில் ஒரு பயங்கர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் தங்களுக்குப் பாது காப்பு கிடைக்காமல் போய்விடுமோ இந்த அரசினால் என்ற ஐய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

போலீஸ்காரர்கள் துணிந்து இத்தகைய நீதிக்குப் புறம்பான நிகழ்ச்சிகளைச் செய்கிறார்கள் என்றால், சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு இந்த போலீஸ் இலாகாவின் மூலமாக எத்தகைய பாதுகாப்பு கிடைக்கும் என்ற அவநம்பிக்கை இன்றையதினம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த அவநம்பிக்கை மக்கள் மத்தியிலிருந்து மாற்றுவதற்கு, சந்தேகிக்கத்தக்க விதத்தில் இறந்த வேலப்பன் மரணத்தைக் குறித்து ஒரு நீதிபதியை வைத்து விசாரணை செய்து, இதற்கு நல்ல தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதே வழக்கின் காரணமாக திங்கள் சந்தையில் செருப்பு தைத்து விற்கும் ஆண்டி என்ற தொழிலாளி போலீசாரால் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே நையப்புடைக்கப்பட்டு, ரத்தம் ரத்தமாக வாந்தியெடுத்து இருக்கிறான். 6 நாள் கொளச்சல் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று இருக்கிறான். அவனை 1—3—1972 அன்று வெளியே விட்டிருக்கிறார்கள். அப்படி வெளியே விடுகிற நேரத்தில் காவல் நிலைய அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள், இங்கே நடந்த நிகழ்ச்சியை யார் வந்து கேட்டாலும் எங்கும் வெளியில் சொல்லக்கூடாது, உன்னை யார் அடித்தார்கள், உதைத்தார்கள் என்பதையும் வெளியே சொல்லக்கூடாது என்று எச்சரித்து இருக்கிறார்கள். இதை மீறி நீ வெளியே சொன்னால் இந்த நிகழ்ச்சிகளை வெளியே சொல்வதாக இருந்தால், இந்தக் கொலை வழக்கில் உன்னை ஈடுபடுத்திவிடுவேன் என்று பயமுறுத்தி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நியாயமாக இந்த வழக்கை ஒரு நீதிபதியை வைத்து விசாரித்து நல்ல தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கொளச்சல் நகர மன்ற எல்லைக்குள் வசிக்கிற கடலோர மக்கள் ஏராளமாகக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஓலைக்குடிசையில் வாழ்கிற காரணத்தால் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு கொளச்சல் போலீஸ் நிலையத்தோடு சேர்த்து, ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணவாளக்குறிச்சி போலீஸ் நிலையம், போலீஸ்காரர்களுக்கு கட்டப் பட்டிருக்கிற கட்டிடத்தில் இயங்குகிற காரணத்தால், தனி போலீஸ் நிலையக் கட்டடம் அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குருந் தங்கோட்டில் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ், போஸ்டாபீஸ், பஞ்சாயத்து ஆபீஸ் கூட்டுறவுச் சங்க அலுவகங்கள் ஆகியவை இருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு போலீஸ் அவுட்-போஸ்ட் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்தோடு முடிவுற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** தொடர்ந்து காவல்துறை மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெறும்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** கனம் உபதலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மானியத்தைப்பற்றி நான் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

நமது மாநிலத்திலுள்ள காவல் துறையினர் மிகுந்த திறமைசாலிகள் என்பதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஒப்புக்கொள்ளக் கூடியது. நமது மாநிலத்திலுள்ள காவல் துறையினர் திறமைசாலிகள் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலே நமது காவல் துறையினர் இப்பொழுது எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றித் தான் இரு வேறான அபிப்பிராயங்கள் இந்தச் சபையில் சொல்லப் படுகிறது, அதைப் போலவே வெளியிலும் சொல்கிறார்கள்.

முக்கியமாக, காவல் துறையினர் மீது அவர்கள் சாட்டிக்கொண்டிருக்கும் குற்றங்குறைகள் என்னவென்று கேட்டால், மூன்று விதமாகச் சொல்கிறார்கள். ஒன்று ஆளும் கட்சிக்குச் சாதகமாக இப்பொழுது இருக்கக்கூடிய காவல் துறையினர் நடந்துவருகிறார்கள் என்பது. அது போல பொய் வழக்குகள் போடுவதிலே ஆளும் கட்சிக்குச் சாதகமாக அவர்கள் சொல்கிறபடியெல்லாம் கேட்டு பொய் வழக்குகள் போட்டுவருகிறார்கள் என்பது இரண்டாம் குற்றச்



சாட்டு. மூன்றாவது குற்றச்சாட்டு என்னவென்றால், சட்டம், அமைதியை நமது தமிழகத்தில் காவல் துறையினர் காப்பாற்றத் தவறிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த மூன்றுவிதமான குற்றச்சாட்டுகளையும் வைத்துக்கொண்டு, அவர்கள் சொல்லக் கூடியதில் எவ்வளவு தூரம் ஆதாரம் இருக்கிறது என்று முன்பு நடந் ததையும், இப்பொழுது நடந்துகொண்டிருப்பதையும் வைத்து சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் ஸ்தாபனம் ஒரு பெரிய ஸ்தாபனம். அந்த ஸ்தாப னத்தில் ஏதாவது ஒரு இடத்திலே சில குறைகள் தென்படலாம். அப்படிப் பட்ட குறை ஏதாவது ஒரு இடத்தில் இருந்தால், ஒரு பெரிய ஸ்தாபனத் திலுள்ள அந்தக் குறைக்கும் அரசுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா, என்ன சம்பந்தம் என்பதை நாம் சற்றுத் தெளிவாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். உதாரணமாக ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்டிவிட்டு அத்தகைய குற்றச் சாட்டு நடந்தது என்று சொல்ல முடியுமா என்று நான் கேட்க ஆசைப்படு கிறேன். இதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் என்ன நடந்தது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது நமது அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில், நமது கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார். அப்பொழுது நாகர்கோவில் தேர்தல் நடந் தது. அந்தத் தேர்தலில் எப்படி அந்தத் தொகுதி மக்கள் நடந்துகொண்டார் கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது கலைஞர் இருந்த இடத்திலே, அவர் தங்கியிருந்த இடத்தில் அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. அவர்கள் தொகுதிக்குப் போக முடியாமல் அங்கு இருக்கக்கூடிய மக்கள் நடந்துகொண்டார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தவறுதலான செய்தியை வைத்துக்கொண்டு பேசுகிறார். கலைஞர் அவர்கள் தங்கியிருந்த விடுதியில் கற்கள் வீசப்பட்டன. ஆனால் அவர்கள் கலைஞர் மீது கற்கள் வீசப் பட்டன என்று கூறுகிறார்கள். இது உண்மைக்கு மாறான கருத்து. அப்படிப் பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதை அங்கத்தினர் கூட ஒத்துக் கொள்வார்கள். மாண்புமிகு அமைச்சர் மீது கல் எறிந்தார்கள் என்று கூறி னார்கள். . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படியென்றால் தாக்கியது மட்டும் உண்மையா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இம்மாதிரி நடந்து முடிந்துவிட்டதைப் பற்றி எல்லாம், வழக்கு பதிவு செய்து, முடிந்துவிட்டது பற்றியெல்லாம். மறு படியும் விவாதிப்பது பொருத்தமாக இருக்குமா என்பது அங்கத்தினர் அவர்கள்

தீர்மானிக்கவேண்டிய விஷயம். அங்கே நடந்தது என்ன, யார் தாக்கப்பட்டார்கள், யார் மீது வழக்கு தொடரப்பட்டது என்பதையெல்லாம் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் நன்ருக அறிவார்கள். அதுபற்றித் தீர்ப்பும் சொல்லிவிட்டார்கள். . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் நானும் ஒருவன், அந்த நிகழ்ச்சியின் தொடர்பாக என்று சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தகவல் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஏன் இவ்வளவு தூரம் அவசரப்படுகிருர்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு இன்னும் பேசுவதற்கு நிறைய அவகாசம் இருக்கிறது. எனக்குப் பின்ருல் அவர்கள் பேசப்போகிருர்கள். . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அப்படியாளுல் உறுப்பினர் அவர்கள் முதல்வரோடு கூட இருந்தார்களா?

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** முதல் அமைச்சரோடு கூட இருந்தார்களா என்று கேட்கிருர்கள். அவர்கள் குற்றம் சாட்டும்பொழுதெல்லாம், அப்படி அவர்களும் கூடவே இருந்தார்களா என்று நானும் திருப்பிக் கேட்க முடியும். இதை உதாரணத்திற்காகச் சுட்டிக்காட்டலாம் என்று தான் நினைத்தேன். சர்ச்சைக்கு இடமளித்துவிடும் என்று நான் கருதவில்லை.

ஆருல், ஒன்றை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அப்பொழுது பொதுவாகவே யாரும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். அந்தத் தொகுதியிலிருந்தவர்கள் பலாத்காரமான முறையில் அதிகப்படியாக ஈடுபட்டார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இப்பொழுது கலைஞர் ஆட்சி வந்தபிறகு, அந்தத் தொகுதி மக்கள் அந்த நேரத்தில் இப்படி காழ்ப்புணர்ச்சியோடு, விரோத உணர்ச்சியோடு நடந்துகொண்டார்கள் என்பதற்காக, அராஜக முறையில் நடந்துகொண்டார்கள் என்பதற்காக, அந்தத் தொகுதி மக்கள் மீது பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் இந்தப் போலீஸ் துறையினரைப் பயன்படுத்தி ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள் என்று உங்களால் குற்றம் சாட்ட முடியுமா என்று தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். எந்த ஒரு இடத்திலும், ஏதாவது ஒரு விஷயத்தில் தகராறு நடந்தது என்ருல், அந்தத் தகராறுக்கும் அரசுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் பொருத்தமாக இணைத்துக் காட்டவேண்டும். அப்படிக் காட்டிஞல் தான் அரசு தவறு செய்துவிட்டது என்பதைப்பற்றிச் சொல்ல முடியும்.



உதாரணமாக, ஒரு சிறிய விஷயத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பு இருந்த அரசு செய்த தவறுக்கும், அரசுக்கும் இருந்த தொடர்பு என்ன என்பதைச் சுட்டிக்காட்டும் தன்மையில் கீழத்தூவல் சம்பவத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுது சாட்டக்கூடிய குற்றத்திற்கும், இதற்கு முன்பு நடந்த விதத்திற்கும் இருக்கக்கூடிய தன்மை என்ன என்பதைப் பற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன். கீழத்தூவலில் வீட்டிலே இருந்தவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்கள் சுடப்பட்டார்கள் என்பது உண்மை. ரிபோர்ட்டில் வேறு விதமாக இருக்கலாம். ஆருல் அது நாடறிந்த ஒரு உண்மை. அரசுக்கும், அதற்கும் சம்பந்தம் உண்டு என்பதைப்பற்றி இதற்கு முன்பேசிய என்னுடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். அதை யார் செய்தார்களோ அவரே நேரில் கூறியதாகச் சொன்ஞர்கள். அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் சொன்ஞர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று கேட்டால், அன்று நடந்தது என்ன, போலீஸ் எவ்வளவு தூரம் உபயோகப்படுத்தப்பட்டார்கள், தவருன வழியில் எப்படி உபயோகப்படுத்தப்பட்டார்கள், அரசுக்கும் அந்தச் சம்பவத்திற்கும் என்ன தொடர்பு இருந்தது என்பதைப் பற்றி இப்பொழுது குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

அத்தகைய முறையில், இப்பொழுது போலீஸ் இலாகாவைப்பற்றி ஏதாவது குற்றம் சொல்ல முடியுமா? அங்கொன்றும், இங்கொன்றும் ஏதாவது தவறுகள் நடந்திருக்கலாம். தவறே நடைபெறவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஒரு சில விஷயத்தை ஆதாரத்தோடு கூட சொல்கிறேன் என்று சொல்லலாம். சிம்ஸன் விவகாரம், அன்பில் கொலை வழக்கைப்பற்றியெல்லாம் சொல்லலாம். ஆருல், அதற்கும் அரசுக்கும் என்ன சம்பந்தம் என்று சொல்ல வேண்டும். சிம்ஸன் விவகாரத்தில் போலீஸ்காரர்களுடைய கண் முன்ருலேயே சிலர் தாக்கப்பட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. வெளியிலே பல இடங்களில் அம்மாதிரி சொல்லப்படுகிறது. எதிர்க்கட்சியினரும் அடிக்கடி பேசுகிருர்கள்.

போலீஸ் இலாகாவினரை நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் எந்தக் காலத்திலும் எப்பொழுதாவது எந்த இடத்தில் எந்த சம்பவம் நடந்தாலும், போலீஸார் இருக்கக்கூடிய நேரத்தில், போலீஸார் கண்முன்ருலேயே இத்தகைய ஒரு சம்பவம் நடந்தது என்ற குற்றச்சாட்டுக்கு போலீஸ் இலாகா இலக்கு ஆகாத அளவுக்குப் போலீஸ் இலாகா நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் தலைமையில் இருப்பவரைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் நல்ல நேர்மையானவர், நல்ல முறையில் நடந்து கொள்ளக்கூடியவர் என்ற பெயர் எடுத்தவர். அவருடைய போலீஸ் நிர்வாகத்.

தில் இத்தகைய குற்றச்சாட்டுகள், குறைகள் எதுவுமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறைகள் இருக்கிறது என்றால் தாராளமாகச் சொல்லட்டும். ஆனால் அரசுக்கும், அந்தச் செயலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவேண்டும். அப்பொழுது தான் அரசின் மீது தவறு இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக, அரசாங்கம் வேண்டுமென்றே சில பொய்க் கேஸ்களைப் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அரசாங்கமே நேரிலே தலையிட்டு இவ்வாறு கேஸ் போடப்படுகிறது என்று சொல்ல முடியாது. என் போன்றவர்கள் போய் எனக்கு உறவாக இருந்தால் அவர்களுக்குச் சாதகமாக அல்லது எனக்கு விரோதமாக இருக்கின்றவர்கள் மீது கேஸ் போட வேண்டுமென்ற மனப்பான்மையில் நான் ஏதோ சொல்லலாம். இதைக் கேட்கக் கூடிய ஒரு சில ஆபீசர்கள், சப்-இன்ஸ்பெக்டரோ, சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ இருக்கலாம். அவர்கள் கேட்டாலும் கேட்கலாம், கேட்காமல் இருந்தாலும் இருக்கலாம். மனத் திண்மை, நேர்மையான உள்ளம் படைத்த அதிகாரிகள் இவ்வளவு பெரிய இலாகாவிலே எல்லோரும் இருக்க முடியாது. நூற்றுக்கு நூறு அப்படிப்பட்டவர்கள் இருப்பார்கள் என்று எண்ண முடியாது. ஏதாவது ஒரு சிலர் இருப்பார்கள். ஒரு சிலர் நாம் சொல்வதைக் கேட்டு நடக்கக்கூடியவர்கள் இருப்பார்கள். இந்த ஆள் ரொம்பவும் பெரிய ஆள். இன்புளுவன்ஸ் உள்ளவராக இருந்தால் அதையெல்லாம் வைத்துக் கொண்டு அதையே ஒரு காரணமாகக் கொண்டு அவர்கள் சொன்னதைக் கேட்டு அப்படியே செய்பவர்களாக இருப்பார்கள். அதனாலேயே போலீஸ் இலாகாவே தவறாக நடக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்கு ஆதாரம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தலைவரவர்களே நேரமில்லை என்ற காரணத்தினால் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைக் குறித்து ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய அருப்புக்கோட்டை தாலுகாவிலே, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு தரப்பட்ட குற்றங்கள் அதிகமாக நடந்து கொண்டு வருகின்றன. பம்புசெட்டுகள் மிக அதிகமாக அங்கே திருட்டுப்போகின்றன. அதற்காக ஒரு தனிப் போலீஸ் படை செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இந்தப் போலீஸ் பிரிவினருக்கும் யார் இந்த குற்றத்தைச் செய்கிறார்கள் என்பது தெரியும் என்று நினைக்கிறேன். எந்தக் கூட்டம் இப்படிச் செய்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கும் என்று நிச்சயமாகக் கருதுகிறேன். அவர்கள் மீது என் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று தெரியவில்லை. ஒரு வேளை எவிடென்ஸ், சாட்சியங்கள் கிடைக்காத காரணத்தால் நடவடிக்கை எடுக்கவில்லையா என்று தெரியவில்லை.





என்னுடைய தொகுதிக்குப் போனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். இப்போதுகூட இரண்டு மூன்று கேஸ்கள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். எனவே, போலீஸ் இலாகா இதில் தலையிட்டு அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட குற்றங்கள் நடக்க முடியாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஒரு சிறு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அருப்புக்கோட்டைக்கு ஒரு "பயர் ஸ்டேஷன்" வேண்டுமென்று நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்காக வேண்டிய இடத்தையும் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே அங்கு ஒரு "பயர் ஸ்டேஷனை" ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கார்த்திகேயன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட போலீஸ் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

ஒரு நாடு சீராக, அமைதியாக நிரம்பட செயலாற்ற வேண்டுமானால் காவல் துறை நிரம்பட செயல்பட வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கும் கேள்விப்படாத அளவில் சட்டமும், ஒழுங்கும் விரிவாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. காரணம், நல்ல தலைமை என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தமிழகத்தில் காவல்துறை பல பிரிவுகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை முக்கியமானதாகும். அந்தப் படையானது நமது இந்தியாவின் வட எல்லைப் பகுதிகளுக்குச் சென்று போராடி தமிழகத்தின் பெருமையை மேலும், மேலும் உயர்த்தியிருக்கிறது.

கூட்டுறவுத் துறையில் நடந்த ஊழல்களை, கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறுகிற பண மோசடிகள் போன்ற திருட்டுக்களைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு தனிப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படி அமைக்கப்பட்டதன் காரணமாக பல மோசடிகள் இந்த இலாகாவால் கண்டு பிடிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழகத்தில் பரவலாகத் தெய்வச் சிலைகள் திருடு போகின்றன. இப்படிச் சிலைகள் திருடு போவது பக்தர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே இதனைக் கண்டு பிடிப்பதற்கு தனி போலீஸ் இலாகாவை அமைத்து,

ஒரு இன்ஸ்பெக்டர், தனி சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைப் போலீஸ்காரர்கள், போன்றவர்களைப் போட்டு இருக்கிறோம். இதன் காரணமாகக் கோவில் சிலைகள் திருடுபோனால் விரைவில் கண்டு பிடிக்கப்பட்டு நல்ல முறையிலே அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் நமது காவல்துறையின் பேரில் போலீஸ் அதிகாரி என்றே சொல்வேன்.

அடுத்தபடியாக, மது விலக்கு ரத்து செய்யப்பட்டு ஆப்காரிச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாக காவல்துறை திடீரென்று சோதனை போட்டு பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அபினி, கஞ்சா போன்றவற்றைக் கடத்துபவர்கள் மீது வழக்குகள் போட்டு அவர்களைத் தண்டிக்க முடிந்தது.

அடுத்து தமிழகத்திலே வகுப்புவாதக் கலவரங்கள் நடக்கின்றன. ஹரிஜனங்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் ஜாதிச் சண்டைகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் ஜாதிச் சண்டை நடக்கிறது. இதை ஒழுங்ககாக அடக்கி, சட்ட ஒழுங்கை, அமைதியைக் காவல்துறை நிலைநாட்டி வருகிறது. மேலும் பல இடங்களில் அரசியல் கட்சிகள் தொழிலாளர்களையும், மாணவர்களையும், தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசு மாணவர்கள் அரசு, தொழிலாளர் அரசு என்ற காரணத்தினால் அவர்களின் நலனைப் பாதுகாத்து வருகின்றது. எனவே மேலும் இப்படிப் கலவரங்கள் நடக்காமல் தடுப்பதற்கு இந்த அரசு காவல்படையில் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும். மாவட்ட பெரிய பேலீஸ் அதிகாரி ஒருவர், இரண்டு டிப்டி சூப்பரன்டென்டுகள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் அதில் நியமிக்கப்பட வேண்டும். அதனால் ஜாதிச் சண்டைகள் நடந்தால் அவற்றை நிறுத்துவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாகும்.

அடுத்தபடியாக எனது மாவட்டம், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன். நெல்லை மாவட்டத்தில் கம்பியில்லாச் சாதனங்கள் பிரிவை ஆங்காங்கு ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். எனவே தமிழக முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு பெரிய போலீஸ் அதிகாரி அவர்களும் நெல்லை மாவட்டத்திற்கு கம்பியில்லாச் சாதனங்களின் பிரிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி ராதாபுரத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனது தொகுதியில் மூன்று போலீஸ் ஸ்டேஷன்கள் ஒன்று இராதாபுரம், இரண்டு திசையன்விளை, மூன்று பணகுடி



ஆகிய மூன்று போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் போன் வசதி செய்து தரப்படவில்லை. இந்த மூன்று போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் உடனடியாக போன் வசதி செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆங்காங்கு பல போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள், ஜீப்கள் கொடுக்கப்பட்டுள்ளன. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இந்த மூன்று போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் கொடுக்கப்படவில்லை. எனவே திசையன்விளை, இராதாபுரம், பணகுடி ஆகிய இந்த மூன்று போலீஸ் ஸ்டேஷன்களிலும் உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடி, என்னுடைய பகுதியில் பழவூர் என்ற பெரிய ஊர் இருக்கிறது. பல கிராமங்கள் இதனைச் சுற்றி உள்ளன. இங்கு ஒரு அவுட் போஸ்ட் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவுட் போஸ்ட் போதாது. இப்படி இருப்பதால் அடிக்கடி பல கலவரங்கள், பல சங்கடங்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. எனவே பழவூர் அவுட் போஸ்ட்டை தனியாக ஒரு போலீஸ் ஸ்டேஷனாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய கடற்கரைப் பகுதியில் விஜயாபதி என்ற பகுதியில் அடிக்கடி ஜாதிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்குள்ள இந்துக்களுக்கும், மற்றும் பல சமூகத்தினருக்கும், மீனவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே விஜயாபதியில் ஒரு அவுட் போஸ்ட் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மொத்தத்தில் போலீஸ் துறையைப் பொறுத்த அளவில் இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவில் நல்ல அளவில் அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு ஆங்காங்கு குடியிருப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் மற்றும் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, போலீஸ் மானியத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

நம்முடைய மாநில போலீஸ் புலனாய்வு சம்பந்தப்பட்டவரையில் மதிப்பும், பாராட்டும் பெறுகின்ற வகையிலே சிறப்பான பணியினைச் செய்து கொண்டு வருகிறது என்பதிலே சந்தேகம் இல்லை. ஆனால் பொதுவாக போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் ஆரம்ப காலத்திலே, சுதந்திரம் பெறுவதற்கு

முன்னால், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இந்த அமைப்பு எப்படி ஏற்படுத்தப்பட்டதோ அப்படியே இன்றைக்கும் இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலும், அதற்குப் பின் காங்கிரஸ்காரன் காலத்திலும் இன்றைய ஆட்சியிலும் சாதாரணத் தொழிலாளர்களுடைய போராட்டங்களிலே அமைதியான மக்கள் கிளர்ச்சிகளிலே, அடக்கு முறைகளை உபயோகித்து வருகின்றது. இதிலே எந்த விதமான மாறுதலும் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இப்போது சமீப காலத்திலே தொழிலாளர் போராட்டங்களில் எப்படிப்பட்ட அடக்குமுறைகளைக் கையாண்டார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டியதுள்ளது அவசியமில்லை. இப்படிப்பட்ட போராட்டங்களில் தலைவர்கள் தேடிப் பிடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் எதார்த்த நிலை. இப்படி நடந்து கொண்டு வருகிறது ஏதோ ஒரு இடத்திலே மட்டுமல்ல, பல இடங்களிலும் இப்படி நடந்துகொண்டு வருவதைக் கேள்விப் படுகிறோம். சந்தேகக் கேஸ்களில் பிடிக்கப்படுகிறவர்கள் சாதாரணமானவர்களாக, ஏழை எளியவர்களாக இருந்தால், எந்தவிதமான ஆதாரமும் இல்லாதவர்களாக இருந்தால் அவர்களுக்குச் செய்யக்கூடிய இம்சைகள் கொஞ்ச நஞ்சமல்ல. இதைத்தானே பார்த்தோம்.

சேலத்திலே மஞ்சுளா என்ற பெண் இறந்தது எப்படி என்பது தெரியும். இந்தச் சட்டசபையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது எங்கள் தலைவர் கே.டி.கே. தங்கமணி இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இது சம்பந்தமாக ஒரு விசாரணை வேண்டுமென்று கேட்டிருந்தார்கள்: இது வரையிலே எந்த விதமான விசாரணையும் நடந்ததாகத் தெரியவில்லை.

அதே மாதிரி கரிவலம்வந்தநல்லூரிலே ஹரிஜன் ஒருவரை லாக்கப்பிலே அடைத்து வைத்திருந்தார்கள். மறுநாள் காலையிலே அவர் இறந்துவிட்டார். இது தெரிந்தவுடன் அந்த வட்டாரத்தில் இருந்த மக்கள் இது மாதிரி கொன்று விட்டார்கள் என்று அந்தப் போலீஸ் ஸ்டேஷனை சூழ்ந்து கொண்டார்கள். இதைப் பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்றும் மாவட்ட உயர்தரப் போலீஸ் அதிகாரி, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் வர வேண்டுமென்று சொல்லி அந்தப் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை அடித்துத் துரத்துவதற்கு முயன்று, அது முடியாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இரு அரிசன விவசாயிகள் இறந்துள்ளனர். இது பற்றி விசாரணை நடத்துவதற்கு உயர்தரப் போலீஸ் அதிகாரி வந்தார். இப்படி அந்த இலாகாவைக்





கொண்டே, அந்த இலாகாவில் இருக்கின்ற பெரிய போலீஸ் அதிகாரியைக் கொண்டு விசாரணை நடத்தினால் எப்படி நீதி கிடைக்கும் என்பதை அனுபவ பூர்வமாகப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆக, தவறுகளை யார் செய்தாலும், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அமைதியை நிலைநாட்ட வேண்டும். அதேமாதிரி இப்போது கூட கோவையில் குறிச்சி கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் மருதாச்சலம் அவர்கள் தொகுதியில் ராமசாமி என்பவர் கொல்லப் பட்டதாகச் சொல்கிறார்கள். எம். எல். ஏ. அவர்கள் புகார் செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது சாதாரண மக்கள் தான் போலீசாரின் தொந்தரவுகளுக்கு ஆளாகிறார்கள். இதுமாதிரி இன்னும் பல சான்றுகள் கூற முடியும்.

அடுத்தபடியாக, சந்தேக கேஸ் என்று போடுகிறார்கள். சினிமா பார்த்து விட்டு வரும்போது, அல்லது வேறு எங்காவது போய்விட்டு வரும்போது பஸ் கிடைக்காமல் படுத்திருந்தால் போலீசார் அவர்களைப் பிடித்துச் சென்று சந்தேகக் கேஸ் போடுகிறார்கள். அவர்கள், நான் இன்னார்தான் இன்ன இடம் தான் என்று குறிப்பிட்டுச் சொன்னாலும் விடாமல், ஒரு வாரம், இரண்டு வாரம் ஜெயிலில் தள்ளிவிடுகிறார்கள். இதற்கும் பல உதாரணங்கள் இருக்கின்றன. இந்த முறையில் போலீஸ்காரர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை. பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? எப்படியாவது மாதம் 10 அல்லது 20 கேஸ் பிடித்தாக வேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி மாதக் கடைசியில் சாதாரண மக்களைப் பிடித்து சந்தேகக் கேசில் போட்டுவிடுகிறார்கள். இம்மாதிரி தவறுகள் நடக்காவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீசாருக்கும் பல குறைகள் இருக்கின்றன. இன்று அவர்கள் நகரிலிருந்து பல இடங்களுக்கு வெளியூர்களுக்குச் சென்றால் அவர்களுக்கு மூன்று ரூபாய்தான் படி கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி அவர்களுடைய பென்ஷனில் கூட சில வித்தியாசங்கள் இருக்கின்றன. அதாவது 1969-க்கு முன்னால் வேலையிலிருந்து ரிட்டயர் ஆனவர்களுக்கு 36 ரூபாய்தான் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அதற்கடுத்து இருப்பவர்களுக்கு 62 ரூபாய் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. 1971-க்குப் பின்னால் ரிட்டயர் ஆனவர்களுக்கு 75 ரூபாய் பென்ஷன் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. ஏனென்றால், முதலில் சம்பளமும், பஞ்சப்படியும் தனித்தனியாக இருந்தன. இப்போது சம்பளமும், பஞ்சப்படியும் ஒன்றாக இருப்பதால், 75 ரூபாய் பென்ஷன் வருவதாகச் சொல்

கிறார்கள். அவர்களுக்கிடையே இந்தப் பென்ஷனில் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, எப்போது ரிட்டயர் ஆகியிருந்தாலும் எல்லோருக்கும் 75 ரூபாய் பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீசாருக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் அன்றைக்கு எப்படி இருந்ததோ அப்படியே இன்றைக்கும் இருக்கின்றன. ரிப்பேர் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அவர்கள் வீட்டுப் பிரச்சனையில் தனிக் கவனம் செலுத்தி, அவர்களின் இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு ரத்தானதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். இன்றைக்கு மதுக்கடைகளை நகரின் மத்தியில் வைத்திருக்கிறார்கள்; ஆங்காங்கே வைத்திருக்கின்றார்கள். மக்கள் நெரிசலான இடங்களில் மதுக்கடைகள் இருப்பதால் பல தகராறுகள் ஏற்படுகின்றன. அதனால் மிகவும் மோசமான நிலைமை உருவாகிறது. மதுக்கடைகள் ஊருக்கு வெளியேதான் இருக்கவேண்டும், குடிப்பவர்கள் வீட்டில் போய் குடிக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் ஸ்டேஷனில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, 4, 5 ஆண்டுகளாகவே, கோவில்பட்டிக்கு ஒரு தீ அணைப்புப் படை பிரிவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அமைச்சரவர்களும் அதற்கு ஆவன செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு தீ அணைப்புப் படை பிரிவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போலீசாருக்குக் கொடுக்கப்படும் 36 ரூபாய் பென்ஷன் மிகமிகக் குறைவாக இருப்பதால், அவர்கள் வாழ்க்கைக்கு அது போதாததால், எல்லோருக்கும் ஒரே சீரான பென்ஷனை 75 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தமிழ்நாடு காவல்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் நமது மாநிலப் போலீசாரின் திறமையையும் கடமை உணர்வையும் பற்றி பல அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசினார்கள். அந்தப் பாராட்டுகளுக்குத் தகுதி பெற்றவர்களே நமது காவல் துறையினர் என்பதில் சந்தேகமில்லை. அவனியைக் காப்பவன் ஆண்டவன் என்று சொல்லும்போது, அந்த ஆண்டவனின் சிலையையே நமது காவல் துறையினர் காத்திருக்கின்



றார்கள்; திருட்டுப்போன சில சிலைகளை மீட்டிருக்கின்றார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, மாணவர் தொழிலாளர் பிரச்சனைகளிலும், வகுப்புக் கலவரங்களிலும் நமது காவல் துறையினர் செம்மையாகச் செயலாற்றி, சுமுகமான நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இல்லையென்றால், மீண்டுமோர் நவகாளி, முதுகுளத்தூர் நிகழ்ச்சிகள் நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட நிலைமை உருவாகாமல் திறமையாகச் சமாளித்த நமது காவல் துறையினரைப் பாராட்டுகிறேன். அதை எண்ணி நாம் எல்லாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

தேர்தல் நேரங்களிலே மற்ற மாநிலங்களில் என்னென்ன அசம்பாவிதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். நமது மாநிலத்திலே தேர்தல் எப்படி நடைபெற்றது என்பதும், எப்படி அமைதி காக்கப்பட்டது என்பதும் நமக்குத் தெரியும் இந்தியாவிலேயே நல்லமுறையில் அமைதி காத்த மாநிலம் நமது மாநிலம் தான் என்று அறியும்போது உண்மையிலேயே அவர்களுடைய திறமைமிககச் செயல்களை எண்ணிப் பெருமைப்படுகிறேன்; பாராட்டுகிறேன்.

முள்மீது துணி பட்டுவிட்டால், முள்ளும் முறியாமல், துணியும் கிழியாமல் எடுப்பார்களே, அதைப்போன்று அவ்வளவு திறமையாக நமது மாநிலத்தில் தொழிலாளர் பிரச்சினையில் நடந்துகொண்டார்கள். இல்லையென்றால் தமிழகம் முழுவதும் மோசமான ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கும். இந்தத் தொழிலாளர் பிரச்சனையிலே நமது போலீஸ் இலாகா நடந்துகொண்ட முறை போற்றத் தக்கது, பெருமைப்படத் தக்கது, பாராட்டத்தக்கது.

அதேமாதிரி, நம்முடைய போலீஸ் ஐ.ஜி. அவர்களும், கமிஷனர் அவர்களும் இந்தியாவிலேயே திறமை மிக்கவர்கள் என்ற பாராட்டுக்குரியவர்களாக இருக்கின்றார்கள். அந்தப் பெருமை நமக்கு உண்டு. அவர்களுக்கு எத்தனை முறை பாராட்டுத் தெரிவித்தாலும் புகழ்ந்திட்டாலும் பொருத்தமுடையதே ஆகும்.

நமது காவல் துறையினரின் பெருமைகளையும் திறமைகளையும் பலரும் பலவாறாகப் பாராட்டிவிட்டு, போலீஸ் இலாகா கட்சி சார்பிலே நடந்துகொள்கிறது என்ற குற்றச்சாட்டையும் பலர் தெரிவித்தார்கள். இது அவர்கள் மீது குற்றம் என்று சொல்ல முடியாது. பாவம், போலீஸ் இலாகா! அவர்களுடைய பணியே நன்றிக் கடன் எதிர்பாராததுதானே. எவ்வளவு திறமையாகக் கடமை

யாற்றினாலும், அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக இன்னும் கொஞ்சம் விஜிலெண்டாகச் செய்திருக்கலாம் என்றுதான் சொல்வார்கள். அவர்கள் செய்கின்ற வேலைக்கு, பழி அவர்களுக்கும், புகழ் வேறொருவருக்கும் போய்ச் சேருகிறது.

எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள், போலீஸ்காரர்கள் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்கிறார்கள் ; ஆளும் கட்சிக்குச் சாதகமாக நடந்துகொள்கிறார்கள் ; நாங்கள் சொன்னால் கேட்கமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களும், விதிக்குப் புறம்பானவற்றை, நேர்மையல்லாதனவற்றைச் சொன்னால் அவர்களால் செய்யமுடியாது அப்போது ஆளும் கட்சிக்காரர்கள், நான் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஆயிற்றே, நான் சொல்வதைச் செய்யவில்லையே என்று அவர்கள் மீது பழி போடுகிறார்கள். இப்படிப் போலீஸ்காரர்களுக்கு இரண்டு பக்கமும் இடிதான். ஒரு பழமொழி கூட சொல்வார்கள், உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி என்று. அதைப் போல்தான் இருக்கிறது போலீஸ்காரர்கள் நிலைமையும். அதற்காக அவர்கள் மீது அனுதாபப்பட வேண்டியதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

இவ்வளவு திறமையாக செயலாற்றி வருகின்ற இந்த இலாகாவிலே இன்றைக்கு இருக்கின்ற ஒரு சில குறைகளை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது தமிழக அரசு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முறையிலே தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. அதற்குத் தகுந்த முறையில் எல்லாத் துறைகளிலும் செயல்பட்டு வரும்போது, நமது காவல் துறையினர் அதுபற்றி கவலைப்படாமலே இருந்து வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, இன்னும் போலீஸ் இலாகாவிலே, மெட்ராஸ போலீஸ் என்றுதான் வைத்திருக்கிறார்களே தவிர தமிழ்நாடு போலீஸ்—டி.என்.பி.—என்று மாற்றவில்லை. ஆகவே, இதை உடனடியாக மாற்றி அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் வழி முறைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ஒரு முறை நான் குறிப்பிட்டேன். நான்கு டி.எஸ்.பி.க்கள் தேவை என்றால், சென்ட்ரலிலிருந்து மூன்று பேரை அனுப்புகிறார்கள்; நாம் ஒருவரைத் தான் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் சொல்கிறது, அங்கிருந்து வருகிற ஐ.பி. எஸ். அதிகாரி இங்கிருந்து எடுக்கப்படும் கிரேடு-1 போலீஸ் அதிகாரி ஆகிய இரண்டு பேரும் 'ஈக்வல் ஸ்டேட்டஸ்' என்று. அங்கிருந்து வருகிறவர்கள் நான்கு ஆண்டுகளில் எஸ்.பி. ஆய்விடுகிறார்கள். ஆனால், இங்கே இருபதாண்டுகள் டி.எஸ்.பி. யாக இருந்தும்





சூபரின்டென்டெண்டாக முடியவில்லை. ஆகவே, மத்திய அரசை வலியுறுத்தி, அவர்கள் இரண்டு அனுப்பினால் நாமும் இரண்டு பேரை அனுப்பவேண்டும் என்ற முறையில், 50 சதவீத 'பாரிட்டி' யைப் பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். டி. எஸ். பி. களுக்கு வேகமாக சூப்பிரின்டென்டெண்ட் பதவி கிடைப்பதற்கும் ப்ரொமோஷன் கிடைப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும்.

எங்களுடைய மாவட்டத் தலைநகர் வேலூரில்தான் போலீஸ் பயிற்சி நிலையம் இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்படுகிற போலீஸ்காரர்களை 700, 800 பேர்களைக் கொண்டுவந்து அடைத்துவிடுகிறார்கள். அதனால் சரியான முறையில் ட்ரெயினிங் தரப்படுவதில்லை. போலீஸ்காரர்களுக்குத் தரப்படுகிற சாப்பாடு போதுமானதாக இல்லை. அவர்களிடமிருந்து மாதம் இரண்டு ரூபாய் கோயிலுக்காகக் கொடுங்கள் என்று கேட்டு வாங்குகிறார்கள். ஒரு ஆயிரம் பேர் இருந்தால் மொத்தம் 2,000 ரூபாய் கோயிலுக்காகத் தரவேண்டும், கோட்டைக்காக—மத்திய சர்க்காருக்குத் தரவேண்டும். இந்த விதத்தில் கோவில் கவனிக்கப்படுகிறது என்று கோடிட்டுக் காட்டுகிறேன். ஆகவே, போலீஸ்காரர்களுக்கு சுமாரான ஒரு ட்ரெயினிங் தரவேண்டுமென்றால், எல்லா ரேஞ்சுகளிலும், அந்தந்த ரேஞ்சில் ஒரு ட்ரெயினிங் ஸ்கூல் அமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

போலீஸ்காரர்களுடைய குறைகளைப்பற்றிச் சொன்னார்கள். போலீஸ்காரர்களுடைய குறையைக் களைவதற்காகத்தான் தனியாக ஒரு போலீஸ் கமிஷன் போட்டு, அந்தக் குழு தந்திருக்கும் 113 சிபார்சுகளையும் பரிசீலனை செய்தால் கூட 'லேட்' ஆகிவிடும் என்ற காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், போலீஸ்துறையினர் மீது கொண்டிருக்கிற அக்கறை காரணமாக, உடனடியாகச் செயல்படுத்த வழிவகை செய்திருக்கிறார்கள். ஏனென்றால் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் இந்தப் போலீஸ் துறைக்கும் மெத்த தொடர்பு உண்டு. காரணம், அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்கள் மீதுதான் அதிகமான அக்கறை வைப்பார்கள். இரவோடு இரவாக லாரியில் பாளையங்கோட்டைக்கு அழைத்துச் சென்று சிறை வைத்த தொடர்பு போலீசுக்கு உண்டு. இருந்தாலும், கலைஞர் அவர்களுடைய இயல்பு என்னவென்றால், யார் தன்னை அதிகமாக எதிர்க்கிறார்களோ அவர்கள் மீதுதான் அதிகமான அன்பைச் சொரிவார்கள். முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது போலீஸ்காரர்கள் அவரை எப்படித்தான் நடத்தியிருந்தாலும், நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், எனக்குத் தெரிந்த வரையில், வேறு எந்த

மாநிலத்திலும் இல்லாத அளவு, நமது மாநிலத்தில் போலீஸ் கமிஷன் அமைத்து, அந்தக் குழுவின் சிபார்சுகளை ஆராய்ந்து, அவற்றின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் திட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவைகளுக்காக நம்முடைய முதல்வர் அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

ஆனால், இதே போலீஸ்காரர்கள் உள்நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் காக்கிறவர்கள் ஆவார்கள். இராணுவ வீரர்கள் எல்லைப் புறத்தில் போர் புரிகிறார்கள். அவர்கள் கை ஒடிந்தும் கால் ஒடிந்தும் வந்தால் அவர்களுக்கு இங்கே நிலம் தருகிறோம். வீடு தருகிறோம். புறம்போக்கு நிலம் எழுதி வைக்கிறோம். அதேபோன்று போலீஸ்காரர்களும் இந்த நாட்டில் தன்னலம் கருதாமல் பணி புரிகிறார்கள். அப்படிப்பட்ட தியாக பிம்பங்களுக்கு நாம் புறம்போக்கு நிலங்கள் அளித்து ஆதரிக்கவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்புடன் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

'ஆளுங்கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் அதிகமாகத் தலையிடுகிறார்கள்' என்றுகூட இங்கே பேசப்பட்டது. நான் சென்ற பட்ஜெட் தொடர்க் கூட்டத்தில் சொன்னேன். சொன்னதைச் செய்ய எந்த போலீஸ் அதிகாரி மறுக்கிறாரோ அந்தப் போலீஸ் அதிகாரியை மாற்றும்படியாக அப்போது விவசாய அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்கள் சொன்னார்கள் என்று முன்னாள் முதல்வர் திரு. பக்தவச்சலம் அவர்கள் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று இந்த மன்றத்திலேயே எடுத்துக்காட்டினேன். அப்படிப்பட்ட தலையீடுகளை இப்பொழுது எங்கேனும் உண்டா என்பதை ஆதாரத்தோடு எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னால், நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அப்படி ஆதாரத்தோடு குறிப்பிடுவதை விட்டு விட்டு, 'தலையிடுகிறார்கள்', 'தலையிடுகிறார்கள்' என்று பொதுப்படையாகப் பேசுவது குற்றச்சாட்டாகாது.

சென்னை மாநகரத்தில் ட்ராபிக் சரியில்லை, அது சரியில்லை, இது சரியில்லை என்றெல்லாம் இங்கே சொல்லப்பட்டது. சென்னையைப் பொறுத்தவரையில் நம்முடைய காவல் துறையின் கண்காணிப்பினால் இப்பொழுது 'சென்னை மாநகரத்தில் சாலைகளில் ஆடுமாடுகள் அதிகம் திரிவது கிடையாது. அதை ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். தெருக்களில் அதிகமாக ரௌடிகள், அன்வாண்டெட் எலிமென்ட்ஸ் திரிவது குறைந்திருக்கிறது. அதையும் ஒத்துக்கொண்டேயாகவேண்டும். ஆனாலும், நானும் ஒன்று சொல்கிறேன். 11 மணிக்கு போலீஸ் கமிஷனரோ, மற்ற ட்ராபிக்கைச் சேர்ந்த போலீஸ் அதிகாரியோ அண்ணா சாலையில் புகாரி ஓட்டலிலிருந்து ஜெமினி வரையில் வந்து பார்த்தால்,



பத்துப் பதினைந்து சைலன்சர் இல்லாமல் கார்கள் ஓடுவதைப் பார்க்கலாம். மோட்டார் சைக்கிள்கள், கார்கள் பெரிய 'ஸைலன்ட்' கிளப்பிக்கொண்டு போகிற வேகத்தைப் பார்த்தால், பொதுமக்கள் பேசுவதை காது கொண்டு கேட்க முடியாது. அந்த அளவுக்கு சைலன்சரைக் கிளப்பி விடுகிறார்கள். 100 மைல் வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டு போகிறார்கள். இதைப் போலீஸ் அதிகாரிகள் கண்டிப்பாகக் கண்காணிக்கவேண்டும். தவறு செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைப் பிடித்து, அவர்களுடைய ட்ரைவிங் லைசன்சை ரத்து செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் மட்டும் அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், என்று கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: துணை சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு போலீஸ் இலாக்காவானது மிகச்சிறந்த இலாக்கா என்பதனை கட்சிபேதமின்றி அனைவரும் இங்கே பாராட்டினார்கள். அதில் எங்கள் கட்சிக்கு எந்த விதக் கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்பெல்லாம் நமது போலீஸ் இலாக்காவினர் வெளி மாநிலங்களின் குற்றவாளிகளைக் கூட கண்டுபிடித்து, கைதுசெய்து கொடுத்து, பரிசுகள் பெற்றிருக்கின்றனர் என்றுகூட நாம் இங்கே கூறிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றையதினம் இந்த இலாக்கா தன்னிஷ்டமாக, சுதந்திரமாக, நேர்மையாக செயல்படுகிறதா அல்லது செயல்படுவதற்கு ஏதாவது இடையூறுகள் இருக்கின்றனவா என்பதை நாம் சற்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் ஒரு கருத்து கூறப்பட்டது. போலீஸ் அதிகாரிகள்கூட ஜட்ஜ்களாகச் செயலாற்றலாம், எது சரி, எது தவறு என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் அவர்களிடம் இருக்கின்றது, ஆக, அவர்கள் ஜட்ஜ் என்ற முறையிலேகூட செயலாற்றலாம் என்ற கருத்து இங்கே எடுத்துக் கூறப்பட்டது. உண்மையிலேயே இந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றால், அதைப் பாராட்டக்கூடிய நிலையில்தான் இருக்கிறோம். ஆனால், இன்றிருக்கக்கூடிய நிலையில் இந்த அரசு போலீஸ் இலாகாவில் அதிகமாகத் தலையிடுகின்ற காரணத்தினால் போலீஸ் இலாக்கா சுதந்திரமாகச் செயலாற்ற முடியவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

அண்மையில் அன்பில் கிராமத்தில் நடந்த கொலை வழக்கு சம்பந்தமாக புலன்விசாரணை செய்த போலீஸ் அதிகாரியைப்பற்றி அதிகமாகத் தாக்கி நீதிமன்றத்தில் நீதிபதி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த

மன்றமும் நாடும் நன்கு அறியும். அந்தத் தாக்குதல்களுக்கு அந்தப் போலீஸ் அதிகாரிதான் காரணமா? அப்படியானால் அரசாங்கம் அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க இதுவரையில் ஏன் தயங்குகிறது? அந்த அதிகாரிமீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அந்த நிகழ்ச்சியில் அரசு தலையிட்டிருக்கிறது என்றுதான் பொதுமக்கள் எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஒரு அதிகாரி தவறு செய்திருக்கிறார் என்றால், அவர்மீது நிச்சயமாக உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நாம் சந்தேகப்படக்கூடிய அளவில்தான் இருக்கிறோம்.

நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள், போலீஸ்காரர்களுக்கு இரு பக்கம் இடி என்று கூறினார்கள். உண்மையிலேயே நானும் அதை ஒத்துக்கொள்ளுகிறேன். அவர்கள் கூறும்போது, ஒரு பக்கம் ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் இடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். மறு பக்கம் வேறு எதையோ சொன்னார்கள். மறு பக்கம் இம்மாதிரிப்பட்ட நீதி மன்றத்திலிருந்து இடி வருகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால், இந்த நிலையில் போலீஸ் இலாக்காவை சுதந்திரமாக செயலாற்றவிட்டால்தான் நிச்சயமாக இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு நல்ல முறையில் பாதுகாக்கப்படும், நாட்டு மக்களுக்கு அது நன்மையாக இருக்கும் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அரசாங்க அதிகாரிகளுடைய வேலையில் அரசியல்வாதிகள் அதிகமாகத் தலையிடுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க இயலாது. பொதுவாக, ஆளுங்கட்சியினரைக் கண்டு அதிகாரிகள் பயப்படுகிறார்கள். ஆளுங்கட்சியினர் கூறுவதைச் செய்யவில்லையென்றால் சாதாரணமாக எங்களுக்கு ட்ரான்ஸ்பர் வருகிறது, ஆகவே நாங்கள் பயப்படுகிறோம் என்று அதிகாரிகள் மனம் திறந்து சொல்கிறார்கள். ஆளுங்கட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள், இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் இந்த நிலைக்கு போலீஸ்காரர்களைக் கொண்டுபோய் விடலாமா என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும்.

இந்த நாட்டில் போலீஸ் இலாக்கா நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்று கூறினாலுங்கூட, இதனை ஆளுங்கட்சி எவ்வளவு தூரத்திற்கு நம்புகிறது என்பதில் ஐயப்பாடு தோன்றுகிறது. ஏனென்றால், போலீஸ் இலாக்காவிற்குப் 'பாரலல்' ஆக, இன்னொரு இலாக்கா, ஆளுங்கட்சியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். 'பாரலல்' என்று சொல்லும்போது, அதற்கு சில பிரதேசங்களில் 'தமிழர் படை' என்று கூறுகிறார்கள் வேறுசில பிரதேசங்களில் வேறுபல பெயர்களை வைத்திருக்கிறார்கள், ஆட்சி





பில் இருக்கிறவர்களுக்கு தங்கள் இலாக்கா மீதும் இலாக்காவில் செயலாற்றுகிற
அதிகாரிகள்மீதும் நம்பிக்கை இருக்குமானால், நிச்சயமாக கட்சி சார்பில் இப்படி
ஒரு அமைப்பு தேவையா என்று நாம் சிந்திக்கவேண்டும். முதலமைச்சரவர்கள்
பல்வேறு தடவை கூறியிருக்கிறார்கள். 'தமிழர் படை' என்கிற இந்த
அமைப்பு தேவையற்றது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், ஆளுங்கட்சியி
லுள்ள இன்னொரு சாரார்—ஒரு வகுப்பினர்—ஒரு பிரிவு அதை ஏற்றுக்கொள்
வதில்லை; ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பிரிவு தீவிரமாகச் செயலாற்றிக்கொண்
டிருக்கிறது என்பதை நானேகூட பார்த்திருக்கிறேன்.

அண்மையில் கல்வி அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்திருந்
தார்கள். நெல்லை ஜங்ஷனில் கல்வியமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்ட
வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஐம்பது பேர் கையில் கறுப்புக்
கொடி வைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். அதற்கு எதிராக, தி.மு.க.
வைச் சேர்ந்தவர்கள் கறுப்பு சிவப்பு கொடியைத் தாங்கி பெருந்திரளாகக்
கூடிக்கொண்டு நின்றிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே கறுப்புக் கொடி
காட்டுவதற்காக வந்திருந்த தோழர்கள் மீது கற்களை எறிந்தார்கள்.

அதுமட்டுமல்ல. அதற்கு அருகாமையில் இருந்த காங்கிரஸ் காரியாலயத்
தின் மீதும் கற்கள் எறியப்பட்டன. இந்த நிலை நடக்க வேண்டுமா என்று சற்று
சிந்திக்க வேண்டும். இப்படி போலீஸ் இலாக்கா ஒரு பக்கம்—கட்சித்
தொண்டர் படை ஒரு பக்கம் செயலாற்றினால் இந்த நாட்டில் சட்டம்,
ஒழுங்கு, அமைதி எந்த முறையில் பாதுகாக்கப்படும்? கட்சியின் சார்பில்
இப்படி ஒரு படை அவசியம்தானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அடுத்ததாக சில தினங்களுக்கு முன்னால் நமது மாநிலத்தில் தொழிலாளர்
வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றதை நாம் அறிவோம். சிம்சன்,
ஆவடி போன்ற பாக்டரியில் என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம்.
இப்படி இங்கும் சரி, நெல்லையிலும் சரி இரண்டு கட்சியைச் சார்ந்தவர்களி
டையே தகராறு எழும்போது போலீஸ்காரர்கள் பார்த்துக்கொண்டிருக்கி
றார்கள். கேட்டால் ஒரு அதிகாரி சொல்கிறார் "அவர் ஹாண்ட்ஸ் ஆர் டைட்"
என்பதாக.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்கள் கை கட்டப்பட்டிருக்கிறது
என்று தங்களிடையே போலீஸ் அதிகாரி சொன்னதாகச் சொல்கிறார். அப்
படிச் சொன்ன அதிகாரி யார்? பெயரைச் சொல்வார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ்: அந்த அதிகாரியின் பெயரை இங்கே சொல்வதனால்
ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும் என்பது எனக்குத் தெரியாமல் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் இந்த இடத்திலேயே உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். அந்த அதிகாரியின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படமாட்டாது. அந்த அதிகாரியின் பெயரைச் சொல்வார்களா ?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நான் இந்த அவையின் உறுப்பினர். எதையும் பொறுப்போடுதான் சொல்வேன். என்கிற நம்பிக்கை இருக்குமானால் நான் சொல்வதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமே தவிர ....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் இந்தப் பேரவையில் முதலமைச்சராக இருக்கிறேன். என் வார்த்தையில்—நான் கொடுக்கிற உறுதிமொழியில்—நம்பிக்கை வைத்து அந்த அதிகாரியின் பெயரைச் சொல்லலாம். அதற்காக நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய நல்ல உள்ளத்தை நான் அறிவேன். அந்த அதிகாரியின் நன்மையைக் கருதி, அவர் பெயரைச் சொல்வது சரியல்ல என்று நான் உணர்கிற காரணத்தினால் அதைச் சொல்ல மறுக்கிறேனே தவிர வேறு அல்ல.

அடுத்ததாக ....

**திரு. கு. காமாட்சி:** சார், ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் தவறான கருத்தைச் சொல்லி—மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று உறுதி அளித்த பிறகும் அந்த அதிகாரியின் பெயரைச் சொல்ல மறுப்பது வருந்தத்தக்கது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அடுத்தபடியாக அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவங்களின் போது முதல் அமைச்சர் அவர்களின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் சதி நடந்ததாக

"An attempt was made on the life of the Chief Minister".

என்று குறிப்பிடப்பட்டது. முதல் அமைச்சர் அவர்களின் உயிர் என்றால் நாலரை கோடி தமிழ் மக்கள் மட்டுமல்ல—இந்தியாவில் உள்ள அனைத்துக்கட்சி மக்களுக்குமே ஒரு அக்கறை உண்டு என்பதை நாம் அறிவோம். அந்த சம்பவத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் போட்ட





போதுகூட இதுபற்றி போலீஸ் தரப்பில் சாட்சியம் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் இதுபற்றிய விவரங்கள் வேறு வழக்குகளோடு கோர்ட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். அது நடந்து ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் முதல் அமைச்சர் உயிருக்கே உலை வைக்கக்கூடியதாக இருந்த விவரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்றால் மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். முதல் அமைச்சரின் உயிருக்கே இந்த கதி என்றால் நம்முடைய உயிர்கள் என்ன ஆவது என்று அஞ்சுகிறார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த அறிக்கையில் இந்த ஆண்டு இந்த இலாகாவில் பல்வேறு வேலைக்கு ஆர்.எஸ்.ஐ. 31, ஏ.எஸ்.ஐ. 13, எஸ்.ஐ. 115 பேர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. டைரெக்ட் ரெக்ரூட்மெண்டு என்ற முறையில் இந்த இலாகாவினர் இந்த தேர்வை நடத்தினார்களா? அல்லது அரசே நேரிடையாகத் தேர்ந்தெடுத்ததா என்கிற விவரம் தரப்படவில்லை. அதை அளிக்க வேண்டும். எண்ணற்ற பேர்கள் மிக்க தகுதியுடையவர்கள் எல்லாம் விண்ணப்பித்துக்கொண்டிருந்தும் தேர்ந்தெடுக்கப்படவில்லை—அதுவும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். இது அரசியல் நோக்கத்தோடு செய்யப்பட்டதா என்பதை மன வேதனையுடன் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, போலீஸ கான்ஸ்டபிள் சம்பந்தமாக சில காரியங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் மற்ற அரசாங்க அதிகாரிகளுக்கு, பாக்டரியில் வேலை செய்கிறவர்களுக்கு எல்லாம் 8 மணி ட்யூட்டி என்கிற போது போலீஸ்காரர்களிடம் 24 மணி நேர ட்யூட்டி வாங்குவது சரியல்ல. கிராமத்தில் சொல்வார்கள்—போக்கற்றால் போலீஸ் என்பதாக—அப்படி இந்த இலாக்காவிற்கே பலர் வரத் தயங்குவார்கள் என்பதை உணர்ந்து அவர்களது வேலை நேரத்தை 8 மணிக்கு அதிகமாகாதவாறு குறைக்க முன்வரவேண்டும்.

இன்றைக்கு அவர்களுக்குக் கொடுக்கிற 1 ரூபாய் 50 காசு பேட்டாவும், 1 ரூபாய் ஆப் டியூடி அலவன்சும் போதாது—அதை அதிகப்படுத்த வேண்டும். அதோடு அவர்களுக்காக கட்டப்பட்ட கொச்சின் ஹவுஸுக்கு இன்னும் எலெக்ட்ரிக் கனக்ஷன் கொடுக்க வில்லை என்கிறார்கள். அதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அடுத்து இன்றையதினம் தூக்குப்போட்டுக்கொள்வதற்கு வெளியில் இடம் கிடைக்கவில்லை. ஆனால் போலீஸ் லாக்கப்பில் தூக்குப் போட்டுக் கொள்ளலாம் என்றவண்ணம் பலர் லாக்கப்பில் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்ததாக

அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இரண்டு பேர்கள் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார்கள் என்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாகரீகமான இந்தக் காலத்தில் லாக்கப்பில் தூக்குப் போட்டுச் செத்தார்கள் என்பதனை மக்கள் நம்ப மாட்டார்கள். இனிமேலாவது இதுபோன்ற லாக்கப்பில் நடைபெறாதிருக்க, நடக்காதிருக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. காவேரிமணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட காவல் துறை மானியத்தை வரவேற்று, ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவல் துறையினர் ஆற்றி வருகிற பணிகளையும், சிறந்த சேவையினையும் நேர்மை உள்ளம் உடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அந்த வரிசையில் நானும் இடம்பெற பெருமகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் தெளிவாக சுட்டப்பட்டிருக்கிற செய்திகள் மனத்திற்கு மகிழ்ச்சியையும், ஓர் ஆறுதலையும் கொடுக்கிறதென்பது யாராலும் மறுக்க முடியாத சிறந்த உண்மையாகும். உதாரணத்திற்குச் சொல்வதானால் வெளி மாநிலங்களில் இருந்து தவறு செய்தவர்கள், அரசியல் சட்டத்திற்குத் தப்பி வந்தவர்கள் இந்த மாநிலத்தில் நுழைகிற நேரத்தில் இங்கு இருக்கக்கூடிய காவல் துறையினர் கண்ணும் கருத்துமாக இருந்து, கிடைக்கக்கூடிய தடயங்களை வைத்துக்கொண்டு சட்டங்களின் முன்பு அந்தக் குற்றவாளிகளை நிறுத்தி தண்டித்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் அறியும்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

கொடுக்கப்பட்ட அறிக்கையிலே, சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஷயங்களிலே குறிப்பாக, சேலம் மாவட்டத்திலும், தர்மபுரியிலும், திருப்பூரிலும், சென்னை போன்ற இடங்களிலும் நடந்த நிகழ்ச்சிகள் அதாவது கள்ள நோட்டு சம்பந்தப்பட்டவைகள் பாராட்டுதற்குரியன.

அதேபோன்று மற்ற சமுதாயத்திற்கு விரோதமான பல தீய சக்திகளை நம்முடைய காவல் துறையினர் சிறந்த முறையில் கிடைத்த தடயங்களை வைத்துக்கொண்டு கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும்.

ஆனால் காவல் துறையினருக்குள்ள வசதிகள் மிகமிகக் குறைவு. வாகன வசதிகள் மட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய இன்வெஸ்டிகேஷன் முறையும் மிகக் குறைவாக இருந்தாலும், அவைகளையெல்லாம் பயன்படுத்தி, குற்றம்



செய்தவர்கள் யார், அந்தக் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருக்கக்கூடியவர்கள் யார், எங்கே அவர்கள் தங்களுடைய மறைவிடத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குச் சாதகமான பொருள்கள் எங்கே கிடைக்கின்றன, என்பனவற்றையெல்லாம், அவர்களின் பின்னாலே சென்று கண்டுபிடித்து, சமூக விரோதிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்தி, தக்க தண்டனையை வாங்கிக்கொடுக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் எப்.ஐ.ஆர். போலீஸ் ஸ்டேஷனிலே பதிவு செய்யப்பட்டவுடன் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், "அவசரமாக எடுப்பதைக் காட்டிலும், ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று சுட்டிக்காட்டினார்கள். அதில் இருக்கக்கூடிய உண்மையை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். கொடுக்கக்கூடிய எப்.ஐ.ஆர். அத்தனையும் உண்மையானவை என்று நிச்சயமாக இருப்பதற்கில்லை. அதில் சில சம்பவங்களுக்குக் கற்பனைகள் கொடுக்கப்பட்டு, விரும்பாத, வேண்டாத, உள்நோக்கம் படைத்தவர்களைக்கூடச் சேர்த்துவிடுகிறார்கள். "காக்னிசபிள் அஃபென்ஸா, நான்-காக்னிசபிள் அஃபென்ஸா" —இவை எல்லாம் வருகிறதா என்பதைப் பார்த்துவிட்டு, காவல் துறையினர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எப்.ஐ.ஆர். கொடுத்தவுடனே நடவடிக்கை எடுப்பது என்றால், இயந்திரம் வேண்டுமானால் அப்படி எடுக்கலாம். எப்.ஐ.ஆர். கிடைத்தவுடனேயே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது, எல்லாவற்றையும் தெரிந்திருக்கக்கூடிய காவல் துறையினர் மேற்கொள்வது என்றால், அது தேவையற்றது, ஜனநாயக முறையில் தேவையற்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கிடைத்த எப்.ஐ.ஆர். பதிவு செய்து, யார் யார் என்பதைக் கண்டு இன்வெஸ்டிகேஷன் முறையைக் கையாண்டு, அவர்களையெல்லாம் கோர்ட்டிலே நிறுத்துப் படுவது மட்டுமல்ல, அவர்களுடைய தொழில். அவர்கள் குற்றவாளிகள் என்று சட்டத்தின் முன்னால் நிரூபிக்கப்பட்டு, தக்க தண்டனைகளை வாங்கிக் கொடுத்திருந்தாலும், தக்க ஆதாரங்கள், தக்க சாட்சியங்கள் இவற்றிற்காக அலைந்து திரிய வேண்டிய காரணத்தால், அந்தத் தொழிலிலே ஈடுபட வேண்டிய நேரத்திலே, சில வேளைகளில் நேரமும் காலமும் அதிகமாகிறது என்பதை இந்த மாமன்றத்திலே வழக்கறிஞர்கள் பட்டம் பெற்ற நண்பர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள்.

இந்த மன்றத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காவல் துறை இந்த அளவிற்கு மட்டுமே பணிபுரியவில்லை. சாதாரணமாக இருக்கக்கூடிய நேரத்தில் சமுதாயத்தோடு ஒட்டியிருந்து, எதிர்பாராதவண்ணமாக வரக்கூடிய

நிமைகளைக் களைவதற்கு பாடுபடுகிறார்கள். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 16, 17-ம் தேதிகளில், வைகைக் கரைபுரண்டோடி. பெருவெள்ளமாக வந்தது. ஐநூறுக்கும் மேற்பட்ட உயிர்கள் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தன. காவல் துறையிலே பணிபுரியக்கூடிய அதிகாரிகளும், சிப்பந்திகளும், தீயணைப்புத் துறையிலே பணிபுரியக்கூடிய அலுவலர்களும், அன்றைக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. லட்சுமிகாந்தன் பாரதி அவர்களின் தலைமையின்கீழ் போராடி, மரணத்தோடு போராடி, அந்த உயிர்களைக் காப்பாற்றினார்கள். இது மதுரையிலே நடந்த நிகழ்ச்சி. அதற்காக காவல் துறையினருக்கும், தீயணைப்புத் துறையினருக்கும் இந்த மாமன்றத்தில் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வயர்லஸ், கம்யூனிகேஷன் பொருத்தப்பட்ட ஊர்திகள் சென்னையிலே மட்டுமல்ல, ஜனத்தொகை மிகுதியாகவுள்ள, திருவிழாக் காலங்களில் பெருந் திரளாகக் கூடுகின்ற, சிறப்புமிக்க மதுரை மாநகரத்திற்கும் இம்மாதிரியான வாகனங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் முன்பு நடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே கூறிய காரணத்தால், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாதிரியான வசதிப்படைத்த வண்டிகளை மதுரை நகரத்திற்கு அளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். ஊர்க்காவல் படை இன்றையதினம் பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றது. பெரு நகரங்களில் ஊர்க்காவல் படை பணிபுரிந்து வருகிறது. பேரூராட்சி, ஊராட்சி மன்றம் இருக்கக்கூடிய பகுதிகளிலும் ஊர்க்காவல் படையை அமைக்க வேண்டும். அப்படி ஊர்க்காவல் படையை அமைத்தால் அந்தப் பகுதிகளில் திரிந்துகொண்டிருக்கக்கூடிய ரவுடிகள், சமுதாயத்தில் தீய எண்ணங்களை பரப்பிக் கொண்டிருக்கக்கூடியவர்கள், சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு திருடக்கூடியவர்கள், ஏதாவது ஒன்றைச் செய்துவிட்டு, சமூகத்தின்மீது பழிபோடும் சமூக விரோதிகள் ஆகியோரை ஒழிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

அடுத்தபடியாக, பெரிய நகரங்களில் காவல் துறையிலே 'டிடெக்டிவ் டிபார்ட்மென்ட்' என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி கிராமப் புறங்களில் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். எங்களை போன்றவர்கள் விரும்புவது எல்லாம் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் எதனால் கொந்தளிப்பு அடைகிறார்கள், எதனால் கலவரம் உண்டாகிறது என்பதைக்





கவனிக்க வேண்டுமென்பதுதான். கிராமப்புறங்களில் ஆரம்பிக்கப்படும் கலவரங்களுக்கெல்லாம் நிலத் தகராறே காரணமாக இருக்கும். இந்தக் கலவரம் முற்றி, கடைசியில் கொலையில் போய் முடிகின்றன. ஆகவே, இம்மாதிரி யான கலவரங்கள், நிலத் தகராறு ஏற்படாமல் தடுப்பதற்கு, கிராமப்புறங்களில் இருக்கும் காவல் நிலையங்களில்—டவுன்களில் டிடெக்டிவ் டிபார்ட்மென்ட் இருப்பதைபோல டிடெக்டிவ் டிபார்ட்மென்ட் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். 'சிவில் சம்பந்தப்பட்ட வழக்கு' என்று சொல்லி, இப்போது ஒதுக்கிவிடுகிறார்கள். யார் பவரில் இருக்கிறார்கள் என்று பார்க்காமல், பொது மக்கள் நீதியைப் பெறுகின்ற வகையில், நீதியை நிலைநிறுத்துகின்ற வகையில் அந்தந்த காவல் நிலையங்களில் தனிப் பிரிவை ஏற்படுத்தி அமைதியைக்காக்க மூற்பட்டால், காவல் துறை இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. சௌடி சுந்தரபாரதி தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். என்னுடைய தொகுதியும், அவருடைய தொகுதியும் பத்து மைல் வித்தியாசத்தில்தான் இருக்கிறது. கிராமப்புறங்களில் வயல்களில் தண்ணீர்ப் பாய்ச்சுவதற்கு மோட்டார் பொருத்தப்பட்டிருக்கின்றது. அதைச் சிலர் லாவகமாக திருடுகிறார்கள். அப்படிப்பட்ட கூட்டத்தை ஒழிக்க வேண்டும். அப்படி மோட்டார் இயந்திரங்களைத் திருடும் கூட்டத்தார், அதை திருடிக்கொண்டு, அதே இடத்தில் ஒரு கடிதத்தையும் எழுதி வைத்து விடுகிறார்கள். அந்தக் கடிதத்தில் 'இன்ன இடத்தில் இன்ன மணிக்கு வந்து சந்திக்கவும், என்று குறிப்பு எழுதி வைத்து விட்டுப் போகிறார்கள். இந்தமாதிரி யான திருட்டுக்கள் எங்கே நடக்கிறது என்றால், காரியாப்பட்டியிலிருந்து, மதுரை விமான நிலையத்திற்கு இடையேயுள்ள இடங்களில்தான் நடக்கின்றது. போன ஆண்டு இதே குறையைச் சொன்னேன். அதற்குப் பின்னால் தனிப் பிரிவை நிறுத்தி, அத்தகைய தீய எண்ணம் படைத்தவர்கள், திருடர்களைக் கைது செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த டிடெக்டிவ் பிரிவை விரிவுபடுத்த வேண்டும். சாதாரண விவசாயிகள் கடன் வாங்கி மோட்டார் பம்ப் செட்டுகளை வாங்கி உபயோகப்படுத்தினால் அதைத் திருடிக்கொண்டு போகிறார்கள். இந்த தனிப் பிரிவை ஏற்படுத்துவதன் மூலம் அத்தகைய திருடர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பதைக் கூறி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் உள்ள இத்தகைய காவல் படையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதுமட்டுமல்ல, ஊர்க்காவல் படையையும் ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, எல்லாக் கிராமங்களிலும் இருக்கக்கூடிய 'அவுட்-போஸ்ட்' போலீஸ் ஸ்டேஷன்களில் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1973 மார்ச் 15

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய நாள் நமது பேரவையில் நமது முதல்வர் அவர்கள் கொண்டிருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, ஆதரித்து சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறை மானியத்தில் ஏறத்தாழ இருபது கோடி ரூபாய்க்கு மேலாக கேட்கப்பட்டிருக்கிறது. காவல் துறை தன்னுடைய கடமையையும் பொறுப் பையும் எந்த அளவுக்குச் சீரோடும் சிறப்போடும் செய்து வருகிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த மன்றத்திலே விளக்கம் தந்தார் கள். ஆனால் மாற்றுக்கட்சியைச் சேர்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள் காவல் துறையினுடைய குறைபாடுகளையும் புலனாய்வுத் துறையிலே ஏற்படும் கணக்கத் தையும் பொய்வழக்குப் போடுவதாகவும், அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள் தலையிடும் நிகழ்ச்சியையும் சொல்லி, அதை வைத்துக்கொண்டு காவல் துறை சரிவரக் கடமையைச் செய்யவில்லை என்று குற்றச்சாட்டுகளைச் சாட்டினார்கள்.

தமிழ்நாட்டிலே காவல்துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் இந்தியாவிலே மட்டுமல்ல; உலகத்திலேயே இரண்டாவது அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பதையும் ஸ்காட்லண்ட் யார்டுக்கு அடுத்தபடி சிறப்புப் பெற்றவர்கள் என்பதையும் எடுத்துச் சொல்லிப் பாராட்டினார்கள். அதிலே வேறுபட்ட கருத்து இருக்காது என்று கருதுகிறேன். காவல் துறை எவ்வளவு சிறப் போடும் சீரோடும் நடந்து வருகிறது என்பதற்கு சமீபத்திலே மற்ற மாநிலங் களிலே நடந்த தேர்தல் நிகழ்ச்சிகளையும் அமைதியும் ஒழுங்கும் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட்டது என்பதையும் நாம் அன்றாடம் செய்தித்தாள் களிலே பார்க்கிறோம்.

ஆனால், தமிழகத்திலே நடந்து முடிந்த தேர்தலிலே அமைதியை நிலை நிறுத்தவும் ஒழுங்கைப் பேணிப் பாதுகாக்கவும் பொதுமக்கள் அக்கறை எடுத்துக்கொண்டு, காவல் துறை எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றியது என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். காவல் துறையிலே கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்கும் பிறகு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே சென்னை நகரத்தில் பிளாட்பாரங்களிலே கடைகளை வைத் திருந்ததன் மூலமாக போக்குவரத்துக்கு இடைஞ்சல் இருந்ததைப் போக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு எல்லாம் நாக்கீது கொடுத்து, தெருக்களிலே போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக கடைகள் இல்லாத முறையைக் கொண்டு வந்த பெருமையும் சிறப்பும் காவல் துறையையே சேரும். சென்னை நகரத்திலே இரவு 12 மணி வரையிலும்கூட ஒலிபெருக்கியினால் ஏற்பட்ட சத்தத்தின் இடைஞ்சலைப் போக்குவதற்காக ஒலிபெருக்கியிலிருந்து சத்தம் அந்த இடத்திற்கு மட்டும் கேட்கக்கூடிய வகையிலே அதனை மாற்றியமைத்து, ஒரு பெட்டிபோல் அமைத்து, அந்தச் சத்தத்தை மற்றவர்கள் கேட்டு இடைஞ்சல்



1973 மார்ச் 15] [திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி]

உண்டாகாதவண்ணம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றால் அது பாராட்டுக் குரிய ஒன்றாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதைப்போல் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் சென்னை நகர வீதிகளிலே சென்றதை ஒரு இடத்திலே பிடித்துவைத்து, அவற்றிற்காக தகுந்த அபராதம் விதித்து, கால்நடைகளின் நடமாட்டம் வீதிகளிலே இல்லாத அளவுக்கு கால்நடைகளினாலே பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் எந்த விதமான இடைஞ்சலும் இல்லாத அளவுக்குச் செய்திருக்கிறார்கள். அதையும் நாம் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பழைய ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சியின்போது அரசியலிலே தலையிடுவதும், பொய் வழக்குகளைப் போட்டதும் நாடு மறந்திருக்க முடியாது. 1967-க்கு முன்னாலே காவல் துறை எப்படியிருந்தது, இப்பொழுது 1967-க்குப் பின்னாலே காவல் துறை நிர்வாகம் எப்படியிருக்கிறது என்று பார்த்தால்—காவல் துறையைப்பற்றி என்னைத்தவிர வேறு யாருக்கும் அதிக மாகத் தெரிந்திருக்கமுடியாது—முதுகுளத்தூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே 1957 முதல் 1967 வரையிலே நடந்திருக்கின்ற ரத்த வெறியாட்டங்கள் எல்லாம் அரசினுடைய தூண்டுதலால், அரசிலே பொறுப்பு வகித்த, குறிப்பாக முதலமைச்சர் எல்லாம் தூண்டிவிட்டதையும் அதற்காகப் பல சான்றுகள் இருக்கின்றன—நான் நிரூபிப்பதற்குக் கூடத்தயா ராக இருக்கிறேன்.

ஆனால், இந்த ஆட்சியிலே எங்கேயும் பொய்வழக்குப் போடுவதாகவோ அமைச்சர் தூண்டுவதாகவோ நான் பார்க்கவில்லை. 1957-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரையில் சாதாரணமானவர்கள் மீது அப்பாவி மக்கள் மீது ஆயிரக்கணக்கான பொய்வழக்குகள் போட்டார்கள் என்பதை யாரும் மறந்து விடவில்லை. ஜனநாயகத்திலே மரியாதை தரப்பட வேண்டுமென்ற முறையிலே இப்பொழுது எதிர்க் கட்சிகளுக்கு எல்லாம் உரிய மரியாதை தரப்படுகிறது. ஆனால் 1967-க்கு முன்னாலே சட்டசபை உறுப்பினர் எதிர்க் கட்சியாக இருந்தால் கூட காவல்கூட மதிப்பது கிடையாது. மண்டலக் காங்கிரஸ் கமிட்டி மெம்ப ருக்கு காட்டுகிற மரியாதைகூட கிடையாது. அவர்கள் விரலைக் காட்டியவர்கள் மீது எல்லாம் வழக்குப்போட்ட நிகழ்ச்சிகளையும் வாக்காளர் பட்டியலை வைத்துக்கொண்டு தகப்பனார் பெயர்பார்த்து பொய்வழக்குகளைப் போட சொன்னதையும் நாடு மறந்துவிடவில்லை. இதையெல்லாம் நிரூபிக்க முடியுமா என்று கேட்பார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1952-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையில் எந்த எந்த நிகழ்ச்சி களிலே தலையிடப்பட்டது, குறிப்பாக அமைச்சராக அப்போதிருந்தவர்,

முதலமைச்சராக இருந்த காமராஜ் இவர்கள் எல்லாம் யார் யார் போலீஸ் துறையை நிர்வகித்து வந்தார்களோ அவர்கள் எல்லாம் முதுகுளத்தூர் பகுதியிலே போய் வழக்குப் போடச் சொன்னதையும் சுடச் சொன்னதையும் ரத்த வெறியாடச் சொன்னதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உளுத்திமடை என்ற இடத்திலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் காவல் துறை லாரியை தள்ளிவிட அழைத்துவந்து சுட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அங்கத்தினர் அவர்கள் 57 முதல் 67 வரையிலும் என்ன என்னவோ நடந்தது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது எல்லாம் அவர்கள் ஸ்தாபனத்திலேதான் இருந்தார் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: அப்பொழுது அவர்கள் ஸ்தாபனத்திலே நான் இல்லை. நானும் புதுக்கோட்டைச் சிறையிலே இரண்டு ஆண்டுக் காலம் சிறை வைக்கப்பட்டேன். என்மீதும் பொய்வழக்குப் போடப்பட்டது. நான் உண்மையாகவே சொல்கிறேன். காமராஜ் அவர்கள் என்னை அப்பொழுது நான் அந்த வழக்கின் உண்மையைக் கூறுகிறேன். நான் அந்தக் கிராமத்திலே காமராஜர் அவர்கள் 67-லே எங்களை அழைத்துப்பேசி, எங்களுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டார்கள். நாங்களும் ஆதரவு தந்தோம். ஆனால் துப்பாக்கியால் சுட்டேன் என்று பொய்வழக்குப் போடப்பட்டது. நான் உண்மையிலேயே அந்த கிராமத்திற்குள் இன்றுவரை சென்றது கிடையாது. என்னுடைய ஒப்பற்ற தலைவர் மறைந்த தேவர் அவர்கள்மீது வழக்குப்போடும் போது என்னையும் சேர்த்து, வீரம்பல் மாதாகோயிலில் அடைக்கலம் புகுந்தவர்களை நான் சுட்டேன் என்று பொய்வழக்குப் போட்டார்கள். அப்பொழுது அம்மையார் அவர்கள்தான் வழக்குரைஞர் என்ற முறையிலே ஜாமீன் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். நான் இரண்டாண்டுக் காலம் சிறையிலே இருந்து, பிறகு நீதிமன்றத்திலே நிரபராதி என்று விடுவிக்கப்பட்டுவிட்டேன்.

ஆனால், பின்னாலேதான் அவர்கள் கூடாரத்திலே மயங்கி இருந்த நிலையில் காமராஜர் அவர்கள் 67-லே எங்களை அழைத்துப் பேசி எங்களுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டார்கள். நாங்களும் ஆதரவு தந்தோம். ஆனால் நான் உண்மையாகவே சொல்கிறேன். காமராஜ் அவர்கள் என்னை அப்பொழுது அழைத்துப் பேசினார். நான் பல பேர்களைச் சுடச்சொன்னேன், பல தவறுகளைச் செய்தேன், அதனால்தான் இந்தப் பகுதி மக்கள் என்மீது வெறுப்பாக இருக்கிறார்கள், உங்களைப்போல் ஆட்களைப் பயன்படுத்தி, நான் இறுதிக்கட்டத்திலாவது புண்ணியத்தைத் தேடி, அந்தப் பாவங்களைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று என்னிடத்திலே நேரிலேயே விருதுநகர் சுற்றுலா மாளிகையிலே சொன்னார். பெரியவர் சொன்னார் என்ற அந்த எண்ணத்திலே அந்தக் கூடாரத்திலே சேர்ந்து ஆதரவாக வேலை செய்தது உண்மை. அந்த அளவுக்கு



சாதாரணமாகச் செல்வாக்குப் படைத்தவர்கள் அல்ல, அமைச்சராக இருந்தவர்கள், போலீஸ் துறைக்கு தொலைபேசி மூலம் 5, 6 பேர்களைக் கட்டிவைத்துச் சுடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மறைந்த எங்கள் தலைவர் தேவர் அவர்கள் நீதிமன்றத்திலே வாக்குமூலம். அளிக்கும்பொழுது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது கொடுத்த வாக்குமூலம் எல்லாம் அரசாங்கத்திலே இருக்கும். ஒருவேளை 1967-லே கொளுத்தினார்கள் கொளுத்தினார்கள் என்று சொன்னார்களே அந்தக் கொளுத்தலிலே போய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. கோட்டையிலே ரகசியமாக ரெக்கார்டுகள் இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசிலனை செய்யச் சொல்லி, இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு எல்லாம் ஆதாரங்கள் தேடிவாரி பார்த்து எந்த எந்த அதிகாரிகள் மூலம் பொய்வழக்குப் போட்டார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

இதைவிட ஆச்சரியம். எதிர்க் கட்சிக்காரர்கள் அப்பொழுது ஆட்சியிலிருந்தபோது போலீஸ் லாரியிலேதான் காங்கிரஸ் கொடி மற்றவையும் வரும், அதன் மூலம்தான் அவர்கள் கிராமங்களிலே கூட்டங்கள் நடத்தினார்கள். மண்டல காங்கிரஸ் கமிட்டி என்று அப்பொழுது இருந்தது. அந்த மண்டல காங்கிரஸ் கமிட்டியிலிருந்து பொய்வழக்குப் போடச் சொல்லிவிட்டால் அவர்களுக்குப் பெரிய தண்டனை கிடைக்கக்கூடிய வழக்கு போடுவார்கள்.

காங்கிரஸ்காரர்கள் இதையெல்லாம் செய்த பாவம்தான் இப்பொழுது எதிர்க் கட்சியிலே வந்திருக்கிறோம் என்று தாம் செய்தவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னென்ன தவறுகளைச் செய்தோம் என்பதைப் பார்த்துவிட்டு இப்பொழுது கழக அரசில் ஜனநாயகம் காப்பாற்றப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கேயுள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கும் தெரியும், வணக்கத்திற்குரிய மதுரை மேயர் முத்து அவர்களுக்கும் தெரியும், அப்படிப்பட்ட கட்சித் தலைவர்கள் கலவரத்தைப் பார்க்கச் சென்ற பொழுது எந்த அளவிற்கு அவர்கள் சட்டையைக் கிழித்து—ஜாதி பற்றிச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சமுதாயத்தில் சேர்ந்தவர் என்பதாகச் சொல்லி—நீர் எப்படி வரலாம் என்று அவரைச் செய்த இம்சையெல்லாம் எந்த அளவிற்கு ஜனநாயகத்திற்கு மரியாதையைக் கொடுத்தது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது ஜனநாயகம் கெட்டுவிடவில்லை, சட்டம் கெட்டுவிடவில்லை, ஒழுங்கு கெட்டுவிடவில்லை. சட்டம், ஒழுங்கு நன்றாகத்தான் இருக்கிறது. நாம் இரும

நாலடுக் காலம் ஆண்டோமே, இப்பொழுது சாதாரணமானவர்கள் ஆளுகி
றார்களே என்ற காழ்ப்புணர்ச்சியோடு பேசுவது நல்லது அல்ல என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் போலீஸ் மானியக் கோரிக்கையின்மீது என் தொகுதிபற்றிக் கூறி
விட்டு விடைபெறலாம் என்று நினைக்கிறேன். இப்பொழுது எங்கள் பகுதியில்
பல போலீஸ் காவல் நிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் காலத்தில்
பள்ளிக்கூடமாக இருந்த இடங்களை பக்கா போலீஸ் ஸ்டேஷனாக மாற்றி
விட்டார்கள். சின்னச்சின்னப் பள்ளிக்கூடமாக இருந்த இடங்களை கலயரத்
தில்பொழுது இப்படி மாற்றிவிட்டார்கள். எனவே போலீஸ் ஸ்டேஷன்களுக்கு
நல்ல பக்கா கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவிலாங்குளம், கீழத்தூவல் போன்ற இடங்களில் நல்ல கட்டடங்கள்
கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதுகுளத்தூர், கமுதி நக
ரங்களுக்கு 2 டெபுடி சூப்பிரன்டென்ட் ஆஃப் போலீஸ், போட்டிருக்கிறார்கள்.
10 மைல் இடைவெளியில் இரண்டு பேர்களைப் போட்டுவிட்டார்கள். இருவரும்
குடியிருப்பில்லாமல் யாருமே வசிருப்பமில்லாத முறையில் இருக்கிறார்கள்.
அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தந்து, அந்த போலிசாரின் குறை
களைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் சேர்மன் சார், இந்தப் போலீஸ்
மானியமானது எவ்வளவுதூரம் சபையின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது
என்பது இன்றைக்குப் பிற்பகலில் அதிகமான அங்கத்தினர்கள் வந்து இதிலே
பங்கெடுத்துக் கொண்டிருப்பதிலிருந்தே தெரிகிறது. ஆகவேதான் எங்கள்
கட்சியின் சார்பில் எங்கள் நிலையைத் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர்
திரு. மணலி கந்தசாமி அவர்கள் வலியுறுத்திப் பேசிய பிறகும் வேறு சில
விஷயங்களை வலியுறுத்த வேண்டுமென்ற முறையிலே நான் சொல்ல விரும்பு
கிறேன்.

இந்த போலீஸ் மானியத்திலே மணலி அவர்கள் பேசும்பொழுது போலீசார்
செய்யக்கூடிய எல்லாக் காரியங்களிலுமே அரசாங்கத்தின் கொள்கையை அமல்
படுத்துகிறார்கள் என்பதை வலியுறுத்திக் கோடிட்டு காட்டினார்கள். அதே
மாதிரி, எந்தெந்த இடத்திலேயெல்லாம் இந்தப் போலீசாரோடு ஆளுங்கட்
சியினர் தலையிடுகிறார்கள் என்பதைக்கூட பொதுவாக அவர்கள் சுட்டிக் காட்டி
னார்கள்.

இதற்கு உதாரணம் வேண்டுமென்றால், ஜனவரி மாதம் 27, 28 தேதிகளிலே
ஆவடியில் நடந்த சம்பவத்தைப் பார்த்தால் 2, 3 அம்சங்கள் தெளிவாகும்.
நாங்கள் தொடர்ந்து சென்ற சட்டசபையாகயிருந்தாலும், இந்த சட்டசபை





யாகயிருந்தாலும், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் போராட்டங்
களில் போலீசார் தலையிடு கூடாது, அப்படிப் போலீசார் தலையிட்டால் சிக்கல்
ஏற்பட்டுவிடும் என்பதைத் தெளிவுபடுத்தினோம். இந்த நிலையிலிருந்து
இன்றைக்கும் நாங்கள் மாறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவடியில் நடந்த போராட்டத்தில் ஆவடியில் 'புரொஹிபிட்டெட் ஏரியா'
வுக்கு அப்பால் இருந்த தொழிலாளர்களைப் போலீசார் தாக்கியிருக்கிறார்கள்.
பத்திரிகைகளிலே சில தலைவர்களின் பெயர்கள்தான் விளம்பரமாகியிருக்கிறதே
தவிர, ஏ. சீனிவாசன் அவர்களும், காங்கிரஸ், முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட்
கட்சி என்று இந்தக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கும் சாதாரணத் தொழி
லாளர்களெல்லாம் படுமோசமாகத் தாக்கப்பட்டு காயமுற்றார்கள். எந்தவிதமான
தடையுமில்லாத ஓரிடத்திலே அன்றைக்கு சுந்தரம் அவர்கள் தாக்கப்
பட்டார்கள், பக்கத்திலிருந்த மற்றத் தொழிலாளர்களும், சிந்தன், குசேலர்
போன்றவர்களும் தாக்கப்பட்டார்கள் என்றால் அதில் எந்தவிதமான நியாயமும்
சொல்ல முடியாது. ஆகவே அன்றைக்கு அம்மாதிரியாக போலீசை ஏவிவிட்டு
அடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால்,
போலீசார் தாங்களாவேதான் செய்திருந்தார்கள் என்றால், அப்படி தாங்க
ளாகச் செய்த அந்தப் போலீஸ் அதிகாரிகளின் பெயரிலே நடவடிக்கை எடுத்
திருக்கவேண்டும். ஆகவே, இதுவொரு மிக முக்கியமான, தமிழகத்தில் மட்டு
மல்லாமல் இந்தியா பூராவிலுமே தொழிற்சங்க இயக்கத்தில் உள்ளவர்களுக்கு
கவலைதரும் செய்தியாக ஆகிவிட்டது. ஆகவே, அதைப்பற்றி அரசின்
நிலையை அறிவதற்கு நாங்கள் விரும்புகிறோம்.

அதேமாதிரி, சென்ற தொடருக்குப் பின்னால், இப்பொழுது மத்திய சர்க்கார்,
நாம் எப்படி போலீஸ் கமிஷன் அமைத்தோமோ அதைப்போல், போலீஸ்
இலாக்காவிலே என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேள்வித்
தாளை எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நான் ஒரு கேள்விகூட இங்கே
அனுப்பியிருக்கிறேன், மாநில அரசின் கருத்து என்ன என்று. அப்படியானால்
அது சம்பந்தமாக மாநில அரசின் கருத்து, இன்றைக்கிருக்கும் போலீஸ்
நிர்வாகத்தின் கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்ற தடவை இதே போலீஸ் மானியத்தின் மீது பேசும்
பொழுது இரண்டு மூன்று விஷயங்களை நான் அப்பொழுது வற்புறுத்தி இருந்
தேன். அந்த விஷயங்களிலே ஏதாவது அமலாகியிருக்கிறதா என்று பார்த்
தால் அமலாகவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டி
யிருக்கிறது. சாதாரணமாக இந்தப் போலீஸ் காலனி, கொச்சின் ஹவுஸ்
என்பதில் 300 பேர்கள் சாதாரண போலீஸ், ஹெட் கான்ஸ்டபிள், எஸ்.ஐ. என்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 15

இருக்கிறார்கள். சென்ற ஆண்டு அங்கு எந்தவிதமான விளக்கு வசதியும் இல்லாமல் இருந்தது. அந்த 300 வீடுகளிலும் இன்று போய்ப் பார்த்தாலும் லைட் இல்லாமல் இருக்கிறது. நாங்கள் இங்கு எழுப்புகின்ற கருத்துக்கள் எந்த அளவிற்குக் கவனிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இதைக் கூறினேன். அதேபோல் மதுரையிலே ரிசர்வ் போலீஸ் ராம்னாட் ரிசர்வ் போலீஸ் என்று இரண்டு காலனிகள் இருக்கின்றன. அங்கு எப்பொழுதுமே தண்ணீர் கிடைக்காத கஷ்டம் பெரிய பாடாக இருக்கிறது. இலவசமாக யாரோ தண்ணீர் கொடுப்பதுமாதிரி இருக்கிறதே தவிர, இன்றைக்கு நகரசபையைக் காட்டுகிறார்கள், அல்லது குடிதண்ணீர் திட்டத்திற்காக இருக்கும் வாரியத்தைக் காட்டுகிறார்கள். போலீஸ் துறையினர் என்ன செய்கிறார்கள் என்று தெரிய வில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக சிரமமில்லாத அளவில் குடி நீருக்கு உத்தரவாதம் செய்ய வேண்டும். அப்படி நான் எழுப்பிய விஷயமும் கவனிக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இன்னொன்று, எற்கனவே லாக்கப்பிலே பலபேர் இறக்கின்ற விஷயத்தைப் பற்றி. அந்த விஷயத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். இதேசபையில் சேலம் ஹஸ்தம்பட்டியில் மஞ்சுளா என்ற பெண், பேங்க் சிப்பந்தியின் மகள் அடிபட்டு இறந்துவிட்டாள் என்ற விஷயம் எழுப்பப்பட்டது. அந்தச் சமயத்தில் முதல்வரவர்கள் பதில் சொல்லும்பொழுது எனக்குக் கிடைத்த விவரம் இப்படி, இருந்தாலும் மீண்டும் விசாரணை செய்வதற்காக ஐ.ஜி.க்கு அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். அது நடந்ததா, அதன் முடிவுதான் என்ன, எற்கனவே கொடுத்த ரிப்போர்ட்டை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்களா அல்லது மாற்றிச் சொல்லியிருக்கிறார்களா என்ற விஷயம் தெரியவில்லை.

அடுத்ததாக, பொதுவாக போலீஸ் இலாக்காவிலிருந்து கிட்டத்தட்ட போலீசாரோடு சம்பந்தப்பட்ட இலாக்காவில் பதவி உயர்வு கொடுக்கின்ற விஷயம். 1954-ஆம் வருஷமோ என்னவோ என்று நினைக்கிறேன், திருச்சி மத்திய சிறைச் சாலையில் எஸ்.பி. யாக வேண்டிய ஒருவர்—பெயர் வீராசாமி ஐயர், அடிஷனல் சூப்பிரண்டெண்டென்டாக இருந்தார், இப்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார், அதனால் சொல்வதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன்—அவர் கூறினார், நான் உண்மையிலேயே எஸ்.பி. ஆக இருக்க வேண்டும், ஆனால் இந்த ஆட்சி அல்ல, வேறு ஆட்சி இருந்தது, நான் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்ல வில்லை—நான் கொஞ்சம் இண்டிபெண்டெண்டாக இருப்பவன், ஆகவே சிறையிலே கொண்டுவந்து அடிஷனல் சூப்பிரண்டெண்டெண்டாகப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோல் இன்றைக்குப் பார்க்கிறோம். யாரையும் குறை சொல்லவில்லை, இன்றைக்குச் சிறைச்சாலையிலிருக்கும் பெரிய



1973 மார்ச் 15] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அதிகாரி ஐ.ஜி. ஆபீஸ் பிரிசன்சாக எற்கனவே போலீஸ் உத்தியோகத்தில் இருந்த ஒருவரைப் போட்டுள்ளார்கள். அந்த முறை வேண்டாம் என்பது எங்கள் கருத்து. இதனால் அந்த அதிகாரிகளுக்கு உற்சாகமூட்டாத நிலை ஏற்பட்டாலும், அல்லது அதே இலாக்காவிலுள்ள புரமோஷனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களை ப்ளாக் செய்வதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். கரிவலம்வந்தநல்லூரில்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சென்ற தடவை நான்கு இடத்தில் நடந்து விசாரணை நடத்தியிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள்.

வரதராஜன் கமிட்டி ரிப்போர்ட்டில் தென்காசி துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பது அவசியந்தானா என்ற கேள்வியை எழுப்பிவிட்டு, கடைசியில் சில காரணங்களைச் சொல்லி, இந்த நிலைமையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது என்று கூறி முடித்திருக்கிறார்கள்.

இராமகிருஷ்ணன் ரிப்போர்ட்டைப் பார்த்தாலும் கூட, கடைசியில் நியாயப் படுத்தினாலும் கூட, போலீஸ் பக்கத்தில் இந்த அளவுக்கு வன்முறை இருக்க வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பத்தான் செய்திருக்கிறார்கள்.

முக்கியமான விஷயம், நமக்குக் கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகள் அமலாக்கப்படுகின்றனவா என்று பார்த்தால் சென்ற தடவை எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை கிளாஸ் 1 போலீசாக எடுப்பதாகச் சொன்னார்கள். ஆயிரம் பேரை எடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது ஆய்வுரையில் பார்த்தால் 500 பேருக்குத்தான் பயிற்சி கொடுக்கிறார்கள். ஆயிரம் பேர் பயிற்சி பெறுவார்கள், எடுக்கப்படுவார்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கும்போது 500 பேருக்குத்தான் பயிற்சி கொடுக்கப்படுகின்ற நிலை இருக்கிறது என்பதற்காக இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பயர் சர்வீஸ் சம்பந்தமாக எந்த உறுப்பினரும் விவரமாகப் பேச வில்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டாகிவிட்டது. தனி இலாகாவாக அமைக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. இந்த வருஷம் முதல் இதை மதுரை ஒரு பகுதியாகவும், சென்னை ஒரு பகுதியாகவும் ஆக்கியிருப்பது அதைச் செழுமைப் படுத்த உதவிகரமாக இருக்கும். அதிலே கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் வரை பணி புரிகிறார்கள்: இதிலே இருப்பவர்கள் எற்கனவே போலீசோடு இணைக்கமாக இருக்கும் இலாகாவிலே பயிற்சி பெற்றவர்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர் களுக்கு நல்ல வாய்ப்பு, ப்ரொமோஷன் மற்ற விஷயங்களில் வாய்ப்புகள் இல்லை

என்று மனுக் கொடுத்திருக்கிறார்கள். பகிரங்கமாகக் கொடுக்கத் தைரியம் இல்லை. தங்களுடைய குறைகளை எல்லாம் எங்கள் போன்றவர்களிடம் சொல்லி யிருக்கிறார்கள்.

நான் சமீப காலத்தில் நடந்த சொந்த அனுபவத்தை வைத்துச் சொல்ல முடியும். அவர்களுடைய சேவை ரொம்பப் பாராட்டத்தக்கதாக இருந்தது. மதுரையில் வைகையாற்றில் வெள்ளம் வந்து பெருமளவு சேதம் ஏற்பட்டது. ஹெலிகாப்டரே கவிழ்ந்தது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சமயத்தில் ஜில்லா கலெக்டர் பாரதி அவர்களுடைய சேவையும் பாராட்டத்தக்கது. அவர் ஹெலி காப்டரில் போயிருக்க வேண்டியவர். முதல் தடவை ஹெலிகாப்டரில் போய் வந்தார். இரண்டாவது தடவை ஹெலிகாப்டர் கவிழ்ந்துவிட்டது. அந்தச் சமயத்தில் பயர் சர்வீஸில் இருக்கிறவர்கள் செய்த சேவையை மதுரை மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள். அவர்கள் இன்னும் அதிகமான அளவுக்கு இருந் தால் இன்னும் உதவிகரமாக இருக்கும். இதுபற்றி வெட்டுப் பிரேரணை கூடக் கொடுத்திருக்கிறேன். காத்தான் என்பவர் 200 பேரைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி தினத்தந்தி, மாலைமுரசு பத்திரிகைகளில் மட்டு மல்லாமல் மற்ற எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. காத்தான் என்ற 28 வயதுள்ளவர் போலீசார் தடுத்தும் கேளாமல் 200 பேரைக் காப்பாற்றிய தாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. 50 பேரையாவது நிச்சயம் காப்பாற்றி இருக்க முடியும். தினமணி போன்ற பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் அங்கத்தினர் அவர்கள் 'தினத்தந்தி, மாலைமுரசு பத்திரிகைகளில் மட்டுமல்ல' என்று ஏன் சொன்னார்கள்? அதிலே போடுகின்ற நிலை சரியல்ல என்பதற்காகவா?

திரு. கே. டி. கே. தங்கமணி: உறுப்பினர் அவர்கள் எந்த முடிவுக்கு வேண்டு மானாலும் வரலாம். இரண்டு பத்திரிகைகளில் மட்டுமல்ல, எல்லாப் பத்திரிகை களிலும் போட்டார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன். மதுரையிலிருந்து வருகின்ற எல்லாப் பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் போட்டிருந்தார்கள். அவருக்குக் கிடைத்த சன்மானம் பூராவும் ரோட்டரி கிளப்பில் 100 ரூபாய் கொடுத்து, ஒரு குத்துவிளக்கு கொடுத்ததுதான். இப்படிப்பட்டவர்கள் கண்டிப் பாக பயர் சர்வீசில் இடம் பெற வேண்டும். 26, 28 வயதான அவர் மிகுந்த உதவியாக இருப்பார். அந்தக் காரியங்களில் ஈடுபட்ட பயர் சர்வீஸ் அதிகாரி களுக்கு ப்ரொமோஷன் கொடுப்பது, ரெகக்னிஷன் கொடுப்பது போன்ற காரியங் களைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள், விவசாயிகள், அரசியல் கட்சிகள் கூட்டங்கள் நடத்துகிறார்கள். நேரடியாக அனுபவிக்கக் கூடிய கஷ்டம் ஒரு வாரத்திற்கு



முன்பு பர்மிஷன் வாங்க வேண்டுமென்பதாகும். ஒரு நாளைக்கு முன்பு பர்மிஷன் வாங்க வேண்டுமென்றால் 2 ரூபாய், 3 ரூபாய் முத்திரைத் தாளில் வாங்க வேண்டி யிருக்கிறது. பர்மிஷன் வாங்கிய பிறகு மதுரை போன்ற இடங்களில் கூட்டம் 7 அல்லது 8 மணிக்குத்தான் ஆரம்பமாகிறது. முக்கியமான பிரச்சினைக்கு 9½ மணிக்குத்தான் வர முடியும். அதிக நேரம் பேச முடியாது. 10 மணிக்குக் கூட்டத்தை முடிக்க வேண்டும். போலீசாரும் முக்கியமான தலைவர் பேசுவதை நிறுத்தத் தயங்குகிறார்கள். அதே சமயத்தில் நம்முடைய பேச்சைச் தடுக்க யார் இருக்கிறார்கள் என்று எண்ணுகின்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே, 10 மணி என்பதை 11 மணி வரை கூட்டம் நடத்த உத்தரவு கொடுக்க வேண்டு மென்று சுற்றறிக்கை அனுப்புவது உதவிகரமாக இருக்கும்.

தேர்தல் காலத்தில் 'வானில்' பிரசாரம் செய்ய முன்பு டி.எஸ்.பி. அனுமதி கொடுத்து வந்தார். இப்போது அதுவும் சர்க்காருக்கு வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதிலே உத்தரவு வராத நிலையிலே உத்தரவு வாங்காமலே, வானில் பிரசாரம் செய்யக்கூடிய நிலை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட தவறுகள் நடக்கின்றன. அதை முறைப்படுத்த டி.எஸ்.பி.யே உத்தரவு கொடுக்கும் முறையைச் செய்வது உதவிகரமாக இருக்கும்.

பயர் சர்வீஸை பொறுத்தவரை பல கோரிக்கைகள் உறுப்பினர்களைக் கேட்டால் வரக்கூடும். எனக்கு வந்திருக்கக்கூடிய அளவுக்கு சொல்கிறேன். கோவில்பட்டியில் பயர் சர்வீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். சௌடி அவர்கள் அருப்புக்கோட்டையில் வேண்டு மென்று குறிப்பிட்டார்கள். பொதுவாக, நான் திருமங்கலத்தில் வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். பயர் சர்வீஸ் ஸ்டேஷன்கள் அதிகமாகத் திறக்க வேண்டுமென்று வந்திருக்கின்ற கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து எந்தெந்த இடத்தில் ஏற்படுத்த முடியுமோ அங்கெல்லாம் ஏற்படுத்த வேண்டும்.

போலீஸ் அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு இடத்தில் இருக்கக் கூடாது என்று இருப்பது ரொம்ப நல்ல விஷயம். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ப்ளவர் பஜார் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தார். அவர் நிரந்தரமாக அந்த ஸ்டேஷனிலேயே சப்-இன்ஸ்பெக்டராகவே இருக்க விரும்புகிறேன் என்று சொல்லி அங்கேயே பல வருஷங்கள் இருந்து ரிட்டையர் ஆனதாகச் சொல்லுவ துண்டு. அந்தமாதிரி ஒரு அதிகாரி ஒரே இடத்தில் இருக்க வழி செய்யக் கூடாது.

திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்ட அதிகாரியைப் பற்றிச் சொன் னார்கள். பெயர் மாறுதல் வேண்டுமானால் இருக்கலாம். பெயரல்ல முக்கியம். எப்படி புத்திசாலித்தனமாக அங்கேயே இருந்திருக்கிறார் என்றுதான் தெரிய

வில்லை. பொதுவாக, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு இடத்தில் இருக்கக் கூடாது. அதே சமயத்தில் 1½ ஆண்டு 2 ஆண்டுகளிலும் மாற்றம் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு விஷயத்தைப் பற்றி, பெரியபட்டணத்தில் நடந்ததைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதுபற்றி மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்று நான்கு பேரைத் தாக்கிவிட்டார்கள். கம்ப்ளெயின்ட் கொடுக்கப்படுகிறது. கொடுத்த உடனே, இரண்டு, மூன்று மணி நேரம் கூட ஆகவில்லை; வீடு வீடாகப் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். பூராவும் முஸ்லிம் மக்கள். அவர்களைத் தாக்கி பெரிய கொடுமைகளை விளைவித்திருக்கிறார்கள். 24 மணி நேரத்திற்குள்ளாக நானே அங்கு போய் விசாரித்துச் சொல்லுகிறேனே தவிர, கூட்டிக் குறைத்துச் சொல்லவில்லை. குறிப்பிட்ட போலீஸ் அதிகாரி திரு. சவுந்தரபாண்டியன், அவர் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தபோதே பலவிதமான கம்ப்ளெயின்டுகள் வந்து, அவர் இனிமேல் ஒழுங்காக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்ப் பட்டவர்களை அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்வீசில் போடுவது நல்லது; இப்படி போலீஸ் ஸ்டேஷனில் பொறுப்பு கொடுக்கக்கூடாது. அவர்கள் எந்தக் கட்சி என்று வித்தியாசம் பார்ப்பதில்லை. தனக்குப் பிடிக்கவில்லை என்றால் தாக்கு வார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளை இம்மாதிரி ஸ்டேஷன்களில் பொறுப்பில் போடக்கூடாது.

இறுதியாக, பல இடங்களுக்கு போலீஸ் ஸ்டேஷன்கள் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மதுரைத் தொகுதியைப் பொறுத்த வரையில் திருப்பரங்குன்றத்திலிருந்து மதுரை வருகிற வழியில் இரண்டு, மூன்று காலனிகள் இருக்கின்றன. டி.வி.எஸ். காலனி, கோவலன் நகர், டி.வி.எஸ். நகர், சாயி நகர், அழகப்பா நகர் போன்ற காலனிகள் இருக்கின்றன. இந்த இடங் களில் ரொம்பத் திறமையாகக் கொள்ளை அடிக்கக்கூடியவர்கள், வீட்டில் பூட்டை உடைத்து உள்ளே இருப்பவர்களை எழுப்பாமலே பெண்ணின் தாலியைக் கூட எடுத்துச் செல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் இருந்து வரும் கோரிக்கை எல்லாம் அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்ப தாகும். பக்கத்தில் போலீஸ் ஸ்டேஷன் இல்லாமல் இருப்பதால் கம்ப்ளெயின்ட் கூடக் கொடுக்க முடிவதில்லை. இதிலே தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். போலீசாரால் தொழிலாளர் மண்டையை உடைக்க முடிகிறது, விவசாயிகளைக் கைது செய்ய முடிகிறது, மாணவர்களை அடிக்க முடிகிறது. ஆனால் பெரிய புள்ளிகள். அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந் தவர் என்பதல்ல, திருப்பத்தூரில் உள்ள கல்லூரியின் பொறுப்பாளர் இருக்கிறார், அவர் மாணவர்களை சொந்த ஆட்களை விட்டு உதைத்தது மட்டுமல்ல, தன் கையில் உள்ள ரிவால்வரைக் காட்டி சுட்டுவிடுவேன் என்று மிரட்டியிருக்கிறார்.



அவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா, அவர் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? செல்வாக்கு உள்ளவர்கள், பணம் படைத்தவர்கள் போன்றவர்கள் இம்மாதிரியான சட்டவிரோதமான காரியங்களைச் செய்தால், அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கமுடியாது என்ற ஒரு நிலை வந்திருக் கிறது.

இது போலீஸ் மானியக் கோரிக்கை என்பதால் சில விவரங்களைக் கூறு கிறேன். மணலி அவர்கள் சொன்னது மாதிரி சோஷலிச நாடுகளைப் பற்றிச் சொல்லவில்லை, முதலாளித்துவ நாடுகளில், இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள போலீஸ்காரர்கள், எந்த அளவிற்குப் பண்பட்டவர்களாக இருக் கிறார்கள், அவர்களுக்கு எந்தவிதமான முறையில் மரியாதை அளிக்கப்படுகிறது என்று பார்த்து அந்த முறையில் இங்கும் செயல்பட வேண்டும். அங்கு கான்ஸ் டபிள் என்று சொன்னால் அவமானமாகும், அவர்களைப் போலீஸ் ஆபீசர் என்று தான் சொல்லவேண்டும். எல்லோரும் ஆபீசர்கள் என்ற முறையில்தான் இருக் கிறார்கள். அவர்கள் மக்களோடு எப்படிப் பழகுகிறார்கள், எப்படி நடவடிக்கை களில் ஈடுபடுகிறார்கள் என்பதைப் பார்த்து அப்படி மக்களோடு பழகுவதற்குப் போலீசாருக்குச் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக, பாட்டா இப்போது ரூ. 1.50 கொடுக்கப்படுகிறது. இப்போது இங்கு வாச் அன்ட் வார்ட் வந்திருக்கிறார்கள். அவர்கள், யாரை அனுமதிப்பது யாரை அனுமதிக்காமல் இருப்பது என்று தெரியாமல் அவர்களது வேலை சிக்க லாக இருக்கிறது. அவர்களுக்கு ரூ. 1.50 தான் பாட்டா கொடுக்கிறார்கள். ஆகவே இந்த பாட்டாவை உயர்த்தி, குறைந்தது ஒரு கான்ஸ்டபிளுக்கு பாட்டா ரூ. 3 ஆவது கிடைக்கச் செய்ய வேண்டும். இருபது கோடி ரூபாய் நாம் ஒதுக்கி செலவு செய்கின்றோம். இவர்கள் ஒரு கணிசமான தொகையில் இருக்கிறார்கள். கான்ஸ்டபிள்கள் 26,000 பேர்கள் இருப்பார்கள், ரிசர்வ் கான்ஸ்டபிள்கள் 10,000 பேர்கள் இருப்பார்கள். ஆக, 36,000 இருப்பார்கள். இவர்களுக்கு அதிகமான சலுகைகள் கொடுப்பதன் காரணமாக—இவர்கள் ஒரு கணிசமான தொகை யினர் இருக்கிறார்கள்—அந்த அமைப்பைச் சிறப்பாக நடத்த முடியும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமான இந்த விவாதத்தில் நானும் பங்கு கொண்டு இறுதியாக ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பல உறுப்பினர்கள் பலவிதமான கருத்துக்களை எல்லாம் இந்த அவை முன் வைத்திருக்கிறார்கள். போலீஸ் இலாகாவானது பொதுவாக மிகவும் கஷ்டம் நிறைந்த, இன்னல்களுக்கு ஆளாகக்கூடிய ஒரு இலாகா என்பதை நான்

எடுத்துக் கூறத் தேவையில்லை. அதில் பணியாற்றுகிறவர்களுக்கு பணியாற்றுகிறபோது அவர்கள் உயிருக்கு ஆபத்து அடிக்கடி ஏற்படக்கூடிய ஒரு இலாகா இது என்பதை நாம் எல்லோரும் பரிவோடு, நல்லெண்ணத்தோடு சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதைப் பராமரித்துக்கொண்டு வரக்கூடிய மேல் அதிகாரிகள் பொறுப்புணர்ச்சியோடு நல்ல காரியங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, இந்த அறிக்கையில், மிகவும் சிறப்பாக, கள்ள நோட்டு வழக்குகளை எவ்வளவு தீவிரமாகப் புலனாய்வு செய்திருக்கிறார்கள், செய்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது நாம் மகிழ்ச்சிக்கு உரியவர்களாக இருக்கிறோம். அப்படி மகிழ்ச்சிக்குரியவர்களாக இருக்கிறோம் என்று சொல்லும்போது ஆளும் கட்சியில் எந்தவிதமான தவறுதல்களும் நடக்கவில்லை என்று சொல்வதற்கில்லை.

பொதுவாக ஒரு கருத்தை முதலில் ஊன்றிக் கூறவேண்டுமென்று கருதுகிறேன். சென்னையில் முதல் போலீஸ் அதிகாரியாக இருந்த முன்னாள் ஐ.ஜி. அவர்கள் தங்கிய விடுதியிலிருந்து, அந்தக் கட்டடத்திலிருந்து அவர்கள் எப்படி மாற்றப்பட்டார் என்பதை இந்த மன்றத்திற்குக் கூறுவது பொருத்தமானதாகும் என்று நான் கருதுகிறேன். மிகவும் பொறுப்பு வாய்ந்த அந்த அதிகாரி தங்கி இருந்த இல்லத்தை கவர்னர் பெருமான் மாளிகையாக மாற்ற வேண்டும் என்று உடனடியாக அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்றும் விதத்தில் அந்த மாளிகையை விட்டு அவர்கள் மாற வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததாக எனக்கு நன்கு தெரியும். அத்தகைய பெரிய போலீஸ அதிகாரிக்கே இந்த பாதிரியான நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன என்று சொன்னால் இதில் அரசியல் புதைந்திருக்கிறதா என்பதை இந்த மன்றமும், இந்த மன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒருவேளை கவர்னர் பெருமான் அவர்கள் அந்த மாளிகையில் தங்கினால் அதை ஆட்சேபிக்கவில்லை. பிற்பாடு நடந்த நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் பத்திரிகைகளிலும், மற்றவிதமான அபிப்பிராயங்கள் எல்லாம் இங்கு தொகுத்துக் கூறப்பட்டன. அதுபற்றியெல்லாம் மறுமுறையும் துருவி ஆராய்ந்து கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அது நடந்து முடிந்த விஷயம். பெரிய போலீஸ் அதிகாரிக்கே இந்த நிலை என்றால் சாதாரண அதிகாரிகளின் நிலை என்ன என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டினேன்.





இங்கு பேசியவர்கள் எல்லாம், குறிப்பாக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் போலீஸ் நிர்வாகத்தில் தலையீடு இல்லை என்று பலவிதக் கருத்துக்களைச் சொன்னார்கள். உதாரணமாக, அருப்புக்கோட்டை உறுப்பினர் அவர்கள் நாகர்கோவிலில் இடைத் தேர்தல் காலத்தில் நடந்த சம்பவங்களை எல்லாம் இங்கு சுட்டிக்காட்டினார்கள். அந்த விஷயம் முடிந்துவிட்ட விஷயம், அதற்குப் பிற்பாடு ஒரு தேர்தல் நடந்தது, ஆகவே அதைக் கிளறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் அதை எழுப்பிய காரணத்தினால் அதுபற்றி ஒருசில கருத்துக்கள் கூறுவது பொருத்த முடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கிட்டு கொலை வழக்கு நாகர்கோவிலில் இடைத் தேர்தல் நடந்தபோது ஏற்பட்டது. அதில் எஃப்.ஐ.ஆர். எப்படித் தயாரிக்கப்பட்டது என்பதற்கு அதில் முதல் சாட்சியாக இருந்தவர்கள் எல்லாம் செஷன்ஸ் கோர்ட்டில் சாட்சியங்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் நானும் ஒரு வழக்கறிஞராக ஆஜராகியிருந்தேன். அதன் தீர்ப்புபற்றி நான் விரிவாகக் கூற விரும்பவில்லை. ஆனால் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

கிட்டு கொலை வழக்கு, ஒரு தேர்தல் ஆபீஸில் சீட்டாடிக்கொண்டிருந்த சமயத்தில் இரு சாராருக்கு இடையே நடந்த மோதல் காரணமாக ஏற்பட்டது. அதற்கு வர்ணம் பூசி, கண், மூக்கு, காது வைத்து அரசியலில் ஈடுபட்டிருப்பவர்கள் பலரும் அதில் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டு, கடைசியில் நீதிமன்றத்தில் எல்லோரும் விடுவிக்கப்பட்டார்கள். சட்டம் என்பது ஒரு இருட்டறை என்று சொல்வார்கள். சட்டம் என்பதற்கு முன் எல்லோரும் சமம் என்று சொல்வார்கள். சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்பதை நிரூபிக்க காலந்தாழ்த்தி செய்தார்கள். மாஜிஸ்ட்ரேட் கோர்ட், செஷன்ஸ் கோர்ட் என்று சென்றுதான் நிரூபிக்க முடிந்தது அந்தக் கொலை வழக்கில். அதில் எனது கட்சியினரும், இந்தச் சபை உறுப்பினராக இருந்த சௌந்தரபாண்டியன் அவர்கள் சகோதரரையும், அவரது பிள்ளைகள் எல்லோரையும் எதிரிகளாகச் சேர்த்திருந்தார்கள். இதெல்லாம் பொய் வழக்கு என்று செஷன்ஸ் கோர்ட்டில் முடிவு செய்யப்பட்டது. அது மட்டும் அல்ல, முதலாவது சாட்சி ஒழுங்கான முறையில் சாட்சியம் சொல்லவில்லை என்று கூறி அவர் மீது பெர்ஜுரி வழக்கு போட்டு தண்டனை அளிக்கப்பட்டது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதைச் சுட்டிக்காட்டக் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்கிறது என்பதைக் காட்டுவதற்குத்தான்.

குறிப்பாக எஃப்.ஐ.ஆர். தயாரிக்கும்போது இரு அரசியல் தலைவர்கள், இரு வட்டச் செயலாளர்கள் இருந்தார்கள். முதல் சாட்சி செஷன்ஸ் கோர்ட்டிலேயே இதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு வழக்கறிஞருடைய வீட்டிற்குச்

சென்று புத்தகங்களை எடுத்து வந்து எஃப்.ஐ.ஆர். ஐ டிக்டேட் செய்திருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்படி ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் இது தலையீடு அல்லவா? ஒழுங்காக நடந்திருக்கிறதா என்று கேட்கிறேன். இப்படி எண்ணற்ற வாலிபர்கள் மீது வழக்குகள் ஜோடிக்கப்பட்டன. ஆனால் ஒன்றிலும் தண்டனை வழங்கப்படவில்லை. உறுப்பினர் அவர்க்ள் சொன்னதற்காகச் சொல்கிறேன்.

நாகர்கோவிலில் என்னென்ன காரியங்கள் நடந்திருக்கின்றன. வெளி ஜில்லாக்களிலிருந்து யார் யார் எல்லாம் எவ்வளவு கார்களில் என்னென்ன கருவிகளைக் கொண்டு வந்தார்கள் என்பதையெல்லாம் நான் மறுமுறையும் எடுத்துக் கூற வேண்டிய தேவை இல்லை. காக்கி உடை அணிந்தவர்கள் ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களிலிருந்து லாரி லாரியாக இறக்குமதி செய்யப்பட்டார்க்ள். அதையெல்லாம் இந்த மன்றம் நன்கு அறியும். இந்த மன்ற உறுப்பினர்கள் பலரும் அதை அறிவார்கள். நம்பர் இல்லாத போலீஸ் என்ற முறையில் காக்கி உடையில் நடமாடிக்கொண்டிருந்தார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பல காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்கள் கூறியதற்காகக் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். இன்னொரு விஷயம்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: நான் கேட்டது, முதல் அமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் தங்கியிருந்த நேரத்தில் நடந்த ஒரு சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு. அவர்கள் பதவிக்கு வந்த பிற்பாடு, தன் கீழ் போலீஸ் துறை இருக்கும்போது அவர்கள் தவறுதலாக, அவர்கள் தூண்டுதல் பேரில் ஏதாவது வழக்கு தொடர்ந்திருக்கிறார்களா என்றுதான் கேட்டேனே தவிர வேறு எதுவும் கேட்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அந்த வழக்கிலே யார் யார் எதிரிகளாக இருந்தார்கள், என்னென்ன நடந்தது, கடைசியில் போலீசார் அந்த மாதிரி கேஸ் நடத்தத் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையான முகாந்திரம் இருந்தால் போதிய ஆதாரம் இருந்திருந்தால் கண்டிப்பாக நடத்தியிருப்பார்கள். அந்த வழக்கு நடக்கவில்லை. தொடரவில்லை. எஃப்.ஐ.ஆர். போட்டார்களோ என்னவோ தெரியவில்லை.

திரு. ஜேம்ஸ், எம்.எல்.ஏ., திரு. சௌந்தரபாண்டியன், முன்னாள் எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டார்கள் என்பது தெரியும். அங்கே நடந்த நிகழ்ச்சி எனக்கு நேரடியாகத் தெரியாத காரணத்தால், முதலமைச்சர் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல நான் விரும்பவில்லை. அந்த





செய்யப்பட்டு, நடந்தது. அது விரும்பத்தக்கதல்ல. யார் தலையிட்டாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டியதுதான். அதுதான் அரசின் கடமை, போலீஸ் இலாகாவின் கடமை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967-ஆகஸ்டிலே நடந்த கேஸ் இது வரையில் முடிவு அடையவில்லை. தயவு செய்து அதில் எங்களுக்கு சிட்சை கொடுத்தால் கூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எங்கள் மீது அது ஒரு 'டெமக்ளஸ் ஸ்வோர்டு' மாதிரி இருக்கிறது. அதற்கு சீக்கிரமாக முடிவு செய்வதற்கு இலாகா வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாதிரி கூறிய பல வழக்குகளிலே இந்த இலாகா என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றது என்பதைக் கேட்க விரும்புகிறேன். உதாரணமாக 75 சந்தன மரங்களை திருச்சி ஜில்லாவில் அப்புறப்படுத்தியதாகவும், அவர்களிலே 75 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அதற்கு முன்பு அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி எடுத்துச் சொன்னார்கள். அந்த வழக்கு என்ன ஆயிற்று? சார்ஜ் ஷீட் செய்து இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஸ்பெஷல் கோர்ட் போட்டு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அடுத்தபடியாக இன்னொரு விஷயம் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். பொதுவாக நமது மாநிலத்திலே இப்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அப்காரி ஆக்ட் அமல் நடத்துகொண்டு இருக்கிறது. இதைப் போலீஸ் பிரிவினரே அமல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரிவை தனியாக இயக்குவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். இந்த அப்காரி ஆக்டின் மூலம் எக்சைஸ் வரி, அப்படிப்பட்ட சுங்க வரி வருகிறது. அந்த மாதிரி அதிகாரத்தை தனிப் பிரிவிடத்தில் கொடுத்தால் பொருத்தமாக இருக்குமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது சுமார் ரூ. 35 கோடி வருமானம் வருகிறது. இதைத் தனிப் பிரிவாக அமைத்தால் நஷ்டம் இல்லை. இவர்களைப் போலீஸ் இலாகாவில் ஒரு பிரிவாக வைக்காமல் தனிப்பிரிவாக வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம் குறித்து சொல்லவிரும்புகிறேன். சமூக விரோதிகள், நக்சலைட்ஸ் போன்றவர்களை முனைந்து தடுத்து நிறுத்தியிருக்கிறது இந்த இலாகா என்று இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த நக்சலைட்டுகளைக் கண்காணிப்பதில் மற்ற மாநிலங்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையை நான் கூறிக்கொள்ள

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 15

விரும்புகிறேன். எங்கள் பகுதி கேரளாவையும் தமிழ்நாட்டையும் இணைக்கும் பகுதியாக இருக்கிறது. கேரளாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து பல குற்றங்களைப் புரிந்து வரும் தன்மையிருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் ரோடாவது கேரளாவுக்குச் சொந்தமான ரோடாக இருக்கிறது. நம்முடைய போலீஸ் இலாகா ரோடு பெட்ரோல் போட்டு அங்கே காவல் பணி புரிவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இதனுல் அங்கே நம்முடைய போலீஸ் படைக்கும், கேரள போலீஸ் படைக்கும், தகராறுகள், தாவாக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நமது பகுதியில் ரோடு அமைத்து, இந்த மாதிரி நக்சலைட்டுகளைக் கண்காணிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில், பாரசாலை என்ற இடத்தில் சக்திரேசன் என்ற ஒரு இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஒருவர் நமது போலீசார் பற்றி, பல குற்றங்களை எடுத்துக் கூறியிருக்கிருர்கள். நமது போலீசார் கேரள எல்லைப்பகுதியில் சென்று அங்கே பலரைக் கைது செய்ததாகவும் அடித்ததாகவும் பலவிதமாகப் புகார்கள் கூறியிருக்கிருர்கள். இன்று கேரள எல்லைப்பகுதியில் அரிசிக்கடத்தல் தீவிரமாக முனைந்து செய்யப்பட்டு வருகிறது. லாரியில் அரிசி கடத்தி வருகிருர்கள். அதையும் கண்காணிப்பது இல்லை. இந்த மாதிரி ஏற்படும் நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்கு இந்தக் காவல் துறையினர் வேண்டிய அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுரையிலே பல புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிருர்கள். பொதுவாக, குற்றங்களைப் பார்க்கிறபோது ஹௌஸ் பிரேக்கிங் அதிகமாகி இருக்கிறது. 1970-ம் ஆண்டு, 6,656 என்று இருந்த நிலைமை மாறி 6,863 என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. மேஜர் கிரைம்ஸ் பெரிய திருட்டுகள் என்ற அடிப்படையில் பார்த்தால் 1970-ல் 16,399 என்று இருந்தது, 17,124 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. பொதுவாகப் பார்க்கிறபோது இந்தக்களவுக்குற்றங்கள் அதிகரித்து வரும் தன்மையைப் பார்க்கிறோம். பெருநகரத்தில் இந்த மாதிரி களவுக்குற்றங்கள் அதிகமாக வந்திருக்கின்றன.

அண்மையில் நம்முடைய போலீஸ் அதிகாரிகள் சென்னையில் நடந்த பல களவுகளைக் கண்டுபிடித்து, பல லட்சக்கணக்கான விலையுயர்ந்த பொருள்களை கண்டுபிடித்துள்ளதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். கமிஷனர், ஐ.ஜி. போட்டோக்கள் கூட பத்திரிகையில் வந்தன. இந்த மாதிரியான களவுகளைக் களைந்திருப்பதற்கு நான் பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். ஒத்துழைப்புக் கொடுக்க தயாராக இருக்கிறோம்.



1972 மார்ச் 15] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்த மாதிரி காரியங்கள் மற்ற முனிசிபல் நகரங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு எனக்கு ஒன்று சொல்ல இருக்கிறது. நாகர்கோவிலில் நான் வசிக்கும் வீட்டிற்கு மேற்கு வீட்டில் வீட்டிற்குள்ளே நுழைந்து பல சாமான்களை சூறையாடிக்கொண்டு போய் இருக்கிருர்கள். இன்று வரை துப்பு கண்டுபிடிக்கப்படவில்லை. நாகர்கோவில் பகுதியில் பல இடங்களில் இந்தமாதிரி வீட்டில் புகுந்து திருடும் தன்மை இருக்கிறது. இந்த மாதிரி நிலை பரவாமல் இருப்பதற்கு இரவு நேரத்தில் 'பெட்ரோல்டியூடி' வைத்தால் நன்ருக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இந்த மன்றத்தின் முன் சொல்ல விரும்புகிறேன். ஒரு இரட்டைக் கொலையைப் பற்றிச் சொன்ஞர்கள். அதில் வேலப்பன் என்ற நபர் கைது செய்யப்பட்டு, அவர் லாக்-அப்பில் இறந்து விட்டார் என்றும் எனக்கு முன்னுலே பேசிய கொளச்சல் தொகுதி உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் சொன்ஞர்கள். இது சம்பந்தமாகப் பல விஷயங்களைச் சொல்கிருர்கள். அவரைக் கொளச்சல் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அவர்கள் அங்கே முதலில் சர்டிபிகேட் தரமாட்டேன் என்று சொன்னதாகவும், அதற்குப்பிறகு சர்டிபிகேட் வாங்கிவிட்டார்கள் என்றும் குற்றச்சாட்டு எடுத்துச் சொல்லப்பட்டது. அதில் ஆர். டி. ஓ. அவர்கள் விசாரணை நடத்தி வருகிருர் என்று கேள்விப்படுகிறேன். இந்த மாதிரி விசாரணையில் நியாயம் கிடைக்கிற வகையில் அதிகாரிகள் இன்னும் அதிலே சம்பந்தப்பட்ட நியாயமான சாட்சிகளைக் கொண்டு வரவேண்டும். ஆரம்போளி போலீஸ் ஸ்டேஷன் எல்லையில் பிணம் கிடக்கிறது என்று அங்கே உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டரே சொல்லி, அங்கேயுள்ள மக்கள் வந்து பார்த்து, ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் சென்ருர்களாம். குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டியது தான். அவர்களைத் தண்டிப்பதற்காக கோர்ட்டில் நிறுத்தி ஜெயிலுக்கு அனுப்ப வேண்டியது தான். அது தான் அவர்கள் கடமை. ஆனுல் இப்படி அவர்களை லாக்-அப்பில் வைத்து, அடித்துக்கொல்வது என்பது நியாயமல்ல.

இந்தமாதிரி ஒரு விஷயம் நாமக்கல்லில் நடந்தது. அதையும் சுட்டிக் காட்டினுர்கள். விவரங்களை எல்லாம் சொல்லத் தேவையில்லை. லாக்-அப்பில் மரணம் ஏற்படக்கூடாது. இந்தமாதிரி மரணம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் போலீசார் எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

அடுத்தபடியாக, வேறு சில காரியங்களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். 2 நாட்களுக்கு முன்னுல் 4 நபர்கள் நீக்குளிக்க வந்தார்கள். அவர்கள் கைது

செய்யப்பட்டார்கள் என்று இருந்தது. அது பற்றிய விவரம் எனக்குத் தெரிந்த வரையில், அவர்களெல்லாம் முன்பு தேவி வளர்ப்பு இலாகாவில் இருந்தார்கள் என்றும், அவர்களைப் பிரித்து விட்டார்கள் என்றும், அவர்களை யெல்லாம் டிரான்ஸ்போர்ட் இலாகாவில் நியமனம் செய்ய வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதாகவும், அங்கே இண்டர்வியூ செய்து கடைசியாக அவர்களைத் தேர்வு செய்யவில்லை என்ற காரணத்தினாலே அவர்கள் பலமுறை அரசாங்கத்திடம் பல கோரிக்கைகளை எல்லாம் சமர்ப்பித்தும், ஒரு பலனும் ஏற்படாத காரணத்தால், வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்ட அவர்கள் இங்கே தங்களுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தார்கள் என்றும் தெரிகிறது. இந்த மாதிரி குற்றம் புரிகிறவர்களை எல்லாம், சாதாரணமான கொலைக்குற்றம், களவு செய்தவர்களைப் போல் கருதாமல், சமுதாயத்தில் மிகவும் அடிபட்டதால் அவர்கள் இந்த மாதிரி செயலில் ஈடுபட்டார்கள் என்ற பரிவு உணர்ச்சியோடு அவர்களுக்குப் பரிகாரம் தேடித் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கு பலவிதமான குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். எத்தனை தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக, வாணியம்பாடி நிகழ்ச்சிகளைப் பற்றி முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் உருக்கமாகச் சொன்னார்கள். அவர்கள் எடுத்துக் கூறினார்கள்—முஸ்லீம் லீக் கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சியல்ல, ஒரு மிகச் சிறந்த கட்சி என்று அவர்கள் வாதாடினார்கள்.

ஸ்தாபன காங்கிரசிலே இருப்பவர்கள் ஏதோ பிற்போக்கு வாதிகள், வகுப்பு வாதத்திலே ஊறினவர்கள் என்று கருதிக் கொண்டு அவர்கள் பலவிதமான குற்றச்சாட்டுக்களைக் கூறினார்கள். அவர்கள் குற்றக்கணைகளை ஏவி விடுவதற்கு முன்பு ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யார், யார் எல்லாம் இந்த ஸ்தாபன காங்கிரசிலே இருக்கிறார்கள் என்று சற்று உணர்ந்து பார்க்க வேண்டும். ஸ்தாபன காங்கிரசிலே இருப்பவர்கள் இந்த தேசத்தின் விடுதலைக்காக என்னென்ன தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அதே மாதிரி இந்தக் கட்சியிலே இருப்பவர்கள் பலரும் வகுப்புவாதத்தைக் கண்டித்தவர்கள், வகுப்புவாத உணர்ச்சியைக் கண்டித்தவர்கள் என்பதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வகுப்புவாதக் கலவரங்கள் பல இடங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு சிலர் அன்மை மாதிலத்தில் உள்ள பூவாதுக்கும் சென்று விட்டார்கள் என்ற பத்திரிகைக்





குறிப்பைப் பார்த்தேன். அது உண்மைக்குப் புறம்பாகப் போடப்பட்டது. கடலோரப் பகுதியில் மீனவர்கள் வாழ்கிறார்கள். அங்குள்ள முஸ்லீம் களுக்கும் இவர்களுக்கும் கலவரம் ஏற்பட்டு அது சம்பந்தமாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வர்கள் அங்கு சென்று விட்டார்கள் என்று சொல்லி இருப்பது அபாண்ட மாகப் பழி சொல்லப்பட்டதாகும். இம்மாதிரி வகுப்புவாதத் தன்மையில் பலரும் பேசிக்கொண்டு இருந்தால் பலவிதமான குழப்பங்கள் ஏற்படும். அதிலும் கடலோரப் பகுதியில் இந்த மாதிரியான கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படுகின்றன.

உதாரணமாக, கன்னியாகுமரிக்குப் பக்கத்தில் உள்ள கோவலம் பகுதியில் உள்ள கிராமத்தில் ஒரு கலவரம் ஏற்பட்டு அங்கிருந்து ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான நபர்கள் இன்னொரு சமூகத்தார் உள்ள ஊருக்குச் சென்று அங்கிருந்த பெண்களையும், தாய்மார்களையும் தாக்கினார்கள். போலீசிற்குச் செய்தி கிடைத்து அவர்கள் விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினார்கள். என்னைப் பொறுத்தவரையில் இதைப் பற்றி நான் மிகவும் நல்ல முறையிலே பாராட்டச் செய்வேன். நான் குறிப்பிட விரும்புவது என்னுடைய தொகுதியைப் போல பல இடங்களிலும் பல சம்பவங்கள் திடீரென்று நடந்து விடுகின்றன. அவற்றை ஜாதிக் கலவரங்கள் என்று கருதி விடாமல் பொறுப்புணர்ச்சியோடு நாம் எல்லோரும் உற்றுப் பார்க்க வேண்டும். இம்மாதிரி ஜாதிக் கலவரங்கள் எங்கே ஏற்பட்டாலும், வாணியம்பாடியாக இருந்தாலும், அல்லது வேறு எங்கேயிருந்தாலும் அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்திப்:** தலைவரவர்களே, நான் காலையிலே பேசும்போது இதைத் தான் சொன்னேன். காங்கிரஸ் கட்சியிலேயும், மற்ற கட்சியிலேயும் உள்ள இந்து சகோதரர்கள் முஸ்லீம் லீக்கில் உள்ளவர்களின் அடக்க உணர்ச்சியைப் பாராட்டுவதில்லை. வாணியம்பாடியைப் பொறுத்த வரையில் முஸ்லீம் களும், இந்துக்களும் சகோதரர்கள்போல இருக்கிறார்கள். அரசியல் காரணங்களைக் காட்டி வகுப்புவாத வர்ணம் பூசப்படுகிறது. அது தவறானதாகும். மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களைப் பற்றி எனக்கு எப்போதும் பெரு மதிப்பு உண்டு. அவர்கள் இந்தப் பிரச்னையை இந்த விதமாக அணுகாமல் என்னுடைய உணர்ச்சியைச் சரியாகப் புரிந்து கொண்டு அணுக வேண்டும். இதனால் நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் சொன்ன உணர் வை நான் பரிபூர்ணமாக உணர்ந்திருக்கிறேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்த ஜாதிக் அலி அவர்கள் அவருடைய வகுப்பைச் சேர்ந்தவர் தான். ஒரு வேலை

அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். எந்தவிதமான ஜாதிப் பிரிவுகளைப் பற்றியும் பார்க்காமல் வேறு விதமான கருத்துக்களைப் பார்க்காமல் எங்கள் கட்சியிலே இருப்பவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக உணர வேண்டும்.

அடுத்தபடியாக, நான் வேறு ஒரு விஷயத்தைப் பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். ஏர்வாடியில் ஒரு கேஸ் நடைபெற்றது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டராக இருந்தால் கேளுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அவருடைய தலைவர் என்னுடைய வகுப்பைச் சேர்ந்தவர் தான் என்றார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். என்னுடைய வகுப்பைச் சேர்ந்தவர் என்று சொல்கிற இந்த வாதத்தைத் தான் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த வாதத்தை நம்முடைய காங்கிரஸ்காரர்கள் விட்டுவிட வேண்டும். இதை விட மாட்டேன் என்கிறார்கள். அது தான் என்னுடைய வருத்தமாகும். நான் அந்த வகுப்பு, இந்த வகுப்பு என்று பேசாமல் ஒரே வகுப்பு ஒரே இனம் என்ற முறையிலே பேச வேண்டும். நீங்கள் இப்படிப் பேசியதால் தான் முஸ்லீம் லீக் கட்சியே தோன்றியது. எனவே முஸ்லீம் லீக் கட்சி தோன்றுவதற்குக் காங்கிரஸ்காரர்கள்தான் காரணம் என்பதைக் காங்கிரஸ் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இதைப் பற்றி விரிவாகப் பேசாமல் இரண்டொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏர்வாடி கிராமத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு முஸ்லீம் சகோதரர் கொல்லப்பட்டதாக ஒரு அறிக்கையை முதலமைச்சருக்கு அனுப்பியிருந்தார்கள். அதன் நகலை எனக்கும் அனுப்பியிருந்தார்கள். அதில் குறிப்பிட்டு இருக்கக்கூடிய சில கருத்துக்கள் இந்த முஸ்லீமைக் கொன்று எரித்து விட்டார்கள் என்ற ஒரு புகார் அதிலே இருக்கிறது. சாதாரணமாக முஸ்லீம்கள் இறந்தால் எரிப்பதில்லை. ஆனால் இவரைக் கொன்று எரித்து விட்டார்கள் என்ற புகார் கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான வழக்கு இருக்கும் என்ற காரணத்தால் இதைப்பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை.

இம்மாதிரியான விரும்பத்தகாத காரியங்கள் அந்தக் கிராமத்திலே நடந்திருக்கின்றன. அவருடைய உறவினர்களெல்லாம் என்னிடத்திலே இதைப்பற்றிப் பலமுறை எடுத்துக் கூறினார்கள். அது மாதிரிக் குற்றம் புரிந்தவர்கள் யாராக





இருந்தாலும் அவர்களை நீதிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவைப் பற்றி இரண்டொரு விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். குடியாத்தத்திலே போலீஸ் லத்தி சார்ஜ் நடந்தது என்று எனக்குப் புகார் வந்திருக்கிறது. குடியாத்தம் முனிசிபாலிடி இது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அங்கே நடந்த லத்தி சார்ஜ் அத்து மீறிய செயல் என்றும் அதில் பலரும் காயம் உற்ற தாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 50-க்கு மேற்பட்டவர்கள் காயம் உற்று இருக்கிறார்கள் என்பது மாத்திரமல்ல. திரு. வி.கே. கோதண்டராமன் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர். அவருடைய தலைமையிலே 47 பேர்கள் சர்வகட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவர்களைக் கைது செய்தார்கள். அதற்குப் பிற்பாடு இந்த லத்தி சார்ஜ் நடந்தது என்ற ஒரு குற்றச்சாட்டினை அந்தத் தீர்மானத்திலே கூறியிருக்கிறார்கள். இது தான் உண்மை. இதன் மீது விசாரணை நடத்த வேண்டும் என்பதற்காக இதனை இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, நான் குறிப்பிடுவது நமது போலீஸ் இலாகாவில் பல நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று ஒரு கமிஷன் ஆலோசனைகளைக் கூறி இருக்கிறது. அதிலே முதன்மையானது இப்போது வேலூரிலே இருக்கிற காலேஜை ஆவடிக்கு மாற்ற வேண்டும் என்ற ஒரு பரிந்துரையை அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த போலீஸ் காலேஜ் வேலூரில் இருக்கிறது. இதை ஆவடியில் இப்போது ரிசர்வ் படை இருக்கிற பகுதிக்கு மாற்றவேண்டும் என்ற பரிந்துரையை அரசாங்கத்திற்கு அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு போலீஸ் ஸ்கூல்களை ஏற்படுத்தவேண்டும், ஒன்று பழனியிலும், மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் ஏற்படுத்த வேண்டும். வேலூரில் இப்போது இருக்கிறது என்ற பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியான டிரெயினிங் ஸ்கூல்களை ஏற்படுத்தினால் தான் அந்தப் படையில் இருக்கிறவர்களுக்கு உள்ளபடியே விரிவாகவும், ஒழுங்காகவும் பயிற்சி கொடுக்க முடியும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

48 வயதிற்கு மேற்பட்டவர்களை இன்று டிரில் செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்கள் மிகவும் தொல்லைப்படுவார்கள். இது மிகவும் பரிதாபத்திற்குரியது. அப்படிச் சொன்னால் யாராலும் முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டவர்

களுக்கு டிரில் போன்றவைகள் கடினமாக இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பதை இலாகாவில் உள்ளவர்கள், பெரிய அதிகாரிகள், தெளிவாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஹெட்கான்ஸ்டேபிள், கான்ஸ்டேபிள்களுக்கு இப்போது ஒரு ரூபாய் "ஆப் டியூடி" என்று கொடுத்து வருகிறார்கள். 1953-ல் இருந்து இது கொடுக்கப் பட்டு வருகிறது. 1953-லே இது நிர்ணயிக்கப்பட்டது. இன்றும் இது நடை முறையில் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றியமைத்து அவர்களுக்குப் போதிய அளவிற்குப் புதிய விகிதத்தில் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக "பீடிங் சார்ஜ்" என்பது லா அண்ட் ஆர்டரை செயல் படுத்தச் செல்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த பீடிங் சார்ஜ் மிகவும் குறைவாக இருக்கிறது என்று பலரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே சப்-இன்ஸ்பெக்டர், அஸிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்கிற வர்களுக்கு மிகவும் குறைவாக இருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதே மாதிரி போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்குக் கொடுக்கப்படுவதும் வெகு குறைவாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். யூனிபாரம் கிராண்ட் கெஸடட் ஆபீஸர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இன்ஸ்பெக்டர்களுக்கும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் வருஷத்திற்கு 150 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இதுவும் முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும். இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது போதாது என்ற கருத்து சொல்லப்படுகிறது. ஒரு நல்ல பூட்ஸ் வாங்க வேண்டுமானாலும் 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அது மட்டுமல்ல, 24 மணி நேரமும் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக் கிறது. போதுமான ஓய்வு இல்லை. "ஒன்ஸ் எ போலீஸ் மேன் ஆல்வேஸ் எ போலீஸ்மேன்". 24 மணி நேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தச் சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சப்-இன்ஸ்பெக் டர்கள் அடிக்கடி பல இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. அவர் களுக்குக் கொடுக்கப்படுகிற "கன்வேயன்ஸ் அலவன்ஸ்" கூட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.





இன்னொரு முக்கியமான விஷயம் காவல் துறையினருக்கு வீடு கட்டிக் கொடுப்பது. இன்று 80 சதவிகிதம் பேர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதையும் முழுவதுமாக, தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த முக்கியமான பிரச்சனை இன்றைக்கு சென்னையிலே இருக்கக்கூடிய டிராஃபிக் பற்றியது. இப்போதும் டிராஃபிக் டிவிஷனில் உள்ளவர்கள் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். இருப்பினும், சென்னை நகரம் அதிகமான இடநெரிசல் உடையதாக இருப்பதால், நமது டிராஃபிக் டிவிஷனில் இருக்கக் கூடிய அதிகாரிகளை மேல்நாட்டுக்கு அனுப்பி, டிராஃபிக் பயிற்சி பெற்றுவரச் செய்யவேண்டும். மேல்நாட்டிற்குச் சென்று விசேஷ ட்ரெயினிங் பெற்று வந்தால் இன்னும் திறமையாக டிராஃபிக் கன்ட்ரோல் நடத்த முடியும் என்று கருதுகிறேன். அதோடு இந்த டிராஃபிக் டிவிஷனை ஒரு தனிப்பிரிவாக வைத்து திறமையாக செயல்படச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஃபிங்கர் பிரிண்ட் பீரோவைப் பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஃபிங்கர் பிரிண்ட் பீரோ ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதை இன்னும் முழு மாகச் செயல்படுத்தவில்லை. அதைப் பூரணமாகச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஃபிங்கர் பிரிண்ட் பீரோ அதாவது மத்திய ஃபிங்கர் பிரிண்ட் பீரோ இப்போது வேலூரில் இருக்கிறது. அதை உடனடியாக சென்னைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் இந்த 'லா அண்டு ஆர்டர்' பிரிவு பற்றியது. இந்த லா அண்டு ஆர்டர் பிரிவில் போதுமான அலுவலர்கள் இல்லாத தால் அவர்கள் எல்லாக் காரியங்களையும் காலாகாலத்தில் செய்ய முடியவில்லை. எனவே, இந்தப் பிரிவில் மேலும் அதிகமான ஆட்களைப் போட்டு, ஒழுங்காகக் காரியங்களைச் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். காவல் துறையில் ஆங்காங்கே அவுட் போஸ்டுகளை வைத்திருக்கிறார்கள். அவைகளை அப்கிரேடு பண்ணவேண்டும். இப்பொழுது இருக்கின்ற அவுட் போஸ்டுகளால் எந்தக் காரியத்தையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. ஒரு எப்.ஐ.ஆர். கூட ரெஜிஸ்டர் செய்ய முடியவில்லை, இந்த

முறையில் பல சிக்கலான பிரச்சனைகள் இருக்கின்றன. ஆகவே, இந்த அவுட் போஸ்ட்களை அப்கிரேடு பண்ணுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிட வேண்டும் சாதாரணமாக கோர்ட் சம்மன்ஸ், வாரண்டுகளையெல்லாம் போலீஸ்காரர்கள் எடுத்துச் செல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது. இதுபற்றி நான் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். சம்மன்களையெல்லாம் போஸ்ட் மூலமாக—அஞ்சல் துறை மூலமாக—அனுப்புவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சம்மன்களையும் போலீசாரே எடுத்துச் செல்வதால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. அந்த வேலை இல்லாவிட்டால் அவர்களின் அன்றாட வேலைகளைக் கவனிக்க வசதியாக இருக்கும்; நேரிலே கொண்டு கொடுப்பதிலுள்ள இடையூறுகளும் இருக்காது. எனவே, சம்மன்களை அவர்கள் எடுத்துச் செல்லவேண்டும் என்பதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எ.பி.பி. நியமனம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். எ.பி.பி. ஆக நியமனம் செய்யப்படுகின்றவர்கள், அதே வேலையிலேயே அவர்கள் ஓய்வு பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் முன்சிப்களாகவும், மாஜிஸ்டிரேட்களாகவும் வருவதற்கு வழிவகைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களின் வழக்கறிஞர் தொழிலுக்கு ஊக்கம் ஏற்படும் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'ஜுவினைல் டெலிங்க்வென்ஸி' பற்றிய விஷயம். இந்த இளம் குற்றவாளிகளைப்பற்றி ஆய்வு செய்வதற்கு, அது சம்பந்தமாக சரியான துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு காவல் துறையில் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போலீஸ் இலாகாபற்றிய பல குறைகள் சொல்லப்படுகின்றன. பொதுவாக போலீஸ் இலாகாவில் இருக்கின்றவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அடிக்கடி சர்ச்சைகள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, நமது சென்னை நகரில் சிம்ஸன் தொழிற்சாலை விவகாரத்தில் போலீஸ் நடந்துகொண்ட முறை பற்றி, இங்கே பல குறைகளைக் கூறினார்கள். சமூக விரோதிகள் அந்தத் தொழிற்சாலைக்குள் நுழைந்து பலவித விரும்பத்தகாத காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்த சமூக விரோதிகள் யாராக இருந்தாலும், போலீசார் தக்கமுறையில் கண்காணித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த போராட்டம் வலுப்பெற்றிருக்காது. பல தொழிலாளர்கள் சமூக விரோதிகளின் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கமாட்டார்கள் என்பதை



இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்கள் மட்டுமல்லாமல், சாதாரண நபர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சமூக விரோதிகள் தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்தும் தாக்குதல் நடத்தி இருக்கின்றார்கள். சில தொழிற்சங்கத் தலைவர்களும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். போலீஸ் துறை தக்கமுறையில் கண்காணித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் இம்மாதிரியான அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுத்திருக்கலாம். லா அண்டு ஆர்டர் சீர்குலையாமல் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதைச் செய்ய இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டுகிறேன். வெளியிலே ஏற்படுகின்ற பெரிய தகராறுகளைத் தடுப்பதில், லா அண்டு ஆர்டரை நிலைநாட்டுவதில் போலீஸ் இலாகா ஈடுபட வேண்டுமேயன்றி, தொழிலாளர்களுக்குள்ளே ஏற்படுகின்ற சிறு பிரச்சனைகளில் தலையிடக்கூடாது என்ற நியதியை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆங்காங்கே மாணவர்கள் கிளர்ச்சி ஏற்பட்டு, அதனால் பலரும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அங்கும் சமூக விரோதிகள் புகுந்து, கெடுதல் விளைவித்திருக்கிறார்கள். போலீஸ் தக்க கவனம் செலுத்தியிருந்தால், அந்தக் கிளர்ச்சிகளைத் தடுத்திருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் இம்மாதிரி விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர் கிளர்ச்சியின் காரணமாக மாணவர் விடுதிகளும் தாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, திருப்பத்தூர் மாணவர் விடுதி தாக்கப்பட்டிருக்கிறது. முசிறி கல்லூரி மாணவர் இல்லம் தாக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. பொதுக்கூட்டங்களை நடத்தவிடாமல் கலகம் விளைவிப்பதிலும் இப்போது ஈடுபட்டிருக்கின்றார்கள். யார் பொதுக் கூட்டம் நடத்தினாலும், எந்தக் கட்சிக்காரர் பொதுக் கூட்டம் நடத்தினாலும் அம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அனுமதிக்கக் கூடாது. மதுரை, சமயநல்லூர், திருச்சி இன்னும் பல இடங்களில் நடத்தப்பெற்ற பொதுக் கூட்டங்களைச் சரியாக நடைபெறவிடாமல் குழப்பம் விளைவித்திருக்கிறார்கள். அரசியல் சட்டப்படி எந்தக் கட்சி வேண்டுமானாலும் கூட்டம் நடத்தலாம். அதற்கு உரிமை இருக்கிறது. சமூக விரோதிகள் கூட்டம் நடைபெறவிடாமல் குழப்பம் விளைவிப்பார்களானால், வன்முறை நிகழாவண்ணம் காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பதில் முனைந்திருக்க வேண்டும். வன்முறையாளர்கள் அரசியல் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு போலீஸ் இலாகாவுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடவடிக்கை எடுப்பதிலே தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது.

அடுத்து, இந்த போலீஸ் கமிஷன் குறிப்பிட்ட கருத்துக்களை எல்லாம் அரசாங்கத் தலைமைச் செயலாளர், ஐ.ஜி. போன்ற பெரிய அதிகாரிகள் அடங்கிய ஒரு ஹை லெவல் கமிட்டி அமைத்து பரிசீலித்துப் பார்க்கவேண்டும். அதில் உள்ள முக்கியமான கருத்துக்களையெல்லாம் நாம் செயல்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு சின்ன விஷயத்தைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சின்ன விஷயமாக இருந்தாலும் அது பெரியதாகத் தோன்றுகிறது. அதாவது, மதுரை, சென்னை நகர்களில் 'டாகஸ் ஸ்குவாட்' வைத்திருக்கிறார்கள். அந்த நாய்களுக்கு எல்லாம் இறைச்சி போன்றவற்றை தாராளமாகப் போட்டு நல்லமுறையில் பராமரிக்க வேண்டும். இறைச்சி போடுகிறார்கள். ஆனால் அவைகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய இறைச்சி சரியாகப் போய்ச் சேரவில்லை; வேறு எங்கோ போய்விடுகிறது. இம்மாதிரிக் காரியங்கள் நடக்கக் கூடாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், சப்-இன்ஸ்பெக்டர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் மிகவும் குறைவாக இருக்கின்றார்கள். எனவே, அந்தப் பதவிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம் இந்த ஃபயர் சர்வீஸைப் பற்றியது. அண்மையில் மதுரையில் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது அவர்கள் அயராது உழைத்தார்கள். அங்கே அவர்கள் ஆற்றியப் பணி பாராட்டத் தக்கது. ஆனால் அவர்களுக்கும், மற்ற போலீஸ் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் சம்பளத்திலும் அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்திலும், சலுகைகளிலும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும்.

They should be treated on a par with the regular forces முறைச் செயல்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இன்று சமூகத்தில் இருக்கின்ற தீயவர்களை, அக்கிரமக்காரர்களைக் கண்காணிக்க, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் போதுமான அதிகாரம் காவல் துறைக்கு இருக்கிறது.



அவர்கள் அந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதில், எந்தவிதமான தலையீடும், குறிப்பாக அரசியல் கட்சிகளின் தலையீடுகள் இருக்கக்கூடாது, என்ற கருத்தினைக் கூறி, போலீஸ் இலாகாவை இருக்கின்ற சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, தன் இச்சையாக, திறமையாகப் பணியாற்றச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட காவல்துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும், தோழமைக் கட்சியின் தலைவர்களும் எடுத்து உரைத்திருக்கிற பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் சில விளக்கங்களை நான் இங்கே கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல்துறை மானியத்தைப்பற்றிப் பேசிய அனைவருமே காவல்துறையில் ஈடுபட்டிருக்கிற பொறுப்புள்ள அதிகாரிகளும், காவலர்களும் எந்த அளவுக்கு இந்தச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தொண்டாற்றுகின்றார்கள் என்பதனை விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கடமை, கண்ணியம் எனக் கொண்டு ஆண்டாண்டு காலமாகப் பணியாற்றி வருகின்ற அந்தத் துறையினர் சமுதாயத்திலும் நாட்டிலும் நல்ல பாதுகாப்பும், தூய்மையும், புனிதத் தன்மையும் ஏற்பட வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய உயிரைக்கூட பணயமாக வைத்து ஆற்றி வருகிற பணிகளை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

கிட்டத்தட்ட 38 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புள்ள காவலர்களும், அதிகாரிகளும் இருக்கின்ற அந்தத் துறையில், இங்கு பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக ஒன்றிரண்டு குறைகள் தென்பட்டாலும் அவைகளை எல்லாம், இன்று காலை முதல் இதுவரை எடுத்துச் சொல்லப்பட்ட பல விளக்கங்களின் மூலம் அவர்களே கூட திருத்திக்கொள்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பெரிய இலாக்கா எப்படிச் சீர்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு பல உறுப்பினர்களும், தலைவர்களும் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். இந்த இலாக்காவுக்கும், அரசுக்கும் இருக்கின்ற தொடர்பினை வைத்துக்கொண்டு, இந்த இலாக்காவிலே நடைபெற்றுவிடுகின்ற சிற்சில தவறுகளை ஒரே அடியாக அரசின் மீது சுமத்தி, அரசியல் ரீதியில் இந்தப் பிரச்சினையை ஆராய்வது நல்லது அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதும் நல்லது என்று கருதுகிறேன்.

இலாக்காவில் உள்ளவர்கள் மக்களிடத்தில் நல்ல தொடர்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும், எளிமையாக மக்களிடத்தில் பழகுகின்றவர்களாக இருக்கவேண்டும், அவர்களைப் பார்த்து ஒரு அச்சம், பய உணர்ச்சி இவைகள்

எல்லாம் ஏற்படாத அளவுக்கு அந்தத் துறை இருத்தல் வேண்டும் என்ற கருத்தினை இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்த பெரியவர் மணலி ஐயா அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், வேறு சிலரும் எடுத்துச் சொல்லியிருந்தார்கள். இந்த எண்ணத்தை யாரும் மறுப்பதற்கில்லை. மக்களிடத்தில் நல்ல தொடர்பு நிச்சயமாக இந்த இலாக்காவினர்களுக்கு இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் இந்த இலாக்காவிற்கு அடங்கி நடந்திடல் வேண்டும், இந்த நாட்டில் அமைதியைக் காக்க, ஒழுங்கினைக் காக்க என்ற உணர்வும் பொது மக்களிடத்தில் இருந்திடல் வேண்டும். அது அறவே அற்றுப்போய்விடுமானால் தாறுமாறான சமுதாயச் சூழ்நிலை, மோதுதல் நிறைந்த சமுதாயச் சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் யாரும் மாறுபட இயலாது.

ஒரு கதை சொல்வார்கள். ஒரு பாம்பு ஒரு சாதுவினிடத்தில் சென்று, 'என்னைக் கண்டால் எல்லோரும் வெறுக்கிறார்களே ஏன்?' என்று கேட்க, அந்தச் சாது 'நீ எல்லோரையும் கடிக்கிறாய் என்ற காரணத்தினால் வெறுக்கிறார்கள், நீ அந்த வேலையை விட்டுவிடவேண்டும்' என்று சொல்ல, அந்தப் பாம்பும் 'சரி' என்று சென்றுவிட்டதாம். பத்து நாட்களுக்குப் பிறகு உடம்பெல்லாம் காயத்தோடு அந்தப் பாம்பு மீண்டும் சாதுவை அடைந்து "என்னைச் சிறுவர்கள் எல்லாம் கூட அடிக்கிறார்களே, உடம்பில் ஏற்பட்டிருக்கும் காயங்களைப் பாருங்கள்" என்று வருந்தியதாம். அதற்கு அந்தச் சாது "உன்னை யாரையும் கடிக்காதே என்று தானே நான் சொன்னேன். அடிக்க வருகிறவர்களை படம் எடுத்துச் சீறுமலா இருக்கச் சொன்னேன்? படம் எடுத்துச் சீறி இருந்தால் அவர்கள் பயந்து போய் இருப்பார்களே" என்று சொன்னாராம்.

அதைப்போல போலீஸ் இலாக்கா கடிக்காமல் இருக்கலாம்—சீறாமல் இருந்து விடுமானால் பாம்பின் கதிதான் இந்த இலாக்காவுக்கும் என்பதை நான் மாத்திரம் அல்ல—ஆளும் கட்சியாக இருந்து இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்களும், வேறு மாநிலங்களில் ஆளும் கட்சியாகவும் இங்கே எதிர்க் கட்சியாகவும் இருப்பவர்களும், ஒரிசா போன்ற மாநிலங்களில் ஆளும் கட்சியாக இருந்து இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்களும், மற்ற மாநிலங்களில் கூட்டாக ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இங்கே தோழமைக் கட்சியாக இருப்பவர்களும் நன்றாக உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆக, போலீஸ் இலாக்கா மக்களோடு நெருங்கிக் கலந்துவிட வேண்டுமென்ற அந்தக் கருத்துக்கு இடையிலும், மக்களை அச்சுறுத்துகிற அந்தக் கருத்துக்கு இடையிலும், அவர்களுக்கு என்று இரு நிலைகளுக்கும் இடையே அமைந்த சமநிலையில் நின்று தங்கள் பணியினை ஆற்றிடல் வேண்டும் என்ற முடிவினுக்கு நாம் வர வேண்டியவர்களாக இருக்கிறோம்.



சமுதாயத்தில் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுவிடுமானால் குற்றங்கள் குறைந்துவிடும் என்ற கருத்துக்களை திரு. மணலி ஐயா அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்துத்தான். ஆயினும், ஓரளவுக்குத்தான் குற்றங்கள் குறையும். அமெரிக்கா போன்ற நாடுகளில் நம் நாட்டைவிட அதிக அளவு குற்றங்கள் மலிந்து இருக்கின்றன என்பதையும், அங்கே யார் வேண்டுமானாலும் ரிவால்வரை வைத்திருக்கலாம், யாரை வேண்டுமானாலும் சுடலாம் என்ற நிலைமை இருப்பதையும் அவர்களே இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.

எந்த அளவுக்குக் குற்றங்கள் மலிந்து இருக்கின்றன, சமுதாயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நாடுகளில் என்று பார்க்கிறபோது, சமுதாய முன்னேற்றம் ஓரளவுக்குத்தான் குற்றங்கள் குறைய உதவி புரிகிறது என்பதை உணர முடியும். அதே நேரத்தில், சில பேர்கள் குற்றங்கள் புரிவதையே ஒரு பழக்கமாக்கிக்கொண்டு விடுகிறார்கள். நான் அண்மையில் ஒரு பெரிய இடத்தில் நடைபெற்ற திருமணத்திற்குப் பிறகு அந்தத் தம்பதிகள் எங்கே சென்றாலும் ஓட்டலில் இருந்து கணவர் வெளியில் போயிருக்கும்போது மற்ற பக்கத்து அறைகளில் இருந்தெல்லாம் டிரான்சிஸ்டர், க்ளாக் போன்ற பல பொருள்கள் இந்த அறைக்கு வந்துவிடும். அந்த அம்மையாருக்கு அப்படி ஒரு பழக்கம் தேவை என்பதற்காகக் கூட அவர்கள் அப்படித் திருடுவதில்லை. திருடாமல் இருந்தால் அவர்களுக்கு ஏதோமாதிரி ஒரு உணர்வு ஏற்படும் என்கிற தகவல்களை அறிந்தேன். சமுதாயத்தில் ஒரு பெரிய சீர்திருத்தம் தேவை என்று நாம் நினைத்து செயல்படுகிற நேரத்திலே குற்றங்கள் குறைவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். அவற்றைப் புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குற்றங்கள் குறைந்துவிடவில்லை என்று எடுத்துக் காட்டினாலும், குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் இந்த இலாக்கா தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது. கொலைக் குற்றங்களை எல்லாம் எவ்வளவு விரைவாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

காவல் துறையினருக்குக் கடந்த பல ஆண்டுகாலமாக பல்வேறு நன்மைகள் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் முன்பெல்லாம் இருந்து அரசுக்கு அளிக்கப்பட்டு, அவைகள் ஓரளவுக்குத்தான் கவனிக்கப்பட்ட சூழ்நிலை இருந்தது. அவர்களது குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காவல்துறை நிலைகளை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு சில பரிந்துரைகளை அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறது. அதில் 138 பரிந்துரைகள் இருக்கின்றன. அந்த அறிக்கையைப் பரிசீலித்து அரசுக்கு படிப்படியாக நம்முடைய நிதி நிலைகளுக்கேற்ப எந்த

எந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக் கூற ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதுவும் தன் பணியினை முடித்து அரசுக்குத் தன் அறிக்கையைத் தருகிற தருவாயில் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறை ஆணைக் குழுவின் 133 பரிந்துரைகளையும் ஐந்தாண்டுக் காலத்தில் செயல்படுத்த அரசுக்கு அதிகப்படியாக ஆக வேண்டிய தொகை 5 கோடி ரூபாயிலிருந்து 6 கோடி ரூபாய் வரையிலும் இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும். குறிப்பாக 23 பரிந்துரைகள் முதல் கட்டமாக இப்போது ஏற்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளின்படி காவலர்களுடைய சம்பளம், படி விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதைக் குறித்து நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் "காவலர்களுடைய தினப்படி ரூ. 1.50 என்ற அளவில்தான் இருக்கிறது, அது உயரவே இல்லை" என்று சொன்னார்கள். அவர்கள் ஒருவேளை இந்தக் குறிப்பினைத் தெரிந்துகொள்ளாமல் சொல்லியிருக்கலாம். 2—10—1970-க்கு முன்பு போலீஸ் காவலர்கள் தினப்படி ரூ. 1.50 காசாக இருந்தது. 2—10—1970-க்குப் பிறகு அவர்களது நாள்படி குறைந்தபட்சம் 3 ரூபாய் என்றும், அதிகபட்சம் ரூ. 4.50 என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. தலைமைக் காவலர் தினப்படி ரூ. 2 ஆக இருந்தது 2—10—1970-க்குப் பிறகு ரூ. 4.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தினப்படி ரூ. 2.50 ஆகப் பெற்று வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் 2—10—1970-லிருந்து ரூ. 4.50-லிருந்து ரூ. 6.00 வரையிலும் பெற்று வருகிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் முன்பு ரூ. 2.50 லிருந்து ரூ. 4.50 வரையிலும் பெற்றுவந்தனர். 2—10—1970-லிருந்து அவர்களது தினப்படி ரூ. 6.00 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, தினப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு உச்சவரம்பு இருப்பதால் அவர்கள் பெறுகின்ற வருமானம் குறையும் என்று சொல்கிறார்களே, அதுபற்றி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தினப்படி குறைந்தபட்சம் 3 ரூபாய் என்றும், அதிகபட்சம் 4.50 ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் அவை ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளின்படி இப்போது முதல் கட்டமாக, ஏற்கப்பட்டிருக்கிற சம்பள விகிதங்கள் எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள்





அனைவரும் அறிவர். அதைத் தொடர்ந்து 3,100 புதிய முதல்நிலைக் காவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதையும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஆயிரம் என்று சொன்னார்கள். முதல்நிலைக் காவலர்கள் ஆயிரம் பேர் தற்போது 1—2—1972-லிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். 500 பேர் கோவையிலும், 500 பேர் வேலூரிலும் பயிற்சிகளில் சேர்ந்திருக்கிறார்கள். பாக்கி 2,100 பேர் எஸ்.எஸ். எல்.சி. வரையில் படித்தவர்களும், அது வரையில் படிக்காமல் நிறைந்த அனுபவம் உள்ளவர்களும் இரண்டாம் நிலைக் காவலர் பிரிவிலிருந்து முதல்நிலைக் காவலராக மாற்றப்படுகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 60 புதிய காவல் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர் காவல் மாவட்டம் தஞ்சை மேற்கு, தஞ்சை கிழக்கு என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

குற்றம், குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்ய கணக்கிடு இயந்திர நிலையம் அமைக்க (Computer Centre) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

13,50,000 ரூபாய் செலவில் காவல்துறை கம்பியில்லாத் தந்தி முறையை விரிவுபடுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

120 காவல் வட்டங்களில் வானொலித் தொடர்பு சாதனம் (V.H.F.) இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பொருத்தப்படும்.

14 தொலைக் கையச்சுகள் (Teleprinters) அமைக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் ரூ. 17,10,000 செலவில் 30 ஜீப்புகள், 30 லாரிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

16 இயங்கும் குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்களை மாவட்டங்களில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11 மாவட்டங்களில் காவல்துறை நிழற்பட நிலையங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 4,50,000 செலவில் உருவ நிழற்படி (Fascimile Transmitters) அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் குழுவினால் ஏற்கப்பட்டுள்ள காவல்துறை ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தினால், தற்போது இருக்கும் உட்கோட்டங்கள் 69

லிருந்து 90 ஆகவும், காவல் வட்டங்கள் 182-லிருந்து 307 ஆகவும் அதிகரிக்கும். மேலும், காவல்துறையில் உள்ள பதவிகள் தற்போதுள்ளதைவிட 3,250 அதிகமாகும்.

உயர்மட்டக் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு மேலும் என்ன என்ன காரியங்களைத் தொடர்ந்து நடத்தலாம் என்பதை நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் காவல்துறையினர் மிகமுக்கியமாக தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்து, மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகவும், அவர்கள் காட்டிய ஆற்றல், அஞ்சாமை, அறிவோடு அவர்களை ஆராய்ந்து, எடுத்த நல்ல நடவடிக்கைகளின் மூலம் நக்சலைட்டுகளின் நடவடிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டில் பெருமளவுக்குக் குறைந்திருக்கிற நிலையைக் காண்கிறோம்.

ஏற்கனவே ஆந்திர மாநில நக்சல்பாரிகள் நாகி செட்டியும் மற்ற 7 பேர்களும் கைது செய்யப்பட்டு, ஆந்திர மாநில போலீசார் வசம் ஒப்படைக்கப்பட்ட பெருமை தமிழ்நாடு போலீஸ் இலாகாவுக்கு உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எரெனியல் கிராமத்தில், திரு. தங்கசாமி நாட்டார் வீட்டில் நடந்த நக்சல்பாரி கொள்ளை வழக்கில் போலீசார் காட்டிய திறமையின் காரணமாக ஜெகந்நாதன் உட்பட 9 பேர்களுக்கு 7 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும் நம் மாநில போலீசாரின் திறமைக்கு எடுத்துக்காட்டு.

பிரசித்தி பெற்ற பெண்ணாடம் வழக்கில் நெல் திருட்டு, வெடிகுண்டு சம்பவங்களுக்கும் வெடிகுண்டு சம்பந்தம் குறித்து புகார் செய்தவர் கொலையிலும் கலியபெருமாள் சம்பந்தப்பட்டிருந்தார். வெடிகுண்டு சம்பவத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. கணேசன் மற்ற இருவரும் இறந்தனர் என்ற செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறீர்கள். பெண்ணாடம் கொலை வழக்கில் கலியபெருமாளுக்கும் அவருடைய மகன் வள்ளுவனுக்கும் தூக்குத் தண்டனையும், மற்ற ஐந்து பேர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. போலீசார் மிகுந்த கஷ்டத்திற்கு இடையே அவர்களைக் கைது செய்தனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தூக்குத் தண்டனை பாளது செஷன்ஸ் கோர்ட்டால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்த பிறகுதான்



தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சொல்லலாம்.
It is always subject to confirmation by the High Court.
மற்ற தண்டனைகளைப்பற்றிக் குறிப்பிட்டாலும், தூக்குத் தண்டனைபற்றி இப்படிக் குறிப்பிடுவது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது. அவரே அப்பீல் செய்யப் போகாவிட்டாலும் நாமே அளிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதை வெளியிடுவதில் தவறு இல்லை. இப்படிப்பட்ட நேரங்களில் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் இப்படிப் பேசும்போது, அதைப் பயன்படுத்திக்கொண்டு, தீவிரவாதிகள் தங்களுக்காகப் பேசக்கூடியவர்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : I was only desiring to point out the legal aspect of it; It will not be proper to call it so now.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூக்குத் தண்டனை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.
அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தூக்குதண்டனை விதிக்கப்பட்டது என்பதை செஷன்ஸ் கோர்ட்டால் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டவர் என்று சொல்லலாம். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். ஹைகோர்ட்டில் அது ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும். அவர் அப்பீல் பண்ணலாம்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, தூக்குத் தண்டனையை உயர்நீதிமன்றம் கன்ஃபார்ம் செய்யவேண்டும். அதை கன்ஃபார்ம் செய்வது தவிர தூக்குத் தண்டனை அளிப்பது அதனுடைய வேலை அல்ல, செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பு கன்ஃபார்ம் செய்யப்படுகிற வரையில் அல்லது ரத்து செய்கிற வரையில் அது தூக்குத் தண்டனை என்றுதான் கருதப்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எனக்காக வழக்கறிஞர்கள் எல்லோரும் வாதாடியதற்கு என் நன்றி.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 15

அடுத்து, கந்தசாமி, பஞ்சலிங்கம், கிருஷ்ணசாமி, ஜகந்நாதன் ஆகிய தீவிர கம்யூனிஸ்டுகள் 7—5—1950 அன்று மாதுப்பட்டி மிராசுதார் ராமசாமி கவுண்டரை உடுமலைப்பேட்டையில் அவர் வீட்டில் கத்திகளால் குத்திக் கொலை செய்தார்கள். தொடரப்பட்ட வழக்கில் கந்தசாமி, பஞ்சலிங்கம் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

1970-ம் ஆண்டு ஜூலை மாதம் தீவிர கம்யூனிஸ்டு முருகையா, காத்தமுத்து மற்றும் எதிரிகள் தஞ்சை மாவட்டம் பெருமாங்குளம் நிலச்சுவான்தார் முத்துச்சாமி சோழகர் என்பவரை பிச்சுவாவால் குத்திக் கொலை செய்ய முயற்சித்தனர். இவர்கள் பேரில் வழக்கு தொடர்ந்ததில் 8 எதிரிகளுக்குத் தலா 18 மாதம் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. பாலு என்னும் தீவிர கம்யூனிஸ்டு இன்னும் தலைமறைவாக இருந்து வருகிறார்.

அதேபோல், ஸ்ரீமுஷ்ணம் மிராசுதார் ராஜகோபால் பிள்ளை என்பவரை 22—12—1970-ம் தேதி இரவு தீவிர கம்யூனிஸ்டுகள் கழுத்திலும் முகத்திலும் வெட்டிக் கொலை செய்தார்கள். இவ்வழக்கு விசாரணையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற 1970-ம் ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில், தோட்ட முதலாளிகளைக் கொலை செய்யவும், கொள்ளையடிக்கவும், ஜி. கிருஷ்ணபிள்ளை என்ற தீவிர கம்யூனிஸ்டுத் தலைவரும் அவருடைய 6 சகாக்களும் சதி செய்து வெடி குண்டு தயார் செய்தார்கள். வெடிகுண்டு செய்யும்போது, அவைகள் வெடித்து, சுந்தரம் என்ற நபர் இறந்துபோனார். அதன் பின்பும் இவர்கள் கொலை, கொள்ளை செய்ய முயற்சி செய்தார்கள். இவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது.

சென்னையிலே 4—3—1971 அன்று அண்ணா நகரில் அரசுக்குச் சொந்தமான பேருந்துகளை நிறுத்தி, தீ வைத்து நாசம் செய்ய தீவிர கம்யூனிஸ்டுகள் சுவாமிநாதன் என்பவர் தலைமையில் நடவடிக்கை எடுத்தார்கள். வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

திருச்சியில் கருப்பூர் என்ற கிராமத்தில் ஒரு நிலச்சுவான்தார் கொலை செய்யப்பட்டார். வழக்கு விசாரணையில் உள்ளது.

முத்து தங்கப்பா, திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் கொலை செய்யப்பட்டார். தியாகராசன், கணேசன் ஆகியவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. குருமூர்த்தி, அரங்கசாமி இவர்கள் தஞ்சை செஷன்ஸ் நீதிபதியால் தண்டனை அளிக்கப்பட்டனர்.



1972 மார்ச் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

பயங்கரவாதிகள் தீவிரம் பேசிக்கொண்டு தங்களுடைய கொள்கைகள், எண்ணங்கள் நிறைவேற ரத்தப் புரட்சி ஒன்றுதான் சரியான வழி என்ற தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள், பாட்டாளி மக்கள் உள்ளத்திலே பதிய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட ஒரு இயக்கம் போலீசாரின் கடுமையான நடவடிக்கைகள் மூலமாகவும் திறமையான நடவடிக்கைகள் மூலமாகவும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களைக் கூறினேன்.

காவல் துறையினருக்குப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. காவல் துறையினர் சில முக்கியமான நேரங்களில் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் இவ்வாறு குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய பணிக்காலத்திலே மிகுந்த பொறுப்போடும் நேர்மையோடும் நடந்து கொண்டார்கள் என்பதையும் கணக்கெடுத்து ஒவ்வொரு செப்டம்பர் 15-ஆம் நாள் அன்றும் 'முதலமைச்சர் பரிசு' என்ற பெயரால் தங்கப் பதக்கங்களும், ஐந்து ஆயிரம் ரூபாய், மூன்று ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்குப் பொற்கிழிகள் அளிக்கின்ற நிகழ்ச்சி நடை பெற்று வருகிறது.

காவலர் நல நிதி என்ற நிதியில் ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு இருந்ததை 1971–72-ஆம் ஆண்டிலே ஒன்றரை லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு அதிகப்படுத்தியிருக்கிறோம்.

1971–72 ஆம் ஆண்டிலே கிராமங்களுக்கு ஆங்காங்கிருக்கிற போலீஸ் ஸ்டேஷன்களிலிருந்து சென்று வருவதற்குக் காவல் துறையினருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்ட யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு 100 மோட்டார் சைக்கிள்கள் அவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கூடுதலாக 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட இருக்கின்றன.

கடன் உதவியிலே காவல் துறையினர் 5 ஆயிரம் சைக்கிள்கள் வாங்கிக் கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வளவு சலுகைகளும் நாம் செய்திருக்கிறோம் என்றாலும் முழுதும் நிறைவானதா, இன்னும் செய்யப்பட வேண்டாமா என்ற கேள்விகள் கேட்டு காலையிலிருந்து பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். அதற்கேற்றவாறுதான் நான் முதலிலே கூறியதைப் போல் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஏதோ காவல் துறைப் பணிகள் வேகமாக நடைபெறவில்லை, பெரிய பெரிய திருட்டுகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கோஷம் பலமாக இருக்கிறது. மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறைபாடுகளைச் சொல்லி அதே நேரத்திலே காவல் துறை ஆற்றிய அருஞ்சாதனைகளையும் எடுத்துக் காட்டினார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, காவல் துறை மானியத்திலே விவாதம் நடைபெறும்பொழுது அதிகச் சூடு இருக்கும், காரசாரம் இருக்கும். கடுமை இருக்கும், ஆனால் இன்றைக்குக் காலையிலிருந்து மாலை வரையிலே கூட்டம் நிறைய இருந்தாலும் காரம் அதிகம் இல்லாமல் கடுமையான விவாதம் இல்லாமல் காவல் துறை மானியம் விமர்சிக்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே காவல் துறை எவ்வளவு மென்மையாகச் செயல்படுகிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

பெரிய திருட்டுக்கள், கொள்ளைகள் இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டை காலையிலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

23—4—1971, அந்த நாளிலே நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து 65 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பணம் காணாமல் போயிற்று. எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை. எப்படி அந்தப் பணப்பெட்டி அங்கிருந்து வெளியேறியது என்பதை யாரும் சொல்வதற்கு இயலவில்லை. அவ்வளவு மர்மமாக அந்தத் திருட்டு நடைபெற்றது. பல பேர்களை சந்தேகப்பட்டார்கள். மாநகராட்சி மன்ற அலுவலர்கள் செய்திருக்கக் கூடுமோ, ஊழியர் செய்திருக்கக் கூடுமோ, என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். கடைசியில் மராட்டியம் போன்ற, மைசூர் போன்ற, ஆந்திரம் போன்ற மாநிலங்களிலே பணத்தோடு சிதறிக் கிடந்தார்கள். இவர்கள் எல்லாம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் என்றாலும், அவர்கள் அங்கிருந்து சென்னைக்கு வந்து 65 ஆயிரம் ரூபாய் அளவுக்குத் திருடிக்கொண்டு பல்வேறு மாநிலங்களுக்கு ஓடிவிட்ட பிறகும் நம்முடைய காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, இழந்த பணத்தில் பெரும் பகுதியை மீட்டார்கள். அந்த வழக்கிலே எட்டுப் பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

மதுரை மத்திய வங்கியில் 90 ஆயிரம் ரூபாய் காணாமல் போயிற்று. காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையால் ஏழு பேர்கள் கைது செய்யப் பட்டார்கள்.





காலையிலே பேசிய அம்மையார் அவர்கள் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டிலே நடைபெற்ற கொள்ளை வழக்கிலே இரண்டு, மூன்று மாத காலம் யாருமே கைது செய்யப்படவில்லை. ஆகவே சந்தேகப்படுகிறேன் என்று சொன்னார்கள். தெக்கூர் கருமுத்து சிவலிங்கம் செட்டியார் வீட்டில் கொள்ளை நடந்த தேதி 25—11—1971, காலை 7½ மணி. வழக்கு விசாரணைக்கு எடுத்த தேதியும் 25—11—1971 தான். தமயந்தி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1—12—1971. 25—11—1971 க்கும் 1—12—1971 க்கும் இடையிலே மாதக் கணக்கு இல்லை, நாள் கணக்குத்தான் இருக்கிறது. சுப்பிரமணியன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 1—12—1971. சோமன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 2—1—1972. ஒருவேளை ஒருவர் 1971 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார், இன்னொருவர் 1972 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார் என்று சொல்லலாம். ஆனால் 1—12—1971 க்கும் 2—1—1972 க்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். அதோடு முடிகிறது டிசம்பர் மாதம். 1972 ஆம் ஆண்டு அடுத்த ஆண்டு பெரியசாமி என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 5—1—1972 பழனியன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 7—1—1972. அருணாசலம் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 7—1—1972 கதிர்வேலு என்பவர் கைது செய்யப் பட்ட நாள் 10—1—1972. கதிரேசன் என்பவர் கைது செய்யப்பட்ட நாள் 26—1—72. மேலும் 9 குற்றவாளிகள் நீதிமன்றத்திலே சரணடைந்தார்கள். இப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இடையே இரண்டொரு நாள் தலைமறைவாக ஓடி ஒளிந்தவர்களைக் கைது செய்தார்கள். இதற்கு முன்பு இப்படி நடந்ததா என்று எடுத்துப் பார்த்தால் பல ஆதாரங்கள் இருக்கின்றன. முன்பிருந்த அரசிலே ஆறு, ஏழு மாத காலத்திற்குப் பிறகு, குற்றம் பதிவு செய்யப் பட்டதற்குப் பிறகு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதிலே தாமதம்கூட ஏற்படவில்லை. எந்தத் தாமதமும் இல்லாமல் கைது செய்யப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல் மிகவும் முக்கியமாக 4 வைர வளையல்கள் ரூ. 40,000. ரொக்கம் ரூ. 11,932, கடன் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2,87,000, தங்க நகைகளின் மதிப்பு ரூ. 2,500, துணிகளின் மதிப்பு ரூ. 1,000, வெள்ளி சாமான்களின் மதிப்பு ரூ. 25,000. இவ்வளவும் களவு போன சொத்துக்களில் 90 சதவீதம் கைப்பற்றி இந்தக் குற்றவாளிகளின் மீது வழக்கு தொடர்ந்து இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் சட்ட மன்றத்திலே வாய்ப்பு இருக்கிறது, தவறான தகவல்களைத் தருகின்ற நேரத்திலே உடனடியாகப் பதில் அளிக்கும் வாய்ப்பை அமைச்சர்கள் பெற்றிருக்கிறோம். பதில் அளிக்கிறோம். காலையில்கூட சட்ட அமைச்சரவர்கள் அவர்களது தவறுகளைத் திருத்தக்கூடிய அளவிற்குத்

சொன்னார்கள். நானும் இவ்வளவு விவரங்களைத் தந்திருக்கின்றேன். ஆனால் வெளியிலேயும், பத்திரிகைகளிலேயும் சிவலிங்கம் செட்டியார் வீட்டில் நடந்த கொள்ளையில் அரசு தலையிட்டதன் காரணமாகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று, வேண்டுமென்றே அவதூறாகக் கூற வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படும் பிரச்சாரங்கள் ஏதோ இந்த அரசை மக்கள் மத்தியிலே குற்றம் சாட்டுவதற்குப் பயன்படலாம். ஆனால் எல்லா அரசுகளுக்கும் பொதுவாக இருக்கின்ற இத்தகைய இலாக்காவை மக்கள் மத்தியில் மதிப்பற்றதாக ஆக்கிவிடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மிகுந்த கவனத்தோடு இந்தப் பிரச்னைகளை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, திரு. மணலி கந்தசாமி அவர்கள், சிலைகள் அதிகமாக வெளிநாடுகளுக்குத் திருட்டு போகின்றன என்றும், கண்காணிக்க வேண்டுமென்றும் கவலையிலே எடுத்துக் கூறினார்கள். அது உண்மைதான். 1959-ஆம் ஆண்டிலே 153 சிலைகள் திருடப்பட்டு, போலீசாரால் 103 சிலைகள் மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 1960-ஆம் ஆண்டில் 240 சிலைகள் திருடப்பட்டு, அவற்றிலே 161 சிலைகள் திரும்பக் கிடைத்திருக்கின்றன. 1971-ஆம் ஆண்டிலே 208 சிலைகள் திருடப்பட்டு 133 சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிலைகள் திருட்டு நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தெக்களூர் சிவலிங்கம் செட்டியார் வீட்டுத் திருட்டில் ஏதோ அரசியல் அல்லது அரசு தலையிட்டதாகச் சொன்னார்களே, அவர்களுக்குச் சொல்கிறேன். ஒரு பிரசித்தி பெற்ற சிலை திருட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியின் தலைவரே, ஒரு மாவட்டத்தின் தலைவரே ஈடுபட்டிருந்தார் என்பது ஒரு குற்றச்சாட்டு. அரசியலுக்கு எதை எந்தவோ காங்கிரசார் இழுக்கின்ற காரணத்தால் நானும் இதைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் சிவபுரம் கோயிலைச் சார்ந்த இடத்தின் நிலத்தைத் தோண்டும்போது வேலைப்பாடுகள் நிறைந்த நடராசர், சோமாஸ்கந்தர், சிவகாமி அம்மன், திருஞானசம்பந்தர், மற்றொரு அம்மன், பிள்ளையார் ஆகிய ஆறு சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர் இந்தச் சிலைகள் கும்பகோணம் தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர், அவற்றை சென்னை அரசினர் கலைக்கூடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கும்போது, மேற்படி சிவபுரம் கோயில் தர்மகர்த்தாவும், தீவிர காங்கிரஸ்காரருமான திரு. முத்துசாமி மட்டையர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினார். கலைக்கூட நிர்வாகத்தினர் எதிர்ப்பு இருந்த போதிலும், மேற்படி சிலைகள் சிவபுரம் கோயிலிலேயே இருக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.





சிலைகள் சிவபுரம் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தன. சுப்பிரமணிய படையாச்சி என்பவரின் புதல்வர்களும் அதேபோன்ற சிலைகளைச் செய்யக்கூடிய ஸ்தபதியாரும் சேர்ந்துகொண்டு அதே போன்ற சிலைகளை அங்கே செய்து வைத்துவிட்டு, அந்த உண்மையான சிலைகளையெல்லாம் களவாடி வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அவர் காங்கிரஸ்காரர்தானா என்று சிலர் கேட்கக் கூடும். சுப்பிரமணிய படையாச்சி என்பவர் காங்கிரஸ்காரர்தான். அவருடைய பிள்ளைகளின் பெயர்கள்கூட திலகர், சித்தரஞ்சன், கோவிந்ததாஸ், ஜவஹர், காந்தி என்பதுதான். தன்னுடைய அபிமானப் பெயர்களையெல்லாம் பிள்ளைகளுக்கு அவர் வைத்திருந்தார். சுப்பிரமணிய படையாச்சியின் புதல்வர்களான திலகர், சித்தரஞ்சன் தாஸ் ஆகியோர்தான் இந்தக் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர்கள். 1952-ம் ஆண்டிலிருந்து இவ்வளவு பெரிய திருட்டு கண்டுபிடிக்கப்படவில்லை, இந்த ஆட்சிக் காலத்திலே கண்டுபிடிக்கப்படிருக்கிறது. 1952-லே இந்தத் திருட்டு நடந்து சிலைகள் வெளிநாட்டுக்குச் சென்றிருக்கின்றன. உண்மையான சிலைகள்போல செய்யப்படும் சிலைகள் சாதாரண உலோகத்திலே செய்யப்படுகின்றன. பழைய காலத்து சிலைகள் அப்படியல்ல. அதிலும் நடராசர் சிலையிலுள்ள வளைவுகள், விரல் நெளிவுகள் இவையெல்லாம் செய்திட தங்கம் அதிகமாகக் கலக்கப்படும். அப்படித் தங்கம் கலக்கப்பட்ட சிலைகள் எல்லாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. குற்றாலத்திலே ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அந்தத் திலகர் (சிரிப்பு). திலகருடைய சகோதரர், சித்தரஞ்சன் தாஸ் பம்பாயிலிருந்துகொண்டு மூத்த சகோதரருடைய பிரதிநிதியாக இந்த வியாபாரத்தை நடத்தி வந்திருக்கிறார். சிலை வாங்கி விற்பதிலே ஒரு பெரிய தொடர்பே ஏற்படுத்திக்கொண்டு இந்தச் சிலைகள் பல இடங்களுக்கும் போயிருக்கின்றன. ஒரேவொரு சிலை நடராசருடைய சிலை மாத்திரம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தச் சிலையை அமெரிக்க நாட்டுக்காரன் 75 இலட்சம் ரூபாய் விலை கூறிக்கொண்டிருக்கின்றான்.

இப்படி பயங்கரமான ஒரு சிலை திருட்டு 1952 லிருந்து திட்டமிட்டு ஒரு குடும்பமே அதிலே ஈடுபட்டு நடத்தப்பட்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் அரசியலைக் கலக்கின்றவர்கள் இவைகளையெல்லாம் மறந்துவிடக்கூடாது. நாங்கள் சொல்லுகின்ற காரணத்தினால், ஏதோ காங்கிரஸ் கட்சியைக் குற்றம் சாட்டுகிறேன் என்று கருதிவிடக்கூடாது.

ஊழல், விவகாரங்கள் இவைகளையெல்லாம் பேசும் நேரத்தில் 1952-இலிருந்து 1967 வரையிலேயும் நடைபெற்ற இந்தச் சம்பவங்களை அவர்கள் ஒரு கட்சியின் போர்வையிலே ஒளிந்துகொண்டு நடத்தியிருக்கின்றார்கள். எந்தக் காரியம் எந்தக் கட்சியின் சார்பாக நடைபெற்றாலும் அது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. அது கழகத்தின் சார்பிலே நடைபெற்றாலும் சரி, காங்கிரஸ் சார்பிலே

நடைபெற்றாலும் சரி, கம்யூனிஸ்ட் சார்பிலே நடைபெற்றாலும் சரி, சுதந்திராக் கட்சியின் சார்பிலே நடைபெற்றிருந்தாலும் சரி எந்தக் கட்சியாக இருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே இப்படிப்பட்ட சில தகவல்கள் இருக்கும்பொழுது, வேண்டுமென்றே ஒரு ஆளுங்கட்சியைக் குறைகூற வேண்டுமென்பதற்காக மேடைகளையும், ஏடுகளையும் பயன்படுத்திக்கொள்வது நல்லது அல்ல என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேனே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஏதாவது முடிவு ஏற்பட்டு இருக்கிறதா? அல்லது அதுவல்லாமல் தகவலாக இப்பொழுது இருக்கிறதா என்பதை முதலமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள அந்தச் சிலைகளையெல்லாம் இங்கே கொண்டுவருவதற்கு வெளிநாடுகளோடு துப்பறியும் இலாக்காவால் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகள் மீண்டும் வந்தபிறகு விசாரணை ஆரம்பம் ஆகும். எனவே, பதிவு செய்யப்படாமல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, விசாரணை முடிந்து குற்றம் ருசு செய்யப்பட்டால்தான் குற்றவாளி என்று சொல்லலாமே தவிர, வழக்கு இருக்கும்பொழுதே சொல்வது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான், குற்றவாளி என்று சொல்லவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர் என்று சொன்னேன். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றாலம் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கிறார்கள் என்று சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலமைச்சரவர்களே சொல்வது சரியல்ல. இப்பொழுது வேறு கட்சிக்கு மாறிவிட்டார் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்களைக் கேட்டுக்கொண்டுதான் மாறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். இதுவரையில் அப்படி மாறியதாகத் தெரியவில்லை. ஸ்தாபன காங்கிரசில்தான் இருப்பதாகத் தெரிகிறது. ஒருவேளை அப்படி தவறு செய்பவர்களை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும், திலகர்; காந்தி என்ற பெயரிலேயிருந்தாலும், அல்லது அந்தந்தக் கட்சியிலிருக்கும் பெருந்



தலைவர்களின் பெயரிலே இருந்தாலும், அந்தக்குடும்பம் நீண்ட காலமாக அந்தக் கட்சிக்கு உழைத்திருந்தாலும், யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற சூளுரையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காகக் கூறுகிறேனே தவிர இவைகளையெல்லாம் அரசியலாக ஆக்கக்கூடாது என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேனேயல்லாமல் வேறல்ல.

இன்றைக்கு இங்கே பேசப்பட்டது, சதி வழக்குகள், பொய் வழக்குகள் இந்த அரசாங்கத்தின் சார்பாக எதிர்க்கட்சிகளின்மேல் போடப்படுகின்றன என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. எந்தப் பொய் வழக்கையும் யார்மீதும் போட்டுவிடவில்லை. வழக்குகளைப் போடும் நேரத்தில் சில சாட்சிகள் சரியாக இல்லாமலோ அல்லது அதைக் குற்றம் என்று கண்டுபிடித்த காவல்துறையினரின் கருத்து சரியாக இல்லாமலோ அந்த வழக்குகளில் சிலர் விடுதலை பெற்றிருக்கலாம். அதற்காகவே அது பொய் வழக்கு என்று கூறுவது நல்லதல்ல. ஆனால் நான் சொல்கிறேன். நீங்கள் பழைய விவகாரங்களைச் சொல்லி இதற்குச் சமாதானம் தேடலாமா என்று கேட்கக்கூடாது—பழைய ஆட்சியில், மதுரையில் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் கிளர்ச்சியில் இன்றைய மதுரை நகர மேயர் நண்பர் முத்து அவர்கள் ஈடுபட்டார்கள். அரசியல் சட்டத்தை மாலை 6 மணிக்கு, அவரும் அவரோடு சேர்ந்து நான் கைந்து கழக நண்பர்களும் கொளுத்துவார்கள் என்று ஏற்கனவே பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருந்தது.

அங்கு அந்த நிகழ்ச்சியைக் கண்காணிப்பதற்காக காலையில் அங்கு செல்ல வேண்டுமென்று தலைவர் அண்ணா அவர்கள் கட்டளையிட்டு நானும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் என். வி. என். அவர்களும், அப்போது நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம்—மதுரைக்குச் சென்றோம், கார் மூலமாக. அப்படிச் செல்லும்போது திருச்சியிலிருந்து நாங்கள் மதுரைக்குச் செல்கின்ற வழியில் கார் பழுதுபட்டு, காலையில் மதுரைக்குப் போய் சேரமுடியாத சங்கடத்திற்கு ஆளானோம். கார் பழுதாகி வழியில் நின்று கொண்டிருக்கும்போது உசிலம்பட்டி பெருமாள் என்ற நண்பர்—அப்போது அவர் காங்கிரசில் இருந்தார், இப்போது அவர் தி. மு. க. வுக்கு வந்து விட்டார்—எவ்வளவு நாட்களுக்குத்தான் அங்கே இருந்து கொண்டிருப்பது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட காங்கிரசில் இருந்தார் டிஸ்ட்ரிக்ட் செகரடிரியாக—காரில் போய்க் கொண்டிருந்தார். நாங்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'மதுரைக்குப் போகிறோம்' என்று சொன்னோம், 'இந்தக் காரில் ஏறிக் கொள்ளுங்கள்' என்றார்.

அவருடைய காரில் ஏறிக் கொண்டு அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் நிகழ்ச்சியைக் கண்காணிக்க சற்றுத் தாமதமாகச் சென்ற காரணத்தால் முத்து

அவர்களும், மற்றவர்களும் ஊர்ச்சிக்கு அங்கிருக்கும் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்திலிருந்து இறங்கி சாலைக்கே வந்து விட்டார்கள். அவர்கள் வந்த அந்தச் சாலையில் நான் கொஞ்சம் தள்ளிப் பின்னால் நின்று கொண்டிருந்தேன். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் மன்னை நாராயணசாமியும் இருந்தார்கள். அந்தச் சாலையில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று ஒரு போலீஸ் அதிகாரி மன்னை நாராயணசாமி அவர்களைப் பார்த்து 'தள்ளிப் போ' என்று சொல்ல, இவர் உடனடியாகத் தள்ளிப் போக முடியாது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இவர் கொஞ்சம் மெதுவாக அந்த முயற்சியில் ஈடுபட, அதிகாரி சொல்லுவதைக் கேட்க மறுக்கிறார் என்று கருதிக் கொண்டு அவர் கைது செய்யப்பட்டார்.

பிறகு அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார்கள். நாங்கள் கூட அந்த இடம் வரை போகவில்லை. நானும் என். வி. என். அவர்களும் தொலைவில் இருந்தோம். பிறகு இருவரும் சென்னைக்குத் திரும்பிவிட்டோம்.

அதற்குப் பிறகு எங்கள் இருவர்மீதும் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் படி மதுரை முத்துவையும் மற்றவர்களையும் தூண்டிவிட்டதாக சதி வழக்கு போட்டார்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போவதாக அண்ணா அவர்கள் அறிக்கை விடுத்து, நாடு முழுவதும் விளம்பரப்படுத்தி காரியம் நடைபெறுவது சதியல்ல; ஆனாலும் சதி வழக்கு என்று எங்கள் மீது ஜோடிக்கப்பட்டு நாங்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டோம்.

சதிவழக்கில் போலீசார் சாட்சியம் சொன்னார்கள். அதில் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் சாட்சியம் சொன்னார். 'கருணாநிதி தமுக்கம் திடலில் சிறப்புக் கூட்டத்தில் பேசினார்; அப்படிப் பேசும்போது மதுரை முத்துவைப் பார்த்து, அரசியல் சட்டத்தைக் கொளுத்து என்று ஆணையிட்டார்' . என்று கூறினார். வழக்கறிஞர் கூட 'சிறப்புக் கூட்டத்திற்குப் போயிருந்தீர்களா? என்று கேட்க போயிருந்தேன்' என்று இவர் சொன்னார். 'சிறப்புக் கூட்டத்திற்குக் கட்டணம் உண்டா?' என்று கேட்டதற்கு இவர் 'உண்டு' என்று சொன்னார். 'என்ன கட்டணம் டிக்கட் வாங்கி உள்ளே சென்றீர்கள்? என்று கேட்டதற்கு 'எட்டணா டிக்கட், என்றார். 'எட்டணா டிக்கட் பெண்களுக்கல்லவா' என்று வழக்கறிஞர் கூறினார். இதற்கெல்லாம் பிறகு தீர்ப்பளிக்கப்பட்டது.' எனக்கும் என்.வி.என். அவர்களுக்கும் ஆறு மாத காலம் சிறைத்தண்டனை' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆக, சதி வழக்கு, பொய் வழக்கு இவைகள் எல்லாம் போடப்பட்டது அந்தக் காலமே தவிர, இந்தக் காலம் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சொல்லுகிறேன்.



இன்றைக்குப் பத்திரிக்கையில் என்னென்னவோ எழுதுகிறார்கள். எவ்வளவோ பயங்கரமான கார்ட்டூன்களை, கேலிச் சித்திரங்களை வெளியிடுகிறார்கள். வழக்குப் போட்டுக் கொண்டா இருக்கிறோம்? கொள்கை ரீதியாக, அரசியல் ரீதியாகச் செய்யப்படுகின்ற விவரங்களை இந்த அரசு பொருட்படுத்தவில்லை. அதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

சில நாடகங்களைப் பற்றி காங்கிரஸ் உறுப்பினர்களே மேல்சபையில் கேட்டார்கள். தடை செய்ய வேண்டுமென்றார்கள். நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற அந்த நேரத்தில் காங்கிரஸ் ஒன்றாக இருந்தது. எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்கத் தேவையில்லை என்று சொன்னேன். நாடகங்களைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

நூற்றுக்கணக்கான நாடகங்கள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பழைய காங்கிரஸ் அரசு தடை செய்திருப்பதை நாடு நன்றாக அறியும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் அன்றும் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார். அவர் நடத்திய அறப்போர் பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் வெளி வந்தது. பண்டித ஜவகர்லால் நேருவை இந்தி வெறியர்கள் முதுகில் குத்துவது போன்ற ஒரு கேலிச் சித்திரம் அது. அடுத்த வாரமே அரங்கண்ணல் அவர்கள் 'நேரு அவர்களைப் போட்டு கத்தியால் குத்துவதைப் போல் கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டது இப்போதுதான் என்னுடைய கவனத்திற்கு வந்தது; நான் ஊரில் இல்லாத நேரத்தில் துணை ஆசிரியர் அவ்வாறு அதை வெளியிட்டுவிட்டார். நான் அதை விரும்பவில்லை' என்று மறுப்பு அறிக்கை விட்டார்.

திரு. அரங்கண்ணல் மீது பதினாறு, பதினேழு செக்‌ஷன்களிலே வழக்குப் போடப்பட்டது. கொலையைத் தூண்டிவிட்டதாகக் கூட அவர் மீது ஒரு செக்‌ஷனிலே வழக்குப் போடப்பட்டு வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று முதலமைச்சர் காமராஜர் அவர்களிடத்தில் கட்சி ரீதியாகக் கூடச் சொல்லப்பட்டது. ஒரு கேலிச் சித்திரம் பத்திரிகையில் வந்து அதற்கு மறுப்பும் வந்து விட்டது. ஆசிரியர் வருத்தம் தெரிவித்த பிறகும் வழக்குப் போடப்பட்டது. அந்த வழக்கு பல மாதங்கள் நீதிமன்றத்தில் நடந்து இறுதியாக அரங்கண்ணல் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை பெற்றிருக்கிறார்.

இவைகளையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் அரசு, எந்த அளவுக்கு ஜனநாயகத்தோடு அந்தக் காலத்தில் நடைபெற்றது என்பதற்கும், இன்றைக்கு அரசாகட்டும், காவல் துறையாகட்டும் எந்த அளவுக்கு நடந்து கொண்டு வருகிறது என்ற வேறுபாடுகளை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

எவ்வளவோ கிளர்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர்களாகட்டும், மாணவர்களாகட்டும், தொழிலாளர்களாகட்டும், டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டிய சிம்ப்சன் விவகாரமாகட்டும், நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டு அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கலாமே தவிர வேறல்ல. 20 நாள் போராட்டம், 30 நாள் போராட்டம் துப்பாக்கிப் பிரயோகத்தில் போய் முடிந்திருக்குமே என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லாவற்றையும் மிகுந்த நிதானத்தோடு நாம அணுக வேண்டுமென்ற அளவில் எல்லாக் கிளர்ச்சிகளையும் அணுகுகிறோம். கைது செய்யப்படுகிறார்கள், மறுநாள் விடுதலை செய்யப்படுகிறார்கள். வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன. அந்த அளவுக்கு இந்த அரசு நிதானப் போக்கைக் காட்டி வருகிறது.

ஆனால் நான் ஒன்றைச் சொல்லுவேன். இந்த அரசு தலையிடுகிறது, தலையிடுகிறது என்று சொல்லுகிறார்களே 1951-ம் ஆண்டில் நடைபெற்ற ஒன்று. '1947-ல் இருந்து ஃபைல்களைக் கொண்டு வா, விசாரணைக்குத் தயார்' என்கிறார்கள்.

ஃபைல்கள் வரும் புற்றீசல்கள் போல. ஒன்றைச் சொல்லுகிறேன்.

1951-ம் ஆண்டு தேனியில் ஒரு கலவரம் நடந்தது. நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தேனியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசச் சென்றார்கள். அங்கு ஏற்கனவே ஒரு கூட்டம் நாவலர் பேசுகின்ற அதே இடத்தில் நடத்த வேண்டுமென்று அவர்களும் ஏற்பாடு செய்து 'நீங்கள் நடத்தக்கூடாது' என்று இவர்களிடத்தில் சொல்ல, சமாதானமான முறையில் முதலில் நாவலர் பேசுகின்ற கூட்டத்தை முடித்துவிட்டு பிறகு அவர்கள் கூட்டத்தை நடத்திக் கொள்ளலாம் என்று அதிகாரிகள் தீர்ப்புக் கூறி, நாவலர் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார். நடந்தது என்ன? மறைந்த தேனி தியாகராஜன் அவர்கள் அப்போது ஜில்லா போர்டு பிரசிடென்ட். மதுரை மாவட்டத்தின் தலைவர். அவர் உட்பட 142 பேர் அங்கே நுழைந்து நாவலருடைய கூட்டத்தில் பெரும் ரகளையை உண்டாக்கினார்கள். பெரிய பாறாங்கல்லை நாவலர் மீது வீசுகின்ற அளவுக்கு பயங்கரமான சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அப்படி ஏற்பட்டதை யொட்டி நடைபெற்ற சம்பவங்களை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

4—7—1951-ம் தேதி தேனியில் நடந்த கலவரத்தைப் பற்றி அன்றே பெரியகுளம் ஏ. எஸ். பி. ஒரு தந்தி கொடுத்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது :

'ஜில்லா போர்டு தலைவர் தியாகராஜன் தலைமையில் திராவிட கழகத்தாரையும், போலீசாரையும் கலவரக் கூட்டம் ஒன்று தாக்கி ஆறு போலீசார்



உட்பட பலர் காயமுற்றனர். ரத்தம் சிந்துவதைத் தடுப்பதற்காக தியாகராஜன் உட்பட 142 பேரைப் போலீசார் கைது செய்தார்கள்.'

அதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் எஃப். டபிள்யூ. ஏ. மோரீல, ஐ. சி. எஸ்., அவர்கள் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைவாக ஒரு கடிதம் எழுதினார். ஐந்தாம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மோரில் ஒரு நீண்ட அறிக்கையை அவருடைய சொந்த விசாரணைக்குப் பின் அனுப்பியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பது :

I consider the action of the Police in arresting the President, District Board and other people was justified in the circumstances. It is for consideration of the Government whether Mr. Theagarajan should be permitted to act as President of the District Board with such grave charges pending against him and as his official position might enable him to gain an unfair advantage. . .'

என்று மாவட்ட ஆட்சியாளர் இவ்வளவு தெளிவாக அறிக்கை அனுப்பி, திரு. தியாகராஜன் ஜில்லா போர்டு தலைவராக நீடிக்க அனுமதிக்கலாமா என்று கேட்டதற்கு 12—7—1951-ம் தேதி அரசு,

"பெரியகுளம் சப்-மாஜிஸ்ட்ரேட் வெங்கடாசலத்தையும், பெரியகுளம் இன்ஸ்பெக்டர் ஆப் போலீசையும், தேனி சப்-இன்ஸ்பெக்டரையும் ஹவில்தார் மேஜரையும் உடனடியாக சஸ்பெண்ட் செய்யுமாறு" தந்தி கொடுத்தது.

அரசின் இந்த உத்தரவு கிடைத்தவுடன் சப்-மாஜிஸ்ட்ரேட்டை சஸ்பெண்ட் செய்துவிட்டு ஆட்சியாளர் 17—1—1951-ம் தேதி ஒரு கடிதம் எழுதினார். அதில்—

'It is however not clear to me what is the basis for the charge against the Stationary Sub-Magistrate and what evidence has to be examined by me to substantiate the charge . . .'

என்று கூறிவிட்டு முடிவில் அவ்வாறு குற்றம் சாட்டுவது நியாயமாகவோ சரியாகவோ இருக்குமா என்பது தனக்கு மிகவும் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்று கூறுகிறார்.

'I am doubtful whether it is fair or reasonable to permit the charge against the Stationary Sub-Magistrate.' என்று குறிப்பிடுகிறார்கள். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளர் மோரீல் அவர்கள், விரைவாக விசாரணை செய்து முடிவில் 12—8—1951-ல் தேதி குற்றங்கள் ருசுவாகவில்லை என்று கூறி சப்-மாஜிட்ரேட்டுடைய சஸ்பென்ஷனை ரத்து செய்து, அவரை மீண்டும் வேலையில் அமர்த்தினார். இவ்வாறு அந்த மாவட்ட ஆட்சியாளர் 12—8—1951

உத்தரவு போட்டும் 20—8—1951 அரசிடமிருந்து சப்-மாஜிஸ்ட்ரேட்டை மீண்டும் சஸ்பென்ஷனில் வைக்கவேண்டுமென்று உத்தரவு தரப்பட்டது.

'Stationary Sub-Magistrate Venkatachalam should continue to remain on suspension—Orders follow . . .'

என்று இருந்தது. இதன் பிறகு ஏன் இவர்களையெல்லாம் சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள் என்றால் தேனி தியாகராஜன் கைது செய்யப்பட்டாராம். 142 பேர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்களாம்.

நாவலர் கூட்டத்தில் கலவரத்தை ஏற்படுத்தி, இரத்தக் களறி ஏற்பட்டு, அப்படிக் கூட்டத்திற்கு வந்திருந்த கலவரக்காரர்களைக் கைது செய்தார்கள். அதற்குத் தலைமை வகித்த தேனி தியாகராஜன் கைது செய்யப்பட்டார். இந்தக் கலவர வழக்கில் 37 பேர்களைக் குற்றவாளிகளாக போலீசார் முதலில் எடுத்த போதிலும் திரு. தியாகராஜன் இதில் ஏ-1 ஆக குறிப்பிடப்பட்டிருந்தும் கூட தியாகராசனையும் மற்றும் ஒன்பது பேரையும் தவறாக வழக்கில் சேர்த்துவிட்டதாக அவர்களை வழக்கிலிருந்து போலீசார் விலக்கினார்கள். பிறகு மேலும் ஐந்து பேர்களையும் தவறாகச் சேர்த்துவிட்டதாக வழக்கிலிருந்து விலக்கினார்கள். மீதியுள்ள 22 பேர்கள் மீது வழக்குப் போடுவதற்கான பூர்வாங்கமான ஆதாரங்கள் பப்ளிக் பிராசிகூட்டர் கருத்து தெரிவித்தும்கூட அவர்கள் மீதும் வழக்கு தொடர வேண்டாம் என்று 13—11—1951 அன்று அரசு ஆணையிட்டது. மோரிஸ் அவர்கள் 1953-ல் ஓய்வு பெறவேண்டியவர். ஆனால் அவர்கள் 1951-லேயே ப்ரிமெச்சூராக ரிட்டயராகி இருக்கிறார். இந்த அளவிற்கு ஒரு மாவட்ட ஆட்சியாளர் நியாயத்தை எடுத்துரைத்தும், தவறு செய்தவர்களைக் கண்டித்த போலீஸ் அதிகாரிகள் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்படுகிற சூழ்நிலை 1951-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது நடைபெற்றிருக்கிறது. இதுபோன்ற தலையீடுகள். அரசாங்கமே நேரடியாகத் தலையிட்டு இவரைக் கைது செய்யலாமா என்று கேட்கிற அளவிற்கு தலையீடுகள் அந்தக் காலத்தில் நிரம்ப நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்காக மட்டும் ஒன்று சொன்னேனே தவிர வேறு அல்ல.

DR. H. V. HANDE : Sir, does the Hon. Chief Minister think that we want such I.C.S. Officers like Mr. Morris and that the Government will give protection to such officers? Will the Government nurture such officers? Now most of the discussions take place telephonically between the Government and the Collectors. Also, the then Chief Minister who was responsible for that, is not in the House now and we do not know what had





actually happened then. Also, Thiru Thiagarajan is no more and so there is one here to refute the information given by the Government. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட அலுவலர்களை நாங்கள் என்றைக்கும் பாராட்டுகிறோம். ஆனால் அவர்களைப் பாராட்டாமல் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்தார்களே அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறது, நாடு என்பதைத்தான் சொன்னேனே அல்லாமல், வேறு அல்ல. தியாகராசன் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள், அந்த ஆபீஸர் இல்லை என்று சொன்னார்கள். பைல் இருக்கிறது. அவர்கள் இல்லாவிட்டாலும் பைல் இருக்கிறது.

1947-ல் இருந்து விசாரணை வைத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். அந்த முறையில்தான் இருக்கிறது. அந்த பைல் இருக்கிறது.

அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்ற உறுப்பினர்களும் லாக்கப்பில் ஏற்பட்ட மரணம்பற்றி உருக்கமாகச் சொன்னார்கள். அவைகள் பெருமளவிற்குத் தடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் உள்ளத்தோடு என் உள்ளத்தையும் இணைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு லாக்கப் மரணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டுமென்று என்னென்ன தடுப்பு முறைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து வருகிறோம். ஆறு மணிக்கு மேல் போலீஸ் லாக்கப்பில் யாரையும் வைக்கவேண்டாம், பக்கத்தில் சப் ஜெயில் இருந்தால் அங்கு அனுப்பி விடுங்கள் என்று சொல்கிறோம். பெண்கள் கைது செய்யப்பட்டிருந்தால் போலீஸ் லாக்கப்பில் ஆறு மணிக்கு மேல் வைக்க வேண்டாம், பக்கத்தில் சப் ஜெயில் இருந்தால் அங்கு அனுப்பிவிடுங்கள் என்று சொல்கிறோம்.

சில குறைபாடுகள் உள்ளன. போலீஸ் ஸ்டேஷனே இல்லாமல் சில வீடுகளை வாடகைக்கு எடுத்து போலீஸ் ஸ்டேஷனாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அங்கு போடப்படுகிற சென்ட்ரி ஜன்னலுக்கு நேராக நின்று கவனித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாமல் வீடு அமைப்புகள் இருக்கின்றன. அதைக்கூட ஏற்றவாறு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதுபோன்ற சில சிக்கல்கள் காரணமாக காவலாளரையும் ஏமாற்றிவிட்டு சில தற்கொலைகள் நடந்து விடுகின்றன. எல்லாமே தற்கொலைதானா என்றால் எனக்கு சந்தேகம் ஏற்படும் போது அவற்றிற்கு விசாரணை வைக்கச் சொல்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், ஜேம்ஸ் அவர்களும், வேறு சிலரும் கன்னியாகுமரியில் வேலப்பன் என்ற ஒருவர் மர்ம மரணம் பற்றி எடுத்துக்

சொன்னார்கள். உடனடியாக அந்த போலீஸ் ஸ்டேஷனில் இருந்து இரண்டு அதிகாரிகளும் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பொன்னப்ப நாடார் அவர்கள் இத்தகவலை எடுத்துக் கொடுத்தார்கள், கொடுத்த உடனே தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று ஐ.ஜி. அவர்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை முதலிலேயே எடுத்து விட்டதாகவும் மேலும் நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறி ஐ.ஜி. அவர்கள் உடனடியாக அந்த இன்ஸ்பெக்டரையும், சப்-இன்ஸ்பெக்டரையும் அந்த இடத்திலிருந்து மாற்றுவது அல்ல, தாற்காலிக வேலை நீக்கமே செய்திருக்கிறார்கள். டி.ஐ.ஜி. விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன். யார் மீது தவறு இருந்தாலும் அவர்கள் எந்தளவிற்குக் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவர்களோ நிச்சயமாக அது செய்யப்படும், அதில் எந்தவிதமான தயவுதாட்சண்யமும் காட்டப்பட மாட்டாது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் இந்த அவையில் உறுதி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடியாத்தம் நிகழ்ச்சி பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. திரு. சுரேந்திரன் அவர்கள் காலையில் அதுபற்றிப் பேசினார்கள். இப்போது பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக்காட்டினார்கள். குடியாத்தத்தில் கோவை ஆலைத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தையொட்டி அறிவிக்கப்படாமல் திடீரென்று அவர்களும் வேலைநிறுத்தம் செய்து ஊர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்று மற்றவர்களையும் வற்புறுத்தியிருக்கிறார்கள். சில கடைகள் திறந்திருக்கின்றன;. அதில் ராமசாமி, கழகத் தோழரின் கடை திறந்திருக்கிறது எல்லோருக்கும் தெரியும். ஊர்த்தால் என்றால் சில கடைகள் திறந்திருந்தால் ஊர்வலத்தில் செல்பவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படி நடந்திப் பழக்கப்பட்டவர்கள்தான் அவை வரும். எதிர்தரப்பில் இருப்பவர்களுக்கும் அது தெரியும். எங்களுக்கும் தெரியும். அவர் கடையைச் சாத்திக்கூட இருக்கலாம் அமைதியாக இருக்கட்டும் என்று. அவர் அப்படிச் செய்யாததால் ஊர்வலத்தில் போனவர்கள், கண்ணபிரான் தலைமையில் சென்றவர்கள், கேட்டு தகராறு முற்றியது. சோடா பாட்டில்களை எடுத்து அடித்தார்கள். சோடா பாட்டில் காயம் கண்ணபிரானுக்கு ஏற்பட்ட பிறகு கலவரம் ஏற்பட்டு போலீசார் இலேசாகத்தான் பிரம்பு கொண்டு அடித்தார்கள். போலீசார் ஒருவருக்குக் கை எலும்பு முறிந்து மருத்துவமனையில் இருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள், வன்முறைகள் எல்லாம் நடைபெற வேண்டுமென்று நான் வாதாடுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது நடை



பெற்றால் போலீஸ் தன் கடமையைச் செய்ய வேண்டும். நகரசபை தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது என்றால் அது காங்கிரஸ் கையிலுள்ள ஒரு நகர சபை. அது தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது அவர்கள் உண்மையை மறைத்திருக்கிறார்கள் என்று கூறவில்லை. இன்னும் வேண்டுமானால் அதுபற்றி விசாரிக்க நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறேன். போலீசார் ஊர்வலமாகப் போனவர்களைத் தடுத்து நிறுத்தி தடியால் அடித்தார்கள் என்பதை மட்டும் ஒரு சார்பு வாதமாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஊர்வலமாகச் சென்றவர்கள் தகராறு செய்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இந்தத் தகராறு நடந்திருக்கிறது. எனக்கு இப்படித் தகவல் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு அப்படித் தகவல் கிடைத்திருக்கிறது.

பெரியபட்டணம் நிகழ்ச்சிபற்றி நேரிலே பார்த்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அங்கு மங்களசுவாமி நிதிக்காக கம்யூனிஸ்ட் நண்பர்கள் வசூல் செய்தார்கள். ஒரு கம்யூனிஸ்ட் நண்பரின் சொந்தக்காரர், அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், அவர் கொடுக்காததால் அவர்கள் வீட்டிற்குச் சென்று ரகளை செய்ததாகவும், அவர் மனைவியைத் தாக்கியதாகவும், அங்கு தாறுமாறான காரியங்கள் நடந்தன. திரு. தங்கமணி அவர்கள் போலீசார் மிகுந்த கெடுபிடி செய்தார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் நேரில் பார்த்ததாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்லியதை ஒதுக்கித் தள்ளி விட நான் தயாராகயில்லை. ஒரு பொறுப்புமிக்கக் கட்சியின் தலைவர் எடுத்துச் சொல்கிற குறைபாடுகளை நான் ஒதுக்கித் தள்ளிவிட விரும்பவில்லை.

ஹாண்டே அவர்கள் போலீசார்பற்றி அன்றே சில குறைபாடுகளைச் சொன்னார்கள். இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த அரசு சார்பில் நான் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹாண்டே அவர்கள் குடமுருட்டி குண்டு பற்றி ஒரு அறிக்கை இங்கே வைக்கவேண்டும் என்பதில் ரொம்பச் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆவலாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருத்தத்திற்கு நன்றி. அவருக்கு முதலமைச்சர் மீது அவ்வளவு அன்பும், அவ்வளவு பற்றும், பரிவும், பாசமும் இருப்பதற்கு—என்ன இருந்தாலும் விட்ட குறை தொட்ட குறை, போகுமா ?—(சிரிப்பு). அந்த அளவுக்கு இருப்பதற்கு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. அவர் கூட பேசியதாகப் பார்த்தேன். ஏதோ குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்காக யாரோ இரண்டு ராணுவ வீரர்கள் 2 குண்டுகளை வீட்டுக்குக் கொண்டு

வந்தார்கள் என்றும், அவற்றைக்கொண்டு போய் வைத்ததும், ஏதோ புகைய ஆரம்பித்ததால் ஆற்றில் போட்டு விட்டார்கள் என்றும் அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

இரண்டு விதமான ரிப்போர்ட்கள் வந்திருக்கின்றன. வழக்கு விசாரணையில் இருப்பதால் ரிப்போர்ட்டை பகிரங்கமாக வைக்க முடியாது. இரண்டு அறிக்கைகளும் வித்தியாசமாக இருக்கின்றன. சொல்லப்படுவது, குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்டது, புகைய ஆரம்பித்ததால் ஆற்றில் போட்டு விட்டார்கள் என்று. ராணுவ வீரர்கள் வீட்டிற்கும் கூடுவாஞ்சேரி ஆற்றுக்கும் 3, 4 மைல் இருக்கும். ஏதோ குளத்தங்கரையில் இருப்பவர்கள் போலவும், புகைய ஆரம்பித்ததும், குளத்தில் போட்டு விட்டது போலவும் பேசுவது சரியல்ல. இரண்டு மைல் கொண்டு வந்து ஏன் ஆற்றில் போடாமல் பாலத்தில் போட்டார்கள்? அது புகை குண்டு தான். வெடிக்கும் குண்டு அல்ல. புகை குண்டானாலும் பாலத்தின் மேல் கார்கள் போகிறபோது அது வெடித்திருந்தால் கார்கள் கவிழ நேரிட்டு இருக்கும். நானல்ல, யார் அந்தப் பாலத்தின் மேல் சென்றிருந்தாலும் அந்த நிலை ஏற்பட்டிருக்கும். நான் அந்த குண்டு வைக்கப்பட்ட பாலத்தின் வழியாகச் செல்வதாக இருந்த காரணத்தால், என்னைக் கொல்வதற்கு குண்டு வைத்து விட்டார்கள் என்று சொல்லி என் மீது தவறாக அன்பு வைத்து இருக்கிற கழக நண்பர்கள், எனக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று வருத்தத்தோடு, முதலமைச்சர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் சொன்ன பதில், செத்தால் தான் என்ன. ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமா என்பது தான். யார் யார் குண்டு வைத்தார்கள் என்று வீணான கற்பனை செய்து கொண்டு பேசவில்லை. புலன் விசாரணை முடிந்த பிறகு, இரு அறிக்கைகளையும் ஆராய்ந்து, ஒரு அறிக்கையை, அது பற்றி இங்கே சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குழந்தைகளுக்கு விளையாட்டுக்காட்ட வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்று சொல்வதெல்லாம் அந்தக் காலத்தில் ராட்சதர்கள் வீட்டில் தான் நடந்தது. மனிதர்கள் வீட்டில் நடக்க முடியாது என்றும் அப்படிப்பட்ட தவறான விவரங்களைச் சொல்லவேண்டாமென்றும் கூறிக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின் மீது பல குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டதையெல்லாம் அதிகாரிகள் உடன் இருந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் மகிழ்ச்சி. குறைகள் இல்லாமல் இலாகா நடைபெற முடியாது.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் மொத்தச் சிலாக்கியமாக நடைபெற வேண்டிய இலாகா. ஒரு குறையும் இல்லாமல் நடைபெறுவது நல்லதுதான். அதற்கேற்ற வகையில் நீங்கள் தந்திருக்கும் எல்லா கருத்துக்களும்—காலையிலிருந்து மாலை வரை கூறப்பட்டவைகள் அனைத்தும்—இங்கே வந்திருந்து



கேட்டுக்கொண்டிருந்த அதிகாரிகளுக்கு நிச்சயமாக பயன்படும் என்று நம்புகிறேன். ஆகவே, எடுத்துச் சொல்லப்பட்ட எந்தக் குறைபாடும் புறக்கணிக்கப் படவேண்டியதோ, அலட்சியப் படுத்தப் படவேண்டியதோ அல்ல என்று எடுத்துக் கூறி, அனைத்தும் நல்ல முறையில் கவனிக்கப்படும், நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் கூறி, இந்த மானியத்தின் மீது தந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை அனைத்தும் திரும்ப பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தின் மீது கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆகஸ்ட் 1-ம் தேதி வழக்கைப் பற்றி சொன்னார்கள். 1967-ம் வருஷத்தில் போடப்பட்ட வழக்கு 1972 வந்தும், 5 ஆண்டுகள் ஆகியும் நடந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப்பற்றி நான் விசாரித்து அவைக்குச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாததால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,07,33,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன. நாளை பேரவை கூடாது. 17—3—1972 வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

A. *Statutory Rules and Orders.*

63. Notification issued with G.O. Ms. No. 2388, Rural Development and Local Administration, dated the 28th October 1971, in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 117 (r) of 1971, and nomination of Thiru N. Ezhumalai, Kalpalayam, as seventh non-official member of Madhavaram Township Committee. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

64. Notification issued with G.O. Ms. No. 571, Co-operation, dated the 21st December 1971, in regard to certain amendments to rule 46 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

65. Notification issued with G.O. Ms. No. 16, Home, dated the 4th January 1971, in regard to certain amendments to the Suppression of Immoral Traffic in Women and Girls (Tamil Nadu) Rules, 1958. [Laid on the Table of the House under section 23 (4) of the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 (Central Act 194 of 1956)].

B. *Reports, notifications and other papers.*

£ 75. A Review on the Industrial Growth in Tamil Nadu—Handloom and Textile and Sugar Industries 1971–72 (Tamil).

£ 76. A Review on the Industrial Growth in Tamil Nadu—Mineral Development 1971–72 (Tamil).

£ 77. A Review on the Industrial Growth in Tamil Nadu—Small Scale Industries 1971–72 (Tamil).

£ 78. A Review on the Industrial Growth in Tamil Nadu—Major Industries 1971–72 (Tamil).



£ 79. A Review on the Industrial Growth in Tamil Nadu—Industrial Finance 1971–72 (Tamil).

@ 80. Pamphlets on various Government owned Corporations relating to Demand No. 20—Industries.

@ 81. The Performance Budget of the Industries Demand—1972–73.

£ 82. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council for the period from the 21st October to 18th December 1971, during its fortieth session.

£ Despatched to Members on 13th March 1972.
@ Laid on the Table of the House on 14th March 1972.

.ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ்நாடு காவல் துறை

### 1971-72-ஆம் ஆண்டு ஆய்வுரை.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக்காத்து நிலைநாட்ட, வன்மையும் திண்மையும் படைத்த ஒரு காவற்படை மிகவும் தேவையாகும். பயனும் திறனும் கலந்த பாங்குடன் திறமையாகப் பணியாற்றி நமது நாட்டில் மிகச் சிறந்த ஓர் அமைப்பாகத் திகழ்ந்து வரும் பெருமையினைத் தமிழ் நாட்டுக் காவற் படை தொடர்ந்து காப்பாற்றி வருகிறது.

தற்போதுள்ள காவற்படையின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள்.

தமிழ்நாட்டில் உள்ள படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள் முன்பெல்லாம் "படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவற்படை" என்றும், "மலபார் சிறப்புக் காவற்படை" என்றும் அழைக்கப்பட்டு வந்தன. பழமைக் கோலத்துடன் இப் பெயர்கள் இருந்தால், படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகளுக்கு "தமிழ்நாடு சிறப்பு காவற்படை" என்று பெயரிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறப்புக் காவற்படையின் 1-வது அணி இந்திய அரசுக்காக முகமையில் அருணாசலப் பிரதேசத்திற்கு (நேஃபா), மூன்றாண்டுகட்கு முன்பாக (1968 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 3 ஆம் நாள்) முதல் பணியாற்றச் சென்றிருந்தது. இந்தப் படை அணி 1971 நவம்பர் திங்களில் இம்மாநிலத்திற்கு திரும்பி வந்தது. இதற்கு பதிலாகத் தமிழ்நாடு சிறப்புக் காவற்படையின் 5-வது அணி இம் மாநிலத்திலிருந்து அனுப்பப்பட்டது.

### முக்கியமான சில புதிய ஒப்பளிப்புகள்.

1. *தஞ்சாவூர் காவலர் மாவட்டத்தை இருகூறுக்குதல்.*—தமிழ்நாட்டிலுள்ள பணிச்சுமை மிகுந்த காவலர் மாவட்டங்களில் தஞ்சாவூர் மாவட்டமும் ஒன்றாக இருந்தது. இந்த மாவட்டத்தின் அதிகார வரம்பு பெரியதாக இருந்தால், இதன் நிர்வாகமும் எளிதாக இல்லை. குற்றம், சட்டம், ஒழுங்குப் பிரச்னை, ஏனைய பிரச்னைகளை சிறந்த முறையில் நிர்வகித்துக் கட்டுப்படுத்தும் பொருட்டு, இம்மாவட்டம், தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு தஞ்சாவூர்





மேற்காகவும், நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தஞ்சாவூர் கிழக்காகவும் 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5-ஆம் நாள் முதல் இரு கூறுக் கப்பட்டது.

2. *குற்றப் புலனாய்வுத் துறையில் வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அமைத்தல்.*—கூட்டுறவுச் சங்கங்களில் நிதிக் கையாடல் செய்தல், மோசடி, முறைகேடுகள், பொய்யான ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற வணிகத் திருட்டுக் குற்றங்கள் குறித்துத் திறமையாகப் புலனாய்வு செய்ய மாநில குற்றப் புலனாய்வுத் துறையில் வணிகக் குற்றப்புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

3. *தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின் விதித் துறைகள் மீறப்படுவதைக் கண்டுபிடிக்க வலம் வரும் காவற்படைகள் அமைத்தல்.*—கிராமப் பகுதிகளில் உயர் வகுப்பினர் அரிசனங்களுக்கும், பழங்குடி வகுப்பினருக்கும் எதிராக அட்டூழியங்களில் ஈடுபடுவது, அவர்களைத் துன்புறுத்துவது போன்ற குற்றங்களைத் தடுக்க கோயம்புத்தூர், மதுரை, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் வலம் வரும் சிறப்புக் காவற்படை ஒன்றை அமைக்க அரசு 1972 ஜனவரி மாதத்தில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டப் படையில் இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், காவலர் இருவர் ஆகியோர் இருப்பர்.

### பயிற்சியும் பணிக்கேற்ற ஆள் திரட்டலும்.

ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் ஐவர், மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சியை முடித்த பின்னர் துணைக் கோட்டங்களில் காவல் துறை உதவி சூப்பிரண்டுகளாக அமர்த்தப்பட்டனர். காவல் துறையில் நேரடி நியமனம் பெற்ற துணை சூப்பிரண்டுகள் (1-ம் வகை) மூவர் இப்போது மாவட்டங்களில் செயல்முறைப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் பயிற்சியை முடித்த பின்னர் துணைக் கோட்டங்களுக்கு நியமிக்கப்படுவர். தமிழ் நாடு. காவலர் பணிக்கு நேரடி நியமனம் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட துணை சூப்பிரண்டுகள் (1-ம் வகை) நால்வர் இப்போது வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இதோடு, நேரடி நியமனம் பெற்ற ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் (காவல்துறை துணை சூப்பிரண்டுகள்) மூவரும் காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். காவல் துறை துணை சூப்பிரண்டுகள் (1-ம் வகை), பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவு ஓராண்டாகும். இம் மாநிலத்திற்குள்ளேயே இருக்கும் ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரிகள் பயிற்சி பெறும் கால அளவு 4 மாதங்களாகும். காவல் துறை துணை சூப்பிரண்டுகளும், உதவி சூப்பிரண்டுகளும் இவ்வாண்டிற்குள்

காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடிப்பர். பின்னர் இவர்கள் (காவல் துறை துணை சூப்பிரண்டுகள் 6 மாதங்களும், உதவி சூப்பிரண்டுகள் 8 மாதங்களும்) நடைமுறைப் பயிற்சிக்காக மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவர்.

115 சப்-இன்ஸ்பெக்டர்கள் நேரடி நியமனம் மூலம் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் பயிற்சிக்காக 1972 மார்ச்சு மாதத்தில் வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்படுவர்.

13 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் நேரடி நியமனம் மூலம் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் அனைவரும் காவலர் பயிற்சிக் கல்லூரியில் 9 மாதங்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

வேலூர், காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வரும் 528 சாதாரணக் காவலர்களோடு, நேரடி நியமனம் மூலம் அண்மையில் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட (1-ம் வகை) 350 காவலர்களும், தற்போது 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். கோயம்புத்தூரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளியில் தற்போது பயிற்சி பெற்று வரும் 536 சாதாரணக் காவலர்களோடு, நேரடி நியமனம் மூலம் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட (1-ம் வகை) 500 காவலர்களும் அங்கு 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். தமிழ்நாடு சிறப்புக் காவற்படை அணிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 288 காவலர்கள் பயிற்சிக்காக ஆவடியிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவற்படையின் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். இத்துடன், நேரடி நியமனம் மூலம் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 31 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களும் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஓராண்டுக் கால அளவுக்கு ஆவடியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இம் மாநிலத்திலிருந்து மத்திய தொழில் பாதுகாப்புப் படைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 500 பேர்களுக்கும் ஆவடியிலுள்ள படைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**கல்கத்தா, ஹைதராபாத் ஆகிய இடங்களில் உள்ள மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுதல்.**

ஆய்வாண்டில், கல்கத்தாவிலுள்ள மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் புலனாய்வுக்குத் தொடர்பான அறிவியல் நுட்பக் கருவிகளிலும், மேம்பட்ட வழிகளிலும் பதினான்கு வாரங்கள் பயிற்சி பெறுவதற்காக ஒன்பது சப்-இன்ஸ்பெக்டர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர். மேலும், 8 சப்-இன்ஸ்பெக்டர்கள் இதுபோலவே பயிற்சி பெற ஹைதராபாத்தில் உள்ள மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளிக்கு முகமையில் அனுப்பப்பட்டனர்.





**தமிழ் நாடு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வகம்.**

தமிழ் நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வகம், சுடு படைக்கலன் பிரிவு, உயிரியல் பிரிவு, இரசாயனப் பிரிவு, ஆவணங்கள் பிரிவு, பௌதீகப் பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. குற்ற நிகழ்வுகள் குறித்து பல் வேறு நிலைகளில் புலனாய்வு செய்யும்போது காவல் துறை அதிகாரிகளுக்கு அறிவியல் முறையில் தேவையான எல்லா உதவியையும் இந்த ஆய்வகம் அளித்து வருகிறது. காவல் துறை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், நீதித் துறை அதிகாரிகள் இந்த ஆய்வகத்துக்கு கொடுக்கின்ற சாட்சியப் பொருள்களை (தடயங்களை) ஆய்வு செய்து அவை பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் இந்த ஆய்வகத்தின் ஐந்து பிரிவுகளும் முக்கியமாக ஈடுபட்டுள்ளன.

சென்னை மாநகரிலும், செங்கற்பட்டு (கிழக்கு), செங்கற்பட்டு (மேற்கு), தென் ஆற்காடு, வட ஆற்காடு முதலிய அண்டை மாவட்டங்களிலும் குற்றம் நிகழும் இடங்களையும் இந்த ஆய்வுக்கூடப் பணியாளர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். சென்ற ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கிய ஆய்வுக்கூட இயல் ஊர்தியை சென்னை மாநகரிலும் மேற்கண்ட மாவட்டங்களிலும் உள்ள காவல் துறை அதிகாரிகள் பயனுள்ள வகையில் பயன்படுத்தி வருகின்றனர்.

அறிவியல் முறையில் புலனாய்வு முறைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரசு மேற்கொண்டும் இயங்கும் 16 ஆய்வுக் கூடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. அதன்மூலம், இம் மாநிலத்தில் ஒவ்வொரு காவல் துறை மாவட்டத்திலும், சிறந்த கருவிகளுடன் கூடிய சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடமும் இருக்கும். இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்களுக்குத் தேவையான 16 வண்டிகளும், அறிவியல் சாதனங்களும் பெறப்பட்டு வருகின்றன. அவை விரைவில் காவல்துறை மாவட்டங்களுக்கு வழங்கப்படும். இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றையும் நிர்வகிக்க, அவற்றில் அறிவியல் உதவியாளர் ஒருவரையும், புகைப்படம் பிடிப்பவர் ஒருவரையும் நியமிக்கும் செயற்குறிப்பு அரசால் மும்முரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும், தற்காலிக ஏற்பாடாக, தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்கனவேயுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையிலிருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு முதல் நிலைக் காவலரும் அனுப்பப்பட்டு, அவர்கள் சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்களில் அறிவியல் உதவியாளர்களாகவும் புகைப்படம் பிடிப்பவர்களாகவும் தற்காலிகமாக நியமிக்கப்படுவர்.

சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடம், அண்மையில் 'லேசர்' நுண்கதிர் வண்ணப்பட்டை பகுப்பாய்வுக் கருவி யொன்றை ரூ. 3.25 லட்சத்துக்கும், ஒப்புமை நுண்ணோக்காடி ஒன்றை ரூ. 1.8 லட்சத்துக்கும் வாங்கியுள்ளது.

வாங்கியுள்ள 'லேசர்' கருவித் தொகுதி, இந்தியாவில் உள்ள சட்டம்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம் ஒன்றால் வாங்கப்பட்டுள்ள இவ்வகைக் கருவியில் இதிலே முதலாவதாகும். வண்டி விபத்துகளில், மோதிவிட்டு ஓடிவிடுகிற நேர்வுகளில், வண்ணப் பூச்சுத் துகள்கள், உலோகத் துகள்கள் முதலியவற்றைப் பகுப்பாய்வு செய்வதில் இந்த 'லேசர்' சாதனம் பெரிதும் பயன் படுகின்றது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, இந்த ஆய்வுக்கூடத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆய்வுக் கூடத்தால ஆய்வு செய்வதற்கு அனுப்பப் பட்ட நேர்வுகள். | பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1968—69 | 509 | 13,085 |
| 1969—70 | 897 | 20,242 |
| 1970—71 | 623 | 19,943 |

இந்த ஆய்வுக்கூடம் காவல்துறை அதிகாரிகளுக்கும், தொடர்புடைய பிற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் பல்வேறு பயிற்சித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

## குற்றமும், துப்புத் துலக்கலும்.

பல்வகை சொத்து குறித்த குற்றங்கள் குறித்த ஒப்பீட்டு அறிக்கை.

| குற்றங்களைக் குறிக்கும் தலைப்பு. | பதிவான புகார்களின் மொத்த எண்ணிக்கை. 1970 | 1971 |
|---|---|---|
| ஆதாயம் கருதி செய்யப்பட்ட கொலை. | 23 | 16 |
| வழிப்பறி | 17 | 11 |
| கொள்ளை | 68 | 107 |
| கன்னக் களவு (House Breaking) | 6,656 | 6,863 |





| குற்றங்களைக் குறிக்கும் தலைப்பு. | பதிவான புகார்களின் மொத்த எண்ணிக்கை. 1970 | 1971 |
|---|---|---|
| பெரிய திருட்டுகள் | 16,399 | 17,134 |
| சிறிய திருட்டுகள் | 476 | 434 |
| கால்நடைத் திருட்டுகள் | 1,339 | 1,276 |
| மொத்தம் | 24,898 | 25,830 |

சொத்து குறித்து 1970 ஆம் ஆண்டில் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 24,898. அதற்குமாறாக, அவ்வகையில் 1971 இல் புகார் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 25,830 ஆகும். முந்திய ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் வழக்குகளின் எண்ணிக்கை 3.1 சத விதம் உயர்ந்துள்ளது; அதாவது, 932 வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன., இந்தச் சிறிய அளவு குற்றங்களின் எண்ணிக்கை உயர்வு எதிர்பார்த்ததே; எவ்வாறெனில், உலகெங்கிலும், முன்னேறிய நாடுகளிலும் சரி, வளர்ச்சி பெற்றுவரும் நாடுகளிலும் சரி, குற்றங்கள் பொதுவாகப் பெருகி வருவது காணப்படுகிறது.

இந்தக் குற்றங்களைப் புலனாய்வு செய்யப் போதுமான கவனம் செலுத்தப்பட்டது; புலனாய்விற்கு அறிவியற் கருவிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன. வேலூரிலுள்ள விரல் ரேகைப் பதிவுக் கழகம், மாவட்டங்களில் உள்ள அக்கழகத்தைச் சேர்ந்த ஒற்றை விரல் ரேகைப் பதிவு நிலையங்கள், துப்பறியும் நாய்ப்படை, குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம் ஆகிய அறிவியல் சார்ந்தவைகள் உதவி புலனாய்விற்குப் பயன்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டில் சொத்து குறித்த குற்றங்களில் துப்பறிதல் தரம் உயர்நிலையை எட்டியது. அவ்வாண்டில் 64.2 சத விதம் குற்றங்கள் துப்பறியப்பட்டன. 1971 இல் துப்பறிதல் தரம் மேலும் மேம்பட்டது. இவ்வகைத் துப்பறிவதில் இவ்வாண்டில் எய்திய சாதனை அளவு 66.8 சதவிதம் ஆகும்.

**கள்ள நோட்டு வழக்குகள்.**

கள்ள நோட்டுகள் குறித்த தொல்லையைத் திறமையுடன் ஒழிக்கும் பொருட்டு, தமிழ்நாடு காவல்துறை கணிசமான அளவு நாட்டம் செலுத்தி வந்துள்ளது. பல வேளைகளில், காவல்துறை, மிகச் சிறிய தடயங்களைத் தொடர்ந்து சென்று புலனாய்வு செய்து கள்ள நோட்டு வழக்குகளின் மூல காரணத்தை விடாப்பிடியாகத் துப்பறிந்து வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன், குற்றவாளிகளையும் வெற்றிகரமாகக் கைது செய்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறை புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்த முக்கிய வழக்குகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) திருப்பூரைச் சேர்ந்த நெசவாளர் ஒருவர் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ஆம் நாளில் கோயம்புத்தூரில் பத்து ரூபாய் கள்ள நோட்டுகள் சிலவற்றை மாற்ற முயல்கையில் கைது செய்யப்பட்டார். உரிய தருணத்தில் அவரைக் கைது செய்ததன் மூலம், காவல் துறை கள்ள நோட்டுக் கும்பல் ஒன்றின் தடயங்களை பின் தொடர முடிந்தது. விரிவாகவும், முழுமையாகவும் புலனாய்வு நடத்திய பின்னர், 1971 அக்டோபரில், 39 குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ரூ. 32,000 மதிப்புக்குக் கள்ள நோட்டுகளும், அச்சு இயந்திரமும், அச்சுருக்களும், பிற கருவிகளும், புலனாய்வின் போது கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு விசாரணையிலுள்ளது.

(2) சேலத்தில், 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ஆம் நாள் அன்று, செபஸ்தியான் என்பவர் கைது செய்யப்பட்டதையொட்டி, கள்ள நூறு ரூபாய் அச்சிடுதலில் ஈடுபட்டிருந்த பிறிதொரு குற்றக் கும்பலின் நடவடிக்கைகள் வெளிவந்தன. செபஸ்தியானின் கூட்டாளிகள் எண்மர் கைது செய்யப்பட்டனர். முழுமையாக அச்சிடப் பெறாத கள்ள நோட்டுகள் 3,539-ம், அச்சு இயந்திரம் ஒன்றும், அச்சுருக்களும், பிற பொருட்களும் கூடக் கைப்பற்றப்பட்டன. குற்றவாளிகள், கள்ள நோட்டுகளுக்கு தொடர் எண்கள் அச்சிட்டு அவற்றைப் புழக்கத்திற்கு விடும் முன்னர் அவர்கள் உரிய காலத்தில் கைது செய்யப்பட்டுவிட்டனர் ; பொருட்களும் கைப்பற்றப்பட்டுவிட்டன. இவ்வழக்கு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

(3) தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 27 ஆம் நாள் அன்று இரண்டு ரூபாய் கள்ள நோட்டுகள் 2,393 கைப்பற்றப்பட்டன ; இதனையடுத்து இன்னொரு கள்ள நோட்டுக் கும்பல் கண்டுபிடிக்கப்பட்டது ; இம்முறை அகப்பட்ட கும்பல் கந்தசாமி என்பவரும் அவரது கூட்டாளிகளும் ஆவர். இதுவரை குற்றம் சாட்டப்பட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் ; ரூ. 13,094 மதிப்புக்கு 6,547 கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. இவ்வழக்கு புலனாய்வில் உள்ளது.

(4) குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் பிரிவின் தனிப் பிரிவு, சென்னை நகரில் 48 மணி நேரம் கடுமையாகக் கண்காணித்து, இறுதியாக, ஜோசப் என்பவரையும், கேரளத்தைச் சேர்ந்த மற்றும் நால்வரையும் கைது செய்தது ; இவர்கள், தமிழ்நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும், சுத்தமாக அச்சிட்ட கள்ள நூறு ரூபாய் நோட்டுக்களைப் புழக்கத்தில் விட முயன்றவர்களாவர். 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 ஆம் நாள் அன்று,



குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவைச் சேர்ந்த தனிப் பிரிவில் பணியாளர்கள், சென்னை மாநகரக் காவல்துறையின் உதவியுடன், ஜோசப், மற்றும், கேரளத்தைச் சேர்ந்த அவரது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டதற்கும் மேலாக, 11 நபர்களைக் கைது செய்து, ரூ. 83,000 மதிப்புக்கு, கள்ள நூறு ரூபாய் நோட்டுக்கள் 830-ஐத் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் கைப்பற்றினர். குண்டுகள் நிரப்பப்பட்ட, உரிமம் பெறாத சுழல் துப்பாக்கி ஒன்றும் ஜோசப்பிடமிருந்து கைப்பற்றப்பட்டது. கேரள மாநிலத்தின் குற்றப் புலனாய்வுத் துறையுடன் உரிய தருணத்தில் ஒத்துழைத்துப் புலனாய்வு செய்ததன் மூலம், கேரள மாநிலத்தில் உள்ள பொங்குன்னம் என்னுமிடத்தில் கள்ள நோட்டுகள் அச்சிடப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது ; மேலும், கேரளத்தில் இந்தக் கள்ள நோட்டுகள் அச்சிடுவதற்கு நிதியுதவியளித்ததற்குப் பொறுப்பான மேலும் ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு புலனாய்வில் உள்ளது.

(5) கோயம்புத்தூரில் 1971 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் அன்று, ரஹிமான் என்பவரும், பாலசண்முகம் என்பவரும் கைது செய்யப்பட்டனர் ; அதன் விளைவாக அமெரிக்க இருபது டாலர் கள்ள நோட்டுகள் 226 கைப்பற்றப்பட்டன ; மேற்சொன்ன இருவரின் கூட்டாளிகளான கொச்சுகுஞ்சன், யூசெப் ஆகியோர் கைதாயினர். மேலும் புலனாய்வு நடந்து வருகின்றது.

(6) இன்னொரு சம்பவத்தில் கோயம்புத்தூரில் கங்காதரன் என்பவரிடமிருந்து 1971 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ஆம் நாளில் அமெரிக்க இருபது டாலர் கள்ள் நோட்டுகள் 450 கைப்பற்றப்பட்டன. அதுபற்றி மேலும் துப்பறிந்ததில் மேலும் எண்மர் கைது செய்யப்பட்டனர் ; அன்றியும், கேரளத்தில் உள்ள ஆல்வாயில், குற்றவாளிகள் பயன்படுத்திய அச்சு இயந்திரமும் கைப்பற்றப்பட்டது.

(7) திருவண்ணாமலையில் 1971 டிசம்பரில், புதிய தொடரில் கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் வந்துள்ளது காணப்பட்டது. இது தொடர்பாக 10 பேர்கள் கைது செய்யப்பட்டனர் ; 92 கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. குற்றப் புலனாய்வுத் துறையில் குற்றப் பிரிவைச் சேர்ந்த கள்ள நோட்டு வழக்குகள் குறித்த பிரிவு இவ்வழக்கில் மேற்கொண்டு புலனாய்வு செய்ததன் மூலம் தெரியவந்ததாவது ; இந்தக் கள்ள நோட்டுகள், பாலக்காட்டுக்கருகேயுள்ள மன்னார்காடு காவல் நிலையத்தைச் சேர்ந்த திருவிளாங்குன்னு என்னும் ஊரில், கருணாகரன் என்பவராலும், கேரளத்தைச் சேர்ந்த மற்றவர்களாலும் அச்சிடப்பட்டன ; இவற்றில், 500 நோட்டுகள் கரூருக்குக் கொண்டுவரப்பட்டன ; அங்கே, லாரி உடைமையாளரான பூரணத்தம்மாள் என்பவரது வீட்டில், இந்த நோட்டுகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. இந்தக்

நோட்டுகளை அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்ட அச்சுருக்கள், ஈரோட்டில் கருணாகரனின் கூட்டாளியான கமலசேனன் எனப்படும் கோபால் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. தொடக்கத்தில், மன்னார்காடு காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள் 3 பேர்களைக் கைது செய்து, அச்சு இயந்திரம் ஒன்றின் பகுதிகளையும், எண்கள் அச்சிடப்படாத 3 கள்ள நோட்டுகளையும் கைப்பற்றினர். மொத்தத்தில், ஒரு பெண் உட்பட 15 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கு, குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவைச் சேர்ந்த, கள்ள நோட்டு வழக்குகள் குறித்த பிரிவால் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

(8) 1971 அக்டோபரில், குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு, திருநெல்வேலியில் சசிதரன் என்பவரைக் கைது செய்தது. அவர் கொடுத்த தகவலின் பேரில் 2 ரூபாய் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. இது கள்ள நோட்டு வழக்குகள் குறித்த பிரிவால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொடராகும்; இந்த கள்ள நோட்டு வழக்கு தோன்றியது கேரளத்தில்; அங்குதான் இந்த நோட்டுகள் அச்சிடப்பட்டு, அவற்றுக்கு எண்களும் அச்சிடப்பட்டன. அதன் பின்னர் இவை, திருநெல்வேலி மாவட்டத்தில் புழக்கத்தில் விடப்பட்டன. தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறை அளித்த எச்சரிக்கைத் தகவலின்பேரில், கேரள மாநிலக் காவல்துறை மேலும் மூவரைக் கைது செய்தது. மைசூர் மாநிலக் காவல் துறை மற்றும் ஒரு நபரைக் கைது செய்ய முடிந்தது.

சிலைத் திருட்டுகளைக் கண்டுபிடித்தல்.

தொன்மைமிக்க தென்னிந்தியாவை ஆண்ட தமிழரசர்கள் பல கோவில்களைக் கட்டி எழில் கொஞ்சும் தெய்வச் சிலைகளை அங்கு வைத்து அவற்றிற்குக் கலை வண்ணமூட்டினர். இவை தெய்வத்தை ஆர்வத்தோடு வழிபடுபவர்களை கவர்ந்ததோடு மட்டுமின்றி கலைவல்லுநர்களையும் கவர்ந்துள்ளன. கபட நெஞ்சமுள்ள சிலர் வழிபடும் சாக்கை வைத்து இந்தச் சிலைகளைக் இராசியமாகக் கடத்திச் சென்று விற்பதன் மூலம் பெரும் ஆதாயம் ஈட்டலாம் என்கிற நோக்குடன் இந்தச் சிலைகளை கண்டனர். இவ்வாறு விலை மதிப்பற்ற சிலைகளையும், பிற கலைப் பொருட்களையும் கோவிலிருந்து திருடிச் சென்றனர். தொன்மை வாய்ந்த கோவிலையும், அங்குள்ள விலை மதிப்பற்ற சிலைகளையும், கலைப் பொருள்களையும் பாதுகாப்பது பெரிய பிரச்சினையாகும். உண்மையில் குறைவாக மதிப்பிட்டால் கூட பத்தாயிரம் கோவில்கள் இந்து சமய அறக்கட்டளை வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதன் கட்டுப்பாட்டில் வராத கோவில்களும் இதே அளவில் தமிழ் நாடு முழுவதும் உள்ளன. குற்றப்புலனாய்வுத் துறையுடன் இணைக்கப்பட்ட காவல்துறை ஆராய்ச்சி நிலையம் இப் பிரச்சினை குறித்து விரிவாக ஆய்வு செய்து பல கருத்துக்களைத் தெரிவித்தது. இவை, பாதுகாப்பு ஏற்பாடுகளை



வலுப்படுத்தும் நோக்கத்துடன் காவல் நிலையங்களுக்கும் சம்பந்தப்பட்ட பிற துறைகளுக்கும் அனுப்பப் பட்டுள்ளன. சிலைத் திருட்டுகளைக் கண்காணிக்கும் பொருட்டு இன்ஸ்பெக்டர் இருவர், சப்-இன்ஸ்பெக்டர் இருவர், தலைமைக் காவலர் இருவர் ஆகியோரை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் குற்றப் புலனாய்வுத் துறையின் தமிழ் நாடு குற்றப் பிரிவில் பணியாற்றி வருகின்றனர். குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ள சிறப்புப் பிரிவில் கூடுதல் பணியாளர்களை நியமித்து மேற்படி பிரிவை வலுப்படுத்துவது குறித்து இந்திய அரசுடன் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

மதுவிலக்கை செயற்படுத்துதல்.

1971 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 ஆம் நாளிலிருந்து மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டது வரையில் காவல்துறையினர் மதுவிலக்குச் சட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தினர். 1970 ஆம் ஆண்டு முழுவதும் 3,72,462 வழக்குகள் துப்புத் துலக்கப்பட்டிருக்கையில் 1971-ல், 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் வரையில் 2,04,590 வழக்குகள் துப்புத் துலக்கப்பட்டன.

ஆப்காரி சட்டத்தைச் செயற்படுத்துதல்.

மதுவிலக்குச் சட்டம் 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாளிலிருந்து ஒத்திவைக்கப்பட்டதன் விளைவாக, அன்று முதல் மீண்டும் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட ஆப்காரி சட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பும் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆப்காரி சட்டங்கள் செயலுக்கு வந்த பிறகு காவல்துறை 1971-ல் 5,299 திடீர் சோதனைகள் நடத்தியுள்ளது. 2,263 வழக்குகளைத் துப்புத் துலக்கியுள்ளது. 1972-ல் (அதாவது 1972 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் 1972 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 22 ஆம் நாள் வரையில் மட்டும்) காவல்துறை 1,743 முறை திடீர் சோதனை நடத்தியுள்ளது. 1,335 வழக்குகளைப் புலனாய்வு செய்துள்ளது.

ஆய்வு ஆண்டில், குற்றப்புலனாய்வுத் துறையின், குற்றப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள மதுவிலக்குப் புலனாய்வுக் கழகம் ரூ. 29,500 மதிப்புள்ள அபினி, கஞ்சா ஆகிய பொருட்களைக் கைப்பற்றியுள்ளது. இதைத் தவிர, ரூ. 2,03,000 மதிப்புள்ள வரி செலுத்தப்படாத சுங்கப் பொருட்களையும், ரூ. 1,18,360 மதிப்புள்ள கறுப்புப் பணத்தையும் இக் கழகம் கைப்பற்றியுள்ளது.

துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு.

இம் மாநிலத்தில் தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவை சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சி

சாப்பள்ளியிலும் துப்பறியும் நாய்ப்படை ஒன்றை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் படைக்குத் தேவையான நாய்கள் தருவிக்கப் படுகின்றன. 1971-ல் 315 வழக்குகளில் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவின் பணி பயன்படுத்தப்பட்டது.

**சிறுவர் சங்கங்கள்.**

மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் 1959-ல் சிறுவர் சங்கங்கள் திறக்கப்பட்டன. இவைகளைக் காவல்துறை நிர்வகிக்கிறது. சிறுவர் சங்கங்கள் மத்தியக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் புலனாய்வுத் துறை யின் துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அதன் தலைவராவார். தமிழ் நாட்டில் 30 சிறுவர் சங்கங்கள் உள்ளன. தமிழ் நாட்டில் சிறுவர் சங்கங்களை பேணுவதற்கு 1971-72-க்கென ரூ. 53,800 வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. 1972-73 ஆம் ஆண்டில் சிறுவர் சங்கங்களுக்காக ரூ. 65,000 நிதி ஒதுக்கத் திட்ட மிடப் பட்டது.

**வகுப்புவாதம்.**

இந்த ஆண்டில் பெரிய அளவில் வகுப்புக் கலவரங்கள் எதுவும் நடைபெற வில்லை. ஆங்காங்கே, தனிப்பட்ட காரணங்களுக்காக அல்லது அற்பக் காரணங் களுக்காக சிறு சிறு பூசல்கள் ஏற்பட்டன.

(அ) 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாளன்று இராமநாதபுரம் மாவட்டம் உடையசேர்வைக்காரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த துரைராஜ் தேவரும், அவரது தம்பியாகிய சிதம்பரத் தேவரும் அத்திப்பட்டிக்குச் சென்று கொண்டிருக்கையில், அவ்விருவருக்கும், பேயாண்டி நாடார் மற்றும் சில பிற நாடார்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தகராறு முற்றி துரைராஜ் தேவரையும், சிதம்பரத் தேவரையும் பேயாண்டி நாடாரும் அவருடன் சேர்ந்த பிற நாடார்களும் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர். அந்த இருவரும் மாண்டனர். தனது இரு சகோதரர்களும் கொலை புண்டதைக் கேள்வியுற்ற கூழுத் தேவர், தன்னுடன் 20 தேவர்களைத் திரட்டிக் கொண்டு சென்று முத்தையா நாடாரையும், சேதுபுரம் கிராமத்தில், பேருந்து ஒன்றிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த மற்ற இரு நாடார்களையும் தாக்கினர். முத்தையா நாடார் தலத்திலேயே மாண்டார். திருச்சுழி காவலர் இரண்டு வழக்குகள் பதிவு செய்து புலனாய்வு செய்தனர்.

(ஆ) சாலைநாயக்கன்பட்டியைச் (திருநெல்வேலி) சேர்ந்த சில அரிசனங் களுக்கும் சாதி இந்துக்களுக்குமிடையே, ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு பகைமை உணர்ச்சி வளர்ந்து வந்தது. இ.பி. கோ. 107-வது பிரிவின்கீழ் இவர்கள் மீது பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவர்கள் 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாளன்று மாலை கோயில்பட்டி துணைக்கோட்ட



மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திலிருந்து திரும்புகையில் இரு பிரிவினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இந்தக் குழப்பத்தில் கத்திக் குத்துப்பட்ட மூன்று அரிசனங்களும், சாதி இந்து ஒருவரும் பின்னர் மாண்டனர். உள்ளூர் காவலர் தேவையான நடவடிக்கை எடுத்தனர்.

(இ) புளியங்குடி காவல் நிலையத்தைச் சேர்ந்த (திருநெல்வேலி) சிந்தா மணி கிராமத்தில் உள்ள அரிசனங்களில் ஒரு பிரிவினருக்கும், சாதி இந்துக் களுக்கும் இடையே கால் நடை மேய்ச்சல் தொடர்பாக தகராறு ஏற்பட்டு 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாளன்று காலையில் மோதல் ஏற்பட்டது. இந்தக் கலகத்தில் இருவர் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் படுகாயமுற்றார். உள்ளூர் காவலர் வழக்குகள் பதிவு செய்தனர்.

(ஈ) வாணியம்பாடி (வட ஆர்க்காடு)-யில் சாதி இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே பகை உருவாகி கலகம் ஏற்பட்டது. காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாளன்று கலகம் மூண்டது. தகவல் அறிந்த காவல் படைப் பிரிவு ஒன்று தலத்திற்கு விரைந்து இந்துக்கள் வாழ்கின்ற பகுதிக்குள் முஸ்லிம் கூட்டத்தினர் நுழைவதைத் தடுத்தனர். கூட்டத்தினர் காவலரைத் தாக்கத் தலைப்பட்டனர். இதில் சில காவலர்கள் காயமடைந்தனர். இதன் பின்னர், காவலர்கள் துப்பாக்கி சூடு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் ஐவர் காயமடைந்தனர். பின்னர் வேறு ஓர் இடத்தில் நடைபெற்ற கலகத்தில் சாதி இந்து ஒருவர் தலத்திலேயே இறந்தார். மற்றொருவர் 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாளன்று வேலூர் அரசினர் மருத்துவ மனையில் இறந்தார். முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று உள்ளூர் கிளைக் கருவூலத்திற்குச் சென்றது. பணி புரிந்து வந்த ரோந்துக் காவலர் வானிறுக்கி இருமுறை சுட்டார். கூட்டம் கலைந்தது. இது தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப் பட்டுப் புலனாய்வு நடந்து வருகின்றது.

**ஏர் முனை நிலவரம்.**

ஒரு சில நேர்வுகளில், சில சாதாரணக் கோரிக்கைகளுக்காக, உழவர்கள் நிலங்களில் அத்து மீறி நுழைந்தனர். கிசான் சபைகளின் உறுப்பினர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வட்டத் தலைமையிடங்களில் ஊர்வலம் நடத்தி குத்தகை நிலங்களிலிருந்து, நிலுவைத் தொகைகளைச் செலுத்தாமைக்காக, குத்தகைதாரர்களை வெளியேற்ற வேண்டாம் என்று கோரியும், நில உச்ச வரம்பைக் குறைக்குமாறும் கோரி உள்ளூர் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தனர். காவலர்கள் நிலைமையைச் சமாளித்தனர்.

[1972 மார்ச் 15

தொழிலாளர் நிலவரம்.

மீனம்பாக்கம் ஐ.ஏ.சி.யின் தொழிலாளர்கள், கோயம்புத்தூரில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள், திருவொற்றியூர் மெட்ராஸ் இரப்பர் பாக்டரியின் தொழிலாளர்கள், சிம்சன் தொகுதி நிறுவனத் தொழிலாளர்கள், ஆவடி டாங்கி தொழிற்சாலையின் தொழிலாளர்கள் ஆகியோர் நடத்திய கிளர்ச்சிகளை காவலர்கள் சமாளிக்க வேண்டியதிருந்தது. காவலர்கள் கடினமான இந்தப் பணிகளை நிறைவேற்றி சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தினர்.

தீவிரவாதிகளின் செயல்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற பாராளுமன்றம், தமிழ்நாடு சட்டமன்றம் ஆகியவற்றிற்கான இடைத் தேர்தலின்போது, தேர்தல்களில் கலந்து கொள்ளாமலிருக்குமாறும், அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதப் புரட்சி செய்யுமாறும் மக்களைத் தூண்டுகின்ற கையினால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் மாநிலத்தின் சில பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. 'மா' வின் மேற்கோள்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்குதல், சுவரொட்டிகளை ஒட்டுதல்; 'மா' வின் கோட்பாடுகளை மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்களிடையே பரப்புதல், தேசத் தலைவர்களின் சிலைகளை நாசம் செய்தல் போன்ற நாச வேலைகளிலும், வன்முறைகளிலும் ஈடுபடுதல், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்குத் தீயிடுதல், நிலக்கிழார்கள், வட்டி கடைக்காரர்கள் ஆகியோரைக் கொலை செய்தல் போன்றவை தீவிரவாதிகளின் செயல்களில் அடங்கும். பொது மக்களையும், அரசையும் அச்சுறுத்தும் நோக்கத்துடன் காவல்துறையைச் சேர்ந்த ஒருவரைக் கொல்ல முயன்றதும் தெரிய வந்தது. எனினும், காவலர்கள் கடும் நடவடிக்கை எடுத்ததன் மூலம் இந்த முயற்சிகள் அனைத்தையும் தகர்த்தனர். இந்தக் கூட்டத்தின் பெரும் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு, குறிப்பிட்ட குற்றங்களுக்காக அவர்கள் மீது நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர், புதுச்சேரி போன்ற எல்லையோர மாநிலங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்பயனாக, தீவிரவாதிகளின் மனத்தில் ஓர் அச்சம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் நடவடிக்கைகள் முனைப்பாகத் தடுக்கப்பட்டுள்ளன.

பிரிவினையைத் தூண்டுகிற அளவில் நாட்டு ஒருமைப்பாட்டுக்கு விரோதமான முறையில் தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற ஊர்களில் ஒட்டப்பட்ட ஒரு சில கையெழுத்து சுவரொட்டிகள் உடனடியாக அகற்றப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது போன்ற நாட்டுத் துரோகமான போக்கினைத் தடுத்திட காவல்துறையினர் தக்க கண்காணிப்புடன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.



1972 மார்ச் 15]

காவலர் துப்பாக்கிச் சூடல்.

1970-ல் ஒன்பது நேர்வுகளில் துப்பாக்கிச் சூடு நடத்திய[illegible], 1971-ல் மூன்று நேர்வுகளிலேயே காவல[illegible] துப்பாக்கிச் சுடல் நடத்த வே[illegible]டியிருந்தது. இந்த மூன்று நேர்வுகளின் விவ[illegible] கீழே கொடுக்கப்பட்டு[illegible] :—

(1) 1971-ஆம் ஆண்டு ம[illegible] திங்கள் 2 ஆம் நா[illegible] குறும்பேடு குடியிருப்பைச் சேர்ந்த ஒருவர் [illegible] மணியளவில் [illegible]ம்பேடு காவல் நிலையம் வந்து, அவர், தம்முடைய ம[illegible]ாக்[illegible]ல் குத்தியதாக காவல் நிலையக் காவலாளியிடம் வாய்மொ[illegible]தார். அவர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டார். காவல் துறைக் காவலர், அவரிடமிருந்து வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துகொண்டு, அதை உயர்நிலை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். மாலை சுமார் 6-45 மணியளவில், காவல் நிலைய எழுத்தரும், மற்றொரு காவலரும் காவல்நிலையத்தில் இருந்தபோது, சுமார் 300 பேர், தடிகள் ஆகியவற்றுடன் காவல்நிலையத்தைச் சூழ்ந்துகொண்டு, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிக்குமாறு கோரினர். தொல்லையுண்டாக்க வேண்டாமென்றும், சிறிது நேரத்தில் வரவிருக்கும் இன்ஸ்பெக்டரிடம் முறையிடுமாறும், காவலர்கள் வேண்டிக்கொண்டனர். ஆனால், காவல்நிலையக் காவலர்களின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்காமல், அந்தக் கூட்டம் வன்முறையில் காவல்நிலையத்திற்குள் நுழைந்து, காவலர்களுக்குக் காயம் விளைவித்ததுடன், காவல் நிலையக் கட்டிடத்திற்கும், காவல் நிலையத்திற்குள்ளிருந்த அரசு உடைமைகளுக்கும் சேதம் விளைவித்தது. நிலைமை மோசமாகி, கூட்டம் ஆயுதத் தளவாடங்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் வன்முறையாக நுழையவே, காவலர் ஒருவர் மூன்று சுற்றுரவைத் தோட்டாக்களால் சுடவே, கூட்டத்தினர் பீதியுற்றனர். இதற்கிடையில், கிராமத் தலைவர் அவருடைய கைத் துப்பாக்கியுடன், சில கிராமவாசிகளுடன் காவலர்களின் உதவிக்கு வந்து அந்தக் கூட்டத்தை விரட்டினர்.

(2) இரண்டாவது நிகழ்ச்சி, 1971 ஆம் ஆண்டில் ஜூன் திங்கள் [illegible] ஆம் நாளில் வாணியம்பாடியில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக செய்யப்பட்டது துப்பாக்கிச் சுடல் ஆகும்.

(3) கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில், இ. பி. கோ. 457, 380 பிரிவுகளின்கீழ், குற்ற எண். 205/71-ல் வழக்குத் தொடரப் பெற்ற நபர் ஒருவர் (திருநெல்வேலி மாவட்டம்) 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் இரவு காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டார். காவலறைக்குள், தன்னுடைய வேட்டியால் கழுத்தையிறுக்கி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். வருவாய்க் கோட்ட அதிகாரியின் மரண விசாரணைக்குப் பின்னர், சவப் பரிசோதனைக்காக 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாளில் சடலம்

எடுத்துச் சொல்லப்படும்போது, கட்டுக்கடங்காத 600 பேர் கொண்ட கும்பலொன்று குற்றவாளியின் மரணத்துக்கு தல காவல்நிலையக் காவலர்களே பொறுப்பாளி எனக்கருதி, அக்காவலர்களைத் தங்களிடம் ஒப்படைக்கும்படிக் கோரினர். அவர்கள் கற்களையும் வீசி, காவலர்களைத் சிறைபிடிக்கும் நோக்கத்துடன் காவல் நிலையத்தை நோக்கிப் பாய்ந்தனர். முறையான எச்சரிக்கைக்குப் பின்னர், தடியடி மேற்கொள்ளப்பட்டது. தடியடி பலனளிக்காமல் போய், உயிருக்கும், உடமைக்கும் பேராபத்து விளையும் நிலை இருந்ததால், கோவில்பட்டி வருவாய்க் கோட்ட அதிகாரியின் ஆணைப்படி, துப்பாக்கிச் சூடல் மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்ச்சியில், இருவர் இறந்தனர், 9 பேர் காயமுற்றனர். மேற்சொன்ன நிகழ்ச்சி குறித்து விசாரணை செய்வதற்காக வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் திரு. எஸ். விஸ்வநாதன்; ஐ.ஏ.எஸ். அவர்களை அரசு நியமித்து, இக் குழுவின் முடிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**தேர்தல்கள்.**

இடைக்காலப் பொதுத் தேர்தல்கள் மூன்று கட்டங்களில், 1971 மார்ச் முதல் நாள், நான்காம் நாள், ஏழாம் நாள், ஆகிய நாட்களில் நடந்தன. தேர்தல்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற, காவல்துறையினால் விரிவான பந்தோபஸ்து ஏற்பாடுகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தேர்தலின்போது சில இடங்களில், அங்கொன்றும் இங்கொன்றுமாக வன்முறை நிகழ்ச்சிகள் நடந்தன. ஆனால், தேர்தல்கள் நடைபெறுவது இந் நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படவில்லை. தேர்தல்கள் பொதுவாக அமைதியாகவே நடந்தன.

**கண்ணீர்ப் புகை.**

முந்திய ஆண்டில் ஐந்து முறை கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தியதற்கு மாறாக, இவ்வாண்டில் மும்முறையே கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது. அது பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) சென்னைப் பல்கலைக் கழகம், பட்டமளிப்பு விழாவை நீக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளில் மாணவர்கள் ஊர்வலம் நடத்தி, வன்முறையில் ஈடுபட்டபோது, சென்னை மாநகரில், தெற்கு கடற்கரைச் சாலையில், மாநிலக் கல்லூரிக்கு அருகில், கட்டுக் கடங்காத மாணவர் கூட்டத்தைக் கலைப்பதற்காக, காலை 11-00 மணியளவில் கண்ணீர்ப் புகை பயன்படுத்தப்பட்டது.

(2) 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளில் பிற்பகல் 2-30 மணியளவில், சிம்சன் தொகுதி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 8,000 தொழிலாளர்களைக் கொண்ட, கட்டுக்கடங்காத வன்முறைக் கும்பலொன்று, [illegible]





தீங்கு விளைவிக்கக்கூடிய பயங்கர ஆயுதங்களுடன், செம்பியம் இந்தியா பிஸ்டன்ஸ் பிரிவுக்கருகிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்கு முன்னர் கூடினர். இக் கும்பலைக் கலைப்பதற்காக சென்னை மாவட்ட காவலர் படை கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தியது.

(3) 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30-ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம், பொதுவுடமைக் கட்சி (மார்சிஸ்ட்) ஆகியவற்றைச் சேர்ந்த ஆதாரவாளர்களுக்கிடையே ஏற்படவிருந்த பெரும் கைகலப்பு ஒன்றைத் தவிர்க்கும் பொருட்டு, மதுரை (நகர) மாவட்டக் காவலர் படை சமயநல்லூரில் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தியது.

**காவல்துறை வானொலிப் பிரிவு.**

தமிழ் நாடு காவற்படை வானொலித் தொடருடன் இணைக்கப்பட்ட நிலையான நிலையங்கள் 13, துணைக்கோட்ட நிலையங்கள் 43, மிக உயரமான பகுதிகளில் செய்தி அற்பு-அனுப்புகை நிலையங்களைக் கொண்ட உயர் அலைக் கோடி நிலையங்கள் 4 (V. H. F. Station), மாநகரக் கட்டுப்பாடு அறைகள் 5, வெள்ள நிவாரண நிலையங்கள் 7 ஆகியவை உள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையும் இணைக்கப்படுகின்றன. சென்னையில் மத்திய சாகம், தெற்கு சாகம், மேற்கு சாகம், வடக்கு சாகம் என்ற 4 கட்டுப்பாடு நிலையங்கள் உள்ளன.

மேற்கண்டவற்றுடன், சென்னை மாநகர காவற்படை வானொலித் தொடர், தமிழ் நாடு சிறப்புக் காவற்படை வானொலித் தொடர், படைக்களம் தாங்கிய சிறப்புக் காவல்படை வானொலிப் பிரிவுகள் ஆகியவை இருக்கின்றன.

சென்னை மாநகர், அணைக்கரை, கல்லணை, தஞ்சை, பவானிசாகர், தேக்கடி, மேட்டூர் முதலிய இடங்களில் வெள்ள நெருக்கடி அறிவிப்பு நிலையங்களும் உள்ளன. முக்கிய பண்டிகைகள், இடைத் தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள், புயல்கள், வேலை நிறுத்தங்கள், பெருமக்களின் வருகை மற்றும் பிற நெருக்கடி காலங்களில் எல்லாம் 43 துணைக் கோட்ட நிலையங்கள் பயன்படுத்தப்பட்டன.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் துணைக் கோட்டத்தில் கம்பியில்லாத் தந்தி அனுப்புகை நிலையம் ஒன்று அமைப்பதற்கு அரசு 1971 செப்டம்பரில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மீதமுள்ள காவல்துறை துணைக் கோட்டத் தலைமையிடங்களிலும், ஆவடி, செய்யாறு, நிலக்கோட்டை, விருதுநகர் ஆகிய இடங்களிலும் காவல்துறை வானொலி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

தற்போது, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பரங்கிமலை, சென்னை மாநகர் ஆகியவிடங்களில் காவல்துறை கட்டுப்பாடு அறைகள் (Control rooms) இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருநெல்வேலியில் கட்டுப்பாடு அறை யொன்று திறக்கப்பட, 1971 ஆகஸ்டில், அரசு ஒப்பளிப்பு வழங்கி, அது 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. சேலம், வேலூர் ஆகியவிடங்களில் கட்டுப்பாடு அறைகள் திறக்கப்படுவதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

தமிழ்நாடு வானொலி செய்திப் போக்குவரத்து இணைப்பு குறித்து பரந்த செயல்விளைவுள்ள முக்கியத் திட்டம் நுண் அலைத் (Micro-wave) திட்டமாகும். அது அமைக்கப்படுவதற்காக, அந்நியச் செலவாணி உட்பட நிதி ஒதுக்கீடு செய்வதற்காகவும், உலக நாடுகளிலிருந்து பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளைத் நிர்மானிப்பதற்காகவும் திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. ரூ. 20 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், சுமார் 2 ஆண்டுக் காலத்தில், இத் திட்டம் முடிக்கப்படும்போது, மாநிலக் காவல்துறை தலைமையிடங்களை எல்லா மாவட்டங்களிலும் தலைமையிடங்களுடன் வானொலித் தொலைபேசி, டெலிபிரின்டர், உருவப்படம் அனுப்பும் கருவி ஆகியவை மூலம் இணைக்கப்படுவதும், மாவட்டக் காவல்துறை தலைமையிடங்கள் அனைத்தையும் வானொலித் தொலைபேசி மூலம் மாநிலம் முழுவதிலுமுள்ள காவல்நிலையங்களுடன் இணைக்கப்படுவதும் சாத்தியமாகும். இதற்கிடையில் மாநிலக் காவல்துறை தலைமையிடங்களை, மாவட்டக் காவல்துறைத் தலைமையிடங்களுடன் வானொலித் தொலைபேசி இணைப்பு மூலம் இணைப்பது, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருவப்படம் அனுப்பும் கருவிகளை சென்னை, மதுரை, வேலூர் ஆகியவிடங்களில் அமைத்தல் சுமார் 120 காவல்நிலையங்களில் வானொலித் தொலைபேசிகளை அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்ற 1971-72-ல் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணி, 2, 3 திங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேவையான தொழில் நுட்பப் பணியாளர்களை அமர்த்தவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறை ஆணைக்குழுவின் பரிவுரைகள்.

சட்டமும் ஒழுங்கும் நிலைபெற்று நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்பதில், ஒவ்வொரு குடிமகனுக்கும் அக்கறையுண்டு. எனவே, பொதுப் பணிகள் அனைத்திலும், காவல் துறை தனித்தன்மையும், சிறப்பிடமும் பெற்றுள்ளது. குறிப்பாக, பொதுமக்களுடன் இத்துறைக்கு உள்ள தொடர்பு மகத்தானது. நாளுக்கு நாள் மாறிவரும் சிக்கல் நிறைந்த சமுதாய பொருளாதார-அரசியல் வாழ்வில் இடம்பெறும் உணர்ச்சிகளையும், அமைதியின்மையையும் அடக்கி ஒழுங்கை நிலைநாட்டும் தலையாய பொறுப்பு காவல்துறையிடம் ஒப்படைக்கப்





கடினமான, சிக்கல் நிறைந்த இக்காலத்தில் . பொதுமக்களின் பட்டுள்ளது. நம்பிக்கை வீண் போகாதவாறு காவல்துறையினர் திறம்படச் செயல்படும் வகையில் இத் துறையைச் சீரமைக்கவும், காலத்திற்கேற்ற வகையில் இக்காவல் படையை மாற்றி அமைக்கவும் தமிழக அரசு 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் காவல்துறை ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. காவல்துறை நிர்வாகத்தில் பல கூறுகளையும் ஆய்ந்து பொருத்தமான பரிவுரைகளைச் செய்வதற்காக இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கை 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அரசுக்குக் கிடைத்தது. இந்த ஆணைக்குழு செய்த 133 பரிவுரைகளை விரிவாகப் பரிசீலனை செய்வதற்குக் கூட காத்திராமல் அரசு, அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், நீண்ட கால நோக்கில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்த வல்லவை என்றும் கருதிய பரிவுரைகளைச் சற்றும் தயக்கமின்றிச் செயல்படுத்தியது. இதுவரையில் 63 பரிவுரைகளை அரசு செயல்படுத்தியுள்ளது.

காவல்துறை ஆணைக்குழுவின் பிற பரிவுரைகளின்மீது விரைவான முடிவுக்கு வர அரசுக்கு ஏதுவாக, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டம் அமைத்தல் ஒருமுகப்படுத்துதல்) ஆகியோரடங்கிய உயர் அதிகாரக் குழு வொன்றை அரசு அமைத்தது. இக்குழு அதன் பணியைப் பெரும்பாலும் முடித்துள்ளது. இயன்ற பரிவுரைகள் அனைத்தையும் படிப்படியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு ஏற்கனவே செயல்படுத்தியுள்ள அடிப்படை பரிவுரைகளில், காவல் படையினரின் ஊதியம், படிகள், காவல்துறை வட்டங்களின் எண்ணிக்கை உயர்வு, முதல்நிலைக் காவலர்கள் பதவித் தரத்தை ஏற்படுத்துதல் போன்ற தொடர்பான பரிவுரைகள் அடங்கும். காவல்படையினரின் ஊதியம், படிகள் ஆகியவற்றைக் குறித்து, காவல்துறை ஆணைக்குழுவும் சம்பள ஆணைக்குழுவும் இணைந்து ஆய்வு செய்து, செய்த பரிவுரைகளை முழுமையாக ஏற்று, காவல்படையினரின் சம்பளம் படிகள் ஆகியவை குறித்து மனநிறைவளிக்கும் வகையில் முடிவெடுக்கப்பட்டன.

கண்காணிப்புப் பணியை மேம்படுத்துவதற்காகவும் பொதுமக்கள் உடனடித் தொடர்பு கொள்வதற்கு இயலும் வகையில் பொறுப்பான இப் பதவித் தரத்தில் அதிகாரிகள் பலரை அமர்த்துவதற்காகவும், கூடுதலாக 60 காவல்துறை வட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

புதிய முதல்நிலைக் காவலர் என்கிற பதவியைப் பொறுத்தவரையில், காவலர்களுடன் மக்கள் தொடர்பு பெருமளவில் இருக்குமாதலால், காவலர்களுக்கு உயர்ந்த அளவு கல்வியும், பயிற்சியும் இன்றியமையாதவை என்பதை அரசு

உணர்ந்துள்ளது. குறைந்த அளவு எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதியும், உதவி சப்-இன்ஸ்பெக்டர் நிலையில் பயிற்சியும் பெற்று, எல்லாக் காவல்நிலையங்களுக்கும் பரவலாய் பணியாற்ற காவலர்கள் அனுப்பப்பட்டால், புதிய முதல் நிலைக் காவலர்கள் சிறந்த முறையில் பணியாற்றிப் பொதுமக்களின் நம்பிக்கைக்கு மேலும் பெருமளவில் உரியவராயிருப்பாரென நாம் எதிர்பார்க்கலாம்.

காவற்படைக் காலத்திற்கேற்றவாறு சீரமைத்தல்.

காவல்துறை ஆணைக்குழுவின் பரிவுரைகளில், பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக் கூடிய பரிவுரைகளை அரசு ஏற்று, அவற்றைச் செயல்படுத்தி வருகிறது. "தொழில் நுட்பச் சீரமைப்பு" குறித்த பரிவுரைகள் அவை எனச் சொல்லலாம். இத் தலைப்பின்கீழ், 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகக்கூடிய, விரிவான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை, காவல்துறை ஆணைக்குழு கொடுத்துள்ளது. இத் திட்டமானது, தமிழ்நாடு காவற்படையை, நவீன, அறிவியல் அடிப்படையில் அமைக்க வகை செய்கிறது. 1971-72-ஆம் ஆண்டில் ரூ. 50.5 லட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ள இத் திட்டமானது, இந்த அரசால், ஏற்கனவே, ஏறத்தாழ முழுதும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

விரைந்த மாறுதல்களை ஏற்படுத்திவரும் இப் புதிய அறிவியல் காலத்தில், காவல்படை திறமையாகச் செயல்படுவதற்கு, திறமையான போக்குவரவு இன்றியமையாததால் செய்தித் தொடர்புடன் கூடிய 14 வண்டிகள், 30 ஜீப்கள், 100 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 1971-72-ஆம் ஆண்டில், ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போதுள்ள மொத்தம் 243 வட்டங்களில், 100 வட்டங்கள், செய்தித் தொடர்புடன் கூடிய வண்டி அல்லது ஜீப்பை பெற்றிருக்கின்றன. கிராமப்புறங்களிலுள்ள காவல்நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு, 40 சத விகித உதவித் தொகையுடன் 5,000 சைக்கிள்களை வாங்குவதற்கு, 1971-72-ஆம் ஆண்டில், ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுகள் செய்வதில் விரைவையும் திறனையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், சந்தேகத்தின்பேரில் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து, அரசு, குறிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. இந் நோக்கங்களை எய்துவதற்காக மாநிலக் காவல்துறை தலைமையிடத்தில் காவல்துறை கணக்கிடு பொதுப் பிரிவு (Police Computer Branch) ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள காவல்நிலையங்கள் அனைத்திலுமிருந்தும் மற்றும் கைவிரல் பதிவு மாநிலப் பிரிவிலிருந்தும் வரும் குற்றங்கள், குற்றவாளிகள் குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும், கணக்கிடும் பதிவேட்டில் சேகரிக்கப்படும். கணக்கிடும் பிரிவானது 1973-



74 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலக் காவல்துறை வானொலி நிலையங்கள் மூலம் காவல்நிலையங்கள் அனைத்திற்கும் குற்றவாளியின் அடையாளம், கைது செய்யப்பட்ட குற்றவாளி குறித்த பதிவு ஆகிய விவரங்களை, அக்குற்றவாளியைக் கைது செய்ததிலிருந்து 24 மணி நேரத்திற்குள் (தற்போதுள்ள முறையால் மேற்சொன்ன விவரங்களைச் சேகரிப்பதற்கு 5—6 நாட்கள் ஆகின்றன). இந்தப் பிரிவால் கொடுக்க இயலும், விரைவாக ஆய்வு செய்வதற்கும், முன்னர் குற்றமேதும் புரிந்ததாகச் சான்று ஏதுமில்லாதோரை விடுவிக்கவும் இது உதவுகிறது.

குற்றவாளிகளை விரைவில் அடையாளம் கண்டுபிடிப்பதற்கு, குற்றம் நடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளை அல்லது குற்றவாளிகளின் புகைப்படங்கள் அல்லது கைவிரல் ரேகைப் பதிவுச் சாதனம் அனுப்பும் ஆவணங்கள் ஆகியவற்றை, இந்தப் புதிய வசதிகளின்கீழ், காவல்துறை நிலையங்கள், மாநிலக் காவல்துறை தலைமையிடங்களுக்கு அனுப்ப இயலும். குற்றம் புரிந்தோர் யாரென்பது தெரியாத நேர்வுகளில், சரியான குற்றவாளி யாரென்பது குறித்து, கணக்கிடு பொறி நிலையத்திலிருந்து, காவல்நிலையங்கள், விரைவாகத் தகவலைப் பெற இயலும்.

அடுத்த ஆண்டில் (1972-73-ல்), ரூபாய் ஒரு கோடி செலவில், தமிழ்நாடு காவற்படையைத் தற்காலத்திற்கேற்றவாறு சீரமைப்பதற்கான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இச்செயற் குறிப்புகளுக்கு கடன்-மானியத் திட்டத்தின் கீழ் நிதி உதவி செய்வதற்காக, இவை, மத்திய அரசுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும். அவர்கள், தேவையான நிதி உதவியை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதிலிருந்து, தமிழ் நாடு காவற்படையை நவீன அறிவியல் அடிப்படையில் அமைப்பதற்கு, நிலையான திட்டத்தை இந்த அரசு உருவாக்கியுள்ளது தெரிய வரும். போதிய நிதி வசதியளிப்பதற்கு இந்திய அரசு முன்வருமானால், ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு முன்பே, தமிழ் நாடு காவற்படையை, தமிழ் நாடு அரசு புதுப்பித்துக் காட்டும் என்பதில் ஐயமேதுமில்லை.

அலுவலகப் பணியாளரின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழ் நாடு இரண்டாவது ஆணைக் குழுவின் பரிவுரைகளுக்கிணங்க, காவல்துறை அலுவலகங்களில் பணிபுரியும் கணக்காளர், மேலாளர் ஆகியோருக்கு ஒரே சம்பள விதமளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கணக்காளர்களின் பதவிப் பெயரை கண்காணிப்பாளர் (கணக்குகள்) என்றும்

மேலாளர்களின் பதவிப் பெயரை கண்காணிப்பாளர் என்றும் மாற்றி அமைத்துள்ளது. இந்தக் கோரிக்கையானது, நீண்ட காலமாக, அலுவலகப் பணியாளர்கள் சங்கம் விடுத்து வந்த இவ்வேண்டுகோள் 1971 ஆம் ஆண்டில், அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாநிலக் காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கு அளிக்கப்படும் பதவி உயர்வுக்கு இணையாக, மாவட்டங்கள் மற்றும் சென்னை மாநகர் ஆகியவற்றிலுள்ள காவல்துறை அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வு வசதிகள் அளிப்பதற்கு வகை செய்யும் விதத்தில், உதவியாளர்கள் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்த்தப்படுவதற்கான ஓர் அலகுத் திட்டமொன்றுக்கு, அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளது.

**தமிழ் நாடு காவலர் நல நிதி.**

காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் அனை
வாழ நிலைமைகளையும் மேம்படுத்துவதற்காக, உருவாக்கப்பட்ட தமிழ் நாடு
காவலர் நல நிதி தொடர்ந்து நன் முறையில் செயல்பட்டு வருகிறது. சார் நிலைப்
பணி, நிர்வாகப் பணி, நிலைப் பணி ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர், அவர்
தம் மனைவியர், குழந்தைகள் ஆகியோருக்கு, நிதி உதவி, படிப்பு உதவி, நல
உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவை இந்நிதியின் மூலம் அளிக்கப்
படுகின்றன. காவல்துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள்
மனமுவந்து கொடுக்கும் தொகைகள் வாயிலாகவும் அரசிதழ் பதிவு பெற்ற
அதிகாரிகளிடமிருந்து நன்கொடையாகப் பெறுவதன் வாயிலாகவும் இந்நிதிக்கு
தொகை சேர்க்கப்படுகிறது. வரையறை ஏதுமில்லாமல் 1970-71 ஆம் ஆண்டில்
ரூ. 1 லட்சம் மொத்த மானியம் வழங்கியதன் மூலம், இந்நிதியை, அரசு
பெருக்கியுள்ளது. 1971-72-ம் ஆண்டிலிருந்து இந்த மொத்த மானியத்
தொகையை ரூ. 1,50,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

மேற்கூறிய நிதியோடு, தமிழ்நாட்டுக் காவல்துறை நூற்றாண்டு விழா
படிப்பு உதவித்தொகைத் திட்டம் ஒன்றும் உள்ளது. இத்திட்டத்தின்கீழ்,
காவல்துறை அரசிதழ்ப் பதிவு பெறாத நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள
குழந்தைகளுக்குக் கல்லூரிகளில் உயர்படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்
கும் படிப்பு உதவித்தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. நன்கொடை
யாளரிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை மூலம் இந்நிதி உருவாக்கப்பட்
டுள்ளது. 1970-71 ஆம் ஆண்டில், ரூ. 20,000 படிப்பு உதவித் தொகையாக
வழங்கப்பட்டது.

**ஊர்காவல்படை.**

ஊர்க்காவல்படை, இம் மாநிலத்தில் ஆர்வத்தோடும், திறமையோடும்,
தொடர்ந்து பணி புரிந்து வருகிறது. இப்படையில் சேர்க்கப்படுவதற்காக



ஒப்பளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 12,430 ஆக இருக்க, 1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் நிலவரப்படி இப் படையிலுள்ளோரின் எண்ணிக்கை 10,731 ஆகும். காலியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப் படையினரைப் பரந்த அளவிலும், முழுதும் பயன்படுத்தும் நோக்குடன் இப்படையில் தற்போது சேர்ந்திருப்பவர்களைக் கொண்டோ அல்லது இப்படையைப் பெருக்குவதன் மூலமாகவோ மேலும் அதிக நகரங்களில் இப்படையினரை நியமிக்க இயலுமா என்று பார்க்க சென்னை மாநகர் மற்றும் இம்மாநிலத்திலுள்ள 59 மாவட்ட நகரங்களில் இப்படை குறித்து மறு ஆய்வு ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. மாநிலம் முழுதும் தேர்தல் காலங்களில் பாதுகாப்புப் பணி புரிதல், பெரும் விழாக்கள், பொது நிகழ்ச்சிகள் ஆகியவை நடந்த பொழுதெல்லாம் பாதுகாப்புப் பணி புரிதல் ஆகியவை மூலம், காவல்துறையினருக்கு இப் படையினர் 1972 ஆம் ஆண்டில் பயன்தரத்தக்க வகையில் உதவி புரிந்தனர். 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், பாகிஸ்தான் போர் தொடங்கியபோது, சென்னை மாநகரில் சிவில் பாதுகாப்புப் பணி புரிவதில் ஊர்க்காவல் படை முனைப்பாகச் செயல்பட்டது.

**காவற்படையினருக்குக் குடியிருப்பு வசதி.**

காவலர் குடியிருப்பு வசதித் திட்டம் 1955-56 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சத விகிதத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதென்று ஏற்கெனவே கருதப்பட்டது. இத்திட்டமானது முறையான திட்டத்தில் சேர்க்கப்படவில்லையெனினும், திட்டத்தில் சேராத முக்கியத் திட்டமாக இத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதுவரை 60 சத விகிதத்தினருக்குக் குடியிருபுகள் கட்டப்பட்டுள்ளன இத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதுவரை, மாவட்டங்களில், 121 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 424 சப்-இன்ஸ்பெக்டர்கள், 51 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 1 உதவி சப்-இன்ஸ்பெக்டர், 43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 907 தலைமைக் காவலர்கள், 5,602 காவலர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன. தமிழ்நாடு படைக் கலந்தாங்கிய சிறப்புக் காவல்படையைச் சேர்ந்த 2 உதவித் தளவாய்கள், 11 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள், 593 பணிப்பட்டம் பெறாத அதிகாரிகளுக்கும், பிற பதவித்தர அதிகாரிகளுக்கும், குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, அவர்கள் குடியேறியுள்ளனர்.

காவலர் பதக்கங்கள்.

1971 ஆம் ஆண்டில், காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் 42 பேருக்கு, குடியரசுத் தலைவர் காவல் தீயணைப்புப் பதக்கங்கள், காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டில், 28 பேருக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

காவல்துறை பொதுமக்கள் தொடர்பு.

காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையேயான நல்லுறவு தொடர்ந்து பேணப்பட்டது. கிராமக் கண்காணிப்புக் குழு காவல்துறையினருக்குத் தொடர்ந்து உதவி புரிந்து வந்தது. சிறுவர் சங்கம், ஊர்க்காவல்படை சென்னை மாநகர் காவல்துறை பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, சென்னை காவல் துறை துணைக் கமிஷனர் (போக்குவரத்து உரிமம்) அலுவலகத்தில் வளாகத்திலுள்ள சிறுவர் போக்குவரத்துப் பூங்கா, போக்குவரத்து மரியாதை வாரத்தைக் கடைப்பிடித்தல், பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கலந்தாலோசித்தல்—இவைபோன்றவை காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு வளர்வதற்கு உதவி செய்தன.

தீயணைப்பு.

தீயணைப்புத் துறையில், 11 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும், 2,817 அரசிதழ் பதிவு பெறாத நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர். திறமையாக நிர்வகிப்பதற்காகவும், நன்முறையில் கண்காணிப்பதற்காகவும், இத்துறையானது, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வடக்கு வட்டாரமாகவும், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென் வட்டாரமாகவும், ஆக இரு வட்டாரங்களாக 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29-ம் நாளிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தீயணைப்புத்துறை துணை இயக்குநர் பொறுப்பு வகிப்பார். 1971 ஆம் ஆண்டில் இறுதியில், இம் மாநிலத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 58 ஆக இருந்தது. நடப்பாண்டில், மேலும் மூன்று தீயணைப்பு நிலையங்களை நிறுவுவதற்கு, அதாவது, தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், மாவட்டத்தில் மணலியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செங்கல்பட்டு சோழபுரத்திலும் நிறுவுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இரண்டு தீயணைப்பு நிலையங்களை நிறுவுவதற்கு அரசால் முன்னரே ஒப்பளிப்பு வழங்கப்



பட்டது. இந்த இரண்டு தீயணைப்பு நிலையங்களில் ஒன்று ஸ்ரீரங்கத்திலும் மற்றொன்று பரமக்குடியிலும் நிறுவப்பட்டு, 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் திறக்கப்பட்டுள்ளன.

கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் பொருத்தப்பட்ட ஊர்திகள் சென்னை மாநகரில் மட்டுமே உள்ளன. இந்த வசதி, நடப்பாண்டில், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

தற்போது, இரண்டு தீயணைக்கும் பிரிவுகள் உள்ள தீயணைக்கும் நிலையங்கள் ஒவ்வோராண்டிலும் ஒன்று அல்லது இரண்டு வீதம் ஏற்படுத்தப்படுகின்றன. தீயணைப்பு நிலையங்களை நிறுவும் வேகத்தை விரைவுபடுத்தி, அனைத்து நகர்புற, நாட்டுப்புறப் பகுதிகளுக்கும், தொழில் நகரங்களுக்கும் போதுமான தீ பாதுகாப்பு அளிக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே, எல்லா நகரங்களிலும் ஒரு தீயணைப்புப் பிரிவுள்ள தீயணைக்கும் நிலையத்தை அமைப்பது என்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டது. அதனால் மேலும் பல நகரங்களில் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தலாம்.

1971 ஆம் ஆண்டில், தீயணைப்பு நிலையங்கள், 4,935 அழைப்புகளைப் பெற்றுச் செயல்பட்டன. இவற்றில், 4,207 அழைப்புகள் உண்மையான தீ விபத்து தொடர்புடையவை. அந்த ஆண்டில் தீயால் இழக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு ரூ. 1,37,22 லட்சமாகும். அழிவினின்றும் மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பீடு ரூ. 4,13,56 லட்சமாகும்.

அந்த ஆண்டில், அது போன்று முன் எப்போதும் காணாத அளவுக்குத் தொடர்ந்து அடைமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக நெருக்கடி சமயங்களில், மீட்புப் பணிகளுக்காக, மதுரை மாவட்டத்தில் தல்லாகுளம், மதுரை தீயணைப்பு நிலையங்களையும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம் தீயணைப்பு நிலையங்களையும் சேர்ந்த தீயணைப்புப் படையினரும் அதிகாரிகளும் அழைக்கப்பட்டனர். 1971 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள் மதுரை மாவட்டம் அனுப்பானடி கிராமம் வெள்ளத்தினால் சூழப்பட்டபோது, கிராமம் முழுவதிலுமுள்ள மக்கள் சுமார் 200 பேர்களை அங்கிருந்து வெளியேற்றிப் பாதுகாப்பானதொரு இடத்திற்குக் கொண்டுபோக வேண்டியிருந்தது. அச்சமயத்தில், தல்லாகுளம் தீயணைப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்தவர், அந் நிலையத்தினைச் சேர்ந்த தீயணைப்பு படையினருடன் அங்கு சென்று, மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையில், கிராம மக்கள் அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு மீட்டுச் செல்லும் பணியை மேற்கொண்டு, வெற்றி கண்டார்.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாளில் விருத்தாசலம் வழியாகச் செல்லும் மணிமுத்தா நதியில் வெள்ளப் பெருக்கேற்பட்டது. வெள்ளத்தினுள் சூழப்பட்டு நீரில் அடித்துச் செல்லப்பட்ட 11 பேர்களை மீட்கும்படி விருத்தாசலம் நகராட்சி மன்றப் பொறுப்பதிகாரியிடமிருந்து தொலைபேசிச் செய்தி பெறப்பட்டது. அந்த அழைப்பின்பேரில் கடலூர், சிதம்பரம் தீயணைப்பு நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் தீயணைப்புப் படையினரும் செயல் பட்டனர். மிகுந்த இடர்பாடான அச் சூழ்நிலையில் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்ட 11 பேர்களும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

அது போலவே, 1971 டிசம்பரில் 17, 18 ஆம் நாட்களில் வைகையாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, ஆற்றின் படுகைகளில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் பலரைச் சூழ்ந்துகொண்டு ஆற்றில் நடுவே பல இடங்களுக்கு அடித்துச் சென்றது. தல்லாகுளம், மதுரை தீயணைப்பு நிலையங்களைச் சேர்ந்த பணியாளர் அனைவரும் மீட்புப் பணியில் ஈடுபட்டு 35 பேர்களைக் காப்பாற்றித் தங்களுடைய சிறந்த வீரத்தையும் பணியின்மேல் கொண்டுள்ள ஈடுபாட்டையும் வெளிப் படுத்தினர்.

தீ அணைப்பு தொடர்பான கடமைகள் தவிர, பல்வேறு சட்டங்கள், விதிகள், ஆகியவற்றின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட, உரிமம் வழங்கப்படுகின்ற இடங்களைப் பார்வையிடுவதன்மூலம் தீ விபத்தைத் தடுப்பதற்கு தீ அணைப்புத் துறை அதிகாரிகள் தங்கள் ஆலோசனைகளை நல்கினர். தீ விபத்துத் தடுப்பு முறைகளைப் பின்பற்ற தீயணைப்பு அதிகாரிகள் அரசுக் கட்டிடங்களை அவ்வப்போது பார்வையிட்டனர். 1971 இல் அப்படிப் பார்வையிட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 5,634 ஆகும்.

காவற்படையின் கட்டுப்பாட்டு ஒழுங்கு.

காவல்துறையினரின் உயரிய ஒழுக்க முறையும் கட்டுப்பாடும் முன்போலவே போற்றத்தக்க வகையில் உள்ளன. தொழிலாளரிடையே அமைதியின்மை, உழவர்கள் கிளர்ச்சி, இடைத் தேர்தல்கள், ஊராட்சித் தேர்தல்கள், இடைக் காலப் பொதுத் தேர்தல்கள், பெருமக்கள் வருகைகள், ஆகியவற்றின் காரணமாக ஆண்டு முழுவதும் காவலர்களுக்குப் பணிச்சுமை அதிகமாக இருப்பினும், சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் காவல்துறையினர் தங்கள் கடமைகளைப் பாராட்டத் தக்க முறையில் செம்மையாக நிறைவேற்றிவர். காவல் துறையில் எல்லாப் பதவியினரும் ஆர்வத்துடனும் பற்றுடனும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.



இவ் விவாதத்தில் கலந்துகொள்ளும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், காவல் துறையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே நல்லுறவுகளை மேலும் நன்முறையில் உயர்த்துவதற்கும், காவலர்கள் தங்கள் கடமைகள் மேலும் செவ்வையாக நிறைவேற்றுவதற்கும் வழிவகைகளைக் கோடிட்டுக் காட்டும் வகையில் தேவையான கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் நல்குவாராயின் அவற்றை அரசு மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.

இணைப்பு.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் உள்ளவாறு காவற்படையினரின் அமைப்பு.

(தமிழ்நாடு சிறப்புக் காவற்படையினர், படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படையினர் நீங்கலாக.)

| | |
|---|---|
| காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் | 1 |
| காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (சென்னை, காவல்துறைக் கமிஷனர் உட்பட). | 9 |
| காவல்துறை சூப்பிரண்டுகள் | 63 |
| காவல்துறை அடிஷனல் சூப்பிரண்டுகள் | 4 |
| காவல்துறை உதவி சூப்பிரண்டுகள் | 33 |
| காவல்துறை துணை சூப்பிரண்டுகள் | 105 |
| காவல்துறை இன்ஸ்பெக்டர்கள் | 486 |
| காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் | 1,690 |
| காவல்துறை உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 166 |
| தலைமைக் காவலர்கள் | 3,351 |
| காவலர்கள் | 21,680 |

படைக்கலந்தாங்கிய ஏமக்காவல் படைகள் (மாவட்டங்களிலும் மாநகரிலும்).

| | |
|---|---|
| காவல்துறைத் துணை சூப்பிரண்டுகள், தரம் II | 18 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் | 48 |
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் | 342 |
| ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 154 |
| தலைமைக் காவலர்கள் | 1,068 |
| காவலர்கள் | 9,439 |
| மொத்தம் | 38,541 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 மார்ச் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Posters demanding independent Tamil Nadu*

*1. *S.N. Q.*—THIRU R. PONNAPPA NADAR:
THIRU SOWDI S. SUNDARA BHARATHI:

Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that hand written posters demanding independent Tamil Nadu were pasted in Tiruchirappalli Town on 3rd March 1972 or about that date on a tree near Theppakulam Post Office near Main Guard Gate;

(*b*) whether any case has been registered by the Police; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) திருச்சி மலைக் கோட்டைக் காவல் நிலையத்தினர் 3—3—1972 அன்று இ. பி. கோ. 124 (A) பிரிவின் கீழ் 380/72-ம் எண் உள்ள குற்ற வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். இது புலனாய்வில் உள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக யாரையாவது கைது செய்திருக்கிறார்களா? என்ன குற்றப் பிரிவின்கீழ் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, யாரோ சிலர் கையால் எழுதப்பட்ட இதுபோன்ற ஆட்சேபகரமான வார்த்தைகளைச் சில இடங்களில் சுவர்களில் ஒட்டியிருக்கிறார்கள். அது அச்சடிக்கப்பட்ட தாள்

அல்ல. அச்சடிக்கப்பட்டதாயிருக்குமானால் அந்த அச்சகங்களெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு, அதன்மூலமாகக் கைது செய்வது சுலபமாக இருந்திருக்கும். இவை கையால் எழுதப்பட்ட தாள்கள். ஆகவே, இன்னும் யாரும் கைது செய்யப்படவில்லை. இது சம்பந்தமாகக் காவல் துறையினர் புலனாய்வு செய்து கொண்டிருக்கின்றனர்.

**திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி:** இத்தகைய தேசத் துரோகமான செயல்களைச் செய்பவர்கள் யார் என்பதை அறிந்துகொள்வதற்குத் தமிழகம் முழுவதும் மிகவும் ஆவலாக இருக்கும் இந்தத் தருணத்தில் புலனாய்வை மிகவும் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுத்து, அவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய செயலைச் சீக்கிரம் அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழகம் முழுதும் ஆவல் இது சம்பந்தமாக இருக்கிறது என்றாலும், தமிழகம் முழுவதும் உள்ள யாரும் இதிலே ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஆங்காங்கு இருக்கின்ற சில தேச விரோதச் சக்திகள் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுவதாகத் தெரிகிறது. போலீசார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படி நக்ஸலைட் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, அவற்றில் சில கண்டுபிடிக்கப்படவும் சில கண்டுபிடிக்கப்பட முடியாமலும் இருந்தனவோ அதுபோன்று இதிலே இருப்பதிலும் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை. ஆனாலும், இந்த முயற்சிகள் தடுக்கப்படுவதற்குக் காவல் துறை எல்லா வகையான கண்காணிப்பிலும் ஈடுபடும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திருச்சியில் வெளிவந்துள்ள இந்தச் சுவரொட்டி சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பதாகப் போலீஸ் மானியத்தின் மீதான விவாதத்தில் முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். கடந்த மூன்று நான்கு தினங்களாகச் சேப்பாக்கத்தில் எழிலகத்தில் இம்மாதிரிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, சென்னையில் இருக்கக்கூடிய போலீசார் இது சம்பந்தமாக ஏதாவது வழக்குப் பதிவு செய்திருக்கிறார்களா? ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தொடக்கத்திலேயே சொன்னேன். எந்த இடத்தில் இதுபோன்று நாட்டு விரோதமான போக்குகள் காணப்பட்டாலும் அல்லது பிரச்சாரம் செய்யப்பட்டாலும் போலீசார் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** 'தமிழ்நாடு விடுதலைக் கழகம்' என்று ஒரு பெயர் பொறிக்கப்பட்டிருந்ததா, அப்படி ஒரு கழகம் தமிழகத்தில் செயல்படுகிறதா என்று போலீசார் புலனாய்வு செய்திருக்கிறார்களா? அப்படியிருந்தால் அதன் விவரங்களை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி ஒரு கழகம் சுவரொட்டியிலே தான் இருப்பதாகத் தெரிகிறது. எந்த அமைப்பு முறையும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் சில இடங்களில் 'தீவிர திராவிட முன்னேற்றக் கழகம்' என்று போட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யாரும் அறியாமல், வேறு யாரோ திராவிட முன்னேற்றக் கழகத்தை இதுபோன்ற விஷயங்களில் மற்றவர்களிடத்தில் காட்டிக்கொடுக்கவேண்டும் என்பதற்காகச் செய்யப்படுகிற முயற்சிகளிலே சில பேர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. எல்லாவற்றையும் சேர்த்துத்தான் காவல் துறையினர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

DR. H. V. HANDE: Sir, may I know whether it is a fact that the Central Government have also asked for particulars from the State Government, for, it was recently said in Parliament when a member put a question that particulars had been called for from the State Government? May I know whether such particulars have been called for and if so, what details had been furnished to the Central Government? Will this Government give a categorical assurance that the origin of these things, the causative factors, would be explored and say why only in Tamil Nadu such things happen and not in any other State which would bring discredit to our State and may I know whether it is possible for the Government to find out the exact source of these things?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய அரசு கேட்டது சம்பந்தமாக எந்த விவரமும் இதுவரையில் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், நாட்டு விரோத சக்திகளைத் தடுத்து நிறுத்துவதில் மத்திய அரசுக்கு இருக்கிற அக்கறையை இந்த அரசு எள்ளளவும் குறைத்து மதிப்பிடவில்லை. அதே நேரத்தில் மத்திய அரசு எவ்வளவு அக்கறையோடு இருக்கிறதோ அதற்கு நிகரான அக்கறை, நாட்டு விரோதச் சக்திகளைத் தடுத்து நிறுத்துவதில், இந்த அரசுக்கும் இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இவ்விதமாக இருக்கிறது என்று கேட்டால், தமிழ்நாட்டில்தான் முன்னேற்றக் கழகத்தை எப்படியாவது காட்டிக் கொடுத்து, அதற்கு ஒரு கெட்ட பெயரை உண்டாக்க எண்ணுகின்ற சிலபேர் இருக்கின்றார்கள்.

**திரு. கா. வேழவேந்தன்:** சில மாதங்களுக்கு முன்னால் தஞ்சை நகரில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்ற அரங்கினுக்கு முன்னால், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற சுவரொட்டிகள் திடீரென்று இரவு நேரத்தில் குறும்புத்தனமாக எழுதி வைக்கப்பட்டிருந்தது இந்த அரசுக்குத் தெரியுமா? இது வேண்டுமென்றே நடைபெற்ற சதி என்பதும்

அரசுக்குத் தெரியுமா ? இதை முதலமைச்சரவர்களும் மற்றவர்களும் கண்டதும் கிழித்தெறியும்படி சொல்லி, கிழித்தெறியப்பட்டதும் அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே 'தெரியுமா?' என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேர்த்துக்கொண்டது. பாக்கியெல்லாம் அவர்களுடைய கேள்வியிலேயே பதில் அடங்கியிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டமன்ற விடுதிக்கு அருகாமையில் ஆங்கிலத்தில் கையால் இம்மாதிரி எழுதப்பட்டிருந்தது. இது வேண்டுமென்றே செய்யப்படுகிறது என்று சட்டமன்றத்திலே பலரால் பரவலாகப் பேசப்படுகிறது. இது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேண்டுமென்றேதான் செய்யப்படுகிறது. ஆனாலும், இதைக் காவல் துறையினர் கண்காணிப்பதைப் போலவே பொதுமக்களும் இதிலே ஒத்துழைத்து, அப்படிப்பட்டவர்களைக் காவல் துறையினருக்குக் காட்டிக் கொடுப்பது நல்லது.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சுவரொட்டிகளை நம்முடைய கழக ஆட்சி விரும்பவில்லை என்றாலும், மத்திய சர்க்கார் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழகம். . ." என்று சொல்லக் கூடாது. It is not proper to include me.

திரு. நா. வீராசாமி: 'துணைத் தலைவர் அவர்களே,' என்று முதலில் குறிப்பிடுவது முறையாக வந்துவிட்டது. உங்களைச் சொல்லவில்லை. நம்முடைய கழகமும் ஆட்சியும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'நம்முடைய' என்று சொல்லக் கூடாது 'நம்முடைய' என்று அந்த அர்த்தத்திலே சொல்லமுடியும் ?

திரு. நா. வீராசாமி: தமிழிலே அப்படி அதற்கு அர்த்தம் தனியாக இல்லை. 'நம்முடைய' என்று சொல்லலாம் என்று கருதுகிறேன்; 'என்னுடைய' என்று சொல்லக்கூடாது. துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழகமும். . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: You are not following What I say. The whole House does not belong to one Party. 'நம்முடைய' என்னும்போது டெபுடி ஸ்பீக்கரையும் 'இன்க்ளுட்' பண்ணுகிறது. 'டெபுடி ஸ்பீக்கர்' கட்சியிலே சேரக் கூடாது.



திரு. நா. வீராசாமி: கழக ஆட்சியும் கழகமும் இப்படிப்பட்ட சுவரொட்டிகளை விரும்பவில்லை என்று சொன்னாலும், மத்திய அரசாங்கம் பல துறைகளில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிறது; தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் மத்திய அரசால் பழிவாங்கப்படுகிறது என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடையே வேகமாக வளர்ந்து வருகிற காரணத்தினாலே, அப்படிப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன என்று சொல்லப்படுவதால் இதை மத்திய அரசிற்குச் சொல்லி தமிழ்நாடு புறக்கணிக்கப்படக் கூடாது என்பதற்கான வாதங்களை நம்முடைய அரசாங்கம் எடுத்து வைக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடோ அல்லது எந்த ஒரு மாநிலமோ மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டால் அதற்கு ஜனநாயக ரீதியில் தீர்வு காண்பதுதான் முறை. இப்படிப்பட்ட தேச விரோதப் போக்குகளின் மூலம் தீர்வு காணலாம் என்று விரும்புவதும் அதை ஆதரித்துப் பேசுவதும் தவறு.

திரு. ஆர், பொன்னப்ப நாடார்: இந்தச் சுவரொட்டியிலே என்ன வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரமாவது முதலமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'விவரமாவது வெளியிடுவார்களா? என்றால், வேறு எந்த விவரமும் வெளியிடாததுபோல் இருக்கிறது. அந்த விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் கேட்டிருந்தால் தந்திருக்க முடியும். ஒரு தாளில் எழுதி ஒட்டியிருக்கிறார்கள். தார் மூலமாக எழுதப்பட்ட எழுத்து. அதை ஒரு தடவை படித்து, ரிக்கார்டுகளில் ஏறவேண்டும் என்று விரும்பினால் அதைப் படித்துக் காட்டுகிறேன். அது ரிகார்டுகளில் ஏறவேண்டாம் என்று விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சார், தமிழ் நாடு தனியாகப் பிரியவேண்டும் என்று சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டு வருவது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வற்புறுத்துகிற நேரத்திலே இதைச் செய்வது, ஒரு வேளை வேண்டுமென்றே செய்வதாக இருக்கலாம். இதைப் போலீசார் ஆராய்ந்து என்ன மதிப்பீடு செய்திருக்கிறார்கள்? இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை என்ன ? யார் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு மாசு கற்பிக்கவேண்டும் என்று சில பேர் இப்படி எழுதி ஒட்டியிருக்கலாம் என்கின்ற எண்ணத்திற்கும் இடம் இருக்கிறது. எல்லாவற்றையும் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதில்தான் போலீசார் முனைந்திருக்கிறார்கள் என்று நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: இத்தகைய தேச விரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு அன்னிய நாடுகள், அதுவும் அமெரிக்கா போன்ற நாடுகள் ஏதாவது இதில் தூண்டுதலாக நடந்துகொள்ளக்கூடிய வகையில் இருப்பதாக அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? இது விஷயமாக மத்திய புலனாய்வுத்துறை ஈடுபட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்னிய நாடுகள் உதவி செய்திருக்கிறார்கள் என்றால் இப்படிக் கையினால் எழுதியா ஒட்டியிருப்பார்கள்? அன்னிய நாட்டு உதவி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்னிய நாட்டு உதவி இருப்பதாக இந்தச் சாதாரண விஷயத்திற்கு நாம் எடுத்துக் கூறுவதன் மூலம் இதைப் பெரிய விஷயமாக ஆக்கிவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

## *Hut-dwellers of Ayodya Kuppam*

* 521 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minsiter be pleased to state—

(a) whether the hut-dwellers in Ayodya Kuppam in the Marina area in Madras City have been moved into new buildings; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (ஆ) இதுவரை இப்பகுதியில் 180 குடும்பங்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில் இன்னும் 356 குடும்பங்கள் குடிசைகளில் வசிக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இப்போது 200 குடியிருப்புகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இவை இன்னும் சுமார் 4 மாதங்களில் கட்டி முடிக்கப்படும். இக்குடியிருப்புகள் தயாரானவுடன், 200 குடும்பங்கள் இவைகளில் குடியேற்றப்படுவர். எஞ்சியுள்ள குடும்பங்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகள் 1972-73-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும். குடியிருப்புகள் தயாரானதும் அவைகளில் இக்குடும்பங்களுக்கு இடம் அளிக்கப்படும்.

DR. H. V. HANDE: Sir, will it be possible for the Hon. Chief Minister to give us an indication that whenever persons are rehabilitated like this, (1) they would be removed from the huts only after alternative arrangements are made and (2) whether it is possible to rehabilitate them as clost to their present living place as possible?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப் போலத்தான் அந்த வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் குடிசைவாழ் மக்களுக்குத் துன்பங்கள் ஏற்படவேண்டாம் என்று அவர்களுக்கு நிரந்தரமாக வாழ்க்கை வசதி செய்து கொடுப்பதற்காகக் கட்டப்படுகின்றன அந்த வீடுகள் என்ற காரணத்தினால் அவர்களும் குடிசை மாற்று வாரியத்தோடு ஒத்துழைப்பது நலமாக இருக்கும்.

திரு. எஸ். வடிவேல்: தமிழ் நாட்டில் எல்லாக் குடிசைவாழ் மக்களுக்கும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது சென்னையில் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவை போன்ற சில நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தினால் குறைந்த அளவில் திட்டமிடப்பட்டு, இந்த ஆண்டு முதல் இந்தக் காரியங்கள் செய்யப்படலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஒரு பகுதியில் இருக்கிற குடிசைவாழ் மக்களை இன்னொரு இடத்திற்குக் கொண்டு போய் வைக்கின்ற நேரத்தில் அந்தக் குடிசைவாழ் மக்களுடைய கருத்தைக் கேட்டு, அவர்கள் விருப்பத்தின்பேரில் தானே இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆமாம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

* 522 வினா.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை (Legislative Council) விட வேண்டுமென்ற செயற்குறிப்பை மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: இந்தியத் துணைக் கண்டத்தில் சில மாநிலங்களில் அப்படி மேலவைகள் எடுக்கப்படுவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. இருப்பவர்கள் அதிகமாக இடம் கேட்கின்ற காரணத்தினால், இந்த மேலவையை விரிவுபடுத்துவதுபற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேட்பவர்களுக்கெல்லாம் இடம் ஒதுக்குவதற்கு மேலவையை விரிவுபடுத்துவது என்று சொன்னால், சென்னையில் ஒரு புதிய கட்டடம் கட்டினாலும் போதுமானதாக இருக்காது. ஆனால் சட்ட-

மேலவை உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 63-ஆக இருப்பது 78-ஆக உயர்த்தப்படவேண்டும் என்ற செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதாவது, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டபேரவையின் உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு இருக்க வேண்டும், இப்பொழுது இருப்பது அப்படியில்லை, மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாக இருக்கிறது, ஆகவே 63-லிருந்து 78-ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். எல்லா மாநிலங்களிலிருந்தும் இது பற்றிய குறிப்பு, எடுக்கப்பட்டு ஒரு முடிவுக்கு வரும்பொழுது, இந்த மாநிலத் தினுடைய கோரிக்கையும் கவனிக்கப்படும் என்று மத்திய அரசு கூறியிருக் கிறது.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* எல்லா மாநிலங்களிலும் மேலவை கிடையாது. அரசியல் சட்டப்படி சில மாநிலங்களில்தான் மேலவை இருக்கிறது. அம்மாதிரி மேலவை இருந்த வங்காளத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுச் சட்டத்தின் மூலம் அந்த மேலவை ஒழிக்கப்பட்டிருக்கிறதே. அதே மாதிரி இங்கே நடந்த சில விஷயங்களைத் தானே திருப்பி திருப்பிச் சொல்லவேண்டிய நிலையில் இந்த மேலவை இருக் கிறது, அப்படி இருக்கிற காரணத்தினால், அப்படி மேலவை அவசியமில்லை என்ற ஒரு குறிப்பை அரசு அனுப்புமா? அல்லது அம்மாதிரியாவது அதுபற்றி அரசு மறு பரிசீலனை செய்யுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* இப்பொழுது ஆந்திரா, பீஹார், மத்தியப் பிரதேசம், தமிழ் நாடு, மராட்டியம், மைசூர், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மேலவை இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள மேலவையைக் கலைப்பதைப்பற்றி எந்த உத்தேசமும் இப்பொழுது இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல மத்திய அரசாங்கத்திலே குறிப்பிடத்தக்க சில் பேர், ஒரு எண்ணிக்கையை வகுத்து அவர்களைச் சட்டசபையில் இணைத்துக்கொண்டு, அந்த நிகழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபடலாம் என்ற அள வுக்கு ஒரு திருத்தம் கொண்டுவருவார்களேயானால், அவைகளைப்பற்றி மாநில அரசு யோசிக்கலாம். இது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்க மணி அவர்களுடைய கருத்தின் அடிப்படையிலே நான் தெரிவிக்கின்ற யோசனையேதவிர இது, அப்படி ஒன்றும் மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதிக் கேட்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, though there is a demand for the abolition of the Legislative Council, experienced and well-informed statesmen are in favour of continuing it, because it has got the power of improving and moderating the proceedings of the Legislative Assembly. Further, we can provide representa-





tion to artistes and educationists. So, in view of this, may I know from the Hon. Chief Minister, whether he will not press for the abolition of the Councils?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* அப்படிப்பட்ட எந்த முயற்சியும் வலியுறுத்தப்படுகின்ற அளவுக்கு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட வில்லை என்று நான் முதலிலே சொன்னேன்.

THIRU M. A. LATHEEF : It is well recognised that the utility of the upper houses is great and therefore it should be retained. At the same time there are opinions that it has become anachronism...

MR. DEPUTY SPEAKER : The hon. Member should not say like that. Let him put the question. This is question hour.

THIRU M. A. LATHEEF : So, in keeping with the democratic spirit, will the Hon. Chief Minister recommend, to the Central Government that as in the U.S.A. the Upper House may also be composed of representatives elected directly by the people?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* அது ஒரு சிறிய சட்டப் பேரவையாக இருந்துவிடக் கூடும். ஆகவே, அதை வைப்பதா, எடுத்துவிடுவதா என்பதைப் பற்றி யோசனைதவிர, தேர்தல் நடத்திப் பொதுமக்களிடமிருந்து வாக்குகள் பெறுவதா, இல்லையா என்பதைப்பற்றி யோசிப்பதற்கு எந்த வழியும் இல்லை.

*திரு. ஏ. எம். இராஜா :* மேலவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 63-லிருந்து 78-ஆக உயர்த்துவதற்கு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள் என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்பொழுது மத்திய அரசுக்கு எழுதப்பட்டது, இன்னும் ஏன் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை? அப்படி விரிவுபடுத்தும்பொழுது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு இடம் ஒதுக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* மேற்கொண்டு 15 இடங்களுக்கான அனுமதி விரைவிலே கிடைத்துவிடும் என்று கருதுகிறேன். அப்படி இடம் கிடைப்பதை எண்ணிப் பலரும் மகிழலாம்.

*திரு. நா. வீராசாமி :* 63-லிருந்து 78-ஆக உயர்த்துவது என்பதற்கான செயற்குறிப்பிலே, உயர்த்துவது என்று முடிவு செய்கின்ற 15 இடங்களுக்கு எந்தெந்தத் துறையிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதா?

[1972 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. 15 உறுப்பினர்கள் அதிகமாக ஆக்கவேண்டும் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், முதிர்ச்சியும் தேர்ச்சியும் பெற்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்பதற்காக மேலவை ஏற்படுத்தப்பட்டது. இப்போது இங்கேயே நல்ல முதிர்ச்சியும், தேர்ச்சியும் பெற்ற உறுப்பினர்கள் இருக்கும் போது மேலவை இனியும் தேவையா என்பதை அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைபற்றி ஒருமுறை அமெரிக்காவில் ஒரு கேள்வி எழுந்தபோது லிங்கன் பதிலளித்தார் என்று நினைக்கின்றேன். சூடான காப்பியை ஆற்றி அருந்துவதற்கு கப்பும் சாசரும் வேண்டும். காப்பி சூடாக இருக்கும்போது சாசரில் விட்டால் சீக்கிரமாக சூடு ஆறிவிடுகிறது; சுலபமாக அருந்திவிடலாம். அந்த கப்பும் சாசரும்போல் மேலவையும் பேரவையும் இருக்கின்றன. திரு. சுரேந்திரன் அவர்கள் கப்பிலேயே காப்பியை ஆற்றி அருந்தி விடுகிறேன். சாசர் வேண்டாம் என்றால் அதைப்பற்றிப் பின்னால் யோசனை செய்யலாம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, கப்பும் சாசரும் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம் தமிழ்நாட்டில் சாசர் இல்லாமல் காப்பி அருந்தும் பழக்கம்தான் இருக்கிறது. எனவே, வெறும் கப்பை மட்டும் பயன்படுத்துவதுபோன்று அரசாங்கம் இந்தப் பிரச்சினையைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கப்பு மட்டும் போதும் என்றால் அதைப்பற்றி யோசிக்கவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இன்றைக்கு அமைச்சர்கள் சட்டசபையிலே 4, 5 மணி நேரம் உட்காருகிறார்கள். பின் மேலவையிலும் 3 அல்லது 4 மணி நேரம் இருக்கின்றார்கள். அதற்குமேல் அலுவலக வேலைகளையும் கவனிக்கின்றார்கள். ஒரு தொழிலாளி அதிக நேரம் வேலை செய்தால் 'ஓவர் டைம்' அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அதுபோன்று அமைச்சர்களுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அமைச்சராக வந்துவிட்டால் அதிகமான வேலைப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். அதற்கு ஓவர் டைம் என்பது கிடையாது. அமைச்சராக இருப்பதுதான் ஓவர் டைம்.



1972 மார்ச் 17]

### பாரத் சேவக் சமாஜத்துக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை

*523 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரத் சேவக் சமாஜத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பாரத் சேவக் சமாஜம், அரிசன நல சங்கம், தென் இந்திய முஸ்லீம் சங்கம் ஆகிய பொது நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கேட்டு மனு வந்தால், முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கும் செயற் குறிப்பை முதலமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீ, வெள்ளம், துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் இவைகளால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்களுக்கும், தொழில் நிறுவனங்களில் எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படுகின்ற போதும் முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகின்றது. இது போன்ற தனிப்பட்ட நிறுவனங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்தால், பின் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் உதவி கோரி மனு வரக் கூடிய நிலைமை ஏற்படும். எனவே, இம்மாதிரி நிறுவனங்களுக்கு உதவி அளிக்க இயலாது.

### உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைப் படிப்பு

*524. வினா திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் அறிவியல் சார்ந்த வேளாண்மைப் படிப்பையும் பாடமாக இணைத்து, வயல்வெளிகளில் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேளாண்மைபற்றிய அறிவைப் பாடப் பயிற்சியோடு சேர்த்துப் புகட்ட இப்பொழுதே வசதியுள்ளது. வயல் பயிற்சியைப் பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் அளிப்பது சாத்தியமாயிராது.

[1972 மார்ச் 17

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள்—தேர்ச்சி பெற்றவர்களும், தேர்ச்சி பெறாதவர்களும்—'ஒயிட் காலர்ட்' என்று சொல்லக்கூடிய அரசாங்க உத்தியோகத்தைத்தான் விரும்புகிறார்கள். எனவே ,விரும்புகின்ற மாணவர்களுக்காவது வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு ஏற்படும் வகையில் வாரத்திற்கு ஒரு முறையாவது மாணவர்களை வயல்வெளிகளுக்கு அழைத்துச் சென்று டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை இயக்குவதற்கும் மற்ற நவீன வேளாண்மைப் பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்து, அந்த மாணவர்களைப் பசுமைப் புரட்சிப் பணியில் ஈடுபாடு உள்ளவர்களாகச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலையும் சொல்லிவிட்டார்கள். 10, 11-வது வகுப்புகளில் பொறியியல், வேளாண்மை போன்ற சிறப்பு பாடங்களை மாணவர்களின் விருப்பப் பாடமாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்போது 44 பள்ளிகளில் வேளாண்மைபற்றி கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிந்ததும், அவர்கள் அலுவலகங்களில் பணிபுரியத்தான் விரும்புகிறார்களே தவிர, வேளாண்மையில் ஈடுபட விரும்பவில்லை. ஆகவே இப்போது 8-வது வகுப்பு முடித்தவுடன், விரும்புகின்ற மாணவர்களுக்கு வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தி, அதில் பயிற்சி அளிக்கலாமா என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தொழில் பயிற்சிப் படிப்புக் கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் தொழில் பயிற்சிப் படிப்புக்கு வசதி செய்வது என்பது முடியாத ஒன்று. ஆனால் இப்போது 144 பள்ளிகளில் பொறியியல் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பாடத்திற்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் பள்ளிகளில் விருப்பப்பாடங்களோடு, பல்துறைப் பாடங்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதாவது, செக்ரடேரியல் படிப்பு, பொறியியல் படிப்பு, வேளாண்மைப் படிப்பு, மனையியல் படிப்பு, இந்திய இசை, ஓவியம், நெசவுப் பொறியியல் இந்தப் பல் துறைப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இப்போது 144 பள்ளிகளில் பொறியியல் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.



1972 மார்ச் 1972]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, வேளாண்மைத் துறை படிப்பை இப்போது 10, 11 வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக 6-வது வகுப்பிலிருந்தே அந்தப் பயிற்சியைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 10, 11-வது வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையே சரியாகப் பின்பற்ற முடியவில்லை என்று சொல்கின்றபோது 6-வது வகுப்பிலிருந்து அந்தப் பயிற்சியைத் தொடங்குவது சாத்தியமல்ல. அப்படி 6-வது வகுப்பிலிருந்து பயிற்சி பெற மாணவர்கள் முன்வருவார்களானால், அதைத் தனியாகப் பரிசீலித்து மேற்கொள்ளலாம்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வேளாண்மைப் பயிற்சிக்குத் தனியாகப் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படுமா? இல்லையானால் வேறு தொழில் பயிற்சிப் பள்ளிகளோடு, வேளாண்மைப் பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் வலிவலம் பாலிடெக்னிக் பள்ளியில் விவசாயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இது வெற்றிபெற்றால் மற்ற இடங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தலாம்.

### மேட்டுப்பாளையத்திலுள்ள நகரமன்ற உயர்நிலைப்பள்ளி

*** 525. வினா திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரமன்ற ஆண்கள் உயர்நிலைப்பள்ளியினை, அரசு ஏற்கவேண்டுமென, நகரமன்றத்திலிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

**திரு. மே. சி. தூயமணி :** தலைவரவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட மேட்டுப்பாளையத்தில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் குட்டிச் சுவர் போல் காட்சியளிக்கின்றன. நகராட்சியால் அதை சீர்படுத்த முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அரசாங்கம் அந்தப் பள்ளிகளை ஏற்று, பள்ளிக் கட்டடங்களை மாற்றியமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது இட்டத்தட்ட 129 உயர்நிலைப்பள்ளிகளை நகராட்சிகள் நடத்திவருகின்றன. நகராட்சிகளுக்கு இருக்கின்ற நிதிப் பற்றாக்குறை காரணமாக, அந்தப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சிகள் கோரியுள்ளன. அந்தக் கோரிக்கையை அரசு இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் உடனடியாக எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த அரசுக்கு நிதி போதாமையால், மிகவும் மோசமான நிலையிலிருக்கும் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்வதென்றும், அதில் 10 பள்ளிகளை உடனடியாக எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 10 பள்ளிகளில் மேட்டுப் பாளையம் நகராட்சியிலுள்ள இரண்டு பள்ளிகளும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 526.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : This is a question concerning my constituency. Only one question, please.

MR. DEPUTY SPEAKER : You can put it in a personal way. அதற்கு ஒரு தனிக் கேள்வி போடலாமே.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, பல நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தப்போவதாகச் சொன்னார்கள். நிதிநிலை காரணமாக அருப்புக்கோட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பள்ளியையும் அரசாங்கம் உடனடியாக ஏற்று நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது மிகமிக நெருக்கடியான நிலையில் இருக்கக்கூடிய 25 பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்துவதாக இருக்கிறது. அந்த 25 பள்ளிகளும் மேட்டுப்பாளையம், இராசிபுரம், திருவண்ணாமலை, திருப்பூர், கோபிச்செட்டி பாளையம், வாலாஜாப் பேட்டை, பழனி, காரைக்குடி, குடியாத்தம், விருதுநகர், உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம், திருப்பத்தூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, சிங்காரநல்லூர், திருவள்ளூர், சேலம் ஆகிய நகராட்சிகளைச் சேர்ந்தவை. அருப்புக்கோட்டை நகராட்சி இதில் சேரவில்லை. ஆகையால் அந்த நகராட்சி இந்த நகராட்சிகளை விட அதிக நிதி வசதி உடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

### திருத்தணிப் பகுதியிலுள்ள தெலுங்கு ஆசிரியர்கள்

* 526. வினா. திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரு மொழிப் பிரதேசமான திருத்தணிப் பகுதியில் தெலுங்கு மொழி படித்த ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?



1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிச் சிறுபான்மையினருக்கு இரு மொழிப் பிரதேசமான திருத்தணியில் தெலுங்கு மொழி பயிலுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவது அரசின் பொறுப்பு ஆகும். ஆனால் தெலுங்கு மொழி பயின்ற ஆசிரியர்கள் எல்லோருக்கும் வேலை தேடித் தருவது அரசின் சக்திக்கப்பாற்பட்டது.

திரு. இ. எஸ். தியாகராசன் : இன்னும் பல தெலுங்குபடித்த ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் தவிக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்பரெண்டிஸ் என்கிற முறையில் வேலைக்கு நியமித்துக் கொள்ள ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருத்தணியில் 17 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர துவக்கப் பள்ளிகளும் இருக்கின்றன. அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களையே தான் நியமிக்கின்றார்கள். இன்னும் எங்கெங்கே வாய்ப்பு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களை நியமிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Telugu Teachers have many real grievances and I have also represented them to the Hon. Minister for Education and he has also been kind and sympathetic in considering them. May I know from the Hon. Minister whether he will consider the appointment of a Special Officer to go into the needs and difficulties of these teachers and recommend to Government remedial measures?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றிய கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் தக்கமுடிவு எடுக்கப்படும்.

### *Professors of Tamil*

* 527 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether Professors of Tamil have been appointed in all upgraded Government Colleges where the posts of Professors of English exist?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழைப் பி. ஏ. வகுப்பில் சிறப்புப் பாடமாக பயிற்றுவிக்கும் கல்லூரிகளிலும், நான்கு உதவிப் பேராசிரியர்களுக்கு மேல் பணியாற்றும் கல்லூரிகளிலும் மட்டுமே பேராசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்பது பல்கலைக் கழகத்தின் விதிமுறை. இந்த விதி முறைக்குட்பட்ட எல்லா கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர்கள்

நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகையால், ஆங்கிலப் போராசிரியர்கள் நியமிக்கப்படும் கல்லூரிகளில், தமிழ்ப் போராசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனரா என்ற வினுவுக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நம் தமிழகத்தில் தமிழையே பயிற்சி மொழியாக ஆக்குவதற்கு அரசு வேகமாக எத்தனையோ திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. ஆங்கில சுருக்கெழுத்தாளர்களைவிட தமிழ் சுருக்கெழுத்தாளர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுப்பது போல கல்லூரிகளிலும் ஆங்கிலப் போராசிரியர்களைவிட தமிழ்ப் போராசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ் பயிற்சி மொழியாக வந்தாலும் அந்த அந்தத்துறையைச் சேர்ந்தவர்கள்தான் தமிழிலும் வல்லமை பெற்று தமிழில் போதித்தாக வேண்டுமே தவிர, எல்லா பாடங்களையும் தமிழ்ப் போராசிரியர்கள் போதிப்பது என்பது இயலாத காரியம். தமிழ்ப் போராசிரியர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொடுக்கிறார்கள். பல்கலைக் கழகம் இதுபற்றி என்ன சிபார்சு அளிக்கிறதோ அதை இந்த அரசு பரிசீலிக்க எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know from the Hon. Minister whether there are two grades of Tamil Pandits in High Schools and if so, what is the difference between the two grades?

MR. DEPUTY SPEAKER: The main question relates to Colleges.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. என்றாலும் பத்தாவது பாஸ் செய்துவிட்டு, வித்வான் பரீட்சையும் பாஸ் செய்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் முதல் க்ரேடாகக் கருதப்படுகிறார்கள்.

ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மட்டும் படித்துவிட்டு, வித்வான் பரீட்சை தேர்ச்சிபெற்று வருகிறவர்கள் 2-வது கிரேடாகக் கருதப்படுகிறார்கள். ஆயினும் இவர்களை ஒரு கால கட்டத்திற்குப் பிறகு முதல் நிலையாக எப்படி ஆக்குவது என்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.



## சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் புதிய விடுதி

* 528 வினு—திரு. க. சுப்பு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போதிய வசதி இன்மையால் தங்களுக்கு புதிய விடுதி ஒன்றைக் கட்டித் தருமாறு சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி மாணவர்கள் கோரியிருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தற்பொழுது உள்ள சட்டக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தையும் இடத்தையும் விலைக்கு வாங்கி விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அரசாங்கம் இந்தப் பதிலையே வெகுகாலமாகச் சொல்லி வருகிறது என்கிற அதிருப்தி மாணவர்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த இடத்தை வாங்கி கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுவிட்டன. அந்த இடத்தை கையகப்படுத்துவதற்குக் காலதாமதம் ஆகலாம் என்றே அந்த இடத்தை வாங்கிவிடுவதற்காக வாங்கி கட்டிடங்கள் கட்டுவதற்காக 11 லட்சத்துச் சொச்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் வாங்குவதற்காக நிர்ணயித்துள்ள தொகை நியாயமானது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். முக்கால்வாசி வேலைகள் முடிந்துவிட்டன. ஆகவே வெகு விரைவில் அந்த இடம் வாங்கப்பட்டு இருக்கிற இடம் மராமத்து செய்யப்பட்டு புதுக்கட்டிடமும் கட்ட ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாணவர்கள் விடுதிகளில் தங்க மிகவும் கஷ்டப்படுவதால் அடுத்த கல்வியாண்டிற்குள்ளாகவாவது இதை முடித்துவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பின்னால் சில சங்கடங்கள் வரக்கூடாது என்பதற்காக வழக்குரைஞர்கள் சில விளக்கங்கள் கேட்டிருக்கிறார்கள். அது கிடைத்தவுடன் ஒரு திங்களுக்குள் இந்த இடத்தை வாங்கியாகிவிடும். ஆகவே அடுத்த கல்வியாண்டிற்குள்ளாக அந்தக் கட்டிடத்தை பழுது பார்க்கிற வேலையும் முடிந்து மாணவர்களுக்கு ஓரளவு வசதி ஏற்பட்டுவிடும்.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that this is a very old hostel—it was formerly the Madras Medical College Hostel and afterwards it became the hostel of the Law College and also that there is not enough accommodation—the Hon. Minister himself said that there was not sufficient accommodation and that it will take a long time to complete the work—may I know whether any temporary arrangements would be made to see that all students applying for accommodation in the hostel—now so many are rejected for want of accommodation—are provided with at least such temporary accommodation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த இடத்தைத் தவிர வேறு வசதி இல்லை என்ற காரணத்தினால் அந்த இடத்தில் புதிய கட்டடத்தையும் கட்டலாம் என்ற அளவில் அந்த இடத்தை வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிராட்வேயிலும் வேறு கட்டிடம் இருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய விடுதி வசதி நல்லமுறையில் சீக்கிரத்திலேயே அமைத்துக் கொடுக்கப்படும்.

## *Water supply in South Madras area*

*529. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras had taken steps to increase the pressure of water supply to Kodambakkam, T. Nagar, West Mambalam, Saidapet, Guindy and Adyar by constructing a pump house at T. Nagar in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியின் தெற்குப் பகுதிகளில் தண்ணீர் விநியோகத்தைச் சீர்திருத்த தியாகராயநகரில் எழுபத்தெட்டு இலட்ச ரூபாய் செலவில் நீரைத் தேக்கி விரைவாக செலுத்த தனியாக ஒரு நிலையம் கட்டப்படுகிறது. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து வடிகட்டிய நீர் பூமிக்கடியிலுள்ள தேக்கங்களுக்கு செலுத்தப்பட்டு, பின்பு ஒரு மேல்மட்ட தேக்கத்தின் வழியாக பல பகுதிகளுக்கு செல்லும் பெரிய குழாய்களுக்குச் செலுத்தப்படும்.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister when this is likely to be completed? May I also know whether the Government is aware of the fact that it is only a partially completed one now, it is very unhygenic and if it is allowed to





function in its present condition it will lead to diseases like jaundice, etc., for, there is lot of dirt in the water and whether it is possible, firstly to keep it clean right now and secondly, to expedite the whole completion of the work and when they expect it to be completed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 78 லட்சம் செலவில் இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலத்திற்கு அடியில் 53 லட்சம் காலன் பிடிக்கக் கூடிய தொட்டியும், 80 அடி உயரத்தில் நீர்தேக்கத் தொட்டியும் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. 42 முக்கியமான பெருங்குழாய்கள் எல்லாம் புதைக்கப்பட்டுவிட்டன. துணைக் குழாய்களும் புதைக்கப்பட்டு வருகின்றன. பம்பிங் ஸ்டேஷன் அமைக்கின்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேகமாகத்தான் அந்த வேலை நடைபெற்று வருகிறது.

DR. H. V. HANDE : I want to know when it will be over.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. மாநகராட்சி விரைவில் அதை முடித்துவிடும் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைப் பாராட்டுகிறோம் என்றாலும் அடையார் பகுதியில் தண்ணீரே வருவதில்லை. இன்னும் சில இடங்களில் குழாயைத் திறந்து துணி தோய்க்கிற காரணத்தினால் தண்ணீர் பொல்யூட் ஆகிறது. அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. மாநகராட்சியின் மூலமாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it not a fact that this is an over-head work, foundation for which was laid in 1965 and an underground tank is also constructed? What is the reason for the delay in construction of the over-head tank? Is it because of the dispute about cubic content of the water supply and if so has it been finalised? I am sure the Government cannot complete the work without deciding on the cubic content.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழுவிவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. காலதாமதமானதற்கான காரணத்திற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

' Erection of pumpsets would be completed by the middle of 1972 ' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சிறுகமணி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

* 530 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக் கோட்டையிலும், மலையப்ப நகரிலும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக்கோட்டையிலும், மற்றும் மலையப்ப நகரிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு எந்தவித திட்டமும் இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஊர்களிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர வேண்டுமென்று அந்த ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனோ அவை இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தருகிறார். ஒருவேளை, அவற்றைச் செய்துதர பணம் இல்லையா, அல்லது நல்ல மனம்தான் இல்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை என்று திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். தெருக்குழாய்களுக்கு தானியங்கி விசையேற்றம் மூலம் ஆட்டோமேடிக் பிரஷர் பம்ப் மூலம் தண்ணீர் செலுத்த 1962-லே வழிவகைகள் செய்யப்பட்டன. நிதிப் பற்றாக்குறை காரணமாக சிறுகமணி பஞ்சாயத்தினால் அந்தப் பம்ப் செட் வாங்கி வைக்க இயலவில்லையென்று தெரிவித்திருக்கிறார். கையினால் இயக்கப்படும், 'ஹேண்ட் பிரஷர் பம்ப் செட்' மூலம் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

## Panchayats without Harijan Members

* 531. THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of village panchayats without elected Harijan members ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1,528 பஞ்சாயத்துக்களில் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. டி. கணபதி : தலைவர் அவர்களே, குறைந்த வாக்காளர்கள் உள்ள பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. கூடுதலான வாக்காளர்கள் இருக்கும் இடங்களில் போட்டியிருப்பதால் அங்கேயும் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி, எல்லா பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு ரிசர்வ் தொகுதி அமைத்துக்கொடுக்கும் வகையில் சட்டம் திருத்தியமைக்கப் படுமா ? அல்லது பெண்களுக்கு இடம் ஒதுக்கப்படுவதைப் போன்று 'கோ-ஆப்ட்' முறையில் அரிசனங்களுக்கு இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரிசனங்களும் இடம் பெறுவதற்கான முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 752 ஊராட்சிகளிலே அரிசனங்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். 1203 ஊராட்சிகளில் உப தலைவர்களாக அரிசனங்கள் இருக்கிறார்கள். 1528 ஊராட்சிகளிலே பாதிப்பேருக்குமேல், அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆக இருப்பதால் அரிசனங்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் 1528 இடங்களில் தனியாக ஒதுக்கவில்லை.

## Pay scales of Town-Planning Inspectors

* 532 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that representations have been received from the Town Planning Inspectors of 90 Municipalities including Corporation of Madurai for revision of wages; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு நகரமைப்பு தொழில் நுட்ப உட்பிரிவு பணியாளர்களின் சங்கத்திடமிருந்தும் மற்றும் சில நகரசபைகளிலுள்ள நகர அமைப்பு சார்பு நிலை பணியாளர் தொகுதியிடமிருந்தும் சில பதவிகளுக்கு சம்பள விகிதங்களை திருத்தி அமைக்கக் கோரி முறையீடுகள் வந்துள்ளன.

(இ) இப்பொருள் அரசின் கவனத்திலுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 90 நகரசபைகளிலும் சேர்ந்து 246 டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 100 பேர் மாக்ஸிமம் ரீச் பண்ணிவிட்டார்கள். அவர்கள் சம்பந்தமாக பே கமிஷன் . . . .

Is it not a fact that the Director of Town Planning has made some recommendations to the Secretary and the matter is pending with the Secretary for more than six months?

என்று கூறியிருக்கிறது. ஆகவே உடனடியாக அரசு, டைரக்டர் ஆஃப் டவுன் பிளானிங் செய்த சிபாரிசை அமுல் நடத்த வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நகராட்சி இயக்குநர் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே தக்க முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

### *Post-Graduate Diploma Course in Psychiatry*

* 533 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to introduce a Post-Graduate Diploma Course in Psychiatry in the Medical Colleges in Madras; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரியில் ஏப்ரல் 1972-லிருந்து ஓராண்டு டிப்ளமோ படிப்பு, மனநிலை மருத்துவம் நடைபெறும். ஆண்டுக்கு ஆறு மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொண்டு துவக்கப்படும்.

திரு. என். கே. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இந்தமாதிரியான மனநிலைநோய்பற்றி கற்றுத் தேறுவதற்கு அதிகமான நாள் பிடிக்கும் என்பதால் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்க முன்வருவதில்லை. ஆகவே, அந்த மாணவர்களுக்கு அதிகப்படியான உபகாரச் சம்பளங்களைக் கொடுத்து, அதிகமான மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழவில்லை. இப்போது மாணவர்கள் பலர் சேர முன்வருவதால் இடம் இல்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.



திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, பெங்களூரில் 'ஆல் இண்டியா இன்ஸ்டிட்யூட்' இருக்கிறது. அதேபோல இங்கேயும் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழ்நாட்டிலுள்ள மனநோய் மருத்துவமனை அகில இந்தியாவிலும் சிறப்புடையதாக இருக்கிறது. சிறப்பு பயிற்சி பெற்ற பலர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். "சைக்யாட்ரி' சிறப்பு பயிற்சி தகுதியுடையவர்களும் இருக்கிறார்கள். பெங்களூரில் உள்ள அளவுக்கு இது சிறப்பாக இயங்குகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### செவிலியர்களுக்கு அடையாள எழுத்துக்கள்

* 534 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனையில் பணிபுரியும் நர்சுகளுக்கு அடையாளத்துக்காக M.N.S. எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதை மாற்றி T.N.S. என ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசாங்க மருத்துவமனைகளில் பணிபுரியும் ஆண் செவிலியர் அணியும் 'M.N.S.' (Madras Nursing Service) என்ற அடையாள எழுத்துக்களை 'T.N.N.S.' (Tamil Nadu Nursing Service) என்று உடனடியாக மாற்றும்படி நலப்பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கும், மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் அரசாங்கத்தால் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளச் சின்னங்களில் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி, தமிழ் எழுத்துக்கள் பொறிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துக்கள் வழங்குவதில் தடை இல்லை. ஆனால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற ஆங்கில எழுத்துக்கள் தெளிவாக இருப்பதோடு, அதை இப்போது மாற்ற முயன்றால் தெளிவு குறைவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. காலக்கிரமத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் நர்சுகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் 30 ரூபாய் அலவன்ஸை ரத்து செய்யப் போகிறார்கள் என்று சொல்வது உண்மையா? அதை ரத்து செய்யாமலிருக்க வழிவகை செய்யப்படுமா?

[1972 மார்ச் 17

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே அந்தக் கேள்வி எழாது. அந்தக் கேள்வியை எழுப்புவதற்கு ஏதுவாக மானியம் வருகிறது. அப்பொழுது அந்தக் கேள்வியை எழுப்பலாம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, செவிலியர்கள் அணியும் உடை கவர்ச்சியும் வசதியும் இல்லாமல் இருப்பதால், நம்நாட்டு நாகரிகத்திற்கு ஏற்ற வகையில் உடை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினருக்கு உடை கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்ற அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு உள்ள அக்கறை மிக்க வசதியாகப் பணியாற்றக்கூடிய வகையில் உடை இருக்க வேண்டுமென்பது. இப்போது அவர்கள் அணிகின்ற உடைதான் பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சூலூரிலுள்ள மருத்துவ மனை

* 535.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதியில் உள்ள சூலூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சையளிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

### செம்மிபாளையத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம்

* 536 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் தொகுதியில் பல்லடம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட செம்மி பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டு கட்டடம் பேஸ் மட்டம் வந்து நின்று விட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

### அரசு அச்சகத்தில் இரவு நேரத் தொழிலாளர்கள்

* 537 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகங்களில் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவசமாக ரொட்டியும் டீயும் கொடுக்க திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?



1972 மார்ச் 17]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அரசினர் அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு வீதத்தில், இலவசமாக தேநீரும், ரொட்டி அல்லது பன் ரொட்டி வழங்கும் திட்டம் ஒன்று ஏற்கெனவே செயலில் உள்ளது. இருந்த போதிலும், நடைமுறையில் சென்னை மாநகரில் தங்கசாலையில் உள்ள மத்திய அச்சகத்திலும், அண்ணாசாலை, உயர்நீதிமன்றம் ஆகிய இடங்களில் உள்ள கிளை அச்சகங்களிலும், மாவட்டங்களில் புதுக்கோட்டையில் உள்ள கிளை அச்சகத்திலும் மட்டுமே இவை வழங்கப்படுகின்றன. இவற்றை வழங்குவதில் நடைமுறையில் தோன்றிய இடையூறுகளின் காரணமாக, சென்னை மத்திய சிறை அச்சகத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு தலைக்கு 20 காசு ரொக்கமாக வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் டெண்டர் கேட்டு அறிவிப்பு விடுக்கப்பட்டபொழுது, ஒப்பந்தக்காரர் எவரிடமிருந்தும் டெண்டர் ஏதும் வரவில்லையாதலால், அவ்விடங்களிலுள்ள வட்டார அரசினர் அச்சகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மேலே சொல்லப்பட்ட வீதத்தில் ரொக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மாதிரி அச்சகங்களிலே நைட் ஷிப்ட் வேண்டாம் என்று சொல்லிவிட்டு பகலிலே வேலைசெய்தால் நல்லதல்லவா? தொழிலாளர்கள் நைட் ஷிப்ட் செய்வது கஷ்டமாக இருக்குமே. எனவே இதை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். ஆனால் தொழிலாள தோழர்கள் ஓவர் டைம் வேண்டும், நைட் ஷிப்ட் வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஓவர்டைம் முறையை எவ்வளவு குறைக்கலாம் என்பதைப் பரிசீலித்து வருகிறது.

### ஆண்டிப்பாளையத்திலுள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்

* 583 வினா.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், ஆண்டிப்பாளையம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஆண்டிப்பாளையம் கிராமத்தில் உள்ள 12 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க பால ராஜபுரத்தில் சர்வே எண். 46-7-ஏ-இல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 6-வது

பிரிவின் கீழ் உள்ள விளம்பர 'அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 19—8—1971 நாளிட்ட 1654 ஆம் எண் அரசு ஆணையில் ஏற்கப்பட்டு 15—9—1971 நாளிட்ட பாகம் -வது பிரிவு 1 தமிழ்நாடு அரசிதழில் 869-ம் பக்கத்தில் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டது. இதற்குமேல் அவார்டு அளிப்பது, நிலத்தை கையகப்படுத்தி பிரித்து அரிசனங்களுக்கு அளிப்பது அரிசன நல தனி தாசில்தார், மாவட்ட ஆட்சியர் இருவரின் பொறுப்பாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஆண்டிபாளையம் என்ற கிராமத்தில் பொதுமக்களுக்கு வீட்டு மனைக்குரிய இடத்தைக் கையகப்படுத்திக் கொடுப்பதற்கான பிரச்னை 1967 ஆம் ஆண்டிலிருந்தே நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுத்து இதை நிறைவேற்றுவதற்கு விரைவில் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்களுக்காக முதலிலே தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தைக் கையகப்படுத்தவேண்டுமென்ற நிலைமையிலே இருக்கும்பொழுது அவர்களாக முன்வந்து அந்த இடத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். பிறகு அந்த இடத்தை காளிபாளையம் கிராமத்திலுள்ளவர்களுக்குக் கொடுக்கலாமா என்று உத்தேசம் இருந்தது. ஆனால் அவர்களும் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அடுத்தபடி 46/7 ஏ இல் உள்ள இடத்திலே ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்தைக் கையகப்படுத்தி பட்டா செய்வதற்கு திட்டம் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மத்திப்பட்டியிலுள்ள அரிசனங்களுக்கு குடிநீர்

* 539 வினு.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மத்திப்பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடிநீர் வழங்க மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் எப்போது துவக்கப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971-ம் ஆண்டு சனவரி திங்களில் துவக்கப்பட்டது.

(இ) தற்போது கீழ்த்தளம் வரை கட்டப்பட்டுள்ளது. மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுபவர் பாதி வேலையில் நின்று விட்டதனால், அவருடைய ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு நபர்மூலம் வேலையை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுக்காலமாகவே அந்த மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிப் பிரச்னையில் காலதாமதம் ஏற்பட்டுவருகிறது. அந்தப் பகுதிகளிலே உள்ள காண்டிராக்டர்களிடத்திலேயே இதுபோன்ற வேலைகளை ஒப்படைத்தால் அவர்கள் விரைவிலே முடித்துவிடுவார்கள். ஆகவே அந்த அந்த டிவிஷனில் உள்ளவர்களிடமே வேலைகளைக் கொடுத்து மிக விரைவிலே முடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கலெக்டர் அவர்கள் ஒப்பந்தக்காரரிடத்திலே விரைவிலே முடிக்கவேண்டுமென்று கொடுத்தார்கள். ஆனால் அந்த ஒப்பந்தக்காரர் பாதி வேலையை செய்துவிட்டு பாதியை முடிக்காமல் விட்டுவிட்டார். பல்வேறு தாக்கீதுகள் விட்டு பிறகு அவருடைய ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது. இப்பொழுது வேறு ஒப்பந்தக்காரரிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே முடிக்கப்படும்.

### *Shanmugar Mills at Rajapalayam.*

* 540 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Rajapalayam citizens demonstrated on 28—8—1971 demanding re-opening of Shanmugar Mills; and

(b) the steps taken for re-opening the said mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்த ஆலையின் தொழிலாளர்கள் இந்த ஆலையை திறக்கும்படி அரசை வேண்டிக் கொண்டனர்.

(இ) இந்த ஆலை 1—11—1971 முதல் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இராஜபாளையம் சண்முகர் நூற்பாலை திறந்து ஓடுவது மகிழ்ச்சிகரமான விஷயம். இருந்தபோதிலும் திறக்கின்ற நேரத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டபடி இல்லாமல் இன்னும் ஐந்து ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் 8 மணி வேலைக்குப் பதிலாக 9 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள். பெண்களையும் அதிகாலையிலே வேலைக்கு வரச் சொல்லி வற்புறுத்துகிறார்கள் என்ற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே தனியாகக் கேள்வி போடவேண்டும்.

### பஞ்சாலை கார்ப்பரேஷன்

* 541 வினா.—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பஞ்சாலை கார்ப்பரேஷன் தன் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டுள்ள பஞ்சாலைகளை நடத்துவதற்காக தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷனிடமிருந்து இன்னும் வரவேண்டிய பணம் எவ்வளவு?

(இ) அந்தப் பணத்தைப் பெறுவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தமிழக பஞ்சாலை கார்ப்பரேஷன் கணக்கின்படி எடுக்கப்பட்ட நாற்பு ஆலைகளின் வேண்டிய மொத்த நடைமுதல் ரூ. 97.40 இலட்சங்கள். இதில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் பங்கான 51 சதவிகிதத்தில் இதுவரை கொடுத்தது போக இன்னும் ரூ. 19.83 இலட்சங்களி வரவேண்டியிருக்கிறது. தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனையும் மத்திய அரசையும் மீதி வரவிற்காக அணுகப்பட்டிருக்கிறது.

### *Houses for Government servants in Perambalur Town*

* 542 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Government have any proposal to construct houses in Perambalur Town, Tiruchirappalli district for Government Servants and low income group people; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Are the Government aware that there is an area available in Perambalur, about 9 acres and several associations have recommended to Government and Collector is also seized of the matter? May I know whether it is not a fact that an area of 9 acres owned by the local Madanagopalaswamy temple is available for construction of houses and the Revenue Department haye sent proposal for construction of houses and if so what is the action taken by Government?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்பொழுது பெரம்பலூரிலே வீடு கட்டுவதற்குத் திட்டம் இல்லை. ஆனால் அரசு எந்த எந்த இடங்களிலே வீடுகளைக் கட்டலாம் என்று ஒரு அறிக்கை தமிழ்நாடு வீட்டு





வசதி வாரியத் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டது. அந்தத் தலைவர் அவர்கள் 24 இடங்களை தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுத்து திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்த 24 இடங்களில் பெரம்பலூர் ஒரு இடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கூடலூருக்கு அறுவை மில்

* 543 வினா.—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் மரம் அறுவை மில் (Saw Mill) ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, கூடலூரிலே ஏராளமாக மரம் கிடைக்கிறது. அந்த மரங்களையெல்லாம் கள்ளிக்கோட்டைக்குக் கொண்டு சென்றுதான் அறுவை செய்கிறார்கள். எனவே, கூடலூரிலேயே ஒரு மர அறுவை மில் ஏற்படுத்துவதன்மூலம் வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், நல்ல லாபம் கிடைக்கும். எனவே அதை ஏற்படுத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அரசுத் துறை மூலமாக அறுவை மில் வைக்கப்படவில்லை. ஆங்காங்கு தனியார்கள் வைத்திருக்கிறார்கள். தனியார் துறையில் வைக்க யாராவது முன்வந்தால் அதற்கு உதவி செய்வதுபற்றி கவனிக்கப்படும்.

### காடிகுளத்திலுள்ள வனத்துறை நிலங்கள்

* 544 வினா.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த காடிகுளம் வன இலாகாவில் 1,000 ஏக்கர் நிலங்கள் ரொம்பவும் பயனற்று இருப்பதால் அந்த நிலங்களை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த காடிகுளம் காட்டுப் பகுதியின் மொத்தப் பரப்பு 1,239.03 ஏக்கர். இதில் சுமார் 725 ஏக்கர் நிலத்தை, இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் மறுவாழ்வுக்காக, வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள

நிலத்தையும் காதளம்பட்டி கிராமத்தில் உள்ள 49 ஏக்கர் காட்டு நிலத்தையும் சேர்த்து மொத்தம் 553 ஏக்கர் நிலத்தை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க 4—12—1971-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அதேமாதிரியாக பாஞ்சாலங் குறிச்சிக்குப் பக்கத்திலே ஒரு இடத்தை இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதி களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும் அவர்கள் சாகுபடி செய்யாமலே விட்டுவிட்டுச் சென்றார்கள் என்று அறிகிறேன். இப்பொழுது ஒதுக்கப்பட்ட இடம் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? இன்னும் கொடுக்கப்படாமல் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சமீபத்திலே ஆணை பிறப்பிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேலு: தமிழகத்திலே பயனற்று இருக்கும் வன இலாகா நிலங்கள் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. எப்படிப் பதில் சொல்ல முடியும்?

### அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

* 545 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பஸ் ஊழியர்களுக்கு எத்தனை பர்சென்ட் போனஸ் அளிக்கப்படு கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1970 அக்டோபரிலிருந்து 1971 செப்டம்பர் வரையிலான ஊதியக் கொடை (Bonus) ஆண்டில் அரசுப் போக்குவரத்துத் துறையின் பல்வேறு வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்கட்கு, அவர்களது ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தில் 100 சதவிதம் முதல் 250 சத விதம் வரை ஊக்க ஊதியக் கொடை வழங்கப்பட்டது. இந்த ஊக்க ஊதியக் கொடை சிலருக்கு ரூ. 500 என்னும் வரம்புக்கும் வேறு சிலருக்கு ரூ. 625 என்னும் வரம்புக்கும் உட்பட்டு வழங்கப்பட்டது. இதைத் தவிர, தொழிலா ளர்கள் அனைவருக்கும் அவர்கள் ஊதியக் கொடை ஆண்டில் ஒழுங்காக வருகை தந்தமைக்காக, திங்களுக்கு ரூ. 7.50 விதம் ஓர் ஆண்டிற்கு அல்லது பழைய சம்பள விதத்தில் அரைத் திங்கள் அடிப்படைச் சம்பளம் இவற்றில் எது அதிகமோ அத்தொகை ஊதியக் கொடையாக வழங்கப்பட்டது.



திரு. கே. எ. வகாப்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அரசுப் போக்குவரத்துத் துறை லாபத்தில் நடைபெறுவதாக. ஆகவே இந்த போனஸ் விகிதத்தையும் அந்த லாபத்தி லிருந்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த போனஸ் என்பது லாபத்தின் அடிப்படையிலே வழங்கப்படுகிற பணம் அல்ல. ஊக்க போனஸ் 1964-ஆம் ஆண்டிலிருந்து ஒரு முறையில் வழங்கிக்கொண்டு வந்தார்கள். இருந்தாலும் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களுக்கு பூரிப்பு ஊதியம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள், அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு என்றும் இல்லாத அளவுக்கு அரசு ஒரு மாத போனஸ் என்ற அளவிற்கு நஷ்டம் வந்தாலும் ஏறத்தாழ 34 லட்சம ரூபாய் வழங்கியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, டிரான்ஸ்போர்ட்டிலே தொழி லாளர்கள் ஒரு வருஷத்தில் எவ்வளவு அதிகபட்ச போனஸ் பெறுகிறார்கள்? அரசு ஊழியர்களுக்கு ஒரு நாள் தினப்படி எவ்வளவு? இரவிலே வெளியூர் களிலே தங்குபவர்களுக்கு எவ்வளவு படி?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் கேட்கின்ற கேள்வி பேட்டாவைப் பற்றியது. அதைப் பற்றித் தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்பொழுது இருக்கும் ஊக்க போனஸ் திட்டத்தை மாற்றி வசூல் அடிப்படையில் ஊக்கம் அளிக்க வேண்டு மென்று தொழிற்சங்கங்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளனவா? அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்பொழுதுள்ள ஊக்க போனஸ் முறை மாற்றப்பட வேண்டுமென்று தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகிறார்கள். அதை அரசாங்கமும் ஆராய்ந்து வரு கிறது. பேருந்துகள் ஓடும் தடவைகள், ஓடிய மொத்த மைல், கூடும் வசூல் ஆகியவற்றின் அடிப்படையில் வசூல் போனஸ், செயற்பாடு போனஸ் (perfor- mance bonus) அரசாங்க போக்குவரத்து இலாக்காவில் அமலாக் கப்பட வேண்டுமென்று அரசாங்கம் தீவிர நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. தமிழ்ப் புத்தாண்டிலிருந்து அரசாங்கப் போக்குவரத்துத் தொழி லாளர்களுக்கு இந்த மாறுதலான முறை அமலுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கேள்வி போனஸ் பற்றியது. ஆகவே, வருடாந்திர போனஸ் குறைந்தபட்சம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்ற முறையில் ஒரு மாத போனஸ் கொடுக்க அரசுக்கு யோசனை உண்டா? . அதே நேரத்தில் அட்டென்டென்ஸ் போனஸ் என்பதில், வருஷத்திலே 19 விடுமுறை நாட்கள் என்று வைத்திருக்கிறார்களே, அந்த விடுமுறையை எடுத்திருந்தாலும் அட்டென்டென்ஸ் போனஸிற்குக் கழிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது அரசாங்கப் போக்குவரத்துத் துறையாக இருப்பதால் போனஸ் சட்டம் அமலாக்கப்படுவதில்லை. ஆனால் தொழிலாளர்களுக்கு எப்படியும் ஒரு போனஸ் தர வேண்டுமென்ற அடிப்படையில் இந்த ஊக்க போனஸ் திட்டத்தை 1964-ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்தி வருகிறார்கள். குறைந்தபட்சம் ஒருமாத சம்பளமாவது போனஸாகத் தர வேண்டுமென்று தொழிலாளர்கள் பரவலாக நாடு முழுவதும் கோரிக்கைகள் விடுத்ததன் காரணத்தையொட்டி நம்முடைய இலாக்கா நஷ்டத்திலேயிருந்தாலும் ஒரு மாதச் சம்பளத்தைப் போனஸாகத் தர வேண்டுமென்ற அடிப்படையில் தரப்பட்டிருக்கிறது. அட்டென்டென்ஸ் போனஸைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு மாதத்தில் ஓர்க்கிங் டேஸ், வேலைக்கு வரும் நாட்களில் 3 நாட்கள் வராமலிருந்தாலும்கூட 7½ ரூபாய் என்று நாம் இப்பொழுது தருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த வசூல் அடிப்படையில் ஊக்க போனஸ் கொடுப்பது என்ற முறை அரசாங்கத் துறையிலே இனிமேலாவது இன்ட்ரொட்யூஸ் படுத்தப்படுமா? இது பல்லவா போக்குவரத்து கார்ப்பரேஷன், பாண்டியா போக்குவரத்து கார்ப்பரேஷன்களில் அமலாக்கப்படுமா அல்லது அமலாக்கப்படுவதற்கு ஆலோசனையாவது எடுத்துக் கூறப்படுமா? லாபத்திலே ஒரு பங்கு தொழிலாளர்களுக்கு கொடுப்பது என்று இருந்தால் அவர்கள் இந்தத் துறையில் அதிக அக்கறை காட்டி லாபம் சம்பாதிக்க முற்படுவார்கள். எனவே அதைச் செய்யுமா? இந்த அட்டென்டென்ஸ் போனஸ் 7½ ரூபாயாக இருப்பதை 10 ரூபாயாக உயர்த்த முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில்தான் அரசாங்கம் முடிவெடுக்க முடியும். இதர போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் இதை முன் மாதிரியாக வைத்து அந்தக் கழகங்களின் நிர்வாகிகள் இதற்குப் பின்னால் இந்த முடிவுகளை மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இன்னொன்று கூறினார்கள். அட்டென்டென்ஸ் போனஸ் என்பது 1 மாதத்திலே 3 நாட்கள்





வராவிட்டால் 7½ ரூபாய் என்றும், 2 நாட்கள் வராவிட்டால் 10 ரூபாய் என்றும், எல்லா நாட்களும் ஒரு மாதத்திலே வந்தால் 12 ரூபாய் என்றும் இந்த அளவிற்கு எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்கு வரவேண்டுமென்ற முறையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இது தொழிலாளர் சங்கத்தின் சம்மதத்தோடுதான் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. லாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டுமென்று சொன்னார்கள். அது முதலாளிகள் நடத்தும் தொழிற்சாலைகளுக்குத்தான் அந்தக் கோரிக்கையை விடுக்க வேண்டுமேதவிர, தொழிலாளர்களே நடத்தும் அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலே இது எழாது.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that these Pallava Corporation and other Corporations, though not directly handled at Government level, still in view of the fact that there is indirect control over these Corporations, and because the Hon. Minister had assured sometime ago that incentives would be given on the basis of collection to conductors, may I know whether the Government have framed any rules and if so what are the details?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஊக்க போனஸ் பற்றிய முழுவிவரங்களும் என்னிடத்தில் தற்போது இல்லை. ஆனால் இதர மாநிலங்களிலுள்ள அரசுத் துறைகளில், குறிப்பாக பம்பாயிலே இதைப்பற்றி ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். நாம் ஓட்டுநர்களுக்கு performance bonus என்றும், கண்டக்டர்களுக்கு collection bonus என்றும் and technical workers-களுக்கு performance bonus என்றும் 3 வகையாக அமல்படுத்தலாம் என்ற வகையில் அரசு ஆராய்கிறது. பல்லவா போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். ஒரு கார்ப்பரேஷன் என்று ஏற்படுத்திவிட்டு அரசாங்கம் அடிக்கடி தலையிடக்கூடாது என்பது குறிப்பாக சுதந்திராக் கட்சியின் கருத்து, ஆகவே அந்த நிர்வாகத்திற்கு autonomy, தனி முழு அதிகாரத்தைக் கொடுத்திருப்பதால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையை அவர்கள் கவனத்திலே கொண்டு அந்தத் திட்டத்தைக் கொண்டுவருவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த அட்டென்டென்ஸ் போனஸ் என்று 12 ரூபாய், 10 ரூபாய், 7½ ரூபாய் என்று கொடுக்கப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே வருடாந்திர அரசாங்க விடுமுறைகளிலெல்லாம் அவர்கள் வேலை செய்யாவிட்டாலும் அதையும் கழித்துக்கொண்டு இந்த அட்டென்டென்ஸ் போனஸ் கொடுக்கப்படுகிறதே, அது மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, the eligibility for bonus is determined each month and the total amount of good attendance payable for the year is paid at the end of the bonus year. அதில் அரசாங்க விடுமுறைகள் கழிக்கப்படுகின்றனவா என்ற விவரம் இல்லை. ஆனால் அவர்கள் ஒரு மாதத்திலே ஒர்க்கிங் டேஸ் முழுவதும் வந்தால் 12 ரூபாய் என்றும் இரண்டு நாட்கள் வரவில்லை என்றால் 10 ரூபாயென்றும், 3 நாட்கள் வரவில்லையென்றால் 7½ ரூபாய் என்றும் இருக்கிறது. அதிக விடுமுறை accumulate ஆக இருந்தால் அதைப் குறைந்தபட்ச போனஸ் சட்டமே வந்திருக்கிறது. வருஷாந்திர வருமானத்தை பணமாகப் பெற்றுக்கொள்ள உத்தாவிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது தனிப்பட்ட தொழிற்சாலைகளிலே லாபம் வந்தால் போனஸ் தருவார்கள், இது அப்படி அல்ல என்று கூறினார்கள். லாபம் வந்தால் போனஸ் தருவது என்பது, வெகுமதி அளிப்பது என்பது அது முன்காலத்திலே இருப்பது. இப்பொழுது குறைந்தபட்ச போனஸ் சட்டமே வந்திருக்கிறது. வருஷாந்திர வருமானத்தை ஈடுகட்டி அளிக்கப்படுவது போனஸ் என்று இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் எல்லாத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 8-1/3 அளவிற்கு குறைந்தபட்ச போனஸை உயர்த்த வேண்டுமென்று கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அந்தக் கொள்கையை அரசாங்கத்தரப்பிலே செயல்படுத்தினால் மற்றவர்களையும் துரிதப்படுத்திச் செய்வதற்கு வழியேற்படும். ஆகவே, இந்தப் போக்குவரத்து அமைப்பில் இந்தக் குறைந்தபட்ச போனஸை அமல்படுத்த முதலிலே முதல் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக பொதுத்துறையிலே நஷ்டத்திலே நடைபெறுவதால்—இந்த ஒரு மாதச் சம்பளம் என்பதை உயர்த்தலாமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள்— ஆனால், இன்றைக்கிருக்கும் சூழ்நிலையில் பொதுத் துறையில் கூட அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாதச் சம்பளம் தர வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றாலும் இதிலே அரசாங்கத் துறை என்பதால் அதை அப்படியே அமல்படுத்தாமல் ஊக்க போனஸ் என்ற முறையில் ஒரு மாதச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஊக்க போனஸ் கொடுக்கா விட்டாலும் Payment ஆவது அதிகப்படுத்த அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா? அப்படி இல்லையென்றால் இனிமேலாவது கொடுக்க ஏற்பாடு செய்யுமா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஊக்க போனஸ் திட்டம் ஒன்றை அரசாங்க இலாக்காவிலே அமல்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டத்தின்படி போனஸ் கொடுக்கப்போனால் தொழிலாளர்களுக்கு போனஸே கிடைக்காது. அதுதான் உண்மை நிலைமை. ஆனால் அரசாங்கத் துறையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸே கொடுக்கக்கூடாது என்பது சரியல்ல என்பதால் அதற்கெல்லாம் விதிவிலக்கு கொடுத்துவிட்டு ad hoc ஆக எந்தக் கண்டிஷன்களையும் பார்க்காமல் கொடுக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அட்டென்டென்ஸ் போனஸ்பற்றி அமைச்சரவர்கள் கூறும்பொழுது ஒர்க்கிங் டேஸ் அத்தனையிலும் வேலை செய்தால் 12 ரூபாய் என்று சொன்னார்கள். It seems to be humanity impossibe to attend all working days. ஆகவே, அதை மனத்திற்கொண்டு 2 நாட்களுக்காவது விதிவிலக்கு கொடுத்துவிட்டு, 2 நாட்கள் வரவில்லையென்றாலும்கூட அவர்களுக்கும் மாக்சிமம் அட்டென்டென் போனஸாக 12 ரூபாயைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக தொழிற்சாலைகளில் ‘ஆப்செண்டிசம்’ அதிகமானால் கெடுதல் வரும் என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் ஒழுங்காக நிறைய பேர் வருகிறார்கள், அப்படி யாரும் வராமல் இல்லை. 3 நாட்கள் வராமலிருந்தால் இப்பொழுது அட்டென்டென்ஸ் போனஸ் 7½ ரூபாய் என்று தருகிறோம். அதுவேகூட கொஞ்சம் அதிகம்தான். ஏனென்றால் போக்குவரத்துத் துறையில் ஆப்செண்டிசம் அதிகமாக இருக்கிறது. ஆகையால் தொழிற்சங்கங்களில் இது பற்றிப் பேசி, முதலிலே 3 நாட்கள் வரவில்லை என்றால் 7½ ரூபாய் என்றிருந்தது, எல்லா நாட்களும் வந்தால் 12 ரூபாய் என்று மாற்றியதே அவர்கள் வரவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான்.

திரு. கா. வேழவேந்தன் : இந்த ஆண்டு போனஸாக ஏறக்குறைய 35 லட்சம் ரூபாய் இந்தத் துறை நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்தாலும் அளிக்கப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் எல்லாம் மகிழ்ந்து இந்த அரசை நன்றியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதுமாதிரி நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கு அதிகமாக வசூல் செய்கின்ற கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் அதே மாதிரி டெக்னிகல் தொழிலாளர்களுக்கும் ஊக்க போனஸாக வருகிற ஏப்ரல் மாதத்தில் தருகின்ற முறை மகிழ்ச்சியைத் தருகிறது. அதை ஒரே நேரத்தில் எல்லாக் கார்ப்பரேஷன் தொழிலாளர்களுக்கும் வழங்க நற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முதலில் அரசாங்கப் போக்குவரத்தில் இதை அமல்படுத்தி அதனுடைய சாதகபாதகங்களைப் பார்க்க வேண்டுமென்று கருதுகிறோம். இதுவரையில் இத்தகைய திட்டம் எதுவும் அமல்படுத்தப்படவில்லை. எப்படி இது நடைமுறையில் இயங்கி வருகிறது என்பதை ஆராய்ந்த பிறகுதான் இதர நிறுவனங்களில் கையாள்வதைப் பற்றிச் சிந்திக்க முடியும். கலெக்ஷன் அடிப்படையில் 'பேட்டா' வை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

**திரு. எம். எ. லத்தீப் :** தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் கொடுக்க வேண்டுமென்பதற்கு தற்போது சட்டம் இருக்கிறது. அத்துடன் ஊக்க போனஸ் கொடுப்பதாகச் சொன்னார்கள். இரண்டும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறதா? அல்லது ஊக்க போனஸ் மட்டும் கொடுக்கிறார்களா? ஊக்க போனஸ் வசூலின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா? ஊக்க போனஸ் கொடுத்த பிறகு வசூல் அதிகமாகியிருக்கிறதா? வசூல் அதிகமாக அதிகமாக போனஸை அதிகமாக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஊக்க போனஸ் என்பது வேறு; போனஸ் சட்டத்தின்படி அளிக்கப்படுவது வேறு. அரசாங்கத் துறையைப் பொறுத்தவரை போனஸ் சட்டத்தின்படி அளிக்கக்கூடிய போனஸ் எதுவும் இடையாது. அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற கார்ப்பரேஷன்களில் போனஸ் சட்டத்தின்படியும் போனஸ் கொடுக்க வேண்டும்; ஊக்க போனசும் கொடுக்க வேண்டும். அரசாங்கத் துறையில் ஊக்க போனஸ் என்ற அடிப்படையில்தான் தரப்படுகிறது. ஏற்கனவே இருக்கின்ற திட்டத்தின்படி செய்கிற வசூலுக்கும் பெறுகிற போனசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தொழில் நுட்பப் பிரிவுகளிலும் வண்டிகள் எந்த அளவுக்கு ஓட்டப்படுகின்றனவோ அந்த அளவுக்குத் தக்கபடி கொடுப்பது என்ற திட்டமே இல்லை. இதனால் நிர்வாகத்திலே நிம்மதி இல்லை. தொழிலாளர்களுக்கும் உற்சாகம் இல்லை.

ஆகையால் இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று எல்லாத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கேட்டு அவர்களோடு கலந்து பேசி அரசாங்கப் போக்குவரத்தில் நிறைவேற்றுவது என்ற அடிப்படை இருக்கிறது. வசூல் அதிகமாக அதிகமாக அவர்களுக்குக் கூடுதல் தொகை கொடுப்பதற்கு நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் அது செயல்படுத்தப்படவில்லை. தமிழ்ப் புத்தாண்டில் அமல்படுத்திய பிறகுதான் அதனுடைய விளைவுகளைப்பற்றிச் சிந்திக்க முடியும்.



**திரு. ரா. ரா. முனுசாமி :** டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் தருவதுபோல் இரவு நேரங்களில் பஸ்ஸை ஓட்டுகின்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் தூங்கி விடுவதால் விபத்து ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் 'தூக்க போனஸ்' தரப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு அபாயமான தகவலை மன்றத்திற்கு அளிக்கிறார்கள். இரவு நேரங்களில் அரசாங்க போக்குவரத்துத் தொழிலாளர்கள் யாரும் தூங்கியதாக எதுவும் கிடையாது. வேண்டுமானால் செல்லுகின்ற பயணிகள் தூங்கியிருப்பார்கள். பயணிகளுக்கு அத்தகைய 'தூக்க போனஸ்' கொடுக்கத் தயாராக இல்லை. தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் கொடுப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

**திரு. எம். சுரேந்திரன் :** இன்சென்டிவ் போனஸ், அட்டென்டென்ஸ் போனஸ் என்பது வேறு வேறானது. நான் கேட்பது ஆன்யுவல் போனஸ் பற்றி, அதற்கான சட்டம் இருக்கிறது. எலக்டிரிசிடி போர்டில், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீசில் ஐந்து சதவீதம் இருந்த வருஷத்தில் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அதே போன்று போக்குவரத்து ஸ்தாபனத்திலும் ஒப்புக்கொண்டிருக்கும் கொள்கைப்படி 8-1/3 சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டும். அந்தக் கொள்கையை அமல்படுத்தும் வகையில் போக்குவரத்து ஸ்தாபனத்திலும் இதைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நான் முன்பே குறிப்பிட்டதுபோல், ஆன்யுவல் போனஸ் ஆக்ட் அரசாங்கத் துறைக்கு அப்ளிகபிள் ஆகாது. ஆகையால் அரசாங்கத் துறையில் ஆன்யுவல் போனஸ் என்ற பிரச்சினையே எழவில்லை. அட்டென்டன்ஸ் போனஸ், ஊக்க போனஸ் என்று மட்டும் வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுவும் ஓரளவு அந்தத் திட்டத்தின்படி கொடுத்தாலும் ஊக்க போனசையும் எப்படி அரசாங்கம் கொள்கை அளவில் ஆன்யுவல் போனசாக ஒரு மாதம் தரவேண்டுமென்பதைப் பற்றியும் வற்புறுத்தி வருகிறோம். அதே அடிப்படையில் ஊக்க போனஸ் என்ற பெயரால் ஒரு மாதத்திற்கு உரிய சம்பளத்தை அவர்களுக்குத் தந்திருக்கிறோம். இது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் சலுகை.

**திரு. எம். தேவராசன் :** அரசாங்கப் பேருந்துகள் திடீரென்று ஓடாமல் நிறுத்தப்படுவதால் ஏற்படும் நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளி?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொதுவாக சமுதாயத்தில் மரியாதையோடு பழகத் தெரியாதவர்கள்தான் இதற்கெல்லாம் பொறுப்பாளிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்ப] வரி விதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,29,99,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



THIRU K. SUPPU : Sir, I move the following cut motion to discuss about the need to develop the Indigenous System of Medicine—

'That the allotment of Rs. 22,29,99,400 under Demand No. 14—Medical be reduced by Rs. 100.'

DR H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to evolve a method by which prompt medical attention is given by senior doctors during all hours of the day and also during Sundays when cases of emergency are brought to hospitals—

'That the allotment of Rs. 22,29,99,400 under Demand No. 14—Medical be reduced by Rs. 100.'

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss about the establishment of a General Hospital for South Madras—

'That the allotment of Rs. 22,29,99,400 under Demand No. 14—Medical be reduced by Rs. 100.'

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,46,60,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் துறையில் பணியாற்றும் அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்களுக்கும் மற்ற அரசுப் பணியாளர்களுக்கும் அளிக்கப்படுகிற தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு, பயணப்படி முதலியவை அளிப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,46,60,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1972 மார்ச் 17

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள எல்லா சுகாதாரத் தொழிலாளர்களையும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்று அறிவித்து நடைமுறையில் கொண்டுவர ஏற்படும் தாமதத்தைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,46,60,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,04,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following cut motion standing in my name—

மதுரையிலுள்ள இராமநாதபுரம், மதுரை ரிசர்வ் போலீஸ் காலனிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கிடைக்க நிரந்தர ஏற்பாடு செய்வதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 45,04,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது விளக்கமான உரைகள் * அச்சடிக்கப்பட்டு இங்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த விளக்கக் கோரிக்கைகளையும், அந்த நூல் வடிவில் வந்துள்ள கருத்துக்களையும் எனது வேண்டுகோளாக சட்டமன்ற நடைமுறை ஏட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான மருத்துவ, பொது சுகாதார மானியக் கோரிக்கைகளை ஒட்டி எங்கள் கட்சி சார்பில் கொடுத்துள்ள வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

* 850–929-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



1972 மார்ச் 17] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

மருத்துவ, சுகாதாரத் துறைகளில் பணியாற்றிக்கொண்டிருக்கும்—இன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகள், தொடர்பு சுகாதார நிலையங்கள், பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற மருத்துவ மனைகள், பெட்டர்னிட்டி சென்டர்கள் இவையெல்லாம் நல்லமுறையில் பணியாற்றி வருகின்றன என்றாலும் கூட அங்கு குறைபாடுகள் பல இருக்கின்றன. நாம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஒருபுறம் அமலாக்கிக்கொண்டு வருகிறோம். மறுபுறம் ஜன நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது. வியாதியஸ்தர்கள் அதிகமாகக் கூடிய அளவிற்கு வியாதிகளும் பரவி வருகின்றன. ஆகவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்டாஃப் தேவை, டாக்டர்கள் தேவை, நர்சஸ் தேவை.

எப்படி கான்ஸ்டபிள்களும், ஹெட் கான்ஸ்டபிள்களும் மணிக்கணக்கில் கால் கடுக்க நின்று பணியாற்றி வருகிறார்களோ அதேபோல்தான் இருக்கிறது இந்த நர்ஸஸின் பணியும், நிலைமையும். ஆகவே அவர்களுக்கு நாம் அதிகப்படியான சலுகைகளைச் செய்யாவிட்டாலும்கூட இன்று அவர்களுக்கு இருந்து வரக்கூடிய சலுகைகளைக் குறைப்பது என்பது நல்லதல்ல.

நேற்று வந்த லெட்டர்ஸ் டு தி எடிட்டர்-ல் எல்லோரும் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நர்ஸஸுக்கு கொடுக்கப்படுகின்ற ration அலவன்ஸ் முப்பது ரூபாயை இப்போது வித்ட்ரா செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதை அதிகப்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை, என்றாலும் ஏற்கனவே இருந்து வரும் ஒரு சலுகையை வாபஸ் வாங்குவது என்பது அரசாங்கத்திற்கும் நல்லதல்ல, நோயாளிகளுக்காகப் பணியாற்றுகிற அந்த செவிலியர்களுக்குச் செய்யக்கூடிய பெரும் குறையுமாகும் என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, லவுத் மதராசில் ஒரு ஜெனரல் ஆஸ்பத்திரி வேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு ஸ்கீம் கூட எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் இருந்தது. அங்கு ஜன நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அங்குள்ள மக்கள் சென்னையில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத்தான் வரவேண்டியிருப்பதால் அங்கு நெருக்கடி அதிகமாகி நல்லமுறையில் மருத்துவ வசதி அளிக்க முடியாத காரணத்தினால் லவுத் மதராஸில் ஒரு ஜெனரல் ஆஸ்பத்திரி அமைக்கவேண்டுமென்று 1964-65-ல் ஒரு திட்டம் தீட்டப்பட்டதே, அது என்னவாயிற்று? அது ஏன் இன்னும் வரவில்லை? அது வரப் போகிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பல மருத்துவ மனைகளில், தலைமை மருத்துவ மனைகளிலும், தாலுகா மருத்துவ மனைகளிலும், பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்

பட்டு வருகிறது. இதற்கென்று மத்திய அரசாங்கம் முழுக்க முழுக்க உதவி செய்கிறது. அதற்காக புனிலெவேல் இரண்டும் கிடைக்கிறது, அவர்கள் ஹெல்ப்பும் இருக்கிறது. அதற்கான வாகனங்கள் உள்ளன, ஸ்டாஃபும் உள்ளது. ஆனால் இன்று நடைமுறையில் என்ன நடக்கிறது என்று பார்த்தால், அரசாங்க ஆணையின் அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் லெவலில் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கக்கூடிய உபாத்தியாயர்களையும், கமிஷனர்களையும், இதில் ஈடுபடச் செய்வதென்றால் இதற்கும் அவர்களுக்கும் எந்த விதத்தில் சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை.

ரூரல் டெவலப்மெண்ட் மானியத்தின்போது பல உறுப்பினர்கள் இதுபற்றி எடுத்துரைத்தார்கள். பிள்ளைகளுக்கு கல்வி அறிவு புகட்டுவது தான் உபாத்தியாயர்களின் வேலையாக இருக்கவேண்டுமே தவிர, குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு அவர்கள் ஆள் பிடிப்பதும், அறுவைச் சிகிச்சைக்கு ஆள்களைக் கொண்டு வருவதும் அவர்களது வேலைகளாக இருக்கக்கூடாது. அறுவைச் சிகிச்சைக்கு ஆள்களைக் கொண்டுவந்தால்தான் உங்கள் வேலை நிரந்தரமாக இருக்கும் என்று பயமுறுத்தல் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். அது ஓரளவிற்கு உண்மையா அல்லது அதிகப்படுத்திச் சொல்கிறார்களா என்றால் அப்படி இருப்பது உண்மை தான். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களை எப்படி இதில் ஈடுபடுத்துவது என்று கேட்கிறேன். அவர்களுக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. அவர்கள் பல வேலைகளைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அறுவை சிகிச்சைக்கு இத்தனை ஆள் கொண்டுவர வேண்டுமென்று ஒரு டார்கட் ஃபிக்ஸ் செய்வது என்றால், ஒரு பத்து பேர்களைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், அந்தப் பத்து பேர்களைக் கொண்டுவருவதற்காக அவர்களுடைய பணத்தை செலவு செய்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற வாகனங்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்று பார்த்தால் அவை உள்ளபடியே எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு அவை பயன்படுகிறதா இல்லையா என்பதைக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவர்கள் ஆள்களைப் பிடித்துக் கொண்டு வருவதைப் பார்த்தால் 65 வயதுக்கு மேற்பட்டவர்களை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறார்கள். டாக்டர்கள் அவர்களது ரெஜிஸ்டரில் நம்பர் ஆஃப் ஸ்டெரிலைஸேஷன், வாசக்டமி, டுபெக்டமி கேஸஸ் எவ்வளவு என்று எழுதி வைக்கிறார்கள். கமிஷனர்கள், ஆசிரியர்கள் இவர்கள் அரசு ஆணையின் அடிப்படையில், கலெக்டரின் ஆணை அடிப்படையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக ஆள்களைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது என்ற நிலை இருக்கிறது. இதில் க்வாண்டிட்டி வேண்டுமா, க்வாலிட்டி எலிஜிபிலிட்டி வேண்டுமா அல்லது ஒரு ஸ்கீம் இம்ப்ளிமெண்ட்



சொந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமா என்பதைக் கவனிக்கவேண்டும். 65 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கூட கொண்டு வருவது என்பதுதான் நேரடியாகப் பார்த்த ஒன்று. அவர்கள் வருகிறார்கள் என்றால், அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்திற்காக வருகிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் ஓரளவு பணம் கிடைக்கும் என்பதால் அதற்காகத்தான் அவர்கள் வருகிறார்கள். ஆசிரியர்கள் நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் வருகிறார்கள்.

ஆகவே, கமிஷனர்கள், ஆசிரியர்கள், பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள், இவர்களிடம் இந்தப் பொறுப்பைக் கொடுக்காமல் பப்ளிக் ஹெல்த் டிப்பார்மெண்டில் இருப்பவர்கள், ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் இருப்பவர்கள்தான் இதைச் செய்யவேண்டும். அவர்கள் வேறு என்ன வேலை செய்கிறார்கள்? அதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் பேட்டவாய்த்தலைக்கும் திருச்சிக்கும் 15 மைல் இருக்கின்றது. இடையில் எந்தவித மருத்துவ வசதியுமில்லை. அங்குள்ள ஏழை மக்களுக்கு அவசரமாக மருத்துவ வசதி வேண்டுமென்றால் 15 மைல் சென்று திருச்சிக்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே பேட்டைவாய்த்தலைக்கும் திருச்சிக்கும் இடையில் கம்பரசன்பேட்டையில் அங்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பெண் ஆசிரியர்கள் கூட இதிலே ஈடுபட்டு, அவர்கள் இந்த அறுவைச் சிகிச்சைக்கு ஆள் கொண்டு வரவில்லையென்றால், வேலையை விட்டு நிறுத்தி விடுகிறார்கள் என்ற பயத்தைக் கிளப்பிவிட்டிருப்பதாகப் பத்திரிக்கைகளில் பார்த்தேன். (குறுக்கீடு.) நான் நேராகப் போய் இருக்கிறபோது சில ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். நேராகக் கேட்ட விவரத்தைத்தான் இங்கே கூறுகிறேன். உண்மையாக இருந்தாலும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இந்த பெண் ஆசிரியர்கள் சென்று கஷ்டப்படுவதை நிறுத்த வேண்டும். அந்தப் பொறுப்பை அவர்களிடத்தில் கொடுக்கவேண்டாம். அவர்கள் சொல்வது உண்மையா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பதைவிட, அந்தப் பொறுப்பை ஆசிரியர்களிடத்தில் தயவுசெய்து கொடுக்க வேண்டாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும், மருத்துவ மனைகளில் இருக்கும் பெட்டுகள் பல; எங்களுடைய கட்சியின் சார்பிலே திரு. ஜேம்ஸ் அவர்கள் அரசு மருத்துவ மனைகளில் தரமான மருந்துகள் கொடுப்பதைப்பற்றி வெட்டுத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். தரமான மருந்து என்று கூறும்போது, தரமற்ற மருந்துகள்

கொடுக்கப்படுவதாகக் கூறவில்லை. சில எஸன்ஷியல், மெடிசின்ஸ், இம்பார்டெண்ட் லைஃப் சேவிங் மெடிசின்ஸ் உடனடியாக அவசியம் வைக்க வேண்டும். ஓரளவாவது வைக்கவேண்டும். சென்ற ஆண்டு கூட பி. எஸ். லோகநாதன் அவர்களுக்கு அவசரமாகக் கொடுப்பதற்கு சரியான மருத்துவ வசதி இல்லாததால் நீலகிரி ஹாஸ்பிடலில் அவர்கள் மரணம் அடைந்ததாக கூறியிருக்கிறார்கள். லைப் சேவிங் மெடிசின்ஸ் கொஞ்சமாவது வைப்பதற்காக, ஓரளவு நிதி அதற்காக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் மருத்துவ மனைகள் செயல்படுவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறது என்று இந்த மானியக் கோரிக்கையின் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன், மிகவும் மகிழ்ச்சி.

ஸ்கூல் ஹெல்த் ப்ரோகிராம். இந்த ஸ்கூல் ஹெல்த் ப்ரோகிராம்தான் எல்லாப் ப்ரோக்கிராமைவிட அத்தியாவசியமானது. மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய நாட்டு மக்கள் நல்ல சுகாதார நிலையில் அவர்கள் வளரவேண்டுமென்பதற்காகத்தான் அந்த ஸ்கூல் ஹெல்த் ப்ரோக்கிராம். ஸ்டான்லி ஹாஸ்பிட்டலைச் சுற்றியிருக்கும் பகுதிகளில் 1970-ல் எடுக்கப்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? அவர்கள் ரிப்போர்ட்டை அரசுக்கு உடனடியாக அனுப்புவதற்கு ஆவன செய்யவேண்டும்.

வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் போர்டு ஏற்படுத்தியிருப்பதைப்பற்றி மகிழ்ச்சி. மக்களுக்கு குடிதண்ணீர் மிகவும் அவசியம். பல நோய்கள் குடிதண்ணீர் மூலம் பரவாமல் இருப்பதற்கு மிகவும் அத்தியாவசியமானது இந்த குடிநீர்—சாக்கடை திட்டம். அதற்காகத் தனிப்பட்ட ஒருபோர்டு அமைத்து இருப்பதற்கு மகிழ்ச்சி. இந்த போர்டிலே எப்படி பணியாற்றுகிறார்கள், எப்படி செயல்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அந்த ஸ்கீமை ஒரு போஸ்ட் ப்ரோக்கிராமாகச் செய்கிறார்களா, அல்லது பிளாண்டு ப்ரோகிராமாகச் செய்கிறார்களா என்பதை அமைச்சரவர்கள் பதில் கூறும்போது கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே குடி தண்ணீர் சப்ளைக்காக கொடுக்கப்படும் குழாய்கள் பாலிதின் பைப்ஸ் என்று சொல்கிறார்கள். சிலயிடங்களில் பாலிதின் பைப்ஸ் போடுவதற்காக கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த பாலிதின் பைப்சின் ஆயுட் காலம் என்ன? எத்தனை ஆண்டுகளுக்கு வரும்? இப்போது நாம் நல்ல பைப்ஸ் போட்டும், தண்ணீர் வருவதில்லை என்று சொல்கிறார்கள்.



இந்த பாலிதின் பைப்ஸ்க்கு ஸ்டாண்டர்ட் இருக்கிறதா? அதனுடைய ஸ்பெசிபிகேஷன் என்ன? அது நம்முடைய கிளைமெட்டிற்கு ஒத்து வருமா? நமக்கு உகந்ததா என்பதைப் பார்த்து செயல்படவேண்டும். அதிலே வீணாகப் பணம் விரயம் செய்யாமல் முன்பே மக்களுக்கு பயன்படும் வகையில், அரசுக்கு அடிக்கடி ரிப்பேர் செலவு ஆகாமல் அதைச் செய்யவேண்டும். அடிக்கடி ரிப்பேர் ஆகும் நிலைமையேற்படுமானால், அவை உகந்தது அல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, டவுன் பிளானிங்பற்றிக் கூற விரும்புகிறேன். இந்த டவுன் பிளானிங்கில் பல கிளாஸஸ் இருக்கின்றன. பல நகரங்களில் முனிசிபாலிடி மூலமாகவும், பஞ்சாயத்துக்கள் மூலமாகவும் வீடுகள் கட்டுவதற்கு, மாடி வீடு கட்டுவதற்கு லைசென்சு கொடுத்து விடுகிறார்கள். லைசென்சு பெற்றவர்கள் அதைக் கட்டி முடித்தப் பிறகு, அரசுக்குத் தகவல் தெரிந்து அதன் பிறகு, அவர்கள் கட்டிய வீட்டில் இது சரியில்லை; ஜன்னல் வைக்கவேண்டும், அது இது என்று சொல்லி இடித்துக் கட்டச்சொல்கிறார்கள். அப்படி இடிக்கச் சொல்வதற்குப் பதிலாக சில கிளாசுகளிலிருந்து எக்சம்ஷன் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் செய்து பார் என்று சொல்வார்கள். அந்தக் கஷ்டம் அவர்களுக்குத்தான் தெரியும். ஹோட்டல்ஸுக்கும் அப்படித்தான் செய்கிறார்கள். பிளான் கொடுத்ததும் அப்ரூவ் செய்துவிடுகிறார்கள். அவர்கள் கட்டிய பிறகு சிலவற்றை இடிக்கச்சொல்லி கட்டச்சொல்கிறார்கள். பெரிய பெரிய பணம் படைத்த ஹோட்டல் கட்டுகிறவர்களுக்குப் பரவாயில்லை. ஆனால் சிறிய ஹோட்டல் வைத்திருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். சில கிளாஸஸிலிருந்து எக்சம்ஷன் செய்யவேண்டுமென்று முன்பு அரசின் ஆராய்ச்சியில் கூட இருந்தது. அதை தயவுசெய்து அமைச்சரவர்கள் ஆராய்ந்து பார்த்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எம்.பி.பி.எஸ். கேண்டிடேட்ஸ் செலக்ஷன் வரப்போகிறது. மருத்துவக் கல்லூரிக்கும், மற்ற கல்லூரிகளுக்கும் வரப்போகிறது. அப்படி வருகிற நேரத்தில், பி.எஸ்சி. கேண்டிடேட்ஸுக்கு ஓர் அளவு சீட் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது 100 சீட்ஸ் பி.எஸ்சி. ஸ்டூடன்ட்ஸ் என்று இருக்கிறது. அதிலே வரக்கூடியவர்கள் எப்படி மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து செலக்ஷன் செய்வது உண்டு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்தத் துறையாக இருந்தாலும் பல மாணவர்கள் போட்டியிட இடமிருக்கிறபோது, தகுதி உள்ள மாணவர்களுக்கு முதலிடம் அளிப்பது தான் உலக முழுவதிலும் உள்ள முறையாகும். அவர்கள் சொல்வது போல் அதிகப்படியான மார்க்குகள் வாங்கி பி. எஸ்சி.-யில் தேறிய

வர்களுக்கு எல்லாம் கொடுக்கவேண்டுமென்றால், 100 இடமல்ல, பல ஆயிரம் இடங்கள் தேவை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அமைச்சர் அவர்கள் எதைக் கூறினார்களோ அதைத்தான் கூற வந்தேன். அதற்குள் அவசரப்பட்டு விட்டார்கள். பி.எஸ்ஸிக்கு என்று 100 சீட் ரிசர்வ் செய்து இருக்கிறோம். அந்த 100 சீட்டுக்கு எத்தனையோ ஆயிரம் விண்ணப்பங்கள் வருகின்றன, அதிலே பி.எஸ்ஸி. பர்ஸ்ட் கிளாஸ், நெக்ஸ்ட் ஹை செகண்ட் கிளாஸ் வாங்கியிருக்கக் கூடியவர்களை எடுக்கவேண்டும். அதிலே பிசிக்ஸ் என்றும், சயன்ஸ் என்றும், கெமிஸ்டிரி, பயாலஜி பி.எஸ்ஸி-யில் பாஸ் செய்த மாணவர்கள் வருகிறார்கள். அவர்களை reservation பிரகாரம் தேர்ந்தெடுக்க வேண்டும். பர்ஸ்ட் கிளாஸ் என்று இருந்தால் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன், அம்மையார் அவர்கள் இதே நலத்துறை அமைச்சராக இருந்தவர்கள். அமைச்சராக இருந்த நேரத்தில் அப்படி பி.எஸ்ஸி-யில் பர்ஸ்ட் கிளாசில் பாஸ் செய்தவர்களுக்குத்தான் எம்.பி.பி.எஸ்-ல் இடம் கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: நான் அமைச்சராக இருந்த நேரத்தில் பர்ஸ்ட் கிளாஸுக்கு மாத்திரம் கொடுக்கவில்லை. அதிலே யார் யார் பர்ஸ்ட் கிளாஸ் இல்லாதவர்கள், தகுதிவாய்ந்தவர்கள் என்று இருந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அப்போது கனம் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தவர்களுடைய சிபாரிசின் பேரில் தகுதி பெற்ற மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. தரத்தைப் பார்த்து அல்ல, மார்க்கைப் பார்த்து அல்ல. ஆகவே, இந்த 100 சீட்டை பர்ஸ்ட் கிளாஸ் ஹை செகண்ட் கிளாஸ் என்று மார்க் வாங்கியவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. P.U.C. மார்க்கை பார்த்து கொடுப்பதாக கேள்வி. P.U.C. B.Sc. Candidate களுக்கும். அது சரியல்ல என்று கூற விரும்புகிறேன். மற்றொன்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதும் அம்மாதிரி சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறீர்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் அப்படி சொல்லக்கூட போகவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர்கள் பல பேர் சிபாரிசுகளுக்கு வருகிறார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் தெரியும்.





திருமதி த. ந. அனந்தநாயகி: நிர்வாக சம்பந்தமான சிபாரிசுக்குத்தான் வருவோம். மெடிக்கல் காலேஜ் ஸீட் பற்றி சிபாரிசுக்கு வருவதில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது சம்பந்தமாகக் கூட சிபாரிசு அம்மையார் பெயரிலே வந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: நேர்மையான முறையில் தான் நியாயமான சிபாரிசுக்கு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர்களுக்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்பது கிடையாது. பொதுவாக பலரும் சிபாரிசு செய்வார்கள். நியாயம் பார்த்து அமைச்சர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிபாரிசு என்ற உடனே யாரும் பயந்துவிட வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அமைச்சர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. சிபாரிசு என்றாலே, ஊழல், தவறானது என்று தவறுதலாக கருதிவிடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்க்கலாம். உறுப்பினர்கள் அமைச்சர்களோடு தொடர்பு கொள்ளவேண்டியதுதான், நியாயத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியதுதான், அமைச்சர்களும் பரிசீலனை பண்ணவேண்டியது தான். உறுப்பினர்கள் சொல்கிறார்களே என்ற காரணத்திற்காக, தகுதி இல்லாதவர்களுக்கு மெடிக்கல் காலேஜில் இடம் கொடுத்துவிட முடியாது. எல்லாவற்றிற்கும் விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அம்மையார் அவர்களும் இப்படி ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு சிபாரிசு செய்யலாமா, செய்யக்கூடாதா என்று விவாதிப்பது என்பது இல்லை. யாரும் அமைச்சரிடம் போகாமலேயே பயந்துவிடவேண்டியதில்லை. அமைச்சர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. உறுப்பினர்கள் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே பரிந்துரை செய்வார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அடுத்தபடியாக மருத்துவமனையில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் ஐந்து நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சீக்கிரம் முடித்துவிடுகிறேன். நடுவிலே ஏற்பட்ட இண்டாப்ஷன்களுக்கு எனக்கு சில நிமிஷ நேரம் காம்பென்ஸேட் பண்ணவேண்டும். ஐ வில் ஃபினிஷ் இன் பைவ் மினிட்ஸ். மருத்துவ மனைகளில் இருக்கக்கூடிய பெட்டுகளில் மூட்டைப் பூச்சி அதிகமாக இருக்கிறது.

இது ஒரு சிறிய கம்ப்ளேண்டு தான். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பராமரிப்பதற்கு அதிகப்படியான ஆட்கள் தேவை. அப்படி பராமரிப்பதற்கு தனியாக ஸ்டாஃப் போட்டு நல்ல முறையில் இந்த படுக்கைகளை சுத்தமாக வைக்கவேண்டும்.

ஹார்ட் பேஷண்டுகளை பெட்டிலேயே இருக்க வேண்டும். அசையக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் பெட்டில் மூட்டைப் பூச்சி இருந்தால் எப்படி அசையாமல் இருக்க முடியும்? மூட்டைப்பூச்சி கடிக்கிறது. அசையாமல் எப்படி இருக்க முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே, பெட்களை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு மருத்துவமனைகளிலே சானிடரி இன்ஸ்பெடர்கள் போடவேண்டும். நல்லமுறையில் மருத்துவ மனைகள் பராமரிப்பு செய்யப்படவேண்டும். பராமரிப்புக்குச் செலவு பண்ணக்கூடிய பணத்தை நல்ல முறையிலே செய்யவேண்டும். பராமரிப்பதற்கு என்று தனிப்பட்ட முறையில் ஒரு விங் தேவை, அதை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

ஏழைக் குழந்தைகளுக்கு ரொட்டி, பால் கொடுக்கிறார்கள். குழந்தைகளுக்கு பால் கொடுப்பதைப் பொறுத்து அதிலே 11 விதிகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அந்த விதிமுறைகள்படி ஒரு இடத்தில், குறிப்பிட்ட இடத்தில் குடிசைப் பகுதியாக இருந்தாலும் கூட ஒரு மேஜை நாற்காலி போட்டு, விசிடர்ஸ் புக் போட்டு, பிள்ளைகளுக்கு பால், ரொட்டி கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யவேண்டும். அப்படியில்லை என்றால் கார்டு வைத்துக்கொண்டிருப்பவர்கள், பெற்றோர்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போய் ரொட்டி, பால் வாங்கி அந்த இடத்திலேயே கொடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால் ரொட்டி, பால் வாங்க முடியாமல் போகிறது. அந்தக் கார்டுக்குப் பின்புறம் டாக்டர் ரிபோர்ட்டு என்று ஒன்று இருக்கிறது. அதிலே குழந்தைகள் நுட்ரிஷியல் புட் கொடுப்பதால் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள், அவர்கள் ஹைட் என்ன வெயிட் என்ன என்று இவைகளெல்லாம் டாக்டர் பரிசோதித்து எழுவதற்கு ஒரு column அந்த அட்டையில் வைத்திருக்கிறார்கள். அந்தக் column -ஐ பூர்த்தி செய்வதே இல்லை. அதற்கு பல இன்ஸ்டன்ஸ் சுட்டிக்காட்ட முடியும். டாக்டர் என்ன செய்கிறார்? இதற்கெல்லாம் மருத்துவர் ஒருவரை நியமிக்கவில்லையா? அந்த மருத்துவர் இதற்கு பொறுப்பு இல்லையா?

1970-ம் ஆண்டிலிருந்து குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதுபற்றி ஆவன செய்யவேண்டும். அதற்காக ஏற்கனவே ஒரு மருத்துவர் இருப்பாரேயானால் அந்தப் பணியை அவர் நல்ல முறையில் செய்வதற்கு,



கண்டிப்பாகக் கடமையைச் செய்வதற்கு, அரசு கட்டளை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பொது சுகாதார மருத்துவ நிதி ஒதுக்கீடு பற்றி கருத்துரை வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் பல சிரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் தாய்குலத்தைச் சேர்ந்தவரானபடியினாலே, தாய்மை உணர்வோடு சொல்ல வேண்டியதை எடுத்துச் சொன்னார்கள் என்பதற்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கூறப்பட்ட குறைகளெல்லாம் அவர்கள் காலத்திலே இருந்ததைவிட குறைந்து இருக்கிறது என்பதை அம்மையார் அவர்களுடைய பேச்சின் மூலமாக நிச்சயம் நாமெல்லாம் அறிந்துகொள்வதற்குள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நாடு அரசானது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், சுகாதார பொது நல வைத்தியத் துறைக்கு ஒதுக்கீடு செய்த தொகையை விட அதிகமாக, ரூ. 16 கோடி புள்ளி அளவிலே நிதி ஒதுக்கீடு செய்து, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும், வைத்தியக் கல்லூரிக்கும், பொது சுகாதாரத் துறைக்கும் ஒதுக்கீடு இருந்ததைவிட, தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு அவற்றை இரட்டிப்பாக்கித் தந்திருக்கிற ஒன்று, மக்களுடைய நல்வாழ்வுத் துறையிலே இந்த அரசுக்கு இருக்கிற நல்ல எண்ணத்தையும், மக்களுடைய நல்வாழ்வு பேணப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு இருக்கிற தாகத்தையும் நமக்கெல்லாம் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

இவ்வளவு சிறப்பான தமிழ் நாட்டில் புதிய புதிய மருத்துவமனைகளைத் தோற்றுவிக்கவும், மக்களுடைய தேவைக்காக நல்ல மருத்துவ விடுதிகளை விரிவுபடுத்துவதற்கும், சுகாதாரத்தைப் பேணிக்காப்பதற்கும், அதைப் போலவே புதிய புதிய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி, அதன் மூலம் கல்லூரிகளில்

மருத்துவர்களை அதிகமாக உற்பத்தி செய்யவும், தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்காக நான் முதன்முதலில் இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த அமைச்சர் அவர்களையும், முதல்வர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே நிதி ஒதுக்கீடு செய்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற எந்த அரசாங்கமாக இருந்தாலும், பொதுவாக மக்கள் அடிப்படையிலே நிதி ஒதுக்கீட்டை தமிழகத்தில் இருக்கிற அனைத்து மாவட்டங்களுக்கும் குறிப்பாக அனைத்து வட்டங்களுக்கும் செய்திடல் வேண்டும். என்ற எனது பணிவான கருத்தையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது. என்னுடைய கச்சியம் பதியில் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவமனையின் ஆயுட்காலம், 150 வருடங்களுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட மருத்துவமனை. பெருமைமிக்க மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி ஒரு படிவம் பணிந்து தரப்பட்டிருக்கிறது. அதை அவர்களுக்கு திரும்பவும் நினைவு படுத்த விழைகிறேன்.

150 ஆண்டுகளுக்கு முன்பு 50 பேர்கள் படுப்பதற்கு கட்டப்பட்ட மருத்துவமனை, 150 ஆண்டுகளுக்குப் பிறகு அப்பொழுது இயற்றிவைக்கப்பட்ட அந்தச் சமையல் அறை எப்படி இருந்ததோ, அது அப்படியே எந்த அளவுக்கும் சீர்திருத்தப் படாமல் இருக்கிறது என்ற பொதுவான குற்றச்சாட்டு காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே சொல்லப்பட்டு வந்தது. அதன் பிறகு, நமது கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, இன்றையதினம் அது நிறைவு செய்கின்ற வடிவத்தைப் பெற்றிருக்கிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக காஞ்சி தொகுதி மக்கள் சார்பிலே இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்ள பணிக்கப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, அந்த மருத்துவமனைக்கு தினந்தோறும் வருகிற புற நோயாளிகள் நின்று மருத்துவ வசதி பெறுவதற்குரிய வாய்ப்பை அங்கே ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

நாளொன்றுக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் இத்தலைமை மருத்துவ மனைக்கு வருகின்றார்கள். ஆனால் இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கையோ 227 தான். இப்படி வரக்கூடிய 2,000 நோயாளிகளில் ஒரு 500 பேரையாவது படுக்கையில் வைத்து சிகிச்சை செய்யவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் வசதிக்குறைவு காரணமாக அவர்களையெல்லாம் அனுப்பிவிட வேண்டியிருக்கிறது,



இம்மாவட்ட மருத்துவ மனையில், காஞ்சிபுரத்து மக்கள் மட்டுமின்றி நகரைச் சுற்றியுள்ள வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த செய்யாறு, வந்தவாசி போன்ற இடங்களிலிருந்தும் மக்கள் இங்கே சிகிச்சைக்கு என்று வருகிறார்கள். ஆனால் வந்துவிட்டு, இப்படிப்பட்ட அடிப்படை வசதிக்குறைவுகள் காரணமாக பலரும் ஏமாற்றத்துடன், தக்க மருத்துவ சிகிச்சை பெறாமல் திரும்புகின்றார்கள்.

நான் ஒரு மருத்துவ அதிகாரியிடம் கேட்டு அறிந்தேன், 2,000 நோயாளிகள் தினமும் ஒரு மருத்துவ மனைக்கு சிகிச்சை பெற வருகிறார்கள் என்றால் இருக்க வேண்டிய டாக்டர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 30 என்று. ஆனால் இந்த மருத்துவ மனையில் உள்ள மருத்துவ அதிகாரிகள் 17 பேர்தான். இவர்களிலும் பலர் விடுப்பு போன்ற பல்வேறு காரணங்களினால் போய்விடுவதால் ஏறத்தாழ 12 டாக்டர்களே இருந்து பணியாற்றும் பரிதாப நிலை அங்கே இருக்கிறது.

அடுத்து, கண் நோய் பிரிவுக்கு என்று நிரந்தரமான ஒரு பிரிவினை அங்கே ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் காது நோய்க்கு என்றும் தனியாக ஒரு மருத்துவரை நியமித்து வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். இதுபோன்று சில குறிப்பிட்ட நோய்களுக்கான பிரிவுகள் இப்போது வாரத்தில் இரண்டு நாட்கள்தான் செயல்படுகின்றன, மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால்.

ஆனால் காஞ்சிபுரத்திலுள்ள மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும்போது இப்படிப்பட்ட நிலை நீடிப்பது முறைதானா என்று எண்ணிப்பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். காஞ்சிமாநகரின் மக்கள் தொகை இரண்டு இலட்சத்தையும் தாண்டிவிட்டது. இத்துடன் நகரோடு இணைந்துள்ள சுற்றுப்புறத்திலுள்ள மக்கள் தொகையினையும் கணக்கிலெடுத்துக்கொண்டால், மொத்தம் மூன்று இலட்சம் மக்களுக்கு இம்மருத்துவ மனை சிகிச்சையளிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்ற வசதிகளும் வாய்ப்புகளும் இம்மருத்துவ மனையில் இருக்கின்றதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்கு என்றால் சென்னை நகரில் உள்ள பொது மருத்துவ மனைக்கு வரவேண்டியநிலை. ஆனால் எவ்வளவு பேர் இப்படி சென்னைக்கு வரமுடியும்? கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள், ஏழை விவசாயிகள், நடுத்தரக் குடும்பத்தினைச் சார்ந்தவர்கள், அன்றாடங்காய்ச்சிகள் எல்லாம் சென்னை போன்ற நகருக்கு வந்து சிகிச்சை பெறுவது என்பது சாத்தியமா என்று சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். வசதி

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1972 மார்ச் 17

படைத்த பெரியவர்கள் வேண்டுமானால் தனியார் நடத்தும் 'நர்ஸிங் ஹோம்' சென்று சிகிச்சை பெறலாம். மற்றவர்கள் நிலையினை எண்ணிப்பார்க்கவேண்டும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற உடனடியாகத் திட்டங்கள் தீட்டப் பட்டு செயலாற்றப்படவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அதுமட்டுமின்றி இன்றுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை அதாவது உள்ள 337 படுக்கைகள் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துவிடுவதாக யாரும் சொல்ல முடியாது. எனவே குறைந்தபட்சம் மேலும் 100 படுக்கைகளையாவது ஏற்படுத் தித் தருவதற்கான திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் நிறைவு செய்யப்படாத சில திட்டங்கள் பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூறி, என்னுடைய உரையினை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலத்திற்கு முன்பு 'இரட்டை அறுவை சிகிச்சைப்' பகுதிக்கு என்று ரூ. 90 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அது மட்டுமின்றி வெளியேயிருந்து வந்து சிகிச்சைப் பெறுகின்றவர்களுக்கு என்று ஒரு புதிய புறநோயப் பகுதி அமைப்பிற்கு என்று ஏறத்தாழ ரூ. 7,50,000 மதிப்பிடப் பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று கோரப் பட்டது. இப்போது பார்க்கிறேன், அது ரூ. 3,00,000-க்குக் குறைக்கப் பட்டிருப்பதை. இது மீண்டும் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காஞ்சி நகரத்தின் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் என்று இல்லை, சமுதா யத்தில் முன்னேற்றம் காணவேண்டும் என்று ஆர்வம் கொண்டவர்களில் ஒரு வனாக இதைச் சொல்ல விரும்புகிறேன், மன நோய்க்காரர்களுடைய நலன்களைப் பேணிக்காக்கும் துறைக்கு என்று ரூ. 52,000-ல் ஒரு கட்டடம் வேண்டும் என்று எஸ்டிமேட் போடப்பட்டு அதுவும் இப்போது கிடப்பில் கிடக்கிறது. இது நிறைவேற்றப்படுவது மிகவும் அவசியமாகும்.

தொழுநோய்க்கு சிகிச்சைப் பெறுவதற்கும் தடுப்பு நிலையத்திற்குமாக ரூ. 2,80,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதுவும் செயல்படுத்தப் படாமல் இருக்கிறது.

மேலும் சவப்பரிசோதனைக்கு என்று குளிர் அறை ஒன்று இருத்தல் அவசிய மாகும். இன்றைக்கு காஞ்சிபுரத்தின் தலைமை மருத்துவ மனையில் நாளொன் றுக்கு ஐந்து அல்லது ஆறு அல்லது சில சமயங்களில் பத்து என்ற நிலைமையில் கூட பிணங்கள் வருகின்றன. இவற்றைப் பரிசோதிப்பதற்கு என்று



1972 மார்ச் 17] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

குளிர் அறை மிகமிக அவசியமாகும். ஏறத்தாழ ரூ. 19,800 இதற்குச் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இதுவும் உடனடியாக நிறைவேற்றித் தரப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோன்று மருத்துவ அதிகாரிகளுடைய கார்களை நிறுத்திவைப்பதற்கு என்று ரூ. 35,000 செலவில் ஒரு கட்டடம் கட்டுவதாக இருந்த திட்டமும் இப்போது கிடப்பில் கிடக்கிறது. இதுவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுமார் 109 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சமையல் அறை இன்னும் மாற்றியமைக்கப்படாமல் அப்படியே இருந்துகொண்டு இருப்பது மிகவும் வருந் தக்கதாகும். புதியதொரு சமையல் அறையினைக் கட்டுவது என்று திட்டம் தீட்டப்பெற்று, அதற்குச் சுமார் ரூ. 92,000 பிடிக்கும் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருந்தும் அது இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. இதை உடன டியாக நிறைவு படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் பெண்மருத்துவ அதிகாரியின் குடியிருப்பு மிகவும் மோசமான நிலை யில் இருக்கிறது. அவர்களுக்கு நவீன முறையில் வசதிகளுடன் கூடியதொரு புதிய குடியிருப்பு கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்.

அது மட்டுமின்றி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர் களே, அரசாங்கத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பல சலுகைகள் உண்டு, ஆனால் அரசோடு இணைந்துள்ள எங்களுக்கு உள்ள ஒரு சில சலுகைகளையும் செங்கற்பட்டு மாவட்ட மருத்துவ மனையில் பெற முடியாது. தனியறை, விசேஷ அறை, அதாவது ஸ்பெஷல் வார்டு என்று சொல்லப்படும் இந்தமாதிரி அறைகள் இம்மருத்துவ மனையில் கிடையாது. இந்த நிலை வேறு எந்த மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் நிச்சயமாக இருக்காது. இப்படி இருப்பதாக வேறு எந்த மாவட்டத்திலும் சொல்லப்படவில்லை. இந்தக் குறைபாடு நீண்ட நெடுங்காலமாக இருந்துவரு கின்றது. எனவே, தனியறை, ஸ்பெஷல் வார்டு உடனடியாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரிய வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற என் பணிவான கோரிக்கையினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றித்தருவதன் மூலம் காஞ்சிவாழ் மக்களும் மாவட்டத்திலுள்ள மக்களும் பெரும் பலன்களை அடைவர் என்று சொல்லிக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இது முக்கிய மான மானியம் என்ற காரணத்தினால் ஒரு சில கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 17

பொதுச் சுகாதார மருத்துவ வசதிகள் எல்லாம் எந்த அளவிற்கு மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றதோ அந்த அளவிற்குத்தான் நாட்டில் நோய் சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு வழிபிறக்கும் என்பதை சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் நாம். அந்த வகையில் எடுத்துக்கொள்ளும்போது, முதலில் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் கொடுத்ததுபோல, இன்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் நெருக்கடி தீரவேண்டுமானால் தென் சென்னையில் அதே அளவில் ஒரு பெரிய மருத்துவ மனையினைக் கட்டத் துவங்கவேண்டும்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், சாதாரணமாக ஜெனரல் ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தால் அங்கங்கே கீழே பாயில் படுத்திருப்பவர்களையும் கட்டிலுக்கு அடியில் படுக்கைகளைப் போட்டு நோயாளிகளைப் படுக்கவைத்திருப்பதையும் பார்த்தால், உண்மையிலே அவர்களுக்கு ஏதாவது நோய் தீருகிறதா, நலன்கள் ஏற்படுகிறதா என்று எண்ணிப்பார்க்க முடியவில்லை. இந்த நிலையையெல்லாம் பார்த்துத்தான் வசதி உள்ளவர்கள் எல்லாம் நர்ஸிங் ஹோமிற்குப் போய் விடுகின்றார்கள். ஆனால் வசதியற்றவர்கள், பணம் இல்லாதவர்கள் இப்படி தொல்லைப்படுகின்றார்கள் என்றால், அதற்கு உடனடியாக, பணம் அதிகமாகச் செலவழிந்தாலும் பரவாயில்லையென்று மற்றொரு மருத்துவமனைக் கட்டப்படவேண்டும். இதுபோன்று மாவட்டங்களிலுள்ள தலைமை மருத்துவ நிலையங்களிலும் இங்கே சென்னையில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட வசதிகள் அனைத்தும் மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களுக்கும் விஸ்திரிக்கப்படவேண்டும்.

'கார்டியாலஜி', 'ந்யூராலஜி', 'நெஃப்ராலஜி' போன்ற பல முக்கியமான டிபார்ட்மெண்டுகள் அங்கேயெல்லாம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதுபோன்று குழந்தைகளுக்கென்று 'சைல்டு விங்' ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் தேவையான சாதனங்களுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட பல வசதிகளை மாவட்ட மருத்துவ மனைகளில் ஏற்படுத்திவிட்டால் இங்கே உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் அதிகமாக நெருக்கடி ஏற்படாது. இது மட்டுமின்றி, இங்கே ஆஸ்பத்திரிக்குப் போனால், மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு டிஸ்பென்ஸரிக்குப் போனால், 'மருந்தை வெளியே வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று சாதாரணமாகச் சொல்லிவிடுகின்றார்கள். மருந்து கொடுப்பதேயில்லை. வாங்குவதற்குச் சக்தியற்றவர்கள் வேறு எங்கே போவார்கள் மருந்துக்கு?



1972 மார்ச் 17]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மருந்தகத்திற்கு வரும் 2,000 பேரில் யாராவது இரண்டு பேருக்கான வகையான மருந்து இல்லை என்ற காரணத்தினால் வெளியேபோய் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னாலும் மீதமுள்ள 1,998 பேருக்கு மருந்து அங்கேயே வழங்கப்படுகின்றது. வரக்கூடிய 2,000 பேரில் 2,000 பேருக்கும் மருந்துகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிக்கோளோடு செயல்படுவதால்தான் மக்கள் அங்கே நிறைய வருகின்றார்கள், இல்லையென்றால் மக்கள் வருவார்களா என்று அம்மையார் அவர்களைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மருந்து கொடுக்கிறார்கள். ஆனால் நல்ல மருந்து கொடுக்காமல் வெறும் தண்ணீர் மருந்தைக் கொடுக்கிறார்கள். அதனால் வசதி படைத்தவர்கள் பிரைவேட் டாக்டர்களைத் தேடிப் போய்விடுகிறார்கள். வசதியே இல்லாதவர்கள்தான் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள். நல்ல மருந்து கொடுக்கப்பட்டால் இப்போது இரண்டாயிரம் பேர் போவது நாலாயிரம் போராக உயருமே? எனவே, ஏழை மக்களுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போகக் கூடியவர்களுக்கு நல்ல மருந்தாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மெடிக்கல் காலேஜுகளில் சீட் ஒதுக்குவது பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கேரளாவில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த மாணவர்கள் எழுத்துப் பரிட்சையில் வாங்கிய மார்க்கையும், நேர்முகத் தேர்வில் வாங்கிய மார்க்கையும் தனித்தனியாகப் போட்டு, மொத்தம் இவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று நோட்டீஸ் போர்டிலே போட்டு, அந்த மார்க்கின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கின்றார்கள். அந்த முறையை இங்கும் பின்பற்றினால் சிறப்பாக இருக்கும். ஆனால் இங்கே நீதி மன்றத்தில் ரிட் போட்டால்தான் மார்க்கை பார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. மெடிக்கல் காலேஜுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிற்பட்ட மாணவர்கள் இத்தனைபேர் என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் சில மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு இடமே கிடைக்காமல் போய்விடுகிறது.

மெடிக்கல் காலேஜ் அட்மிஷனுக்காக, நான் ஒரு மாணவனுக்கு சிபாரிசு செய்யப்போனதாகக் குறிப்பிட்டார்கள். நான் எந்த மாணவருக்காகவும் தனிப்பட்ட முறையில் சிபாரிசு செய்யப் போகவில்லை; சிபாரிசு செய்வதனால் நல்ல மார்க் வாங்கியிருக்கும் தகுதியுடைய மாணவர் பாதிக்கப்படக்கூடாது

என்பதையே நான் சுட்டிக் காட்டினேன். யார் சிபாரிசு செய்தாலும் அதனால் தகுதி படைத்த மாணவர் பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் என் நோக்கமே தவிர வேறல்ல.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்தச் சிபாரிசாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமல்ல. அதை அங்கத்தினர்கள் கொண்டு வந்தாலும் சரி, அல்லது பிறர் கொண்டு வந்தாலும் சரி அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமல்ல. தகுதியின் அடிப்படையில் தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் மாணவர்களைச் சேர்க்கின்ற போது மாவட்ட அடிப்படையில் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். மாவட்ட அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டிலே கூட தீர்ப்பு வழங்கியிருக்கின்றார்கள். எனவே, பரவலான முறையில்தான் தேர்ந்தெடுக்க முடியும். அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞராக இருப்பதால் அவர்களுக்கும் இது தெரியும் என்று நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பிற்பட்ட மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக இடம் ஒதுக்குவதில் ஒன்றும் தவறு இல்லை. பிற்பட்ட மாவட்டங்களான இராமநாதபுரத்திற்கு இவ்வளவு, திருநெல்வேலிக்கு இவ்வளவு, மதுரைக்கு இவ்வளவு என்று ஒதுக்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞராக இருந்தும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மீறும்படி சொல்லுகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டில் பாக்வர்டு கம்யூனிட்டி, ஷெட்யூல்ட் கம்யூனிட்டி என்று மாவட்ட வாரியாகப் பிரித்து இடம் ஒதுக்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இதை மீறி மாவட்ட வாரியாகப் பட்டியல் போடவேண்டும் என்பது, இந்த மன்றம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மதிக்கவில்லை என்ற சர்ச்சை ஏற்படுவதற்கு வழியுண்டாக்குவதாகும். எனவேதான் தேர்வுக் குழுவினர் மாணவர்களைப் பரவலாக மாநிலம் முழுவதற்குமாகத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சுப்ரீம் கோர்ட் சொன்னதையெல்லாம் சரியாகக் கடைப்பிடிப்பது போல் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். மாவட்ட வாரியாகக் கொடுக்கக்கூடாது என்று கான்ஸ்டிட்யூஷனில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இருந்தாலும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மீறுகிற வகையில், வெளிப்படையாக சொல்ல வேண்டாம். தேர்வுக் குழுவிடம் சொல்லலாமே.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திரும்பத் திரும்ப இந்த மன்றத்திலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை மீறுகிற வகையில் கனம் அங்கத்தினர் பேசுகின்றார்கள். அவர்கள் ஒரு வழக்கறிஞராக இருப்பதால் இது அவர்களுக்குத்



தெரியாததல்ல. பிற்பட்ட மாணவர்களுக்கு என்று மாவட்ட வாரியாக இடம் ஒதுக்குவது என்பது முடியாத செயல். இருப்பினும் அங்கத்தினர் குறிப் பிட்ட இனங்களுக்குக் கொடுக்க வேண்டிய அளவுக்கு அதிகமாகவே இடம் கொடுக்கப்பட்டிருப்பதை பட்டியலைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு மாணவன் மூன்று முறை சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய்வந்தது எனக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுப்ரீம் கோர்ட் அந்த மாணவனுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படிக் கட்டாயமாக இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்வதற்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது. அவர்கள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய இலக்கணப் படிதான் தீர்ப்பு வழங்க முடியும். அந்த முறையில் அந்த மாணவனுக்கு இடம் ஒதுக்குவது பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருந் தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சுப்ரீம் கோர்ட்டில் பரிசீலிக்க வேண்டு மென்று சொன்னபோது பரிசீலிக்காமல் இருந்துவிட்டு, இப்போது அதற்கு மதிப்பளித்து பரிசீலித்து ஆச்சரியமாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தமாதிரியான சர்ச்சைகள் எழுந்து, கோர்ட்டிலே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றபோது, அரசாங்கத்தில் இருக்கின்ற அதிகாரிகள் அதற்கேற்ற வகையில் பணிபுரிய வேண்டும். கோர்ட்டிலே சொல்கின்ற கருத்தினை ஏற்று, அமல் நடத்த வேண்டுமேயன்றி, அதை தவிர்க்கக்கூடிய வகையில் பரிசீலனை செய்யக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எப்படி இருந்தாலும், நாம் வேறு முறைகளைக் கையாளலாம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை, அதன் கருத்தினை ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தின் தீர்ப்பையே மதித்து நடக்கிறது. ஒரு மாணவனுக்கு இடம் கிடைக்காததால், ரிட் போட்டதால், அதை பரிசீலிக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. அதை ஏற்று பரிசீலனை செய்து பார்த்ததில், மற்ற மாணவர்களுக்குள்ள திறமை இல்லாததால் மீண்டும் தேர்வு செய்யப்படவில்லை. 5 பேர், 10 பேரோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அந்த மாணவருடைய திறமை குறைவாக இருந்தது. ஆனால் 1,110 பேரோடு

சேர்த்துப் பார்க்கும்போது, அந்த மாணவரும் தகுதி பெற்றவராக இருந்ததால் தேர்வு செய்யப்பட்டார். எனவே, தேர்வில், அதிகாரிகளோ, குழுவோ நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் இல்லை என்பதை காங்கிரஸ் கட்சி அங்கத்தினரும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மாணவர்கள் வாங்கிய மார்க்குகளை அட்டவணை தயாரித்து எல்லோருக்கும் தெரியும்படி போட்டுவிட்டால் இந்த மாதிரி தப்பு அபிப்பிராயங்கள் ஏற்பட வழி இருக்காது. யாரும் குறை சொல்லவும் மாட்டார்கள்.

அடுத்தபடியாக, சென்னையில் இருக்கின்ற பொது மருத்துவமனையில் இருக்கின்ற நெஃப்ராலஜி பிரிவு—கிட்னி பிரிவு—இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். நான் இதற்கு முன்னாலேயே கூட சொல்லியிருக்கிறேன். அங்கிருக்கின்ற வசதிகள் போதாது என்று. அது இன்னும் கவனிக்கப்படவில்லை. அதேமாதிரி சென்னை பொதுமருத்துவ மனையிலுள்ள பிஸியாலஜி, கார்டியாலஜி பிரிவுகளை அப்கிரேடு செய்யவேண்டும். அங்கு படித்து வருகின்ற மாணவர்கள் பலர் ஒரு டாக்டர் சரியாக கிளாஸ் எடுப்பதில்லை என்று எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர் அங்கே அரசியல் செய்துகொண்டிருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த டாக்டர் யார் என்பதைச் சொல்லி விடுங்கள். அப்போதுதானே அமைச்சர் பதில் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்த டாக்டர் பெயரைச் சொல்லி விடுகிறேன். டாக்டர் பத்மநாபன் என்பவர்தான் அவர்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினருக்கு எழுதியிருக்கின்ற கடிதம் கையெழுத்திட்டு எழுதப்பட்டதா அல்லது மொட்டைக் கடிதமா என்பது தெரியவில்லை. அப்படி தவறு நடப்பதாக அங்கத்தினருக்கு தகவல் வந்திருந்தால், அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்திருந்தால் விசாரிக்க முடியும். அங்கத்தினர் குறிப்பிடுகின்ற டாக்டர் எம். எஸ்ஸி. மட்டுமல்ல பி.எச்டி-யும் படித்திருக்கிறார். சுமார் 20, 25 வருடங்களாக அந்தத் துறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். அவரைப்பற்றிய தவறான கருத்துக்கள் எதுவும் இதுவரை அரசாங்கத்திற்கு வரவில்லை. அங்கத்தினருக்கு தகவல் வந்திருந்தால், அமைச்சருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ அதுபற்றி தெரிவித்திருந்தால், விசாரித்து பதில் கூறியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு, இப்படிக் குறை கூறுவது பொருத்தமுடையதாகாது.





திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகவே அதைப்பற்றி இங்கே குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி அமைச்சரின், கவனத்திற்கு கொண்டுவந்தாகிவிட்டதே. அதனால் அடுத்த விஷயத்தைப் பற்றி பேசுங்கள்

திருமதி த. ந. அனந்தநாயகி: அடுத்தபடியாக இன்றைக்கு பல கல்லூரிகளில் போதுமான அளவு ஸ்டாஃப் இருக்கிறார்களா என்றால் இல்லை. போதுமான அளவைவிட மிகவும் குறைவாகவே இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, கல்லூரிகளை நல்ல முறையில் நடத்துவதற்கு, மாணவர்களுக்கு நல்ல முறையில் பல்வகைத் துறைகளைப் பற்றியும் போதிப்பதற்கு வேண்டிய ஸ்டாஃப் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஆஸ்பத்திரிகளில் நர்சஸ் மிகவும் குறைவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 9 பேர் பார்க்கக்கூடிய வேலையை ஒரு நர்ஸ் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் அவர்கள் அவஸ்தைப் பட்டிருக்கும் நோயாளிகளிடம் எரிந்து விழுகிறார்கள். எனவே நோயாளிகளை நல்ல முறையில் கவனித்துக்கொள்வதற்கு, கனிவுடனும் பரிவுடனும் கவனித்துக் கொள்வதற்கு அதிகமான நர்சுகளை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு ஹோமியோபதி கல்லூரியை சென்னையிலே உடனடியாக ஏற்படுத்த வேண்டும். குற்றாலத்தில் ஹோமியோபதி மருத்துவ மனை ஒன்றை ஆரம்பித்தார்கள். ஆனால் அங்கே அதிகமாக நோயாளிகள் போவதில்லை. சென்னையில் அந்த மருத்துவ மனையை வைத்தால் அதிகமான நோயாளிகள் சென்று சிகிச்சை பெற வாய்ப்பு ஏற்படும். இப்போது கீழ்ப்பாக்கத்திற்கு அருகில் அரும்பாக்கத்தில் அமைந்துள்ள சித்த வைத்தியக் கல்லூரியை விரிவு படுத்த முடியுமா என்று ஆராய்ச்சி செய்து வருவதாகத் தெரிகிறது.

அந்தத் துறையில் நமது அமைச்சர் அவர்கள் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். இயல்பிலேயே அவர்களுக்கு ஹோமியோபதி, ஆயுர்வேதம், சித்த வைத்தியம் ஆகியவற்றில் அக்கறை இருக்கிற காரணத்தினால் இன்னும் அதிகமாகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விளம்பரத்துறையில்—இன்னும் ட்ரிப்பிள் வாக்சினேஷன், வைட்டமின் ஏ டெபிஷியன்ஸி ஆகியவற்றைப்பற்றி—அதனால் குழந்தைகள் எந்த எந்த முறையில் பாதுகாக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி மக்களுக்கு படம் எடுத்துக் காட்டலாம். ட்ரிப்பிள் வாக்சினேஷன் மூலமாக எப்படி போலியோ வராமல் தடுக்கலாம் என்பதுபற்றியும் காட்டவேண்டும். இப்போது அடிக்கல் நாட்டுவிழா, மாலைபோட்டுக் கொள்ளும் விழா எல்லாம் படமாக்கப் படுகிறது. இப்படி பிலிம் சுருளையும், பணத்தையும் வீணடிக்காமல் எஜுகேடிவ் துறைகளில் படம் எடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக நல்ல வேலையாக ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள முன்வந்ததைப் பாராட்டுகிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றை நடத்தப் பணமும் இல்லை—அங்கே மருந்துகளும் இல்லை—டாக்டர்களும் இல்லை. இந்த நிலையில் அவர்களே அவற்றை நடத்துவதும் நல்லதல்ல.

அடுத்து, பொதுச்சுகாதாரம் மிகமிக முக்கியமானது. போன வருஷம் அந்தத் துறையில் அலாட் பண்ணினதைக் கூடச் செலவழிக்கவில்லை என்கிற போது மிக மிக வருந்தவேண்டியதாக இருக்கிறது. தொத்துநோய்கள் குறைந்து விட்டதா? . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காபிடல் எக்ஸ்பெண்டிசரையும், நடைமுறைச் செலவினங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒருவேளை குழப்பம் அடைந்தார்களோ என்னவோ? திட்டவேலை எது குறைக்கப்பட்டது என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: A sum of twelve crores were allotted for 1971-72, but only Rs. 11 crores had been spent. Why? People demand so many schemes for public health. Why are we saving the allotment?
இப்படி மிச்சப்படுத்தி உபரி காட்டுவதில் என்ன பயன் இருக்கிறது? நகரசபைகளில் சாக்கடை வசதி கிடையாது சென்னை எக்ஸ்டென்ஷன்ஸ் பகுதிகளில் எந்தவிதமான வசதியும் கிடையாது. காலையில்தான் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தைப் பற்றி நானும் டாக்டர் ஹாண்டே அவர்களும் கேட்டோம். தமிழ் நாட்டில் மட்டும் வருடத்தில் 600 திருவிழாக்கள் நடக்கின்றன பில்கிரிம் சென்டர்களை எடுத்துக்கொண்டால். இது போன்ற திருவிழாக்காலங்களில் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு விட்டார்களா?



At least pilgrim centres should have priority in the matter of provision of protected water supply. What are we doing?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நகராட்சி மன்றங்களில், உள்ளாட்சி மன்றங்களில் நடைபெற வேண்டிய திட்டங்களை அவரவர்களே நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமே தவிர அரசு திருவிழாக் காலங்களில் மட்டுமே தற்காலிகமாகத்தான் அந்த ஏற்பாடுகளைச் செய்யும். அரசாங்கமே அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவது என்பது முடியாத காரியம். அவர்கள் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முன்வந்தால் அரசாங்கமும் தன் பங்கு உதவியை மானியமாக வழங்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்கெங்கே யாத்திரிகர்கள் வருகிறார்களோ அங்கெல்லாம் பொதுச் சுகாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கமே தான் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அந்த இடத்தில் இருந்துதானே மற்ற இடங்களுக்கும் நோய் பரவுகிறது. ஆகவே, அரசாங்கம் பொதுச் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து க்ஷேத்திரங்களிலாவது உடனடியாக பொதுச் சுகாதாரத்தைக் காப்பாற்றும் திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னையில் மணலியில் இருந்து இரவு நேரங்களில் ஏதோ ரப்பரைக் கொளுத்துகிற நாற்றம் காற்றுவாடையில் வீசுகிறது. அதைக் கார்ப்பரேஷன் கவனிக்கவேண்டும். வடசென்னை ஏழைகள் வாழ்கின்ற பகுதி. சாக்கடைத் தண்ணீரை அங்கே கொண்டுபோய் சமுத்திரத்தில் விடுகிறார்கள். ஒரு மைல் நகரப்பகுதிகளில் நாற்றம் தாங்க முடியவில்லை. அதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து மலேரியா, நரம்புச் சிலந்தி போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த சில ஊழியர்களை நியமித்து 2 வருஷமாக வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் நிலை இனி என்ன, தெருவில் சுற்றவிட்டுவிடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையில் ஏதாவது செய்யவேண்டும்.

அடுத்து எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர் அதிகாரிகளுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கக் கூடாது. ரிடையரான பிறகு எதற்காகக் கொடுக்க வேண்டும். (மாண்புமிகு திரு. க. அன்பழகன்:— யாருக்குக் கொடுக்கப்பட்டது?) * * * D.M.E.

[1972 மார்ச் 17

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவ கல்வித்துறை இயக்குநர் பதவியை ஓராண்டுக்காலம் நீட்டித்துக்கொடுத்திருப்பது பற்றிச் சொன்னார்கள். முழுநேர அந்தப் பணிக்குத் தகுதியுள்ளவர்கள் யாரும் முன்வருவதில்லை. அரசாங்கம் முறையாக நிர்வாகம் நடத்துவது முக்கியமே தவிர— ஒருவர் பதவியை நீட்டிக்கக் கூடாது என்பதை முக்கியமாகக் கருதுவதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏன் வரமாட்டார்கள்? நீங்கள் உங்களுக்கு வேண்டியவர்களுக்கு ரிட்டயர் ஆன பிறகு நீட்டிப்புக்கொடுத்தால் யார் வருவார்கள்? இப்படி உயர்ந்த அதிகாரிகளுக்கு பதவி எக்ஸ்டென்ஷன் விருப்பு வெறுப்பின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அதை வன்மையாகக் கண்டித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நலத்துறை அமைச்சர் அவர்கள் 1972-73-ஆம் ஆண்டுக்காக பேரவையின் முன் வைத்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்களும், ஏழை எளியவர்களும் இதுபோன்ற மருத்துவ வசதியைப் பெற்று—நாட்டில் நோயற்ற நல்ல சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நல்ல முயற்சிகளை எல்லாம் இந்த நல்ல நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மக்கள் நல்வாழ்வுத்துறை மக்கள் நலத்தைப் பேணுவதற்காக என்ன என்ன வாய்ப்பு வசதிகளை உருவாக்கியிருக்கிறது — அந்த இலக்கா அலுவலர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தர எந்த வகையில் செயல்பட்டு வருகிறது என்பதை வரவு-செலவுத் திட்டத்தில் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

அடித்தளத்தில் உருவாகிற குழந்தைகளின் பிணி காத்தலும், அவர்களுக்கு ஊட்ட சத்தைக் கொடுத்தலும் அரசாங்கத்தின் கடமை என்பதை நாகரிக சமுதாயத்தில் நாம் நன்றாக உணர்ந்து இருக்கிறோம்.

அதுபோலவே நோய்வந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து மருந்து வழங்குவதும் முக்கியம். அந்த அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1972 மார்ச் 17] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

1966-67-இல் மக்கள் நல்வாழ்வுத்துறைக்காக ஒதுக்கியது 16.75 கோடிதான். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆன பிறகும் இன்றைக்கு நமது மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருக்கிற நேரத்திலும் 1971-72-இல் இத்துறைக்காக ஒதுக்கப்பட்டது 33.38 கோடி என்பதை இந்த மாமன்றமும், நாடும் நன்றாக அறியும்.

அதேபோல்தான் 1972-73-ல் 34.69 கோடி ரூபாயை மக்கள் நலத் துறைக்காக இந்த அரசாங்கம் செலவிட்டிருப்பதை இந்த மன்றமும் அறியும், நாட்டு மக்களும் வரவேற்று அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த நாட்டின் அடித்தளமாக விளங்குவது கிராமம் என்பதை நாம் அத்தனை பேரும் மறந்துவிடவில்லை. கிராமப் பகுதிகளில் எந்த அளவிற்கு மருத்துவச் சுகாதாரம் பெருகுகிறதோ அந்த அளவிற்கு சமுதாய முன்னேற்றம் இருக்கும், நாட்டின் முன்னேற்றம் இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை அறிந்துதான் கழக அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தவும், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நல்ல மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கவும், நல்ல கட்டிட வசதிகள், மற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்களை அமர்த்தவும் நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த இருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல் மருத்துவத் துறையில் திறமையுள்ளவர்கள், தேர்ச்சிபெற்றவர்கள், அறிவு பெற்றவர்கள் அத்தனை பேரையும் கிராமப்பகுதிகளுக்கு அனுப்பி, அங்கேயுள்ள மக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை அளிப்பதில் நம்முடைய அரசாங்கம் நல்ல கடமையைஆற்றி வருகின்றதைப் பாராட்டுகிறேன். தொண்டு புரியக்கூடிய செவிலியர்களுக்கும், மருந்து கலக்கும் பணியாளர்களுக்கும் நல்ல பயிற்சி அளிப்பதற்காக அரசாங்கம் முன் வரவேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மருத்துவத் துறையில் படிக்கின்ற மாணவர்களுக்கு நல்ல அறிவு, ஆற்றல் புகட்டவும், நல்ல ஆலோசனைகளை வழங்கி, தேர்ச்சியுள்ள டாக்டர்களாக ஆக்குவதற்காக தமிழகத்தைப் பொறுத்தவரையில் உயர் மருத்துவ பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அதிகம் ஏற்படுத்துவதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். படித்து வருகின்ற மாணவர்கள் ஆற்றலுள்ளவர்களாக, அனுபவம் நிரம்பப் பெற்றவர்களாக இருந்தால் தான் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் எவ்வளவுதான் ஆற்றல் பெற்றவர்களாக இருந்தாலும், [illegible] தான் திறமையுள்ள மருத்துவர்களாக இருந்தாலும் நல்ல [illegible] ஆராய்ச்சித் துறை இயங்கினால்தான், நோய்களின் தன்மைகளையும், [illegible]

போக்குவதற்கான வழிமுறைகளையும் தொடர்ந்து கண்டுபிடிக்க முடியும். ஆகவே, அரசு மருத்துவ ஆராய்ச்சித்துறையிலே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை.)

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மருந்து கலக்குபவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட்டும், செவிலியர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட்டும், பி.எஸ்.சி. பட்டப் படிப்பை உருவாக்குவதற்கும் நல்ல முயற்சிகள் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். நம்முடைய கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான் ஆக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம்.

அறிவியல் சோதனைக் கூடங்களை ஏற்படுத்துவதற்கும், ஆம்புலன்ஸ் வண்டிகளை வாங்குவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆம்புலன்ஸ் வண்டிகளை அளிக்கின்ற நேரத்தில் அதற்குக் கட்டணம் வாங்குகிற நிலைமை இப்போது இருந்து வருகிறது. ஏழை எளிய மக்கள்தான் மருத்துவ மனைகளிலுள்ள ஆம்புலன்ஸ் வண்டிகளை உபயோகிக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் நோயினால் வாடும்போதும் ஆம்புலன்ஸ் வண்டியின் உதவியை நாடுகிறார்கள். அதேபோல் குடும்பத்தில் உள்ள நோயாளி மருத்துவ மனைகளில் இறந்துபோன நேரத்திலும் இறந்துபோனவரை வீட்டிற்கு எடுத்துச் செல்லவும் ஆம்புலன்ஸ் வண்டியைப் பயன்படுத்துகிறார்கள். ஏழை எளிய மக்களின் உறவினர் நோயால் வாடும்போதும், இறந்துபோன நேரத்திலும், ஆம்புலன்ஸ் வண்டியை உபயோகப்படுத்தியதற்காக நாம் அவர்களிடம் காசு கேட்பது, அவர்கள் உள்ளத்தில் ஒரு மாசு கற்பிப்பதுபோல் இருக்கிறது. ஆகவே, ஆம்புலன்ஸ் வண்டிக்கான கட்டணத்தை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பெரிய மருத்துவமனைகளில் நீராவிச் சலவைச் சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள மருந்தகங்களை ஏற்று நடத்த வரவு-செலவுத் திட்டத்திலும் இந்த மானியக் கோரிக்கையிலும் நல்ல வசதிவாய்ப்புக்களை அரசு உருவாக்கியிருப்பதற்குப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் கிருஷ்ணராயபுரத்தில் 1946-ம் ஆண்டிலிருந்து ஒரு மருந்தகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே கட்டட வசதி இல்லையென்பதை நான் நான்கு ஆண்டுகளாக இங்கே எடுத்து



வைத்த பிறகுதான் நம்முடைய அரசாங்கம் என்னுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு, அங்கே ஒரு மருந்தக கட்டிடமும், வேறு சில கட்டிட வசதிகளும் செய்து தருவதற்காக 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கம் செய்திருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை. கட்டிடம் எழுப்பப்படாமல் இருக்கிறது. முதலில் இடம் கிடைக்கவில்லை யென்ற பிரச்சினை காரணமாக இத்தனை காலம் தள்ளிப் போடப்பட்டது. பல பிரச்சினைகளுக்கிடையே 5 ஏக்கர் நிலம் தருவதற்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிறார். இப்போது அந்த இடத்திற்குப் போக்குவரத்து வசதி இல்லையென்று சொல்லி, தட்டிக் கழிக்கப்படுகிறது. இது குறித்து அங்கே அரசியல் பிரச்சினை உருவாகாமல், இருக்க மருந்தகத்தை உடனடியாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய அரசாங்கம் ஓமியோபதி மருத்துவ முறைக்கும், நாட்டு மருத்துவ முறைக்கும் நல்ல உற்சாகத்தை ஊட்டுவதை வரவேற்கிறேன். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மருத்துவத் துறையில் நல்ல அக்கறையும், ஆர்வத்தையும் காட்டி வருவது பாராட்டுதற்குரியது. 1969-ல் 5,150 பேர்களுக்கு ஒரு மருத்துவர் என்கிற நிலை மாறி தற்போது 4,440 பேருக்கு ஒரு மருத்துவர் என்கிற நிலையை உருவாக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், மருத்துவக் கல்லூரி இல்லாத மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவோர் 8 நோயாளிகளுக்கு 1 நர்ஸ் என்கிற நிலையை மாற்றி, 3 நோயாளி களுக்கு ஒரு நர்ஸ் என்ற நிலையை உருவாக்கவும், வழிவகை செய்யப் பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளில் 15 நோயாளிகளைக் கவனிக்க ஒரு நர்ஸ் என்று இருந்தது. அரசாங்கம் 5 நோயாளிகளைக் கவனிக்க 1 நர்ஸ் என்ற நிலைமையை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திருமதி அனந்தநாயகி அவர்கள், இந்த அரசாங்கம் ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் குடும்ப நலத் திட்டத்திற்காகப் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு தான் இந்தப் பணி நடைபெறுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 20 ஆண்டுக் காலத்தில் எத்தனை ஆசிரியர்களும், எத்தனை ஆசிரியை களும் இதுபோன்ற குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்த வரலாற்றை எடுத்துப் புரட்டினால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், எங்கள் ஆட்சி இருந்தபொழுது ஆசிரியர்களை குடும்ப நலத் திட்டத்திற்கு, அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு, ஆளைப் பிடித்துக்கொண்டு வர வேண்டும் என்கிற திட்டத்தை வற்புறுத்தி அமல்படுத்தவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய நேரம் முடியப் போகிறது. இந்தச் சமயத்தில் ஒரு பிரச்சினையைக் கிளப்பிப் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மேலும், நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு எவ்வளவு ஆர்வத்தோடு மருத்துவத் துறையை கண்காணித்து வருகிறது என்பதைப் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நல்ல நேரத்தில் என்னுடைய ஆலோசனைகளை இப்பேரவை முன் வைப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இதுவரை இலவச மருத்துவ உதவி பெறுவதற்கு வருமான உச்சவரம்பை நம்முடைய அரசாங்கம் சற்று உயர்த்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே இது நிர்ணயம் செய்யப்பட்டது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மருத்துவத் துறையில் அம்மை குத்தும் பணியாளர்கள், பிற உதவியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இன்னொருவருக்கு வேலை தருவதோடு, இருப்பவர்களுக்கு முதலில் வேலையை நிரந்தரமாக்குவது நம்முடைய கடமையாக கருத வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய மருத்துவத் துறையில் பெரியம்மைக்கு சிகிச்சை அளிக்கும் பிரிவில் 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய வேலைவாய்ப்பு நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அரசாங்கப் பணியாளர்களுக்குத் தருகின்ற சலுகைகளை இவர்களுக்கும் அரசு உடனடியாகத் தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



மருத்துவத் துறை மனித சமுதாயத்தின் உயிர் காக்கும் துறை. இந்தத் துறையின் அமைச்சராகப் பணியாற்றும் நம்முடைய பேராசிரியர் செழுமையாகவும், சிறப்பாகவும் பணியாற்றிட வேண்டுமென்பதற்காக நாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளில் பல்வேறு கருத்துக்களைக் கொடுத்திருக்கிறோம். நாம் மருத்துவத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், என்றால், எல்லோருக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும் வகையில் — பணிகளை ஆற்றிட வேண்டும். கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு இந்த வசதிகள் கிடைக்கவில்லை. அவர்களுக்கு இந்த வசதிகள் கிடைத்திட இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. கிராமங்களில் உள்ளவர்கள் நல்ல பலனைப் பெறும் வகையில், எல்லா நவீன வசதிகளும் கிராமங்களில் இருப்பவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற முறையில் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவ மனைகளிலே சில டாக்டர்களைத் தவிர எதற்கெடுத்தாலும் பணம் கொடுக்கிற அவல நிலை இருக்கிறது. பணம் தந்தால்தான் குணம் ஆகும் என்ற நிலையில் நோயாளி கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்குவதற்காக ஒரு துப்புத் துலக்கும் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே சித்த வைத்திய முறையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செவிலியர்கள் இரண்டு இடங்களிலேதான் தேர்வு பெறுகிறார்கள். குறைந்தது 500 பேர்களாவது தேர்ந்தெடுக்கப்படவேண்டும், சென்ற ஆண்டு 100 பேர்களைக் குறைத்தது சரியல்ல, இந்த ஆண்டு அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹோமியோபதிச் சட்டம் வந்தாலும் இன்னும் ஹோமியோபதி மருந்தகங்கள் அமைக்கப்படவில்லை, எனவே அவையெல்லாம் அமைக்கப்பட வேண்டும்.

சித்தவைத்திய முறையை விரிவாகக் கொண்டுவந்து மற்ற வைத்திய முறைகளோடு இணைக்கவேண்டும். எனக்கு இங்கே குணமாகவில்லை, ரஷ்யாவிலே தான் சிகிச்சை செய்தார்கள், நான் இரண்டு மூன்று மாதங்கள்வரை சோவியத் நாட்டில் தங்கி சிகிச்சை பெற்றேன். மைலோகிராம் [illegible] நடவி அதிலே உள்ள பருப்பை இங்கே எடுக்க முடியவில்லை. எனக்கு கால் ஒருபக்கம் சரியாக இயங்கவில்லை. 67 நாட்கள் அங்கே வைத்திருந்து எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து சிழ் எடுத்தார்கள் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தமிழ்நாட்டிலும் சிறந்த வைத்தியர்கள் மதிப்பும்

உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அங்கே எதற்கெடுத்தாலும் மருந்திலே தேன் சேர்க்கிறார்கள், அப்படி இங்கேயும் மருந்திலே தேன் சேர்த்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாட்டி வைத்திய முறைகள் பலன் தாராது என்று கருதிவிடக்கூடாது. தமிழ்நாட்டிலே நல்ல முறையிலே அது பயன்பட்டிருக்கிறது. அந்த முறைக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

தமிழ்நாடு தலைமை மருத்துவத் துறையிலே சித்த முறைக்குத் தனியாக பிரிவு ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்தித் தனிக்கவனம் செலுத்தினால் தான் இந்த முறை வெற்றியடையும்.

அறுவைச் சிகிச்சைக்குக் குளுகுளு ஏர் கண்டிஷன் வேண்டும். கோயில் களிலே தெய்வங்களுக்கு ஏர்கண்டிஷன் வைக்கக்கூடிய நிலைமை இருக்கின்ற பொழுது நடமாடும் தெய்வங்களுக்கு சிகிச்சைக்கு ஏர் கண்டிஷன் வைத்தால் நல்லது என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பல மருத்துவ மனைகளில் விலையுயர்ந்த மருந்துகள் திருடுபோவதைப் பார்க் கிறோம். பெரிய டாக்டர்களிடம் மருந்துகளை ஒப்படைத்து அவர்கள் கையால் எடுத்து மருந்துகொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய உத்தரவிட வேண்டும்.

இலவச மருத்துவ உதவிக்கு 100 ரூபாய் என்று இருப்பதை மாற்றி 300 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்புலன்ஸ் இலவசமாகப் பயன்படவேண்டும். ஏனென்றால் இப்பொழுது அதற்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள், ஏழை எளிய மக்கள் அதன் காரண மாகப் பயன்பெற முடியவில்லை. எனவே இலவச உதவிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

எக்மோரிலே உள்ள கண் மருத்துவ மனையில் வேலை செய்கிறவர்களுக்குத் தொடர்ந்து பணிகொடுக்காத பாகுபாடுகள் வந்திருக்கின்றன, அதைப் போக்க வேண்டும்.

சென்னை பொது மருத்துவ மனையிலே மின்சாரம் நின்றுவிட்டால் மின்சாரம் உடனே உற்பத்தி செய்யக்கூடிய ஜெனரேட்டர் அமைக்க வேண்டும்.



சென்னை தெற்கு மருத்துவ மனையிலும் மதுரை மருத்துவ மனையிலும் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தி விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். தொழிலாளர்களுக்கு விசேஷ மருத்துவ இலாகா அமைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல மருத்துவமனைகளை விரிவாக்க வேண்டுமென்று தகவல் வந்திருக்கிறது. எட்டயபுரம், திருமங்கலம், கடலூர், ராஜபாளையம் என்னுடைய தொகுதியில் சீர்காழியில் திருமுல்லைவாயில், ஆசான்புரம் இந்த இடங்களிலே அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கடிதம் வந்திருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண் டாக்டர்கள் இல்லாத மருத்துவ மனைகளிலே பெண் டாக்டர்கள் போடவேண்டுமென்று இருக்கிறது. முந்தைய சட்டமன்றக் கூட்டத்திலே நான் சீர்காழியில் மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லையென்பதை கவனத்திற்குக் கொண்டுவந்தேன், உடன் அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்; அதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண் டாக்டர் இல்லாத இடங்களில் பெண் டாக்டர்களை உடனே போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

நர்ஸ்களுக்குக் கொடுக்கப்படுகிற அலவன்ஸைக் குறைக்கப் போவதாக சொல்லப்பட்டது. அதைக் குறைக்கவேண்டாம்.

சீர்காழி மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்காக தலைமை மருத்துவ அதிகாரி வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார். எனவே விரிவாக்குவதை நல்லமுறையிலே விரைவாகச் செய்யவேண்டும்.

செவிலியர் உதவியாளர்களை இரண்டாயிரம் பேர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாநாட்டிலே அமைச்சர் அவர்களிடத்திலேகூட இதைப்பற்றி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

நகரசுத்தித் தொழிலாளர்களை நிரந்தரமாக்கவேண்டும்.

இராமநாதபுரம் கீழக்கரையில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டவேண்டும்.

மதுரையிலே இருக்கும் இராமநாதபுரம் ரிசர்வ் போலீஸ் காலனிக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டும்.

[திரு. எஸ். வடிவேல்] ]1972 மார்ச் 17

குடும்ப நல்வாழ்வுத் திட்டத்திலே என்னுடைய தொகுதியிலே நான் பூரணமாகப் பங்கு கொண்டு வெற்றியடையச் செய்திருக்கிறேன். பல முகாம்களிலே அதற்காக நான் பங்குகொண்டேன். குடும்ப நலத் திட்டத்திலே ஈடுபடுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் மக்கள் தொகை குறைகிறது. ஆனால் சோஷலிச சமுதாயத்திற்கு உழைக்கின்ற மக்கள்தான் தேவை, அப்படிப்பட்ட உழைக்கின்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு உழைக்காத மக்களின் எண்ணிக்கையை பெருகுமானால் எப்படி சோஷலிச சமுதாயம் அமைக்கமுடியும். இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் இந்தத் திட்டத்தினாலே பெரும்பாலும் உழைக்கிறவர்கள்தான் வருகிறார்கள். அவர்கள் சிகிச்சை செய்துகொண்டு கட்டுத் தூக்குகிறவன், அறுப்பு அறுக்கிறவன் இவர்கள் எல்லாம் வேலை செய்ய முடியவில்லை, முதுகு குனிந்து அறுக்கமுடியவில்லை என்று சொல்கிறார்கள்....

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குடும்பக் கட்டுபாடு செய்துகொண்டபாராக இருந்தாலும் பலவீனமாக இருப்பார்களானால் அவர்கள் உடனடியாக டாக்டர்களிடம் தெரிவிப்பார்களானால் சரிசெய்துகொள்ளமுடியும். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தமிழ்நாட்டிலே மட்டும் நடைபெறுகிற காரியமல்ல. உலகம் முழுவதும் நடைபெறுகிற காரியமாகும். முறையாகச் செய்யப்பட்ட எந்தச் சிகிச்சைக்குப் பின்னாலேயும் யாருக்கும் பலவீனம் வருவதில்லை. சில மாதங்களுக்குப் பிறகு வலிவு அதிகமாகலாமே தவிர குறைவதற்குக் காரணம் இல்லை. எனவே, குறையைக் குறிப்பிட்டு அங்கத்தினர் தெரிவித்தால் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

திரு. எஸ். வடிவேல்: நான் வேண்டுமென்றே இந்த அரசைப்பற்றி விமர்சனம் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. கட்டுத்தூக்க முடியவில்லை என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ரஷ்யாவிற்குப் போய்விட்டு வந்த உறுப்பினர் அவர்கள் வெளிப்படையாக இப்படிச் சொல்வதால் சாதாரணப் பாமர மக்கள் மிகப் பெரிய அளவுக்குக் குழம்புவார்கள். பாமர மக்களைக் குழப்பும்படியாக அங்கத்தினராக உள்ள நாம் பேசவேண்டியதில்லை. இது இந்த அரசாங்கத்தின் கொள்கை மட்டுமில்லை. தேசியத் திட்டம். தேசியத் திட்டத்தில் எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்கவேண்டும். யாராக இருந்தாலும் 5 பேர்கள், பத்துப் பேர்களாக இருந்தாலும் டாக்டர்களிடம் தெரிவிப்பார்களானால் சிகிச்சைக் குறைவு ஏற்பட்டாலும் பரிகாரம் காணமுடியும். எனவே அங்கத்தினர் அவர்கள் இதிலே ஒத்துழைப்பு தரவேண்டும்.



1972 மார்ச் 17]

திரு. எஸ். வடிவேல்: நான் ஒத்துழைக்கிறேன். என்னைப்பற்றி புத்தகத்திலே எல்லாம் வந்திருக்கிறது. மறுபடியும் வந்தால் சிகிச்சை செய்யலாம். பெருகிவருகின்ற மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தினால் மட்டும்போதாது. செல்வம் ஓரிடத்திலே குவிவதையும் தடுக்கவேண்டும். எப்படி அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்று சொல்கிறோமோ அதைப் போன்று அளவோடு செல்வம் வைத்து வளமோடு வாழுங்கள் என்று சொல்லவேண்டும். இதிலேயெல்லாம் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, I would like to congratulate the Health Department on its big task which it has to perform in the face of great odds. They keep the State in a fairly healthy condition when so many of our people are ignorant of even the elementary rules of sanitation. They have to look after us and I feel that they have done a reasonably good job. I would like to congratulate them on their various new enterprises which they have accomplished in the past few years.

The Cardiology Block is a long-felt need and essential to so many who are struck down from time to time. I hope that along with this new construction, they have also a plan for a mobile unit trained to go out in the shortest possible time to take charge of victims who fall prone to heart-attacks. This is most essential because it is with speed and with skill that one has to reach the place and treat the patient. I trust this also is part of their treatment for Cardiology.

Then, Sir, I would like to congratulate the Department of Health on its work in leprosy. I find that the Government itself has given praise where it is due namely to voluntary organisations. Ultimately the organisations are helping the State in combating this great scourge of leprosy. But, Sir, we as ordinary citizens, are reminded from time to time as we go down our streets where patients who suffer from this disease and who are still round about us. There are half a dozen such cases who live down my streets and they probably have escaped from the attention of the Government. I want to suggest this morning, is it not possible to have a mobile wing here also which can go out to find out the patients and not wait for the patients to come to the institution and to give them on the spot treatmnt. We do not know if these patients are burnt

[Thirumathi Alda M. Fowler] 

out cases or active ones and I think the public should have some little protection, and also the patients themselves ought to be given some sort of care and if they will not find the hospital accommodation, the hospital must find them.

We see that hospitals have been built in various places at a cost of Rs. 1 lakh, Rs. 2 lakhs, Rs. 7 lakhs, etc. I would like to remind the Government that voluntary agencies too should get this kind of aid where the buildings are concerned.

I am reminded of the Coimbatore Children Orthopaedic Hospital which has come up half way in the first stage of building and is still waiting for its grant. Again, Sir, the hospitals have to be built and staffed and equipped with multitudinous equipment which we need for orthopaedic-handicapped patients. I would like to emphasise that there is a way out of this expenditure, if only the Government would face the immunisation of all children compulsorily against Poliomylatis which would cost Re. 1 and 50 paise per child. Why should we not prevent the disease instead of curing it when the means are at hand ? I feel we have to take it up as seriously as vaccination against small-pox was taken up because of the ill-effects of Poliomylatis which leaves so many mangled bodies even if it does not kill them.

I would like to add a word about nurses and the nursing service. I have one aspect of it to stress. So often a nurse is on sick leave. If the nurses stopped then all the work would come to a standstill. I feel that nurses ought to be given special consideration when it comes to condoning their leave. This should be readily done. Years and years should not lapse and small matters like this can be attended to quite easily. Otherwise, the nurses will lose their chances of promotion and they will, also lose their increments and their juniors also will supersede them. What comfort is to them to be told, 'This would not affect you when you retire'. They want redress here and now and they do not want to wait till the time that they retire.

Finally, Sir, regarding the Council for Homoeopathy with reference to the Bill that we passed, the Government plans to establish a Council. While the Council scrutinises diplomas, examinations, examination papers, etc., the Council and the people on it should first be scrutinised. We must have a Council of people



 [Thirumathi Alda M. Fowler]

who cannot be bought because this department of health is still in its formative stage and norms are just being framed and now we should see that this department of health shall not fall into disrepute.

Above all, Sir, I would like to reemphasise that in spite of gaps and lapses which come up for discussion, this is a most difficult section of the work that is being done and I feel that the Department should be congratulated on their fine performance of the last year.

*திரு. எம். சுரேந்திரன்:* உதவி சபாநாயகரவர்களே, இங்கே இந்தச் சபைமுன் வைத்திருக்கின்ற மக்கள் நலத்துறை மானியத்தின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பழைய மொழிப்படி "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை நடைமுறையிலே செயல்படுத்திக் காட்டுவதற்கான ஒரு பெரும் பொறுப்பை இந்தத் துறை ஏற்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன். நோயில்லாமல் இருக்க வேண்டுமென்றால் பிரதானமாக மக்களுடைய உணவிலே ஊட்டச்சத்து தேவையான உணவு, அதிலே ஊட்டமுள்ள உணவு கிடைக்கும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்பட வேண்டுமானால், இன்றைக்கிருக்கின்ற பொருளாதார சிக்கல்கள் மாறி அவ்வளவுபெருக்கும் வேலை, அவ்வளவுபெருக்கும் உணவு என்ற முறையிலே ஏற்படும் வரையிலே இந்தத் துறையின் பொறுப்பு மிகவும் அதிகம் என்று நான் கருதுகிறேன்.

நோய் வந்ததற்குப் பின்னால் சிகிச்சை செய்வதைவிட நோய் வராமல் தடுப்பதுதான் இன்றைக்குப் பிரதானமானது என்பது அவ்வளவு பேராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியானால் அதற்கு நல்ல காற்று, நல்ல குடிநீர், சுகாதாரமான வீட்டு வசதி இவை எல்லாம் தேவைப்படுகின்றன. இவைகளில் கவனம் செலுத்தி இந்தத் துறை பல காரியங்களைச் செய்து வருகிறது என்றாலும் இன்னும் அதிகமான காரியத்தைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை இந்தத் துறையின் பொறுப்பை வகித்து வருகின்ற அமைச்சர் அவர்கள் உணர்ந்து காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

நோய்களை சொஸ்தப்படுத்துவது என்ற வகையில் நாம் ஆங்காங்கு மருத்துவ மனைகளை ஏற்படுத்தி இருந்தாலும் அந்த மருத்துவ மனைகளில் இப்போது வருகின்ற நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் போதவில்லை என்பது ஒவ்வொரு மருத்துவ மனைக்குள்ளும் சென்று பார்த்தால்

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 17

தெரியும். சென்னையில் இருக்கும் அரசாங்க பொது மருத்துவமனை, ஸ்டான்லி
மருத்துவமனை, ராயப்பேட்டை மருத்துவமனை ஆகியவற்றில் படுக்கைகள்
இல்லாமல் கீழே படுத்துக்கொண்டிருக்கும் அவல நிலைமை இருந்து கொண்டிருக்
கிறது. நோயை சொஸ்தப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது மருந்து
மட்டும் பிரதானமானது என்று சொல்ல முடியாது. மருந்தைப் போலவே
மற்றச் சூழ்நிலைகளும் சரியானதாக இருந்தால்தான் நோயை சொஸ்தப்படுத்த
நல்ல வழி ஏற்படுமே தவிர, மருந்தைத் தருகிறோம், அதனால் சொஸ்தமாகி
விடும் என்று சொல்லிவிட முடியாது.

அதைப் போல் நோயாளிகளுக்கு அங்கு வழங்கப்படுகின்ற உணவு இருக்
கிறதே அதிலும் இன்னும் சிறிது அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உணவின் அளவு, தன்மை போன்றவை
எல்லாம் வெகுநாட்களுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். இன்றைக்கு
விலைவாசி ஏறி இருக்கும் நிலையில் அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு
ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவையோ, மூன்று வருஷத்திற்கு ஒரு தடவையோ
இதற்கான செலவைக் கணக்கிட்டுப் பார்த்து உயர்த்த வேண்டுமா அல்லது
குறைக்க வேண்டுமா என்று ஆராய ஏற்பாடு இருப்பது நல்லது.

படுக்கையில் படுத்திருப்பவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் டாக்டர்கள்
எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ அதைவிட அங்கு பணி செய்கின்ற
செவிலியர்கள் அக்கறை மிக அதிகமானதாக இருக்க வேண்டும். குறிப்பாகச்
சொல்ல வேண்டுமென்றால் அவர்களுடைய பணிவிடையினால்தான் பல பேர்
நோய்கள் சொஸ்தமாகிவிடுகின்றன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.
அவர்களுடைய பணிவிடையில் இருக்கின்ற எளிமை, தனிமை நோயைப்
போக்கிவிடும் சிறப்புடையது. அது மேலும் சிறப்படையச் செய்ய வேண்டு
மென்றால் அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்க வேண்டியது அவசியம்.
அவர்களுக்கு இப்போது வேலைப் பளு அதிகமாக இருக்கிறது.

மருத்துவ மனைகளைப் பற்றி ஆராய்ந்த நிபுணர்கள் எவ்வளவு படுக்கை
களுக்கு எவ்வளவு செவிலியர்கள் வேண்டுமென்ற கணக்கைத் தந்திருக்கிறார்
கள். அது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். அந்தக் கணக்கின்படி நடை
முறையைப் பார்த்தால் இதிலே மிகப் பெரிய இடைவெளி இருப்பதை அரசாங்
கம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இடைவெளியைத் தீர்ப்பதிலே
பொருளாதாரம் தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

பொருளாதாரம் தடையாக இருக்கிறது என்று சொன்னாலுங்கூட குடும்பக்
கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு நாம் எண்ணிக்கையில்
குழந்தைகளைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானித்த பிறகு, இருக்கின்ற ஆண்



1972 மார்ச் 17] [திரு. எம். சுரேந்திரன்]

களும், பெண்களும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்பதிலே அதிகக்
கவனம் செலுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஏற்கனவே இருந்த
படி எவ்வளவு வேண்டுமானாலும் பெற்று கொள்ளலாம். எட்டு, பத்து என்று
பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை மாறி இப்போது பெறுவதைக் கட்டுப்
படுத்துவதால் அவ்வளவு பேரும் ஆரோக்கியமாக இருக்க வேண்டு
மென்பதற்கு அதிகப் பணம் செலவு செய்வதற்கு அக்கறை கொண்டுதான்
ஆகவேண்டும். இதற்கு வேறு வழியே கிடையாது.

மருத்துவ மனையில் அவுட் பேஷண்டுகளாக இருக்கிறார்களே அவர்களில்
எவ்வளவு பேரை அங்கே இருக்கும் டாக்டர்கள் பார்க்கலாம் என்பதற்கு
விதிமுறைகள் எதுவும் இன்று இல்லாமல் இருக்கிறது. ஒரு மருத்துவ
மனைக்குள் சென்றால் ஏராளமாக க்யூ நின்று கொண்டிருக்கிறது. அவ்வளவு
பேரையும் பார்த்து விட்டுத்தான் டாக்டர் செல்லுவது என்றால் டாக்டர்களால்
என்ன பார்க்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு நபரைப்
பரிசோதனை செய்வதற்கு நேரம் இல்லாது சொல்லுவதைக் கேட்டு வேண்டிய
மருந்துகளை எழுதித் தருவார்களேயானால் எவ்வளவு நேரம் ஆகுமென்று
கணக்குப் பார்த்தால் வெளியே இருந்து வரும் நோயாளிகள் அவ்வளவு
பேரையும் பார்ப்பதற்கான நேரம் சிறிதும் போதுமானதாக இல்லை.

இதற்கு என்ன வழி செய்வது? நம்முடைய மாநிலத்தில் டாக்டர்கள்
அதிக அளவுக்குப் படித்து வேலை இல்லாமல் இருக்கும் நிலை இருக்கிறது.
அப்படி இருக்கும்போது இந்த நோயாளிகளைப் பார்ப்பதற்கான டாக்டர்களை
இன்னும் சிறிது அதிகப்படுத்தினால் என்ன என்று யோசிக்க வேண்டும்.
நோயாளி வந்து சொல்லுவதை மட்டும் கேட்டு சீட்டு எழுதிக் கொடுப்பது
நோயாளிக்கும் மகிழ்ச்சியைத் தராது, நோயைத் தீர்க்கவும் உதவிகரமாக இருக்
காது, அவர்கள் சிறிது நேரம் நோயாளியைப் பரிசோதனை செய்வதற்கு நேரம்
அளிக்கும் வகையில் டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டு
மென்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இலவசமாக சிகிச்சை செய்வது என்பதுதான் நம்முடைய அரசு மருத்துவ
மனை வைத்திருப்பதன் நோக்கம். இவ்வளவு ரூபாய் வருமானத்திற்கு உட்
பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை, அதற்குமேல் சென்றால் பணம் தரவேண்டு
மென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதி வெகு நாட்களுக்கு முன்னால்
இருந்த விதி. அது இப்போது பொருந்துமா, அதை மாற்றியமைக்க
வேண்டாமா; மாற்றியமைக்காவிட்டால் இலவசமாக மருத்துவ வசதி தருகிறோம்

என்று சொல்லும் நோக்கம் நிறைவேறத் தடையாக இல்லையா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சுகாதாரத்திற்கு நல்ல காற்று, குடிநீர் வேண்டுமென்று சொன்னேன். காற்றும், குடிநீரும் கெட்டுப் போகக் காரணம் ஆங்காங்கு இருக்கின்ற பல தொழிற்சாலைகள். கெமிகல் தொழிற்சாலை இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் இருக்கும் தண்ணீரும், காற்றும் கெட்டுவிடும். சர்க்கரைத் தொழிற்சாலை இருக்கும் இடங்கள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கும் இடங்களில் உள்ள காற்றும், நீரும் கெட்டுவிடக் காரணங்கள் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்தி எப்படி தூய்மைப்படுத்துவது என்பதற்கு இப்போது எடுத்துக் கொண்டிருப்பதை விட அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு என்று சொல்வது மிகவும் பிரதானமானது. சத்தான உணவு வேண்டுமென்று சொல்லுகின்ற அதே நேரத்தில், உணவுப் பண்டங்கள் எதை எடுத்தாலும் கலப்படம் இருக்கிறது என்ற புகார் இருக்கிறது. தூய்மையான பொருள்கள் இன்றைக்குக் கிடைக்க சாத்தியமே இல்லை என்ற நிலை வளர்ந்து கொண்டு வருகிறது. இப்போது ஒவ்வொரு செடியையும் ஒட்டுப்போட்டு புதிய புதிய காய்கறிகளை எல்லாம் பயிரிடுகின்றோம். அப்படி உண்டாகும்போது அளவில், உருவில் பெரியதாக இருக்கிறதே தவிர, அதனுடைய சத்தில், பிரயோசனத்தில், குறைவாகத்தான் இருக்கிறது என்பது பல இடத்தில் அனுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கலாம்.

அரிசியில் கல்லைப் கலப்பதற்கு ஒரு தொழிற்சாலையே உண்டாக்கப்பட்டது என்ற செய்தி சில நாளைக்கு முன்னால் பத்திரிகையில் வந்தது. அந்தத் தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற செய்தி வந்தது.

ஆகவே, சிறிதுகூட ஈவு இரக்கமில்லாமல் லாப நோக்கத்தைக் கருத்தில் கொண்டு மனிதர்கள், சாகிறார்களா, இருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்காமல் சமூக விரோதமான காரியங்களைச் செய்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். அவர்கள் மீது முறையான கண்காணிப்புச் செய்து உணவுப் பண்டங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கலப்படம் ஏற்படாமல் பாதுகாப்பது ஆரோக்கியமாக இருக்க பிரதானமானது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவான காரியங்களை விட்டுவிட்டு தொகுதி சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.





என்னுடைய மேட்டூர் பகுதி ஏராளமான தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அங்கே படுக்கைகள் போடப்பட்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இடம் பார்க்கப்பட்டு அதற்குப் பின்னால் கைவிடப் பட்டிருக்கிறது. அப்படிக் கைவிடப்பட்டதற்குக் காரணம் மத்திய அரசில் இருந்து பணம் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் பணம் வரவில்லை என்று சொன்னாலும் நம்முடைய மாநிலத்தில் எந்தப் பகுதியில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப் பகுதியில் கட்டாயம் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஏற்பட அரசாங்கம் உதவி செய்ய வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இ.எஸ்.ஐ.யில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்ற அரசாங்க மருத்துவ மனைகளுக்குச் செல்லுகின்ற நேரத்தில். . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் அவர்கள் ஒரு தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர். தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்திருக்க வேண்டும்.

இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் என்ற அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பில் ஏற்கனவே தமிழ்நாட்டில் கட்டப்பட்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள், படுக்கைகள் ஆகியவை மற்ற மாநிலங்களில் கட்டப்பட்ட அளவு விகிதாசாரத்தைவிட அதிகமாகிவிட்டது என்று சொல்லி புதிய மருத்துவ மனை கட்டுவதற்குக் கார்ப்பரேஷன் ஒப்புதல் அளிப்பதில்லை. ஏற்கனவே, தமிழ்நாடு அரசு இ.எஸ்.ஐ.-ல் உறுப்பினர்களாக இருக்கும் தொழிலாளர்களின் மருத்துவ வசதிக்காக ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து செலவழித்து வருகிறது.

ஆகவே, தமிழ்நாடு அரசாங்கம் இ.எஸ்.ஐ. திட்டத்திலே மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்பதோ, மற்ற மக்களுக்குத் தர வேண்டிய வசதிகளைத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்பது அவ்வளவு முறையாக இருக்காது. ஆகவே, மத்திய அரசைக் கேட்டு இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கொண்டிருக்கும் திட்டத்தை மாற்றுவதற்கு அங்கத்தினர் முயற்சிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்த போதிலும் இந்த விஷயத்தை உரிய முறையில், கவனித்து மத்திய அரசாங்கத்திற்கும், கார்ப்பரேஷனுக்கும் எழுதி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இ.எஸ்.ஐ.-யில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள்

அரசாங்க மருத்துவ மனைகளுக்குச் சென்று சிகிச்சை செய்து கொள்ளும் போது உரிய முறையில் கவனம் செலுத்தப் படுவதில்லை என்ற புகார்கள் வருகின்றன. அப்படி உரிய முறையில் கவனம் செலுத்தப்படாமல் இருப்பது நியாயமற்றதாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இ.எஸ்.ஐ. பொறுத்தவரையில் அது தொழிலாளர்களுக்காக இருக்கிற மருத்துவ மனை என்ற ஒரே காரணத்திற்காக தொழிலாளர் நல இலாகா அதைக் கவனிப்பது என்பதை விட்டு இந்த இலாகாவிலிருந்தே கவனிக்கப்படுமானால் நேரடியாக அவர்களுக்கு வைத்திய வசதி அளிக்கவும், அவர்களுக்கு ஏதாவது குறைகள் இருக்கும்போது பெரிய மருத்துவ மனைக்குக் கொண்டு போகவும் உதவியாக இருக்கும். ஆகவே அதுபற்றி அரசாங்கம் சிந்திக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஏற்படுத்துவது, படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டுவது, டிஸ்பென்சரி அமைப்பது போன்றவை தொழிலாளர் இலாகா மேற்பார்வையில் இருக்கின்றன. டாக்டர்களை நியமிப்பது, செவிலியர்களைப் போடுவது, மருத்துவம் செய்வது என்பது மருத்துவ இலாகா மேற்பார்வையில் இயங்குகிறது. ஒருவகையான கூட்டுப்பொறுப்பு நீடிக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : கடைசியாக, இ.எஸ்.ஐ.-யில் பதிவு செய்து கொண்டவர்களிடமிருந்து, தொழிலாளர்களிடமிருந்து அதற்காக பணம் பிடித்துக்கொள்கிறார்கள். நிர்வாகிகளும் பணம் தருகிறார்கள். அப்படியிருந்தும் அவர்கள் அரசாங்க மருத்துவமனைக்குச் செல்லும்போது சரியாகக் கவனிப்பதில்லை என்ற புகார்கள் வருகின்றன. அப்படி பணம் அளித்தும் சரியான முறையில் சிகிச்சை அளிக்கவில்லை என்ற குறை ஏற்படுகிற முறையில் பலவிடங்களில் நடந்து வருகின்றன. ஆகவே அதைக் கவனித்து, தக்க நடவடிக்கைகள் எடுத்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் மருத்துவ மனையில் போதுமான அளவிற்கு படுக்கை வசதி இல்லை. அங்குள்ள படுக்கை வசதியினை அதிகப்படுத்த ஒரு முடிவு எடுத்திருப்பதாக அறிகிறேன். இருந்தாலும் அங்கு ஒரு மேல் நிலை நீர் தொட்டி ஒன்று கட்டி 24 மணி நேரமும் குடி நீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, அங்குள்ள எக்ஸ்-ரே கருவி மிகமிகக் குறைவான சக்தியுடையதாக இருக்கிறது. ஆகவே அதை வேறு ஏதாவது ஒரு சிறிய மருத்துவ மனைக்கு மாற்றிவிட்டு அங்கு அதற்குப் பதிலாக நல்ல சக்தி உள்ள ஒரு எக்ஸ்-ரே கருவியை அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவற்றையெல்லாம் நீங்கள் ஆரம்பத்திலேயே பேசியிருக்கவேண்டும். பொது விவாதத்தில் பேசுவதுபோல் முதலில் பேசிவிட்டு இப்போதுதான் இதற்கு வருகிறீர்கள்.

திரு. எம். சுரேந்திரன் : நான் கூறிய பிரச்னைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு உரியமுறையில் கவனிப்பார்கள் என்று நம்பி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனி பேசும் உறுப்பினர்கள் தயவுசெய்து ஏழு நிமிடங்களில் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ, பொது சுகாதார மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றினைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நகரங்களில் எவ்வளவோ மருத்துவ வசதிகளை இந்த அரசு செய்திருந்தும் கிராமங்களிலும் அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைகளை நிதி வசதி காரணமாக சரிவர நிர்வகிக்க முடியாத காரணத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் 45 மருத்துவ மனைகள் எடுத்துக் கொள்ளும் முகத்தான் இந்த ஆண்டு 45 மருத்துவமனைகளை எடுத்துக்கொள்ள அரசு முடிவு செய்திருப்பதை முதற்கண் பாராட்டுகிறேன். அத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது மாவட்ட வாரியாகவோ அல்லது கட்டட வசதி அதிகம் இருப்பதைக் கொண்டோ முன் உரிமை பெற்று நீங்கள் எடுத்துக்கொள்ளாமல் தயவுசெய்து எந்தப் பஞ்சாயத்து யூனியன் அதிகப்படியான மருத்துவ மனைகளை நிர்வகித்து வருகிறதோ அதைக் கணக்கிலெடுத்து அவ்வாறே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுக்கக்கூடிய மானியத் தொகையை உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறத்தில் ஏற்கனவே 10,000 ஜனத்தொகைக்கு ஒரு தாய்சேய் நலவிடுதி என்றிருப்பதை 5,000 ஜனத்தொகைக்கு ஒன்று என்றிருக்க அரசு முன்வர வேண்டும். ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டுள்ள தாய் சேய் நல விடுதிகள்

பலவற்றில் பயிற்சி பெற்ற மருத்துவ மாதர்கள் இல்லாததால் இன்று செவிலியர் பயிற்சி பெற்று பலர் வேலையில்லாதிருப்பதையொட்டி அவர்களை தாற்காலிக மாகவாவது அப்பேர்பட்ட இடங்களில் நியமித்து அதிகப்படியான நாப்சேப் நல விடுதிகளைத் திறக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றுள்ள குடும்பங்களுக்கு கல்வி மற்றச் சலுகைகளை எல்லாம் அளிக்காதிருக்க ஒரு சட்டத்தை இயற்றும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த அரசு நாட்டு வைத்தியமுறைகளை பலவாறுக ஆதரித்து வருவதை நான் அறிவேன். என் தொகுதியில் ஒரு ஆயுர்வேத ஆஸ்பத்திரி பல நாட்களாக நடைபெற்று வருகிறது. அதை ஆதரிக்கும் வகையில் மற்றவைகளிலிருந்து விதிவிலக்கு அளித்து அதை அரசே எடுத்து நடத்த முன்வர வேண்டும்.

சென்ற ஆண்டு எட்டாம் மாதம் ஊத்தங்கரை பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியை அரசு எடுத்து நடத்தியது. அரசு அதற்கான ஒப்புதல் அளித்தும் கூட, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்தும்கூட இன்றுவரை, ஆறு மாதங்களாகியும், சாதாரண [illegible] உள்ளிக்குச் செய்யும் மருந்துகள் கூட வழங்கப்படவில்லை. அங்குள்ள ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதற்குப் பொறுப்பாளி யார் என்று அரசு கண்டுபிடித்து [illegible] மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருந்தபோது நல்லமுறையில் இருந்தது. இன்று அரசினுல் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்கிருர்களே தவிர சாதாரண ஒரு டிங்க்சர் கூடக் கிடையாது என்ற அவச்சொல்லிற்கு உடன்படுத்தியிருக்கிருர்கள். இதற்கு யார் பொறுப்பு என்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். எந்தத் தேதியில் அந்த யூனியன் ஆஸ்பத்திரி எடுத்துக்கொள்ளப்பட்டது, எடுத்துக்கொள்ளும்போது இருந்த பணியாளர்கள் யார் என்று சாதாரணத் தகவலைக் கூட தெரிவிக்காத காரணத்தினுல் ஆறுமாதங்களாகியும் கூட அந்த மருத்துவமனை மூடிக்கிடக்கக் கூடிய நிலையில் இருக்கிறது.

அடுத்து, குடிநீர்பற்றி சிலவார்த்தைகள் கூறவிரும்புகிறேன். எங்கள் பகுதியிலிருந்து டெஸ்ட்டிற்காக எடுக்கப்பட்ட குடிதண்ணீர் கிங் இன்ஸ்டிட்யூட்டிற்கு அனுப்பப்பட்டு அந்தப் பகுதியில் கிடைக்கும் தண்ணீரில், எல்லாவற்றிலும் ஃபுளுரின் கலந்திருப்பதாகவும் அந்த தண்ணீர் குடிதண்ணீருக்கு



லாயக்கில்லை என்றும் திருப்பி அனுப்பப்படுகிறது. அதன் காரணமாக மேல்நிலை தொட்டி கட்டுவது என்ற திட்டத்தை அமல்படுத்தமுடியவில்லை. ஆகவே அதற்காக ஏதாவது ஒரு மாற்று கண்டுபிடித்து, பல கிராமங்களை ஒன்றிணைத்து மேல்நிலை நீர் தொட்டிகள் கட்டுவதற்கு ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயல்படுத்தாவிட்டால் அப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று நினைக்கிறேன்.

ஊத்தங்கரைக்கு குடிநீர் கொண்டுவருவதற்காக பெண்ணையாறு அல்லது பாம்பாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதைக் கவனித்து அரசு உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்ப நலத்திட்டம் பற்றி என் அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருசிலர் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அறுப்பு அறுக்கமுடியாது, கட்டு தூக்கமுடியாது என்று சொல்கிருர்கள். நான் பத்தாண்டுகளுக்கு முன் அறுவை சிகிச்சை செய்து கொண்டவன். ஆனுல் பத்தாண்டுகளுக்கு முன்னுல் கொஞ்சம் பருவத்தில் இருந்திருப்பேன் என்று கருதுகிறேன். ஆனுல் அன்றைவிட இன்று என் உடல் வலிவு ஏறியிருப்பதோடு சிறிது வனப்பும் கூடியிருப்பதாகக் கருதுகிறேன். என்னைத் தவருக நினைக்கவேண்டாம். ஆகவே அறுவை சிகிச்சை குறித்து யாரும் ஒருவிதத்திலும் பயப்பட வேண்டாம் என்று செ[illegible]கிறேன்.

அடுத்து, சிங்காரப்பேட்டை, மத்தூர், கல்லாவி [illegible]யில் இந்த ஆண்டே எடுத்து நடத்தி, ஊத்தங்கரைக்கு குடிநீர் வசதியும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மேல் என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, தற்போது மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கும் முறை சிறப்பாகவும், எல்லோரும் பாராட்டக்கூடிய முறையிலும் இயங்கி வருகிறது. உண்மையிலேயே நமக்குப்பெருமை தரும் நிகழ்ச்சி. இது போன்று

எல்லா இடங்களிலுமே நல்ல முறையில் இந்தத் துறை இயங்கி வருகிறது என்று என் கட்சியின் சார்பாக சக சட்ட மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

என்னைப்பொறுத்தவரையில் நான் ஒரு சில கருத்துக்களை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கிராமப்புறங்களில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர்கள் 8 மைல் போகவேண்டியிருக்கிறது. அவர்களுடைய பணி வரைமுறைப்படுத்தப்படவில்லை என்று கூறி வருகிறார்கள். அவர்களுக்கு சீனியாரிட்டி லிஸ்ட் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட முறையில் இருக்கும் பணியாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் படி 25 சத விகிதம் செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக்கொண்டு, கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும், நிர்வாகத்துறையில் அதை நிறைவேற்றாமல் இருக்கும்படியான நிலை இருக்கிறது. அரசாங்கம் ஒப்புக்கொண்ட பிறகும், அதைச் செய்யவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது ஏற்கெனவே இருந்த நிலவரம். அண்மைக் காலத்தில் அந்த 3,000-4,000 ஊழியர்களுக்கும் அவர்களின் சீனியாரிட்டி முறைப்படி அவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களிலே 25 விழுக்காடு பதவி உயர்வு பெற வேண்டியவர்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பதற்காக தனியாக ஒரு அ[illegible] அவர்களுக்குத் துணையாக எழுத்தர்கள் சிலரையும் நியமித்து அவர்கள் அந்தப் பட்டியலைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 1 திங்கள், 2 திங்களில், அந்த வேலை முடிந்து விடும். அரைகுறையாக அந்த வேலையை முடித்து, அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதானது நல்லதல்ல. பின்னால் பல்வேறு குறைகள் ஏற்படுவதற்கு நியாயம் உண்டு என்ற காரணத்தால் முறைப்படி செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதே போல், இந்த 3,000 பேரில் யாரையும் வீட்டிற்கு அனுப்பும் ஏற்பாடு இல்லை. எல்லோரையும், Basic health worker என்ற முறையில் அரசாங்கத்தின் சுகாதார மருத்துவ துறையில் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்த வழி வகை செய்ய அரசு முயற்சி செய்து கொண்டு வருகிறது.

திரு. க. சுப்பு: அமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. அவர்களை டெக்னிகல் கெசட்டட் பர்சனல் அசிஸ்டெண்ட் டு தி டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் என்று டெசிக்னேஷன் செய்யப்பட்டிருந்தாலும் கூட, அங்கே ஆபீசர்களாக இருந்து



வருகிறவர்களுக்கு ப்ரமோஷன் சான்ஸ் இருக்கிறது. அப்படிப்பட்ட முறை வரையறுக்கப்பட்டு இருந்தும் கூட, இது வரையில் அந்த சீனியாரிட்டி பிக்ஸ் செய்யாத காரணத்தால் அவர்களுக்கு ப்ரமோஷன் சான்ஸ் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு செலவாகும் பணம் முழுவதையும் மத்திய அரசு யூனிசெப் நிறுவனத்தின் உதவியோடு கொடுத்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது, இந்தக்காலதாமதம் செய்யப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அமைச்சர் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த இலாகா சுறுசுறுப்பாக இயங்கி வேகமாக செயல்பட்டு வருகிறது என்று சொன்னதற்காகப் பாராட்டுகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் சுகாதார பணியாளர்களுக்கும், மலேரியா தடுப்புப்பிரிவில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பயணப்படியில் குறைவாக இருக்கிறது. பிக்ஸ்ட் டிராவலிங் அலவன்சு என்று கொடுக்கிறார்கள். ரூ. 30 மலேரியா ஒழிப்பு திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையம், குடும்ப நல திட்டம் ஆகியவற்றில் பணி புரிபவர்களுக்கு ரூ. 50 என்று கொடுக்கப்பட்டது. பே கமிஷன் இதைச் சிபார்சு செய்தது என்று சொல்லப்படுகிறது. பிரைமரி ஹெல்த் சென்டரில் ஏற்கெனவே 1-ம் தேதி பிப்ரவரி முதல் கொடுக்கப்பட்ட பணத்தை யெல்லாம், இந்த மாதம் 31-ம் தேதிக்குள் திருப்பிச் செலுத்தி விட வேண்டும், ரூ. 50 குடும்ப நல திட்டத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்கப்பட்டது தவறு என்றும், ரூ. 15 திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் நெருக்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். இது அச்சுத்துறையில் ஏற்பட்ட பிழை என்ற காரணத்தால், அதைச் சரி செய்து, அவர்களுடைய பிக்ஸ்ட் டிராவலிங் அலவன்ஸ் ரூ. 50 என்று தருவது நலமாக இருக்கும், அப்படிச் செய்து அவர்களுடைய அவல நிலையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மருத்துவ மனையில் பணியாற்றும் அவர்களுக்கு குறைகள் இருப்பதால், அவர்களுடைய கோபத்தைக் காட்டுவதற்கு ஒரே இடம் நோயாளிகளாக இருக்கிறார்கள். நோயாளிகளின் பாடு ரொம்ப பரிதாபமாக இருக்கிறது. மதுரை மருத்துவ மனையில் ஒரு தொழிலாளியை நான் பார்க்கச் சென்ற நேரத்தில், பக்கத்து பெட்டிலிருந்து ஒரு நோயாளியின் மனைவி அதிக நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள் என்ற காரணத்தினால் அங்கே இருந்த அதிகாரிகள் அந்த பெண்ணை நேரமாகிறது போ என்று சொல்லியும் போகாத காரணத்தால் அவளை இழுத்து வெளியே தள்ளி இருக்கிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என்று அந்த நோயாளி கேட்டதற்கு அந்த பணியாட்கள் அவரை அடித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நண்பர் சுப்பு அவர்கள் செவிலியர்களிடத்தில் அக்கறை வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எல்லா செவிலியர்களையுமே தவறாக நினைக்கக்கூடாது. ஏதோ ஒரு இடத்தில் யாராவது அப்படிச் செய்திருக்கலாம். அப்போது அவர்களுடைய மன நிலைமை அப்படி இருந்திருக்கலாம். தனியாக ஒரு இடத்தில் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது என்று அரசாங்கத்திற்கு புகார் சொல்வார்களேயானால், உடனடியாக அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்கும். Stray incidents should not be quoted as a common issue in the particular department.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நான் நேரில் பார்த்ததைச் சொன்னேன். வந்தால் பெரும்பாலும்—நடைமுறையில் தெரியும், ஆதாரம் என்ன என்று புகார் செய்தான் அந்த நோயாளி. அதிகாரிகள் அந்த இடத்தில் இருந்த போதே அடித்ததாகச் சொல்கிறான். இப்படிச் செய்கிறபோது, அவர்களுக்கு இந்த குறைகள் இருப்பது தான் காரணம். இப்படிப்பட்ட குறைகளுக்கு இடம் அளிக்கக்கூடாது என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, சாதாரண ஏழை எளியவர்கள் மருத்துவ மனைக்கு வந்தால் பெரும்பாலும்—நடைமுறையில் தெரியும், ஆதாரம் என்ன என்று கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்—சரியான மருத்துவ வசதி வேண்டுமானால் அங்கே எப்படிப்பட்ட நடைமுறைகள் கையாளப்படுகின்றன என்பது தெரியும். ஹாஸ்பிடல் அட்வைசரி கமிட்டி என்று இருக்கிறது. அதிலே உண்மையாக மக்களுக்கு தொண்டு செய்யக் கூடியவர்களை, மருத்துவ துறையில் தேர்ச்சிபெற்றவர்களை போடவில்லை. இராஜபாளையத்தில் ஒரு கமிட்டி போட்டார்கள். அதிலே நகர மன்றத் தலைவருக்கு இடம் கிடையாது. வட்டச் செயலாளர்கள் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசியல் வாதிகள் தான் இடம்பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வட்டச் செயலாளர் மட்டும் இருக்கிறார் என்று சொல்லவேண்டாம். எம்.எல். ஏக்களும் இருக்கிறார்கள். அதிலே யார் இருந்தாலும், அந்தக் கமிட்டி முறையாக சொல்வதைத்தான் ஏற்றுக் கொள்ளும்.

திரு. க. சுப்பு: வட்டச் செயலாளரைப்பற்றிச் சொன்னார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அதில் இடம்பெறவேண்டாமா? நகர மன்றத்தின் தலைவர் அந்த ஆலோசனைக்குழுவில் இடம் பெறவேண்டாமா?



அரசியல் வாதிகள் தான் இருக்கிறார்களே தவிர ஆலோசனைக்குழுவில் நல்ல ஆலோசனைகளை வழங்கும் நபர்களை பொறுக்கி எடுத்துப் போடும் முறை இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மதுரையில் இருக்கும் மருத்துவ மனையின் ஆலோசனைக் குழுவின் என்னுடைய கட்சித் தலைவர் என்பதாலே சொல்லவில்லை, அந்த மதுரை சிடி தொகுதியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் தங்கமணி அவர்கள் அதில் இடம் பெறவில்லை. கட்சியைச் சார்ந்தவர்களைப் போட்டால், முறையாக ஆலோசனைகளைத் தரமுடியாது. அதைச் சொல்வதற்கு மக்கள் நலனில் நன்கு அக்கறை கொண்டுள்ளவர்களைப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகளில் இருக்கும் டாக்டர்களின் எண்ணிக்கை போதாது. ஸ்ரீவில்லிப்புத்தூர், இராஜபாளையம் போன்ற இடங்களில் டாக்டர்கள் போதுமான அளவில் இல்லை. ஒரு லேடி டாக்டர் லீவ் எடுத்து விட்டால், மாற்று லேடி டாக்டர் கிடையாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் அவர்கள் அதிகமாக இந்த மருத்துவத்துறையைப்பற்றி தெரிந்து பேசுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பெண் டாக்டர்கள் அண்மைக் காலத்தில் தான் தேர்ச்சி பெற்று வருகிறார்கள். அவர்கள் எவ்வளவு பேர் வந்தாலும் உடனடியாக வேலை தந்துவிடுகிறோம். ஆண்டுதோறும் ஆண்கள் தான் பெரும்பாலும் டாக்டர்களாக வருகிறார்கள். பெண் டாக்டர் இல்லாத இடங்களில் ஆண்கள். டாக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். நாளடைவில் தான் இந்தப் பிரச்னை தீருமே தவிர, உடனடியாக தீர்வதற்கு வாய்ப்பு இல்லை.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, பெண் மருத்துவர்கள் கிடைக்கும் வரையில் டாக்டர்களை நியமிக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்போது இருக்கும் நிலைமை என்னவென்றால், பொதுவாக எல்லா பிரைவேட் டாக்டர்களும் பெண்களாக இருக்கிறார்கள். பல டாக்டர்களுக்கு அரசாங்க மருத்துவ மனையில் வசதியில்லாததால், பல வசதிகள் இல்லாததால், அவர்கள் தனியாக மருத்துவ மனை வைத்துச் செயல்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நண்பரவர்கள் இப்போது அரசாங்க மருத்துவ மனையில் இருக்கிற டாக்டர் பிரைவேட் பிராக்டிஸ் வைக்கலாம் என்று சொல்வது சரியல்ல. பிரைவேட் பிராக்டிஸ் பொதுமக்களின் நன்மைக்காக அவர்களாகவே செய்து கொள்ளவேண்டும். அரசாங்க மருத்துவ மனையில் பணிபுரியும் டாக்டர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்வதற்கு அனுமதியளிப்பது

இல்லை. வேண்டுமானால் கன்சல்டேஷன் கிளினிக் வைத்துக்கொள்ளலாம். அப்படி ப்ரைவேட் பிராக்டிஸ் செய்யும் உரிமையை அரசாங்க மருத்துவ மனையில் உள்ளவர்களுக்கு அளிக்கலாம் என்று பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்வது சரியல்ல.

திரு. க. சுப்பு: சொன்னது தவறு,அல்லது புரிந்து கொண்டதில் நான் தவறு என்று தெரியவில்லை. தனிப்பட்ட முறையில் இருக்கும் டாக்டர்கள் பெண் டாக்டர்களாக இருக்கிறார்கள். அரசாங்க மருத்துவ மனைக்கு ஏன் வர வில்லையென்றால், உதாரணத்திற்காகச் சொல்கிறேன். சேத்தியாத் தோப்பில் ஒரு டாக்டர் வந்தார்கள். அவர்களுக்கு வீடு கிடைக்கவில்லை. ப்ளாஷ் அவுட் கிடையாது. அவர்கள் எங்காவது வயல்வெளிக்குத்தான் சென்று விட்டு வர வேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதால் தான் அவர்கள் வருவதற்கு தயங்குகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள டாக்டர்களுக்கு மற்ற டாக்டர் களுக்கு கட்டிக்கொடுப்பது போல் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். அவர் களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நல்ல மருந்துகள் போதுமான அளவுக்கு வாங்கி வைக்கவேண்டும்.

இராஜபாளையத்தில் மருத்துவ மனை வருகிறது என்று சொல்லப்படுகிறது. எப்போது வரும் என்று தெரியவில்லை. இந்த பட்ஜெட்டில் சேர்த்திருப்ப தாகத் தெரியவில்லை. விரைவாக அதை கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலவே சேத்தூரில் ஒரு மருத்துவ மனை வேண்டுமென்று சொல்லி வருகிறோம். மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டங்களிலும் இது சொல்லப்பட்டிருக் கிறது. அதையும் நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. சி. பாண்டுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இன்று மக்கள் நல்வாழ்வுத் துறை 1972-73-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பற்றி விவாதம் ஆரம்பித்தபொழுதே மாண்புமிகு உறுப்பினர் அவர்களில் ஒருவர் 'வருகிறது, வருகிறது, மெடிகல் காலேஜ் செலக்ஷன் வருகிறது' என்று குறிப்பிட்டார்கள். ஏனென்றால் சாதாரணமாக எப்பொழுதும் வருஷா வருஷம் ரிட் மனுக்கள் போடுவது வழக்கம் தான்



நடந்து முடிந்த தேர்வு நடந்தபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதவி ஏற்று ஒன்றிரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால், அந்த நேரத்தில் யாரும் எதிர்த்து எதையும் செய்ய முடியாத அளவுக்கு வெகு திறமையாக பரிசீலனை செய்து முடிவை அறிவித்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். அதற்கு திருஷ்டிப்பரிகாரமாக 'வருகிறது, வருகிறது, மெடிகல் காலேஜ் தேர்வு வருகிறது' என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் பதவியேற்ற ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளே இவ்வளவு திறமையோடு செயலாற்றினார்கள் என்றால், அடுத்தாற்போல் வருகிற தேர்வு எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவை யில்லை. அதற்காகத்தான் ஒரு திருஷ்டிப் பரிகாரமாகத்தான் உறுப்பினர் அவர்கள் அம்மாதிரி கூறியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தாற்போல, மக்கள் நல்வாழ்வுத் துறையைப்பற்றி நான் இரவு ஒரு மணி வரை பரிசீலித்தேன். அதாவது குழந்தை வயிற்றில் இருக்கும்பொழுது, பெண்கள் கர்ப்பிணியாய் இருக்கும்பொழுதிலிருந்து, குழந்தை பிறந்து, வளர்ந்து, பிறகு பையனாகி, அவன் இறக்கும் வரையிலும் ஒரு சாதாரண குடி மகனுக்கு எல்லா வகைகளிலும் இந்தத் துறை பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்று கூறினால், அது மிகையாகாது.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், ஒரு தாய் கர்ப்பிணியாக இருக்கும் பொழுது, பிரசவம் ஆவதற்கு முன்பு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து, கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்கு வேண்டிய எல்லா போஷாக்குகளையும் கொடுக்க இந்த அரசு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறது. குழந்தை பிறந்த வுடன், அதற்கு சத்துணவு கொடுத்து பராமரிப்பதற்கு இந்த அரசு வேண்டிய அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அடுத்தாற்போல் குழந்தை பால பருவம் வந்து ஐந்து வயது வரையில் பள்ளிக்கு செல்லும் வரையில் அந்தக் குழந்தைக்கு வேண்டிய எல்லா போஷாக்குகளையும் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. பிறகு அந்தப் பிள்ளை படித்து, நல்ல பக்குவம் அடையும் வரையில் அந்தக் குழந்தைக்கு வேண்டிய எல்லா பராமரிப்பு களுக்கும் இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, இந்தத் துறை மற்ற எல்லா துறைகளையும்விட ஒரு மனிதனுடைய வாழ்வுக்கு எல்லா கட்டங் களிலும் நின்று செயல்படுகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

மேலும், மற்ற எல்லா துறைகளையும் விட, ஒரு முக்கியமான வைத்தியத்தை மருத்துவத் துறை செய்கிறது. ஏனென்றால், எந்தத் துறையிலும் இல்லாத, எந்த இடத்திலும் இல்லாத ஒரு சிறப்பான பகுதியாக இந்தத் துறை செயல் படுகிறது. அதாவது, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை, அதிலும் ஆதித்திராவிட சமூகத்தினரை மற்ற எல்லா சமூகத்தினரோடு ஒருங்கிணைத்து எல்லோருக்கும்

ஒன்றாக, ஒரே முகத்தான், சமத்துவமாக பணி செய்து செயல்படுகிறது என்றால், அது மிகைப்பாகாது. மற்ற இடங்களில் உயர்வு, தாழ்வு காட்டப்பட்டாலும், மருத்துவத்துறையில் எந்த வித்தியாசமும் இல்லாமல் எல்லோரும் ஒன்றாக சிகிச்சை பெறுகிறார்கள். உயர்வு, தாழ்வு மனப்பான்மை இல்லாது, எல்லோருக்கும் ஒன்றாக செயல்படுகிற ஒரு தத்துவம் இந்த மருத்துவமனைகளில் ஏற்படுகிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். எல்லாவற்றையும் விட, தீண்டாமை என்ற கொடிய நோய் வேரறுக்கப்படுகிறது இந்தத் துறையில். ஆகவே, இந்தத் துறை மிக முக்கியமான பணியை ஏற்று நடத்துகிறது என்பதைப்பற்றி எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டும்.

அடுத்தபடியாக, நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லப்போகிறேன். சாதாரணமாக கிராமங்களில் இருக்கிற பிரைமரி ஹெல்த் சென்டர்களில் வேலை பார்ப்பதற்கு ஒரு டாக்டரை அனுப்புவதற்கு முன்னாலே, அவரிடம் ஒன்று எழுதி வாங்கிக்கொள்ளவேண்டும். எந்த டாக்டராக இருந்தாலும், உத்தியோகம் வேண்டுமென்றால், ஒரு கிராமத்தில் பிரைமரி ஹெல்த் சென்டரில் போட்டால், அந்த கிராமத்திலேயே தங்கி வேலை செய்யவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சாதாரணமாக இப்பொழுது எந்த டாக்டரும் கிராமத்தில் இருந்து வேலை செய்ய விரும்பவில்லை. ஐந்து மைல், 10 மைல் தூரத்தில் இருந்தால் கூட பரவாயில்லை, மோட்டார் பைக்கில் வந்துவிடலாம், கார் வைத்துக்கொண்டு வந்துவிடலாம் என்று தான் நினைக்கிறார்கள். இப்படி ஏதாவது கடமைக்கு வேலை செய்து ஊதியம் பெறுவதற்காக வேலை செய்கிறார்களே தவிர, கிராமத்திலுள்ள மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய முறையில் வேலை செய்வதில்லை. 9 மணியிருந்து 10 மணி வரையில் இப்படி எப்பொழுதாவது ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் வந்துவிட்டு, வேலை செய்துவிட்டு திரும்பிப் போய்விடுகிறார்கள். கேட்டால், 'இந்தக் கிராமத்தில் யார் இருப்பது, நாங்களெல்லாம் இருக்க முடியாது, எங்களுக்கு இருப்பதற்கு வசதியாக வீடுகள் கிடையாது' என்றெல்லாம் சொல்கிறார்கள்.

ஆகவே ஒரு டாக்டரைப் போடுவதற்கு முன்னால், கிராமத்தில் இருந்து கொண்டு பணி செய்துதான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்து, அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டால், அந்த அம்மையாரை கட்டை வண்டியில் போட்டுக்கொண்டு, 5 மைல், 10 மைல் தொலைவிலே இருக்கும் பிரைமரி ஹெல்த்



சென்டருக்கு அழைத்துப் போவார்கள். அப்படிப் போகிற சமயத்தில். அங்கே டாக்டர் இல்லை, நர்சு இல்லை, யாரும் இல்லை என்றால் என்ன செய்வது? அங்கிருந்து 5 மைல் தொலைவில் உள்ள செங்கத்திற்குப் போய்தான் பிரசவம் பார்க்கவேண்டியிருக்கிறது. பாதிப் பிரசவம் வண்டியில், பாதிப் பிரசவம் மருத்துவ மனையில் என்ற நிலைமை தான் ஏற்படுகிறது. இது மிகவும் மோசமான நிலையாக இருக்கிறது. இது மேல்பள்ளிப்பட்டு பிரைமரி ஹெல்த் சென்டரில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி நமது அமைச்சர் அவர்களிடம் கூறினேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தார்கள். இப்பொழுது அங்கேயே தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய டாக்டர் வந்திருக்கிறார்கள். மிகவும் சந்தோஷப்படவேண்டிய விஷயம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். டாக்டர் அங்கேயே இருந்துதான் மருத்துவம் செய்யவேண்டும். ஏனென்றால் ஒரு ஊரில் ஆஸ்பத்திரி இருக்கிறது என்றால் எப்பொழுது வேண்டுமானாலும் அங்கே நோயாளிகளைப் பார்ப்பதற்கு வசதி இருக்கவேண்டும். எப்பொழுது வேண்டுமானாலும் மார் வலி எடுக்கும். எப்பொழுது வேண்டுமானாலும் வியாதி வரும், ராத்திரியாக இருந்தாலும் சரி, பகலாக இருந்தாலும் சிகிச்சை பெற வசதி வேண்டும். ஜனங்கள் விரும்புகிற சமயத்தில் டாக்டர் இருக்கவேண்டுமே தவிர, டாக்டர் விரும்புகிற நேரத்தில் மட்டும் தான் வைத்தியம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றால், அது முடியாத காரியம். இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நிலைமை நீடிக்கக்கூடாது.

எந்த டாக்டரைப் போட்டாலும், அந்தப் பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிற ஊரிலேயேதான் டாக்டரும் தங்கவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும், அந்த மாதிரி ஒரு நிபந்தனையை ஏற்படுத்தவேண்டும். அதே மாதிரி எல்லா பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தந்த இடங்களிலேயே அவர்களுக்கு வேண்டிய வீடுகளையும் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிக முக்கியமானது ஒன்று. பெட்டூல் சிடியில் 186 மலேரியா வொர்க்கர்ஸ் இருக்கிறார்கள். அதிலே சர்வைலன்ஸ் இன்ஸ்பெக்டர்கள் 16, சர்வைலன்ஸ் வொர்க்கர்ஸ் 82, மஸ்தூர்கள் 88 பேர்கள், ஆக 186 பேர்கள். சர்வைலன்ஸ் இன்ஸ்பெக்டர்கள் ரூ. 210 வாங்குகிறார்கள் சிடியில் மொபசலில் ரூ. 210 பிளஸ் அலவன்ஸ் வாங்குகிறார்கள். சர்வைலன்ஸ் வொர்கர்ஸ் ரூ. 158 வாங்குகிறார்கள் சிடியில், மொபசலில் ரூ. 170 பிளஸ் அலவன்ஸ் வாங்குகிறார்கள். மஸ்தூர்ஸ் சிடியில் ரூ. 136 வாங்குகிறார்கள். வெளியில் மொபசலில் ரூ. 186-ம் அதற்குத் தகுந்தமாதிரி அலவன்ஸும் வாங்கு

கிறார்கள். ஐந்து வருஷம், 10 வருஷம் ஆனாலும் கூட இன்னும் டெம்பரரியாகவே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கலியாணம் செய்து கொண்டு, குழந்தைகுட்டிகள் பெற்றுக்கொண்டு விட்டாலும், இன்னும் அதே நிலைமையில் டெம்பரரியாகவேதான் இருந்துகொண்டிருக்கிறார்கள். 10 வருஷம் ஆனபிறகும் கூட, வேலைக்கு வந்தவுடன் 'ராமசாமி' என்று கூப்பிட்டால், வந்தேன் என்றும் 'கோவிந்தசாமி' என்று கூப்பிட்டால் வந்தேன் என்றும் சொல்லக்கூடிய அந்த நிலைமையில் இருந்துகொண்டிருப்பது மிகவும் வேதனைப் படவேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு வேலையில் ஒரு பிடிப்பு ஏற்பட வேண்டும். அவர்களுக்கு நிரந்தரமாக உத்தியோகம் வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் மொபசலில் இருப்பவர்களை விட குறைந்த சம்பளம் வாங்குகிறார்கள். தனிப்பட்ட இடத்தில் வேலை செய்பவர்களைவிட குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். மேலும், நிரந்தரமான உத்தியோகம் இல்லாமல் இருக்கிறார்கள். 10 வருஷமாகவே டெம்பரரியாக வேலை செய்கிறார்கள். அந்த நிலைமை நன்றாக இல்லை. இப்படி இவர்கள் பல ஆண்டு காலமாக நிரந்தரமாக உத்தியோகம் இல்லாமலேயே இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு திருப்தி ஏற்படத்தக்க விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (மணியடித்து). நேரம் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

அங்கத்தினர் அவர்கள் தமது உரையில், * * என்று சொன்னதை நீக்கிவிட்டு, 'குறிப்பிட்டார்கள்' என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உத்திரவிடுகிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இம் மருத்துவ மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதலாவதாக இப்போதுள்ள 'ஆனரரி' டாக்டர்ஸ் முறை, அதாவது கௌரவ டாக்டர்களை நியமிக்கும் முறை இன்னும் நீடிக்கப்படவேண்டுமா என்பது பற்றியது. இது பலகாலமாக இருந்துகொண்டு வருகின்றது. அந்தக் காலத்திலே இப்படிப்பட்ட முறை சரியானதாக இருந்தாலும் அது பெரிதும் மாறுபட்ட இந்தக் காலத்திற்கு ஏற்றதுதானா என்று யோசித்துப்பார்க்க வேண்டும். அதை நீடிப்பதால் இந்தக் காலத்தில் மக்களுக்கு பலன் ஏதாவது ஏற்படுகிறது என்று சொல்லுகிறதைவிட பல அசௌகரியங்களுக்கும் இடைஞ்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



சல்களும்தான் ஏற்படுகிறது என்று சொல்லவேண்டியிருக்கிறது. இப்படிப் பட்ட கருத்தினைப் பரவலாகக் கேட்க முடிகின்றது. எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து நமது நாட்டில் இத்தகையதொரு முறை இருக்கவேண்டியதுதானா என்று தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏன் என்றால் இப்போது மருத்துவக் கல்லூரிகளில் படித்துப் பட்டம்பெற்றுவிட்டு ஏராளமான டாக்டர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள். மேலும் நமது அரசிலேயே பணியாற்றும் பல நிபுணர்கள் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலையில் வெளியிலிருந்து யாரையாவது 'ஸ்பெஷலிஸ்டுகள்' என்று 'கௌரவ டாக்டர்கள்' என்று நியமிப்பது சிறந்ததுதானா என்று யோசித்துப்பார்க்கவேண்டும். அவர்களை நம்பி நாம் இந்த முறையினை வைத்திருக்கவேண்டும் என்ற கொள்கை தேவையில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே வெளிப்படையாகச் சொல்ல விரும்பவில்லை. எனவே இத்தகைய முறையை இன்னும் தொடர்ந்து வைத்திராமல் இதை நீக்கிவிடுவது நல்லது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது 'ஸ்டூடன்ட்ஸ் டெண்டல் ப்ரோக்ராம்' என்று ஒரு திட்டம் இருக்கிறது. இதன்படி பள்ளியில் பயிலும் மாணவர்களை டாக்டர்கள் போய் பரிசோதித்து அவர்களுடைய பற்களின் நலன்களை கவனித்து தேவையான மருந்துகளைக்கொடுக்க முடிகின்றது. இது மிகவும் ஒரு நல்ல திட்டம். இது மாநிலத்தில் பல இடங்களில் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. நாகர்கோவிலில்கூட இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது மேலும் பரவலாக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக பற்களையொட்டித்தான் பல வியாதிகளும் ஏற்படுகின்றன என்று அத்துறையிலுள்ள நிபுணர்கள் கூறுகின்றார்கள். எனவே குழந்தைப் பிராயத்திலேயே பற்கள் சம்மந்தப்பட்ட நோய்கள் வராமல் தடுப்பதற்காக அரசு எடுத்துள்ள சிறந்ததொரு திட்டமாகும் இது. இதை மாநிலம் முழுவதிற்குமாக அமுல்படுத்தினால் நல்லதாக இருக்கும்.

இதே நேரத்தில் இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதுள்ள இந்த 'ஸ்டூடண்ட்ஸ் டெண்டல் ப்ரோக்ராம்' என்று இருப்பதை, 'ஸ்டூடண்ட்ஸ் ஹெல்த் ப்ரோக்ராம்' என்று மாற்றிக்கொண்டால், பற்களையொட்டிய வியாதிகள் மட்டும் இல்லாமல் படிக்கும் மாணவர்களுடைய உடல் நலன்களைப் பாதுகாப்பதற்கு அவ்வப்பொழுது பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும். இப்படிப்பட்ட திட்டத்தினை அமுல்படுத்தினால் நல்லதாக இருக்கும். டாக்டர்களுக்கு எங்கே போவது என்று பயப்பட வேண்டிய அவசியமில்லை.

உதாரணமாக ஒரு மருத்துவ மனையில் மூன்று அல்லது நான்கு டாக்டர்கள் பணியாற்றுகின்றார்கள் என்றால் அவர்களில் யாராவது மோட்டார் அல்லது மோட்டார் சைகிள் வைத்துக்கொண்டு இருந்தால் அவர்கள் இப்படிப்பட்ட திட்டத்தில் ஈடுபடுத்தப்படலாம். முதன்முதலாக அந்த ஊரிலேயே உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுடைய உடல்நலம் பற்றிக் கவனிக்கலாம். பள்ளியில் படிக்கும் மாணவர்களுடைய அறிவுத்திறனைப் பற்றி எப்படி மாதா மாதம் மார்க்குகள் போட்டு, 'ப்ரோக்ரஸ் ரிப்போர்ட்' என்று பெற்றோருக்கு அனுப்பப்படுகிறதோ அதுபோன்ற முறையில் இப்படி டாக்டர்கள் அவர்களுடைய உடலைப் பரிசோதித்து மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களுடைய 'ஹெல்த்' பற்றிய தொரு 'ப்ரோக்ரஸ் ரிப்போர்ட்'-டும் அனுப்பினால் நலமாக இருக்கும். இப்படிப்பட்ட முறையில் ஏழை மாணவர்கள் பெரிதும் பலனடைவார்கள். எனவே இதற்கு என்று ஒரு முறையினை அரசு தயார் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தரமான மருந்துகள் கொடுக்கப்படுவதில்லை என்ற குறை இருந்து கொண்டே இருக்கிறது. இப்போது மருத்துவ மனைகளுக்கு வேண்டிய மருந்துகளை டெண்டர் மூலம் கோரிப்பெறுகிறோம். இதன்படி குறைந்த டெண்டரை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். குறைந்த அளவிற்கு டெண்டர்கள் கொடுப்பவர்கள் தரமான மருந்துகளைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே சற்று விலை கூடுதலாக இருந்தாலும் தரமான மருந்துகள் கிடைத்தால் தான் அதன் மூலம் அதிக பலன்கள் கிடைக்கும் என்ற முறையில் இதுபற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, 'கன்ஸல்டிங் ஹாஸ்பிடல்ஸ்' என்ற முறையினை ஏற்படுத்தினால் சற்று அதிக பலன்கள் கிடைக்கும் என்று எண்ணுகிறேன். உதாரணமாக, இப்போது பல மருத்துவ மனைகளிலும் ஏராளமான அளவிற்குக் கூட்டம் இருப்பதைப் பார்க்கிறோம். பலர் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றார்கள். ஏதாவது 'காம்ப்ளிகேடெட் டிஸீஸ்' இருந்தால் மதுரை, சென்னை போன்ற பெரிய நகரங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற்குப் பதிலாக மாவட்டங்கள்தோறும் இப்படிப்பட்ட 'கன்ஸல்டிங் ஹாஸ்பிடல்'கள் ஏற்படுத்தப்பட்டால், தாலுக்காகளிலுள்ள மருத்துவ மனைகளிலும் சரி, மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவ மனைகளிலும் சரி, 'காம்ப்ளிகேடெட் கேஸ்' என்று வரும்போது இப்படிப்பட்ட 'கன்ஸல்டிங் ஹாஸ்பிடல்களில்' அதற்கான சிகிச்சைகளைக் கேட்டறிந்து அங்கேயே மாவட்டத்திற்குள்ளேயே சிகிச்சைகளை அளிக்க முடியும். இதுபற்றியும் அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.



இன்னும் ஒன்றை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது என் தொகுதிபற்றியதொரு வேண்டுகோளை விடுக்க ஆசைப்படுகிறேன். அருப்புக்கோட்டையிலுள்ள மருத்துவ மனையில் குழந்தைகளுக்காக உள்ள வார்டு இருக்கிறதே அது வெறும் ஓடாலான ஷெட்டில் இருக்கிறது. அந்த ஓடிற்கு கீழே வேறு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. எனவே அம்மருத்துவமனையிலுள்ள மற்ற மற்ற நல்ல கட்டிடங்கள் போலவே இதற்கும் நல்லதொரு கட்டிடமாக அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுபோல கிழத்தாவலிலுள்ள "ப்ரைமரி ஹெல்த் சென்டர்" இப்போது ஒரு கூரை ஷெட்டில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதையும் நல்லதொரு கட்டிடத்தில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையினை இந்த அளவில் முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மருத்துவ பொதுச் சுகாதார மான்யத்தின்மீதான விவாதத்தில் பங்குகொண்டு இரண்டொரு கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஒரு நாட்டின் இலட்சியம் அந்த நாட்டிலுள்ள மக்களின் நல்வாழ்வில் தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு இந்தத் துறையில் ஆண்டுக்காண்டு கூடுதலான தொகையினை ஒதுக்கி, சிறப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது பற்றி நாம் அனைவரும் அறிவோம். மருத்துவக் கல்வியினை எடுத்துக்கொண்டால் நாட்டிலுள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்று டாக்டர்களாக வெளியே வருகின்றார்கள். இந்த எட்டு மருத்துவக் கல்லூரிகளில் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ மனைகளிலே அவர்கள் சிறந்த பயிற்சி பெற்று, அவர்களால் மக்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது பற்றி நமது அரசினைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாவோம்.

குறிப்பாகச் சென்ற ஆண்டில் இதய சிகிச்சைக்கு என்று தனியானதொரு மருத்துவ மனையினை பலமாடிக்கட்டிடம் ஒன்றைக் கட்டி அதிலே இன்று அது சிறப்பாக இயங்குவது பற்றி பாராட்டாமல் இருக்கமுடியாது. இப்படி இதய சிகிச்சைக்காகவும் 'ந்யூராலஜி'-க்காகவும் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் இக்கட்டிடத்தினை எழுப்பி இவ்விரண்டு துறைகளிலும் சிறப்பான முன்னேற்றம் காணத்தக்க அளவில் வசதிகள் அங்கே செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற பிரிவுகளை கோவை மாவட்டத்திலுள்ள மருத்துவ மனையில் ஏற்படுத்தித்தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இது போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல "தமிழ்நாடு ஃபெலோஷிப் ஸ்கீம்" என்ற முறையில் மேல்நாடுகளிலிருந்து குறிப்பிட்ட துறைகளில் உள்ள பல அறிஞர்களை இவ்வாண்டில் வரவழைத்து அவர்கள் மூலம் நாம் சிறந்த யோசனைகளைப் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, "மொபைல் ஹாஸ்பிடல்" என்று சொல்லும் இரண்டு யூனிட்டுகள் ஒன்று ஸ்டான்லி மருத்துவ மனைக்கும் மற்றொன்று மதுரையிலுள்ள எர்ஸ்கின் மருத்துவ மனைக்கும் இணைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. ஸ்டான்லி மருத்துவ மனையைச்சார்ந்த யூனிட்டு கடந்த சில காலம் கும்மிடிபூண்டியில் இருந்து சிறப்பாகப் பணியாற்றி இப்போது கடந்த செப்டம்பர் திங்களிலிருந்து செங்கற்பட்டுக்கருகிலுள்ள காட்டாங்கொளத்தூரில் பணியாற்றி வருகின்றது. சாதாரணமாக அதன் பலன்களை அனுபவித்த மக்கள் அந்த யூனிட்டு வேறு இடத்திற்குப்போக அனுமதிக்கமாட்டார்கள் என்றாலும் ஒரு குறிப்பிட்ட காலம்தான் அது ஒரு இடத்தில் செயல்பட முடியும். அப்படிப்பட்ட திட்டம் தான் அது. எனவே அது மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும். இது போன்று எதிர் காலத்தில் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலுள்ள யூனிட்டும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்படவேண்டும், அதன் பலன்கள் அனைத்து மக்களுக்கும் எதிர்காலத்தில் கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று ரெவின்யூ அதிகாரிகள் மனுநீதித் திட்டத்தின்படி எப்படி கிராமங்களுக்குச் சென்று, அவர்கள் குறைகளைக் கேட்டறிந்து, தீர்த்து வைக்கின்றார்களோ, அதைப் போன்ற ஆப்தால்மிக் ஆஸ்பத்திரிப் பிரிவுகள் கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றன. இந்த ஆப்தால்மிக் பிரிவில் 25 முகாம்கள் நடத்துவதற்கு 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த சிகிச்சைக்கு ஒரு முகாமுக்கு கிட்டத்தட்ட 15 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய்வரை செலவாகிறது. ஆங்காங்கே இருக்கிற பொதுமக்களிடம் நிதி உதவி பெறப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் இந்த 75 ஆயிரம் ரூபாய் போதாது. அரசாங்கம் இன்னும் கூடுதலாகத் தொகை ஒதுக்கவேண்டும். அதோடு 'காடராக்ட்' சிகிச்சை அளிக்கும் முகாம் ஊழியர்களுக்கும், அளிக்கப்படும் பயணப்படி போன்றவைகளுக்கும் இதர வசதிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கும் தொகையையும் மேலும் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருந்துகள் ரிசர்ச் பணியில் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கவனஞ்செலுத்தவேண்டும். நோய் தீர்க்கும் ஏராளமான நாட்டுச்செடிகள் உள்ளன. அவைகளையெல்லாம் கண்டறிந்து, நோய்தீர்க்கும் பணிக்குப் பயன்





படுத்தவேண்டும். உதாரணமாக, காமாலைக்கு நாட்டு வைத்தியத்தில் இன்றைக்கு கைதேர்ந்த மருந்தாக கீழாநெல்லி என்ற செடி பயன்படுத்தப் பட்டு வருகிறது. இதுபோன்று தமிழ் மருந்துச் செடிகள் ஏராளம் உள்ளன. அவைகளையெல்லாம் ஆராய்ந்து, நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மெடிக்கல் சர்வீஸ் பற்றி சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இன்றைக்கு கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 700 ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் சேர்த்து 13,655 படுக்கைகள் உள்ளன. பல ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதிகள் போதாது 100 படுக்கைகள் இருந்தால் 200, 300 பேர் இன்பேஷன்டாகச் சிகிச்சை பெறுகிறார்கள். படுக்கை வசதி இன்மையால் பாய்களிலும், தரையிலும் படுத்து, சிகிச்சைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக, இன்றைக்கு ஏராளமான பேர் காசநோயாலும், தொழு நோயாலும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 7 லட்சம் பேர் காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே பார்ப்பதாக இருந்தால் 10, அல்லது 15 லட்சம் பேராவது காச நோயால் பிடிக்கப்பட்டவர்கள் இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இதிலே சுமார் ஒரு லட்சம் பேர் கடுமையான காசநோயால் பிடிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நோய் மற்றவர்களையும் தொற்றும் தன்மையுடையதாகையினால் இந்த ஒரு லட்சம் பேர்களையும் ஆஸ்பத்திரியிலேயே வைத்து சிகிச்சை அளிக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு காசநோய் ஆஸ்பத்திரிகளில் மொத்தம் 33,580 படுக்கைகள்தான் இருக்கின்றன. எனவே, மொத்த பேருக்கும் படுக்கை வசதி செய்து, சிகிச்சை அளித்தால்தான் இந்த நோய் பரவாமல் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு கோவை மாவட்டத்திலே தொழு நோயாளிகள் அதிகமாக இருக்கின்றார்கள். எனவே, அங்கே அந்த நோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சரவர்களுக்கு இன்னும் கோவையில் தொழுநோய் இருப்பதாகவே தெரியவில்லை. இந்த நோயைப்பற்றி அவர்கள் குறிப்பிடும்போதெல்லாம், செங்கற்பட்டு மாவட்டம், தென் ஆற்காடு, வட ஆற்காட்டில் ஒருபகுதி, சேலத்தில் ஒரு பகுதி என்றுதான் கூறுகிறார்களே தவிர, கோவையைப் பற்றிக் குறிப்பிடுவது கிடையாது. பவானி, கோபிச் செட்டிப்பாளையத்தில் இந்த நோய் அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1972 மார்ச் 17

அடுத்து 45 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மருத்துவ மனைகளை அரசாங்கமே ஏற்று நடத்துவது சிறந்த ஏற்பாடு. அவைகளை ஏற்றுக்கொள்வதோடு அவைகளின் வசதிகளையும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்று இந்தியா பூராவும் ஹோமியோபதி மருத்துவம் சிறந்த இடம் பெற்று வருகிறது. அது வரவேற்கத்தக்க ஒரு நல்ல அம்சமாகும். அடுத்து என்னுடையத் தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

கோபிச்செட்டிப் பாளையத்தில் உள்ள மருத்துவ மனையில் 65 படுக்கைகள் இருக்கின்றன. அங்கு குறைந்தது 100 படுக்கைகளாவது போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவ மனையில் ரத்தம் சேமித்து வைக்க வசதி கிடையாது. எனவே, ஒரு ரத்த சேமிப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் ரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தித்தருமானால் அங்கே இருக்கின்ற அரிமா சங்கத்தின் மூலம் ஒரு தொகை அளிக்கவும் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்து, எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை வரவேற்று பேசுகின்ற நேரத்தில் முதலிலே அமைச்சரவர்களுக்கும், மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் சென்ற ஆண்டு நான் பல மானியங்களின் மீது பேசினேன். இந்த நல்வாழ்வுத்துறை மானியத்தின்மீது பேசும்போது நான் பேசிய ஒரு கருத்தின் மீது அவர்கள் ஒரு முடிவு எடுத்து, அந்த முடிவை எனக்குத் தபால் மூலம் தெரிவித்தார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மேல்விசாரத்தில் கோஷா பெண்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று தெரிவித்திருந்தேன். அதை நல்லமுறையில் பரிசீலித்து சாதகமான முடிவினை எடுத்திருக்கிறார்கள். அதற்காக அந்த மக்களின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போன்று மற்றத் துறைகளிலும் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர் லத்தீப் அவர்கள் வாணியம்பாடியில் இருக்கின்ற மருத்துவ மனையை அறுபது ஆயிரம் ரூபாயுடன் அரசாங்கத்திற்கு கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். அதை அரசாங்கம் ஏற்று, நல்ல வசதியுடன் செய்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 17] [திரு. கே. எ. வகாப்]

அடுத்து, இன்றையதினம் மறைந்திருந்த பல பெரிய நோய்கள், அதாவது காலரா, பிளேக், அம்மை போன்ற நோய்கள் குறைந்துவிட்டன. ஆனால் ஹார்ட் அட்டாக், வயிற்றுக்கோளாறு, பாரிச வாயு போன்ற நோய்கள் வேகமாக பரவி வருகின்றன. இதற்கு காரணம் என்ன என்பதை கண்டறிய ஒரு நிபுணர் வைத்தியக் குழுவை நியமித்து ஆராய்ச்சி செய்யவேண்டும். செம்மதி யாட்டுக் கறி, உணவில் கலப்படம் செய்தல், அதிகமான செயற்கை உரங்களைப் பயன்படுத்துதல் போன்ற காரணங்களால்தான் இந்த நோய்கள் வருகின்றன என்று சொல்லப்படுகிறது. இதை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற இடங்களைவிட ஃபைலேரியா என்று சொல்லப்படுகிற யானைக்கால் வியாதி அதிகமாக இருக்கிறது. புள்ளி விபரங்களிலிருந்து 1½ கோடி பேருக்கு ஃபைலேரியா இருப்பதாகத் தெரிகிறது. இந்த நோயைப் பரப்புவதற்குக் காரணமாக இருக்கின்ற கொசுவை ஒழிப்பதற்கு ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொசுவை ஒழிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற ஆராமிக்ஸ் எண்ணெய் ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அதனால் போதுமான எண்ணெய் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. எனவே எல்லாக் கம்பெனிகளிலும் இந்த மருந்து எண்ணெயை தயாரிப்பதற்கும் வாங்குவதற்கும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கலப்படத்தைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நோய்கள் பரவுவதற்கு முக்கியக் காரணமே உணவில் செய்யப்படும் கலப்படம்தான். கலப்படத்தைத் தடுப்பதில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் சிறிய அப்பாவி வியாபாரிகள்தான் கிடைத்து தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களைத் தண்டித்துப் பயனில்லை. கலப்படம் செய்து விற்பனை செய்கின்ற பெரிய வியாபாரிகளைத் தண்டிக்கவேண்டும். அப்போதுதான் கலப்படம் குறையும்.

அடுத்தபடியாக காற்றின் தூய்மை கெடுவதாலும் நோய்கள் பரவுகின்றன. இன்றைக்கு ராணிபேட்டையில் சுத்தமான காற்று கிடைப்பதற்கே வழி இல்லாத நிலையில் இருக்கிறது. உதாரணமாக, ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். நண்பர் ஒருவர் ரயிலில் செல்லும்போது சொன்னார், உன்னுடைய ஊரைப் பார்க்காமலேயே சொல்லிவிடலாம் என்று. எப்படி என்று கேட்டேன். காற்றின் வாசனையே சொல்லிவிடும் என்று பதில் சொன்னார். பெங்களூருக்கு ரயிலில் செல்லும்போதே, காற்றின் வாசனையை அறிந்து,

இதற்கு இராணிப்பேட்டை என்று சொல்லிவிடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அங்கே தோல் பதனிடும் வேலை அதிகமாக நடைபெறுவதால் அந்த நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. ஆகவே, அந்த நாற்றத்தைப் போக்குவதற்கு அரசாங்கமே ஒரு திட்டத்தைத் தயாரித்து, செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இங்கே நம்முடைய சென்னை பொதுமருத்துவ மனையை எடுத்துக்கொண்டால், தற்போது செய்யப்பட்டிருக்கிற நிர்வாகச் சீர்திருத்தம் வரவேற்கத்தக்கது. ஆஸ்பிட்டல் கவனிக்க சூப்பிரண்ட் என்பவரும் மருத்துவ கல்லூரியை கவனிக்க டீன் என்பவரும் இருக்கின்றனர். இதனால் சூப்ரென்ட் என்பவர் ஆஸ்பத்திரி நிர்வாகத்தை மிகவும் நல்ல முறையில் நடத்தி வருகிறார்.

அங்கே அந்துப்பூச்சி என்ற ஒருவித பூச்சியினால் நோயாளிகளுக்கு மிகுந்த தொந்தரவாக இருக்கிறது. அங்கே இருக்கின்ற டீன் சூப்பரின்டென்ட் எல்லோரும் நல்லமுறையில்தான் செயல்படுகிறார்கள். இருந்தாலும் அந்த அந்துப்பூச்சியை ஒழிக்க முடியவில்லை. 'ஏ' வார்டு ஆனாலும் சரி, 'சி' வார்டு ஆனாலும் சரி, ஒரு ரொட்டியை மேசைமீது வைத்து விட்டு 10 நிமிடங்கள் கழித்துப் பார்த்தால் ரொட்டி அங்கே இருக்காது. எல்லாவற்றையும் அந்துப் பூச்சிகள் சாப்பிட்டு விடுகின்றன. இந்தப் பூச்சி எங்கிருந்து வருகிறது என்று கேட்டால் தண்ணீர் செல்லக்கூடிய குழாயிலிருந்து வருகிறது; என்ன செய்தாலும் ஒழிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, அதை ஆராய்ந்து, குழாய்களைப் பழுது பார்த்தாவது அந்தப் பூச்சிகளை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொரு மருத்துவ மனையாகிய ஸ்டான்லி மருத்துவ மனை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதாக அதிருப்தி இருக்கிறது. அங்கே ஏறத்தாழ பத்து ஆப்பரேஷன் தியேட்டர்கள் இருந்தும் ஒன்றில் கூட ஏர்கண்டிஷன் வேலை செய்யவில்லை. பொதுப்பணி மராமத்து மிகவும் குறைவாக இருக்கிறது. அறைகள் குறைவாக இருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெடிகல் காலேஜ் அட்மிஷன்பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தல் எல்லா மக்களுக்கும் திருப்தியை அளித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டைவிட முஸ்லிம் சமுதாயத்திற்கு ஓரளவு அதிகமான இடம் இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும்—பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கொடுக்கப்பட்டது போல் இன்னும் அதிகமான அளவில் அவர்களுடைய மக்கள் தொகைக்கு ஏற்ப இடம் ஒதுக்குவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, யுனானி, சித்த வைத்தியத்தில் அமைச்சர் அவர்களுக்கு உள்ள ஆர்வம் அக்கறை பாராட்டத்தக்கது. சித்த வைத்தியத்திற்கு இன்றையத் தினம் அளிக்கப்படுகிற உதவியைப் போலவே யுனானி வைத்தியத்திற்கும் அளிக்க அரசு முன்வரவேண்டும். இன்றையதினம் யுனானி வைத்திய டாக்டர்கள் அருகிக்கொண்டு வருகிறார்கள். எங்கள் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள் தம் அனுபவத்தில் ஒரு உதாரணத்தைக் குறிப்பிட்டார்கள். மற்ற மற்ற வைத்தியத்துறை நிபுணர்களால் நோயாளி இறந்து போய்விடுவான் என்று கைவிடப்பட்ட ஒரு கேசில் யுனானி முறையில் ஒரு மருந்தை மணிக்கு ஒருமுறை அந்த நோயாளியின் நாக்கில் தடவ—ஐந்து மணிகளில் அந்த நோயாளி எழுந்து உட்கார்ந்துவிட்டான் என்றார்கள். அது போல பல அற்புதமான மருந்து யுனானி முறையில் இருக்கிறது. ஆகவே யுனானி மருத்துவத்துறையில்—டாக்டர்கள் இல்லை பத்து வருஷத்தில் யுனானி டாக்டர்களே இல்லை என்கிற குறைபாடு ஏற்படாதிருக்க ஒரு பயிற்சிக் கல்லூரியையும் ஏற்படுத்தித் தரவேண்டும். அதில் யுனானி பயிற்சி பெற டாக்டர்களுக்கு வாய்ப்பு அமைக்க வேண்டும். இதற்கு ஒரு சித்த வைத்தியத்திற்கு செலவு செய்வதில் 25 சத விகிதம் செலவு செய்தால் போதும், சித்த யுனானி ஆயுர்வேத வைத்திய முறைகளை சென்னை நகர் மட்டுமின்றி மற்ற மற்ற எல்லா மாவட்டங்களிலும் பரப்புவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து . . . . (மணியடிக்கப்பட்டது).

டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பொதுச் சுகாதார மானியத்தை ஆதரித்து என்னுடைய மாவட்டத்திலே வேண்டப்படுகின்ற ஒருசில கோரிக்கைகளை முன்வைக்க விழைகிறேன்.

சுகாதாரம் அடித்தளத்தில் இருக்கிற கிராம மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால்தான் ஒரு நாட்டின் சுகாதாரம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டதாகக் கருதப்படும். அந்தவகையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய என்னுடைய தர்மபுரியை எடுத்துக் கொண்டால் அங்கே தலைமை மருத்துவ மனை இருக்கிறது. தர்மபுரி தனி மாவட்டமாகப் பிரிந்து ஐந்தாண்டுகள் ஆகியும் தலைமை மருத்துவ மனை எந்தவகையிலும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பது மிகமிக வருந்தத்தக்கது. அங்கே ஒரு சின்ன எக்ஸ்ரே மிஷின்தான் இருக்கிறது. துரதிருஷ்டவசமாக எந்தச் சமயத்தில் சென்றாலும் அது பழுதுபட்டு இருப்பதாகவே சொல்லப்படுகிறது. இப்படி ஒரு தலைமை மருத்துவ மனையே இருக்கிறது என்றால் வட்ட மருத்துவ மனைகள் எப்படி இருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

தர்மபுரி மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு கட்டிடம் கட்ட நிலங்கள் முடிவு செய்யப்பட்டுவிட்டதாக அறிகிறேன். அதற்கு உடனடியாக புதிய கட்டிடங்கள் கட்டித்தர தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ரத்த சேமிப்பு நிலையத்தையும், எக்ஸ்ரே சாதனங்களையும் உடனடியாக அங்கே ஏற்படுத்தித்தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரூர் வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டம். சின்ன வயதில் அந்த அரூரில் நான் படிக்கும்போது அங்கே மருத்துவ மனை எப்படி இருந்ததோ அதுபோலத்தான் இன்றும் இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் தான் மின்சாரமே அங்கே வந்தது. அந்த மருத்துவ மனைக்கு 20 மைல் சுற்றளவில் இருந்து மக்கள் வருகிறார்கள். பத்துப்பதினைந்து படுக்கைகள் கூட இல்லாத அளவுக்கு இருக்கிறது. அதை மேல்நிலைப் படுத்தித்தரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. கடந்த ஆண்டு மருத்துவத் துறை இயக்குநரைக் கூடச் சந்தித்துக் கேட்டேன். ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அரசும் அத்துறையில் கவனம் செலுத்தி, அதில் ஏதாவது தடைகள் இருந்தால் அகற்றி, சீக்கிரத்தில் அந்தக் காரியத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரூர் வட்டம் மலையும், மலையைச் சார்ந்த இடமும் ஆகும். கோட்டப்பட்டி, சிட்டேரி முதலிய இடங்களுக்கு வாகன வசதி கிடையாது. நடந்தே போக வேண்டும். கோட்டப்பட்டி, கொக்கவேம்பு போன்ற இடங்களில் ரூரல் டிஸ்பென்சரிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

ரூரல் டிஸ்பென்சரி—ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் என்றால் அங்கெல்லாம் டாக்டர்கள் போவதற்கு முதலில் தயங்குகிறார்கள். நான் சர்வீசில் இருந்த போதே பார்த்தேன். காரணம் அவர்கள் தங்குவதற்கு வசதியாக இடங்கள் அந்தப் பகுதிகளில் கிடைப்பதில்லை. ஆகவே டி.எச்.ஓ., டி.எம்.ஓ. ஆகியவர்கள் நேரில் அந்தப் பகுதிக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் நீங்கள் டாக்டர்களும் அலுவலர்களும் தங்குவதற்கு இடம் கொடுத்தால்தான் ஆஸ்பத்திரிகள் வரும் என்று சொன்னால்—அங்குள்ளவர்கள் வசதியான வீட்டை. ஏற்படுத்திக் கொடுக்க கண்டிப்பாக முன்வருவார்கள். ரூரல் டிஸ்பென்சரிகளை ஏற்படுத்தும் போது முதலில் டாக்டர்களுக்கும், பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர். எங்கள் தர்மபுரி மாவட்டம் வறண்ட பகுதி. நல்ல மழை இருந்தாலும் இரண்டு மாதங்களிலேயே குடி தண்ணீருக்கு கஷ்டம் ஏற்பட்டுவிடும். ஊத்தங்கரை, அரூர் போன்ற இடங்



களில் வண்டிகளில்தான் குடிதண்ணீர் கொண்டு வரப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் கே. ஆர். கே. சொன்னதுபோல அந்தத் தண்ணீரைப் பரிசோதனைக்கு அனுப்பினால் அதுவும் குடிப்பதற்கு லாயக்கில்லை என்றே பதில் வந்துவிடுகிறது. ஆகவே, அரூருக்குப் பாதுகாப்புக் குடிநீர் பெண்ணையாற்றிலிருந்து கொண்டுவந்தால் வசதியாக இருக்கும். அப்படி கொண்டுவரும்போது வழியில் இருக்கிற பத்துப்பதினைந்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரேரணையை பப்ளிக் ஹெல்த் போர்டு மூலம் அனுப்பியிருக்கிறேன். அதை குடிநீர் வாரியத்திற்கு அனுப்பியிருப்பதாக பதில் வந்திருக்கிறது.

சென்னையிலே, மருத்துவம், மருத்துவக் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றின் அலுவலகங்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கின்றன. குடும்பக் கட்டுப்பாடு எழும்பூரிலும், மருத்துவம் தேனாம்பேட்டையிலும், மருத்துவக் கல்வி சேப்பாக்கத்திலும் உள்ள கட்டிடங்களில் அமைந்திருக்கின்றன. இந்த அலுவலகங்கள் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பொது மக்களும், டாக்டர்களும் மிகுந்த சிரமப்படுகிறார்கள். மூலைக்கொன்றாக இருப்பதால் இங்குமங்கும் அலைந்து திரிய வேண்டியிருக்கிறது. நாம் மருத்துவத் துறையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடப் போகிறோம். ஆகவே, அந்தச் சமயத்திலாவது இந்த மூன்று அலுவலகங்களும் ஒரே காம்பவுண்டிற்குள் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த மூன்று அலுவலகங்களும் ஒரே கட்டிடத்தில், அல்லது ஒரே காம்பவுண்டிற்குள் அமைப்பது எல்லோருக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அறுவை சிகிச்சை செய்துகொண்டால் சரியாக வேலைசெய்ய முடியவில்லை என்று ஒருவர் குறிப்பிட்டார். நானும் மருத்துவன் என்ற முறையில் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நானும் அறுவை சிகிச்சை செய்திருக்கிறேன். நாம் அறுவை சிகிச்சை செய்யும்போது ஒவ்வொருவரிடத்திலும் தனிக் கவனம் செலுத்தவேண்டும். நாம் பேசுகிற பேச்சிலும், அளிக்கின்ற தைரியத்திலும் தான் நான் இதை வெற்றிகரமாகச் செய்யமுடியுமே தவிர வேறு வழிகளால் அல்ல. அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், தைரியம் அளிக்கும் வகையில் சில காரியங்களைச் செய்யவேண்டும். மாவட்டம் பூராவிலும் உள்ள அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின்

முகவரியை வைத்துக்கொண்டு, மாவட்டத்திலுள்ள மொபைல் குடும்பநல பீரோக்கள் யூனிட்டுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு யூனிட்டும், தன் பிரதேசத்திற்கு இருக்கின்ற அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் முகவரியை வைத்துக்கொண்டு, அவர்களை நேரில் அணுகி, மூன்று மாதத்திற்கு ஒரு முறை இல்லாவிட்டால் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அவர்களை நேரில் அணுகி 'நலம்' விசாரித்தால் அதுவே போதும். அவர்களுக்கு அதுவே நல்ல தெம்பை அளிக்கும். அதாவது அறுவை சிகிச்சை செய்தவுடன் அதைத் தொடர்ந்து, 'ஃபாலோ-அப்' செய்தால் போதும். இதன் காரணமாக மற்றவர்களும் அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வருவார்கள்.

இறுதியாக, என்னுடைய மாவட்டத்தைப் பற்றிக் கூறியவைகளைக் கருணையோடு கவனித்து, அதில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Mr. Deputy Speaker, in support of the cut motion given by our Party, I wish to offer a few remarks. Sir, it is a well-known fact that any amount spent under the head of medicine and public health, is not sufficient for the simple reason that the health of the people is the most important thing. Considering that, I feel that it would be better if a number of voluntary organisations also come forward and try to establish contacts with the Government and try to help the Government to see that with the little amount of help from the Government, they help the public at large. That is one of the aspects of the matter with which everyone would agree.

Then I wish to say certain things in regard to the administration of Public Health and Medical Department. Let me take the General Hospital which is in my constituency. It is deplorable to find that several rooms, several beds and several wards are not at all in a proper condition. There may be reasons for that but the point is that the standard of the Hospital is going down step by step.

To-day if one enters the Hospital, he will find that it is an anachronistic institution. I was a patient in the Hospital about 2-1/2 or 3 decades ago. Also a number of times I had been there to see my friends and even now the position is the same as before. There is also the mosquito and the bug problem. The Hon.



Member, Thiru Wahab also referred to the problems there. These problems are still increasing. Therefore, I request the Hon. Minister to devote some of his time to this aspect of the matter and upgrade the quality of cleanliness there. I am only trying briefly to explain some of the points for want of time.

Then there is the Cardiology Block which has been recently constructed. There is also the old Cardiology Section which must be properly cleaned. When we are trying to modernise the Cardiology Department, the whole thing should be kept in a proper condition.

About nurses, I want to pinpoint some of their problems. First of all, the stipend that they are getting in the name of food allowance, is going to be cut down. I want that the food allowance should not be withdrawn. Already they are getting very poor pay. In this connection, I wish to point out that in the Centrally-sponsored institutions, they are getting an allowance of Rs. 60 and it is going to be increased to Rs. 90. When the tendency is to increase the food allowance, there is no point in cutting it down. I hope the Hon. Minister will consider this aspect of the matter and continue the food allowance.

Then I come to another aspect of the matter. The number of patients per nurse has to be narrowed down because it is very difficult for a nurse to look after a number of patients. I also understand that the number of nurses are going to be cut down year after year progressively. I feel that it is imperative that the number of nurses must progressively increase and the number of patients per nurse must be progressively cut down. Then only the Government would get a good name and there is no use of spending a huge amount without providing the patients with the basic necessities. I request the Hon. Minister to consider this aspect of the matter.

Then we have got graduate-nurses. What are the promising opportunities for graduate-nurses and that should be spelt out.

Then I come to the Malaria Eradication Programme. The staff employed under that programme in Saidapet should be made permanent.

Coming back to the General Hospital, frequent failure of electricity is taking place in the Madras City. Even in Shenoynagar there is frequent failure of electricity. What alternative arrangement has been made in the General Hospital to meet that situation. Have the Government made arrangement to have a generator there. Also what has happened to the generator at Rameswaram? (A voice: It is there). So this aspect of the matter has to be gone into.

Then I come to the extension given to the Medical Officers. This aspect of the matter has been exhaustively touched by the Hon. Member, Thirumathi T. N. Anandanayaki. The House Surgeons' Association, Assistant Surgeons' Association and the Indian Medical Association have all passed resolutions in regard to this matter and have sent it to the Government for proper action. In their resolutions, they have clearly stated that they are against extension being given to them ...

THE HON. THIRU K. ANBAZHAGAN : We have accepted it.

DR. H. V. HANDE :

I am not imputing any motives to the Minister. Rare cases may be there. But what I want to say is that assurances, categorical assurances of Government should be kept up and this sort of extensions should not be given hereafter.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The Hon. Member is insisting on the point whether the Government have categorically assured the House Surgeons that doctors reaching superannuation will not be given extension of service. It is being done. Only in rare cases, where other suitable persons are not available, extension is given. These are cases which ought to be decided by Government. Government will answer any person who wants to criticise on such issues. Government have a right to decide on such issues. 99 per cent of the cases are not given extension. Only on rare occasions, when the specialists or other suitable people are not there, in such rare cases only, Government takes a decision with a clear view to help administration.

DR. H. V. HANDE : My point is at least for top positions, to man the same, create an administrative cadre. I know the difficulty. But it should be possible to do it in such a big State, as Tamil Nadu. (Interruption) I do not want junior officers to be





posted. That is not the point. It is a question of Government issuing a clear order and persons obeying that order in Government service. Create an administrative cadre to man top posts in Medical Department. That is one aspect.

There is another aspect. It is not only in this department but in almost all other departments. If a person is given extension in the middle of the year, for the rest of the year he is practically doing nothing but thinking of getting extension for the next year. This has been happening not only during this D.M.K. Government but in previous Government also, for the past 20 years. He is not trying to train his juniors. I hope the Hon. Minister will touch upon this aspect in his reply. If there is one blanket order, these things could be remedied. What I say is, as is done in foreign countries, you can have 'professor emeritus'. That system may be adopted.

With regard to Mental Hospital, and psychiatric clinic attached to it, I want to say something. Of course the Hon. Lady Member Thirumathi Anandanayaki has mentioned about Bangalore Mental Hospital. With due respect I may say that our mental hospital is one of the best institutions in the country. I know about its worth. But one difficulty is in the case of doctors now working in the hospital, their work-load is too heavy. That should be reduced.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : In Bangalore hospital they have some courses like D.M.P., D.P., etc. I was mentioning that hospital because of such courses there and for nothing else. Wyh can't such courses be started here ?

DR. H. V. HANDE : That is a good point. The Hon. Minister says that courses would be started.

I was saying that workload of doctors in Mental Hospital in the city should be reduced. For that what should be done is this. Each headquarters hospital should have paychiatric clinics. That should be done. If that is done, pressure on mental hospital would be reduced. Now, all sorts of patients come there. We have 20 beds in Madurai, Tiruchirappalli and Salem for psychiatric cases. But in Tirunelveli, Coimbatore and Cuddalore, we do not have psychiatric clinics at all. If the Hon. Minister could consider the

possibility of introducing psychiatric clinics in all headquarters hospitals within a year from now, that would be a very major step. I hope it will be done.

He can also consider the question of starting post-graduate courses in the Mental Hospital in the city. That is one aspect.

The Pharmacists' Association have represented a number of grievances. There is a large volume of discontentment among them. That must be properly attended to by the Hon. Minister.

The State Pharmacists' Association have said that 20 per cent of the pharmacists' posts should be upgraded so that they will get promotion. They also want to be considered for Grade I and II store-keepers' posts in Government medical institutions, whenever vacancies arise. The Pharmacists' Association met the Health Secretary, under orders of the Minister and in the presence of the Director of Medical Education, certain assurances were given at that time. But they have not been implemented yet. They also wanted a weekly off. That has not been granted.

Now I come to Bachelor of Indian Medicine. I would be happy if the Hon. Minister gives some sort of protection for them. I know it is impossible to employ all doctors. But at least proper steps should be taken to increase the number of doctors, in these hospitals, so that more of these doctors could be absorbed in Government service.

About T.B. I want the Hon. Minister to consider one thing. The number of persons affected by T.B. is I think 7 lakhs. My hon. doctor friend in the House tells that it is more than 10 lakhs. I fully agree with him. But the number of persons given the full course of treatment is only 87,000. I know it is impossible for Government to treat all.

THE HON. THIRU K. ANBAZHAGAN : That is not so. Almost all the people are touched by our volunteers or basic health workers. In the village homes they are also treated. They have not completed treatment in one cycle.

DR. H. V. HANDE : After three months they develop resistance and that is dangerous. In foreign countries they are thinking of ameliorative treatment. I am against it. I do not think it will be successful in India.



About Family Planning I want to say one thing. Of course the Hon. Minister may be furious with me. But I can't help saying. I am saying this in a very broad-minded manner. I am a believer in that programme and the Hon. Minister knows how many times I have supported the Government on this issue. But politics is being infused in this. I have talked in the Governor's Address about posters being exhibited; I do not want to repeat the same thing. I have now got a pamphlet. It contains some reference about our Chief Minister's trip abroad and his reply to some questions about family planning.

*கேள்வி. குடும்ப நலத் திட்ட இயக்கத்தில் மிகவும் ஒன்றிணைந்த முதலமைச்சரைக் கொண்ட ஒரே மாநிலம் தங்களுடைய மாநிலந்தானே?*

The Hon. Chief Minister's reply is also printed.

*"அதற்குக் காரணம் நாங்கள் பிரதிநிதிகளாக இருக்கும் எங்கள் கட்சி" என்று சொல்லியிருக்கிறார்கள்.*

He has talked about his political party. This is a Government document. Why should reference to political parties be there? Why should the officers of the medical department take so much care to enthuse the Chief Minister? Why should politics be introduced in this family planning programme? That is my point. I am a believer in this programme. I did not want to talk at first on this. But I have to say that it is not the property of the Government alone. It is not the property of one party alone. All political parties are interested in this programme of Family Planning.

Let us also remember that the D.M.K. when it was in the opposition how many times they talked of family planning. Let us take the past records and see. Even granting they have supported the family planning programme, it is highly objectionable that such a document is made public and priority is given and distributed to all heads of departments and political parties. Supposing I make a speech on the basis of this, I have to refer to this. This sort of thing should not be allowed, it should be eschewed. The Hon. Minister for Health should make it less and less a matter for party platform. The general talk of the town is that family planning is being used for the furtherance of party glorification. Such things should be put an end to. If that is done it is a good thing.

My last point. I want again and again an assurance from the Hon. Minister for Public Health that teachers will not be compelled to bring in persons and that they will not be threatened that they would be disqualified for promotion if they did not do such things. Such things should be stopped. I request that the Hon. the Minister should once and for all issue a strong warning to all the small departmental heads who do such things to please the Government that such things should be completely eschewed.

With these words and with the hope and trust—I have always held that a senior member of the Cabinet should hold the Public Health Portfolio, the idea being that he would be able to get more funds and in that way he has been able to make some progress that more and more progress will be made and my ideas and suggestions will be taken in their true spirit and in no other attitude, I conclude my speech. Thank you, Sir.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவரவர்களே, இந்த முக்கியமான மானியத்திலே ஓரிரு கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் கூற விரும்புகிறேன்.

முதன்முதலிலே, இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன, ஆயிரத்துச் சில்லறை பேர்களுக்குப் பயிற்சியளிக்க வாய்ப்பிருக்கிறது என்றெல்லாம் அறிக்கையிலே இருக்கிறது. நான் ஒன்று கூற விரும்புகிறேன். இன்றைக்கு மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் இன்றைக்கும் டாக்டர்கள் போதாது. ஒருவேளை மற்ற மாநிலங்களைவிட இது கணிசமாக இருந்தாலும் இது போதாது என்ற கருத்தினை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

சமீபத்திலே இந்த மருத்துவப் பட்டம்பெற்ற டாக்டர்கள் ஒரு கிளர்ச்சி செய்தார்கள். அதிக மாணவர்களைச் சேர்க்கக்கூடாது, அப்படியிருந்தால் தங்களுக்கு வேலைவாய்ப்பை இழக்கக்கூடிய ஒரு இழிநிலை ஏற்பட்டுவிடும், அதிக சீட்டுக்களைக் கொடுக்கக்கூடாது என்று தெரிவித்தார்கள். முன்பிருந்ததைவிட இன்னும் வளர்ந்துவரும் சமுதாயத்தில் நமக்கு அதிகப்படியான மருத்துவர்கள் தேவை. அதிலும் கிராமப்புற மக்களுக்கு சேவை செய்வதற்கு அதிக மருத்துவர்கள் தேவை என்ற அடிப்படையிலே இதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்ற ஆலோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, இந்த வைத்தியக் கல்லூரியில் தேர்வுமுறைபற்றி நீதிமன்றங்கள் பல தீர்ப்புகள் கூறியிருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் விரிவாக நான் எடுத்துக்கூறத் தேவையில்லை. பொதுவாக இம்மாதிரி தேர்வானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் பெற்றிருக்கும் எண்கள் அல்லது மார்க்குகளைப் பிரசுரம் செய்வது மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும். இதைக் கேரளாவிலே கைப்பற்றி வருகிறார்கள். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் வரவில்லை. அந்தமுறை பரிசுத்தமானது, சிறப்பானது என்று இருந்தால் அமைச்சரவர்கள் அந்த முறையைப் பரிசிலனை செய்து அந்த முறையை அமல் நடத்த முடியுமா என்று ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்தத் துறையானது மக்களின் நலனைப் பேணிப் பராமரிக்கின்ற ஒரு முக்கியமான துறையாக இருப்பதால் இதைப்பற்றி அதிக அக்கறை செலுத்திவருகின்றார்கள். நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையிலே இங்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கூறினார்கள், அதேமாதிரி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள், இம்மாதிரி எக்ஸ்டென்ஷன் கொடுப்பதில்—கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை—ஆனால் இம்மாதிரியாக எக்ஸ்டென்ஷன்கள் கொடுக்கப்படும்பொழுது பலரும் பலவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. அது இந்த அரசாங்கமானாலும் சரி, அல்லது எந்த அரசாங்கமானாலும் சரி, அந்த அரசாங்கத்திற்கு அதைச் சமாளிப்பது சற்றுக் கடினமாகத்தான் இருக்கும் என்கின்ற காரணத்தினால் இம்மாதிரியான எக்ஸ்டென்ஷன்கள் கொடுப்பதைத் தவிர்த்துவிட்டு, வேண்டுமானால் அவர்களை சிறப்பு மருத்துவர்கள் என்ற முறையில் உதவியை நாடுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே வேறு எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் தவறாகச் சொல்லாமல் இருக்க வேண்டுமென்றால் இம்மாதிரியான கொள்கையைக் கடைப்பிடிப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, பப்ளிக் ஹெல்த்தைப் பொறுத்தவரையில் ஓரிரு கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திலே மிகவும் சிறந்த சிறப்புமாக இந்த மாநிலம் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதில் நமக்கு தேசிய அவார்ட் அல்லது நேஷனல் அவார்ட் கிடைத்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கத்தக்கது. ஆனால் இம்மாதிரியான

திட்டங்களிலே சிலயிடங்களிலே சில அசம்பாவிதங்கள், விரும்பத்தகாத காரியங்கள் நடந்திருக்கலாம். அவைகளைத் தவிர்ப்பதற்கு நல்ல அறிவாற்றல் படைத்த அமைச்சரவர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் போதிய கவனம் செலுத்துவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, தவறுகள் எந்தப் பகுதியிலேயிருந்தாலும் கண்காணிக்கவும், பராமரிக்கவும் வேண்டிய தீவிர நடவடிக்கைகளை எடுக்கவும் அன்னார் முனைய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் இந்த இலாக்காவிலேயிருக்கும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன். ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு சுமார் ஆறு வருஷங்களாக இன்க்ரிமெண்ட் கொடுக்கப்படவில்லை, 2,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; பலரையும் ரெகுலரைஸ் செய்யவில்லை என்ற புகார்களைக் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். அதேபோல் இரண்டாவது சம்பள ஆணைக்குழு 25 சதவிகிதம் செலக்ஷன் கிரேட் இன்ஸ்பெக்டர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறி உள்ளது. அந்தக் கருத்தை அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் இதுகாறும் அது பூர்த்தி செய்யப்படவில்லை, இலாக்காவிலிருந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி செலக்ஷன் கிரேடிலே இம்மாதிரி ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டுமென்ற கருத்தும் இருக்கிறது. அதுவும் இதுகாறும் நிரப்பப்படவில்லை, அதுவும் விரைவில் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, சீனியாரிட்டி லிஸ்ட் 1959-ஆம் வருஷத்திலிருந்து ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு தயாரிக்கப்படவில்லை என்ற கருத்து இருக்கிறது. ஆகவே அதையும் உடனடியாக அமல்படுத்த ஆணைபிறப்பிக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேமாதிரி 1970 மே மாதத்தில் 13 போஸ்ட்டுகள் Gazetted Technical Assistants, D.H.Os.
என்று கேர் புரோகிராமிலேயும் ஒப்புக்கொள்ளப்பட்டு அதன் விதிமுறைகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த போஸ்டுகள் இதுகாறும் நிரப்பப்படவில்லை. அதிலே ஏற்படும் செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதிலேயும் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அதிலே கான்பிடன்ஷியல் ரிபோர்ட்டின் அடிப்படையிலே



நடத்தப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் கான்பிடன்ஷியல் ரிபோர்ட் இப்பொழுது தேவை இல்லை என்ற ஆணை சமீபத்தில் வந்திருக்கிறது. ஆகவே, இதில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் பிரைமரி ஹெல்த் சென்டர்களிலேயிருந்தாலும் இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரையில் அவர்களுக்கு 50 ரூபாய் எஃப்.டி.ஏ., கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் அதே மாதிரி ஏனைய துறைகளில் ஃபேமிலி பிளானிங், காலரா ஒர்க்கர்ஸ், என்.எஸ்.இ.பி., என்.எம்.இ.பி. போன்ற துறைகளிலே 35 ரூபாய் பிக்ஸெட் டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். இதையும் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்டென்சிவ் ஃபேமிலி பிளானிங். சாதாரணமாக கலெக்டர் தலைமையிலேயிருக்கிறது, பி.டி.ஓ. போன்றவர்கள் முனைந்திருக்கிறார்கள். இவர்கள் நடத்தும் விழாக்களிலே அதிக ஊக்கம் அளிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஆள்பிடித்துக் கொடுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகப் பணம் கொடுக்கப்படுகிறது. ஆகவே அதிகமாக ஆள் கிடைக்கிறது. ஆனால் பப்ளிக் ஹெல்த் இலாக்காவிலே இருப்பவர்கள் சாதாரணமாகக் கிராமத்திலே ஆள் தேட வேண்டுமென்றால் போதிய ஆட்கள் கிடைக்கவில்லை. ஏனென்றால் அந்தச் சிறப்புத் திட்டத்தில் அதிகப் பணம் கொடுக்கிறார்கள், நீங்கள் குறைத்துக் கொடுக்கின்றீர்கள் என்ற குற்றச்சாட்டு பலவிடங்களிலும் இருக்கிறது. ஆகவே இம்மாதிரியான காரியங்களைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுவும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் சுமார் 4,000 பேர்கள் நமது இலக்காவில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் 3 அதிகாரிகளின் பராமரிப்பிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கென்று ஒரு தனி டெபுடி டைரக்டர் போட்டு அவர்களைப் பராமரிப்பது பொருத்தமாக இருக்குமென்ற ஆலோசனையை அமைச்சர் அவர்களுக்குக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு விஷயம். சாதாரணமாக, டிஸ்ட்ரிக்ட் எக்ஸ்டென்ஷன் எஜுகேட்டர்களாக ரெவின்யூ இலாகாவிலே இருப்பவர்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஃபேமிலி ப்ளானிங்கில் வேலை செய்பவர்களுக்கு மனத்தாங்கலாக இருக்கிறது. இந்த இலாகாவிலே அபாரது

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 17

உழைக்கின்ற, நல்ல ரெக்கார்டு இருக்கின்ற திறமை வாய்ந்த பணியாளர்களுக்கு அதிலே நியமனம் கொடுக்க வேண்டுமென்ற ஆலோசனையைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. என்.எம்.இ.பி.-யில் இருப்பவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். பல்லாண்டு காலமாக இந்த இலாகாவில் பணியாற்றியும் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்ற ஒரு மனத்தாங்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, பல இடங்களில் ஆஸ்பத்திரிகள் தேவை என்ற கருத்தை எல்லோரும் உணருவார்கள். டிஸ்ட்ரிக்டர் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடலை எடுத்துக் கொண்டால், குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் இருக்கும் நாகர்கோயில் ஹாஸ்பிடலை எடுத்துக் கொண்டால் வசதிக் குறைவாக, இடம் குறைந்த பகுதியில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சில ஆர்ஜிதத் திட்டங்கள் எல்லாம் கூட உருவாயின. அது இன்னும் முழுமையாக்கப்படவில்லை. அந்த ஆஸ்பத்திரியில் தற்போது சிறப்புச் சிகிச்சை அளிக்க போதிய வசதி இல்லை. நல்ல வார்டுகள் இல்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அருமனை பகுதியில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. 12 படுக்கைகள் போட்டு விஸ்தரிக்க வேண்டுமென்று திட்டம் போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் அதைப் பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதையும் துரிதமாகச் செய்யவேண்டும். குலசேகரம் ஆஸ்பத்திரியில் புதிய பிளாக் கட்ட திட்டம் இருந்தது. அதையும் துரிதப்படுத்த வேண்டும்.

பொதுவாக, பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இருக்க விரும்புவதில்லை. அங்கு தங்க வசதி இல்லை, கட்டடம் இருந்தால் மின்சாரம் இல்லை, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு அதிகமாக டாக்டர்கள் போக விரும்புவதில்லை. ஆகவே, புதிதாக ரெக்ரூட் செய்யப்பட்ட டாக்டர்கள் இங்கு போகச் சங்கடப்படுகிறார்கள்.



1972 மார்ச் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நமது மாநிலத்திலிருந்து உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு டாக்டர்கள் தேவை என்று முன்பு கேட்டிருந்தார்கள். அப்படியானால் அவர்கள் எல்லாம் அங்கு போகத் தயாராக இருக்கிறார்களா? இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொல்லப்படுகின்ற நிலையில் டாக்டர்கள் அங்கு போவதற்கு இடம் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் 1½ மணிக்கு மேலும் தொடருவதற்குப் பேரவை அனுமதி கொடுக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் மன நோய் ஆஸ்பத்திரியில் சுலோசனா என்ற நர்ஸை டாக்டர் தாக்கியதாகவும், அதற்கு அவர் ரிபோர்ட் கொடுத்ததாகவும், டாக்டர் மீது நடவடிக்கை எடுக்காமல் நர்சை மாற்றியதாகவும் புகார் வந்திருக்கிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரியான சம்பவங்கள் அடிக்கடி வருகின்றன.

ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் கூட அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்ததாகக் கேள்விப்படுகிறேன். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுவது விரும்பத் தக்கது அல்ல. டாக்டர்கள், பொறுப்பில் இருப்பவர்கள் சிகிச்சைக்கும் சிப்பந்திகளைக் கையேற்றம் செய்வது நல்லதல்ல.

குடிநீர்ப் பிரச்சனையைப்பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை சென்னைக்கு வீராணம் திட்டம் வருகிறது. ட்ரென்சஸ் வெட்டிப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் குழாய் அமைக்கப்படவில்லை. குழாய் வருவதற்கு முன் ட்ரென்சஸ் வெட்டிப் போட்டால் அவை தூர்ந்து போய் நஷ்டந்தான் ஏற்படும். மெயின் ரோட்டில் காரில் சென்று கொண்டிருக்கும்போது பல இடங்களில் இந்த நிலையைப் பார்த்தேன். பைப்புலை ரெடியாக வைத்துக் கொண்டுதான் ட்ரென்சஸை வெட்ட வேண்டும். இந்தத் திட்டத்தை விரைவாகவும், துரிதமாகவும் நடத்துவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 17

பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லாக் கிராமங்களுக்கும், விசேஷமாக முனிசிபல் நகரங்களுக்கும் வழங்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது. பல முக்கியமான திட்டங்கள் இருக்கின்றன. நாகர்கோவில் நகரத்தில் குடிதண்ணீருக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. பல்லாண்டுகளுக்கு முன்பு 50,000 பேருக்குக் குடி தண்ணீர் வழங்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. இப்போது அந்தப் பட்டணத்தில் சுமார் 1½ லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 50,000 பேருக்குத் தண்ணீர் சப்ளை செய்வதற்கான மெயின்ஸ்தான் அப்போது போடப்பட்டது. இதை விஸ்தரிக்க எல்.ஐ.சி. லோன் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்தப் பணத்தைத் துரிதமாக வாங்குவதற்கும், வேலையைத் துவங்குவதற்கும் அடிஷனல் மெயின்ஸ் போடவும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அந்தப் பகுதியில் குறிப்பாகச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் கூட தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்று டி.எம்.ஓ. அவர்கள் டி.டி.சி. கூட்டத்தில் கூறினார்கள்; ஆகவே, அந்த நகரத்தில் அடிஷனல் மெயின்ஸ் போட்டு தாராளமாகத் தண்ணீர் வழங்க துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கருங்கல், புதுக்கடை போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளில் வாட்டர் ஒர்க்சுக்குத் திட்டமிட்டார்கள். கருங்கல் திட்டமானது சிறு திட்டமாக இருக்கிறது. அதை விஸ்தரிக்க வேண்டிய வரைபடங்கள் தயாரித்து, எஸ்டிமேட்டுகள் தயாரித்து வைத்திருக்கிறார்கள். அங்கு தண்ணீர்க் கஷ்டம் மிகவும் அதிகம்; துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுக்கடையை கன்சர்வன்சி டவுன் என்று சொல்லலாம். அங்கு 65,000 ரூபாய் செலவில் தண்ணீர் மேல் தொட்டியானது கட்டப்பட்டு கிணற்றிலிருந்து துளை போட்டுத் தண்ணீர் எடுக்கும் திட்டம் இருந்தது. ஆனால் அந்தக் கிணற்றில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வரவில்லை. 65,000 ரூபாய் செலவழித்துக் கட்டப்பட்ட அந்தத் தொட்டி இன்று வீணாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாற்றுத் திட்டத்தைக் கலெக்டர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இப்படித் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும் பகுதிகளில் இந்தத் திட்டத்தை துரிதமாக முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



1972 மார்ச் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பொதுவாக, இன்று நமது இலாகாவிலேயே பல பிரிவுகள் இருக்கின்றன. மிகவும் முக்கியமான ஒரு விஷயம் நமது தமிழ் வைத்தியம். தற்போது சித்த வைத்தியத்திற்கு அதிக ஊக்கம் அளிப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் பல காரியங்களைச் செய்ய வேண்டும். எல்லா ஜில்லாகளிலும் சித்த வைத்திய முறைகளைப் பரவலாக்க வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்.

குற்றாலத்தில் மூலிகைத் தோட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற திட்டம் இருந்தது. அது என்னவாயிற்று என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். குற்றாலத்தில் மூலிகைகளை வளர்க்க எல்லா சவுகரியங்களும் இருக்கின்றன. அந்தப் பகுதியில் வளருகின்ற பல மூலிகைகளின் பெயர்களே தெரியாத நிலையில் இருக்கின்றன. அரசாங்கத்தின் மூலம் நல்ல பயிற்சி பெற்ற சித்த மருத்துவர்களைக் கொண்டு மூலிகைத் தோட்டத்தைப் பராமரிக்க ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும். பண்டைக் காலத்தில் இருந்த தமிழர்களுடைய வைத்திய முறையை மேலும் சிறப்பானதாக்க வேண்டும். எப்படி பூனைக்காக வாதாடுகிறார்களோ, ஆயுர்வேதத்திற்காக வாதாடுகிறார்களோ அதேபோன்று தமிழன் என்ற உணர்வோடு தமிழ் வைத்தியத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். குறிப்பாக இன்று இருக்கும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். பாளையங்கோட்டைக் கல்லூரியை விஸ்தரித்து ரிசர்ச் செய்ய போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் செய்ய எல்லாக் காரியங்களையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, சித்த வைத்திய முறையை எல்லா இடங்களிலும் பரவலாக்க என்ன சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

இந்தக் கருத்துக்களை எல்லாம் கூறி எங்கள் கட்சியின் [illegible] பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளில் கூறப்பட்டிருக்கின்ற [illegible] எல்லாம் வலியுறுத்தி நல்ல ஒரு இலாகாவாக இது செயல்படுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய விவாதத்திற்கு வந்துள்ள மானியங்களுடைய தொகையின் அடிப்படையில் வெட்டுத் தீர்மானம் தருவதன் மூலமாகப் பல்வேறு சிறந்த ஆலோசனைகளையும், கருத்துரைகளையும் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல குறைகள் இங்கு சொல்லப்பட்டன என்றாலும் அந்தக் குறைகள் பலவும் நடைமுறையில் தொடர்ந்து முயற்சிப்பதன் மூலம் மாற்றப்பட்டு மருத்துவ சுகாதாரத் துறைகளின் பணியும் பயனும் மேலும் செம்மைப்படும் என்ற நம்பிக்கையையும் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். குற்றச்சாட்டுகளாகக் கூறப்பட்ட ஒன்றிரண்டும் தனிப்பட்டவர்கள் நடவடிக்கைகள் காரணமாக எழுந்த குற்றச் சாட்டுக்களே தவிர ஒரு டாக்டர் அல்லது ஒரு செவிலியர் அல்லது ஒரு பணியாளர் செய்து விட்ட தவறாக இருந்தவையே தவிர இந்த இலாகாவினரின் பொதுவான தவறு அல்ல என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட தனி நிகழ்ச்சிகள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதாக விருந்தாலும் சரி அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் எனக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை; இந்த இலாக்கா இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்குமானால் உரிய அளவிற்கு விசாரித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கக் கூடும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உண்மையிலேயே இந்தச் சுகாதார மருத்துவத் துறையில் ஓர் ஆண்டு காலமாக நான் அதில் ஈடுபட்டதன் மூலம் இப்போதுதான் பயிற்சி பெற்றிருக்கிறேன் என்று நம்புகிறேன். நான் ஈடுபட்டபோது பயிற்சி இல்லாத அமைச்சராகத்தான் அத்துறையில் ஈடுபட்டேன். ஓராண்டு தொடர்பு பெற்றதற்குப் பிறகுதான் ஓரளவிற்குச் செயல்முறையில் நிறைவேற்றக்கூடியவை எவை என்பதும், நிறைவேற்ற முடியாதவையினால் ஏற்படும் விளைவுகள் எவை, நல்லமுறையில் அமைவது எவை என்று ஓரளவிற்கு உணருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஓராண்டு நான் பெற்ற அனுபவத்தையும், உறுப்பினர்கள் தெளிவாக உணர்ந்துகொண்டு தக்க ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இதற்கு முன்னால் வெளியிட்ட, ஆண்டுதோறும் வெளியிடப்படும் மக்கள் நலத்துறை அறிக்கை ஏடுகளை விட இந்த ஆண்டு தெளிவாகப் பல்வேறு விளக்கங்களையும் சேர்த்து வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவ்வாறே அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.



இத்துறைக்கு இப்போது செலவழிக்கப்படுகிற தொகை மக்களின் தேவையினை நோக்க மிகக் குறைவு என்று நான் சொன்னால் அது தவறு அல்ல. ஆனால் தமிழ் நாட்டில் செலவழிக்கப்படுவது அகில இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தில் செலவழிப்பதையும் விட ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் விகிதாசாரத்தில், விழுக்காட்டில் அதிகமாகும் என்பதை அகில இந்திய மருத்துவக் குழுவின் (ஆல் இந்தியா மெடிகல் அஸோசியேஷன்) தலைவர் அவர்கள் இங்கு வந்திருந்தபோது ஒரு வரவேற்புரைக்குப் பதில் தெரிவிக்கும்போது மற்ற எந்த மாநிலத்திலும், மாநில வரவு-செலவுத் திட்டத்தில் மருத்துவத்திற்காக, சுகாதாரத்திற்காக 8.2 விழுக்காடு அளவு செலவு செய்யப்படவில்லை. தமிழ்நாட்டில்தான் இவ்வளவு தீவிரமாக இதில் அக்கறை காட்டப்படுகிறது என்று பாராட்டிச் சொன்னதை நான் நினைவூட்டுவது அவசியமாகும்.

ஆனாலும் சுகாதாரத் துறையில் மக்கள் எந்த அளவிற்குத் தெளிவு பெற்றிருக்கிறார்கள், பெற்று வருகிறார்கள், எந்த அளவிற்கு அவர்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கிற தன்மையை அடைந்து வாழ விரும்புகிறார்கள் என்பது நான் செல்கிற இடங்களில் எல்லாம் வளர்ச்சி பெற்ற மருத்துவ மனை தேவை என்று கேட்பதிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் தேவை என்று கேட்பது தவறு அல்ல. அதை இந்த அரசு மட்டுமல்ல; எந்த அரசாங்கத்தினாலும் அண்மைக் காலத்தில் நிறைவேற்ற முடியாத நிலை இருப்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தை நான் ஏற்றுக்கொண்டாலும் அது இயலாத ஒன்றாகும், ஏனெனில் மக்கள் நலத்தைப் பாதுகாப்பதில் ஒரு அரசு மட்டும் எந்தக் காலத்திலும் அந்தக் கடமையை நிறைவேற்றிட முடியாது.

மேல் நாடுகளில் கூட, எத்தகைய வளம் பெற்ற நாடாகயிருந்தாலும் சரி அந்த வளம் பெற்ற நாடுகளிலும் மருத்துவப் பணியினை தனிப்பட்டவர்கள் பெருமளவில் நிறைவு செய்கிறார்கள். வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்ற பெயரில் உள்ள மருத்துவ நிலையங்கள், மற்றப்படி ப்ரைவேட் மெடிக்கல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் இவைகள்தான் பெருமளவில் அந்தக் கடமையைச் செய்கின்றன.

இன்றையதினம் தமிழ்நாட்டின் வரவு செலவு 334 கோடி ரூபாயாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று தங்கியிருந்த மருத்துவமனையின் வரவு செலவு ஆண்டு ஒன்றுக்கு 550 கோடி ரூபாய்க்கு மேலாகும். ஒரு மருத்துவ மனைக்கு ஆண்டுதோறும் 550 கோடி ரூபாய் வரவு செலவு என்றால் அகில இந்தியாவில் இன்றையதினம் வரவு செலவுத் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது ஏறத்தாழ அந்த நாலாயிரம் அல்லது ஐயாயிரம் கோடி ரூபாய் முழுவதுமே தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கே

[திரு. க. அன்பழகன்] [1972 மார்ச் 17

செலவழிக்க முடியும். அப்படிச் செலவழித்தாலும் கூட திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வருத்தப்படாமல் இருப்பார்களா என்றால் அப்போதும் சந்தேகம்தான். அது எதிர்க்கட்சி என்ற மனப்பான்மை.

மக்களின் நலனைப் பாதுகாக்கும் முயற்சியில் நாம் நம் நிதி வசதிக் குறைவை உணர்ந்தும் மிகுந்த அக்கறை காட்டி வருகிறோம். மருத்துவ மனைகள் அமைத்தல், சுகாதாரத் திட்டங்கள், மலேரியா ஒழிப்புத் திட்டம், தொழுநோய் ஒழிப்புத் திட்டம், காச நோய் ஒழிப்புத் திட்டம், யானைக்கால் வியாதிக்கான கொசு ஒழிப்புத் திட்டம், குடிநீர் திட்டம், அதேபோல் கழிவுநீர் அகற்றும் திட்டம் என்று பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். ஆனால் எந்தத் திட்டமாக இருந்தாலும் 25 சதவிகிதம் அளவிற்குத்தான் அரசு பொறுப்பேற்று பணியாற்றமுடிகிறது, மீதமுள்ள 75 சதவிகிதம் பொறுப்பை மக்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாயுள்ளார்கள்.

பல உண்மைகளை மக்கள் உணர்ந்துவிட்டாலே சில பிரச்னைகள் தீரும். பல்வேறு பிரச்னைகள் குறித்து, மக்களின் பொறுப்புகள் குறித்து, அதற்குரிய கட்டத்தில் பொதுமக்களுக்குத் தெளிவு ஏற்படுத்த ஏற்கனவே இருந்த அரசாங்கம் தவறிய காரணத்தினால்தான் எந்தப் பிரச்னையாக இருந்தாலும் நாம் அதுபற்றி விளக்க வேண்டியிருக்கிறது.

குடிநீர் பிரச்னை குறித்துப் பேசும்போது ஊராட்சி மன்றங்களில், பல்வேறு நகராட்சி மன்றங்களில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று அரசின் மீது பொறுப்பைச் சுமத்திப் பேசினார்கள். நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசுக்கு இருக்கிற பொறுப்பெல்லாம் ஊராட்சி மன்றங்களோ அல்லது நகராட்சி மன்றங்களோ எடுத்துக்கொள்கிற முயற்சிக்கு ஒத்துழைப்பு தருவது என்ற பொறுப்பே தவிர தமிழக அரசு தானாகவே ஒரு திட்டத்தை எந்த ஊரிலும் நிறைவேற்ற முடியாது.

திருவிழாக்கள் நடக்கும் ஊர்களில் எல்லாம் குடிநீர் திட்டம் நிறைவேற்றப் பட்டதா என்றால் எந்த ஊரில் திருவிழா இல்லை? எந்த ஊரில் மக்கள் கூட்டம் சேரவில்லை? மாரியம்மன் கோவில் திருவிழா, கும்பாபிஷேகத் திருவிழா, சுப்பிரமணியஸ்வாமி கோவில் திருவிழா என்று திருவிழாக்கள் நடக்காத இடமில்லை. எல்லாக் கிராமங்களிலும்தான் திருவிழாக்கள் நடக்கின்றன. ஆகவே, திருவிழாக்கள் நடக்கும் கிராமங்கள் என்று குறித்துப் பேசவேமானால் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கித்தான் பேச முடியும். ஆனால் அந்தந்த கிராமப் பஞ்சாயத்துக்கள் அல்லது ஒன்றியங்கள் அல்லது நகராட்சி மன்றங்கள் அக்கறை எடுத்துக் கொண்டு பணம் கேட்டால் எந்த அளவிற்குத் தீவிர ஒத்துழைப்பின் பேரில் அவற்றை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்குத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும். ஆனால் அந்தப் பொறுப்பு யாருக்கு என்பதை உறுப்பினர்கள் பிரித்துப் பேசினால்தான் அவர்களுக்கு அந்த உணர்ச்சி ஏற்பட முடியும்.



1972 மார்ச் 17]. [திரு. க. அன்பழகன்]

கடந்த மூன்று ஆண்டுகளாக இங்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும் சரி அல்லது குடிசை மாற்றுத் திட்டமாக இருந்தாலும் சரி தீவிரமாக அவை நிறைவேற்றப்பட்டு வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். அவற்றிற்காக அகில இந்தியாவிலேயே எல்.ஐ.சி.-யிலிருந்து அதிகமான தொகை கடன் பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு மேல் விளக்கத் தேவையில்லை. அவை யெல்லாம் தனித்தனி வாரியமாக அமைக்கப் பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றின் அறிக்கைகளைப் படித்துப் பார்ப்பீர்களானால் நன்கு உணர முடியும்.

அதைப் பற்றி இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் அவரவர்கள் பொறுப்புகள் என்னென்ன என்று வரும்போது, பொறுப்புகள் என்ன என்ன என்று பங்கிட்டு உணருகிறபோதுதான் நம் நாட்டுப் பிரச்னைகள் தீரும். பொறுப்புகளை அரசின் மீதே சுமத்துவதினால் பிரச்னைகளை தீர்க்கமுடியாது. எனவே, மருத்துவ, சுகாதாரத் துறைகளில் தன்னிறைவு அடைய வேண்டுமானால் தன்னியக்க மருத்துவ மனை வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் ஏற்படுத்தப் பட்டால்தான் தன்னிறைவு அடைய முடியும். அதல்லாமல் நாம் 35 கோடி ரூபாய் செலவு செய்தாலும் கூட, இந்த நாட்டில் தனிப்பட்டவர்கள், வெளி நாட்டு பாதிரிமார்கள், பாதிரிமார்களினால் ஊக்குவிக்கப்பட்டவர்கள், வெளி நாட்டிலுள்ள பின்தங்கிய மக்களுக்காக உதவி செய்கிற நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அனாதை இல்லங்கள் நடத்துகிறவர்கள், தொழுநோயாளிகள் இல்லங்களை நடத்துகிறவர்கள், இதுபோல் பல்வேறு மருத்துவ மனைகளை ஏற்று நடத்துபவர்கள் போன்றவர்களால் ஏற்பட்டிருக்கிற பலன்கள் மிகச் சாமான்யமானதல்ல. இந்தப் பேரவையில் அமைச்சராக நின்று கொண்டிருக்கிறேன் என்ற முறையில் அவர்களுக்கெல்லாம் இந்த அரசின் உளமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவில் தொழுநோயாளிகளை அதிகமாகப் புறக்கணித்த நேரத்தில் நான், அவர்களைக் கேவலமாக ஒதுக்கி வைத்த நேரத்தில்தான் மகாத்மா காந்தி அடிகள், அவரது நண்பராக அறிமுகமான ஒருவர், சாஸ்திரி என்பவர் அவர் ஒரு தொழுநோயாளி தன்னைச் சந்திக்க வந்தநேரத்தில் ஆசிரமத்திலேயே அவரைத் தங்க வைத்து, அவருக்குப் பணிவிடை செய்து அவரது புண்களை தானே தன் கைகளினால் துணி எடுத்துத் துடைத்து, புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டி அவரது உள்ளம் உலகிலேயே மிகப் பெரிய மனித உள்ளம் என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

அப்படிக் காந்தியடிகள் காட்டினாலும் அந்த மனப்பான்மை நமக்கு வரவில்லை. மேல்நாட்டிலுள்ள மிகப் பெரிய மன்னர் குடும்பத்தைச் சார்ந்த சிலர் கூட தொழு நோயாளிகளைத் தொட்டுப் பழகி, அன்போடு ஆதரித்து வந்தாலும், நம் நாட்டில் அந்த உணர்ச்சி உண்டாவதே மிகக் கடினமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் என்னுடைய பேராசிரியராக இருந்த திரு. ஜகதீசனைப் போன்றவர்கள், மிகச் சிறந்த மனிதர் சிலர்தான் இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேல் நாட்டிலுள்ளவர்கள் அன்பொழுகப் பழகி, ஆதரவாகப் பேசி, தொழுநோயாளிகளுக்குப் புதிய நம்பிக்கை உணர்வு எழத்தக்க அளவுக்குத் தொண்டாற்றுகிறார்கள். அப்படிப் பட்ட பணிகள் நம்முடைய நாட்டு மக்களின் மனப்பான்மையோடு ஊறி வளர்ந்தால்தான், பொதுச் சுகாதாரம், மருத்துவம், நாட்டின் தவிவை மாற்றி நிறைவு செய்யும். ஒரு நாட்டில் டாக்டர்களை நியமித்தே இதைச் செய்திட முடியாது, இதிலே அமைச்சர் என்ற காரணத்தால் நான் தோல்வியை ஒப்புக் கொள்ளக்கூட வெட்கப்படவில்லை, தோல்வியை நிறைவு செய்ய முடியாது, மக்கள் வாழ்க்கை மாறினால் தவிர, என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இந்தத் துறை அரசாங்கப் பணி என்பதை விட, ஒரு பெரிய சமூகப் பணி. இந்தச் சமூகப் பணியை நிறைவேற்றுவதற்கு இன்றைக்குத் தகுதி பெற்ற, படித்த டாக்டர்கள் வந்திருக்கிறார்கள். ஹானரரி டாக்டர்கள் இனி மருத்துவ மனையில் இருக்க வேண்டுமா என்று திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் கேட்டார்கள். நான் கூட ஒரு ஆண்டுக்கு முன்னால் இனி ஹானரரி டாக்டர்கள் எங்குமே நியமிக்கப்படத் தேவையில்லை என்ற எண்ணத்தில்தான் வந்தேன். ஒரு ஆண்டு கழிந்த பிறகு இன்றைய நிலையில் அவர்களும் தேவையே என்பதை உணர்ந்தேன். இன்றைக்கு டாக்டருக்குப் படித்து விட்டு வருபவர்கள் நன்றாகப் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறுவதற்கு 5 ஆண்டுகளாவது வேண்டும். மேலும், கிராம வளர்ச்சித் திட்டம், ஒன்றியம் ஆகிய இடங்களில் 1—2 ஆண்டுகள் இடம் பெற்று பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்கள் நல்ல தேர்ச்சியை



அடைய முடிகிறது. அவர்கள் தேர்ச்சியோடு தகுந்த டாக்டராக ஆகும் வரையில், நீண்ட காலப் பயிற்சியுடன் வைத்தியம் செய்யும் டாக்டர்களை நாம் இழந்து விட முடியாத கட்டத்தில் இருக்கிறோம்.

அதேபோல் இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. பிரைவேட் பிராக்டீஸ் செய்பவர்கள் பலர் அரசாங்கத்தால் ஒரே இடத்தில் நீடிக்காமல் பல இடங்களுக்கு மாற்றப்படுவதுதான் அவர்கள் வெளியேறக் காரணம் என்று சொன்னார்கள். அரசாங்க உத்யோகத்திற்கு வந்து மாற்றப்படாமல் ஒரே இடத்தில் இருக்க முடியாது. மாற்றப்படுவதை விரும்பாதவர்கள் அரசில் இருந்து விலகித் தனியாக பிராக்டீஸ் செய்வது நம் சமுதாயத்திற்கு நல்லது, கெடுதல் அல்ல. எந்த அளவுக்குச் சமுதாயத்தில் டாக்டர்கள் தாங்களாகவே தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்களோ மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறார்களோ, அது விரும்பத்தக்கது தான். அது குறையல்ல. கிராமங்களில் நல்ல டாக்டர்கள் இன்றைக்குத் தனியாகத் தொழில் நடத்துவது என்பது அந்தந்தக் கிராமத்தின் சூழ்நிலை காரணமாக, பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் முடியாததாக இருக்கிறது. அந்த இடங்களில் அரசாங்கத்தின் மூலம் கடன் உதவி பெற்று அவர்கள் தொழில் நடத்த முன் வரலாம்.

இந்தக் காரணங்களை சேர்த்து பார்க்கிறபோது, மருத்துவ துறையில் ஏற்பட வேண்டிய பெரிய வளர்ச்சியை பொதுமக்கள் கொடுக்கிற காண்டிரிபியூஷன், பொதுமக்கள் நன்கொடை, பொதுமக்கள் கட்டணம் செலுத்துகிற முறை இவற்றை ஏற்படுத்தத்தான் செய்யமுடியும். நான் ஏற்கெனவே அப்படிச் செய்யலாமா என்று எண்ணிப் பார்த்தேன். மருத்துவ மனையில் ஏதேனும் ஒரு வருமானத்திற்கு வழி வைத்தால் நல்லது என்று விரும்பினேன். இந்த சென்னையிலே ஒரு மருத்துவ மனைக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 60 லட்சம் செலவாகிறது. மற்றொரு மருத்துவ மனைக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 50 லட்சம் செலவாகிறது என்றால், அந்த செலவில் ரூ. 10 லட்சம் வருமானமாக வந்தால் ஒரு மாவட்ட மருத்துவ மனையில் ஒரு ஆண்டுக்கு ரூ. 8 அல்லது ரூ. 10 லட்சம் செலவானால், ஒரு 2 லட்சம் ரூபாய் வருமானம் வருமானால், அந்த மருத்துவ மனையை வளப் படுத்துவதற்குப் பயன்படும் என்று எண்ணி, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் ஒரு இடத்தில் ஒரு பெரிய உண்டியலை வைக்க வேண்டும், வருகிற மக்கள் கோவிலுக்கு போய் விட்டு உண்டியலில் காசு போட்டு விட்டு வருவது போல் எண்ணி, மருத்துவ மனையை விட்டு வெளியே வரும்போது, வைத்தியம் செய்து கொண்டு வந்தோமே என்னும் நன்றி உணர்ச்சியோடு, நம்மால் முடிந்ததைப் போடுவோமே என்று எண்ணி ஒரு 10 பைசா 30 பைசா போட வேண்டுமென்னும் உணர்வு வரும் என்று கருதினேன். பொதுமக்களுக்கு அந்த உணர்வு எளிதாக ஏற்படவில்லை. அது வரவேண்டுமானால், நாமும்,

முதலமைச்சரும், மக்களை அழைத்துப் பேசி, அங்கே ஒரு பிள்ளையார் வைத்து, அதன் கீழே உண்டியல் வைத்தால் தான் காசு போடுவார்கள் என்றேன்று கிறேன்.

சென்னையில் இருக்கும் பொது மருத்துவ மனையில் போதுமான சுகாதார வசதி இல்லை, அங்கே மூட்டைப் பூச்சியிருக்கிறது, அந்தப் பூச்சியிருக்கிறது, படுக்கைகள் சுத்தமாக இல்லை என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. பெரும் அளவுக்குச் சுத்தப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சி தோல்வியடைவதற்குக் காரணம், அங்கே படுக்கைகளின் கீழும் இருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகியிருப்பதுதான், அந்த அளவுக்குத் தோல்வியடைவதற்கு மற்றொரு காரணம், அங்கே உள்ள நோயாளியைப் பார்ப்பதற்கு ஒரு நாளைக்கு, ஒரு நோயாளிக்கு 5 பேர் 6 பேர் வருகிறார்கள். ஒரு நோயாளிக்கு 2 பேர் அனுமதிப்பது என்ற முறை செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 2 பேருக்கு மேல் வருகிறவர்களிடமிருந்து 1 நபருக்கு 25 பைசா கட்டணம் வைக்கலாம் என்று உத்தேசித்தோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 25 பைசா என்று வைத்தால் அதிகம் என்று கருதுவார்கள், ஆகவே, 10 பைசா போதும் என்றார்கள். நான் அவர் சொன்ன ஆலோசனைப்படியே 10 பைசா வசூலிக்கலாம் என்று ஏற்றுக் கொண்டேன். மருத்துவத் துறையில் உள்ளவர்கள் சொன்னார்கள், 10 பைசா வீதம் வசூலிக்க ஏற்படுகிற செலவு 7 அல்லது 8 பைசா வீதம் ஆகிறது, ஆகவே, 10 பைசா வசூல் முறை வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். 25 பைசாவும் வைக்க முடியவில்லை, 10 பைசாவும் வசூலிக்க முடியவில்லை. ஆகவே, மருத்துவ மனைகளுக்கு மாநில வருவாயிலிருந்து நிதி ஒதுக்கினால் தவிர வேறு நிதி எளிதாகக் கிடைப்பது இல்லை.

நல்ல இதயம் உள்ளவர்கள் எந்தெந்த இடங்களில் வேண்டினும், இப்படிப் பட்ட மருத்துவ மனை வசதி பெருகுவதற்காக நிதி அளிக்க முன் வருகிற நேரத்தில் எல்லாம் அரசாங்கம் அவர்கள் 1 லட்சம் நன்கொடை அளித்தால் இன்னும் 1 லட்சம் உடனடியாக நிதி ஒதுக்கி அந்த மருத்துவ மனையைக் கட்டுவதற்கு, மருத்துவ மனையில் ஒரு பகுதி கட்டுவதற்கு ஒத்துழைப்புத் தந்து உடனடியாக ஒப்புக்கொள்கிறது.

இராஜபாளையத்தில் மருத்துவ மனை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினர் ரூ. 6 லட்சம் நாங்கள் நன்கொடை திரட்டித் தருகிறோம், நீங்கள் 8—10 லட்சத்தில் மருத்துவ மனை கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் 7 நாட்களில் அதை ஏற்றுக் கொண்டு, அந்த மருத்துவ மனையைக் கட்டித் தருகிறோம் என்று ஒப்புக்கொண்டு,



அதற்குத் தேவையான ஆணையைப் பிறப்பித்து விட்டோம். இன்னும் கட்டடத்திற்குத் தேவையான பிளான் தயாரிக்கப்படவில்லை. 6 லட்சம் தான் நன்கொடை எனினும் 10 லட்சம் செலவழித்துக் கூட மருத்துவ மனையை முறையோடு கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

திருமதி அனந்தநாயகி: சில பேர் மருத்துவ மனை கட்டுவதற்கு பணம் கொடுக்க முன்வருவார்கள். அப்படி வருகிறவர்கள் பெயரை அந்த மருத்துவ மனைக்கு வைப்போம் என்று சொன்னால், விளம்பரத்தை விரும்புகிறவர்கள் அந்த மாதிரி நிதி கொடுக்க முன் வருவார்கள். பணம் கொடுத்தவர் பெயரை வைத்தால், மெயின்டனன்ஸ் நாம் பார்த்துக் கொள்ளலாம் அதற்கு வழி செய்யவேண்டும். லாட்டரியில் 50 சதவீதம் அல்லாட்மென்ட் மெடிகல்லுக்கு என்று சொன்னால், அதிகமாக கலெக்ஷன் ஆகும். அதை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒரு ரூ. 10,000 நன்கொடை கொடுத்து, ஒரு 4 படுக்கை உள்ள ஒரு சிறு கட்டிடம் கட்டினால் கூட, அவருடைய பெயர் உள்ள கல் பொறிக்கலாம் என்று அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஒரு வேளை அமைச்சர்கள் திறந்து வைப்பது சிலருக்குக் கோபமாக இருக்கலாம். உறுப்பினர்களும் திறந்து வைக்கலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள்கூட திறந்து வைக்கலாம். அதேபோல் பெயர் வைப்பதற்கு மருத்துவ மனையே அவர்கள் பெயரால் வைப்பதற்கும் நன்கொடை அளவிற்கேற்ப ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

சேலம் மாவட்டம் வெண்ணந்தூர் என்னும் இடத்தில் ராமசாமி முதலியார் என்பவர் மூன்று லட்சம் ரூபாய் கட்டிடம் கட்டிக் கொடுக்க முன்வந்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆண்டுக்கு 20—30 ஆயிரம் செலவில் அரசு நடத்தி வருகிறது. 2 ஆண்டுகளாக அங்கே வெண்ணந்தூர் ராமசாமி முதலியார் மருத்துவ மனை இருக்கிறது.

குமாரபாளையத்திலும் ரூ. 1 லட்சம் அளவில் கட்டித் தருகிறோம், அதை அரசாங்கம் நடத்தவேண்டுமென்றார்கள். அதற்கு அறிஞர் அண்ணா அவர்களின் பெயர் வைக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

கண் மருத்துவ மனை கட்டுவதற்கு ரூ. 50,000, ரூ. 1 லட்சம் கொடுத்து, சிறு சிறு மருத்துவ மனைகள் கட்டுவதற்கு பொள்ளாச்சி, திருப்பூர், குமாரபாளையம் ஆகிய இடங்களிலிருந்து சில பேர் முன் வருவதாகச் சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இப்படி எங்கெங்கே நன்கொடை வந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்கு சென்னையில் உள்ள இந்திய மருத்துவ மனையை மிகப் பெரியதாகக் கட்டுவதற்கும், சித்த மருத்துவ முறையை விரிவு படுத்துவதற்கும், பழநி ஆண்டவர் கோவில் தர்மகர்த்தாக்கள் ரூ. 5 லட்சம் தர வேண்டுமென்று கேட்டுள்ளோம், கொடுப்பார்களானால், மேலும் 6 லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவிட்டு ரூ. 10 லட்சம் அளவில் பெரிய மருத்துவ மனை கட்டி அதற்குப் பழநி ஆண்டவர் பெயர் வைக்கவும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

இப்படி என்னென்னமோ குறைகளையும் புதிய புதிய வேண்டுகோள்களையும் நீங்கள் தெரிவித்தாலும் அனைத்தும் நினைத்தவுடன் நடைபெறும் காரியங்கள் அல்ல. பல காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன, அவைகள் நிறைவேற்றப்பட வேண்டியவைதான் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். ஆனால் நான் சொல்ல விரும்புவது, இங்குமங்குமாக ரூபாய் ஐந்து லட்சம், ரூபாய் பத்து லட்சம் என்று ஐந்துபேர் பத்து பேர் கொடுக்க முன்வரலாம்.

சென்னையில் தென் பகுதியில் ஏன் பெரியதொரு பொது மருத்துவ மனையினைக் கட்ட அரசு முன்வரவில்லை என்று அம்மையார் அவர்கள் கூட கேட்டார்கள். இவை அனைத்துக்கும் உள்ள ஒரே காரணம் போதிய நிதி வசதியின்மைதான். தென் சென்னையில் பெரியதொரு பொது மருத்துவ மனை கட்டப்பட வேண்டும் என்ற திட்டம் இப்போதுதான் புதியதாக ஆலோசிக்கப்பட்ட ஒன்று அல்ல. காங்கிரஸ் அரசு காலத்திலேயே இப்படிப்பட்ட யோசனை பரிசீலிக்கப்பட்டது என்பது அம்மையார் அவர்களுக்குத் தெரியும். அன்றைக்கே ஆலோசித்தும் பெரியதொரு மருத்துவ மனை ஏன் அமைக்கப்படவில்லை யென்றால், இடையிலே 'அப் கிரேடட் போஸ்டுகிராசுவேட் மெடிகல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' ஒன்றினை அங்கே அமைப்பது என்ற ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாழ ரூ. 10 கோடி அதற்குச் செலவாகும். இப்படி ஒரு 'மெடிகல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' அமைப்பதாக இருந்தால் அதற்கு மத்திய அரசு உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி மத்திய அரசு உதவியளித்து, அத்தகையதொரு மெடிகல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் அமைவதானால் அதையொட்டி, 500, 600 படுக்கைகளைக்கொண்டதொரு மருத்துவ மனையும் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் மத்திய அரசு உதவி செய்ய முன்வராததால் அத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. இங்கேகூட ஒரு அங்கத்தினர் கேட்டார், 'இப்படிப்பட்ட ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்டும் அதையொட்டிய மருத்துவ மனையும் சண்டிகரில் அமைக்கப்படவில்லையா, டெல்லியில் அமைக்கப்படவில்லையா' என்று. அப்போது நான்





எண்ணிக் கொண்டேன் 'டெல்லியில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் வசதியும் கொஞ்சம் தூரத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்கு இதுவும் ஒரு அடையாளம்' என்று. இப்படி ஏற்படுத்துவதற்குத்தான் டில்லி யின் ஒப்புதல் கிடைக்கவில்லையே தவிர 'பேஸிக் மெடிக்கல் ஸைன்ஸ்' ரிஸர்ச்சுக்கு என்று சென்னையில் ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இது போன்று மெட்ராஸ் மெடிகல் காலேஜில் அப்-கிரேடட் டிபார்ட்மெண்டு என்ற முறையில் இ.என்.டி., பேக்டீரியாலஜி, ஃபிஸியாலஜி இந்தப் பிரிவுகள் சிறந்த இயக்குநர்கள் தலைமையில் அப்-கிரேடட் இன்ஸ்டிட்யூட் என்ற முறையில் இன்று நடைபெற்று வருகின்றது. எனவே, மத்திய அரசு முழுவதுமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில், மாநில அரசும் அதன் முழுச் சுமையையும் தாங்கிக் கொள்ள முடியாத நிலைமையில், இத்தகையதொரு திட்டம் செயல் படுத்தப்படாமல் இருந்து வருகிறது.

இன்றைக்கு மக்களின் தேவைகளை நிறைவேறச் செய்வதற்கு, கிராமங்களிலுள்ள மக்களுக்குச் சில அடிப்படையான கருத்துக்களைப் பரப்ப வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். இன்றைக்குக் கூட திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டார்கள், மக்களின் நல்வாழ்விற்கான பிரச்சாரங்கள் மக்களிடையே அதிகமாக நடைபெறவில்லை, அப்படி நடைபெற்று இருந்தால், மக்களின் நல்வாழ்விற்கான கருத்துக்கள் விளக்கப்பட்டு இருந்தால், இன்றைக்கு இவ்வளவுபேர் நோயாளிகளாக இருந்திருக்க மாட்டார்கள் என்று. கடந்த காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சாரங்கள் போதிய அளவு நடக்கவில்லை என்பதை உணர்ந்திருக்கிறோம். எனவேதான், அண்மைக் காலத்தில் நடைபெறும் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரங்கள் வெறும் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரமாக இல்லாமல், குடும்ப நல்வாழ்வுத் திட்டப் பிரச்சாரமாக அமைய வேண்டும் என்ற முறையில், குழந்தைகளை அளவோடு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் அதே நேரத்தில் பெற்ற குழந்தைகள் எப்படி எப்படிப் பேணிக் காக்கப்பட வேண்டும், குழந்தைகள் நோய் தடுப்பிற்கான தடுப்பு ஊசிகள் போடப்பட வேண்டியதன் அவசியம், குழந்தை வளர்ச்சிக்கு அவசியமான வைட்டமின் 'ஏ' குழந்தைகளுக்கு எப்போதும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம், 'வைட்டமின் ஏ' இல்லையென்றால் குழந்தைகள் 12 அல்லது 15 வயதிற்குள் கண்பார்வை குறைவு ஏற்பட்டு, பிறகு அது முற்றி பார்வையையே இழந்துவிடக் கூடிய அபாயம் நேருவது ஆகியவை பற்றியும் கிராமங்களில் நடத்தப்படும் குடும்ப நலத் திட்ட நாடகங்களில் இணைத்துச் சொல்லப்பட்டு வருகின்றது. இதுபோன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள டாக்டர்கள், குடும்ப நலத் திட்டங்களின் கீழ் பணியாற்றும் செவிலியர்கள் ஆகியோர் குழந்தை பிறக்கு முன், தாயார் கருவுற்று ஐந்து மாதமாக இருக்கும்போது எப்படி எப்படி அந்தத் தாயைக் கவனிக்க வேண்டும் என்றும் அவர்களுக்குச்

தர வேண்டிய ஃபோலிக் மருந்துகள் பற்றியும், குழந்தை பெற்ற பிறகு குழந்தையையும் தாயையும் ஐந்து அல்லது ஆறு மாதம்வரை கவனித்து மருந்துகள் தரப்பட வேண்டும் என்றும், மிகவும் ஏழ்மைப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சத்துணவு தரப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டு செயல்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆனாலும் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியவில்லை. பல இலட்சக்கணக்கான மக்களுக்கு இவற்றை நிறைவேற்றித் தருகிறோம். ஆனால் மேலும் பல இலட்சக் கணக்கான மக்கள் பாக்கி நிற்கின்றார்கள். ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கவனிக்கின்றோம். ஆனால் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை நெருங்க முடியவில்லை.

இது மிகப்பெரிய தொரு சமுதாயப் பிரச்சனை. எனவே இப்படிப்பட்ட பிரச்சனையினைத் தீர்ப்பது என்றால், நாட்டிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் எல்லா மக்கள் பிரதிநிதிகளும் ஒரு தீவிரமான முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப் பட்ட தீவிர முயற்சிகளிலேயே தலையாய முயற்சி, எதிர்காலத்தில் பலன் தரத்தக்க முயற்சி, ஒரு நாட்டிலே இதைத் தவிர வேறு எந்த முயற்சியினை மேற்கொண்டாலும் பலன் பெற முடியாது என்று கருதச் செய்யும் முயற்சி—குடும்பக் கட்டுப்பாடுதான். இதில் சில குறைகள் இருக்கின்றன என்று அங்கத்தினர்கள் குறைப்பட்டுக் கொண்டபோது, உண்மையிலேயே குறைபாடுகளுக்கு வருத்தம் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல.

மூன்று மாதங்களுக்கு முன்பு இந்தப் பிரச்சனை மேலவையில் சொல்லப்பட்டபோது, முதலமைச்சர் அவர்கள்கூட கேட்டுக் கொண்டார்கள், நானும்கூட பத்திரிகைகளுக்கும் தெரிவித்து, மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்து, இந்த அரசு எவரையும் குறிப்பாக ஆசிரியர்கள் எவரையும் இதிலே கட்டாயப் படுத்துவதற்கு இடம் இருக்கக் கூடாது என்று தெரிவித்தேன். அதைபொட்டி சுகாதாரத் துறை செயலாளர் அவர்கள் மாவட்ட கலெக்டர்களுக்கும் தெரிவித்து, 'ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்துவது என்பதற்கு இடமே இருக்கக் கூடாது. அவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாது. எடுக்கப்பட்டிருந்தாலும் அவை கைவிடப்பட வேண்டும். ஆணையாளர்கள் எடுத்திருந்தாலும் அவையும் கைவிடப்பட்டு, ஆசிரியர்களுக்கும் உறுதியளிக்கப் படவேண்டும்' என்று எழுதியிருக்கின்றார்கள்.

பத்து அல்லது 20 நாட்களுக்கு முன்புகூடத் தலைமைச் செயலாளர் அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் மிகத் தெளிவாக ஒரு அறிக்கையினை அனுப்பியிருக்கின்றார்கள். அந்தச் அறிக்கையை வேண்டுமானால் கூட படித்துக் காண்பிக்கத் தயார். ஆனால் நேரம் இடம் தரவில்லை. அந்த அறிக்கையில்கூட, 'எந்தவிதமான கட்டாயத்திற்கும் இடம் இருக்கக் கூடாது, எந்தவிதமான தண்டனையும் யாருக்கும் விதித்திருக்கக் கூடாது' என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இவ்வளவையும் நாங்கள் சொல்லும்போது, ஆர்வம் மிகுதியாலும், அல்லது கடமை உணர்ச்சியாலும் உந்தப்பட்டு, ஐயாயிரம் பேருக்கு அல்லது பத்தாயிரம் பேருக்குச் செய்துவிட வேண்டும் என்ற காரணத்தினால், இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தெரிந்தோ, தெரியாமலோ கட்டாயம் அல்லது வற்புறுத்துதல் அல்லது வாய்மொழி இருந்திருக்கக் கூடும். இந்தச் சட்ட மன்றத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்த ஆண்டு, இப்படிப்பட்ட கட்டாயம் கூட இல்லாத வகையில் நடத்திக் காண்பிக்க முடியும். இதே நேரத்தில் ஆசிரியர்கள் பலரும் மாவட்ட ஆசிரியர்கள் சங்கங்கள் சிலவும் கூட நல்லெண்ணத்தோடு 'நாங்கள் ஒத்துழைக்கத் தயார்' என்று தெரிவித்திருக்கின்றன. அதை யொட்டி, மாவட்ட ஆசிரியர்கள் சங்கச் செயலாளர் ஒருவருக்கு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடலூரில் பரிசுகள் வழங்கியிருக்கின்றார்கள். ஆசிரியர்கள் இப்படிப் பல இடங்களிலே ஒத்துழைக்கின்றார்கள். அவர்கட்கு நன்றி இப்படிப்பட்ட பணிகளில் ஆசிரியர்களை ஓரளவு ஈடுபடுத்துவதுகூட எங்கள் கெட்ட எண்ணத்தால் அல்ல, எதிர்காலத்தில் ஆசிரியர்கள் நலனைக் காப்பாற்றுவதற்கு, அவர்கள் நல் வாழ்வினை அடையச் செய்வதற்கு இந்தத் திட்டம் ஒன்றுதான் உதவும் என்று திடமாக நம்பும் காரணத்தினால்தான்.



ஆசிரியர்கள் மட்டுமின்றி, ஆண்டவனையேகூட இத் திட்டம்தான் காப்பாற்ற முடியும். காரணம் மக்கள் தொகை அதிகமானால் கோவிலிலுள்ள புளியோதரை கூட ஆண்டவனுக்கே போதாததாகிவிடும். எனவே அப்படிப்பட்ட பஞ்ச நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், எதிர் காலத்தில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினால்தான் முடியும்.

இக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினை திராவிட முன்னேற்றக் கழக அரசின் திட்டம் என்று நாங்கள் சொல்லவில்லை. நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் காண்பித்தார்கள், நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இது பற்றி எடுத்துக் கூறிய விளக்கத்தினை. அமெரிக்காவில் உள்ளவர்கள் அவர்களைக் கேட்ட கேள்விக்குச் சொன்ன பதில் அது. 'இந்தியாவிலேயே குடும்பக் கட்டுப் பாடு திட்டத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ள முதலமைச்சராக நீங்கள் இருக்கின்றீர்களே, என்ன காரணம்' என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட கேள்வி கேட்கப்பட்டதன் காரணமாக, முதலமைச்சர் என்ற முறையில், "அந்தக் காரியத்தில் எங்கள் இயக்கத்திற்கு முன்னரே அப்படிப்பட்டதொரு குறிக்கோள் உண்டு" என்று பதில் சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்தியபோது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மிகத் தீவிரமாக எதிர்த்த கட்சி உங்கள் கட்சி என்பதை மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்போது எங்கள் கட்சியில் இதுபற்றிப் போதிய தெளிவில்லாத ஒரு சிலரும், தெளிவு இல்லாத தலைவர்களாக இருந்த சிலரும் மேடையில் பேசினார்களே தவிர பேரறிஞர் அண்ணா அவர்கள் 'குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தினை நாம் கண்டிக்கக் கூடாது' என்று எங்கள் மகாநாட்டில் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதுபோல அன்றைக்குப் பத்திரிகைகளில் சில அப்படிப்பட்ட கருத்துக்களை வைத்திருந்ததால் அதற்கு எதிர்ப்புப் பிரச்சாரம் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட பத்திரிகைகளின் கருத்துக்களைக்கூட நாங்கள் மாற்றியிருக்கின்றோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் தாய்மார்களுக்குப் பரிசுகள் வழங்கி விளம்பரப்படுத்திய அமைச்சர் திரு. ஆதித்தன் அவர்கள் ஆளும் கட்சியின் பக்கத்தில்தானே இருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படிப்பட்ட பிரச்சாரத்தினால் எங்கே அதிகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முயலுவார்களோ என்றுதான் அவர்களை எங்கள் பக்கத்திற்கு அழைத்துக் கொண்டு விட்டோம். (சபையில் பலத்த சிரிப்பு.) ஒரு வேளை அம்மையார் அவர்களே பரிசு பெறும் வாய்ப்பினைத் தவற விட்டு விட்டார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. (மீண்டும் பலத்த சிரிப்பு.) எனவே இந்த இயக்கத்தின் மிக உயர்ந்த இலட்சியத்தினை நாம் இழந்துவிடக் கூடாது. எங்கோ ஒரு சிறு தவறு நடந்திருக்கக் கூடும். ஆனால் நூற்றுக்கணக்கில் செய்ததில் எங்கோ ஒரு தவறு நடந்துவிட்டது என்பதற்காக மிச்சமுள்ள 99 பேருக்குக் கிடைக்கும் நன்மையை நாம் ஏற்றுக் கொள்ள முன் வரவில்லையெனில் பிறகு இந்த நாட்டிலுள்ள பஞ்சத்தினையும் ஏழ்மையையும் இந்த அரசு மட்டும் அல்ல, வேறு எந்த அரசாலும் தடுத்திட முடியாது. வரும் பத்தாண்டுக் காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம் எண்ணிப் பார்த்தால், சிறு குறையினைப் பெரிதாக எண்ணிவிடாமல், எல்லாக் கட்சித் தலைவர்களும் அருள் கூர்ந்து இதில் ஒன்றுபட்டுப் பணியாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் அமெரிக்காவில் கலைஞர் அவர்கள் பதில் சொல்லுவதற்கான காரணம் என்ன என்று சொன்னேனே தவிர, 'ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது, அதற்கு மட்டுமே அக்கறை உண்டு' என்று சொல்லவில்லை. இதில் எங்களுக்கும் அக்கறை உண்டு. தேசியத் தலைவர்களுக்கும் அக்கறை உண்டு. சிலருக்குக் குடும்பம் இல்லாத காரணத்



தினால் அவர்கள் இதைப்பற்றி பேசவதில்லை. ஆனால் நாங்கள் அடிக்கடிப் பேசுகிறோம் என்றால் ஏற்படும் பாதகத்தினைத் தெரிந்து கொள்ளக்கூடிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். எனவே எல்லாரும் இந்தத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டு இதை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு அனைவரும் தங்கள் ஒத்துழைப்பினைத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் தொடர்ந்து பேசி, முறைகளை இங்கே விளக்கிக் கொண்டிருந்தால் ஒருவேளை அங்கத்தினர் பலரும் எழுப்பியப் பல்வேறு பிரச்சனைகளுக்கு பதில் சொல்ல முடியாமல் போய்விடுமோ என்று ஐயுறுவதால், அங்கத்தினர்கள் எழுப்பியப் பிரச்சனைகளுக்கு முதலில் பதில் சொல்லிவிட நினைக்கிறேன். எல்லாப் பிரச்சனைகளுக்கும் பதிலளிக்க நேரமில்லாவிட்டாலும், முக்கியமான சிலவற்றுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன். ஆயினும் எல்லாவற்றையும் இந்தத் துறை பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நர்சுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரேஷன் அலவன்ஸை அரசாங்கம் நிறுத்தி விட்டதென்றும், அதைத் திரும்ப வழங்க வேண்டுமென்றும் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். செவிலியர்களுக்குச் சலுகைகள் கொடுக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. வேறு எந்தப் பணியாளர்களுக்கும் ரேஷன் அலவன்ஸ் என்பது கிடையாது; அதனால் செவிலியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ரேஷன் அலவன்ஸான ரூ. 30-ஐயும் சம்பளத்தோடு சேர்த்துக் கொடுத்து விடுவதென்ற முறையில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனாலும் அதில் இப்போது ஒரு கருத்து உருவாகியுள்ளது. ஏற்கெனவே ரேஷன் அலவன்ஸ் பெற்று வந்த செவிலியர்கள் பாதிக்கப்படாத வகையில், அவர்களுக்கு ரேஷன் அலவன்ஸைக் கொடுத்துவிடுவதென்றும், கடந்த அக்டோபரில் இருந்து புதிதாகப் பதவிக்கு வருகின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் கருதப்படுகின்றது. எனவே, இந்தப் பிரச்சனையை அரசாங்கம் மீண்டும் பரிசீலித்து உரித்தான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்போது பே கமிஷன் ஏற்படுத்தப் பட்டபோது, செவிலியர்களுக்கு ரேஷன் அலவன்ஸ் கொடுக்க வேண்டாம் என்று இந்த டிப்பார்ட்மெண்டிலிருந்து சிபாரிசு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: May I request the Hon. Minister to consider the question of nurses sympathetically? Their position is entirely different from others. They have so many difficult problems and their case should be viewed on a different footing altogether. That is the only point, I want to say.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சென்ற 30 வருட காலமாக ரேஷன் அலவன்ஸாக 30 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததாகவும், இன்றைக்கு்கூட அரியானாவில் 90 ரூபாயும், மத்திய அரசாங்க ஆஸ்பத்திரிகளில் 60 ரூபாயும் கொடுப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு சென்ற அக்டோபருக்குப் பின்னால் வேலைக்கு வந்தவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அலவன்ஸை திரும்ப வசூலிக்கப்படாமல் இருக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கொடுக்கப்பட்ட தொகையை திருத்தாமல் இருக்க அரசாங்கம் ஆராயும். ஆனால் இந்த ரேஷன் அலவன்ஸ் 30 ரூபாயை மாதச் சம்பளத்துடன் சேர்த்திருந்தால், If it is included in the new scale of pay, மீண்டும் தனியாக ரேஷன் அலவன்ஸ் 30 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பது—அது மெதுவடைக்கு இந்தக் காசு—மசால் வடைக்கு இந்தக் காசு என்பதுபோல் கேட்பதாகும். ஆனால் ஏற்கெனவே இந்தச் சலுகை வழங்கப்பட்டு வந்தவர்களுக்கு, அவர்கள் அந்தச் சலுகையை இழந்துவிடக் கூடாது என்பதற்காக—அவர்கள் அளவில் தொடர்ந்து கொடுப்பதற்கு ஏற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக வருகின்றவர்கள் விஷயத்தில் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆயினும் மாதச் சம்பளத்தோடு இந்த ரேஷன் அலவன்சும் சேர்க்கப்படவில்லை என்றால்—செவிலியர்களுக்கு உண்மையிலேயே இது இழப்பாக இருக்குமானால்—அரசாங்கம் அதைப் பரிசீலித்து அவர்களுக்கு இழப்பு இல்லாதவாறு செய்யும்.

அடுத்து, இந்த மலேரியா, பைலேரியா ஒழிப்புத் துறைகளிலுள்ள சுகாதாரப் பணியாற்றும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பணிகளை நிரந்தரமாக்கி, பணியை வரிசைப்படுத்தி, ஊதிய உயர்வும் அளிக்கப்பட வேண்டும் என்பது கடந்த ஆறு மாத காலமாக அரசாங்கத்தின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பணி செய்கிற யாரும் வேலையிலிருந்து விலக்கப்படாமலிருக்க வழி செய்யப்படுகிறது. அந்த வகையில் அவர்களுக்கு மறு பயிற்சி தரப்படுகிறது. பேசிக் ஹெல்த் ஒர்க்சில் அடிப்படை சுகாதாரப் பணியில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, வீடுகளுக்குச் சென்று நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அவர்கள் பணி நிரந்தரமாக்கப்படும். உடனடியாக அவர்கள் வேலை



யில் சேர்ந்த தேதியிலிருந்து பணியைக் கணக்கிட்டு, முறைப்படுத்தி, ஊதிய உயர்வும் அளிக்க சுகாதார இலாகாவில் தனியாக ஒரு அலுவலரும், அவருக்கு உதவியாக எழுத்துப் பணிச் செய்வோரும் நியமிக்கப்பட்டு, வேலை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தப் பிரச்னை, செவிலியர்களுக்கு உதவியாக இருக்கின்ற உதவி செவிலியர்களைப் பற்றியது. இவர்களின் பணி லாஸ்ட் கிரேடு கவர்ன்மெண்ட் சர்வன்ட்ஸ் பணியைவிட தாழ்வானதாக—இன்பீரியர் சர்வீஸாக—இருப்பதாகவும், அதை முறைப்படுத்தி சுப்பீரியர் சர்வீஸாக ஆக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றார்கள். அரசாங்கம் அவர்களின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி அரசு ஊழியர்களுக்குள்ள விடுமுறை உரிமைகள், மற்ற சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் பொருந்தும். அரசு ஊழியர்கள் 55 வயதில் ஓய்வுபெற வேண்டும். அதன்படி அவர்களும் ஓய்வு பெற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இன்னும் சில நாட்களில் இந்த அறிவிப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

அதைப்போன்று இன்றைக்கு இருக்கின்ற இந்திய மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற—பி.ஐ.எம். படித்தவர்கள்—25 டாக்டர்களுக்கு உடனடியாக, வேலை கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. இந்த 25 பேர்களில் மாவட்டங்களிலுள்ள 6 அல்லது 7 பேர் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம் பெற ஏற்பாடு செய்யப்படும். இதிலேகூட, சித்த மருத்துவத்தில் ஈடுபாடு கொண்ட பெரியோர்கள் நன்கொடை தருவார்களானால், அவர்கள் கொடுக்கின்ற நன்கொடைக்கு சமமான ஒரு தொகை அரசாங்கமும் போட்டு, அவர்கள் இருக்கின்ற வட்டத் தலைநகர் அல்லது மாவட்டத் தலைநகரில் ஒரு சித்த மருத்துவ மனைத் தொடங்க வழி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் மூலம் சிறந்த பலனையும் நிச்சயமாகப் பெற முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் யுனானி முறையையும் வளர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். யுனானி முறையையும் காப்போம். ஆனால் அரசாங்கத்திடம் அந்த அளவுக்குச் சக்தி இல்லை. காரணம் நிதி வசதி இல்லாதது தான். சித்த மருத்துவத்திற்கு எப்படி பழனி கோவிலில் பணம் கேட்கிறோமோ, அதைப் போல முஸ்லீம் சங்கச் சார்பிலே 5 லட்சம் ரூபாய் கொடுப்பார்களானால் யுனானி மருத்துவத்தையும் வளர்க்கலாம்.

ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி இவைகளை விரிவுபடுத்த வேண்டுமானால், பல லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நமது நிதி வசதி தாராளமாக இருக்குமானால், இதற்காக நமது முதலமைச்சர் அவர்களை ஒரு கோடி ரூபாய்

[திரு. க. அன்பழகன்] [1972 மார்ச் 17

கேட்டு வாங்கியிருப்பேன். ஆனால் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட போர் நெருக்கடியினால் நமது நிதி ஆதாரங்கள் தடைப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பரிசுச் சீட்டு வாயிலாக 75 லட்சம் ரூபாய் மருத்துவ வசதிக்காகக் கொடுக்கப் பட்டது. இந்த ஆண்டு பாதுகாப்பு நிதிக்குத் தேவைப்படுவதால், மருத்துவ வசதிக்கு அதிலிருந்து நிதி கிடைக்கும் சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை.

உண்மையிலேயே அலோபதி முறையை விட சித்த வைத்திய முறை பல நோய்கட்கு எவ்வளவோ நல்லது என்பதை அனுபவ பூர்வமாக அறிந்த வர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அலோபதி முறையில் நிபுணர்கள் என்று சொல்லக்கூடியவர்களாலே கூட, சிகிச்சை அளிக்கப்பட்டு, முடியாது என்று கைவிடப்பட்ட நோய்களைக்கூட சித்த வைத்தியத்தாலே தீர்த்திருக்கின்றார்கள். அலோபதி முறையில் நோயின் வகையையும் நிலைமையையும் சுலபமாகக் கண்டறியலாம். சித்த வைத்தியத்தில் நோயைக் கண்டு பிடிப்பதில் சிலருக்குத் தான் நல்ல தேர்ச்சி உண்டு. ஆனால் கைகண்ட மருந்து, சித்த வையத்திலே இருக்கிறது. நோயின் கூறுகளையும் எளிதில் கண்டு பிடிக்கும் முறைகளையும் சித்த வைத்தியர்கள் எல்லோரும் அறிந்து கொண்டால், மிக நல்லமுறையிலே சிகிச்சை அளிக்க முடியும். இப்பொழுதே சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பெரிய பெரிய நோய்களை யெல்லாம் தீர்த்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

ஆகவே, நம்முடைய நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்து காணப்பட்ட அடிப்படை உண்மைகள்—அந்த மூலிகைகள், அவற்றின் பயன்கள் எல்லாம் அலோபதி டாக்டர்களால் இன்றைய தினம் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. சென்னையில் உள்ள பொது மருத்துவத் துறை டாக்டர் இராமச்சந்திரன் அவர்கள் அந்த மூலிகைகளின் தரத்தையும், அதில் உள்ள சிறப்பு ரசாயனப் பகுதிகளையும் தனித்தனியே பிரித்து ஆராய்ந்து அந்த மூலிகைகளில் இன்ன இன்ன தன்மைகள் இருக்கின்றன, அதனால்தான் இன்ன இன்ன நோய்களுக்கு மருந்தாகிறது என்பதைக் கண்டறிந்து வருகிறார். அந்த ஆராய்ச்சித் துறைப் பகுதி தொடர்ந்து பணியாற்றவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

அடுத்து, மூலிகை உற்பத்திக்கு அரும்பாக்கத்தில் ஒரு மூலிகைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் ஏற்ற இயல்புடன் அந்த இடம் அமையவில்லை என்பதை உணர்ந்து அதை திருநெல்வேலி பாளையங்கோட்டை கல்லூரியோடு சேர்த்து மூலிகைப் பண்ணை நல்லமுறையில் அமைய ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன. இது ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்புதான் என்றாலும், அதை இன்னும் அதிக அக்கறையுடன் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.



1972 மார்ச் 17] [திரு. க. அன்பழகன்]

இப்படி ஒவ்வொரு துறையிலும் அரசு கவனம் செலுத்திப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகையில் ஹோமியோபதிக்கு ஒரு கல்லூரி வர வில்லையே என்று எடுத்துக் காட்டினார்கள். அதை நான் அறிவேன். நம் முடைய சட்டம் கடந்த மாதம் 26-ஆம் தேதி தான் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றது. அதன்கீழ் நாம் முதலில் ஒரு கவுன்சில் ஏற்படுத்தி யாக வேண்டும், நல்ல திறமையுள்ளவர்கள்—அந்தத் துறையினரால் மதிக்கத் தக்கவர்கள் இடம் பெற்று அந்த கவுன்சில் அமைந்த பிறகுதான் ஹோமியோ பதி கல்லூரி ஏற்படுத்துவதுபற்றி அவர்கள் முடிவு செய்தாக வேண்டும். அவர்கள் நிச்சயமாக அதில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள்.

அடுத்து, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் ஒவ்வொன் றுக்கும் பதில் தெரிந்து வைத்திருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தினால் எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஆகவே வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு அங்கத்தினர்களை வேண்டிக் கொண்டு—உறுப் பினர்கள் கருத்துக்கள் அனைத்தும் கவனிக்கப்படும் என்ற உறுதியினை அளித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 14-க்கு திருவாளர்கள் க. சுப்பு, டாக்டர் ஹாண்டே, திருமதி அனந்தநாயகி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,29,99,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 15-க்கு திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எல். வடிவேல் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,46,60,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 38-க்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,04,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

## A. STATUTORY RULES AND ORDERS

66. Notification issued with G.O. R. No. 101, Revenue, dated 18th January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by Member-in-charge Youth Forum Bharatiya Vidya Bhavan, Madras on 23rd January 1972 at Ashok Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.]

67. Notification issued with G.O. R. No. 2827, Revenue, dated the 21st December 1971, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Branch



Manager Indian Oil Corporation, Madras on 26th December 1971, at Safire Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

## B. Reports, Notifications and Other Papers

@ 83. Review on the Tamil Nadu Police 1971-72 (English and Tamil).

---

@ Despatched to Members on 14th March 1972.

## இணைப்பு 1.

[754-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### மருத்துவத் துறை.

### கோரிக்கை எண் 14. மருத்துவம் (1972-73).

### கொள்கை.

மக்கள் அனைவரும் சிறந்த உடல் நலம் பெற்றுத் திகழ்வதற்குரிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத் தேவையை இவ்வரசு உணர்ந்து, அதற்கிணங்க செயல்பட்டு வந்துள்ளது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் மூதுரை நாம் அனைவரும் நன்கறிந்தவொன்றே. இதனைக் கருத்திற் கொள்வோமாயின் நாடு பிற துறைகளில் எவ்வளவுதான் முன்னேற்றமடைந்திருந்தாலும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் மிக இன்றியமையாதது மக்களின் நல்வாழ்வு வளர்ச்சியே என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடிருக்க முடியாது. குடிமக்கள் அனைவருக்கும் இயன்ற அளவு விரைவில் வலிவுள்ள உடல் நலத்தை பேணிக் கொள்வதற்குத் தேவையான சத்துணவையும் உளநிறைவு தரும்படியான உடல் நலம் பேணும் வழியையும் நாம் அடைய வேண்டும் என்பதை இவ்வரசு நன்கறிந்துள்ளது. மருத்துவப் பணிகளுக்கு மேன்மேலும் விரிவான அடிப்படையிலும் திறம்படவும் ஏற்பாடு செய்து கிராமப் பகுதிகளில் மக்கள் நல்வாழ்விற்குத் தேவையான வழிவகைகளை அமைத்துக் கொடுப்பதும், குடிமக்கள் அனைவருக்கும் மருத்துவம் எளிதில் கிட்டுமாறு செய்வதுமே இந்த அரசின் கொள்கையாகும். இதற்காக அரசு மருத்துவப் பணிகளையும் செவிலியர் பணிகளையும் விரிவுபடுத்தவும், மருத்துவக் கல்வியில் பட்ட மேற்படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் அதிக அளவு நாட்டம் செலுத்தவும், மருத்துவப் பணியில் பயிற்சி பெற்றவர்களது பணி தேவையாயிருப்பதால் குறைந்த அளவிற்கேனும் அத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மருத்துவம் சார்ந்த உதவிப் பணியாளர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்குமாறு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் கருதியுள்ளது. காச நோய், தொழு நோய், போன்ற தொற்று நோய்களையும், புற்று நோயையும் கட்டுப்படுத்துவதற்காக இவ்வரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தூய தரமான மருந்துகள் கிடைக்கவும் அரசு உறுதி செய்கிறது. இந்திய முறை மருத்துவங்களும், குறிப்பாக சித்த மருத்துவமும், ஹோமியோபதி மருத்துவமும் வளரவும், பயன்படுத்தப்படவும், அரசினால் தனி நாட்டம் செலுத்தப்பட்டு வருகின்றது. குடும்ப நலத் திட்டம் மக்களிடையே பரவுவதற்கும், அவர்கள் தெளிவும் நம்பிக்கையும் கொண்டு இத் திட்டத்தைக் கைக்கொள்வதற்கும், அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ் (E.S.I.) தொழிலாளர்களுக்குத் தனி மருத்துவ வசதி அளிப்ப





தற்கும் முதலிடம் அளிக்கப்பட்டு வருகின்றது. இக்குறிக்கோள்களை எய்தும் பொருட்டு, இவ்வரசு வரும் ஆண்டில் செயல்படுத்துவதற்காக திட்டங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களின் நல்வாழ்வு விரைந்து முன்னேற்றம் காணும் வகையில் அவை உருவாக்கப்பட்டுள்ளன.

### திட்ட முதலீடு.

மக்கள் மருத்துவ நலம் பேணுதற் பொருட்டு அரசு செய்துள்ள முதலீடு பற்றி நினைவு கூர்தல் பயனுள்ளதாக இருக்கும். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மருத்துவப் பணிகளுக்காகவும் மருத்துவக் கல்விக்காகவும் செய்யப்பட்ட திட்ட முதலீடு ரூ. 248 லட்சம்; இதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 459 லட்சமும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 644 லட்சமும் முதலீடு செய்யப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்குமான முதலீடு ரூ. 823 லட்சமாக உயர்த்தப்பட்டது. திட்டப் பணிகள் தொடர்பாக, மருத்துவப் பணிகள், மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்குச் செய்யப்பட்ட மொத்த முதலீடு படிப்படியாக உயர்ந்துகொண்டே வந்துள்ளதை அறியலாம்.

### வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம்.

1971–72-லும், 1972–73-லும் (திட்டப் பணிகள், திட்டத்தில் சாராத பணிகள் இரண்டும் உட்பட) மருத்துவப் பணிகள், மருத்துவக் கல்வி, நாட்டு மருத்துவம் ஆகியவற்றுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் பின்வருமாறு :—

| | 1971-72 | 1972-73. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| மருத்துவக் கல்வி .. .. | 10,78,19.200 | 11,17,69.000 |
| மருத்துவப் பணிகள் .. .. | 10,00,84.400 | 10,93,06.400 |
| நாட்டு மருத்துவம் .. .. | 8,08.900 | 12,74.000 |

நாட்டு மருத்துவத்தின் முக்கியத்துவத்தையும் மக்களிடையே இதைப் பரப்புவதன் முக்கியத்துவத்தையும் கருதி, வரவு-செலவுத் திட்டத்தில் இதுவரை, "மருத்துவக் கல்வி இயக்குநரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திட்டப் பணிகள்" என்ற பெருந்தலைப்பின் கீழ் திட்டப் பணிகளுக்காகச் செய்யப்பட்டு வந்த நிதி ஒதுக்கம், 1972-73-ல் அத்தலைப்பில் இருந்து பிரிக்கப்பட்டு "நாட்டு மருத்துவ இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திட்டப் பணிகள்" என்னும் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. 1972-73-ஆம் ஆண்டில் நாட்டு மருத்துவத்துக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் முந்திய ஆண்டில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் 50 சதவீதத்துக்கும் அதிகமானது என்பதை இங்குக் குறிப்பிடலாம்.

## மருத்துவக் கல்வி.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவக் கல்விக்காக ரூ. 43 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது ; இத் தொகையில், ரூ. 380 லட்சம் செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஆகிய நகரங்களில் புதிய கல்லூரிகளை விரிவு படுத்துதல்—முடித்தல் தொடர்பான வகைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, தஞ்சாவூரிலுள்ள மருத்துவக் கல்லூரிகட்கு மேம்பாடு செய்வதற்காக திட்டப் பணிக்கு ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகட்கும், தஞ்சை, மதுரையிலுள்ள மருத்துவக் கல்லூரி கட்கும் மேம்பாடு செய்வதற்காக 1972-73-ஆம் ஆண்டிற்கு ரூ. 15 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியி லுள்ள நோய் அறி இயல்துறைப் பிரிவை விரிவுபடுத்தும் திட்டம் ஒரு பெரிய திட்டமாகும். இதற்கு ரூ. 7.75 லட்சம் செலவாகும் ; மேற்சொன்ன ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கத்தில் இத்தொகை அடங்கும். செங்கற்பட்டு, திருநெல் வேலி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலுள்ள புதிய மருத்துவக் கல்லூரி களுக்கான கட்டிடங்கள் திட்டமிட்டபடி, 1972-73-ல் கட்டி முடிக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவக் கல்வி வளர்ச்சிக்காக இவ்வரசு 8 மருத்துவக் கல்லூரிகளை நிறுவியுள்ளது. 1970—71 வரை இக் கல்லூரிகளில் இணைக்கப்பட்ட எம்.பி., பி.எஸ்., படிப்பின் முதலாண்டில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக் கான மொத்த இடங்கள் 1,125 ஆக இருந்தது. இம்மாநிலத்திலுள்ள அரசினர் மருத்துவக் கல்லூரிகளில், ஒவ்வொன்றிலும் கிடைக்கும் பயிற்சி வசதிகளையொட்டி அதற்கேற்றவாறு, அவற்றில் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை பொருந்தும் வகையில் அமையும் பொருட்டு, அவற்றில் மாண வர்களைச் சேர்த்துக் கொள்ளும் இடங்களின் மொத்த எண்ணிக்கை 1,125 லிருந்து 1,015 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதே காரணம் பற்றி பி.டி.எஸ். (பல் மருத்துவப் படிப்பு) வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் எண்ணிக்கை 45-லிருந்து 35 ஆகவும், பி. பார்மஸி (மருந்து இயல் படிப்பு) வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் எண்ணிக்கை 100-லிருந்து 60 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளன. எம்.பி.பி.எஸ்., படிப்பு தவிர, பட்ட மேற்படிப்புப் பட்டயத் தகுதிப் படிப்புகள் பலவும் அரசினர் மருத்துவக் கல்லூரிகளிலும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. 1971-72-ல் இந்த நிறுவனங்களில் நடத்தப்பட்டு வந்த வகுப்புகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



அரசினர் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டு, மருத்துவக் கல்வி இயக்குநரது கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வரும் மருத்துவமனைகள் 20 உள்ளன. இந்த மருத்துவ மனைகளில் மொத்தம் 12,056 படுக்கைகள் உள்ளன. இவைபற்றிய விரிவான விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு ஆதரவு தரும் திட்டத்தின்கீழ் 1970-71-ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள நுண்ணுயிரியல் துறையும் உடற்கூற்று இயல் துறையும் முறையே நுண்ம உயிரியல் நிறுவனமாகவும், உடற்கூறு இயல் நிறு வனமாகவும் தரம் உயர்த்தப்பட்டன. 1971-72-ல் சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள காது-மூக்கு-தொண்டை நோய்த் துறை காது—மூக்கு— தொண்டை இயல் நிறுவனமாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்தத் தரமுயர்த் தப்பட்ட நிறுவனங்களுககு இந்திய அரசு அளிக்கும் உதவி முறைகளின்படி, ஒவ்வொரு நிறுவனமும் ஆண்டொன்றுக்கு ரூ. 2 லட்சம் வீதம் 5 ஆண்டு காலத்துக்கு உதவி பெற உரிமையுடையனவாகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் அடிப்படை மருத்துவ அறிவியல் நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்காக ரூ. 12 லட்சம் தொடரா வகை மானியம் வழங்க, அரசு 1965-ல் ஒப்பளிப்பு வழங்கியது. இக் காரியத்துக்காக ஆண்டுதோறும் ரூ. 1 லட்சம் தொடர் மானியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

1972 ஏப்ரல் முதல் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் உளவியல் மருத்துவப் பட்டயத் தகுதிப் படிப்பு தொடங்கப் படும். இப்படிப்பின் கால அளவு ஓராண்டு ஆகும். இரு கல்லூரிகளிலும் சேர்த்து, ஆண்டுதோறும் மொத்தம் 12 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மருத்துவக் கல்விப் பிரிவின் குறிப்பிடத் தக்க சாதனைகளாவன. சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் இதய இயல் பிரிவுக்கும், நரம்பியல் பிரிவுக்கும் ஏழு அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டது. சென்னை அரசினர் மனநோய் மருத்துவ மனையின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது.

அரசினர் பொது மருத்துவமனையில் இருதய இயல் பிரிவுக்கான ஏழடுக்கு மாடிக் கட்டிடம் ரூ. 36 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடம், தொடக்கத்தில் புற நோயாளிகள் பிரிவு, ஆய்வுப் பிரிவு அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய காலச் சிகிச்சை ஆகியவற்றுக்கான பிரிவுகளின் தொகுதியாக அமையும் வகையில் திட்டமிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இத்தொகுதியை அக நோயாளிகள் சிகிச்சைக்குரிய வசதி களுடன் கூடிய கருவிகள், வசதிகள் அனைத்தும் அடங்கிய இதய இயல் நிறுவனமாக ஆக்கும் பொருட்டு, 120 படுக்கைகளுடன் கூடிய முழுமையான

முறையாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. இத் தொகுதியில், மிக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு பயனுக்கு வந்துள்ள அறிவியல் நுட்பத்திறம் உயர்ந்த கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இதய நோய்களைக் கவனிக்க வசதிகள் செய்து தரும் தேவையுள்ள சூழ்நிலையில் இத்தொகுதியின் முக்கியத்துவம் பற்றி அதிகம் வற்புறுத்த வேண்டுவதில்லை.

சென்னை அரசினர் மருத்துவமனையில் நரம்பியல் தொகுதிக்காக ஏழடுக்கு மாடிக் கட்டிடம் ரூ. 23.20 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இத் தொகுதியில் அடங்கியுள்ளவை பின் வருவன :—

புற நோயாளிகள் பிரிவு, அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய சிகிச்சைத் தொகுதி எக்ஸ்கதிர் பிரிவு, ஆய்வுக்கூடம், கலையரங்கு, நூலகம், காட்சிக்கூடம், விரிவுரைக் கூடம், நிர்வாகப் பிரிவு, இ.இ.ஜி. பிரிவு (E.E.G.) இ.எம்.ஜி. பிரிவு (E.M.G.) அகநோயாளிகளுக்கான வசதிகள் ஆகியன. அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அறுவைச் சிகிச்சைத் தொகுதி, டெலிவிஷன், எக்ஸ் கதிர் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ள அறை ஆகியவற்றில் சீர்வளிச் சாதன வசதி (Air-conditioned) அமைக்கப் பட்டுள்ளது. கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளவர்களுடைய கண்கள் விளக்கொளியால் துன்பப்படாதிருக்கும் பொருட்டு, வார்டுகளில், மிக அண்மையில் கண்டறிந்த புதிய முறையில் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இத் தொகுதி 19—2—1972 அன்று, தமிழக முதலமைச்சர் தலைமையில் இந்தியக் குடியரசுத் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, அரசினர் மனநோய் மருத்துவமனை நம் நாட்டிலுள்ள மனநோய் மருத்துவமனைகளிலேயே மிகப் பழமையானதாகும். இம் மருத்துவமனை இந்தியாவின் பல பகுதியிலிருந்தும் குறிப்பாக, ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம், ஆகிய மாநிலங்களிலிருந்து வரும் மன நோயாளிகட்கும் குறிப்பாக தமிழ் நாட்டவர்க்கும் மிகவும் பயனுள்ள வகையில் நூற்றாண்டு காலம் பணி புரிந்துள்ளது.

12—9—1971-ல் இம் மருத்துவமனையின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது. இந்தியக் குடியரசுத் தலைவர் விழாவைத் தொடங்கி வைத்தார். தமிழ் நாட்டு ஆளுநர் விழாவிற்குத் தலைமை தாங்கினார். அவ்வமயம் நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

வழக்கமாகவுள்ள புற நோயாளிகள், அக நோயாளிகள் பணிகளுக்குக் கூடுதலாகக் கீழ்க்கண்ட தனி மருத்துவமனைகளும் வாரத்திற்கு ஒரு நாள் செயல்படுகின்றன.



நரம்பியல் சார்ந்த உளவியல், தனி மருந்தகம், குழந்தைகள் நலம் நெறிப் படுத்தும் தனி மருந்தகம், வாதசன்னி நோய் தனி மருந்தகம், இளம் பருவத்தினர்க்கான தனி மருந்தகம், நரம்பு மண்டலக் கோளாறு குறித்த தனி மருந்தகம் இந்நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 1,800 ஆகும். 1971-ல் 1,758 படுக்கைகளே இருந்தன ; 1961-ல் இங்கு 2,727 படுக்கைகள் இருந்தன. புற நோயாளிகளுக்குச் சிறப்பாகப் பணிபுரிந்ததாலும், பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டதால், அதிக அளவிலும் சிறப்பாகவும் புற நோயாளிகளைக் குணப்படுத்த முடிந்ததாலும் இங்கு அக நோயாளிகளை சேர்க்கும் எண்ணிக்கை குறைந்ததால் மேற்சொன்னவாறு படுக்கைகளின் எண்ணிக்கை குறைந்தது.

இந்த மருத்துவமனையுடன் இணைந்துள்ள உயிர் வேதியல் உளவியல், கதிர் வீச்சு இயல், எலெக்ட்ரோ-என்செபயாகிராபி துறைகளின் ஆய்வுக்கூடங்களில் புற நோயாளிகளுக்கும் அக நோயாளிகளுக்கும் நோய் அறியும் வசதிகள் எல்லா நேரமும் கிடைக்கும்.

இம்மருத்துவமனையில், மருந்துகள் கொடுத்தும், உடலிற் செலுத்தியும், சிகிச்சையளிக்கும் வசதிகள் உள்ளன ; மேலும், உளவியல் முறை, பொழுது போக்கு முறை, வாழ்க்கைத் தொழில் ஈடுபடுத்தும் சிகிச்சை பணி வழி நோய் நீக்கு முறை ஆகிய வழிகளில் சிகிச்சையளிக்கும் வசதிகளும் உள்ளன.

நோயாளிகள் நோய்க் குணமடைந்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட பின்னரும், அந்நோய் திரும்பவராமல் தவிர்க்கும் பொருட்டு, மருத்துவமனை தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

பல்வகை ஆராய்ச்சிகளுக்கு உதவும் கருவிகளும் பொருள்களும் இந்நிறுவனங்களில் பெருமளவு உள்ளன. மருந்துச் சோதனைகள் நடத்தப்பட்டு அறிக்கைகள் அடிக்கடி அளிக்கப்பட்டு வந்துள்ளன. கல்லூரி மாணவர்களிடையே மனக் கோளாறு குறித்த மதிப்பீட்டாய்வு நடத்தப்பட்டது ; மன நோய் குறித்து, பொதுமக்கள் கருத்துபற்றியும் ஆய்வு நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் உயிர்-வேதியல் ஆராய்ச்சி, உளவியல் ஆராய்ச்சி, மற்றும் மனக்கோளாறு குறித்த மதிப்பீட்டாய்வு விரைவில் மேற் கொள்ளப்படும். இன்னொரு முக்கியமான திட்டம், இயங்கும் மருத்துவமனைகளையும், இயங்கும் மருத்துவப் பிரிவுகளையும் ஏற்படுத்தியது ஆகும். மதுரையிலும் சென்னையிலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் இயங்கும் கண் மருத்துவ பிரிவுகளையும், இயங்கும் மருத்துவ மனைகளையும் நடத்துகின்றன.

சென்னையிலும், மதுரையிலும் அந்நகரங்களிலிருந்து ஏறத்தாழ 100 மைல் தொலைவில் அமைந்துள்ள கிராமங்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவும் கண் நோய் தீர்க்கும் பணிகள் குறித்து மக்களிடையே எடுத்துக்

கூறவும் இயங்கும். கண்நோய் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகளுக்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த கண்நோய் சிகிச்சை முகாம்கள் முக்கியமாக விழிவெண்படல அறுவை சிகிச்சை Cataract Operation செய்யும் பணியைக் கவனிக்கும். மேலும், கண்பார்வை குறைபாடுகள், ஊட்டச்சத்துக் குறைவினால் ஏற்படும் கண் நோய்கள், கண்விழி விறைப்பு நோய் (Glancoma) பொதுவான பிற கண்நோய்களுக்கும் இவை சிகிச்சையளிக்கும். சென்னை மாநகரில், கண்நோய் சிகிச்சை முகாம் ஒன்றுக்கு ரூ. 7,500-க்கு மேற்படாத செலவில் ஆண்டொன்றுக்கு நான்கு கண்நோய் சிகிச்சை முகாம்களை ஏற்படுத்த நிலையம் ஏற்பாடு செய்யும். கண்நோய் சிகிச்சை முகாம் செயல்படும் காலஅளவு பதினைந்து நாட்களாகும். மதுரை, இயங்கும் கண்நோய் சிகிச்சைப் பிரிவினால் 24 கண்நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தி, ஆண்டொன்றுக்கு மொத்தமாக ரூ. 75,000 வழங்கவும், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதோடு பணியாளர்களுக்கான பயணப்படி, வண்டிகளைச் செப்பனிட்டு பேணிவருதல், பெட்ரோல், எண்ணெய் வாங்குதல் ஆகியவற்றுக்கான செலவையும், பிற பல்வகை சில்லறைச் செலவுகளையும் நேர்வு செய்ய தொடர் இனச்செலவாக ஆண்டொன்றுக்கு ரூ. 71,000 கொடுப்பதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1970-ஆம் ஆண்டில், ரூ. 5.56 லட்சம் மொத்தச் செலவில் (தொடர் இனச் செலவாக ரூ. 2.46 லட்சமும் தொடரா இனச் செலவாக ரூ. 3.10 லட்சமும்) மருத்துவமனை இயல்ஊர்தி ஒன்றை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதன் பெயர் சித்தரஞ்சன் மருத்துவமனை இயல் ஊர்தி. இது சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ளது. இந்த மருத்துவமனை இயல்ஊர்திப் பிரிவின் முதல் கண்நோய் சிகிச்சை முகாம் 1-9-1971 முதல் கும்மிடிப்பூண்டியில் நடத்தப்பட்டது. பின்னர் காட்டாங் குளத்தூரில் நடத்தப்பட்டது.

மற்றொரு இயல்ஊர்தி மருத்துவமனை பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இது மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இந்நிலையத்திற்கான மொத்தச் செலவு ரூ. 4.34 லட்சமாகும். (தொடர் இனச் செலவாக ரூ. 1.74 லட்சமும் தொடரா இனச் செலவாக ரூ. 2.60 லட்சமும்) இந்நிலையம் மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியில் பட்டப் படிப்புக்கான வாய்ப்பினை மேம்படுத்தவும், மருத்துவப் பட்டப்படிப்பில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்குக் கட்டாய, மருத்துவப் பயிற்சியளிக்கும் பொருட்டு சென்னையில் இயல்ஊர்தி மருத்துவப்பிரிவு தொடங்கப்பட்டது. கிராமங்களில் புற சிகிச்சை, பிறப்பு சிகிச்சைகளுக்கான வசதிகளுடன் நோய்த்தடுப்பு சிகிச்சை ஆகியவற்றுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.



மதுரையிலுள்ள இயல்ஊர்தி மருத்துவமனை பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகளாவன :—

புறநோயாளிகளுக்குத் தனியாகச் சிகிச்சையளித்தல், ஆய்வுக்கூடப் பரிசோதனை நடத்துதல், அவசர நேர்வுகளில் மருத்துவப் பாதுகாப்புக்காக வீடுகளுக்குச் சென்று சிகிச்சையளித்தல்; குடும்ப நலத்திட்டத்தின் நோக்கம் உட்பட மருத்துவக் கல்வி பற்றி கற்பித்தல்; பேறுகாலத்திற்குமுன் சிகிச்சை அளித்தல்; குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல் உட்பட குழந்தை நன்கு வளர்ச்சி பெற சிகிச்சையளித்தல், குறிப்பான மயக்கநிலை குறித்து ஆய்வு : பிறப்பு—இறப்புப்புள்ளி விவரங்களைச் சேகரித்தல்; தொற்று நோய்களை ஒழித்தல்—கட்டுப்படுத்துதல் தேசிய திட்டத்தில் பங்கு கொள்ளுதல்; பெரியம்மை, காலரா நோய் பரவுவது பற்றி நேரடி அறிவும் நடைமுறை அனுபவமும் பெறுதல்; காசநோய், தொழுநோய் பாதிக்கப் பட்டுள்ளோர் இருப்பிடங்களுக்குச் சென்று சிகிச்சையளித்தல்; ஊட்டச் சத்துணவுத்திட்டம், பள்ளிகளில் நண்பகல் உணவுத்திட்டம், பள்ளிகளில் மாணவர் நல்வாழ்வுத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் உதவி செய்தல்.

இப்பிரிவின் முதல் முகாம் 29-3-1972-ல் நத்தத்தில் தொடங்கப்பட்டு முடிந்தது. இரண்டாவது முகாம் செல்லம்பட்டி யூனியனில் உள்ள கருமாத்தூரில் துவங்கப்பட்டுள்ளது.

### ஆராய்ச்சிப் பிரிவுகள்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவில் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ஆர்பர் நச்சு நோய் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று (Harbour Virous Research Unit) செயல்பட்டு வருகிறது. சென்னையிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் 'ஆர்பர் நச்சு நோய்' குறித்து ஆராய்ச்சி நடத்துவதே இதன் முதன்மையான பணியாகும். சென்னையிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் எல்லா காய்ச்சல் நோய்களையும் தொடக்கப் பரிசோதனை செய்வதன் மூலம் ஆர்பர் நச்சு நோய் எந்த அளவுக்குத் தோன்றியுள்ளது என்பதைக் கண்டறிவதே இந்த ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். நச்சு நோயின் (Virology) பல்வேறுநிலைகள் குறித்து மருத்துவப் பட்டதாரிகளுக்கும் மருத்துவப் மேற்படிப்புப் பட்டதாரிகளுக்கும் பயிற்சியளிக்கும் நிலையமாகவும் இப்பிரிவு பணியாற்றி வருகிறது. ரூபெல்லா நச்சுக்கிருமியினால் ஏற்படும் சிசு சார்ந்த கோளாறு நோய் குறித்து ஆய்வினைத் தொடங்குவதற்காக 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 17,660 ஒதுக்க இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆட்சிக் குழு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மருந்துகள் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிலையம் 1970 முதல் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர், செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள பல்வேறு காடுகளிலிருந்து மருந்துச் செடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 50 சதவீத செடிகள் முறைப்படுத்தப்பட்டு அட்டையில் ஒட்டப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பதினொரு மூலிகைச் செடிகள் இரசாயன ஆய்வுக்காக இரசாயனத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டன. இச்செடிகளில் அடங்கியுள்ள மருந்துப் பொருள்களைக் கண்டறியும் பொருட்டு இரசாயனத்துறை அவற்றைப் பகுப்பாய்வு செய்கிறது. இத்துறை கண்டறிந்தவைகளில் முக்கியமானவை பின்வருமாறு :—

( i) சிமை அடியின் விதிகள் (Peganum Harmala) கருப்பை சார்ந்த கருத்தரிக்காக தன்மையும், கருவிழிக்கும் தன்மையும் உடையது.

( ii காடல்சி (Zuffa Tuferosa) கருப்பை சார்ந்த நோய்களைத் தீர்க்கும் குணமுடையது.

( iii) நாதுவலை (Selamum Trillebatum) பொதுவான நரம்பு மண்டலத்தையும், மென்தசைகளையும் சமனப்படுத்தும் தன்மையுடையது.

( iv) ஊவாமுள் (Aristida Celeonei) சிறுநீர்ப் பெருக்கு குணமும் சிறுநீர்க்குழல் விரிவுபடுத்தும் குணமும் கொண்டது.

(v) வாலுழுவை (Celastous Pariculatus) பொது நரம்பு மண்டலத்தில் விளைவுகளை உண்டாக்கக் கூடியது.

(vi) நச்சுறுப்பன் (Tylopthora Asthamatica) ஆஸ்மா நோய்த்தடுப்பு மருந்தாகப் பயன்படுகிறது.

பயிற்றுக்கருவி.

சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் (Inner Circuit) டெலிவிஷன் உள்ளடங்கிய தொலைக்காட்சிப் பிரிவு ஒன்றை அமைக்க ரூ. 2 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைகளை டெலிவிஷன் மூலம் காணுவதற்கு இயலும் வகையில் மருத்துவ மாணவர்களுக்கு அறிவுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மருத்துவப் பணிகள்

எழுநூற்றி ஆறு மருத்துவ நிலையங்கள் (ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனைகள் உட்பட) மக்கள் நலத்துறை இயக்குநரின் நிருவாகத்தின்கீழ் உள்ளன. இந் நிலையங்களிலுள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 13,655 ஆகும். இந்த இயக்குநர் அலுவலகம், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவ மனைகள் மூலமாக மக்களுக்குப் பொதுவான மருத்துவ வசதிகளை அளிப்பது தவிர, தொழு நோய், காச நோய், புற்று நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.



1971-72-ல், நாகப்பட்டினம், அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 1 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும் மாயூரம், அரசு மருத்துவமனையில் ரூ. 2.15 லட்சம் செலவில் 38 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 1.41 லட்சம் செலவில் இரட்டை அறுவைச் சிகிச்சைக் கூடங்களும், உளுந்தூர்பேட்டை, அரசு மருத்துவமனையில் ரூ. 5.4 லட்சம் செலவில் புற நோயாளிகள் நிர்வாகப் பகுதியும், 16 படுக்கைகள் கொண்ட மகப்பேறு அறையும் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தர்மபுரி மாவட்டம் ஓசூரில் ரூ. 7.50 லட்சம் செலவில் 25 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டுதல், ரூ. 10 லட்சம் செலவில் 10 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் 'எக்ஸ்' கதிர் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை இவ்வாண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட முக்கியமான திட்டங்களாகும். மேலும், 1971-72-ல், திண்டுக்கல் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் சிகிச்சைத் துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. உதகமண்டலத்திலும், நீலகிரியிலும் உள்ள தலைமையிட மருத்துவமனைகளில், அரசிதழ்ப் பதிவு பெறு அதிகாரிகளுக்குச் சிகிச்சை யளிக்கும் மருந்தகங்கள் தொடங்கப்பட்டன.

வட்ட மருத்துவமனைகளில் பதினேறு பல் மருத்துவப் பிரிவுகளைத் தொடங்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. முந்திய ஆண்டுகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட எஞ்சிய திட்டங்கள் 1971-72-ல் முடிக்கப்பட்டன :—

1. உதகமண்டலம் செய்த் நினைவு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.
2. திண்டிவனம் அரசு மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.
3. மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.
4. பொன்னேரி அரசு மருத்துவமனையில் 8 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.
5. பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

6. மேட்டுபாளையம் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

7. வளவனூர் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

8. ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

9. நாகப்பட்டணம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் 8 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

10. கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 46 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

ஜயங்கொண்ட சோழபுரம் (40 படுக்கைகள்), பவானி (38 படுக்கைகள்) தேவகோட்டை (50 படுக்கைகள்) தாம்பரம் (100 படுக்கைகள்), தேனி (38 படுக்கைகள்), பாகனேரி (10 படுக்கைகள்) ஆகிய இடங்களில் புதிய மருத்துவ மனைகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தொடங்கி வைக்கப் பட்டன.

1972-73-ல் கும்பகோணம், தென்காசி, திருப்பத்தூர், ஆத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் ரூ. 2.06 லட்சம் செலவில் 32 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டவும், 15 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவுகளைத் தொடங்கவும் அனுமதி வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. எட்டு அரசு மருத்துவமனைகளில் ரூ. 2.22 லட்சம் செலவில் எக்ஸ் கதிர் பிரிவுகள் கட்டுவதற்கும், விழுப்புரத்தில் ரூ. 2.48 லட்சம் செலவில் மார்பக மருத்துவ பிரிவு கட்டுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கத் திட்டமிடப் பட்டது: வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவ மனைகளுக்கு ரூ. 6 லட்சம் செலவில் மேம்பாடுகள் செய்யவும் கருதப்பட்டுள்ளது. ரூ. 1 லட்சத்திற்கு சாதனங்கள் வாங்க ஒப்பளிப்பு வழங்கவும் கருதப்பட்டுள்ளது. 1972-73-ல் மருத்துவப்பணி இயக்குநரின் வட்டத் தலைமையிடத்தைக் கோயம்புத்தூரி லிருந்து ஈரோட்டுக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படும்.

## தொழுநோய்.

அரசு மேற்கொண்டுள்ள நல நடவடிக்கைகளுள் தொழுநோய்த் தடுப்பு குறித்த நடவடிக்கை முக்கியமானதாகும். தொழுநோய் தொன்றுதொட்டு தலை முறை தலைமுறையாக இருந்துவரும் நோயாகும். இந்நோய் இந்தியாவில் வேறெந்த காலத்திலுமே பரவி வந்துள்ளது, தொழு நோய்ப் பரவுவதைக்





கட்டுப்படுத்துவதற்காக, தொழுநோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றை அரசின் ஆக்கப்பூர்வமான திட்டமாக அரசு தொடங்கியுள்ளது. இந்தத் தேசியத் திட்டத்தின்கீழ், அரசு தொழு நோய்ப் பரவுவதைத் தடுப்பதற்காக பல தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. 1971-72-ல் அரசு 3 நோய்த் தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கியது. 6 துணை நிலையங்கள் எல்லா வசதிகள் கொண்ட முழு அளவிலான தடுப்புப் பிரிவுகளாக உயர்த்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் வசிக்கும் 411 லட்சம் மக்களில் 280 லட்சம் மக்கள் கிராமப் பகுதிகளில் வசிக் கின்றனர். இவர்களுள், 170 லட்சம் மக்கள் அரசினால் அல்லது தொண்டு நிறு வனங்களால் தேசியத் தொழு நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர். செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் பெரும்பாலும் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர். திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களிலுள்ள ஒன்று அல்லது இரண்டு வட்டங்களைத் தவிர, எஞ்சிய வட்டங்கள் அனைத்தும் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ளோர் சுமார் 75 லட்சம் மக்கள் என்றும், இவர் களுள் சுமார் 3.7 லட்சம் தொழுநோயாளிகள் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனரென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, கணக்கிடப் பட்ட மக்களில் பாதி பேர் ஏற்கெனவே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். தொழுநோய் நிவாரண தொண்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு 3-ல் காண்க.

தலைக்கட்டு மானியம், வயது வந்தவர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 ஆகும். திங்கள் ஒன்றுக்கு ஒரு சிறுவனுக்கு ரூ. 12 ஆகும். இந்த அரசிட மிருந்து இம்மாநிலத்திலுள்ள 10 நிலையங்கள் தலைக்கட்டு மானியங்களைப் பெறு கின்றன. தொழு நோய் நிவாரணப் பணி புரிந்துவரும் தொண்டு நிறுவனங் களின் பட்டியல் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட் டம், திருமணியிலுள்ள மத்தியத் தொழுநோய் பயிற்சி ஆய்வு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசின் உதவித் தொகையாக ரூ. 3 லட்சம் ஆண்டு மானியம் வழங் கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவிலூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் போலம்பாக்கத்திலும், வட ஆர்க்காடு மாவட்டம், சேத்துப்பட்டிலும் 120 துணை மருத்துவப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதாக, 4-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் பயிற்சித் திட்டத்தின்கீழ் மூன்று பயிற்சி நிலையங்களைத் தொடங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

[1972 மார்ச் 17

## காச நோய்

காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் மூலம் காசநோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பெருமளவு நாட்டத்தைச் செலுத்தியுள்ளது. இத்திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம், காச நோய்க் குறிகளைக் கண்டுபிடித்து, இயன்ற அளவு அதிக காச நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து, அதன் மூலம் குழந்தைகளுக்கு நோய்ப் பரவுவதைத் தடுக்க ஒழுங்கான முறையில் தடுப்பு ஊசியைக் குத்துவதாகும். இம்மாநிலத்தில் இதுவரை பெருமளவு ஆய்வு எதுவும் விரிவாக செய்யப்படாததால், காச நோயால் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையைக் கூற இயலவில்லை. எனினும், காச நோய்ப் பிரிவுகளிலிருந்து கிடைத்த புள்ளி விவரங்களின் அடிப்படையிலும், நடத்தப்பட்ட மாதிரி ஆய்வுகளின் அடிப்படையிலும் தமிழ்நாட்டிலுள்ள காச நோயாளிகளின் எண்ணிக்கை சுமார் 7 லட்சம் என்று தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது. காசநோய்த் திட்டத்தைச் சிறப்பாகவும் விரைவிலும் செயல்படுத்துவதற்காக, முழு நேர முதுநிலை காசநோய்ச் சிகிச்சை வல்லுநர் இம்மாநிலத்தில் 1965-ல் நியமிக்கப்பட்டு பணி புரிந்து வருகிறார். இத்திட்டத்தின்கீழ், 1963 ஆம் ஆண்டிலிருந்து 3½ லட்சம் பேருக்குக் காசநோய் இருப்பதாக கண்டறியப்பட்டு சிகிச்சை அளிப்பதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு வீடுகளிலேயே இருந்து கொண்டு சிகிச்சை பெறுவதற்கான வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இதில், சுமார் 1 லட்சம் பேர்கள் கடும் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டது. இத்திட்டம் மாவட்ட நிலையங்களின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாவட்ட திட்டத்தின் பொறுப்பில் ஒரு காசநோய் சிகிச்சை வல்லுநரும் உள்ளார். மாவட்ட காசநோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் நிலையங்களில் இலவசமாக நோய்க் குறியீடுகளைக் கண்டுபிடித்து, சிகிச்சை வசதிகள் அளிக்கப்படுகின்றன. மாநகரில், சேத்துப்பட்டிலுள்ள காசநோய் பற்றிய கட்புல விளக்க-பயிற்சி நிலையங்களில் காசநோய்த் தடுப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. திண்டுக்கல், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, பாளையங்கோட்டை, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் 5 மார்பு நோய் தனி மருத்துவ மனைகள் உள்ளன. ஈரோட்டில் மார்பு நோய் தனி மருத்துவ மனை ஒன்று விரைவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நலம்பேண் மருத்துவமனையில் சிகிச்சை பொதுவாக சிறப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. அக நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக, தமிழ்நாட்டில் உள்ள அரசு நலம்பேண் மருத்துவமனை, மருத்துவமனைகள், 5 தனி நலம்பேண் மருத்துவமனைகள் உள்ளன. இவற்றில் 3,358 படுக்கைகள் உள்ளன. (விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்



1972 மார்ச் 17]

பட்டுள்ளன.) மாநிலம் முழுவதும் தடுப்பு நடவடிக்கையாக பி.சி.ஜி. தடுப்பு ஊசி குத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதுவரை 5,360,097 பேருக்கு பி.சி.ஜி. ஊசிகள் குத்தப்பட்டுள்ளன. அவர்களுள் 353,361 புதிதாக பிறந்த குழந்தைகளாகும். பிரச்சாரம், விளம்பரம் ஆகியவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, மாநில முழுவதற்கும் சென்னை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தலைமையிடங்களில் இரண்டு விளம்பரப் பிரிவுகள் பணிபுரிகின்றன. இந்நோய்த் தடுப்பு குறித்து சுகாதாரக் கல்வி முக்கியமான பாகத்தை ஏற்றுள்ள போதிலும், இப்பிரிவுகள், காசநோய்க் குறிகளைக் கண்டுபிடித்து, சிகிச்சை அளிப்பதற்காக உள்ள வசதிகள் குறித்து மக்களுக்குத் தெளிவாக விளக்குவதுடன் அந்நோய்க்குத் தொடர்ந்து சிகிச்சைப் பெறுவதன் அவசியம் குறித்தும் நோயாளிகளுக்குக் கற்பிக்கிறது. காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் சிறப்பு இயல்புகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மகாத்மா காந்தி காசநோய் சிகிச்சை நிலையம் அரசிடமிருந்து ஆண்டுதோறும், ரூ. 58,000 மானியத்தைப் பெறுகிறது. கோயம்புத்தூரிலுள்ள ராமலிங்கம் காச நோய் மருத்துவமனை ஆண்டுதோறும் அரசிடமிருந்து ரூ. 1.50 லட்சம் மானியமாக பெறுகிறது. மற்றொரு தனியார் நிறுவனமாகிய திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ராஜாஜி காசநோய் நலம்பேண் மருத்துவமனை ரூ. 52,700 மானியம் பெறுகிறது.

ஏழையாகவும், சிகிச்சைப் பெறத் தகுதியுமுள்ள காச நோயாளிகளுக்கு நிதியுதவியாக பயன்படும் பொருட்டு முன்னாள் தமிழ்நாடு ஆளுநராகிய பவநகர் மகாராஜா 1955-ல் ரூ. 1 லட்சத்து 2 ஆயிரம் நன்கொடையாக அளித்தார். முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டி நிதியுதவி அளிப்பதற்காகப் பயன் படுத்தப்படுகிறது.

மத்திய சுகாதார அமைச்சர் தெரிவித்த கருத்துப்படி மாநில நிதியிலிருந்து ரூ. 50,000 உதவித் தொகையுடன் 1961 ஆம் ஆண்டில் விருப்ப நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரால் சிகிச்சைப் பெற தகுதியுள்ள காச நோயாளிகளுக்கு ஓராண்டுக் கால அளவிற்கு ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 என்ற வீதத்தில் மானியம் வழங்க பயன் படுத்தப்படுகிறது. 1967-லிருந்து இந்த வீதம் ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் ஒவ்வொரு ஆண்டும் 200-க்கு மேலானவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## புற்றுநோய்.

மிக பயங்கரமான நோயான புற்றுநோயைத் தடுப்பதற்கும் அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள புற்றுநோய்த் தடுப்புத் திட்டத்திற்காக, அதாவது காஞ்சிபுரம், அறிஞர் அண்ணா நினைவு புற்று

நோய் நிறுவனத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 20,000 டாலர், அதாவது ரூ. 1,50,000 மானிய நிதியுதவியாக உலக சுகாதார நிறுவனம் அளிக்கிறது. இம்மானியம் 1974 ஆம் ஆண்டு வரை கிடைக்கும். இதுவரை இரண்டாண்டுகளுக்கு மானியமாக உலக சுகாதார நிறுவனத்தால் ரூ. 3 லட்சம் தொகை அளிக்கப்பட்டது. இந்தியாவில் கிடைக்காத சாதனங்களை, அதுவும் முக்கியமாக கதிர் வீச்சு சிகிச்சை சாதனத்தை இந்த நிறுவனம் பெற்று பயனடைவதற்காக, மேற்கொண்டும் உதவி மானியங்களுக்கென இந்திய அரசின் மூலமாக உலக சுகாதார நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. புற்று நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செம்மையாகச் செயல்படுத்துவது பற்றி மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நோயைக் கண்டு பிடித்து பயனுள்ள வகையில் சிகிச்சை அளிப்பதற்கான முறைகளின் அடிப்படையில் இத்திட்டம் அமையும். மேலும் இம்மாநிலத்தில் இந்நோய் குறித்த பகுதிகளையொட்டி இப்பணிக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும். அத்துடன், சுகாதாரப் பணிகளின் தற்போதைய அமைப்பு பொருளாதார வாய்ப்புக் கூறுகள், தொடர்புள்ள பகுதியின் சமூக கலாச்சார தனித் தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகள் குறித்து மதிப்பீட்டு ஆய்வு செய்யப்படும்.

உலக சுகாதார நிறுவனத்திடமிருந்தும், நோராட (Norad) நிறுவனத்திடமிருந்தும் பெறும் உதவியுடன் காஞ்சிபுரம், ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தொடரா இனச் செலவு, தொடர் இனச் செலவு ஆகியவை அரசால் ஏற்கப்படும். இதுவரை கட்டுமானப் பணிக்கான செலவு ரூ. 6.5 லட்சம் ஆகும். ஆண்டு ஒன்றுக்கு ஆகும் தொடர் செலவு சுமார் 2.5 லட்சம் ஆகும். உலக சுகாதார நிறுவனம் கொள்ளை நோய்ச் சிகிச்சை வல்லுநர் ஒருவரை அனுப்பியுள்ளது. மான்செஸ்டரில் புள்ளி விவர வல்லுநர் ஒருவர் பயிற்சி பெறுவதற்கும் நோய்க் குறியாய்வு வல்லுநர் ஒருவர், இரண்டு தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள பர்த் என்னுமிடத்தில் பயிற்சி பெறுவதற்கும் உதவித் தொகை வழங்குவதற்கும் உலக சுகாதார நிறுவனம் வகை செய்துள்ளது. பயிற்சிக்குப் பிறகு இவர்கள் காஞ்சிபுரத்திற்கு வந்தனர். கொள்ளை நோய் இயல், சுகாதாரக் கல்வி, புற்று நோய்க் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட பிற பயிற்சிகள் ஆகியவற்றில் உலக சுகாதார நிறுவன உதவியுடன் மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்காக தலைமை மருத்துவ அதிகாரியும், பிற பணியாளர்களும் அனுப்பப்பட இருக்கின்றனர். இந்த நிலையத்தை மேற்கொண்டும் விரிவுபடுத்துவது, தேசிய நிலையில் பணியாளர்களை நியமிப்பது கருவிகள், மருந்துகள் முதலியவற்றை வழங்குவது ஆகியவை இந்த அரசின் நாட்டத்தையும், உலக சுகாதார நிறுவனத்தின் நாட்டத்தையும் சார்ந்து வருகிறது. இப்பின்னணியில் அரசு புற்றுநோய்ச் சிகிச்சைக்கான தற்போதுள்ள வசதிகளை ஆய்ந்து, காஞ்சியிலுள்ள அறிஞர்



அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்தை புற்றுநோய் ஆராய்ச்சிக்கான வட்டார நிலையமாக மேம்படுத்துவதற்காக இம்மாநிலம் முழுவதற்கும் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றைப் படிப்படியாக நிறைவேற்றுவது குறித்து விரிவான திட்டங்களை வகுத்துள்ளது.

### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மானியம்.

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முறையான மருந்தகம் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,400 விதம் அரசு மானியங்களை வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் 225 மருந்தகங்கள் இந்த மானியங்களைப் பெறத் தகுதியுடையனவாகும். 1971-72 ஆம் ஆண்டில் இத்தலைப்பின்கீழ் ரூ. 7.6 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1972-73 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற மானியங்கள் வழங்குவதற்காகத் தற்போது ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கோட்ட அதிகாரி இந்த மானியங்களை வழங்க அனுமதிக்கிறார். ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைகள் மருத்துவ வரவு-செலவுத் திட்டத்தில் பற்று எழுதப்பட்டு வருகின்றன.

1972-73, ரூ. 16 லட்சம் செலவில் 45 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

### மருந்துக் கட்டுப்பாடு மேம்பாடு

சென்னை மாநிலத்தில் மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1947-ல் கொண்டுவரப்பட்டது. 1952 வரையில், அரசினர் மருத்துவமனைகளின் மருத்துவ அதிகாரிகள் தங்களது பணியுடன், விற்பனை நிலையங்களையும் சோதனையிட்டு வந்தனர். 1952-ல் மருந்தாக்கியல் பட்டதாரிகளாகிய 9 முழு நேர மருந்துகள் ஆய்வாளர்கள், தயாரிப்பு நிலையங்கள், விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைச் சோதனை இடுவதற்காக முழுநேர மருந்துகள் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டனர். மாநிலங்களின் சீரமைப்பு காரணமாக, மருந்துகள் ஆய்வாளர்களின் எண்ணிக்கை 4 ஆக குறைக்கப்பட்டு, பின்னர், படிப்படியாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மருந்துகள் ஆய்வாளர் ஒருவர் இருக்கும் வகையில் அவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்த்தப்பட்டது. மாநில மருந்துகள் உதவிக்கட்டுப்பாட்டு அதிகாரி என்று தனியாக ஒரு பதவி உருவாக்கப்பட்டது. இப்பதவியில், மருந்தாக்கியல் கல்வித் தகுதியுடைய ஒருவர் நியமிக்கப்பட்டார். விற்பனை நிலையங்கள், தயாரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட போர்க்கர் குழுவினால் (Borkar Committee) பரிந்துரைக்கப்பட்ட அளவின் படியும், 1971-ல் மருந்துகள் ஆய்வாளர்களின் எண்ணிக்கை 69 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிறந்த முறையில் மேற்பார்வை செய்வதற்காக, மாநில மருந்துகள் இணைக்

கட்டுப்பாட்டு அதிகாரி பதவி, மேலும் ஒரு மாநில மருந்துகள் உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி பதவி. ஆகியவற்றிக்கு 1972-ல் அனுமதி வழங்கப்பட்டது. இவர்களைக் கொண்டு, இத்துறை மருந்துகள் ஒப்பனைப் பொருள்கள் சட்டம், மருந்துகள், மந்திரச் சிகிச்சைகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம், ஆகியவற்றின் விதித்துறைகளையும், பிற துறைகளுடன் ஒத்துழைத்து, மருந்துகள், வாசனைப்பொருள்கள் தயாரித்தல் ஆயத்தீர்வை சட்டம் அபாயகரமான மருந்துகள் சட்டம், நச்சுப் பொருள்கள் சட்டம், இன்றியமையாப் பொருள்கள், சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விலைக்கட்டுப்பாடு மற்றும் மருந்துகள் முதலியவை தொடர்பான இறக்குமதி கட்டுப்பாடுகள் முதலியவை போன்ற பிற சட்டங்களைச் செயற்படுத்துகின்றது.

மருந்துகள் ஆய்வாளரால் சேகரிக்கப்படும் மருந்துகளின் மாதிரிகள், சென்னை, கிண்டி கிங் நிறுவனத்தில் அரசுப் பகுத்து ஆய்நரால் (மருந்துகள்) [இவரே அரசுப் பகுத்து ஆய்நரும் (உணவு) ஆவார்] உணவுப் பகுப்பு ஆய்வுக்கான ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. இதைப் போன்றே, உயிரியல்—தனி மருந்துகளும் (Biological and Special Drugs) கிண்டி கிங் நிறுவனத்தில் சோதனை செய்யப்படுகின்றன. மருந்துகள் ஆய்வாளரால் சேகரிக்கப்படும் மாதிரிகளை பகுத்து ஆய்வு செய்வதற்கு இந்த வசதிகள் போதுமானவையாக இல்லையாகையால் மருந்துகளை பகுப்பு ஆய்வுக்கூடம் ஒன்று அவசியமாகும். இந்தத் திட்டத்திற்காக நிதி உதவி அளிக்கும் செயற்குறிப்பு இந்திய அரசின் ஆலோசனையில் உள்ளது.

## இந்திய மருத்துவ முறை

இந்திய மருத்துவ முறை இடையீடின்றி வளர வகை செய்யும் பொருட்டும், இதுகுறித்து வந்த முறையீடுகளுக்கிணங்கவும் அரசு, 1970-ல் இந்திய மருத்துவ முறைக்கென்றே ஒரு தனி இயக்குநரின் கீழ் இயக்குநரகம் ஒன்றை அமைத்துள்ளது. இதற்கு முன்னர் 'இந்திய மருத்துவம்' மருத்துவக் கல்வி இயக்குநரின் ஆளுகையில் இருந்து வந்தது. இந்தத் தனி இயக்குநரகம் 1970 ஆம் ஆண்டு ஜூலையில் செயல்படத் தொடங்கியது; நாட்டு மருத்துவம் தொடர்பாக இத்துறைக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது தற்போது, அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையொன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அரசு நிறுவனங்களுக்குத் தேவையான மருந்துகளனைத்தையும் தயாரிக்கும் மருந்தகம் ஒன்று



கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி விடுதியில் செயல்பட்டு வருகிறது. அரும்பாக்கத்தில் மருந்துப் பண்ணையொன்றும் இருக்கிறது. மேற்கண்ட நோக்கத்திற்கு அரும்பாக்கம் பண்ணை பொருத்தமானதாக இல்லாததால், மாநிலத்தில் வேறெங்கேனும் சிறந்ததோர் மருந்துப் பண்ணையொன்றை அமைப்பது குறித்து இவ்வரசு ஆய்வு செய்து வருகிறது. மாநிலத்தில் தற்போது ஐந்து சித்த மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இவை திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், சேலம், கடலூர், வேலூர் ஆகியவிடங்களிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை இந்திய மருத்துவப் பட்டம் பெற்றுள்ள மருத்துவ அதிகாரி ஒருவரின் கட்டுப்பாட்டிலுள்ளன. சித்த, ஆயுர்வேத, யுனானி ஆகிய இந்திய மருத்துவ முறைகளுக்கான கல்வி கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்திய மருத்துவ இயக்குநருக்கு உள்ளது. இதற்காக, பாளையங்கோட்டையில் ஒரு கல்லூரி மட்டுமே இருக்கிறது. ஆனால் அங்கு இரண்டு மருத்துவ மனைகளும், ஆயுர்வேத மருத்துவத்திற்காக ஐந்தும், சித்த மருத்துவத்திற்காக இரண்டுமாக ஏழு மருந்தகங்களும் உள்ளன; மருத்துவ மனை ஒன்றைக் கொண்ட இந்திய மருத்துவ முறைகளுக்கான கல்லூரியொன்று முதல்வர் ஒருவரின் கட்டுப்பாட்டிலுள்ளது. சென்னையிலுள்ள "அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை" கண்காணிப்பாளர் ஒருவரின் கட்டுப்பாட்டிலுள்ளது. இந்தக் கல்லூரி இந்திய மருத்துவ முறைகள், அனைத்திலும் பயிற்சியளிக்க வேண்டுமென்று தொடங்கப்பட்ட காலத்தில் கருதப்பட்டாலும், தற்போது இக்கல்லூரி சித்த மருத்துவப் பிரிவில் இந்திய மருத்துவப் பட்டப் படிப்பில் (B.I.M.) மட்டும் பயிற்சியளிக்கிறது. பி.ஐ.எம். கல்வி ஓராண்டு உட்பகுதிப் பயிற்சி உட்பட ஐந்தாண்டுகளுக்கானது. இந்திய மருத்துவ முறைகளை ஊக்குவிக்க, எல்லா மாணவர்களுக்கும் அரசு, திங்களொன்றுக்கு ரூ. 75 வீதம் எல்லா மாணவர்களுக்கும் பயிற்சி உதவிப் பணம் வழங்குகிறது. பயிற்சி உதவிப் பணம் பெறும் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். சித்த முறையில் மருந்து தயாரிக்கும் பயிற்சியளிக்கவும் இக்கல்லூரியில் வகை செய்யப்பட்டுள்ளது. டில்லியிலுள்ள இந்திய ஓமியோபதி மருத்துவங்களின் ஆராய்ச்சிக்கான இந்திய மத்தியக் குழுவின் கீழுள்ள இரண்டு பிரிவுகள், சித்த மருத்துவத் துறைப் பிரிவு, கல்வியறிவு ஆராய்ச்சிப் பிரிவு (சித்த) கல்லூரியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இக்கல்லூரியுடன் இணைந்துள்ள மருத்துவமனை சித்த மருத்துவ முறையில் மட்டுமே சிகிச்சையளிக்கிறது. அதில் 100 படுக்கைகள் இருக்கின்றன. 1971-ல் இந்த மருத்துவமனையில், 1,92,157 எண்ணிக்கையுள்ள அகநிலை, புறநிலைப் பிணியாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில்

அகநோயாளிகள் தொகுதிக்கு மேலே முதல் மாடிபொன்று கட்டத் [illegible] பட்டுள்ளது. இதனால் ரூ. 1 லட்சம் செலவில் 38-க்கு மேற்பட்ட படுக்கை களுக்குக் கூடுதல் வசதி கிடைக்கும். இந்த படுக்கைகள் சித்த மருத்துவ சிகிச்சை பெறுவோருக்காக ஒதுக்கப்படும்.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, தலைமைச் செயலக சித்த மருந்தகம், சேப்பாக்கம் மருந்தகம் ஆகியவற்றிற்கு இந்திய மருந்து தயாரித்து வழங்கும் மருந்தகம் தற்போது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனை வளாவில் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 1.20 லட்சம் செலவில் ஓரளவு நிலையானக் கட்டடம் ஒன்றைக்கட்டி, மருந்தகத்தை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை வளவுக்கு மாற்ற அரசு முடிவுசெய்துள்ளது. அடையாறிலுள்ள இந்திய மருத்துவத் தொழில் புரிவோர் கூட்டுறவு மருந்தகம், பண்டகசாலையினால் பின்பற்றப்படும் முறையில் இந்த மருந்தகத்தையும் இயந்திர மயமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

பொதுமக்களுக்காக, பெல்ஸ் சாலையிலுள்ள கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனைக்கு எதிரில், சேப்பாக்கத்தில் சித்த மருந்தகம் ஒன்றையும், சென்னை, அண்ணா சாலையிலுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் நிர்வாகத் தொகுதிக் கட்டடத்தில் சித்த மருந்தகம் ஒன்றையும் தொடங்கும் செயற்குறிப்புகள் உள்ளன.

## ஓமியோபதி

ஓமியோபதி மருத்துவ முறைக்கு ஏற்பளிக்க அரசு முடிவு செய்ததை யொட்டி, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஓமியோபதி முறை மருந்து, ஓமியோபதி மருத்துவம் பழகுவோர் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டது. அதற்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் இப்போது கிடைத்துவிட்டது. இச்சட்டத்தின் விதித்துறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) ஓமியோபதி மருத்துவ மன்றம் ஒன்றை அமைத்தல்.

(2) அரசின் ஒப்புதலுடன் ஓமியோபதி மருத்துவம் கற்பிக்கும் நிறுவனங்களை அமைக்க இம்மன்றத்திற்கு அதிகாரமளித்தல்; அத்தகைய நிறுவனத்துக்கு உதவியளித்தல்; அத்தகைய நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி தேர்வுகள் நடத்துதல்; கற்க வேண்டிய பாடங்களை வகுத்து தேவையா[illegible] தேர்வுகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பட்டங்கள், பட்டயங்கள், தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல்.



(3) ஒப்பளிக்கப்பட்ட கல்வித் தகுதிகள் பெற்றிருக்கும் நபர் ஒருவரைப் பதிவு செய்தல்; ஒப்பளிக்கப்பட்ட கல்வித் தகுதிகள் இல்லாமல், ஆனால் இச்சட்டம் வருவதற்கு முன்னர் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில் செய்து வரும் நபர்களைப் பதிவு செய்தல்; 4 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில் செய்துள்ளவர்கள் இம்மன்றத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெற்றால், அவர்களைப் பதிவு செய்தல்.

(4) பதிவு பெறாதவர்கள் ஓமியோபதி மருத்துவத் தொழில் நடத்துதல், கவர்ச்சியான போலிப் பட்டங்கள், பட்டயங்கள், உரிமங்கள், தகுதிச் சான்றிதழ்கள், விருதுகள் போன்ற எதையும் அளித்தல், ஒப்பளிக்கப்படாத பட்டங்களைப் போட்டுக் கொள்ளுதல், பதிவு பெற்ற மருத்துவர்களென்று காட்டிக் கொள்ளுதல் ஆகியவற்றைத் தடைசெய்தல்.

இச்சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது; விரைவில் இம்மாநிலத்தில், இச்சட்டம் செயலுக்கு வரும்.

## குடும்ப நலத் திட்டம்

மும்முரக் குடும்ப நலத்திட்டத்தின் அவசியம்பற்றி வலியுறுத்திக் கூற வேண்டியதில்லை. குடும்ப நலத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றக் கருதப் பட்டுள்ள திட்டங்கள் மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்களாகும். 1978-79-இல் 1,000-க்கு 36 என்ற தற்போதைய பிறப்பு விகிதத்தை 1,000-க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டத்தின் நோக்கமாகும். தகுதியுள்ள தம்பதியினர் அனைவரும் ஏராளமான குழந்தைகளைப் பெறுவதினின்றும் தங்களைக் காத்துக் கொள்ளவும், திட்டமிட்ட குடும்பம் அமைத்துக் கொள்ளவும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டியதின் அவசியத்தையும், முறைகளையும் அவர்களுக்குக் கற்பிப்பதே இவ்வரசின் அவா. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குடும்ப நலத் திட்டம் முழுவதற்கும் ரூ. 2,922.01 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டக் காலத்தில் பேறுகாலத்திற்குப் பின்னர் செய்து கொள்ளும் அறுவைச் சிகிச்சைத் திட்டங்கள், சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் முதலியோர்களுக்கு நோய்த்தடை மருந்து மற்றும் கூடுதல் சத்துணவு ஆகியவற்றிற்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 41,103,125 ஆகும். இதில் ஆண்கள் 20,772,549 பேர், பெண்கள் 20,330,576 பேர். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் கிராமப்புற மக்கள் தொகை 28,656,265. நகர்ப்பகுதி மக்கள் தொகை 12,446,860.

## [illegible]

இம்மாநிலத்தில், கிராமப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்கள் மூலம் கிராமப் புறங்களில் குடும்ப நலத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த நிலையங்கள், முக்கிய தொடக்க சுகாதார நிலையங்களுடன் இணைந்தவை யாகும். மாநிலத்தில் உள்ள 374 வட்டாரங்களும் சீரமைக்கப்பட்ட அமைப்பு முறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது, 373 கிராம குடும்ப நலத் திட்ட நிலையங்கள் உள்ளன. நகர்ப் பகுதிகளில், முக்கியமாக நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்கள் மூலம் குடும்ப நலத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இந்த நிலையங்களை தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், மாநில அரசு ஆகியவை நிர்வகிக்கின்றன. 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தில், 50,000 பேருக்கு ஒன்று என்ற விதத்தில் 240 இத்தகைய நிலையங்கள் அமைக்கத் தகுதியுடையதாகும்.

மொத்த நிலையங்கள் 233-ல், 149 நிலையங்கள் மாநில அரசின் கீழும், 69 நிலையங்கள் உள்ளாட்சி மன்றங்களின் கீழும், 15 நிலையங்கள் தொண்டு நிறுவனங் களின் கீழும் இயங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கருத்தடைத் திட்டம்

இம் மாநிலத்தில், தற்போது, ஏற்பளிக்கப்பட்ட குடும்ப நலத் திட்ட அறுவை மருத்துவ நிலையங்கள் 646 உள்ளன. (தொடக்கச் சுகாதார நிலையங்கள் 373, அரசு மருத்துவமனைகள் 217, உள்ளாட்சி மன்ற நிறுவனங்கள் 8, மலைத் தோட்டத் தொழிலாளர் மருத்துவ மனைகள் 10, தொண்டு நிறுவனங்கள் 38) 1970-71-ம் ஆண்டில் 1,98,690 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று இலக்கிடப் பட்டிருக்க 52,242 ஆண்களுக்கும் 19,788 பெண்களுக்கும் கருத்தடை. அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இது, இலக்கில், 36.3 சதவீதம் ஆகும். நடப்பாண்டில், அதாவது 1971-72-ம் ஆண்டில், 1,73,883 பேர்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வது என்று இலக்கிடப்பட்டிருக்க, 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையிலான கால அளவில், 1,67,939 ஆண்களுக்கும், 34,703 பெண்களுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இது, இவ்வாண்டு முழுவதற்குமான இலக்கைவிட 17 சதவீதம் அதிகமாகும். கடந்த ஆண்டில் செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சையோடு, இந்த ஆண்டு செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சையை ஒப்பிட்டுப் பார்ப்போ மாயின், இந்த ஆண்டு செய்யப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சை அதிக எண்ணிக்கையிலுள்ளது என்பது தெரிய வருகிறது. இதற்குக் காரணம், குடும்ப நலத் திட்டம் குறித்துப் பல்வேறு மாவட்டங்களில் மும்முரமாகப் பிரசாரம் செய்வதேயாகும்.



## குடும்ப நலத் திட்டமுனைப்பு இயக்கம்.

குடும்பக்கட்டுப்பாடு இயக்கத்தின் வெற்றிக்காக கருத்தடை அறுவைச் சிகிச் சைத் திட்டத்தை தகுதிவாய்ந்த தம்பதிகள் பலர் ஏற்றுக் கொள்ளச் செய்யும் நோக்கத்தோடு, குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கங்கள் செய்யப் பட்டன. இந்த முனைப்பு இயக்கங்கள் மே-ஜூன் திங்களில் முதலில் தஞ்சாவூர் மாவட்டத் திலும் பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், அதைத் தொடர்ந்து வட ஆற்காடு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், நீலகிரி, சென்னை மாநகர், செங்கற்பட்டு, மதுரை, சேலம், தென் ஆற்காடு மாவட்டங்கள் ஆகிய வற்றிலும் செய்யப்பட்டன. குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கங்கள், இரண்டாவது முறையாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. திருச்சி ராப்பள்ளி மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது குடும்ப நலத் திட்டத் திற்கான பிரச்சாரமானது, ஒவ்வொரு மாவட்டத்திலும், அதிக அளவில் செய்யப்பட்டது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்குப் பிறகு இன்னல் ஏதும் விளைவதைத் தவிர்க்கும் பொருட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படுவதற்கு முன்னர், கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப் படும்போதும், சிகிச்சைக்குப் பின்னரும், அவர்தம் நலனைப் பேண மிகுந்த கவனம் மேற்கொள்ளப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டோருக்கு மன நிறைவளிப்பதற்காக 6 நாட்கள் அவர்கள் அக நோயாளியாக வைக்கப்பட்டு, மருந்தும் சத்துள்ள உணவும் அளிக்கப்படு கின்றன.

## கருத்தடை வளையம்.

பெண்மருத்துவ அதிகாரிகளுக்கு வட்டாரக் குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்களில், கருத்தடை மாத்திரைகள் கொடுப்பதற்கான பயிற்சியோடு, கருத்தடை வளையங்களைப் பொருத்தும் பயிற்சி ஆகியவை குறித்து, 30 நாள் அளவு காலத்தில், பணிக்கால பயிற்சி அளிக்கப்படுகிறது. கருத்தடை வளையமானது பயிற்சிபெற்ற பெண் மருத்துவ அதிகாரிகளால் மட்டுமே பொருத்தப்படுகிறது. அதனை ஏற்கும் தாயைக் கவனமாக ஆய்வு செய்த பிறகே கருத்தடை வளையமானது பொருத்தப்படுகிறது. இதன் விளைவாக, கருத்தடை வளையம் பொருத்துவதால் சிக்கல்கள் ஏதும் ஏற்படவில்லை. 1970-71 ஆம் ஆண்டில் 53,596 பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப் பட்டன. 1971-72 ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் டிசம்பர் வரை) [illegible] பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டன.

### பரம்பரையாகக் கைக்கொள்ளப்பட்டுவரும் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர்.

மரபு வழியில் கையாளப்பட்டுவரும் கருத்தடைச் சாதனங்கள் நாளுக்கு நாள் மக்களிடையே விளக்கமடைந்து வருகின்றன. 1970-71-ம் ஆண்டில் 2,34,454 பேரை மரபு வழியில் கையாளப் பட்டு வரும் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தச் செய்வது என்று இலக்கிடப்பட்டிருக்க, 71,736 பேர் அச்சாதனங்களைப் பயன்படுத்தினர். 1971–72-ம் ஆண்டில், 92,437 பேர் இச்சாதனங்களைப் பயன்படுத்தினர்.

### பேறு எய்தியவருக்கு மேற்கொள்ளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் (Post Partum Programme) திட்டம்.

பேறுகால மருத்துவமனைகளில் மகப் பேற்றுக்காகப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது, குடும்பநலத்திட்ட நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவது அல்லது தொடங்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மகப் பேறுக்காக மருத்துவ மனையில் பெண்கள் இருக்கும் காலத்திலும், மகப் பேறுக்குப் பிறகு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்குப் பிறகு அந்த அறுவைச்சிகிச்சையைக் கண்காணித்து வருவதற்குரிய 4 முதல் 6 வார கால அளவிலும், அப்பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை பற்றிய தகவல்களை அளிப்பதற்கும், அந்த அறுவை சிகிச்சையைச் செய்து கொள்ளுமாறு கோருவதற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. இம் மாநிலத்தில், இத்திட்டமானது, 10 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப நலத்திட்டத்தின்கீழ் சேர்க்கப் படுவதற்காக, மேற்கொண்டும் 8 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளைத் தாம் தேர்ந்தெடுத்துள்ளதாகவும், இம்மாநிலத்தைச் சேர்ந்த மற்றும் 3 மாவட்ட மருத்துவமனைகளைத் தெரிந்தெடுப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும், இந்திய அரசு இந்த அலுவலகத்திற்குத் தெரிவித்துள்ளது.

### கருத்தடை மாத்திரை முன்னோடித் திட்டம்.

கருத்தடை மாத்திரைத் திட்டமானது இம்மாநிலத்தில், முதன் முதலில் 1963-ம் ஆண்டு, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள தலைமையிட மருத்துவமனைகளிலும், சைதாப்பேட்டையிலுள்ள குடும்ப நல திட்ட நிலையத்திலும் கொண்டு வரப்பட்டது. 1970-71-ம் ஆண்டில் இத்திட்டமானது, மேலும் 23 நிலையங்களில் கொண்டுவரப்பட்டது. மேற் கூறிய நிலையங்களைத் தவிர, மேலும் 8 நிலையங்களில் இத்திட்டமானது செயல் படுத்தப்படுவதற்கு இந்திய அரசு ஒப்பளித்தது. இதன் மூலம் மொத்தம் 3[illegible] நிலையங்களில், இத்திட்டமானது கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தி[illegible]



அரசால் வழங்கப்படும் இக்கருத்தடை மாத்திரைகள் கிடைக்காமையால், 15 நிலையங்களில் மட்டுமே இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவப் பண்டகசாலைத் துறையிடம் போதிய மாத்திரைகள் இல்லாத தாலும், அது குறித்து தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு முடிக்கப் பட்டு அறிக்கை வரும் வரை இத்திட்டத்தை மேலும் நீட்டிப்பதற்கு ஆய்வு செய்ய இயலாது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### தாய்-சேய் நலத் திட்டத்தின் கீழ் புதிய பணித் திட்டங்கள்.

சமுதாயத்தில் நிலவி வரும் மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து குடும்ப நலத்திட்டங்களின் தன்மைகளை மக்களின் மனதில் ஆழப் பதியும் வண்ணம் பொதுவாக சமுதாய நலப் பணிகள் மூலமும், குறிப்பாக தாய்-சேய் நலப் பணிகள் மூலமும் குடும்ப நலத் திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டு மெனத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றால் பேணப்பட்டுவரும் தாய்-சேய் நல விடுதிகள் மூலமாகவும், மேற்கூறிய நிறுவனங்களால் பேணப்பட்டு வரும் பேறுகால நிலையங்கள் மற்றும் சிசு நல நிலையங்கள் ஆகியவை மூலமும் மேற்கூறிய திட்டத்தைச் செயல்படுத்துவது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

(1) தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இழுப்பு நோய் ஆகியவற்றிற்கெதிராக, சிசுக்கள், குழந்தைகள் ஆகியோருக்குப் பாதுகாப் பளித்தல்.

(2) இழுப்பு நோய்க்கெதிராக, கர்ப்பிணிகளுக்குப் பாதுகாப்பளித்தல்.

(3) தாய் மற்றும் குழந்தை ஆகியோரின் இரத்த சோகைக்கெதிராக தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

(4) சிறார்களின் பார்வை இழப்பு நோய்குறித்துத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்துவதனால் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தம்பதிகள் தங்களுடைய 2 அல்லது 3 குழந்தைகள் நோய் நொடியை எதிர்த்து உயிர் வாழும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று நோய்த் [illegible], இழுப்பு நோய் மருந்து, வைட்டமின் செறிந்த [illegible] ஆகியவற்றை வாங்குவதற்கான செலவு முழுவதும் இந்திய அரசால் ஏற்கப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில், ரூ. 344.2 லட்சம் செலவில், குடும்ப நலத்திட்ட நிலையங்களும், பணியாளர் குடியிருப்புகளும் கட்டப்பட்டு

ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 85 நிலையங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள வட்டாரங்களில், கட்டுமானப் பணியானது பல்வேறு நிலைகளில் உள்ளது. அதேபோல், ரூ. 1,88.51 லட்சம் செலவில், 1,395 துணை நிலையங்களைக் கட்டுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. வட்டார குடும்ப நலத்திட்ட பயிற்சி நிலையத்திற்கான கட்டடங்கள், எழும்பூரில் கட்டி முடிக்கப்பட்டு, 30—8—1971-ம் நாள் திறக்கப்பட்டது. சேலம், காந்தி கிராமம் ஆகிய இடங்களில், முறையே ரூ. 5.50 லட்சம், ரூ. 4.67 லட்சம் செலவில், வட்டாரக் குடும்ப நலத்திட்டப் பயிற்சி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மக்களிடையே பெருமளவில் பிரசாரம் செய்யும் திட்டம்.

குடும்ப நலத்திட்டத்தினால் விளையும் நன்மைகளை மக்கள் உணர்ந்து அவர்களே இந்தத் திட்டத்தைக் கையாண்டால்தான், இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த இயலும். இதற்கு, அளவான குடும்பத்தின் நன்மையை, மக்களுக்குப் புரியும் வண்ணம் பிரசாரம் செய்வதன் வாயிலாகவே இதனை வெற்றிகாமாகச் செயல்படுத்த இயலும். குடும்ப நலத்திட்டத்தைப் பற்றி, சுவர் விளம்பரங்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, பேருந்து விளம்பர்ப் பலகைகள், பொருட்காட்சிகள், திரைப்பட மாளிகைகளில் காட்டப்படும் விளம்பரங்கள், அனைத்திந்திய வானொலி ஒலிபரப்பு, கருத்தரங்குகள், மறு பயிற்சி முகாம்கள், குடும்ப நலத்திட்ட விளம்பரங்கள், திரைப்படங்கள் முதலியவை மூலம், மக்களுக்குப் பிரசாரம் செய்யப்படுகிறது. பிரசாரத் திட்டமானது, குடும்ப நலத்திட்ட மும்முரப் பிரச்சாரத்தின் போது, மேலும் மும்முரப்படுத்தப்பட்டது. ஸ்வீடன் நாட்டிலிருந்து பெறப்பட்ட ஆப்செட் பிரிண்டிங் பிரஸ் (Offset Printing Press) முழு அளவில் வேலை செய்து வருகிறது. இந்த அச்சகமானது, குடும்ப நலத்திட்டப் பணிக்குத் தேவையானவற்றையும், குடும்ப நலத்திட்ட நேரிடப் பணியாளர்களுக்கான சிறு வெளியீடு, விளம்பரத்தாள்கள், கையேடு, வழிகாட்டி நூல்கள் ஆகியவற்றை அச்சிட்டுள்ளது.

## பயிற்சி.

இம்மாநிலத்தில், வட்டாரக் குடும்ப நலத்திட்ட பயிற்சி நிலையங்கள் மூன்று உள்ளன. இவற்றில், மாநில அரசு 2 நிலையங்களையும், மதுரை மாவட்டம், காந்தி கிராமத்திலுள்ள தொண்டு நிறுவனம் ஒரு நிலையத்தையும் நடத்தி வருகின்றன. இம் மூன்று நிலையங்களில், மருத்துவப்பணியாளர், மருத்துவப் பணி உதவிப் பணியாளர் ஆகியோருக்கு குடும்ப நலத் திட்டம் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது. பெண்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை



அளிப்பது, கருத்தடை வளையங்களைப் பொருத்துவது, கருத்தடை மாத்திரைகளை வழங்குவது, செயற்கை முறையில் கருவைச் சிதைத்தல் ஆகியவற்றில், பெண்மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் செவிலியர், மருத்துவச்சிகள் ஆகியோருக்கு, சென்னையிலுள்ள மத்தியக் குடும்பநலத்திட்டகளப் பிரிவில் பயிற்சி வழங்கப்படுகிறது. மறு பயிற்சி முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நடத்தப் படுகின்றன. கிராமப் பகுதிகளில் செல்வாக்குள்ள கிராமத் தலைவர்கள் அதில் கலந்துகொள்கின்றனர். அதன்மூலம், குடும்ப நலத்திட்ட முறைகளைக் கையாளுமாறு அவர்கள் பிறரைத் தூண்டவியலும். 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 1,18,250 செலவில், தமிழ்நாடு முழுவதும், 262 மறுபயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

## கருத்தடையை நீக்குதல். (Recanalisation)

கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்துகொண்ட ஆடவரின் கருத்தடையை நீக்குவதற்கான வசதிகள், கீழ்ப்பாக்கம், அரசினர் பொது மருத்துவமனை, சென்னை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை முதலிய இடங்களில் உள்ளன. தமிழ்நாட்டில், 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை செய்யப்பட்ட கருத்தடைகளை நீக்க அறுவைச் சிகிச்சையின் மொத்த எண்ணிக்கை 85 ஆகும்.

## உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான மானியங்கள்

நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்களைப் பேணுதற்கு, உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, இந்திய அரசு, நிதி உதவி அளிக்கிறது. ஆனால், உள்ளாட்சி மன்றங்களும், தொண்டு நிறுவனங்களும், இந்திய அரசால் வரையறுக்கப்பட்ட பணியாளர் அமைப்பு, ஏனைய வரம்பு நியந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 1970-71-ஆம் ஆண்டில், ரூ. 20.92 லட்சம் கொண்ட தொகையானது, மானியமாக, உள்ளாட்சி மன்றங்களுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.

ஆண்களுக்கான அறுவை சிகிச்சையை (Vasectomy) செய்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூ. 30-ம் பெண்களுக்கான அறுவை சிகிச்சையை (Tubectomy) செய்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூ. 40-ம் ஈடுசெய் தொகையாக இந்திய அரசு வழங்குகிறது. ஆனால் குடும்பநல முனைப்புத் திட்டங்களின் போது 10,000 பேர்களுக்கு மேல் அறுவை சிகிச்சை செய்து

கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டால், வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆடவருக்கும் மேலும் ரூ. 20 அளிக்க இந்திய அரசு சித்தமாய் உள்ளது. இதைத் தவிர, அறுவை சிகிச்சை ஆட்களைக் கொணர்வோர் (Motivators) ஒவ்வொருவருக்கும் ரூ. 10-ம் வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு முனைப்புத் திட்டத்தின்போது ரூ. 3-ம், ட்யூபெக்டமி அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு, உணவு, மருந்து செலவுக்காக ரூ. 5-ம் மாநில அரசு வழங்குகிறது. பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்படும் உள்ளூர் நன்கொடையிலிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் நிதியிலிருந்தோ கிடைக்கும் உதவி, அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு வேட்டி, சேலை போன்ற வகையிலோ அல்லது பணமாகவோ அளிக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டாவது குடும்பநல முனைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது, எடுத்துக்காட்டாக, அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொருவருக்கும், இழப்பீட்டுப்படியாக ரூ. 30-ம் போக்குவரத்துச் செலவுக்காக ரூ. 3-ம், 30 நாட்களுக்கு பல்வகை வைட்டமின் மாத்திரைகள், இரும்பு, ஃபோலிக் அமில மாத்திரைகள் பொட்டலமும் வழங்கப்பட்டது. அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொருவருக்கும் வேட்டியும், மேல் துண்டும் வழங்கப்பட்டன.

தஞ்சை மாவட்டத்தில், நடைபெற்ற ஒவ்வொரு வாசெக்டமி அறுவை சிகிச்சைக்கும் செலவு ரூ. 110 ஆகும்.

## அரசு காப்புறுதித் திட்டம்.

இம்மாநிலத்திலுள்ள அரசு காப்புறுதித் திட்டம் 1955-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. அதிலிருந்து இத்திட்டம் நல்ல முறையில் பலனளித்துள்ளது. தொழிலாளரின் நிதிநிலை என்னவாக இருப்பினும் அவருக்கு உயர்தர மருத்துவ உதவி அளிப்பதன் வாயிலாக தொழிலாளருக்கு சமூகப் பாதுகாப்பு உணர்வை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதே நேரத்தில், உடல்நலக் குறைவாக உள்ளபோது அல்லது வேலையின்போது காயம் ஏற்பட்டதனால் உடல் ஊனம் ஏற்பட்டுள்ளபோது இத்திட்டத்தின் மூலம் அத்தொழிலாளியின் குடும்பத்திற்கு பண உதவி அளிக்கப்படுகிறது. மத்திய அரசின் சமூகப் பாதுகாப்பு அமைச்சரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் அமைக்கப்பட்ட 'அரசு காப்புறுதிக் கழகம்' என்னும் ஒரு தன்னாட்சி நிறுவனத்தினால் இத்திட்டம் நிர்வகிக்கப்படுகிறது. அரசு காப்புறுதிக் கழகத்தினால் வரையறுக்கப்படுகிற விதங்களில் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடைகள் பெறுவதன் மூலம் இத்திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது. மின்சாரத்தைப் பயன்படுத்தி 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தியுள்ள



தொழிற்சாலைகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தும். தற்போது, அரசு காப்புறுதிச் சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் வசதிகள் யாவும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் சம்பளம் பெறும் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்குப் பொருந்தும். இத்திட்டம், மருத்துவ வசதி, பேறுகால வசதி, இயலாமை வசதி, நோய்க் கால வசதிகளுடன் இறுதிச் சடங்கு வசதியும் அளிக்கிறது. பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழகத்தின் உள்ளூர் அலுவலகங்களின் மூலம், பண உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி வழங்க வேண்டியது தமிழ்நாடு அரசின் கடமையாகும். இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிப்பதற்கான செலவை தொடக்கத்தில் மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. செலவில் அரசு காப்புறுதிக் கழகத்தின் பங்கை, தமிழ்நாடு, தலைமைக் கணக்காய்வாளர் அளிக்கும் தணிக்கைச் சான்றிதழ்களின் அடிப்படையில், அரசு காப்புறுதிக் கழகம் மாநில அரசுக்கு அளிக்கின்றது. இத்திட்டத்திற்கான செலவில், மாநில அரசின் பங்கு, காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு மட்டும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டத்திற்கான செலவில் கால் பாகம் என்றும், காப்புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி நீட்டிக்கப்பட்டுள்ள பகுதிகளில் செலவில் 1/8 பாகம் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. அரசு காப்புறுதிக் கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவு உச்சவரம்புகளுக்கு இணங்க, வரையறுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களைத் தவிர எஞ்சிய மாவட்டங்கள் அனைத்திலும் தற்பொழுது செயலில் உள்ளது. 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட பெரிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள 38 இடங்களில் இத் திட்டம் விரைவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளருக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதியுடன் முழு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. அவர்களது குடும்பத்தினருக்கு விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ வசதி, 37 இடங்களில் மருத்துவமனையில் தங்கும் வசதியுடன் அளிக்கப்படுகிறது. தற்போது, மூன்று அரசு காப்புறுதி மருத்துவமனைகள், 94 நிலையான மருந்தகங்கள், 6 இயல் மருந்தகங்கள், 3 பகுதி நேர மருந்தகங்கள், தொழிற்சாலை உரிமையாளர்களுக்குரிய மருத்துவ மனைகள் மூன்று ஆகியவை உள்ளன. இவற்றால், இம் மாநிலத்தில் உள்ள 3,80,136 குடும்பப் பிரிவுகளைக் கொண்ட 15,20,544 பேர் பயனடைகின்றனர். 1971-72-ஆம் ஆண்டில், மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக்கும் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அகசிகிச்சை வசதி செய்து கொடுப்பதற்காக, மதுரையில், 302 படுக்கைகள் கொண்ட அரசு காப்புறுதி மருத்துவமனை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை 13—4—1971 முதல் செயல்பட்டு

[illegible]. இத்திட்டம், சேலம் மாவட்டத்தில் போதனூர், நல்லகவுண்டன் பட்டி, வீரக்கல் புதூர் ஆகிய கிராமங்களில் 29—5—1971 அன்றும், மதுரை மாவட்டத்தில் பழனி, நெய்க்காரப்பட்டி ஆகிய இடங்களில் 26—7—1971 அன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உசிலம்பட்டியில் (மணப்பாறை) 26—6—1971 அன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் திட்டம், கும்பகோணம், திருநெல்வேலி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகியவற்றின் சில பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1972-73-ல் சென்னையின் சுற்றுப்புறப் பகுதிகளிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரிலும், மதுரையில் மேலூரிலும், சேலம் மாவட்டம் ஆத்தூரிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிப்பதற்கு ஆகும் செலவை, ஈட்டுறுதி செய்துகொண்ட குடும்பங்கள் உள்ள பகுதிகளைப் பொறுத்தவரை 1 : 3 என்ற விகிதத்திலும், காப்புறுதி செய்து கொண்ட குடும்பங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்தவரை 1 : 7 என்ற விகிதத்திலும், மாநில அரசும் அரசு காப்புறுதிக் கழகமும் பகிர்ந்து கொள்கின்றன.

இது 1969-70 வரையில் செயலில் இருந்தது. அரசு காப்புறுதிக் கழகம், 1—4—1970 லிருந்து இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மருத்துவ வசதிக்காகும் செலவிற்கு ஓர் உச்சவரம்பு வரையறுத்துள்ளது. அது வருமாறு :—

1. வரையறுக்கப்பட்ட மருத்துவப் பணிக்கு ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50.

2. விரிவான மருத்துவ உதவிக்கு ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 54.

3. மருத்துவ மனையில் தங்கியிருக்கும் வசதியுடன் கூடிய மருத்துவ வசதிக்கு ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 64.

இதன் காரணமாக, மருத்துவ வசதி அளிப்பதற்கான மதிப்பீட்டுச் செலவு மேலும் அதிகரிப்பது உறுதி. அரசு காப்புறுதிக் கழகம் மருத்துவ வசதிக்காகும் செலவிற்கு உச்சவரம்பு வரையறுப்பதிலும், அதன் விளைவாக, அரசு காப்புறுதிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் உதவியின் அளவு குறைந்ததனாலும் இம் மூன்று பணிகளையும் விரிவுபடுத்துவது என்பது கடினமாயிற்று. எனவே, அரசு காப்புறுதிக் கழகம் வரையறுத்த உச்சவரம்பை நீக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட பிரிவுகளுக்கு 11 படுக்கைகள் என்றுதான், முதலில் வரையறுத்த அளவை, அரசு காப்புறுதிக் கழகம் நான்கு படுக்கைகளாகக் குறைத்துள்ளது. அதன்படி, 11—8—1971 அன்று நடத்தப்பட்ட அரசு காப்புறுதிக் கழகத்தின் கூட்டத்தில், உபரியாக உள்ள படுக்கைகளை, இத்திட்டத்தின் பயன் பெறுவோரின்



உபயோகத்திற்காக மாநில அரசுக்குக் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தது. ஆனால், உபரியாக உள்ள அந்த படுக்கைகளை பொருத்துவதற்காகும் செலவினையும், வரையறுக்கப்பட்ட உச்சவரம்பிற்குக் கூடுதலாக உள்ள படுக்கைகளை எடுத்துக்கொள்வதனால் ஏற்படும் செலவினச் செலவுகளையும் மாநில அரசு முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை மாநில அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. இது பற்றி, இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. படுக்கைகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 7, 8-வது இணைப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9,
17—3—1972.

க. அன்பழகன்,
மக்கள் நல்வாழ்வு அமைச்சர்.

## இணைப்பு 1.

### 1971-72-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் மருத்துவ நிறுவனங்களில் பட்டப்படிப்பு பாடமுறை நடத்தப்படுகிறவைகளின் விவரங்கள்.

#### பட்டப்படிப்பு பாடமுறை.

| | பாடமுறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த M.B.B.S. பட்டப் படிப்பு (மருத்துவப் பட்டப்படிப்பு). | 6½ ஆண்டுகள் | 1,015 |
| 2 | ஒருங்கிணைந்த B.D.S. பட்டப்படிப்பு (பல் மருத்துவப் பட்டப்படிப்பு). | 5 ஆண்டுகள். | 35 |
| 3 | I-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருந்து தயாரிக்கும் பட்டப் படிப்பு. | 4 ஆண்டுகள். | 50 |
| 4 | II-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருந்து தயாரிக்கும் பட்டப்படிப்பு. | 3 ஆண்டுகள். | 10 |
| 5 | B.Sc. (செவிலியர் பட்டப்படிப்பு) .. | 2½ ஆண்டுகள். | 20 |

#### பட்டமேற்படிப்பு பாடமுறைகள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | D.M. (பொது மருத்துவம்) ... .. | 3 ஆண்டுகள். | 59 |
| 2 | M.S. (பொது அறுவை) .. .. | 3 ஆண்டுகள். | 88 |
| 3 | M.D. (நோய்க் குறியியல்) .. .. | 3 ஆண்டுகள். | 5 |

| பாடமுறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 4 M.D. (நுண்ணுயிர் இயல்) .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 5 M.D. (மகப்பேறு துணைப்பணி) .. .. | 3 ஆண்டுகள். | 16 |
| 6 M.D. (உடலமைப்பியல்) .. .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 7 M.D. (மருந்தாக்கியல்) .. .. .. | 3 ஆண்டுகள். | 8 |
| 8 M.D. (சிசு நோய்) .. .. .. | 3 ஆண்டுகள். | 16 |
| 9 M.D. (மயக்க மருந்து) .. .. .. | 3 ஆண்டுகள். | 4 |
| 10 M.D. (கதிரியக்க நோய்க்கூறு) .. .. | 3 ஆண்டுகள். | 4 |
| 11 M.D. (கதிரியக்க மருத்துவ முறை) .. | 3 ஆண்டுகள். | 2 |
| 12 M.D. (மேக நோய் மருத்துவம்) .. .. | 3 ஆண்டுகள். | 2 |
| 13 M.D. (தோல் நோய் மருத்துவம்) .. | 3 ஆண்டுகள். | 4 |
| 14 M.D. (உயிர் வேதியியல்) .. .. .. | 3 ஆண்டுகள். | 4 |
| 15 Ph.D. (உடல் குற்றியல்) .. .. .. | 2 ஆண்டுகள். | 6 |
| 16 M.S. (கண் நோய் மருத்துவம்) .. .. | 3 ஆண்டுகள். | 7 |
| 17 M.S. (காது, மூக்கு, தொண்டை நோய் மருத்துவம்). | 3 ஆண்டுகள். | 8 |
| 18 M.S. (முடவியல் மருத்துவம்) .. .. | 3 ஆண்டுகள். | 3 |
| 19 M.D.S. (Periodontia) .. .. .. | 3 ஆண்டுகள். | 3 |
| 20 M.D.S. (Oral Surgery) .. .. .. | 3 ஆண்டுகள். | 3 |
| **சிறப்பு சிகிச்சைகள்.** | | |
| 1 M.Ch. (மூளை நரம்பு அறுவை மருத்துவம்). | 2 ஆண்டுகள். | 4 |
| 2 M.Ch. (சிசு நோய் அறுவை மருத்துவம்) | 2 ஆண்டுகள். | 4 |
| 3 M.Ch. (Genito Urinary Surgery) .. | 2 ஆண்டுகள். | 2 |
| 4 M.Ch. (பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்). | 2 ஆண்டுகள். | 2 |
| 5 M.Ch. (மார்புப் பகுதி அறுவை மருத்துவம்). | 2 ஆண்டுகள். | 2 |
| 6 D.M. (நரம்பு இயல்) .. .. .. | 2 ஆண்டுகள். | 2 |
| 7 M.Ch. ([illegible] நோய் இயல்) .. .. | 2 ஆண்டுகள். | 2 |



| பாடமுறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|

## அறிவியல் பட்டதாரிகளுக்கு மருத்துவம் அல்லாத பட்டப்படிப்பில் மேல்பட்டப்படிப்பு பாடமுறை.

| | | |
|---|---|---|
| 1 M.Sc. (உடற் கூற்றியல்) .. .. | 1971-ம் ஆண்டு முதல் இப்பட்டப் படிப்பு பாட முறைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | 6 |
| 2 M.Sc. (உடலமைப்பியல்) .. .. | | |
| 3 M.Sc. (உயிர் வேதியியல்) .. .. | | 6 |
| 4 M.Sc. (நுண்ணுயிரியல்) .. .. | | 6 |
| 5 M.Sc. (மருந்தாக்கியல்) .. .. | | 6 |
| 6 M.A. குற்றவியலும் சட்டம் சார்ந்த அறிவியல் மேல்பட்டப்படிப்பு. .. | 2 ஆண்டுகள். | 8 |

## மேல் பட்டப்படிப்பில் தகுதிப் பட்டயப் படிப்பு.

| | | |
|---|---|---|
| 1 D.G.O. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 36 |
| 2 D.C.H. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 24 |
| 3 D.M.R.D. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 14 |
| 4 D.M.R.T. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 2 |
| 5 D.O. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 12 |
| 6 D.L.O. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 12 |
| 7 D.A. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 10 |
| 8 D. Ortho. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 6 |
| 9 D.V. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 6 |
| 10 D.C.P. .. .. .. .. | 2 ஆண்டுகள். | 4 |
| 11 D.C.D., (T.D.D.) .. .. .. | 2 ஆண்டுகள். | 12 |
| 12 தோல் நோய் மருத்துவத்தில் தகுதிப் பட்டயப் படிப்பு. | 2 ஆண்டுகள். | 6 |
| 13 குற்றவியல் & சட்டஞ்சார்ந்த அறிவியலில் தகுதி பட்டயப் படிப்பு. | 1 ஆண்டு. | 12 |

## உள்ளாட்சி மன்ற மருத்துவ அதிகாரிகளுக்கு.

| | | |
|---|---|---|
| மகப்பேறு & சிறுவர் சுகாதாரத்தில் தகுதி பட்டயப்படிப்பு. | 3 மாதங்கள். | 8 |

| பாடமுறையின் பெயர். | கால அளவு. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| **சுகாதார அதிகாரிகளுக்காக.** | | |
| B.S.Sc. .. .. .. .. | 1 ஆண்டு. | 10 |
| **பகுதி மருத்துவ பாட முறைகள்.** | | |
| 1 துப்புரவு ஆய்வாளர் பாடமுறை .. | 1 ஆண்டு. | 350 |
| 2 மருந்தியல் தகுதிப் பட்டயப்படிப்பு .. | 2 ஆண்டுகள். | 150 |
| 3 எலும்புமுறிவுப் பாடமுறை (பெண்களுக்கு மட்டும்). | 2 ஆண்டுகள். | 6 |
| 4. மூக்குக்கண்ணாடி தயாரிப்பவர் பாடமுறை. (1970-ஆம் ஆண்டு முதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது). .. | 2 ஆண்டுகள். | 30 |
| 5 நற்சான்றிதழ் பெற்ற கதிர்வீச்சு உதவியாளர். | 1 ஆண்டு. | 40 |
| 6 நிழற்படத் தயாரிப்பு உதவியாளர் .. | 6 மாதங்கள். | 4 |
| 7 பல் மருத்துவர்கள் (Dental Hygienists). | 1 ஆண்டு. | 6 |
| 8 பல்கட்டுபவர் (Dental Mechanics). | 2 ஆண்டுகள். | 6 |
| 9 ஆய்வுக் கூடத் தொழில் நுட்ப இயல் தரம்–I. | 1 ஆண்டு. | 90 |
| 10 ஆய்வுக்கூடத் தொழில் நுட்பம் .. | 1 ஆண்டு. | 17 |
| 11. ஆய்வுக் கூட தொழில் நுட்ப இயல் தரம்–II. | 1 ஆண்டு. | 90 |
| 12 மின் இயல் மருத்துவர் ... .. | 3 ஆண்டுகள். | 10 |
| 13 செவிலியர் பயிற்சி பாடமுறை .. | 3½ ஆண்டுகள். | 150 |

## இணைப்பு–2

**இந்நாள்வரையில் மருத்துவமனையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட படுக்கையின எண்ணிக்கை.**

| | |
|---|---|
| அரசு பொது மருத்துவமனை, சென்னை .. | 1,358 |
| அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை .. | 962 |
| அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை .. .. | 300 |
| அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை .. | 494 |



## இணைப்பு–2—தொடர்ச்சி.

**இந்நாள்வரையில் மருத்துவமனையில் ஒப்பளிப்புவழங்கபட்ட படுக்கையின் எண்ணிக்கை—தொடர்ச்சி.**

| | |
|---|---|
| அரசு கண்நோய் மருத்துவமனை, சென்னை .. | 328 |
| அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை .. .. | 615 |
| சிறார்களுக்கு சிறுவர் சுகாதார மருத்துவமனை, சென்னை .. | 250 |
| மகப்பேறு, மகளிர் நோயியல் நிறுவனமும் மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை .. .. | 474 |
| இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை, சென்னை .. .. | 295 |
| திருவொற்றீஸ்வரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி .. | 222 |
| அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை .. | 1,806 |
| காசநோய்–நலம் பேண மருத்துவமனை, தாம்பரம் .. | 620 |
| இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர் .. | 636 |
| அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை .. | 1,486 |
| தொற்றுநோய் மருத்துவமனை, மதுரை .. | 50 |
| காசநோய் நலம் பேண மருத்துவமனை, தோப்பூர், மதுரை .. .. | 102 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி–மருத்துவமனை, தஞ்சாவூர் | 538 |
| செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனை, செங்கல்பட்டு .. .. | 410 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி–மருத்துவமனை, கோயம்புத்தூர் .. .. | 785 |
| திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி–மருத்துவமனை, திருநெல்வேலி .. | 325 |
| மொத்தம் .. | 12,056 |

படுக்கைகளின் எண்ணிக்கையை 215 ஆக அதிகரிப்பது 1972–73 ஏற்படவிருக்கும் சாதனையாகும்.

## இணைப்பு–3.

**தொண்டு நிறுவனங்கள்.**

1. சேக்ரட் ஹார்ட் தொழுநோய் மருத்துவமனை, சாக்கோட்டை அஞ்சல், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. சச்சேபேலின் தொழுநோய் ஆராய்ச்சி மருத்துவமனை, S.L.R. தொழுநோய் நலம்பேண மருத்துவமனை அஞ்சல், காட்பாடி வழி, கரிகிரி, வடஆற்காடு மாவட்டம்.

இணைப்பு-3—தொடர்ச்சி.

தொண்டு நிறுவனங்கள்—தொடர்ச்சி.

3. கஸ்தூரிபாய் குஷ்ட நிவாரண நிலையம்,
மணவன்தாங்கல் அஞ்சல், கண்டாச்சிபுரம் அஞ்சல் (வழி),
தென் ஆற்காடு மாவட்டம்.

4. தொழுநோய் மருத்துவமனை, வட தொரசலூர்.
தியாகதுர்க்கம் அஞ்சல், வட ஆற்காடு மாவட்டம்.

5. ஹோலி பேமிலி அன்சோரியம்,
பாதிமாநகர் அஞ்சல், திருச்சி மாவட்டம்.

6. C.P. நினைவு தொழுநோய் மருத்துவமனை,
குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

7. தொழுநோயாளிகளுக்கு தயாபுரம் மருத்துவமனை இல்லம்,
மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

8. புனித லூக்ஸ் தொழுநோய் விடுதி,
பெரியகுளம், ஆசீர்வாதபுரம் அஞ்சல்.
திருநெல்வேலி மாவட்டம்.

9. ஆதரவற்றவர்களின் சமூகநல நிறுவனம்,
193-A, சுந்தர முதலி வீதி,
அஞ்சல்பெட்டி எண் 701,
வியாசர்பாடி, சென்னை-12.

10. பெஸ்தேஸ்தா மருத்துவமனை,
ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

11. கிறிஸ்தவ மதசபை மருத்துவமனை தொழுநோய் மருத்தகம்,
கும்மிடிப்பூண்டி, மாடப்பாக்கம் (வழி),
செங்கற்பட்டு மாவட்டம்.

12. தென் இந்திய கிறிஸ்தவத் தொழுநோய் நிறுவனம்,
வந்தவாசி, வட ஆற்காடு மாவட்டம்.

13. நவஜீவ சுகாதார நிறுவனம்,
B.K. பேட்டை,
செங்கற்பட்டு மாவட்டம்.



இணைப்பு-3—தொடர்ச்சி.

தொண்டு நிறுவனங்கள்—தொடர்ச்சி.

14. ஜெர்மனி தொழுநோய் நிறுவனம்,
சேத்துப்பட்டு அஞ்சல், போளூர் (வழி),
வட ஆற்காடு மாவட்டம்.

15. ஜோதிநிலைய கிராம நிறுவனம்,
மேட்டத்தூர், அனந்தபுரம் (வழி),
தென் ஆற்காடு மாவட்டம்.

16. தொழுநோய் நிவாரண கிராம நிறுவனம்,
பட்டி அஞ்சல், ஓமலூர் (வழி),
சேலம் மாவட்டம்.

17. புனித அந்தோனி நிறுவனம்,
ராவுத்தன்குப்பம், திருச்சிற்றம்பலம் அஞ்சல்,
வானூர் (வழி), தென் ஆற்காடு மாவட்டம்.

18. புனித மேரி தொழுநோய் நிறுவனம்,
அரசபாளையம், சேலம் மாவட்டம்.

19. ரஹதானி சேவை நிலையம்,
ஆண்டிப்பட்டி (வழி) பெரியகுளம் வட்டம்,
மதுரை மாவட்டம்.

20. ஸ்வீடிஷ் மிஷன் மருத்துவமனை,
S. M. மருத்துவமனை அஞ்சல், திருப்பத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

21. C. S. I. (தென் இந்திய கிறிஸ்துவ) மருத்துவமனை,
ஊரணிக்கரை அஞ்சல்,
சாலை கிராமம் (வழி), இராமநாதபுரம் மாவட்டம்.

22. புனித ஜோசப் தொழுநோய் விடுதி,
ஆரோக்கியபுரம் அஞ்சல், தூத்துக்குடி (வழி),
திருநெல்வேலி மாவட்டம்.

23. ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவை தொழுநோய் முகாம்,
காட்பாடி விரிவாக்கம்,
வட ஆற்காடு மாவட்டம்.

## இணைப்பு-3—தொடர்ச்சி.

### தொண்டு நிறுவனங்கள்—தொடர்ச்சி.

24. தாக்கர்பாபா குஷ்ட நிவாரண சங்கம்,
திருக்கோவிலூர், தென் ஆற்காடு மாவட்டம்.

25. கிராம சுகாதார நிறுவனம்,
கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. விஸ்ராந்தி இல்லம்,
காட்பாடி நகரியம், வட ஆற்காடு மாவட்டம்.

27. சகாயமாதா மருத்துவமனை,
புள்ளம்பாடி அஞ்சல், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

28. புனித ஜோசப் மருத்துவமனை,
திண்டுக்கல், மதுரை மாவட்டம்.

29. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
சின்ன காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

30. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
19, காமராஜர் நகர், 2-வது வீதி,
மதுரை-2.

31. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
3, ஆபிசர் லேன், வேலூர்,
வட ஆற்காடு மாவட்டம்.

32. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
3, சிந்தாமணி சாலை,
மதுரை-1.

33. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
c/o மாவட்ட சுகாதார அதிகாரி,
சேலம்.

34. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
34-B, இராஜாம்பாள் நகர்,
மஞ்சக்குப்பம், கடலூர்-1.



## இணைப்பு-3—தொடர்ச்சி.

### தொண்டு நிறுவனங்கள்—தொடர்ச்சி.

35. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
41, பக்தபுரி வீதி,
கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

36. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
புரோமெனேட் சாலை,
திருச்சிராப்பள்ளி-1.

37. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
நகராட்சித் தலைவர், மேலப்பாளையம்
திருநெல்வேலி மாவட்டம்.

38. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
310/311, லிங்கி செட்டி வீதி,
சென்னை-1.

39. இந்து குஷ்ட நிவாரண சங்கம்,
125, காஜா வீதி,
கோயம்புத்தூர்.

40. இம்மெகுலேட் கான்செப்ஷன் கான்வென்ட்,
20, பழைய கொசவன்பாளையம்,
மதுரை-9.

41. கிறுஸ்தவ பெல்லோஷிப் தொழுநோய் மருத்துவ
அம்பிளிகை,
ஒட்டம்சத்திரம், மதுரை மாவட்டம்.

42. E.L.E.P. தொழுநோய் தடுப்பு திட்டம்,
அஞ்சல் பெட்டி எண் 3, தருமபுரி-1.

43. அமெரிக்கத் தொழுநோய் நிறுவனம்,
பொலம்பாக்கம் அஞ்சல்,
செங்கற்பட்டு மாவட்டம்.

## இணைப்பு-4

### தலைக்கட்டு மானியம் பெறும் தொழுநோய் நிலையங்கள்.

| நிலையத்தின் பெயர். | வழங்கப்பட்ட தலைக்கட்டு மானியம். 1969–70. | 1970–71. | 1971–72. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Schieffelin தொழுநோய் ஆராய்ச்சிக்கூடம், கரிகிரி, வட ஆற்காடு மாவட்டம். | 36,828 | 32,616 | 11,872 |
| 2 தேபேந்திரநாத முல்லிக் தொழுநோய் மனை, வடதராசலூர், தென்னாற்காடு மாவட்டம். | 45,414 | 40,608 | 10,206 |
| 3 கஸ்தூரிபா காந்தி குட்ட நிவாரண நிலையம், மலவராங்கல், தென்னாற்காடு மாவட்டம். | 10,098 | 13,932 | 11,448 |
| 4 சி.பி. நினைவு தொழுநோய் மருத்துவமனை, கொலச்சல், கன்னியாகுமரி மாவட்டம். | 53,973 | 40,608 | 40,365 |
| 5 புனித இதய தொழுநோய் மருத்துவமனை, கும்பகோணம், தஞ்சை மாவட்டம். | 1,39,428 | 1,45,746 | 1,24,430 |
| 6 தயாபுரம் தொழுநோய் மருத்துவமனை. | 31,644 | 18,792 | 46,494 |
| 7 Holy Family Hansorium, பாதிமா நகர், திருச்சி மாவட்டம். | 32,724 | 27,486 | 14,310 |
| 8 தூய சூசையப்பர் தொழுநோய் மருத்துவமனை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம். | 59,886 | 59,886 | 26,298 |
| 9 புனித லூக்ஸ் தொழுநோய் மருத்துவமனை பெரியகுளம், திருநெல்வேலி மாவட்டம். | 22,302 | 17,604 | 19,656 |
| 10 Cheshire விடுதி, காட்பாடி, வட ஆற்காடு மாவட்டம். | 13,392 | 13,122 | 9,342 |



## இணைப்பு 5.

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட காசநோய் திட்டத்தின் கீழ் இது வரையில் திறக்கப்பட்ட கிளை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை. | மொத்தம் 753. அவைகளில் 487 நிறுவனங்கள் நுண்நோக்காடி (Microscope) வசதிகள் பெற்றவை. | |
| 2 | தமிழ்நாட்டில் காசநோய்க்கு உட்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 7 லட்சத்துக்குமேல். | |
| 3 | இதுவரையில் காசநோய்வாய்ப்பட்டவர்களின் நோய்குறிப்பை அறிந்து, தமிழ் நாட்டில், மாவட்டக் காசநோய் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 383,038. | |
| 4 | ஒரு முழு சிகிச்சைக் காலத்தில், காசநோய் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை. | 87,119. | |
| 5 | இது வரையில் பரிசீலனை செய்யப்பட்ட X-கதிர்களின் (மார்பகம்) எண்ணிக்கை. | 1,424,602 | |
| 6 | இதுவரையில் எடுக்கப்பட்ட எச்சில் தேர்வுகளின் (Smears) எண்ணிக்கை. | 10,007,732. | |
| 7 | (இந்நாள் வரையில்) மாவட்ட காசநோய் திட்டத்தின் கீழ் வீடுகளில் சிகிச்சை பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை. | 71,132. | |
| 8 | தமிழ் நாட்டிலே காசநோய் சிகிச்சைக்கு வராமல் இருப்பவர்களின் சதவீதம் (சராசரியாக). | 26 சதவீதம் | |
| 9 | காசநோய் நலம்-பேண் மருத்துவ மனைகளிலும், காசநோய் மருத்துவமனைகளிலும் காசநோய் தனி மருத்துவ மனைகளிலும் படுக்கைகளின் எண்ணிக்கை. | 10 | |
| | (a) அரசு காசநோய் நலம்-பேண் மருத்துவமனை—காசநோய் மருத்துவ மனைகள். | 7 | 1,534 |
| | (b) தனியார் காசநோய் நலம்-பேண் மருத்துவமனை—காசநோய் மருத்துவ மனைகள். | 5 | 1,086 |
| | (c) பொது மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகள். | .. | 738 |
| | (d) காசநோய் தனி மருத்துவமனை. | 41 | .. |
| | | | 3,358 |

## இணைப்பு 6.

மற்ற முக்கிய வேலையின் வகைகளும் அவற்றுடன் சேர்ந்துள்ள விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | பரிசோதனை செய்யப் பட்டவர்கள். | அம்மை குத் தப்பட்டவர் கள். |
|---|---|---|
| 10. பெருமளவில் B.C.G. அம்மை குத்தும் திட்டம் (1954—1964). | 10,090,535 | 3,091,806 |
| 11. மாவட்ட காசநோய் மருத்துவ நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட பிறகு B.C.G. அம்மை குத்தும் திட்டம்:— | | |
| (a) (i) B.C.G. ஊசி போடப்பட்ட சிசுக்களின் எண்ணிக்கை. | | 353,361 |
| (ii) அவைகளில் சென்னை மாநகரம் மகப்பேறு மருத்துவ மனைகளில் ஊசிபோடப்பட்டவை. | | 209,196 |
| (b) நேரடியாக B.C.G. ஊசி போடப்பட்டவை (பிறந்த குழந்தைகளுக்கு குத்தப்படும் அம்மை அல்லாத). | | 4,733,172 |
| (c) பரிசோதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | | 1,645,583 |
| (d) B.C.G. ஊசி குத்தப்பட்டவர்களில் நோய்க்கான அறி குறிகள் காணப்படாதவர்களின் மொத்தஎண்ணிக்கை. | | 273,564 |
| (e) B.C.G. ஊசி குத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | | 5,360,097 |



## இணைப்பு 7.

1971-ம் ஆண்டு மார்சு மாதம் 31-ஆம் நாள் வரையில் படுக்கைகளின் மொத்தம்.

| | பொது. (1) | மகப்பேறு. (2) | காச நோயாளிகளுக்கு அவசரகால இடுக்கை. (3) | காச நோய் மருத்துவ மனை. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|---|
| அரசு காப்புறுதி மருத்துவமனைகள் | 711 | 150 | 64 | .. | 925 |
| அரசு காப்புறுதி மருத்துவமனையில் தொகுதி இணைப்புகள். | 54 | .. | .. | 78 | 132 |
| அரசு மருத்துவமனைகள் .. | 244 | 211 | 49 | 51 | 555 |
| தனியார் மருத்துவமனைகள் .. | 4 | .. | .. | 97 | 101 |
| மொத்தம் .. | 1,013 | 361 | 113 | 226 | 1,713 |

1971-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ஆம் நாள் பிறகு சேர்க்கப்பட்ட படுக்கைகள்.

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| மதுரை தொழிலாளர் நல ஈட்டு நிதி மருத்துவமனை. .. | 140 | 50 | 12 | .. | 202 |
| பழநி அரசு மருத்துவ மனை .. | 2 | 1 | 2 | .. | 5 |
| உசிலம்பட்டி பகுதிக்கு திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவ மனையில் உள்ள படுக்கைகள். | 2 | . | .. | .. | [illegible] |
| மொத்தம் .. | 144 | 51 | 14 | .. | 209 |
| பெரு மொத்தம் .. | 1,157 | 412 | 127 | 226 | 1,922 |

## இணைப்பு 8.

அரசு காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் வீதாச்சாரம்.—

| பகுதி. | படுக்கைகளின் எண்ணிக்கை. | ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட படுக்கை களின் வீதாச்சாரம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னைப் பகுதி .. .. | 1,002 | 181,060 | 5·53 |
| கோயம்புத்தூர் பகுதி .. | 355 | 71,120 | 5·0 |
| மதுரைப் பகுதி .. .. | 229 | 30,187 | 7·5 |
| மேற்சொன்ன மூன்று மருத்துவ மனைகள் உட்பட அரசு காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள படுக்கை களின் மொத்த எண்ணிக்கை. | 1,922 (இணைக்கப் பட்ட அறிக்கையைப் பார்க்கவும்). | 380,136 (இம் மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதி குடும்பப் பகுதிகளின் மொத்த எண்ணிக்கை). | 5·1 |

| | ஈட்டுறுதி செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை. | | ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகள். |
|---|---|---|---|
| சென்னை நகரமும் புறநகரமும். | 181,060 | அரசு காப்புறுதி—மருத்துவமனை .. | 625 |
| | | தாம்பரம் காசநோய் .. மருத்துவமனை. | 52 |
| | | அரசு பொது மருத்துவ மனை. | 50 |
| | | அரசு ஸ்டான்லி மருத்துவ மனை. | 50 |
| | | அரசு ராயப்பேட்டை மருத்துவ மனை. | 25 |



| | ஈட்டுறுதி செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை. | | ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகள். |
|---|---|---|---|
| சென்னை நகரமும் புறநகரமும்—தொடர்ச்சி. | | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனை. | 25 |
| | | அரசு மகளிர்–சிறுவர் நல மருத்துவமனை. | 50 |
| | | இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை. | 75 |
| | | கஸ்தூரிபாய் காந்தி மகளிர்–சிறுவர் நல மருத்துவ மனை, சென்னை. | 50 |
| | | மொத்தம் .. | 1,002 |

| பகுதிகளின் பெயர். | ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | படுக்கைகள் ஒதுக்கப் பட்டுள்ள இடங்கள். | ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) கோயம்புத்தூர் நகரமும் அதன் புறநகரங்களும். | 71,120 | அரசு காப்புறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர். | 300 |
| | | பெருந்துறையில் இராமலிங்கம் காசநோய்-நலம் பேண் மருத்துவ மனை. | 55 |
| | | | 355 |
| (2) உடுமலைப்பேட்டை .. | 4,890 | உடுமலைப்பேட்டை, அரசு மருத்துவமனை. | 15 |
| | | பெருந்துறையில் இராமலிங்கம் காசநோய்-நலம் பேண் மருத்துவ மனை. | 20 |

| பகுதிகளின் பெயர். | ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | படுக்கைகள் ஒதுக்கப் பட்டுள்ள இடங்கள். | ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (3) ஈரோடு-பள்ளிப் பாளையம். | 3,036 | அரசு மருத்துவமனை, ஈரோடு. | 8 |
| | | பெருந்துறையில் இராம லிங்கம் காசநோய்-நலம் பேண் மருத்துவமனை. | 4 |
| (4) பொள்ளாச்சி .. | 2,5 6 | அரசு மருத்துவமனை, பொள்ளாச்சி. | 3 |
| (5) மேட்டுப்பாளையம் | 2,675 | அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம். | 5 |
| (6) பல்லடம் .. .. | 1,600 | அரசு மருத்துவமனை, பல்லடம். | 3 |
| | | பெருந்துறையில் இராம லிங்கம் காசநோய்-நலம் பேண் மருத்துவமனை. | 3 |
| (7) சேலம் | 5,128 | தலைமையிட மருத்துவமனை, சேலம். | 11 |
| (8) மேட்டூர் அணையும், தோனூரும். | 6,672 | அரசு மருத்துவமனை மேட்டூர். | 13 |
| | | இராமலிங்கம் காசநோய்-நலம் பேண் மருத்துவமனை, பெருந்துறை | 1 |
| (9) குடியாத்தம் | 895 | அரசு மருத்துவமனை, குடியாத்தம். | 4 |
| | | பொன்னூத்தூர் காசநோய்-நலம் பேண் மருத்துவமனை. | 2 |
| (10) ஆரணி | 1,613 | அரசு மருத்துவமனை, ஆரணி. | 3 |
| (11) வாணியம்பாடி | 1,432 | அரசு மருத்துவமனை, வாணியம்பாடி—(1). அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் (2). | 3 |
| (12) வேலூர் | 1,850 | வேலூர் தலைமையிட மருத்துவமனை, | 3 |



| பகுதிகளின் பெயர் | ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை, | படுக்கைகள் ஒதுக்கப் பட்டுள்ள இடங்கள். | ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (13) ராணிப்பேட்டை | 2,244 | ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை. 4 | |
| (14) திருப்பூர் | 8,178 | அரசு மருத்துவமனை, திருப்பூர். 11 | |
| மதுரை மாநகரமும் அதன் புறநகரங்களும். | 30,187 | அரசு காப்புறுதி மருத்துவமனை, மதுரை. 202 | 229 |
| | | தோப்பூர் காசநோய்-நலம்பேண் மருத்துவமனை. 24 | |
| | | அரசு மருத்துவமனை, திருமங்கலம். 3 | |
| திண்டுக்கல் | 2,327 | அரசு மருத்துவமனை, திண்டுக்கல். 6 | |
| | | தோப்பூர் காசநோய்-நலம்பேண் மருத்துவமனை. 2 | |
| பழநியும் நெய்க்கார பட்டியும் | 1,139 | அரசு மருத்துவமனை, பழனி. 5 | |
| | | தோப்பூர் காசநோய்-நலம்பேண் மருத்துவமனை. 2 | |
| சிவகாசி | 6,051 | அரசு மருத்துவமனை, சிவகாசி. 16 | |
| இராஜபாளையம் | 4,157 | அரசு மருத்துவமனை, இராஜபாளையம். 8 | |
| விருதுநகர் .. .. | 1,684 | அரசு மருத்துவமனை, விருதுநகர், மகளிர்-சிறுவர் மருத்துவமனை, விருதுநகர். | 3 |
| | | அரசு மருத்துவமனை, தோப்பூர். | 2 |
| டால்மியாபுரம் .. | 2,067 | அரசு மருத்துவமனை, லால்குடி. | 10 |
| திருச்சியும் உசிலம் பட்டியும் | 8,253 | அரசு தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி. | 12 |

| பகுதிகளின் பெயர். | ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை. | படுக்கைகள் ஒதுக்கப் பட்டுள்ள இடங்கள். | ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| புதுக்கோட்டையும், காவேரி நகரும். | 2,216 | அரசு மருத்துவமனை, புதுக்கோட்டை. | 10 |
| | | மகளிர்-சிறுவர் மருத்துவமனை, புதுக்கோட்டை. | |
| கும்பகோணம் .. | 2,104 | அரசு மருத்துவமனை, கும்பகோணம். | 4 |
| நாகப்பட்டணம் .. | 1,195 | அரசு தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டணம். | 3 |
| தூத்துக்குடி .. | 3,507 | அரசு மருத்துவமனை, தூத்துக்குடி. | 10 |
| செங்கோட்டை .. | 650 | அரசு மருத்துவமனை, செங்கோட்டை. | 3 |
| திருநெல்வேலி .. | 5,740 | அரசு தலைமையிட மருத்துவமனை, திருநெல்வேலி. | 9 |
| விக்ரமசிங்கபுரம் .. | 6,495 | அரசு மருத்துவமனை, விக்ரமசிங்கபுரம். | 12 |
| | | அரசு மருத்துவமனை, வண்ணாரப்பேட்டை. | 1 |
| கோவில்பட்டி .. .. | 3,919 | அரசு மருத்துவமனை, கோவில்பட்டி. | 32 |
| நாகர்கோயில் .. | 1,145 | அரசு தலைமையிட மருத்துவமனை, நாகர்கோயில். | 3 |
| | | நாகர்கோயிலுக்கும் மற்ற பிறபகுதிகளுக்கும் காசநோய்-நலம்பேண் மருத்துவமனை. | 45 |
| கடலூர், நெல்லிக்குப்பம், வடலூர். | 2,556 | அரசு தலைமையிட மருத்துவமனை, கடலூர். | 8 |



## இணைப்பு 2.

### கோரிக்கை எண் 15—மக்கள் நல்வாழ்வு 1972-73.

கொள்கை—(சுகாதாரம்) மக்கள் நல்வாழ்வு என்பது நோயற்ற நிலையென்பதுமட்டுமல்ல, ஏலாமை நீங்கிய நிலை என்பது மட்டுமல்ல; உடல் நலன், மன நலன், சமூக நலன் ஆகிய மூன்றும் நிறைந்துள்ள நிலையே நல்வாழ்வாகும். வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகளையும், இன்னல்களையும் எதிர்த்துப் போராடவும், தமது நிலை தளராது தமக்குள்ள அனைத்து நலன்களையும் முழு அளவில் ஆண்டனுபவிக்கும் ஏற்றமிகு நிலையில் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும்.

மக்களின் நல்வாழ்வு மேம்பாடு குறிப்பிட்ட நோய்களினின்றும் பாதுகாப்பு, நோயினைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்து அதற்குச் சிகிச்சையளித்தல். ஏலாமையைக் கட்டுப்படுத்துதல், புதுவாழ்வு அளித்தல் ஆகிய ஐந்து நோக்கங்களை மக்கள் நல்வாழ்வு அடங்கல் திட்டங்கள் நிறைவேற்றுகின்றன.

இந்த நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, மக்கள் நல்வாழ்வுத் துறை, [illegible] சேய் நலன் உட்பட, சமுதாயத்தினருக்குச் சுகாதாரப் பாதுகாப்பு அளித்தல், ஊட்டச்சத்து மேம்பாடு, தொற்று நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவுசெய்தல், உணவில் கலப்படம் செய்வதைத் தடுத்தல், மக்களிடையே சுகாதாரக் கல்வியைப் பரப்புதல், சுற்றுப் புறச் சுகாதாரம் ஆகியவற்றுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

இம்மாநிலத்தில் நகர்ப்புற அமைப்புத் திட்ட நடவடிக்கைகளை [illegible] தற்குப் பொறுப்பு வகிக்கும் நகர்ப்புற அமைப்புத்திட்ட இயக்குநர் [illegible] குறித்த செலவும் இவ் வரவு-செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்புக் கூறுகள் பற்றித் தற்போது நான் விளக்க முற்படுகிறேன்.

I தாய்-சேய் நலன் உட்பட (சமுதாய) மக்கள் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

(அ) தொடக்கச் சுகாதார நிலையம்—மக்களுக்குத் தடுப்பு மருத்துவப் பணியும், சிகிச்சை மருத்துவப் பணியும் அளிப்பதற்காகவும், நாட்டுப்புறச் சமுதாயத்தினரின் சுகாதாரம் மேம்படவும் (சமுதாய) வட்டார வளர்ச்சி (ஒன்றியம்) அளவில் அமைக்கப்பட்டுள்ளது பல வகையில் மக்களுக்கு நன்மைபயக்கும் தொடக்கச் சுகாதார நிலையமாகும். மக்கள் நல்வாழ்விற்குக் கேடு விளைவிக்கக்கூடிய மலேரியா, காசநோய், பெரியம்மை, 'யாஸ்' என்கிற தொத்துநோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது அறவே

ஒழிப்பதற்கான) திட்டங்களை மேற்கொள்ளும் முழுப் பொறுப்பும் தொடக்கச் சுகாதார நிலையத்தையே சார்ந்ததாகும். இத்திட்டங்கள் நோய்த் தடுப்புப் பணிகளை வலுப்படுத்தவும் நோய்த் தடுப்பு பணி முடிந்தபின் அந்நிலையைப் பேணிவரும் கட்டத்தை அடைந்து செயல்படும். இவை, மக்களுக்கு மருத்துவப் பாதுகாப்பு அளித்தல், பிறப்பு இறப்புப் புள்ளி விவரப் பதிவு முறைகளை மேம்படுத்துதல், தாய்-சேய் நலப்பணி, குடும்பநலத் திட்டம், பள்ளிகளில் சுகாதாரக் கல்வி, தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், சுற்றுப்புற சுகாதாரம், சுகாதாரக் கல்வி ஆகியவை குறித்தும் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

(b) தொடக்கச் சுகாதார நிலையம் எப்பகுதியில் அமைந்துள்ளதோ அப்பகுதி மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு வழி வகுப்பதைத் தனது நோக்கமாக் கொண்ட ஒரு பிரிவாக இந்த நிலையம் செயல்படும். தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்கள், தாங்கள், "செயலாற்றவேண்டிய பகுதிகளையும் அங்குள்ள மக்களையும்" ஆய்வு செய்து, உரிய கல்வி மற்றும் உரிய சிகிச்சை மருத்துவப்பணி, தடுப்பு மருத்துவப்பணி ஆகியவற்றின் மூலம், அம்மக்களின் உடல் நலனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுப்பார்.

(c) ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு தொடக்கச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசின் கொள்கையாகும். 1971 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், 365 தொடக்கச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1971 ஆம் ஆண்டில், 14 தொடக்கச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இப்பொழுது, தொடக்கச் சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 379 ஆக உயர்ந்துள்ளது. இந்த 379 தொடக்கச் சுகாதார நிலையங்களில் 131 நிலையங்கள் அவற்றிற்கான சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 36 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(d) தற்போது 80,000-லிருந்து 1,00,000 வரையில் மக்கள் தொகை கொண்ட சமுதாயவளர்ச்சி வட்டாரம் ஒன்றில் தொடக்கச் சுகாதார நிலையம் ஒன்றுள்ளது.

(e) மருத்துவப் பாதுகாப்பு என்பது, தொடக்கச் சுகாதார நிலயத்தின் பணிகளில் ஒன்றாகும். ஒவ்வோர் தொடக்கச் சுகாதார நிலயத்திற்கும் 6 படுக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் தொடக்கச் சுகாதார நிலயத்திலும் நாள் ஒன்றுக்கு ஒரு நோயாளிக்கு ரூ. 1.50 செலவில் உணவு வழங்குவதற்கு அரசு அண்மையில் வகை செய்துள்ளது. இதற்கு எல்லா தொடக்கச் சுகாதார நிலயங்களிலும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12,34,440 தேவைப்படும். 1972-73 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்





திட்டத்தில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தொடக்கச் சுகாதார நிலயம் ஒவ்வொன்றுக்கும் நாள் தோறும் புறந்துள்ள நோயாளிகள் புதிதாக 70 பேரும், முன்னரே சிகிச்சை பெற்றுவரும் 40 பேரும் வருகின்றனர். தொடக்கச் சுகாதார நிலயங்கள் எல்லாவற்றிலும் நாள் ஒன்றுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 41,250 பேர் ஆகும். தொடக்கச் சுகாதார நிலயங்கள் அனைத்திற்கும் ஆண்டுதோறும் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 148.5 லட்சம் ஆகும்.

## மகப்பேறு, குழந்தை நலப்பணிகள்

மகப்பேறு, குழந்தை நலப் பணிகளில் சீரான உடல் நலமும் வலிவும் வளர்ச்சியுமுள்ள தாய்க்கு குழந்தைகளாக பிறக்கச் செய்வதிலும், அதன் பின்னர், தாய் குழந்தை இருவரின் உடல் நலனையும் காப்பதிலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்காக, தற்போது தாய்மார்கள், அவர்கள் கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் பேறுகால முன் கவனிப்பிற்காகப் பதிவுசெய்து கொள்ளப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களில் உள்ள பல்வேறு மகப்பேறு நிலயங்களின் மகப்பேறு உதவியாளர்கள்-மகப்பேறு துணைச் செவிலியர்கள் இந்தப் பதிவு செய்கின்றனர்.

பேறு காலத்திற்கு முந்திய நிலயில் உள்ள தாய் முழுமையான மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார், அவரிடம் உள்ள நலக்குறைபாடு, கருவின் நிலை, இரத்த சோகை, ரத்தத்தில் நச்சு கலந்திருப்பதற்கான அறிகுறிகள், உணவில் சத்தின்மை போன்றவற்றைக் கண்டுபிடிப்பதற்காக அவர் இத்தகைய சோதனைக்குட்படுத்தப் படுகிறார். கருவுற்றிருக்கும் காலத்தில் அவர் உண்ண வேண்டிய உணவுபற்றியும் தன்னைத் தானே எவ்வாறு கவனித்துக் கொள்வது என்பது பற்றியும் அவருக்கு ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன. குழந்தை உணவு ஊட்டுதல், நோய்த் தடைக்காப்பு முறைகள் (அட்டவணை) குழந்தை நோய்கள் பற்றியும் குடும்ப நலம் பேணும் முறைகள் பற்றியும் அவருக்கு தெளிவாக்கப்படுகிறது.

பேறுகால முன் பணி முறைப்படி முக்கியமாக கருவுற்றிருப்பவர்களின் வீடுகளுக்குச் சென்று நடத்தப்படுகிறது. மகப்பேறு துணைச் செவிலியர், கருவுற்றிருக்கும் தாய்மார்களின் பேறு காலத்தில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று சுகாதார முறைப்படி மகப்பேறுக்கு உதவுகின்றனர், பார்க்கின்றனர். குழந்தை பிறந்து தொடர்ந்து 10 நாட்களுக்குத் தாயையும் சேயையும் கவனிக்கின்றனர்.

சுகாதாரப் பார்வையாளர்கள், மகப்பேறு துணைச் செவிலியரின் பணியை மேற்பார்வை செய்தும் பல்வேறு மகப்பேறு மருத்துவமனைகளில் பேறுகால முன் கவனிப்பு மருந்தகங்கள் நடத்துவதில் முக்கிய பங்கு வகித்தும்

வருகின்றனர். மேலும் நன்கு கவனிக்கப்பட வேண்டிய தாய்மார்கள் பற்றி மகப்பேறு துணை செவிலி முக்கிய நிலையத்தில் அல்லது துணை நிலையத்தில் உள்ள தொடக்கச் சுகாதார நிலையத்தின் மருத்துவ அதிகாரிக்குத் தெரிவிக்கிறார். நோய்த்தடுப்பு முறைகள் பற்றி தாய்மார்களுக்கு ஆலோசனை கூறி குழந்தைகட்கு மூன்று நோய்த் தடுப்பு ஊசிபோடும் (D.P.T.) பணிகளில் முக்கியப் பங்கு வகிக்கிறார்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, பேறுகால நிலையங்களைத் திறந்து அவற்றைப் பேணிவருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மக்கள் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் ஒரு பேறுகால நிலையம் வீதம் பேறுகால நிலையங்கள் தற்போது ஏற்படுத்தப்படுகின்றன. முதல் மூன்று நிலையங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்படுகின்றன. இதற்கு 2/3 பங்கு மானியம் தமிழ்நாடு அரசினிடமிருந்து கிடைக்கும். மூன்றுக்கு மேற்பட்ட மகப்பேறு நிலையங்களுக்குக் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் இந்திய அரசிடமிருந்து முழு மானிய உதவி கிடைக்கும். 1—1—1971 ஆம் நாள்வரை ஊராட்சி ஒன்றியக் குழுக்களினால் மொத்தம் 3,645 மகப்பேறு நிலையங்கள் பேணி வரப்படுகின்றன. அவற்றிற்கு ஆகும் தொடர் இனச் செலவின் மூன்றில் இரண்டு பங்கு அளவு தொகையை அரசு மானியமாக அவை பெறுகின்றன.

பின்தங்கிய பகுதிகளில் இவை அரசினால் பேணப்பட்டு வருகின்றன. பின்தங்கிய பகுதிகளில் 19 முக்கிய நிலையங்களும், 75 துணை நிலையங்களும் உள்ளன. இவற்றிற்கான முழு செலவினையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

மாநகராட்சிகளில் 80 மகப்பேறு இல்லங்களும் 225 மகப்பேறு நிலையங்களும் உள்ளன. இவற்றுக்கு ஆகும் தொடர் செலவில் நான்கில் ஒரு பங்குத் தொகையை மானியமாக அரசு வழங்குகின்றது.

### (I) குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டம்

கிராமப் பகுதிகளில் பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி குத்தும் திட்டம் இம்மாநிலத்தில் 1-10-1964 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கிராமப் பகுதிகளில் உள்ள தொடக்கச் சுகாதார நிலையங்கள் மூலமாக நடைபெறுகிறது. கைக்குழந்தைகள் உட்பட, 5 வயதுக்கு உட்பட்ட வயதுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கக்குவான், தொண்டை அடைப்பான், இளம் பிள்ளைவாதம் ஆகிய நோய்கள் மூன்றைத் தடுப்பதற்கான ஊசிகள் போடப்படுகின்றன. (ஒரு வயதுக்கு உட்பட்ட) கைக்குழந்தைகள் சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றன. ஒரு ஊசிக்கும் அடுத்த ஊசிக்கும் இடையே ஒரு மாத காலம் விட்டு மூன்று



ஊசிகளும் ஒவ்வொரு குழந்தைக்கும் போடப்படவேண்டும். ஆண்டொன்றுக்கு, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 900 குழந்தைகளுக்கு "முத்தடுப்பு ஊசி" போடப்பட வேண்டும் என்று இலக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. தொடக்கத்தில், இத்திட்டம், 142 தொடக்கச் சுகாதார நிலையங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம், 379 தொடக்க சுகாதார நிலையங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மூன்று நோய்த் தடுப்பு ஊசி மருந்துக்காகும் செலவு குடும்ப நலத் திட்ட நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. 1—4—1971 முதல் 31—12—1971 முடியவுள்ள காலப்பகுதியில், மூன்று முறையும் முத்தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 78,327 ஆகும். நகரப் பகுதிகளில் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டம் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

குழந்தைகளிடம் காணப்படும் A' வைட்டமின் சத்து குறைவால் வருகின்ற "கெரடோ மலாசியா" Kerato malacia) என்னும் நோயையும் மற்றும் அவ்வகை நோய்களையும் போக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய அரசு தமிழ்நாட்டுக்கு ' ' வைட்டமின் சத்து அடங்கிய (திரவம்) 12,500 குடுவைகள் ஒதுக்கியுள்ளது. இவை சென்னை மருந்துப் பண்டக சாலையினரால் வழங்கப்படும். நூறு மில்லி A வைட்டமின் (திரவம்) குடுவைகள் மாநகரிலுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு, மாநில குடும்பநலத் திட்டக் கழகத்தால் வழங்கப்படுகிறது. இதனை, சென்னை மருந்துப் பண்டகசாலையினரால் சென்னை மாநகராட்சிக்கும் மாநகரிலுள்ள பிற அரசினர் மருத்துவ மனைகளுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்களில் இந்த மருந்து, உள்ளாட்சி மன்றங்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் தொடக்க சுகாதார நிலையங்களுக்கும் தொடர்புடைய மாவட்டக் குடும்ப நலத் திட்ட அதிகாரி, தாய்-சேய் நல அதிகாரி மூலமாக வழங்கப்படுகிறது. மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு இந்த வைட்டமின் மருந்துக் குடுவைகள் வழங்கப்படுகின்றன. அவற்றை அவர்கள் தமது நிர்வாகத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனைகட்கும் பிற மருத்துவமனைகட்கும் வழங்குவர். குடும்பநலத் திட்ட ஆணையாளரது கருத்துரைக்கிணங்க தொடக்க சுகாதார நிலையங்களுக்கு மேலும் இவற்றை வழங்குவதை வரையறுப்பதெனத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து மேம்பாடு :

ஊட்டச் சத்து ஆய்வுக் கூடம்: மக்களின் ஊட்டச் சத்து குறைவை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் நடைமுறை சாத்தியமான ஏற்பாடுகளை, மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் மேற்கொள்ள இயலும் வகையில் அவர்களுக்கு அறிவியலறிவையும் தகவல்களையும் அளிக்கும் நோக்கத்துடன், ஊட்டச் சத்து ஆய்வுக்கூடம் ஆராய்ச்சி நடத்திபது. இந்த ஆய்வுக்கூடம் இயக்குநர் அலுவலகத்துடன் இணைந்தவொன்றாகும். 1971 ஆம் ஆண்டில் நடந்த அனைத்திந்திய தொழில்-வேளாண்மைப் பொருட்காட்சியில் இது கலந்து கொண்டது. அந்தப் பொருட்காட்சியில் ஊட்டச் சத்துணவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலுள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கும், சுகாதாரப் பார்வையாளர்களுக்கும் அறிவியல் முறையிலான ஊட்டச்சத்துணவு குறித்து பணிக்காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உணவு குறித்து ஆய்வு நடத்துவதில் இவர்களுக்கு நேர்முகப் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளச்சேரி தொடக்கச் சுகாதார நிலையத்தில் சிறார் பள்ளிகளிலும் (பாலவாடிகள்), தொடக்க நிலைப்பள்ளிகளிலும் பயிலும் 3-12 வயது சிறுவர்களின் ஊட்டச் சத்துக் குறைபாட்டையும், மாலைக் கண் நோயையும் தவிர்ப்பதற்கென வழக்கமான நண்பகல் உணவுடன் கீரைக் கூட்டு வழங்கும் ஒரு திட்டத்தை மத்திய ஊட்டச்சத்துக் கழகம் மேற்கொண்டுள்ளது. வழக்கம்போல், அடையாறு சுகாதாரத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஊட்டச்சத்து ஆய்வுக் கூடத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

### துணை உணவூட்டும் திட்டம்

துணை உணவூட்டும் திட்டம் இம்மாநிலத்தில் 1950-இல் தொடங்கப்பட்டது. மக்கள் தொகையில், எளிதில் நோய் பீடிக்கும் நிலையில் உள்ளோரில் பெரும் பிரிவினராயுள்ள குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைப்பாட்டைப் போக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 'கேர்' (Care) நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந்நிறுவனம், தானியம்- சோயாபீன்-பால்மாவு (Corn-Coy-Milk) 'சாலடு எண்ணெய்' போன்ற உணவுப் பண்டங்களைத் தேவைப்படும் அளவு நன்கொடையாக வழங்குகிறது. இவ்வாறு அளிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள் தற்போது 950 உணவு அளிக்கும் நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. அவற்றில் தொடக்கச் சுகாதார நிலையங்கள், அரசாலும் நகராட்சிகளாலும் நடத்தப்படுகிற தாய்-சேய் நல நிலையங்கள் அடங்கும்.





1971-இல் மொத்தம் 20 லட்சம் கிலோ கிராம் எடையுள்ள, நன்கொடையாக அளிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் "கேர்" நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, வழங்கப்பட்டன. இத்திட்டம், ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைந்த (சுமார் 3,000) தாய்-சேய் நல நிலையங்களுக்கு மேலும் விரிவுபடுத்தப் படவிருக்கின்றது.

### II தொற்று நோய்களின் தடுப்பும், கட்டுப்பாடும்.

காலரா.—கடந்த காலத்தில் காலரா தடுக்க முடியாத பேராபத்தான நோய்களில் ஒன்றாக இருந்தது. வைப்ரியோ காலரா என்னும் நோய்க்கிருமி இந்த நோய் ஏற்படக் காரணமாகும். தொற்று நோய்க் கிருமி கலந்த நீர் அல்லது உணவு மூலமாக இந்த நோய் பரவுகிறது. வாந்தி அல்லது மலக் கழிவுப் பொருள்கள் மீது உட்காரும், ஈ, கொசு போன்றவை மூலம் நீரிலும், உணவிலும் அவை உட்காரும்போது இக்கிருமிகள் அவற்றில் கலந்து விடுகின்றன. இந்நோய் கண்டுள்ளவர்கள் தாம் அறியாமலேயே வெளிப்படையாக எந்த அறிகுறியும் தோன்றாதபோதே இந்தத் தொற்று நோயைப் பரவச் செய்கின்றனர். நமது மாநிலத்தில் இந்நோய் எங்கோ ஒவ்வோரிடத்தில் மட்டும் கண்டுள்ளது. காலரா பெரும்பாலும் ஆற்றுப்படுகை பகுதிகளில் (நீர் தேங்கும் வட்டாரத்தில்) ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் புகுமுக பகுதியில் முக்கியமாக இந்த நோய் காணப்பட்டது. இந்தக் கொள்ளை நோய் செப்டம்பர் திங்கள் முதல் அடுத்த ஆண்டு மார்ச் வரை உள்ள பருவத்தில் பரவுவது வழக்கம். இந்நோயினால் பெருமளவில் பாதகம் விளைந்து வந்ததால் இந்நோயைத் தடுத்துக் கட்டுப்படுத்த தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இம்மாநிலத்தில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக, இந்நோய் விளைவு, பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. 1958-ல் 6,508 மக்கள் பாதிக்கப்பட்டனர். 3,296 மக்கள் மாண்டனர். 1971-ல் 2,470 மக்கள்தான் பாதிக்கப்பட்டனர். 123 மரணங்களே ஏற்பட்டன.

இத்துறையின் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் இந்நோயின் விளைவுகளை பெரிதும் குறைத்துள்ளோம். பாதுகாப்பான நீர் வழங்கல், துப்புரவான கழிப்பிடங்கள் முதலியவற்றிற்கு வகை செய்வது போன்ற நீண்டகால நடவடிக்கைகளுக்கு மேலாக, இந்நோயைக் கட்டுப்படுத்த கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :—

கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்காக 64 சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். இம்மாநிலத்தில் எப்பகுதியில் காலரா கண்டுள்ளதாக தகவல் கிடைத்தாலும், போதுமான எண்ணிக்கை உள்ள ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றனர். பெரும்பாலோர

ருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்துதல், குளோரின் கலந்த நீர் வழங்கல் முதலான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ளூர் பணியாளர்களுக்கு அவர்கள் துணை புரிவர். மேலும், முக்கியமான திருவிழாக்கள் நடைபெறும் இடங்களில் திருவிழா நடைபெறுவதற்கு முன்பும், திருவிழாவின் போதும் குடிநீரில், குளோரின் கலத்தல் போன்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இந்த ஆய்வாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது முக்கியமான பணியாகும். ஏனென்றால், திருவிழாக்கள் இத்தொற்றுநோயைப் பரவச் செய்வதற்கு ஏற்ற ஒரு வாயிலாக அமையக்கூடும்.

தற்போது கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் மூன்றும் செயல் படுகின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு விரைவு மருத்துவ ஊர்தி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இத்துடன் இயலூர்தி கொள்ளை நோய்ப் பிரிவுகள் ஆறும் உள்ளன. அவற்றிற்குத் தேவையான சுகாதாரப் பணியாளர் களுக்கும் விரைவு மருத்துவ ஊர்திகளுக்கும், ஜீப் வண்டிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரைவு மருத்துவ ஊர்தி உள்ளது :—

பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், கடலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம் புத்தூர், சேலம், இராமநாதபுரம் மாவட்டங்கள் கொள்ளைநோய்க் கட்டுப் பாட்டுப் பணியைக் கவனித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜீப் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வண்டிகள் காலரா பரவியுள்ள பகுதிகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அனைவருக் கும் நோய்த்தடுப்பு ஊசிகள் குத்துதல், குடிநீரில் குளோரின் மருந்து கலத்தல், நோய்க் கண்டுள்ளோரை மிக அண்மையிலுள்ள மருத்துவ நிலையத்திற்கு விரைவு மருத்துவ ஊர்தியில் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை அவை மேற்கொள்ளும். இந்நோய் பெருமளவில் பரவியுள்ள நிலைமைகளின்கீழ் அப்பகுதிகளுக்கு இந்தப் பிரிவுகள் அனுப்பப்படுகின்றன.

பெரியம்மை.—பெரியம்மை நோய் இதற்குக் காரணம் கிருமிகளால் உண்டாவதாகும். ஒரு காலத்தில் இந் நாட்டில் இது பெருமளவில் பரவி வந்தது. இந்த நோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு பெரியம்மை ஒழிப்பு தேசிய திட்டம் ஒன்றை, இந்நாட்டின் எல்லா மாநிலங் களிலும் செயல்படுத்துமாறு வழி வகுத்தது. மாநிலந்தோறும் ஒரு மாவட்டம் முன்னோடி ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. முன்னோடி ஆய்விலிருந்து கிடைத்த அனுபவத்தின் (பயிற்சித்தெளிவின்) அடிப்படையில் பணியாளரமைப்பு உருவாக்கப்பட்டது. நமது மாநிலத்தில் இத்திட்டம் 1963-64-ல் தொடங்கப் பட்டது. இந்த முன்னோடி ஆய்வு செங்கற்பட்டு



மாவட்டத்தில் நடத்தப்பட்டது. சமுதாயத்தில் பெரியம்மை நோய் பரவு வதைத் தடுப்பதும் குறைப்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்கள் தொகையில் இந்நோயால் பிடிக்கப்படக்கூடிய அனைவருக்கும் முறையாக அம்மைப்பால் குத்தப்படுகிறது. பெரியம்மை கண்டுள்ள ஒவ்வொருவரையும் கண்டு பிடித்து அது பரவாமல் தடுப்பதற்குரிய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மாநிலத்தில் முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் இம்மாநிலத்தில் பெரியம்மை பரவும் நிலை அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. 1960-ல் 5,417 பேருக்கு இந்நோய் கண்டு, 1,340 பேர் மரணமடைந்தனர். 1964-ல் 5,545 பேருக்குக் கண்டு 1,412 பேர் இறந்தனர். இத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் நோய்க்கண்டவர் களின் எண்ணிக்கையும், மரணமடைந்தோரின் எண்ணிக்கையும் குறைந்தது. 1971-ல் 7 பேருக்கு பெரியம்மை நோய் ஏற்பட்டது. மரணம் எதுவும் நேரவில்லை. இவை நீங்கலாக, 1970-லிருந்து இம்மாநிலத்தில் இந்நோய் ஏற்படவில்லை. இந்த ஏழு பேர் கூட, வெளி மாநிலத்திலிருந்து இம்மாநிலத் திற்குக் கொண்டுவரப்பட்டுத் தொற்றியதன்மூலம் மறுமுறை தொற்றியாகப் பரவியதேயாகும்.

1971-ஆம் ஆண்டில் 12.5 லட்சம் பேருக்கு முதல் தடவையாகவும் 24.2 லட்சம் பேருக்கு மறுமுறையாகவும் அம்மை குத்தப்பட்டது. 1-4-1971 முதல் 31-12-1971 வரையில் ரூ. 18.11 லட்சம் செலவிடப்பட்டது. 1972-73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பணிக்காக ரூ. 20,86,900 ஒதுக்கப் பட்டுள்ளது.

"பிளேக்".

கடந்த காலத்தில் பிளேக் ஒரு மிகப் பெரிய கேடு விளைவிக்கும் பிரச்சினை யாக இருந்தது. முன்னரெல்லாம் பிளேக் நோயால் தாக்கப்பட்ட மக்கள் ஏராளமான எண்ணிக்கையில் இறந்து போவது வழக்கமாகும். பிளேக் முக்கியமாக மலைஎலிபோன்ற கொறிக்கும் பிராணிகளைத் தாக்குகின்ற ஒரு நோய் என்று குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நோய் மனிதர்களுக்கு எலிகளி லிருந்து எலித் தெள்ளுப் பூச்சிகளால் பரவுகிறது. 1930-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் பிளேக் நோயைக் கட்டுப்படுத்த சைனோகால் (Cynogas) புகை யூட்டி கிருமிகளை ஒழித்து தூய்மைப் படுத்தும் முறை கொண்டுவரப்பட்டது. அதனால் நிலைமை பெரிதும் திருந்தியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிளேக் நோயைப் பரப்புகின்ற தெள்ளுப் பூச்சிகளைக் கொல்லுவதற்கு (D.D.T.) மருந்து பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் தென்னிந்தியாவில் இக்கொள்ளை நோய் அடிக்கடி தோன்றிப் பரவும் இடமாகவுள்ள தருமபுரி மாவட்டம் ஓசூர் பகுதியில் பிளேக் நோய் அவ்வப்போது தோன்றிப் பரவி

கொண்டு இருந்தது. 1961-62-ல் தென்றுப் பூச்சிகள் டி.டி.டி. மருந்தை எதிர்த்து தாக்குபிடிக்கும் வன்மை பெற்றுவருவதாகக் கண்டறியப்பட்டது. எனவே தென்றுப் பூச்சிகளைக் கொல்ல பல் வேறு பூச்சி மருந்துகளைக் கொண்டு சோதனை செய்யப்பட்டது. இறுதியில் பி.எச்.சி. என்னும் பூச்சிக் கொல்லி மருந்து தெரிந்தெடுக்கப்பட்டது. 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு இம்மாநிலத்தில் பிளேக் நோய் அற்வேயில்லை.

திடீரென்று 22—10—1971 முதல் தொடர்ந்து மாநிலத்தின் சில பகுதிகளில் எலிகள் செத்து விழுந்தது குறித்துச் செய்தி வந்தது. கோயம்பத்தூர், சேலம், நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களின் சிலபகுதிகளிலும் சென்னை மாநகரின் சில பகுதிகளிலும் இத்தகைய செய்திகள் கிடைத்தன. 22-10-1971 முதல் 9-1-72-ம் நாள் முடிய, எலிகள் செத்து விழுந்ததாக 931 செய்திகள் வந்தன. உடனடியாக பிளேக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. பிளேக் நோய்த் தடுப்பு மருந்துக்குப் பெரும் அளவு தேவை இருந்தது. அதற்காக வெளிநாடுகளிலிருந்து மருந்து இறக்குமதி செய்ய அரசு சிறப்பு முயற்சிகள் எடுத்துக் கொண்டது. அந்நிலையில் இந்திய அரசும், உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகளும் பெரிதும் உதவினர். அவர்களது உதவியைக் கொண்டு இலண்டனிலுள்ள லிஸ்டர் நிறுவனத்திலிருந்து (Listen Institute) பிளேக் நோய்த் தடுப்பு மருந்துக் குப்பிகள் 85,000 விமானம் மூலம் கொண்டு வரப்பட்டது. இவை பிளேக் நோய்ப் பகுதிகளில் நோய்த் தடுப்பதற்காக வழங்கப்பட்டது. இவற்றிற்கு கூடுதலாக, பம்பாயிலுள்ள ஹாஃப்கின் நிறுவனத்திடமிருந்தும், பெங்களூரிலுள்ள பொது சுகாதார நிறுவனத்திடமிருந்தும் 92,000 க.செ.மி. பிளேக் நோய்த் தடுப்பு மருந்தும் பெறப்பட்டது.

பிளேக் நோய்ப் பகுதிகளில் பிளேக் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணி மும்முரமாக மேற்கொள்ளப்பட்டது. தடுப்பு ஊசி போடுவதற்காக, ஊசிப் போடும் விசைக்கருவியை (jet gun) இயக்குவதில் சுகாதார ஆய்வாளர் ஒருவருக்குத் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இக்காரியத்திற்காக இந்திய அரசிடமிருந்து ஊசி போடும் கருவி ஒன்று (jet gun) பெறப்பட்டது.

ரூ. 1,82,000 செலவில் மருந்துகளும், இரசாயனங்களும் வாங்கப்பட்டு அவை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 1,03 090 வீடுகளுக்கு மருந்து தெளிக்கப்பட்டது.



9—1—1972-க்குப் பின்னர் இம்மாநிலத்தில் எங்குமே எலி விழுந்ததாகத் தகவலேதுமில்லை. நிலைமை தற்போது கட்டுக்கடங்கி உள்ளது. இங்கு முக்கியமாக குறிப்பிடத்தக்கது இம்மாநிலத்தில் மனிதர் எவரும் பிளேக் நோயால் பாதிக்கப்படவில்லை என்பதுதான். இதற்குக் காரணம் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் மிகக் கடுமையான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதே யாகும்.

மலேரியா.

இம்மாநிலத்தில் மாநிலத் தலைமையிடத்தில் மலேரியா கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும் கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவது குறித்து இக்கழகம் கவனிக்கிறது. நன்கு தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் இதில் பணி புரிகின்றனர். தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகியவிடங்களில் இரண்டு வட்டார மலேரியா அமைப்புகள் உள்ளன; அங்கு ஆய்வுக் கூடங்களும், பயிற்சி, ஆராய்ச்சி, ஆய்வு வசதிகளும் உள்ளன.

மலேரியா ஒழிப்புப் பணியில், நோய் பரவும் நிலையில் (Attack phase) உள்ள பகுதிகளில் டி.டி.டி. (D.D.T.) மருந்தை எல்லா வீடுகளிலும் தெளிக்கும் பணி சுமார் 3 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டது. நோய் பரவும் நிலையில், கடைசி ஆண்டுப் பணியாக, கண்காணிப்புப் பணியாளர்கள் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வீடுதோறும் சென்று நோய் கண்டவர்களை கண்டுபிடிப்பதில் முனைந்து மருத்துவ மனைகள், மருந்தகங்கள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் ஆகியவிடங்களில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். நோய் காணும் நிலைக்குப் பிறகு, நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலை (Consolidation phase) வருகிறது. அப்போது, மலேரியா கண்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது தொடர்பான மேற்குறிப்பிட்ட பணிகள் யாவும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்த நிலைக்குப் பின்னர், பேணுதல் நிலை (Maintenance phase) வருகிறது. அப்பொழுது மலேரியா ஒழிப்புப் பணிகள் மூலம் கிட்டிய பலன்கள் பொது சுகாதாரப் பணிகள் மூலம் பேணப்படுகின்றன. ஏனெனில், மலேரியா ஒழிப்பு குறித்த கண்காணிப்புப் பணிகள் சுகாதாரப் பணிகளின் ஒரு பகுதியாகும்.

370 லட்சம் மக்கள் தொகை கொண்ட 28.75 யூனிட் பகுதிகளில் தற்போது பேணுதல் பணி மேற்கொள்ளப்படுகிறது. 40 லட்சம் மக்கள் தொகை கொண்ட 3.05 யூனிட் பகுதிகளில் மலேரியா ஒழிப்புப் பணிகள் ஒருங்கிணைக்கும் நிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பேணுதல் நிலைப்பகுதிகளில்,

மலேரியா கண்காணிப்பு பணிகளுக்குக் கூடுதலாக, நோய் தடுப்புள்ள முக்கிய நேர்வுகளைக் கண்டுபிடித்தல், தடுப்பு ஊசி குத்துதல், சுகாதாரக் கல்வி அளித்தல் ஆகியவற்றை அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

325 வளர்ச்சி வட்டாரங்களில் மலேரியா ஒழிப்புத் திட்டத்தை முழுவதும் நிறைவேற்றிய பின்னர் அதே நிலையில் வைக்கப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்கள் 351 ஆகும். இவ்வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள தொடக்கச் சுகாதார நிலையங்களில் 1—4—1969-க்குப் பின்னர் அடிப்படைச் சுகாதாரப் பணிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அடிப்படைச் சுகாதாரப் பணியாளர் அமைப்பு பின் வருமாறு; 10,000 பேர்களுக்கு அடிப்படைச் சுகாதாரப் பணியாளர் ஒருவர் இருக்கிறார். அடிப்படைச் சுகாதாரப் பணியாளர் நால்வருக்குச் சுகாதார ஆய்வாளர் ஒருவர் உள்ளார். ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஆய்வுக்கூடம் உள்ளது.

அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்கள் பலநோக்குப் பணியாளர்களாவர். மலேரியா கண்காணிப்புப் பணி—நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சையளித்தல்; சுகாதார செய்திகளைப் பரப்புதல், அதாவது வாந்திபேதி, காசநோய் போன்ற தொற்று நோய்கள் பற்றி அறிந்து அதனைத் தெரிவித்தல்; நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்தல்; பெரியம்மைத் தடுப்பு ஊசி போடுதல், குடும்ப நலத்திட்டப் பணிகள் பற்றித் தகவல் அளித்தல், ஆகிய பணிகளை அவர்கள் கவனிப்பதோடு மேற்கண்ட பணிகள் குறித்துச் சுகாதாரக் கல்வியும் போதித்து வருகின்றனர். தொகுதிநிலையின் கீழுள்ள பகுதிகளில் 23 வட்டாரங்கள் உள்ளன. இங்கு கண்காணிப்புப் பணியாளர்கள் வீடுதோறும் சென்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களை முனைந்து கண்டுபிடித்து அவர்களுக்கு மலேரியா நோய்த் தடுப்பு மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிப்பதன் மூலமும், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் மூலமாகக் கண்காணிப்புப் பணிகள் நிறைவேற்றுவதன் வாயிலாகவும் மலேரியா நோய்த் தடுப்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாநிலத்திலுள்ள சில நகரங்களில் கிணறுகளில் வளர்கின்ற ஸ்டிபென்சி மலேரியா கொசுவே மலேரியா ஏற்படுவதற்குக் காரணமாகும். தமிழ்நாட்டில் மலேரியா நோய் ஒழிப்பு நகர்ப்புறத் திட்டத்தில் சேலம், ராசிபுரம், இளம்பிள்ளை, தூத்துக்குடி ஆகிய நகரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. கொசு முட்டைகளை ஒழிப்பதற்காக அரோமெக்ஸ், கொசு மருந்து, பாரிஸ் கிரீன் (A.G.L.F.)போன்ற கொசு மருந்துகள், கிணறுகளில் தெளிப்பதன் மூலம் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1—4—197



...ன்றுள்ளபடி மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டு வரும் செலவு பொறுப்பேற்ற செலவாக இந்திய அரசினால் கருதப்படும். இவ்வாறு பணியாளர்கள் குறித்து ஏற்படும் செலவு இந்திய அரசு வரையறுத்த முறைப்படி இருக்க வேண்டும். இது குறித்து பொறுப்பேற்ற செலவுக்கு மேற்பட்டு ஆகும் செலவு முழுவதையும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இந்திய அரசு ஈடுசெய்யும்.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் பொருள்கள், சாதனங்களுக்கான செலவு முழுவதும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இந்திய அரசினால் ஈடு செய்யப்படும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மேற்கூறிய நான்கு நகரங்களைப் போல், மத்திய அரசு உதவிபெறும் நகரமாக சென்னை மாநகரும் தகுதியுள்ளது என்று இந்திய அரசு, மாநில அரசுக்கு அறிவித்துள்ளது. ஆனால், நான்காவது திட்டக் காலத்திற்குப் பிறகு மத்திய அரசின் உதவி எதுவுமின்றி மாநில அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற நிபந்தனையையும் இந்திய அரசு விதித்துள்ளது. இது குறித்து மாநில அரசு ஆலோசித்து வருகிறது.

யானைக்கால் நோய்.—தஞ்சாவூர், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலும் திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் குலிசின் வகைக் கொசுவினால் யானைக்கால் நோய் பரவுகிறது. இவ்வகைக் கொசுக்கள் கழிவு நீரிலும் சாக்கடைகளிலும் வாழ்கின்றன. சுமார் 130 லட்சம் மக்கள் யானைக்கால் நோயால் பாதிக்கப்படும் நிலைக்கு உள்ளாகின்றனர். தமிழ்நாட்டில், 1957–58-ம் ஆண்டிலிருந்து, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில், யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. கொசு உற்பத்தியாகக்கூடிய இடங்கள், நீர் தேங்கியுள்ள இடங்கள் ஆகியவற்றில் கொசு மருந்து தெளிப்பதன் மூலம், முறையான, கொசு ஒழிப்புப் பணியை இப்பிரிவுகள் புரிந்து வருகின்றன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தலைமையிடப் பிரிவு ஒன்று, புதிய கட்டுப் பாட்டுப் பிரிவுகள் எட்டு ஆகியவற்றை அமைப்பதன் மூலமும், இருக்கின்ற பிரிவுகள் நான்கையும் விரிவுபடுத்துவதன் மூலமும், யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டத்தை, வட்டார அடிப்படையில், இம்மாநிலத்தில் சீரமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 6 அல்லது அதற்கு மேற்பட்ட சதவீத யானைக்கால் நோய் நுண்கிருமிகள் உள்ள இடங்களே, இந்தப் புதிய பிரிவுகள் எட்டும் அமைக்கப்படுவதற்குத் தகுதியுள்ள இடங்களாகும். இந்தப் புதிய பிரிவுகள் எட்டும், உதவி இயக்குநர்

ஒருவரின் மேற்பார்வையின்கீழ், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், நாகைப்பட்டினம், புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், சென்னைமாநகர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புற பகுதிகளிலுள்ள நுண்ணுயிர்க் கொசுக்களின் செறிவைக் குறைத்தல், அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் யானைக்கால் சிகிச்சைக்கான தனி மருத்துவ மனைகளை நிறுவுதல் ஆகியவை மூலம், கொசு ஒழிப்பு பணியானது, இத்திட்டத்தின்கீழ் விரைவுபடுத்தப்படும். உள்ளாட்சி மன்றங்களிலும் அரசு மருத்துவ மனைகளிலும் உள்ள மருத்துவ அதிகாரிகள் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் யானைக்கால் சிகிச்சைகான தனி மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்படும். இந்த மருத்துவ மனைகளுக்கு மக்கள் இரவு நேரத்தில் (இரவு 8 மணி முதல் 11 மணி வரை) வரலாம். அப்பொழுது அவர்கள் உடலிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்படும். நோய் அறிகுறி இருப்பின் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும். யானைக்கால் நோய் பரவியுள்ளது குறித்து ஆய்வு நடத்தப்படும். குணமாகக் கூடிய நோயாளிகள், சிகிச்சை அளிக்கப்படுவதற்காகத் தனி மருத்துவ மனைகள்/மருத்துவமனைகள்/மருந்தகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்படுவர். ஆய்வு செய்யும் குழுவால், நகரப் புறங்களைச் சுற்றி 5 மைல் தொலைவுவரையிலுள்ள கிராமங்களில், யானைக்கால் நோய் பரவியுள்ளது குறித்து ஆய்வு செய்யப்படும். குணமாகக் கூடிய நோயாளிகளுக்கு, டைஇதைல் கார்போனிஜைன் (ஹெட்ராஜான்) மாத்திரைகளை [Diethyl Carbonizine (Hetrazan) tablets] வழங்குவதன் மூலம், சுகாதார ஆய்வாளர் மற்றும் உதவியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய சிகிச்சையளிக்கும் குழுவால், சிகிச்சையளிக்கப்படும்.

*உதவி மானியத் திட்டங்கள்.*—இம்மாநிலத்தில், 163 உள்ளாட்சி மன்றங்களில், கொசு மருந்துத் தெளிப்பின் மூலம், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் அனைத்திற்குமான மொத்தச் செலவு ரூ. 25.84 லட்சமாகும். இதில் தமிழ்நாடு அரசு ரூ. 6.59 லட்சத்தை மானியமாக அளிக்கிறது. யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்திற்காக 1/3 பங்கு மானியமும், யானைக்கால் நோய்க் கொசு ஒழிப்புத் திட்டத்திற்காக 1/4 பங்கு மானியமும் உள்ளாட்சி மன்றங்கள் பெறுகின்றன.

*சரும நோய்.*—யாஸ் என்னும் நோய், மேக நோயைப் பரப்புகின்ற ட்ரபானிமா பாலிடா 'Trapanema Pallida என்னும் கிருமிகளைப் போன்ற "ட்ரபானிமா பெட்ரினுயி" Trepanema Ptrtenui) என்னும் ஒருவகைக் கிருமியினால் ஏற்படுகிறது. மேக நோயைப் போல் அல்லாமல், சரும நோய், உடலுறவல்லாத பிறவகைத் தொடர்புகளினால் பரவுகிறது. சரும நோயின்



தமிழ்ப் பெயர்கள் "பீக்கலி மாரியாயி, காட்டு யாரியாத்தா" ஆகும். சரும நோய் மலைவாழ் மக்களிடையே இருப்பதோடன்றி சமவெளியில் தங்களது சுகாதாரத்தை நன்கு கவனித்துக் கொள்ளாத மக்களிடையேயும் காணப்படுகிறது. இந்த நோயை பென்சிலின் மருந்து மூலம் குணமாக்கலாம். சாதாரணமாக ஒரு முறை ஊசி குத்திக்கொண்டாலே போதுமானது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் பரவும் நோய்களுக்கும் பென்சிலின் மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதைத்தவிர, மக்களிடையே சுகாதாரக் கல்வியும் பரப்பப்படுகிறது. நோயாளிகளுக்குச் சோப்பும் அளிக்கப்படுகிறது. மருத்துவப் பணியாளர், பிறவகையான சிறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், சரும நோய் ஒழிப்புத் திட்டத்தின் 8 பிரிவுகள் 1961-லிருந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் தனிச் சுகாதார அதிகாரியின் நேரடி மேற்பார்வையின்கீழ் ஒரு சுகாதார ஆய்வாளரினால் நிர்வகிக்கப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், பணி முடிக்கப்பட்டு விட்டதால் இந்த எட்டுப் பிரிவுகளும் கலைக்கப்பட்டன. மேலும் ஆய்வு செய்ததன் பேரில், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் இந்நோய் பரவி இருப்பது தெரியவந்தது. இந்தப் பகுதிகளில் சிகிச்சை அளிப்பதற்காக மூன்று பிரிவுகள் தொடங்கப்பட்டன. இந்த மூன்று பிரிவுகள், தற்பொழுது கரூர், பெரியகுளம், பழனி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவை மூன்றும் திண்டுக்கல், தனிச் சுகாதார அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் உள்ளன. தருமபுரி மாவட்டத்திற்கான ஒரு திட்டம் ஒப்பளிக்கப்பட்டு 19—8—1971 லிருந்து இயங்கி வருகிறது.

*நாம்புச் சிலந்தி நோய்.*—இந்நோயினால் பிடிக்கப்பட்டுள்ள மனிதனின் "சப்கட்டானியஸ்" தசையில் வாழ்கின்ற நாம்புச் சிலந்திகளினால் இந்நோய் பரவுகிறது. அவர் தண்ணீரில் இறங்கும்போது, அவரது தோலில் உள்ள சிறுப் புண்ணிலிருந்து நாம்புச் சிலந்தி வெளியேறி, தண்ணீரில் புழுக்களை விட்டுவிடுகிறது. இந்தப் புழுக்களை, "சைக்லாப்ஸ்" என்னும் ஒரு நீர்க் கிருமி விழுங்கி விடுகிறது. மனிதர்கள் நீரை அருந்தும் பொழுது இந்த "சைக்லாப்"-கள் மனிதனின் உடலினுட் சென்று விடுகின்றன. இவ்வாறாக, இந்த நோய் பரவுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக, இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து, 4 சதவீதம் கார்பாலிக் நீர்மத்தில் தோய்த்த பஞ்சால் நோயினால் பாதிக்கப்பட்ட உடல் பகுதியைச் சுத்தம் செய்து துணியால் கட்டப்படுகின்றன. ஒரு மில்லியன் பாகம் நீரில் 5 பாகம் நீரில் கரையும் 50 சதவீதம் டி.டி.டி. கலந்து நீர் நிலைகளில் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு 6 வாரத்திற்கு ஒரு முறை தெளிக்கப்படுகிறது. இதைத் தவிர, இந்த நோய் பரவுகின்ற விதம் பற்றி மருத்துவக் கல்வி அளிக்கப்படுகிறது. இரசாயன முறையில் சுத்தம்

செய்யப்பட்ட நீர்நிலைகளிலிருந்து அல்லது வடிகட்டப்பட்ட, கொதிக்கவைக்கப் பட்ட நீரை அருந்தும்படி அவர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறது. இத்திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர மாநிலம் முழுவதும் நிறை வேற்றப்படுகிறது. இவ்விரு மாவட்டங்களிலிருந்தும் அங்கு நோய் பரவியுள்ள தாகத் தகவல் ஏதும் வரவில்லையாதலால், இத்திட்டத்திற்கு அங்கு அவசியம் இல்லை. இத்திட்டத்திற்காக போதிய பணியாளர்களும், வண்டிகளும் வழங்கப் படுகின்றன. 1960-ல் இத்திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர், 1,349 கிராமங்களில் இந்நோய் பரவியிருந்ததாக அறிவிக்கப்பட்டது. மொத்தம் 13,004 பேர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக, இந்நோய் பரவுவது பெரிதும் குறைந்துள்ளது. 1971-ஆம் ஆண்டில், மொத்தம் 25 கிராமங்களில்தான் இந்நோய் பரவியுள்ளது. மொத்தம் 198 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கருங்காய்ச்சல்.—"கடுங்காய்ச்சல்" "லேஸ்மான் டோனோவார்" (Leishman Donovan) என்னும் கிருமியினால் ஏற்படுகிறது. இது மணல் ஈக்களினால் பரப்பப்படுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு, முறையற்ற கடுங்காய்ச்சல் ஏற்படும். இது முற்றினால் இரத்த சோகை ஏற்படும். இதைக் கவனிக்காது விட்டால் மரணம் ஏற்படும். தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறை வேற்றும்போது, எல்லா வீடுகளிலும் (D.D.T.) மருந்து தெளிக்கப்பட்ட மையால், மணல் ஈக்களும் ஒழிக்கப்பட்டு, இந்நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. மலேரியா ஒழிக்கப்பட்ட நிலையில், (D.D.T.) மருந்து தெளிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. மணல் ஈக்கள் மீண்டும் வரத் தொடங்கின. இத்திட்டமானது, இராமநாதபுரத்திலுள்ள ஒரு பிரிவோடு 1969 முதல் இயங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நோய் முன்னதாக பரவியிருக்கக்கூடிய பகுதிகளில் நோய்கண்டுள்ளவர்களைக் கண்டறிவதும், மணல் ஈ (Sand flies) என்ற கிருமிகளைப்பற்றிய விவரம் சேகரித்து, அந்நோய்க் கிருமிகள் எந்த அளவிற்குப் பரவியுள்ளன என்பது குறித்துத் தீர்மானிப்பதும், இதன் முக்கிய பணிகளாகும். இந்நோய் கண்டுள்ள நோயாளிகள், சிகிச்சை அளிக்கப்படுவதற்காக, அண்மையிலுள்ள அரசு மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

1-4-1971-ஆம் நாளிலிருந்து 31-12-1971-ஆம் நாள் வரையிலான கால அளவில், 1,885 கிராமங்களில் ஆய்வு நடத்தப்பட்டு, 10 நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டனர். மணல் ஈ நோய்க் கிருமிகள் விவரம் சேகரிக்கப்பட்டு, அவை எந்தெந்த நோய்களை உண்டாக்கக்கூடியவை என்றும் கண்டறியப்பட்டது.



VI. பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

(a) மக்கள் தொகையும், பிறப்பு இறப்பு குறித்த புள்ளி விவரங்களும்—தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டு கணிப்பின்படி, 4,11,03,125 ஆகும். 1961-இல் மக்கள் தொகை 3,36,86,953 ஆக இருந்தது. 1961-இல் பெண்கள், ஆண்களின் தொகை விதாசாரம் 992 : 1,000 ஆக இருந்தது. 1971-இல் இவ்விதாச்சாரம் 979 : 1,000 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1961-லிருந்து 1971 வரையிலான 10 ஆண்டில் மக்கள் தொகை 22.01 சதவீதம் உயர்ந்துள்ளது. இப்போது தமிழ் நாட்டில் மக்கள் நெருக்கம் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 316 ஆகும். மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள் தொகை 30.28 சதவீதமாகும்.

இந்திய மக்கள் தொகையில், நமது மாநிலத்தின் மக்கள் தொகை 7.51 சதவீதம் ஆகும். 1961-ல் நமது மாநில மக்கள் தொகை 7.67 சதவீத மாகவும், 1951-ல் 8.54 சதவீதமாகவும் இருந்தது. இவ்வாறு, மக்கள் தொகையில், இந்தியாவில் நமது மாநிலம் 1951-ல் 5-வது இடத்தையும், 1961-ல் 6-வது இடத்தையும் பெற்றிருந்தது. தற்போது, 1971-ல் 7-வது இடத்தை அடைந்துள்ளது. 1961-71-ல் மாநில மக்கள் தொகை 22.01 சதவீதம் உயர்ந்துள்ளது. இக்கால அளவில் நாட்டின் மொத்த மக்கள் தொகை 24.57 சதவீதம் உயர்ந்துள்ளது. நாட்டின் மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்ட காலம் முழுவதும் மாநிலத்தில் 1,000 ஆண்களுக்குப் பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்துவரும் போக்கில் உள்ளது. நாடு முழுமைக்குமான ஆண் பெண் விதமும் இதுபோலவே குறைந்து வந்துள்ளது. இந்தியா முழுவதும் ஆண் பெண் விகிதம் 1,000-க்கு 9 குறைந்துள்ளது. இம்மாநிலத்தில் அவ்விகிதம் 1,000க்கு 13 இப்பத்தாண்டு களில் குறைந்துள்ளது.

இம்மாநிலத்தில் 1970-ல் பதிவு செய்யப்பட்ட பிறப்பு விகிதம் பாதி யாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மக்கள் தொகையில் 100-க்கு 27.3 ஆகும். பாதியாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மக்கள் தொகையில் இறப்பு விகிதம் 1,000-க்கு 10.5 ஆகும். பிறந்த குழந்தைகளில் இறப்பு விகிதம் 1,000-க்கு 61.4 ஆகும்.

முந்திய ஆண்டுகளில் பதிவான விதங்களுடன் ஒப்பிட்டால், 1970-ல் பதிவான பிறப்பு விகிதம் மிகவும் குறைவு. தமிழ் நாட்டில் 1970-ல் பிறந்த குழந்தைகளின் ஆண் பெண் விகிதம் 107 : 100 ஆகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

*சராசரி ஆயுட்கால அளவு.*—உணவு உற்பத்தி பெருகியதன் மூலம் பஞ்சம் என்பது அறவே ஒழிக்கப்பட்டிருப்பதாலும், உணவு வழங்கல் நிலைமை உயர்ந்துள்ளதன் விளைவாலும் சராசரி ஆயுட்கால அளவு உயர்ந்துள்ளது. கைக்குழந்தைகள், குழந்தைகள் இறப்பு விகிதம், வளர்ச்சியடைந்த நாடுகளில் பதிவாகியுள்ள விதங்களைக் காட்டிலும் உயர்ந்திருப்பினும் கூட, இங்கு கணிசமான அளவு குறைந்துள்ளது. அண்மையில் தெரியவந்த இறப்பு விகிதக் கணிப்பின்படி, தெரியவந்துள்ள சராசரி ஆயுட் கால அளவு ஆண்களுக்கு 49.2 வயதும் பெண்களுக்கு 46.3 வயதும் ஆகும். 1941-50 ஆண்டுகால அளவில் ஆண் பெண் சராசரி ஆயுட்காலம் முறையே 32.5 வயதாகவும், 31.7 வயதாகவும் இருந்தது. 1951-60 ஆண்டு கால அளவில், ஆண் பெண் சராசரி ஆயுட்காலம் முறையே 41.9 வயதாகவும் 40.6 வயதாகவும் உயர்ந்தது. தொற்று நோய்களின் காரணத்தால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்ததனாலும், மேற்சொன்னவாறு சராசரி ஆயுட்காலம் உயர்ந்தது எனலாம்.

*உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தலைத் தடை செய்தல்.*—1954-ஆம் ஆண்டு உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டம் (மத்தியச் சட்டம்) இம்மாநிலத்தில் 1-6-1955 முதல் செயலுக்கு வருவதற்கு முன்பே நீண்ட காலமாக தமிழ்நாட்டில் உணவுப்பொருள் கலப்படத் தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு முன்பு இந்த மாநிலம், தமிழ்நாடு 1918-ஆம் ஆண்டு உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டம், சென்னை, மதுரை மாநகராட்சிகள், 94 நகராட்சிகள், 174 பேரூராட்சிகள், 3 ஊராட்சி ஒன்றியங்கள், 6 நகரியக் குழுக்கள், 2 பாளைய வாரியங்கள், 25 திருவிழாப் பகுதிகள் ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டு வருகிறது.

உணவுப் பண்டங்களைப் பகுப்பாய்வு செய்வதற்காகத் தற்போதுள்ள வசதிகளுடனும், உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உள்ள பணியாளர்களுடனும் அச்சட்டத்தின் விதித்துறைகள் இயன்ற அளவு இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது ஓராண்டில் எடுக்கப்படும் மாதிரிகளின் சராசரி எண்ணிக்கை 25,000 ஆகும்.

உணவுக் கலப்படத்தடைச் சட்டத்தை விரும்பத்தக்க அளவுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்துவதற்கு கீழ்க்கண்டவை முக்கிய முட்டுக்கட்டைகளாக உள்ளன. உணவுப் பகுப்பாய்வுக்காகப் போதிய ஆய்வுக்கூட வசதிகள் இன்மை, இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய வசதி போதுமான அளவிற்கு இல்லாமை.



இச்சட்டத்தின் கீழ் உணவு பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக இம்மாநிலத்தில் தற்போது இரண்டு ஆய்வுக்கூடங்கள் மட்டுமே உள்ளன :—

(1) கிண்டியிலுள்ள அரசுப் பகுப்பாய்வுக் கூடத்தில் மாவட்டங்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(2) சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பொதுப் பகுப்பாய்வுக் கூடம் சென்னை மாநகரத்தில் எடுத்துள்ள மாதிரிகளை ஆய்வு செய்கிறது. சராசரியாக, உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சுமார் 18,500 மாதிரிகள் ஆண்டு ஒன்றுக்கு கிண்டியிலுள்ள அரசு பகுப்பாய்வுக் கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுப்பாய்வுக் கூடத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 6,000 உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இம்மாநிலம் முழுவதும் மாதிரிகளைச் சேகரிப்பதை முடுக்கப்படுத்துவதற்கு இந்த இரண்டு ஆய்வுக் கூடங்களிலுமுள்ள வசதிகள் போதிய அளவுக்கு இல்லை. ஆய்வுக் கூட வசதிகளைப் பெருக்குவதற்காக அரசு, கோயம்புத்தூரில் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவியுள்ளது. கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுமுள்ள அரசினர் மருத்துவ மனையிலிருந்து வருகின்ற மாதிரிகளை 3-12-1970 முதற்கொண்டு இந்த ஆய்வுக் கூடம் பகுத்தாயும் பணியைத் தொடங்கியுள்ளது.

உணவுப்பொருள் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக ஆய்வுக் கூட வசதிகளை மேலும் பெருக்கும்பொருட்டு, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மாவட்ட உணவுப் பொருள் பகுப்பாய்வுக் கூடங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆய்வுக் கூடப் பிரிவுகள் செயல்படத் தொடங்கியதும், காலதாமதமின்றி மாதிரிகளைச் சோதனை செய்ய ஏற்பாடு செய்வது இயலும், மேலும், விழையும் நோக்கத்தை எய்த மாநிலம் முழுவதிலும் பெருமளவில் மாதிரிகளைப் பகுத்தாய்தல் மூலம் உணவுப் பொருட்கள் கலப்படத் தடைச் சட்டத்தை மேலும் தீவிரமாகச் செயல்படுத்துவது இயல்வதாகும்.

## V. பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு.

பள்ளிக் குழந்தைகள் மருத்துவச் சோதனைக்கான திட்டம் ஒன்று ஏற்கெனவே 18 தொடக்கச் சுகாதார நிலையங்களில் செயலில் உள்ளது. இத்திட்டத்தின்படி, தொடக்கச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றையும் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஆண்டுதோறும், 6—11 வயதுத் தொகுதியிலுள்ள பள்ளிக் குழந்தைகள் இரண்டாயிரம் பேரைச் சோதனை

செய்கின்றனர். மக்கள் தொகை 40,000-மும் அதற்கு அதிகமும் உள்ள பெரிய நகரங்களில் இரு மருத்துவப் பிரிவுகளை நிறுவ அரசு 1970 மே மாதத்தில் ஒப்பளிப்பு வழங்கியது. இத்திட்டத்தைச் செயற்படுத்த திருச்சியும், கோயம்புத்தூரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தலைமையிடத்தில் சுகாதார அதிகாரி ஒருவர் உள்ளார். அவர் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறதா என்று பார்த்துக் கொள்வார். கிராமப் பகுதிகளில் மருத்துவச் சோதனை செய்யும் திட்டத்தை மேலும் 25 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தும் கருத்து அரசின் பரிசிலனையிலுள்ளது.

சென்னை மாநகரில், ஸ்டான்லி அரசினர் மருத்துவமனையைச் சுற்றிலும் உள்ள பள்ளிகளில் பயிலும் I- முதல் VI-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான மருத்துவச் சோதனையின் முன்னோடி ஆய்வுத் திட்டத்திற்கு அண்மையில் அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின்படி, சென்னை, ஸ்டான்லி, அரசினர் மருத்துவமனையின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கும் 3,500 முதல் வகுப்பு மாணவர்களையும் 1,500 ஆறும் வகுப்பு மாணவர்களையும் சென்னை மாநகராட்சியின் மருத்துவர்களும் அரசினர் மருத்துவக் கல்வித்துறையில் உள்ள உதவி அறுவை மருத்துவர்களும் மருத்துவச் சோதனை செய்வர்.

பள்ளிச் சிறார்களிடையே காணப்படுகின்ற குறைகளின் தன்மை, நலக் குறைபாடுகள் உள்ள மாணவர்களின் சதவிதம் எடுக்கவேண்டிய பிற் காப்பு நடவடிக்கைகள் ஆகியவையும் இதில் உள்ள சிக்கல்களின் தன்மைப் பற்றியும் நமக்கு தெளியவைப்பதுடன் இப்பணிகளைப் பெரிய அளவில் செயல்படுத்துவதற்கான நடைமுறையைச் சீரமைத்து நடைமுறைக்குகந்த செலவுத் திட்டத்தை வகுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வாய்வு முடிக்கப்பட்டவுடன், இந்தப் புள்ளி விவரங்கள் மதிப்பீட்டுக் கான பொருத்தமான உத்தரவுகளுடன் சுகாதாரத் துறையின் இயக்குநர் அலுவலகத்தில் உள்ள புள்ளிவிவர அதிகாரிக்கு அனுப்பப்படும். அத்தகைய மதிப்பீடு முடிந்தவுடன், ஒரு குழு முழுவிவரங்களுடன் கூடிய ஒரு திட்டத்தையும், அத்திட்டத்தை சென்னை மாநகரில் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்வதற்குத் தேவையான மதிப்பீட்டுச் செலவையும் தயாரிக்கும். குழந்தைகள் மருத்துவச் சோதனை குறித்த அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது.



சுகாதார கல்விக் கழகம்.

மாநில சுகாதார கல்விக் கழகம் 1960-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கடந்த 12 ஆண்டுகளாக இக் கழகம் ஒரே சீராக வளர்ந்து வந்துள்ளது. இது கீழ்க்கண்ட திட்டங்களை வகுத்து, நிறைவேற்றி வருகிறது :—

ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குச் சுகாதார கல்வியில் பணிக்காலப் பயிற்சி அளித்தல் ;

பொதுச் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ச்சியும், ஆய்வும் ;

சுகாதாரக் கல்வி வெளியீடுகளைத் தயாரித்து வெளியிடுதல் ;

பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியவற்றை நடத்துதல்.

மாநில சுகாதாரக் கல்வி கழக அச்சகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அச்சகம் 1-9-1971 முதற்கொண்டு முழு அளவில் செயல் புரிந்து வருகிறது. இது துண்டு வெளியீடுகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டுள்ளது. மேலும் பொதுச் சுகாதாரத்தின் பல்வேறு கூறுகள்பற்றியும், மற்றும் தாய்-சேய் நலம் பற்றியும் வெவ்வேறு சுவரொட்டிகளும் அச்சிடப்பட்டன. மேற்சொன்ன சுவரொட்டிகளும் துண்டு வெளியீடுகளும் பல்வேறு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், பிற மருத்துவமனைகளிலும் வைப்பதற்காக அனுப்பப்பட்டன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்த பெரிய, சிறிய பொருட்காட்சிகளில் இயல் ஊர்தி பொருட்காட்சி பிரிவு பங்கு கொண்டது. மக்கள் நல்வாழ்வு குறித்த பல்வேறு பொருட்களில் 12 வானொலி உரைகள் நிகழ்த்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சுகாதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.—பயிற்சிப்பள்ளி, பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு சுகாதாரத்தில் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் அவரவருடைய நிறுவனங்களில் பயிற்சி பெறும் எல்லா ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க முடியும். இம்மாநிலத்திலுள்ள 30 ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொன்றி லிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பயிற்சி யாளர் தொகுதியும் 20 முதல் 25 ஆசிரியர்களைக் கொண்டிருக்கும். பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். இதுவரை 2 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, சுகாதாரக் கல்வி குறித்து இப்பிரிவு பணிக்களரிகள், கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்து நடத்தும்.

[1972 மார்ச் 17

***மாணவர் நல்வாழ்வுக் கல்விப் பிரிவு.***—பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் தற்போதுள்ள பாடத் திட்டத்தைப் பகுத்தாய்ந்து, மாணவர்களுக்கு சுகாதார போதனை அளிப்பதைப் பாட திட்டத்தில் புகுத்துவதற்கென இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தில் பள்ளிச் சுகாதார திட்டத்திற்கு ஏற்பாடு செய்து அதை வலுப்படுத்தும் பணியில் இப்பிரிவு சுகாதாரத் துறைக்கும் கல்வித் துறைக்கும் இடையே தொடர்பமைப்பாகச் செயல்பட்டது. 6 முதல் 8 வரையிலுள்ள வகுப்புகளுக்கான பள்ளிப் பாடத் திட்டமும், 11-14 வயதுத் தொகுதியினருக்கான சுகாதாரப் பாடத் திட்டமும் பகுத்தாய்வதற்கென பெறப்பட்டுள்ளன. 4 முதல் 6 வரையிலுள்ள வகுப்புகளுக்கெனச் சிறு வெளியீடுகள் தயாரிக்கப்பட்டு அதன் பலன்கள் கவனிக்கப்பட்டன.

*மக்கள் நல்வாழ்வுக் கல்வி பயிற்சிப் பிரிவு*—தொடக்கச் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவப் பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் சுகாதாரக் கல்வியில் பயிற்சியளிப்பதாக இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் சுகாதாரப், கல்வி குறித்து கிராம மக்களுக்குக் கற்பிக்க முடியும்.

மக்கள் நல்வாழ்வுக் கல்வி கழகத்தின் இணைக்கப்பட்ட நேரிட ஆய்வுகட்புலவிளக்க நிலையம் 1971-ஆம் ஆண்டில் தொடர்ந்து பணி புரிந்தது. சுகாதாரக் கல்விக் கழகத்தினால் நடத்தப்பட்ட மும்முர பயிற்சி திட்டங்களில் நேரிட ஆய்வுகட்புலவிளக்க நிலையத்தின் பணியாளர்கள் பங்கு கொண்டனர். இது, வேளச்சேரி பகுதி, தொடக்க சுகாதார நிலையத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. இப்பிரிவு, புறநோயாளி, பேறு காலத்திற்கு முந்திய நிலைக் கவனிப்பு ஆகியவற்றில் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கியது. செரியன் நகரில் காசநோய் குறித்த சமுதாயக் கல்விப் பணி, "ஸ்வாலோஸ் இந்தியா" என்னும் அமைப்பின் பணியாளர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. திருவல்லிக்கேணி, மாநகராட்சிப் பள்ளியில் பள்ளிச் சுகாதாரக் கல்வி திட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரத்தச் சோகை குறித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான திட்டம் இந்திரா நகரில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இரத்தச் சோகை கண்டுள்ள சிறார்களின் உடல்நல மேம்பாட்டிற்காக மருந்துகள் வழங்கப்படுகின்றன. இரத்தச் சோகை நோயைத் தடுப்பதற்கென முறையான கல்வி பணிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.



[1972 மார்ச் 17]

*பொதுச் சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி.*—பூவிருந்தவல்லியிலுள்ள பொதுச் சுகாதார நிறுவனம் கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளைக் கொண்டது:—

(1) சுகாதாரப் பிரிவு.

(2) மறுபயிற்சி நிலையம்.

(3) ஆராய்ச்சி—செயல் திட்டம்.

கிராமப்புற மக்களின் சுகாதார நிலைமைகளை எவ்வாறு முறைப்படி அமைக்கப்பட்ட பொது நிர்வாகம் மேம்படுத்த முடியுமென்பதை, பூவிருந்தவல்லி, சுகாதாரப் பிரிவு புலப்படுத்துகிறது. மகப்பேறு, சிசு நலன், துப்புரவு, சுகாதாரக் கல்வி, தொற்று நோய் தடுப்பு, குடும்பநலத் திட்டம், மக்கள் பிறப்பு-இறப்புப் பதிவுகள் முதலிய முறையான பொதுச் சுகாதாரப்பணிகள் அனைத்திலும் இப்பிரிவு பங்கெடுத்துக் கொள்கிறது.

ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் பூவிருந்தவல்லியிலுள்ள மறு பயிற்சி நிலையம் 1954-ல் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தற்போது தமிழ் நாட்டு அரசால் நடத்தப்படுகிறது. தங்களுடைய அலுவல்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பணி புரியும் மருத்துவர்கள், துணை சுகாதாரப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணிகளில் இந்நிலையம் மறுபயிற்சி அளிக்கிறது. இதுவரை 93 பயிற்சித் தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஃபோர்டு நிறுவன உதவியுடன் ஆராய்ச்சி—செயல் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது இது சுகாதாரக் கல்விக் கழகத்தின் ஒரு பிரிவாக உள்ளது. சுகாதார வாழ்க்கை நிலைமைகளைப்பற்றி மக்களின் அறிவு குறித்தும், பழக்கம் குறித்தும், மனப்பான்மை குறித்தும் ஆய்வு செய்வதே இதன் நோக்கமாகும். சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்த தனது செயல்களைத் தொடங்கியுள்ளது.

## VII. பல்வகை

(a) *சந்தைகளும் திருவிழாக்களும்.*—மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், ஏறத்தாழ, 600 பெரிய சிறிய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்விழாக்கள் அனைத்திற்கும் போதுமான சுகாதாரத் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட துப்பபுரவுப்பணிகளை சுகாதாரப்பணிகள்—குடும்ப நலத்துறை உதவி இயக்குநர்களும் கூட்டு இயக்குநரும் நேரில் பார்வையிட்டனர். தேவைப்பட்ட இடங்களில் கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். விழாக்களின்போது தேவைபேற்படுமென

எதிர்பார்க்கப்பட்ட காலராத் தடுப்பூசி போடும் பணியைச் செய்ய சென்னை நோய்ப்பிரிவுச் சிகிச்சைக்கான இயங்கும் நிலையங்களின் வண்டிகளின் பணியாளர்களும் வண்டிகளும் அந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டன.

### சுற்றுப்புறச் சுகாதாரம்

பள்ளி செல்லும் இளஞ்சிறார் சுகாதார வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுத் தருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம், பள்ளிகளில், குடிநீர்க் கிணறு, கொல்லைப்புறம், சிறுநீர் ஒதுக்கிடம் ஆகியவற்றை ஏற்படுத்தித்தர வகை செய்கிறது. இத்திட்டமானது மக்கள் நல்வாழ்வுத் துறையால் தயாரிக்கப்பட்ட விதத்தில் இருக்கும். இத்திட்டமானது, 1966-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. பின்வரும் ஆண்டுகளிலும் இத்திட்டமானது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது, ஒவ்வொரு ஆண்டும், சுமார் 25 பள்ளிகளில் மட்டுந்தான் கொண்டுவரப்பட்டது. ஆகவே, இத்திட்டத்தை, ஒவ்வொரு ஆண்டும் அதிக பள்ளிகளுக்கு நீட்டிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இதை நோக்கமாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் 120 பள்ளிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு ஒப்பளிப்பு செய்தது. இத்திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை இயக்குநரும், கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் இணைந்து நிறைவேற்றி வருகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தொழில் நுட்ப ஆலோசனைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை இயக்குநரும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணியாளர்களை, அதாவது, ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களை கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் அளிக்கின்றனர். இத் திட்டத்திற்காகும் செலவு மக்கள் நல்வாழ்வுத்துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்படுகிறது. இவ்வாண்டும் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

### காற்றின் தூய்மை கெடுதல்.

1971-ஆம் ஆண்டு சூன் திங்களில் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழுவில், மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் திட்டத் துறை கூட்டு இயக்குநர் இதன் அமைப்பாளராக இருக்கிறார். சென்னை மாநகரில் காற்றின் தூய்மை கெடுதல் குறித்து, இக்குழு ஆய்வு செய்கிறது. எவ்வாறு காற்றின் தூய்மை கெடுக்கப்படுகிறது என்பது குறித்து விரிவாக ஆய்வு செய்யுமாறும், எத்தெந்த வழிகளில் காற்றின் தூய்மை கெடுக்கப்படுகிறது என்பது குறித்தும், காற்றின் தூய்மை கெடுக்கப்படுவதைத் தடை செய்வது குறித்து, உரியான மற்றும் நடைமுறைக்குகந்த குறுகிய கால, நீண்ட கால நடவடிக்கைகள் குறித்துக் கருத்துரைகளை வழங்குமாறும் இக் குழுவானது



கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை தற்போதுதான் பெறப்பட்டுள்ளது. அது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**நகரமைப்புத் திட்டங்கள் :**

நாடு முழுதும் விரைவாக நகரமயமாகி வரும் இந்நாளில், நகர-நாட்டுப்புறத் திட்டம் இன்றியமையாததாகி வருகிறது. நிலத் தேவை பெருத்த அளவில் விரைவாக அதிகரித்து வருகிறது. சமுதாயத்தின் பொருளாதார ஏற்றத்துக்காக மட்டுமல்லாமல் நகர-நாட்டுப்புற பகுதிகளில் சுற்றுப்புறச் சூழலின் தனித்தன்மைகள் விரைவாக மறைந்து வருவதைத் தடுப்பதற்காகவும், அரிதாயுள்ள நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம் வகுத்துத் தீர வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இம்மாநிலத்திலுள்ள நகரமைப்புத் திட்டப் பணிகளுக்கான பொறுப்பேற்கும் நகரமைப்புத் திட்ட இயக்குநரகம் வட்டாரத் திட்டங்கள், பெருநகர் திட்டங்கள், விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல், கட்டிடப் பணிகளையும் நிலப் பயன்பாட்டுப் பணிகளையும் முறைப்படுத்துதல் மூலமாக இப்பிரச்சினையைத் தீர்த்து வருகிறது. திட்டத்தின் பயன்கள் மாநிலம் முழுதும் சீராகக் கிடைக்கவும், நிர்வாகத்தைச் சீர்படுத்தவும், இத்துறையை எட்டு வட்டார அலுவலகங்களாகத் திருத்தியமைக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. அதே சமயத்தில் 1920 ஆம் ஆண்டு பழைய நகரமைப்புச் சட்டத்திற்குப் பதிலாக, 1971 ஆம் ஆண்டு விரிவான, புதிய நகரமைப்புச் சட்டமொன்று கொண்டு வர சட்டமன்றத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இச்சட்டம், செயலுக்கு வரும்போது, தயாரிக்கப்பட்டுள்ள பெருநகர்த் திட்டங்கள், வட்டாரத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக சட்டப்பூர்வமான ஒப்புதல் அளிக்கும். அதன் விளைவாக, நகர-நாட்டுப்புறத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் புதிய திருப்பம் ஏற்படும். இச்சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம், வரும் ஆண்டிற்கான திட்டம் குறித்து சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவது நன்கு பயனளிக்கும்.

**வட்டாரத் திட்டங்கள் :**

கடந்த ஆண்டு இம்மாநிலத்தில் திட்டமிடுவதற்கேற்ற எட்டு வட்டாரங்களுக்காக வட்டாரத் திட்டங்களை வகுக்கும் பணி பெரும்பாலும் நிறைவுறும் நிலையை அடைந்துள்ளது. வரைவுத் திட்டங்கள் இவ்வாண்டில் தயாராகிவிடும். பின்தங்கிய பகுதிகளை நுட்பமாகத் தெரிந்தெடுத்து அவற்றை மேம்படுத்துதல் குறித்து கருத்துரைகள் வழங்குவது மூலம் இந்த வட்டாரத் திட்டங்கள் சீரான மேம்பாட்டுக்குத் துணை புரியும்.

**பெருந் திட்டங்கள் :**

நகரமைப்புத் திட்ட இயக்குநரகத்தால் 12 நகரப் பகுதிகளுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு (1971-72) 8 நகர்ப்புற பகுதிகளுக்கான பெருந்திட்டங்களுக்கு இறுதி உரு கொடுக்கப்பட்டன. கூடுதலாக 8 பகுதிகளுக்கு பெருந்திட்டங்களை இவ்வாண்டு (1972-73) தயாரிப்பதென இலக்கிடப்பட்டுள்ளது. விரைவாக வளர்ந்து வரும் நகர்ப்புற பகுதிகளின் சீரான மேம்பாட்டுக்கு உறுதுணையாக இப் பெருந்திட்டங்கள் இருக்கும்.

இத்திட்டங்களுக்காகவும், இத்துறையின் பொது நிர்வாகத்திற்காகவும், 1972-73-ல் மொத்தமாக ரூ. 28.87 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக்கான பெருந் திட்டங்கள் :**

சென்னை மாநகரின் முறையற்ற வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், அதிகரித்து வரும் மக்கள் தொகையின் தேவைகளை நிறைவு செய்யவும், 450 சதுர மைலுக்கு மேல் பரவியுள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு ஏற்றதோர் இருபதாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 185 கோடி திட்டமொன்று அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. இது தனிப்பட்ட முறையில் அரசின் ஆய்விலுள்ளது. சென்னை பெருநகர் பகுதித் திட்டத்தின் கொள்கையினையொட்டி, மூன்று துணை நகரங்களின் மேம்பாட்டிற்கான திட்ட அறிக்கையொன்று கடந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டு நகர மையங்களான ஆவடி, எண்ணூர், மணலி, ஆலந்தூர், பரங்கிமலை ஆகியவற்றின் வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கும் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, அடுத்து வரும் ஆண்டிற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**விரிவான நகரமைப்புத் திட்டங்கள் :**

மொத்தத்தில் 689 திட்டங்கள் இம்மாநிலத்தின் 93 நகரப் பகுதிகளில் அடங்கியுள்ளன. அவற்றில், 166-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 523 தொடக்க நிலையிலேயே உள்ளன. 68 முன்னேற்ற நிலையை எட்டி, இவ்வாண்டில் ஒப்பளிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரைவுத் திட்டத்தை விரைவாகத் தயாரிப்பதற்கு ஏதுவாகவும், ஒப்பளிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தவும் கடந்த ஆண்டுகளில் உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. நகர்ப்புற சாலைகளையும் துணை நகரங்களையும் காட்டும் வரைபடம் இக்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ. 5 லட்சம் வழங்கக் கருதப்படுகிறது.





**பெருநகர்களுக்கான போக்குவரத்துத் திட்டம் :**

நகர்ப்பகுதிகளில் மக்கள் தொகையின் பெருக்கமும், மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை உயர்வும் சேர்ந்து மாநிலத்தின் முக்கிய நகரங்களில் பெரும் மக்கள் நடமாட்டம்—வண்டிப் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. எனவே, சென்னைப் பெருநகர்ப் பகுதி, கோயம்புத்தூர் பெருநகர்ப் பகுதி, திருச்சி பெருநகர்ப் பகுதி ஆகியவற்றுக்கான விரிவான மக்கள்—நடமாட்டம் வண்டிப் போக்குவரத்துத் திட்டங்களுக்காக, படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமொன்று வகுக்கப்பட்டது. சென்னைப் பெருநகர்ப் பகுதி போக்குவரத்துத் திட்டப்பணி முடிவு பெற்றுள்ளது. பெருமளவில் இந்நகரின் ஊடே செல்லும் ரயில் வசதிகளுக்கு (Mass Transit Railway Facility) வகை செய்யுமாறு வேண்டி இத்துறை தனது பரிவுரைகளை அவை தொடர்பான தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளின் ஆய்வுக்காக, இரயில்வே துறைக்கு அனுப்பியுள்ளது. புள்ளி விவரம், பகுப்பாய்வு ஆகியவை தொடர்பாக இரயில்வே துறைக்கு உதவி செய்யும் பொருட்டு, தனிப் பிரிவு ஒன்று இத்துறையில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆய்வுப் பணியின் முதன்மைப் பிரிவு கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கு இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் அந்த ஆய்வுகள் தொடரப்படும்.

இந்த இரண்டு திட்டங்களின்கீழ்ச் செலவுக்காக ரூ. 7.46 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகரமைப்புத் திட்டத்திற்கான ஆராய்ச்சிப் பிரிவு :**

இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் வகுப்பதில், எண்ணற்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றிற்குத் தீர்வு காண்பதற்காக, இத்துறை மாற்றியமைக்கப்பட்டபோது, சிறிய ஆராய்ச்சிப் பிரிவொன்று தொடங்கப்பட்டது. அது இப்பணியைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு இயலும் வகையில் இன்றியமையாத சாதனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறைக்காக வரை படங்கள் வரைவதற்கான சிறப்புக் கருவி, நிலப் படம் எழுதுவதற்கான சிறப்புக் கருவி, நகல் எடுக்கும் சாதனம் ஆகியவற்றை வழங்கவும், தலைமையிடத்தில் நூலகம் ஒன்றை அமைக்கவும் ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகரமைப்புத் திட்டப்பணியில் வல்லுநர்களுக்குப் பயிற்சி:**

நகர-நாட்டுப்புறத் திட்டம் தனிப்பட்டதோர் தொழிலாகவே ஆகிவிட்டது. இப்பயிற்சிக்கு பொறியியல், கட்டிடக்கலை, பொருளியல், சமூகவியல் ஆகியவற்றில் தேர்ச்சி தேவை. இத்துறைக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் திட்டமிடுபவர்களின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தேவையை நிறைவு செய்ய, அதிகாரிகள் அளவிலும் தொழில் நுட்ப வல்லுநர்கள் அளவிலும் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டமொன்று செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டில், கீழ்க்கண்ட வகுப்புகளில் சேருவோருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

நகர-நாட்டுப்புறத் திட்டம், போக்குவரத்துத் திட்டம், இயற்கை (நில)க் காட்சியைப் பேணும் பணி ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பு பயிற்சி, நகரமைப்புத் திட்டத்தில் தகுதிப்பட்டயச் சான்றிதழ் மேல்படிப்பு (Post-Licentiate Course)

இக்காரியங்களுக்காக ரூ. 0.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுடன் மாநில வீட்டு வசதி வாரியமும் குடிசைப் பகுதி மாற்று வாரியமும் மேற்கொள்ளும் வீடு கட்டும் திட்டங்கள் குறித்து அவற்றிற்கு ஆலோசனை வழங்கும் பணியிலும் நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், வருவாய் தரத்தக்க பேருந்து நிலையங்கள், அங்காடிகள் போன்றவற்றிற்கு வடிவமைப்பு தயாரித்தல் ஆகியவை குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆலோசனை கூறும் சிறப்புப் பணியிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் திட்டப்பணிக்கு வழிகாட்டும் இன்றியமையாப் பணியை மேற்கொள்ள இத்துறை விரைவு படுத்தப்பட்டுள்ளது. வருமாண்டுகளில், சிறப்பான வகையில் திட்டமிட்ட வளர்ச்சி சகாப்தத்தை அடைவோம் என்று நான் நம்புகிறேன்.

**சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர்த் திட்டங்கள் :**

இந்தக் கோரிக்கையில், ஏனையவற்றுடன், குடிநீர் வழங்கல்-கழிவு நீர்த் திட்டங்களுக்காக, சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள் வழங்குதல், தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வாரியத்தில் பயிற்சி பெறுபவர்களாக அமர்த்தப்பட்ட வேலையற்ற பொறியியல் பட்டதாரிகளுக்குப் படிகள் வழங்குதல் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கம் அடங்குகிறது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| 1. பயிற்சி பெறுவோருக்கு படிகள் அளித்தல் | 4,25,000 |
| **சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள் :** | |
| 2. குடிநீர் வழங்கல் | 42,25,00 |
| 3. கழிவு நீர் அகற்றுதல் | 18,00,000 |



**பயிற்சி பெறுவோருக்குப் படிகள் வழங்குதல் :**

தொழில் நுட்பத் தகுதி பெற்றுள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக 'தொழில் பழகுவோர்' திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. பட்டதாரிகள் 5 பேர், தகுதிப் பட்டயம் பெற்றோர் 55 பேர், கைத்தொழில் கலைஞர்கள் 267 பேர் பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறை இப்போது தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வாரியத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. இந்த வாரியத்தின் கீழும், நகராட்சிகளின் கீழும் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணியமர்த்தப்பட்டிருக்கும் பயிற்சி பெறுவோருக்கு படிகள் வழங்கும் செலவுக்கா, இத்தலைப்பின் கீழ் 1972-73 ஆம் ஆண்டுக்காக ரூ. 5,25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல் :**

குடிநீர் வழங்கலைப் பொறுத்த வரையில் பிற உள்ளாட்சி மன்றங்களைப் போலன்றி, சென்னை மாநகராட்சி சிறப்பு நிலையில் உள்ளது. வீராணம் திட்டம் நீங்கலாக, குடிநீர் வழங்குதலைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக, அரசு, 50 சதவீதம் கடனும் 50 சதவீதம் மானியமும் சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது. மாநகராட்சிக்கு 50 சதவீதம் மானியம் வழங்குவதற்காக இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது 1972-73-ல் தொடர்ந்து வழங்கப்படும்.

**கழிவு நீர்த் திட்டங்கள் :**

சென்னை மாநகரம் வளர்ச்சி பெற்று, விரைவாக விரிவடைந்து வருவதாலும், மக்கள் தொகை நாள்தோறும் உயர்ந்து கொண்டே செல்வதாலும், மாநகரின் துப்புரவுப் பணியை மேம்படுத்தும் கருத்துடன், தற்போதுள்ள மாநகரச் சாக்கடை அகற்றுமுறையினை மேம்படுத்தவும், மாநகரின் விரிவடைந்த பகுதிகளில் புதை சாக்கடைக்கால்களை அமைக்கவும் தேவையேற்பட்டுள்ளது. இக்காரியத்துக்காக மாநகரம் 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின் கீழ், விரிவான அடிப்படையில், இந்த 5 மண்டலங்கள் அனைத்திலும், சாக்கடை அகற்று முறைக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதைத் தவிர, தேவைப்படும் இடங்களில் மழை நீர் வடிகால்கள் கட்டுதல், கழிவு நீரிறைக்கும் நிலையங்களில் எண்ணெய்ப் பொறிகளை எடுத்துவிட்டு அவற்றுக்குப் பதிலாக மின்விசை பேற்றங்களை நிறுவுதல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநகரின்

கழிவு நீர்த் திட்டங்கள் அனைத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,392.71 இலட்சம் ஆகிறது. சென்னை மாநகராட்சியின் நிதிவசதிகள் மிகவும் குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, மழைநீர் வடிகால் திட்டங்கள், நீரிறைக்கும் நிலையங்களில் மின்விசைபேற்றங்களை நிறுவுதல் ஆகியவை நீங்கலாக, பிற வடிகால் திட்டங்கள் அனைத்துக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது, பாதி மானியம், பாதி கடன் அடிப்படையில் அவற்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது வரை சென்னை மாநகராட்சிக்கு கழிவு நீர்த்திட்டங்களின் மேம்பாட்டுக்காக கடனாகவும், மானியமாகவும் வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி ரூ. 587.50 லட்சம் ஆகும். கழிவு நீர்த்திட்டங்களின் பணிகள் பெருமளவு முடிந்துள்ளன. இவை 1973-74 ஆம் ஆண்டு முடிவில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1972–73 ஆம் ஆண்டிற்காக, கழிவு நீர்த் திட்டங்களுக்கு ரூ. 58.00 லட்சம் மட்டும் ஒதுக்கித்தர அரசு கருதியுள்ளது. அதாவது, ரூ. 40.00 இலட்சம் கடனாகவும், ரூ. 18.00 லட்சம் மானியமாகவும் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி இந்த நிதி ஒதுக்கத்தைத் தவிர, இயன்ற அளவு ஆயுள் காப்பீட்டுறுதி கழகத்திடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், பெறும் கடன்களைப் பயன்படுத்த ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அதனைகொண்டே கழிவு நீர்த் திட்டப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற இயலும். மாநகர நீர்வழிகள் தூய்மை கெடுவதைத் தவிர்க்கும் கருத்துடன், தொடர்ந்து நிறைவேற்றப் பட்டு வரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முதலிடம் தரப்பட வேண்டும் என்று மாநகராட்சியிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது. மேலும், 1972-73-இல் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 58.00 இலட்சம் தொகை அக்காரியத்துக்காகவே பயன் படுத்தப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

1971-72-ஆம் ஆண்டில், குடிநீர் வழங்கும் திட்டத்துக்காக ரூ. 22,12,000 கடனும், ரூ. 34.50 இலட்சம் மானியமும் அரசு ஒதுக்கியுள்ளது. 1972-73-ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு வரவு-செலவுத்திட்ட செயற்குறிப்பு களில் ஒதுக்கக் கருதப்பட்டுள்ள கடன்களும் மானியமும் வருமாறு—

| | |
|---|---|
| கடன் | ரூ. 18. லட்சம் |
| மானியம் | ரூ. 42.25 லட்சம் |



தமிழ்நாட்டில் 1962-63 லிருந்து ஒவ்வோராண்டிலும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்று செலவிடப்பட்ட தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு | செலவிடப்பட்ட தொகை. ரூ. லட்சத்தில். |
|---|---|
| 1962-63 | 210.64 |
| 1963-64 | 241.41 |
| 1964-65 | 289.43 |
| 1965-66 | 362.07 |
| 1966-67 | 502.16 |
| 1967-68 | 519.25 |
| 1968-69 | 595.60 |
| 1969-70 | 748.05 |
| 1970-71 | 880.08 |
| 1971-72 | 1,168.38 (திருத்த மதிப்பீடுகள்) |
| 1972-73 | ரூ. 12,46,60,800 (1972-73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) |

தமிழ்நாடு நீர் வழங்கல்—வடிகால் வாரியம்.

நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக, குடிநீர் வழங்கல், போதிய வடிகால் வசதி செய்து கொடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் அரசின் கவனத்தைச் சிறிது காலமாக ஈர்த்து வருகிறது. குடிநீர் வழங்கல், வடிகால் திட்டப் பணிகளை, முன்னர் பல்வேறு துறைகள் புரிந்து வந்தன. குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்களைப் பயன் தரத்தக்க விதத்தில் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு, இத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து, பணிகள் குறித்துத் திட்டங்கள் தயாரித்து, நிறைவேற்றுவதற்காக, இது குறித்த பணிகள் அனைத்தும் ஒரு தனித் துறையின் ஆட்சி எல்லை வரம்பிற்குள்ளும், கட்டுப்பாட்டின் கீழும் கொண்டு வருவது தேவையான ஒன்று என்று அரசு தீர்மானித்தது. அதற்கிணங்க, மேற்கூறிய நோக்கங்களை எய்த, தமிழ்நாடு நீர் வழங்கல்-வடிகால் வாரியமானது அமைக்கப்பட்டது.

சட்டப்படியான தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனமாக இவ்வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு அமைக்கப்பட்டால், இப்பணிகள் குறித்து [illegible] திட்டமிட்டு, ஆய்வு செய்து அவற்றைச் செயற்படுத்த இயலும் என்றும், மேலும், இயன்ற வரையில், குறைந்த கால அளவில், தமிழ்

நாட்டிலுள்ள நகர்ப்புற பகுதிகள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்கல்-வடிகால், வசதிகளுக்கு வகை செய்யும் நோக்கத்தோடு, நிதி உதவி நிறுவனங்கள், வெளிச் சந்தைகள் ஆகியவற்றிலிருந்து கணிசமான அளவிற்கு நிதி உதவி பெறுவதற்கு இவ்வாரியத்திற்கு இயலும் என்றும் அரசு கருதியது. அதற்கிணங்க தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நீர்வழங்கல்-வடிகால் வாரியச் சட்டத்தின்கீழ் (1971-ஆம் ஆண்டு 4-வது சட்டம்), 14-4-1971 ஆம் நாள், தமிழ்நாடு நீர்வழங்கள்-வடிகால் வாரியமானது அமைக்கப்பட்டு, நீர் வழங்கல்--வடிகால் பணிகள் குறித்துத் திட்டங்கள் தயாரித்து, ஆய்வு செய்து, செயல்படுத்துவதற்குள்ள அதிகாரங்களும், அலுவல்களும் ஒப்படைக்கப்பட்டன.

## இணைப்பு 3

### கோரிக்கை 38. பொதுச் சுகாதாரம் பற்றிய மூலதனச் செலவுக் கோரிக்கை

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் இனங்கள் அடங்கும் :—

| | | |
|---|---|---|
| (i) (a) பணிகள் | ரூ. | 45,04,000 |
| (ii) (b) உதவி மானியங்கள் | ரூ. | (—) 77,700 |
| (iii) (c) வளர்ச்சிப் பணித்திட்டங்கள் | ரூ. | 100 |
| பெருந்தலைப்பு மொத்தம் | ரூ. | 44,26,400 |
| கூட்டுக—அனுமதிக்கப்பட்ட வசூல் தொகைகள். | ரூ. | 77,700 |
| பெருமொத்தக் கோரிக்கை | ரூ. | 45,04,100 |

இனம் (i) (a) பணிகள் ரூ. 45,04,000.

நகராட்சிகள், ஊராட்சிகளைச் சேர்ந்த குடிநீர்வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்காக, அங்காடியில் எளிதில் கிடைக்காத குழாய்களையும், ஏனைய பொருள்களையும் வாங்கிப் போதிய அளவுக்கு சேம இருப்பு வைப்பது வழக்கமாகும். குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டங்களுக்காகப் பயன்படுத்துகிற குழாய்களுக்காகும் செலவு தணிக்கைச் சரிக்கட்டுதல் மூலம் அந்தப் பணித் திட்டங்களுக்குப் பற்று



எழுதப்பட்டுச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றது. சேம இருப்பு வைத்துள்ள குழாய்கள் செலவாக செலவாகப் புதிய குழாய்கள் வாங்கி இருப்பு நிறைவு செய்யப்படுகிறது. இப்பணியினைச் செய்து வரும் பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கு--கழிவுநீர் அகற்று வாரியத்தின் ஓர் அங்கமாகி விட்டது. இந்த வாரியம் சட்டப்படி அமையப்பெற்ற ஓர் அமைப்பாக 1971 ஏப்ரல் 14-ம் நாள் முதல் செயல்படுகிறது. அரசுக்கும் வாரியத்திற்கும் இடையே இருப்பும் பொறுப்பும் இன்னும் முடிவாக வில்லையாதலால், குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பாக இருந்த பற்றுக்களைத் தீர்ப்பதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இனம் (ii) (b) உதவி மானியங்கள் ரூ. (—) 77,700.

சென்னை மாநகராட்சி அதன் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுப் பணித் திட்டங்களுக்காக அதற்கு உதவி மானியங்கள் கொடுப்பது குறித்து ஏற்படும் செலவு 1956–57, 1957–58 ஆண்டுகளில் முதலில் மூலதனக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது. இச் செலவு 15 ஆண்டுகளில் மூலதனக் கணக்கிலிருந்து ரெவின்யூக் கணக்குக்கு மாற்றி எழுதப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இதற்கு நிகரான தொகை "30. பொதுச் சுகாதாரம்" என்பதன் கீழ் (+) நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

இனம் (iii) (c) வளர்ச்சிப் பணித் திட்டங்கள் ரூ. 100.

இப்போது நடைமுறையில் இல்லாத கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள், தேசியக் குடிநீர் வழங்கு-துப்புரவு (கிராமப்) பணித் திட்டங்கள் ஆகியவையெல்லாம் சேர்ந்த அடங்கல் திட்டத்திற்காகும் செலவு இத் தலைப்பிற்குப் பற்று எழுதப்பட்டது. அவற்றின் கணக்குகள் முடிவாகத் தயாரிக்கப்படுவதற்கு வசதியாக இத்தகைய பணித் திட்டங்கள் குறித்து சில சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு இப்போது செய்துள்ள நிதி ஒதுக்கம் வகை செய்கிறது.

## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-heading are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill (s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee (s) ', ' Council (s) ', ' Corporation (s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad.Motion—Adjournment Motion.

Ann.—Announcement.

B.O.H.—Business of the House.

C.A.—Calling Attention to a Matter of Urgent Public Importance.

C.A.St.—Calling Attention Statement.

Consid.—Consideration stage of a Bill.

This stage includes :

(i) Motion to refer to Select/Joint Select Committee.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.
(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl.—Consideration of clauses of a Bill.
D.E.E.—Demands for Excess Expenditure.
Dis. S.D. or D.S.D.—Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.—Demands for Supplementary Grants.
G.A.—Governor's Address.
G.D.—General Discussion.
H.A.H. Dis./H.H.D.—Half-hour Discussion.
Int.—Introduction stage of a Bill.
L.A.—Legislative Assembly.
L.C.—Legislative Council.
M.—Motion.
P.M.—Privilege Motion.
R/Res. Resolution.
St.—Statement.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

13TH, 14TH, 15TH AND 17TH MARCH 1972.

VOLUME XVIII (Nos. 1 to 4).

## A


PAGES

ALAGARSWAMY, THIRU S.—

Budget, 1972-73, Voting: Police ... ... ... 617-620

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1972-73, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 90-98 [illegible]

Industries, Capital Outlay on Industrial Develvopment, Administration of Justice, Jails ... [illegible] 288-291 [illegible]

PAGES.

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*

Budget, 1972-73, Voting—*cont.*

Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 753,760, 761,767–776,819, 837,842

Police ... ... ... ... ... ... 554–565 592,636, 642,664, 674,685

Hunger strike by employees of Swadesamitran for re-opening (A.M.) ... ... ... ... 225, 228–229,231

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1972–72, Voting:

Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 752, 753 754,759–760,761 769,770 771,772 774,775 776,784 791,792 796,798 799–800 818,820 830–847

ANNAMALAI, THIRU C.V.M.—

Budget, 1972-73, Voting: Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... 763–767

ANNA SQUARE—

Development into a beautiful garden ... ... 525–528



A—*cont.*

PAGES

ARANGANNAL, THIRU RAMA—

Budget, 1972-73, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, commuted value of pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 79, 80

Island Grounds, construction of buildings (C.A.) ... 232

ARCHAEOLOGY—

Archaeology Department: Compilation of book of findings ... ... ... ... ... 507–510

Constitution of Special Section for historical monuments and excavations ... ... ... 506–510

B

BEGGAR HOMES—

Location ... ... ... ... ... 516–518

BEGGARS—

Assistance to orphanages from Beggar Rehabilitation Fund, financial assistance to orphanages ... 521–523

Rehabilitation scheme, implementation ... ... 519–521

BILL(S)—

Betting Tax (Amendment) Bill, 1972 (Int.) ... 225

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972—

Int. ... ... ... ... ... ... ... 752

Message from the Governor ... ... 752

PAGES

**BOARD(S)—**

Devaswom Board, Kanyakumari, continuance of member appointed by Maharaja of Travancore ... 495–497

Education Board (autonomous), request from Asiriar Sangam *re* constitution of ... ... ... 497–498

Khadi and Village Industries Board:
High-Rank officials, reduction in number ... 216–220

Khadi-Village Industries Board is renaming as Billage Industries Board ... ... ... 221–223

BOMMAN, THIRU K. H.—

Saw mill, Opening at Gudalur ... ... ... 743

BOOKS AND PUBLICATIONS—

Distribution of books to poor students free of cost 498–500

Text Books (nationalised), direct distribution to schools ... ... ... ... ... 500–502

BRIDGE(S) AND CULVERT(S)—

Bridge across Varaga Nadhi, near Sathiamangalam broadening ... ... ... ... ... 18

Poondi Varavukal, Tiruvallur taluk, construction of culvert over ... ... ... 18–19

BUILDING(S)—

Inspection Bungalow for Pallipet, construction ... 213

C

**CALLING ATTENTION—**

Island Grounds, construction of buildings ... ... 232–233

**CHAIR—**

Announcements:

**Estimates Committee, election to** ... ... 233

**Public Accounts Committee, election to** ... ... 234



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations:

Adjournment Motions:

Hunger strike by employees of the SWADESAMITRAN:

Consent was withheld on the ground that there was no need for the motion after the clarification by the Minister for Labour ... 232

Strike in Simpson Group of Companies and its consequences:

Consent was withheld on the ground that there was no need for the motion after the clarification by the Chief Minister ... 83

Demands for Grants:

After a Minister's reply to the discussion on a Demand for Grant, members desirous of seeking clarification can do so by means of putting a question and not by making a speech ... ... ... ... ... 108

Deputy Speaker, identification with a party:

On a Member commencing his supplementary "Mr. Deputy Speaker, though our Kazagam Government did not like such posters..." the Deputy Speaker observed that inasmuch as the whole House did not belong to one party, the expression 'our' might include the Deputy Speaker too, and hence was not in order, as the Deputy Speaker should not join any party ... 718

Expression used in the House:

"Anachronism" in the sentence "... It (Upper House) has become an anachronism" held to be not in order ... ... 725

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Questions and Answers:

Supplementary Questions:

Relevancy:

Supplementary questions should relate to the main question ... ... ... 744

It is not necessary, to make a statement and then put a supplementary. A supplementary should be put direct ... ... ... ... ... 219

Matters of policy which had to be discussed during the discussion on the relevant Demand for Grant should not be raised during question hour ... 504

Members putting supplementaries on the reply to an earlier supplementary question need not repeat the Minister's answer to the earlier supplementary question but they might just put the supplementary straight. ... ... ... ... ... 504

Minister's request for postponement:

When the Chair took up a question in the order paper addressed to a Minister, another Minister stated that the Minister was not present. A Member enquired whether the Minister had requested the postponement of the question which had been included in the order paper as otherwise it would be embarassing to them.

The Chair observed that if the Ministers could not be prtsent due to unavoidable reasons they could request for the postponement of the question as that would be in keeping with the dignity of the House ... ... ... ... ... 9

CHEZHIYAN, THIRU KOVAI—

Budget, 1972-73, Voting:

Police ... ... ... ... ... ... 550-554





PAGES

CHINNARAJU, DR. S. A.—

Budget, 1972-73, Voting:

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... ... 813-816

COLLEGES—

Medical Colleges, introduction of—Post-Graduate Diploma Course in Psychiatry ... ... ... 736-737

COMMITTEE(S)—

Estimates, election (M) ... ... ... ... 283

Public Accounts, election (M) .. ... ... 284

CO-OPERATIVES—

State Palmgur Co-operative Federation, closure ... 216

Vegetables, sale on Co-operative basis ... ... 216

D

DENNIS, THIRU N.—

A.U.M. Canal in Kanyakumari district, total area for boat passage ... ... ... ... ... 16-17

Contracts exceeding one lakh of rupees by Highways Department, number ... ... ... 528-532

Drinking water supply scheme, Krishnagiri ... 195-197

Lands (Government) in Gudalur taluk, details re encroachment ... ... ... ... ... 212-213

Prisoners, distribution of Pongal pockets ... 208-209

Women and Children Hospital, Egmore, opening of Tubectomy ward in ... ... ... ... 6-7

DISEASES—

Eye disease, caution to District Hospitals about epidemic ... ... ... ... ... ... 202-204

Eye disease, treatment given in city during May ... 204

PAGES

DURAI MURUGAN, THIRU—
Budget, 1972–73, Voting:
Police ... ... ... ... ... ... 556–557
620–625

DURAISAMY, THIRU E. K.—
Budget, 1972–73, Voting:
Indusries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ... ...
Jails ... ... ... ... ... ...
259–262

DURAISWAMY, THIRU S.—
Anupparpalayam–Samundipuram road, etc., representation re taking over ... ... ... ... 528
Harijan Colony, Peddachettipuram, assignment of land ... ... ... ... ... ... 24–25
Headquarters Hospital, Coimbatore, increase children's bed strength ... ... ... ... ... 512–513
Budget, 1972–73, Voting:
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ... ...
Jails ... ... ... ... ... ...
251–255
Lands assigned to landless poor in Coimbatore district, extent ... ... ... ... ... ... 207–208
Nutrition programme in Tiruppur town, details ... 205–206

E

EDUCATION—
Agricultural science, introduction in High Schools ... 725–727

EMPLOYEES—
Maistries (Special) in P.W.D., pay revision ... 214
Town Planning Inspectors, pay revision ... ... 735–736



PAGES

EXPUNCTION—
Budget, 1972–73, Voting:
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 804

F

FACTORIES—
Rubber factory, starting ... ... ... ... 209–212

FAMILY PLANNING—
Documentary Film, production by department ... 3–6
Tubectomy ward in Women and Children Hospital, Egmore, opening ... ... ... ... ... 6–7

FINANCIAL BUSINESS:
Budget 1972–73, Voting:
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 89–118
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ... 235–315
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ...
752–848
Police ... ... ... ... ... ... 540–685

FIRE SERVICE.
Fire Service Station at Gingee, opening ... ... 1

PAGES

FOWLER, Thirumathi, Alda, M.,

Budget 1972–73, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pension, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 40–41

Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 785–787

Police ... ... ... ... ... ... 581

FUNDS

Chief Minister's Fund, donation to Bharat Sevak Samaj ... ... ... ... ... ... 725

G

GANAPATHY, Thiru T.,

Panchayats without Harijan Members, number ... 784–785

GOPAL, Thiru K. P.,

Budget 1972–73, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensasion to Zamindars, Commuted value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... 40–51



H.

PAGES

HANDE, Dr. H. V.

Budget, 1972–73, Voting:

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Deparement, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 33, 37, 38, 107, 108

Industries, ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development, ...
Administration of Justice ... ... ... ...
Jails ... ... ... ... ... ... 235, 236, 237, 291–296

Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 753, 816–822 844

Police ... ... ... ... ... ... 540, 571, 578–581, 587, 588 680–681

Houses for Government servants, Construction in Perambalur ... ... ... 742–748

Hunger strike by employees of Swadesamitran for its re-opening (A.M.) ... ... ... 225–226

Water-supply in South Madras area, increase in pressure ... ... ... ... ... 732–733

H.—cont.

| | PAGES |
|---|---|
| HARIJAN WELFARE. | |
| Harijans, Andipalayam, acquisition of land for house sites ... ... ... ... ... ... | 739–740 |
| Harijan in Tirunelveli District, supply of pumpsets | 206–207 |
| Harijans, Mathipatti, Construction of overhead tank for drinking water ... ... ... ... ... | 740–741 |
| House-sites for Harijans of Pennalupet Sub-Taluk, stage of acquisition and allotment ... ... | 26 |
| House-sites to Harijan people in Gummudipoondi Sub-taluk, stage of acquisition and allotment ... | 25–26 |
| Harijan Colony, Peddachettipuram, assignment of lands ... ... ... ... ... ... | 24–25 |
| HOSPITAL(S) AND DISPENSARIES. | |
| Coimbatore headquarters hospital, increase in childrens' bed-strength ... ... ... ... | 512–513 |
| Dispensary (Government), Manelmedu, Power connection ... ... ... ... ... | 515–516 |
| Headquarters Hospital, Tirumangalam, expansion | 514 |
| Hospital at Mayuram, scarcity of water ... ... | 515 |
| Hospital at Panjapatti, extension ... ... ... | 201 |
| Hospital at Sulur, expansion ... ... ... | 738 |
| Hospital (Government), Kulitalai, extension ... | 200–201 |
| Hospital (Government), Theni, expansion and increase of doctors ... ... ... ... | 7–8 |
| Ophthalmic hospital, new building ... ... | 205 |
| Primary Health Centre, Semmipalayam, stoppage of construction of building ... ... ... | 738 |
| Primary Health Centre, Vellakkoil, conversion into hospital ... ... ... ... ... | 7 |
| Raja Mirasdar Hospital, Thanjavur, number of beds in T.B. Block ... ... ... ... ... | 8–9 |
| Raja Mirasdar Hospital, Thanjavur, transfer of District Tuberculosis Control Centre to hospital at Nagapattinam ... ... ... ... ... | 8–9 |
| Women and Children Hospital, Egmore, opening of Tubectomy Ward ... ... ... ... ... | 6–7 |



H.—cont.

| | PAGES |
|---|---|
| HOSTEL(S). | |
| Law College students, representation re. Construction of new hostel ... ... | 731–732 |
| HOUSING. | |
| Government Servants, Construction of houses in Perambalur ... ... ... ... ... | 742–743 |
| Hut-dwellers, Ayodya Kuppam, rehabilitation ... | 720–721 |

I.

| | |
|---|---|
| INDUSTRIES. | |
| Cycle factory in Tamil Nadu in Co-operative sector, setting up of. ... ... ... ... ... | 525 |
| Textile Mills (taken over), amount due from National Textiles Corporation ... ... ... ... | 742 |
| IRRIGATION. | |
| Ground water sources, finding ... ... ... | 532–533 |
| Lake fed by Palar river, number ... ... ... | 214–215 |
| Tanks, appointment of Special Officers for regulation of water distribution system ... ... ... | 17–18 |
| Tube wells organisation, details re. ... ... | 533–535 |
| ISLAND GROUND. | |
| Buildings, construction (C.A.) ... ... ... | 232–233 |

J

| | |
|---|---|
| JAILS. | |
| Prisoners, distribution of Pongal packets ... ... | 208–209 |
| JAMES, THIRU J.— | |
| Budget 1972–73, Voting: | |
| District Administration and Miscellaneous Famine relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, | |

PAGES

JAMES, THIRU J. —cont.

Budget, 1972–73, Voting.—cont.

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 33, 35, 36, 37, 38, 68–72, 108–109, 112

Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ... ...
Jails ... ... ... ... ... ... 236, 238, 312–313
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 753

Police ... ... ... ... 610, 611, 612, 625–630

Hunger strike by employees of Swadesamitran for its re-opening (A.M.) ... ... ... ... 225

Rubber factory, starting ... ... ... ... 209–212

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI.

Budget 1972–73, Voting :

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 77–80

Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 754–768, 843



PAGES

KADHER BATCHA (alias) VELLAICHAMY.

Budget, 1972–73, Voting :

Police ... ... ... ... ... ... 634–638

KANDASAMY, THIRU C., MANALI.

Budget, 1972–73, Voting :

Police ... ... ... ... ... ... 540–550

Hindi Pandits, provision of employment opportunity ... ... ... ... ... 510–512

KANDASAMY, THIRU K. P.,

Budget, 1972–73, Voting :

Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ... 272–275

KANDASWAMY, THIRU K.,

Budget, 1972–73, Voting :

Police ... ... ... ... ... ... 597–601

KARTHEESAN, THIRU V.,

Budget, 1972–73, Voting :

Police ... ... ... ... ... ... 615–617

KARUNANIDHI, DR. M.

Budget, 1972–73, Voting :

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... 95, 96, 108

PAGES

KARUNANIDHI, Dr. M.—*cont.*

Budget, 1972-73, Voting.—*cont.*

Police ... ... ... ... ... ... 540, 555, 557, 559, 560, 627, 628, 649, 661-685

Estimates Committee, election (M) ... ... 283

Island Grounds, construction of buildings (C.A. St.) 282-283

Public Accounts Committee, election to (M) ... 284

Simpson Group Companies, continued strike and consequent suffering of workers ... ... 80-82

KATHIRAVAN, Thiru K. M.

Kanyakumari Devaswom Board, continuance of member, appointed by Maharaja of Travancore 459-497

KAVERIMANIAM, Thiru C.

Budget, 1972-73, Voting:

Police ... ... ... ... ... 630-633

KITTAPPA, Thiru N.—

Anna Square, development into a beautiful garden 525-528

Archaeology Department, compilation of book of findings ... ... ... ... ... 507-510

Books, distribution to poor students free of cost ... 498-500

Budget, 1972-73, Voting:

Police ... ... ... ... ... ... 569-573

Dispensary (Government), Manalmedu, power connection ... ... ... ... ... 515-516

Eye disease, treatment given in City during May ... 204

Family Planning, production of documentary film by department ... ... ... ... 3-6

Ground water sources, finding ... ... ... 582-583



PAGES

KITTAPPA Thiru. N.—*cont.*

Hospital at Mayuram Water Scarcity ... ... 515

Kalyana Chozhapuram Religious Endowment, value of properties ... ... ... ... ... 224-225

Khadi and Village Industries Board, high rank officials, reduction in number ... ... ... 216-220

Khadi and Village Industries Board, renaming as Village Industries Board ... ... ... 221-223

Maistries (Special) in P.W.D., pay revision ... 214

Ophthalmic hospital, new buildings ... ... ... 205

Raja Mirasdar Hospital, Thanjavur, number of beds in T.B. Block ... ... ... ... ... 8-9

Raja Mirasdar Hospital, Thanjavur, transfer of District Tuberculosis Control Centre to hospital at Nagapattinam ... ... ... ... ... 8-9

Repatriates (Burma) at Madras, construction of permanent building for shops run by ... 27

State Palmgur Co-operative Federation, closure ... 216

Temples at Palam, etc., system of sending Vibudhi Prasadam by post after Archana ... ... 535-539

Text books (nationalised), direct distribution to schools ... ... ... ... ... ... 500-502

Transport (State), introduction of express bus from Mayuram to Tirunelveli ... ... ... 22-24

Transport (State), plying of buses from Mayuram to Madurai ... ... ... ... ... 27-28

Transport (State) Service, plying of a bus from Mayuram to Gudalur ... ... ... ... 21-22

Vegetables, sale on co-operative basis ... ... 216

Water-supply scheme, Mayuram expenditure incurred ... ... ... ... ... ... 200

K—*cont.*

KOTHANDARAMIAH, THIRU K. S.
Budget, 1972–73, Voting :
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 33, 37, 56–61
Industries, Capital Outlay on Industrial Development, Administration of Justice, Jails ... 235

KRISHNAN, THIRU K. R.
Budget, 1972–73, Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 793–795

KUMARASWAMY, THIRU K. N.
Beggar Rehabilitation Fund, financial assistance to orphanages ... ... ... ... ... 521–523
Beggar Rehabilitation Scheme, implementation ... 519–521
Hospital at Sulur, expansion ... ... ... 738
Press (Government) workers, free supply of tea and bread ... ... ... ... ... ... 738–739
Primary Health Centre, Semmipalaya, stoppage of construction of building ... ... ... 738

L.

LABOUR—
Press (Government) workers, free supply of tea and bread ... ... ... ... ... ... 738–739
Transport (State) workers, bonus ... ... 744–751

LAND(S)
Assignment to landless poor in Coimbatore district, extent ... ... ... ... ... ... ... 207–208
Forest lands, Karadikulam, distribution to poor ... 743–744



L—*cont.*

PAGES

LAND(S)—*cont.*
Government lands in Gudalur taluk, details re encroachment ... ... 212–213
Lease patta lands in Kanyakumari district, issue of patta ... ... ... ... ... ... 523–524

LATHEEF, THIRU M. A.—
Budget, 1972–73, Voting :
Police ... ... ... ... ... ... 596–597, 653, 654
High School (Government) at Mittur, complaint re money collected by Building Committee ... 506
Uranium deposits, occurrence in Javvadhu Hills area ... ... ... ... ... ... 524–525

LEGISLATURE—
Legislative Council, abolition ... ... ... 721–724

M

MADHAVAN, THIRU S.—
Budget, 1972–73, Voting :
Industries, Capital Outlay on Industrial Development, Administration of Justice, Jails ... 235, 236, 237, 266, 296–314
Police ... ... ... ... 560–561, 562–563, [illegible]
Hunger strike by employees of Swadesamitran for its reopening (A.M) ... 231
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 ... ... ... ... ... ... 752

PAGES

MALAICHAMY, THIRU P.—
Archaeological Department, constitution of Special section for historical monuments and excavations. 506–510
Beggar homes, location ... ... ... ... 516–518
Police Force, recruitment of women ... ... 1–3

MANIAN, THIRU P. S.—
Nurses' badges, change in letters ... ... 737–738

MARIMUTHU, THIRU M.—
Budget, 1972–73, Voting :
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... 74–77

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1972–73, Voting :
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 37, 38
Industries, Capital Outlay on Industrial Department, Administration of Justice, Jails ... 236, 247–250

MILLS—
Saw Mill, opening at Gudalur ... ... ... 742
Shanmugar Mills, Rajapalayam, demonstration for re-opening ... ... ... ... ... 741



PAGES

MINES AND MINERALS—
Uranium deposits, occurrence in Javvadhu Hills area ... ... ... ... ... ... 524–525

MOHIDEEN, TIRUPPUR, THIRU A. M.—
Budget, 1972–73, Voting :
Industries, Capital Outlay on Industrial Development, Administration of Justice, Jails ... 262–267

MOTION (S)—
Ad. Motions :
Hunger strike by employees of Swadesamitran for its re-opening ... ... 225–232
Simpson Group Companies continued strike and consequent suffering of workers ... 29–33
Estimates Committee, election ... ... ... 283
Public Accounts Committee, election ... ... 284

MUNUSAMY, THIRU R. R.—
Bridge across Varaga Nadhi, near Sathiamangalam, broadening ... ... ... ... 18
Fire Service Station at Gingee, opening ... 1

MUTHIAH, THIRU M.—
Elementary Schools (new), permission to start ... 505–506
Forest lands, Karadikulam, distribution to poor ... 743–744
Harijans in Tirunelveli district, supply of pumpsets. 206–207
Village Officers, action taken against ... ... 208

N.

NAINAMALAI, DR. R.—
Budget, 1972–73, Voting :
Industries, Capital Outlay on Industrial Development, Administration of Justice, Jails ... 242–246

## N—*cont.*


PAGES

**NATARAJAN, THIRU N. V.—**
- Hunger strike by employees of Swadesamitran for its re-opening (A.M.) ... ... ... ... 229–231

**NURSES—**
- Badges, change in letters ... ... ... ... 787–788

## O.

**OFFICERS—**
- Village Officers, action taken against ... ... 203

**OFFICES (GOVERNMENT)—**
- Deputy Tahsildar's Office, Valparai, construction of buildings ... ... ... ... ... 16

## P.

**PALANIAPPAN, DR. S. M.—**
- Budget, 1972–73, Voting—
  - Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 807–810
  - Police ... ... ... ... ... 601–602

**PALANISAMI, THIRU M.—**
- Primary Health Centre, Vellakkoil conversion into hospital. ... ... ... ... ... 7

**PALANISAMI, THIRU N. K.—**
- Board of Education (autonomous) request from Asiriar Sangam re. constitution of ... ... 497–498
- Post-Graduate Diploma course in Psychiatry, introduction in Medical colleges ... ... 736–737

**PANCHAYATS—**
- Number without Harijan Members ... ... 734–735

**PANDURANGAM, THIRU C.—**
- Budget, 1972–73, Voting—
  - Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 800–804




## P—*cont.*


PAGES

**PAPERS LAID ON THE TABLE—**
- Agricultural Produce Markets Act, 1959, notification ... ... ... ... ... 113
- Co-operative Societies Act, 1961, notifications 113–686
- Demand under Capital Outlay on Schemes of Government Trading (Food), speech by Minister (English and Tamil) ... ... ... ... 315
- Demands under Land Revenue, Policy Note (English and Tamil) ... ... ... ... 315
- District Municipalities Act, 1920, notifications 315–686
- Entertainments Tax Act, 1939, notifications 113, 848–849
- Industrial growth in Tamil Nadu—Handloom and Textile and Sugar Industries, 1971–72, review (English) ... ... ... 316
- Industrial growth in Tamil Nadu, Industrial finance, 1971–72, review (English) ... 316
- Industrial growth in Tamil Nadu—Major Industries, 1971–72, review (English) ... ... ... 316
- Industrial growth in Tamil Nadu—Mineral Development, 1971–72, review (English) ... 316
- Industrial growth in Tamil Nadu—Small Scale Industries, 1971–72, review (English) ... 316
- Industries Demand, Performance Budget ... 687
- Legislative Council, resume of work transacted during fortieth session ... ... ... ... 687
- Pamphlets on Government owned corporations ... 687
- Pamphlets on Housing in Tamil Nadu, 1971–72 (English and Tamil) ... ... 316
- Pamphlets on Slum Clearance in Tamil Nadu, 1971–72 (English and Tamil) ... ... ... ... 316
- Police review for 1971–72 (English and Tamil) 849
- Reviews on Industrial growth (Tamil) ... ... 686–687
- Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956, notification ... ... ... 686
- Welfare programmes for Women and Children (English and Tamil) ... ... ... ... 114

P—*cont.*


| | PAGES |
|---|---|
| PAULIAH, THIRU A.— | |
| Budget, 1972-73, Voting—Police ... ... | 607-610 |
| POLICE— | |
| Police Station, Ammapettai, building ... ... | 3 |
| Women, recruitment of ... ... ... ... | 1-3 |
| PONNAPPA NADAR, THIRU R.— | |
| Budget, 1972-73, Voting— | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... | 771<br>822-829 |
| Police ... ... ... ... ... ... | 587<br>611-612<br>645-661<br>674 |
| Kanyakumari Devaswom Board, continuance of member appointed by Maharaja of Travancore | 495-497 |
| Posters demanding Independent Tamil Nadu, police action ... ... ... ... ... | 715-720 |
| POSTERS— | |
| Demanding Independent Tamil Nadu, Police action | 715-720<br>715-720 |
| PUBLIC HEALTH— | |
| Nutrition programme in Tiruppur town, details | 205-206 |


R.


| | |
|---|---|
| RAJA, THIRU A.M.— | |
| Budget, 1972-73, Voting— | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Captal Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... | 53-56 |
| Tamil Professors, appointment in upgraded Government colleges ... ... ... ... ... | 729-730 |




R—*cont.*


| | PAGES |
|---|---|
| RAJAH PILLAI, THIRU V.K.— | |
| Lands assigned as lease patta lands in Kanyakumari district issue of patta ... ... ... ... | 523-524 |
| RAJAGOPAL, THIRU V.— | |
| Budget, 1972-73, Voting— | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading. ... ... ... ... ... | 52-53 |
| RAJARAM, THIRU G.— | |
| Budget, 1972-73, Voting.— | |
| Police ... ... ... ... ... ... | 582-583 |
| RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.— | |
| Budget, 1972-73, Voting.— | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... | 46-49 |
| RAMANATHAN, THIRU S.— | |
| Budget, 1972-73, Voting.— | |
| District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading. ... ... ... ... | 66-68 |
| Tanks, appointment of Special Officers for regulation of water distribution system ... | 17-18 |

PAGES

RAMASWAMY, THIRU E.—

Deputy Tahsildar's Office, Valparai, construction of building ... ... ... ... ... ... ... 16

RELIGIOUS ENDOWMENT—

Kalyana Cholzhapuram Religious Endowment, value of properties ... ... ... ... ... 224–225

REPATRIATES—

Burma Repatriates at Madras, construction of permanent building for shops run by ... ... 27

ROAD (S)—

Anupparpalayam—Samundipuram Road, etc., representation re. taking over ... ... ... 528

By-pass roads from Tiruchirappalli Road and Avanashi road reaching Coimbatore Town, construction ... ... ... ... ... ... 19–20

Contracts exceeding one lakh of rupees by Highways Department, number ... ... 528–532

Karamadai—Velliyangadu road improvement scheme, implementation ... ... ... 19

S.

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Hut-dwellers, Ayodya Kuppam, rehabilitation ... 720–721

SCHOOL (S)—

Elementary (new), permission to start ... 505-506

Elementary, opening in villages ... ... 502–508

High School (Government) at Mittur, complaint re. money collected by Building Committee ... 506

Municipal High School, Mettupalayam, taking over 727–728



PAGES

SHANMUGAM, THIRU, P. U.—

Betting Tax (Amendment) Bill, 1972 ... ... 235

Budget, 1972–73, Voting—

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous, Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... 33, 34, 35, 36, 37, 38, 39–40, 86, 93, 99–108, 109, 112

SIVAPERUMAL, THIRU G.—

Budget, 1972–73, Voting—

Industries, Capital Outlay on Industrial Development, Administration of Justice, Jails ... 278–283

SOMASUNDARAM, THIRU N.—

Police Station, Ammapettai, building ... ... 8

SOUNDARAPANDIAN, THIRU P.—

Budget, 1972–73, Voting—

Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... 778–780

Harijans, Andipalayam, acquisition of land for house sites ... ... ... ... 739–740

Harijans, Mathipatti, construction of overhead tank for drinking water ... ... ... 740–741

Hospital at Panjapatti, extension ... ... ... 201

Hospital, (Government), Kulitalai, extension ... 200–201

Overhead tank, Sirugamani Panchayat ... 734

PAGES

STATE TRANSPORT—
Housing facilities for workers, provision ... 20-21

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1972-73, Voting—
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 85-90

SUBRAMANIAM, THIRU A.—
By-pass roads from Tiruchirappalli Road and Avanasi Road reaching Coimbatore Town, construction ... ... ... ... ... ... 19-20
Textile Mills (taken over), amount due from National Textiles Corporation ... ... ... 742

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1972-73, Voting:
Industries ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ...
255-259

SUGAR.
Price (retail), increase ... ... ... ... 9-16

SUNDARA BHARATHI, THIRU SOWDI, S.—
Budget, 1972-73, Voting:
Industries ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ...
267-272



PAGES

SUNDARA BHARATHI, THIRU SOWDI, S.—cont.
Budget, 1972-73, Voting—cont.
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ...
804-807
Police ... ... ... ... ... ... 610-615, 648
Posters demanding Independent Tamil Nadu, police action ... ... ... ... ... 715-720

SUPPU, THIRU K.—
Budget, 1972-73, Voting:
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ...
753, 795-800
Hostel (new) for Law College students, representation re. construction ... ... ... ... 731-732
Water scarcity at Virudhunagar, measures to combat ... ... ... ... ... ... 198-200

SURENDRAN, THIRU M.—
Budget, 1972-73, Voting—
District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 61-65, 105
Industries ... ... ... ... ... ...
Capital Outlay on Industrial Development
Administration of Justice ... ...
Jails ... ... ... ... ...
238-242, 313

S.—*cont.*

PAGES

SURENDRAN, THIRU M.—*cont.*

Budget, 1972–1973, Voting—*cont.*

Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 787–793

Police ... ... ... ... ... ... 602–607

SWAMINATHAN, THIRU A.—

Eye disease, caution to District hospitals about epidemic ... ... ... ... ... ... 202–204

Tubewell organisation, details re. ... ... 533–535

T.

TEACHERS.

Hindi Pandits, provision of employment opportunity 510–512

Tamil Professors, appointment in upgraded Government Colleges ... ... ... ... ... 729–730

Telugu teachers, Tiruttani, employment ... ... 728–729

TEMPLES.

Palani, etc., temples, system of sending Vibudhi Prasadam by Post after Archanai ... ... 585–589

THANGAMANI, THIRU K. T. K.—

Budget, 1972–73, Voting—

District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 34, 35, 36, 39, 41–46



T.—*cont.*

PAGES

THANGAMANI, THIRU K. T. K.—*cont.*

Budget, 1972–73, Voting—*cont.*

Industries
Capital Outlay on Industrial Development ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ... 287, 312

Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 754, 792, 844

Police ... ... ... ... ... 540, 638–645, 666, 667

Headquarters Hospital, Tirumangalam, expansion 514

Hospital (Government), Theni, expansidn and increase of doctors ... ... ... ... 7–8

Hunger strike by employees of Swadesamitran for its re-opening (A.M.) ... ... ... 225, 227–228, 231

Shanmugar Mills, Rajapalayam, demonstration for re-opening ... ... ... ... ... 741

Simpson Group Companies, continued strike and consequent suffering of works (A.M.) ... 29–30

Sugar, increase in retail price ... ... ... 9–16

Town Planning Inspectors, pay revision ... 735–736

THIRUVENGADAM, THIRU THOPPUR.

Budget, 1972–73, Voting:

Police ... ... ... ... ... ... 565–569, 606

Lakes fed by Palar river, number ... ... 214–215

PAGES

THOOYAMANI, THIRU M. C.—
- Karamadai Velliyangadu road improvement scheme, implementation ... ... ... ... ... 19
- Municipal High School, Mettupalayam, taking over ... ... ... ... ... 727–728

THYAGARAJAN, THIRU E. S.
- Inspection Bungalow for Pallipet, construction ... 213
- Telugu teachers, Tiruttani, employment ... 728–729

TOURISM.
- Tourist Bungalow for Honaguruki, construction ... 223–224

TRANSPORT AND COMMUNICATIONS.
- A.U.M. Canal in Kanyakumari district, total area for boat passage ... ... ... ... ... 16–17

TRANSPORT (STATE).
- Buses from Mayuram to Madurai, plying of ... 27–28
- Express bus from Mayuram to Tirunelveli, introduction ... ... ... ... ... ... ... 23–24
- Plying of a bus from Mayuram to Gudalur ... 21–22

V.

VADIVEL, THIRU S.
- Budget, 1972–73, Voting:
  - District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 84
  - Industries ... ... ... ... ...
  - Capital Outlay on Industrial Development ... 275–278
  - Administration of Justice ... ... ...
  - Jails ... ... ... ... ... ...





PAGES

VADIVEL, THIRU S.—*cont.*
- Budget, 1972–73 Voting—*cont.*
  - Medical ... ... ... ... ... ... }
  - Public Health ... ... ... ... ... } 754, 780–785
  - Capital Outlay on Public Health ... ... }

VENKATASWAMY, THIRU B.
- Budget, 1972–73, Voting:
  - District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 72–74
- Tourist Bungalow for Honaguruki, construction 223–224

VEZHAVENDAN, THIRU Ka.—
- Agricultural Science, Introduction in High Schools. 725–727
- House-sites for Harijans of Pennalurpet Sub-taluk, stage of acquisition and allotment ... ... 26
- House-sites to Harijan Colony people in Gummudipoondi Sub-taluk, stage of acquisition and allotment 25–26
- Poondi Varavukal, Tiruvallur taluk, construction of culvert over ... ... ... ... ... 18–19
- Transport (State) workers, provision of housing facilities ... ... ... ... ... ... 20–21

W.

WAHAB, THIRU K. A.—
- Budget, 1972–73, Voting:
  - District Administration and Miscellaneous, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensations and Assignments, Compensation to

W—*cont.*

PAGES

WAHAB, THIRU K. A.—*cont.*

Budget, 1972–73, Voting—*cont.*

Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government, Land Revenue Department, Stamps Administration, Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 80–84, 109

Medical ... ... ... ... ... ... } 810–818
Public Health ... ... ... ... ... }
Capital Outlay on Public Health ... ... }

Chief Minister's Fund, donation to Bharat Sevak Samaj ... ... ... ... ... ... 725

Cycle factory in Tamil Nadu in Co-operative sector, setting up of ... ... ... ... ... 525

Drinking water-supply scheme, Ranipet, extension 197–198

Elementary Schools, opening in villages... ... 502–505

Legislative Council, abolition ... ... ... 721–724

Transport (State) workers, bonu s ... ... 744–751

WATER SUPPLY—

Drinking water scheme at Ranipet, extension ... 197–198

Drinking water scheme for Krishnagiri ... ... 195–197

Mayuram water-supply scheme, expenditure incurred ... ... ... ... ... ... 200

Overhead tank, Si[illegible]i panchayat ... ... 784

South Madras area, increase in pressure ... ... 782–783

Water scarcity at Virudhunagar, measures to combat. 198–[illegible]

V 2;1. 31'N72
31N72.1231